V211.32 N81
N81-17732
122035

[Issued : 17-8-1981

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY 27th MARCH 1981

Volume CLXXVII No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1981

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE 2 *Rupees.*]

Y2(l),32 N81
N81·177/82
122035

## பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—v |
| தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் முக்கிய அலுவலர்கள் | vii |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் | xi—xii |
| 1. வினாக்கள்-விடைகள் | 1-22 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம், மதுரை வேளாண்மைக் கல்லூரி ஆகியவற்றின் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து | 22-25 |
| 3. உரிமைப் பிரச்சினை— | |
| (i) சட்டமன்ற நடவடிக்கைகள் காவல் துறையினரால் கண்காணிக்கப்படுவது குறித்து | 25-31 |
| (2) பேரவை உறுப்பினர் திரு. ஜே. எம். மியாகான் ஆட்டோ ரிக்ஷா டிரைவரால் தாக்கப்பட்டது குறித்து | 56-57<br>78-80 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| சென்னை, புதுக் கல்லூரியில் நடைபெறும் போராட்டம் குறித்து | 32-35 |
| 5. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பொது விவாதம்—தொடர்ச்சி | 35 56,<br>57-78,<br>80-87 |
| 6 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் | 87 |

## பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள் | 261—273 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானம்— தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து. | 274—282 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (1) கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையா உணவுப் பண்டங்களை ஒதுக்கீடு செய்வதில் தெளிவான கொள்கையின்மை காரணமாக, தமிழ்நாட்டில் இப்பண்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை குறித்து. | 283—285 |
| (2) வேலை வாய்ப்பு—பயிற்சித்துறை இயக்குநர் அலுவலகத்தின்கீழ் இயங்கும் அரசு மானியம் பெறும் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்யாதது குறித்து. | 286 |
| 4. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி. | 287—362 |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNMENT OF TAMIL NADU.

THIRU *SADIQ ALI.*

*Members of the Council of Ministers.*

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption and Planning.

2. THE HONOURABLE DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDAN, Minister in-charge of Electricity Iron and Steel control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASAMY, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries Milk' Dairy Development and Registration.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education and Official Language.

8. THE HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtendness, Bhoodan and Gramdhan and Highways.

## பொருளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்— விடைகள் 89—105

2. உரிமைப் பிரச்சினைகள்—

(1) காவல் குற்றப் புலனாய்வுத்துறை சட்ட மன்ற அவைகளின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுக்கும் பொருட்டு தனது அதிகாரிகளுக்கு இடப்பட்ட இரகசியச் சுற்றறிக்கை குறித்து .. ..

(2) மேலவை உறுப்பினர் திரு. ஜே. எம். மியாகான் அவைக்கு வரும்போது தாக்கப்பட்டது குறித்து .. .. 114

3. கவன ஈர்ப்பு—

தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் உள்ள செயின்ட் ஆன்ஸ் மாணவர் மேல் நிலைப் பள்ளி கடந்த இரண்டு வாரங்களாக மூடப்பட்டிருப்பது குறித்து .. .. 115

4. அறிவிப்பு—

(1) ஆளுநரிடமிருந்து செய்தி .. 115

(2) பேரவையிலிருந்து செய்தி .. 115

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு .. 116

5. அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1981) .. .. 117

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1981). .. .. 118

6. 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி. .. 119 179

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. -- 180

11. THE HONOURABLE THIRU S. RAGAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister in-charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSAMY, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister in-charge of Large Scale Industries, Mines, Minerals and Textiles.

*16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister in-charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and Passports, Public Works Department, and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister in-charge of Social Welfare including Women and Children welfare, Animal Husbandry, Beggars Home, Orphanges Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

---

* During his absence on foreign tour in March-April 1981 the subjects dealt with by him were allocated to the Honourable Minister for Industries.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு மற்றும் திட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், மற்றும் ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

## பொருளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்— 191—204

2. கவன ஈர்ப்பு—

கர்நாடக அரசு ஹேமாவதி நீர்த்தேக்கத் திட்டத்தை துவக்கியுள்ளதால் தமிழ் நாட்டிற்கு மேலும் காவிரி நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு விவசாயத்திற்குப் பாதகம் ஏற்பட்டிருப்பது குறித்து .. .. 205—207

3. 1981-82-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி 208—258

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 258

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், கற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை வளங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றிய சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி குடிசைமாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.



13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக் கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும், மற்றும் நெசவாலைகள்.

*16. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), மற்றும் பயண இசைவுசீட்டு, பொதுப்பணித்துறை, மற்றும் பொதுப் பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

* மார்ச்-ஏப்ரல், 1981-ல் அயல்நாட்டுப் பயணத்தின்போது அவருக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களால் நிருவகிக்கப்பட்டன.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### மாண்புமிகு மேலவைத் தலைவர்.

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

### மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. ந. எஸ். வெங்கடேசன்.
3. திரு. க. அருணாசலம்
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

### மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### சார்புச் செயலாளர்.

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ. பி.ஜி.எல். பி.எல்.

### தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1. அருணாசலம், திரு. க. | நியமனம். |
| 2. ஆறுமுகம், திரு. சே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3. ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6. இராசா முகமது, திரு. கா. (பாசனத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7. இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10. கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11. சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12. சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 13. சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 15. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்) | நியமனம். |
| 16. சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17. சீதாதேவி இருதயசாமி, திருமதி. | நியமனம். |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 18. சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 20. தாமோதரன், திரு. எ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21. தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22. தாஸ், திரு. எ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 23. துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24. நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 25. நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 26. புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 27. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 29. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31. முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 32. முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 33. முத்தையா செட்டியார், டாக்டர் எம்.ஏ. | நியமனம். |
| 34. முனுசாமி, திரு. பி. | நியமனம். |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 35. லீலாவதி, செல்வி அ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வடஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 37. வசந்த் பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38. வல்லிமுத்து, திரு. ஈ. வெ. அ | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40. வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41. ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி |
| 42. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 43. வெற்றிடம். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49. வெற்றிடம். | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 50. வெற்றிடம். | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம். | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம். | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம். | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 54. வெற்றிடம். | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 58. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம். | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம். | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 61. வெற்றிடம். | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம். | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் ஐம்பத்தொன்பதாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1981 மார்ச் 27.

பங்குனி 14, சௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 9.30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சாலைகளைப் பழுது பார்த்தல்.

* 177 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைஞாயிறு ஒன்றியத்திலுள்ள அவரிக்காடு-உம்பளாச்சேரி சாலை, தாலத்திருவாசல்-தலைஞாயிறு சாலை, தலைஞாயிறு பேரூராட்சியில் உள்ள பழையாற்றங்கரை கிராமச்சாலை ஆகியவை, வெகுகாலமாகியும் பழுது பார்க்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அவைகளை விரைவில் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) அவரிக்காடு-உம்பளாச்சேரி சாலையில் பழுதடைந்துள்ள பகுதியை சீர் செய்யும் பணி 1981-82 ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும். மற்ற சாலைகளை மேம்படுத்தும் பணி அரசு நிதி சீர்படும் நோக்கில் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைஞாயிறு-தாலத்திருவாசல் சாலை ஏற்கெனவே தார்ச் சாலையாக இருக்கிறது. பழுது பார்க்கின்ற பணி மட்டும் தான் இந்தச் சாலையைப் பொறுத்தவரையில், செய்யப்படாமல் இருக்கிறது.

ஆனால் அவுரிக்காடு-உம்பளாச்சேரி சாலையைப் பொறுத்தவரையில், நீண்ட காலமாகப் பழுதடைந்திருக்கிறது. அதேநேரத்தில், பழையாற்றங்கரை கிராமச்சாலை மண் சாலையாக இருக்கிறது. அதை தார்ச் சாலையாக, மாற்ற வேண்டுமென்று சில காலமாகவே அங்குள்ள மக்கள் கோரி வருகிறார்கள். இப்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள திட்டத்தை நிறைவேற்றும்போது. அங்குள்ள பொதுமக்கள் விடுத்துள்ள இந்தக் கோரிக்கையும் பரிசீலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அவுரிக்காடு-உம்பளாச்சேரி சாலையைச் சீர் செய்யும் பணி மட்டும்தான் 1981-82 ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று நான் சொல்லியிருக்கிறேன். மற்ற சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்ற வேண்டுமென்றால், நமக்கு 11 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் நிதி நிலை சீராகும்போது, கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விஷயங்கள் எல்லாம் மேற்கொள்ளப்படும்.

இயற்கைச் சீற்றங்கள் தடுப்பு தலைமைப் பொறியாளர் நியமனம்.

* 178 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைச் சரி செய்யவும், வறட்சி நிவாரணப் பணிகள், நிலச்சரிவு மீட்புப் பணிகள் போன்றவற்றை உடனுக்குடன் கவனிக்கவும், முன்கூட்டி திட்டமிட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவும், நெடுஞ்சாலைத் துறையில் இயற்கைச் சீற்றங்கள் தடுப்பு தலைமைப் பொறியாளர் (Chief Engineer Natural Calamities) என்ற பதவியை, நிரந்தரமாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதே கோரிக்கை குறித்து அன்றைய பொறுப்பிலேயிருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று உறுதிமொழி கொடுத்திருந்தார். தமிழ் நாட்டிலே வெள்ளம், புயல், வறட்சி, நிலச்சரிவு போன்ற இயற்கைச் சீற்றங்



களால் பல பகுதிகள், பல மாவட்டங்கள் அடிக்கடி பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது அரசுக்குத் தெரியும். இப்படி பாதிப்பு ஏற்படும் போதெல்லாம் நாம் தற்காலிகமாக அவ்வப்போது பாதிப்புக்கு உள்ளான பகுதிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்கிறோம். தற்காலிகமாக அப்படி ஒரு தலைமைப் பொறியாளர், 2 கண்காணிப்பு பொறியாளர்கள், 12 டிவிஷனல் பொறியாளர்கள் போன்ற பதவிகளை ஏற்படுத்தியிருக்கிறோம் இப்படி அவ்வப்போது இத்தகைய பணிகளைக் கவனிப்பதற்காக, தற்காலிகமாக நியமிப்பதற்குப் பதிலாக, நிரந்தரமாக இப்படிப்பட்ட ஒரு அமைப்பு இருந்தால், அவர்கள் நல்லமுறையில் திட்டமிட்டுச் செயலாற்ற அது வாய்ப்பாக இருக்கும் என்கிற முறையில், அரசுக்கு இந்தப் பதவிகளை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. இதுகுறித்து அரசிடம் செயற்குறிப்பு இல்லாவிட்டாலும் கூட, ஆக்கபூர்வமாக இதனுடைய தன்மையைக் கருதி பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தமிழகத்தைப் பொறுத்தவரையில், 'நேச்சுரல் கலாமிட்டீஸ்', இயற்கைச் சீற்றங்கள் என்று பார்த்தால், அவை மாறி மாறி வருகின்ற ஒன்று. 1977, 1978, 1979 ஆம் ஆண்டுகளில் வெள்ளம் வந்தது. இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இப்படி மாறி மாறி இயற்கைச் சீற்றங்கள் வருகிற காரணத்தால், 10 கோட்டப் பொறியாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றை நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்கிற எண்ணம் அரசிடம் தற்போது இல்லை. ஆனால் இவை பற்றிப் படிப்படியாகப் பரிசீலிக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இயற்கைச் சீற்றங்களின் பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பாற்ற, கவனிக்க 10 கோட்டங்கள் ஏற்படுத்தியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போது கோட்டங்கள் அமைக்கப்பட்டன ? எவ்வளவு காலமாக அவை இருந்து வருகின்றன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 1977 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. தொடர்ந்து இருந்து வருகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வறட்சியாலும், வெள்ளத்தாலும், புயலாலும், நிலச்சரிவாலும் தமிழகம் மாறி மாறி பாதிப்புக்கு உள்ளாவதாகவும் அதற்காக வேண்டி இந்தப் பதவிகள் ஏற்படுத்தப் பட்டதாகவும் சொன்னார்கள். பொதுவாக இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படுகிறது என்றால் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய

நிலை இருக்கிறது. திட்டமிட்டு நடவடிக்கையில் ஈடுபட வேண்டியிருக்கிறது. நிரந்தரமான தடுப்புப் பணிகள் செய்ய வேண்டியது மிக மிக அவசியமாகிறது. இந்த மூன்று அம்சங்களையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இதற்காக நாம் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கீடு செய்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது, குறிப்பிட்ட காலத்தில் அந்தக் குறிப்பிட்ட பணி முடிவடையாவிட்டால், இந்த பணிகளை நிரந்தர டிவிஷன்களில் இருப்பவர்களிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். அப்படி ஒப்படைக்கும்போது எந்த நோக்கத்திற்காக அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற முடியாத நிலை ஏற்படுகிறது. இந்த அடிப்படையில்தான் இப்பதவிகளை நிரந்தரமாக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். 12 கோட்டப் பொறியாளர் பணியிடங்களும், 2 கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்களும், ஒரு தலைமைப் பொறியாளர் பணியிடமும் இதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் ஒருசில முக்கிய பதவிகளாவது உடனடியாக நிரந்தரமாக்கப்படுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** வெள்ள நிவாரண நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், "ஸ்பில் ஓவர் ஒர்க்" என்று சொல்லும்போது, அவர்களுடைய பதவிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி செய்யாவிட்டாலும்கூட, எக்ஸ்டென்ஷன் கொடுத்து, கால நீட்டிப்பு கொடுத்து, மீண்டும் 'டைம்' கொடுத்து பணியில் அமர்த்திக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனாலும் இந்தப் பதவிகளைப் பொறுத்த வரையில், அரசு பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்தப் பதவிகள் ஒரு வகையில் இருந்தாலும்கூட, நீலகிரி மாவட்டம் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டபோது, ஒரு அறிஞர் குழு பார்வையிட்டு சிறந்த நடவடிக்கைகளை நிரந்தரமாக எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதன் அடிப்படையில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** நிலச்சரிவைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே 1977-78 ஆம் ஆண்டில் நிலச்சரிவு ஏற்பட்டபோது, அதற்கான நிவாரணப் பணியை நெடுஞ்சாலைத் துறை மூலமாக மேற்கொண்டோம். இப்போது அந்தப் பணி முடிவடைந்திருக்கிறது. அதிலும்கூட அறிஞர் பெருமக்கள் கருத்துக்களைச் சொல்கிறபோது, அதிகமான மரங்களை





நட வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணியும் இப்போது வனத்துறை மூலமாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஓய்வு பெற்ற மருத்துவ உதவியாளர்கள்.

* 179 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் பணிபுரிந்து, 1970 ஆம் ஆண்டிற்கு முன் ஓய்வு பெற்ற மருத்துவ உதவியாளர்களுக்கு, ஓய்வூதியம் அளிக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், 1970 ஆம் ஆண்டும் அதற்கு முன்னும் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியம் அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(இ) தற்போது உள்ள விதிகள்படி அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க இயலாது எனினும் ஒரு குறிப்பிட்ட ஓய்வூதியம் (Adhoc pension) அளிப்பது பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்போது வயது முதிர்ந்த ஏழைகளுக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. ஓய்வு பெற்று ஏழைகளாக இருப்பவர்களுக்கும் அரசாங்க நிதியிலிருந்து இத்தகைய வாய்ப்பினையும் வசதியையும் அரசு அளிக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதுபற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

### நடமாடும் மருத்துவ மனைகள்.

* 180 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

[1981 மார்ச் 27

(அ) 15—6—1980 நாளன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் அரசின் சார்பில் எத்தனை நடமாடும் மருத்துவ மனைகள் இயங்குகின்றன ?

(இ) இவை சராசரியாக எத்தனை கிராமங்களுக்குப் பயன் தருகின்றன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 15—6—1980 நாளன்றைய நிலவரப்படி, தமிழ் நாட்டில் அரசின் சார்பில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் 224 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வருகின்றன.

(இ) ஒரு வாரத்திற்கு ஒரு முறை என்றபடி சராசரியாக 60-லிருந்து 70 கிராமங்கள் ஒவ்வொரு நடமாடும் மருத்துவக் குழுவினால் பயனடைகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த 224 மருத்துவக் குழுக்களிலே பணியாற்றக் கூடிய மருத்துவர்கள் நடமாடும் மருத்துவமனைகள் என்று சொல்லக்கூடிய அந்த மருத்துவக் குழுக்களிலே தனியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது ஆரம்பச் சுகாதார நிலையங்களோடு சேர்த்து, அந்தப் பணிகளையும் சேர்த்து இவர்கள் பார்க்கிறார்களா ? அந்த வகையில்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இவர்கள் 224 ஆரம்ப சுகாதார நிலையங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 3 டாக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு டாக்டர் அவுட்-பேஷன்ட்களைக் கவனிப்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே காலை முதல் மாலை வரை முழு நேர டாக்டராக இருந்து கொண்டிருக்கிறார். இரண்டு டாக்டர்கள் மொபைல் யூனிட்டில் இருக்கிறார்கள். மொபைல் யூனிட்டில் இருக்கக்கூடிய ஒரு டாக்டர் ஒரு பகுதிக்கும், இன்னொரு டாக்டர் மற்றொரு பகுதிக்கும் சென்று பணியாற்றுகிறார்கள். ஆகவே மூன்று டாக்டர்களும் அதாவது ஒரு வகையில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர்கள் அனைவருமே அங்கே பணியாற்றி வருகின்றனரா ? அல்லது அங்கெல்லாம் நியமிக்கப்பட்டும் பணியில் சேராததன் காரணமாக, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி பாதிக்கப்பட்டிருக்கிறதா ? நியமிக்கப்பட்ட பிறகும் அத்தகைய நிலையங்களில் பணியில் சேராமல் இருக்கும் டாக்டர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?



1981 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் குறிப்பிட்ட 224 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அநேகமாக 40 அல்லது 45 நிலையங்களில் சராசரியாக ஒவ்வொரு டாக்டர் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. அதாவது அங்கெல்லாம் 2 டாக்டர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். எனினும் அப்படிப்பட்ட இடங்களில் ஒரு டாக்டர் மருத்துவ மனையின் வேலைகளைக் கவனித்து வருவார். இன்னொருவர் நடமாடும் மருத்துவக் குழுவில் சென்று பணியாற்றுவார். அதாவது இரண்டு டாக்டர்கள் நடமாடும் மருத்துவக் குழுவிற்குச் சென்று பணியாற்றுவதற்குப் பதில் ஒருவரே சென்று பணியாற்றுவார்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : நடமாடும் மருத்துவக் குழுவினர் வாரம் ஒருமுறை மட்டுமே கிராமங்களுக்குச் செல்வதைவிட வாரம் இருமுறை செல்லும் முறையை அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மூலக் கேள்விக்குப் பதில் கூறும்போது, நடமாடும் மருத்துவ மனைகள் தினந்தோறும் கிராமங்களுக்குச் செல்கின்றன என்றுதான் குறிப்பிட்டேன். இதன் காரணமாக ஒன்றியத்திற்குள் இருக்கும் ஏறத்தாழ 70 கிராமங்கள் நாள்தோறும் பயன்பெறுகின்றன. நாள்தோறும்தான் நடமாடும் மருத்துவக் குழுக்கள் சென்று கிராம மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்கின்றன.

செல்வி அ. லீலாவதி : சென்னை நகரில் உள்ள மருத்துவ மனைகளில் காலை நேரங்களில் அதிகமான நோயாளிகள் அவுட்-பேஷன்ட் டிபார்ட்மெண்ட்டிற்கு வருவதால், அங்கெல்லாம் நெருக்கடி ஏற்படுகின்றது. எனவே அங்கே நெரிசலைக் குறைக்கும் வகையில் இத்தகைய நடமாடும் மருத்துவ வண்டிகளைக் காலை சுமார் 10, 11 மணி அளவில் அனுப்பி வைத்து நோயாளிகளுக்கு மருத்துவ உதவி அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மூலக் கேள்வி ஆரம்ப சுகாதார நிலையங்களோடு இணைக்கப்பட்டிருக்கும் நடமாடும் மருத்துவ மனைகளைப்பற்றியதாகும். சென்னையைப் பொறுத்தவரை, அதிகமான நோயாளிகள் மருத்துவ மனைக்கு வந்தால், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேறு ஒரு பரிகாரத்தை வைத்திருக்கிறோம். சென்னை நகரைச் சுற்றி 3 இடங்களில்—அதாவது அசோக் நகர், அண்ணா நகர் மற்றும் தண்டையார்பேட்டையில்—புறநகர் மருத்துவ மனைகள் என்று சொல்லப்படும் "பெரி

ஃபோல் ஹாஸ்பிடல்ஸ்" ஏற்படுத்தி அங்கெல்லாம் மருத்துவ வசதிகளை அளிப்பதன் மூலம் சென்னை நகரில் உள்ள மருத்துவ மனைகளில் கூட்டம் அதிகமாவதைத் தடுத்து வருகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நடமாடும் மருத்துவ மனைகளுக்காகப் பயன் படுத்தப்படும் வாகனங்களில் நவீன மருத்துவக் கருவிகள் கொண்டு செல்லப் படுகின்றனவா? ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தோடும் இணைக்கப் பட்டுள்ள நடமாடும் மருத்துவ மனையில் வாரந்தோறும் அல்லது மாதந் தோறும் எவ்வளவு நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள் என்ற கணக்கு அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நான் இதுவரை சுமார் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை நேரில் சென்று பார்த்திருக்கிறேன். அங்கெல்லாம் புற நோயாளிகள்—அதாவது அவுட்-பேஷன்ட்—கணக்கை எப்படி வைக்கிறார்கள் என்று பார்த்திருக்கிறேன். சாதாரணமாக, ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்தும் நோயாளிகளின் எண்ணிக்கை நாள் தோறும் சராசரி 150 என்று இருக்கும். அதைப்போலவே நடமாடும் மருத்துவ மனையைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாள்தோறும் சராசரி 100 என்ற அளவில் இருக்கும். ஆனால் அந்தக் கணக்கைத் தனித் தனியாக வைத்துக்கொள்ளாமல், இரண்டையும் ஒன்றாகக் கூட்டி, நாள்தோறும் இவ்வளவு நோயாளிகள் சிகிச்சை பெற்றனர் என்று சொல்லப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, at present a certain allowance is given to each Panchayat Union Primary Health Centre, for drugs. I think the limit is Rs. 16,000 or Rs. 18,000. May I know if, wherever these mobile dispensaries are working in addition to the Primary Health Centres, any additional provision for drugs is given because, as the Hon. Minister himself has mentioned, they are attending to a large number of out-patients?

THE HON. DR. H. V. HANDE: Sir, as I have already mentioned, we have delinked the mobile team from the main Primary Health Centre. As far as the mobile teams are concerned, we have made a separate allotment for them. Till last year, it was Rs. 15,000 for drugs only to be used by the mobile teams. But, this year, the hon. Member will be very happy to know that we have increased it to Rs. 20,000





**திரு. ம. சங்கரலிங்கம்:** என்னுடைய கேள்வியின் இன்னொரு பகுதியில் நடமாடும் மருத்துவ மனைகளால் பயன்படுத்தப்படும் வாகனங்களில் நவீன மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டிருந்தேன். அதற்கான பதிலை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நவீன கருவிகளைப் பொறுத்த வரையில், ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. தற்போதுகூட பெரிய லாரிகள் மருத்துவ மனைகளுக்கு என்று தரப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் 3 லாரிகள் என்ற அளவில் தற்போது 24 லாரிகள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளிலெல்லாம்கூட நவீன மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் தற்போது அவைகளை யெல்லாம் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். அதற்குக் காரணம் கிராமப்புறங்களில் உண்டாகும் "டஸ்ட்" என்று சொல்லப் படும் தூசி. அது ஒரு பெரிய பிரச்சினையாகவே இருக்கிறது. அந்தக் கருவிகள் எல்லாம் "டஸ்ட்-ப்ரூப்" ஆக இருக்க வேண்டும். உண்மையிலேயே அத்தகைய வாகனங்கள் குளிர் மிகுந்த நாடுகளுக்காகவே தயாரிக்கப்பட்டவை. இதன் காரணமாகவே நாம் இப்போது நவீன கருவிகளைப் பயன்படுத்த முடியாமல் இருக்கிறோம். இந்த நிலையில் அத்தகைய நவீன மருத்துவக் கருவிகளை யெல்லாம் "மொபைல் டீம்ஸ்" லாரிகளில் பொருத்துவது பயனுள்ளதாக இருக்காது என்றுதான் நான் கருதுகிறேன். அதைவிட அவர்கள் கிராமங் களுக்குச் செல்லும்போது, நோயாளிகளுக்கு நல்ல முறையில் மருந்துகளை மட்டுமே கொடுத்தால்கூடப் போதும். மருந்து கொடுப்பதற்குத்தான் நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஆரம்ப சுகாதார நிலையங்களோடு இணைக் கப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ மனைகளைப் பயன்படுத்தி அந்தந்த வட் டாரங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள அரசு உத்தரவிடுமா? தற்போது மாணவர்களிடம் இதற்காக ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்று வசூலிக்கப்பட்டாலும், இதைத் தனியார் மருத்துவ மனைகளின் மூலம் செய்வதால் அது சரியாக நடைபெறாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்தத் தொகையை அரசுக்கே செலுத்தி இத்தகைய மருத்துவப் பரிசோதனையை அரசு நடமாடும் மருத்துவ மனைகள் மூலம் செய்வதற்கு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இது நல்ல யோசனை. எற் கெனவே இதை நாம் ஓரளவுக்கு அமுல்படுத்தி வருகிறோம். ஆரம்ப சுகாதார மருத்துவ மனைகளோடு இணைக்கப்பட்ட இந்த நடமாடும் மருத்துவ

[1981 மார்ச் 27

பணியிடம்—ஒன்று; நிரப்பப்படாமல் காலியாக இருக்கும் பணியிடம்
ஒன்று—அது 2—5—1980 முதல் நிரப்பப்படாமல் இருக்கிறது. மகப் பேறு
மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் 21-10-1974 முதல் நிரப்பப்
படாமல் இருக்கிறது. சென்னை, பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்
பட்ட பணியிடம் இரண்டு, நிரப்பப்படாமல் இருக்கும் பதவியின் எண்ணிக்கை
ஒன்று. அது 27-11-1980 முதல் நிரப்பப்படாமல் இருக்கின்றது.

பேரறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ மனையில் அனுமதிக்
கப்பட்ட பணியிடங்கள் மூன்று. 3—12—1979 முதல் நிரப்பப்படாமல்
இருக்கும் பணியிடங்கள் இரண்டு.

ஆக, இவ்வாறு பல இடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் போதவில்லை என்று கருதப்படுவதுதான்.

The Assistant Professors of Radiological Physics (radiologists)
—are at present allowed a pay in the scale of
Rs. 675—35—885—45—1200. The Director of Medical Edu-
cation has expressed an opinion that if the scale is revised, candi-
dates may be forthcoming to take up appointment. This is under
consideration separately. Further, the Director of Medical
Education has been requested to examine and report whether
medical men could not be appointed to the posts.

இவ்வாறு மருத்துவ மனைகளில் உள்ள டாக்டர்களுக்கே எக்ஸ்ட்ரா
ட்ரெயினிங் கொடுத்து நியமித்தால், அவர்களுக்கு மாறுதல் பெறும் சந்தர்ப்பம்
இருப்பதால், இத்தகைய காலியிடங்களை நிரப்ப முடியும் என்று அரசு
கருதுகிறது.

(முற்பகல் 9-50)

திரு. ம. சங்கரலிங்கம் : தற்போது இந்த இடங்களில் பௌதிகம் படித்த
வர்களை நியமித்து வருகிறோம். அவர்கள் கல்லூரிக்குப் போனால் ஆரம்பச்
சம்பளம் 750 ரூபாய்க்கு மேலே கிடைக்கிறது. ஆனால் இங்கே பணிபுரிய
வந்தால், 675 ரூபாய்தான் கிடைக்கிறது. இதனாலே அவர்கள் வரவில்லையோ
என்ற சந்தேகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது



1981 மார்ச் 27]

உண்மையும்கூட. அது மட்டுமல்ல, கதிரியல் தாக்குதலால் ஆபத்து வரும் என்று அஞ்சுகிற நிலையும் இருக்கிறது. ஆகவே கல்லூரிகளில் பணி புரிபவர்களை விட இவர்களுக்குக் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக இப்போது குறைவாக இருக்கிறது. இதை அரசு பரிசிலனை செய்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1974 ஆம் ஆண்டிலிருந்து, 1979 ஆம் ஆண்டிலிருந்து காலியிடங்கள் இருப்பதால், இதை விரைவிலே பரிசீலனை செய்து ஒரு மாதத்திற்குள்ளாக கல்லூரிகளில் அளிக்கப்படக் கூடிய சம்பளத்திற்கேற்ப ஊதிய விகிதத்தை மாற்றியமைத்து டாக்டர்களை நியமிக்க அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சம்பளத்தை உடனடியாக உயர்த்துவது என்பது சங்கடமான வேலை என்பது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கு நன்றாகத் தெரியும். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. நிதித் துறையினுடைய ஒப்புதல் எல்லாம் வாங்க வேண்டியிருக்கிறது. அதைவிட டாக்டர்களை அங்கே நியமிக்கலாம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதைச் செய்வது சுலபமாக இருக்கும். மருத்துவர்களைப் பொறுத்தமட்டில், கதிரியக்கத்தால் ஏற்படும் ஆபத்துக்களைப் பற்றி அனாவசியமாகப் பயப்படமாட்டார்கள். அவர்களுக்கு அதைப்பற்றி நன்றாகத் தெரியும். அவர்களுக்கு ஒரு பேட்ஜ் கொடுப்பார்கள். அதிலே எக்ஸ்ரே எக்ஸ்போஷர் இருப்பது தெரியும். அதை பூனாவில் உள்ள பாபா ஆட்டாமிக் இன்ஸ்டிடியூட்டுக்கு அனுப்பி எவ்வளவு எக்ஸ்போஷர் ஆகியிருக்கிறது என்று பார்க்கிறோம். ஆகவே ஆபத்து இல்லை. அது மட்டுமல்லாமல் ஒரு மாதக் கட்டாய ஓய்வு கொடுக்கப்படுகிறது. ஏதாவது ரேடியேஷன் இருந்தால், அந்த ஓய்வு காலத்திற்குள்ளே அது போய்விடும். லெப்ரசி நோய் இருந்தால்கூட, டாக்டர்கள் பயப்பட மாட்டார்கள். ஆகவே, டாக்டர்களை நியமித்தால் நன்றாக இருக்கும் என்று கருதி அதைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கூறிய உணர்வின் அடிப்படையிலே விரைவிலே நிரப்பப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : முக்கியமான பெரிய மருத்துவ மனைகளில் ஏற்படுத்தப்பட்ட எத்தனை பதவிகள் காலியாக இருக்கின்றன? இதன் காரணமாக மருத்துவச் சிகிச்சைக்கு வருகின்ற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற எத்தனை மருத்துவக் கருவி சீர்கேடு அடைந்து பழுதுபட்

டிருக்கின்றன என்பதைப் பரிசீலித்து முக்கியமான இடங்களில் உள்ள பதவிகள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருப்பதால் ஒவ்வொரு துறையிலும் வேலைகள் வேகமாக நடக்காமல் முடங்கி இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து, அரசு மிக விரைவாகச் செயல்பட்டு நிவர்த்தி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி ஒரு விஷயத்தைப் பார்த்திருப்பார் என்று கருதுகிறேன். ரேடியாலஜிஸ்ட் பதவிகள் 9 தான் இருக்கின்றன. இதில் எதுவும் காலியாக இல்லை. நூறு சதவீதமும் நிரப்பப்பட்டிருக்கின்றன. ரேடியாலஜிஸ்ட்—டாக்டர்கள் தங்கள் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே எந்தவிதமான வேலை பாதிப்பும் இல்லை. ஆனால் ஃபிசிக்ஸ் படித்துவிட்டு ரேடியாலஜி ஃபிசிக்ஸ் புரபசராக வந்தவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதுதான் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த பாதிப்பு இல்லாமல் இருக்க எம்.பி., பி.எஸ். படித்த டாக்டர்களைக் கொண்டு நிரப்பலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே காலியிடங்களை நிரப்ப நிச்சயமாக ஏற்பாடு செய்யப்படும்.

THIRU A. R. DAMODARAN: Sir, one of the reasons why these posts are not being filled up is that in the radiology department there is very little scope for the doctors to practise outside. So, the Hon. Minister's contention that doctors will agree may not materialise. In view of the fact that these Assistant Professors are required for teaching radiology to the students, may I suggest that, if it is impossible to increase their salary, a non-practising allowance could be given to such people so that they may be attracted to these posts?

THE HON. DR. H. V. HANDE: Sir, the hon. Member himself has answered the question. This is not a question of doctors getting non-practising allowance. These are posts for people with M.Sc. or M.A. (Physics) plus radiology. Mainly they are Physics people. There is no question of these Physics people practising medicine at all. So, the question of non-practising allowance being given to these non-medical persons does not arise at all. That is why I said that medical persons are doing the same job which the non-medical persons are excepted to do. So, the question of giving non-practising allowance to these persons, obviously from the very question of the hon. Member himself, does not arise.



THIRU A. R. DAMODARAN: From the answer of the Hon. Minister, may I ask a question? If these are to be considered as teaching posts, then why are they not paid the salaries that are paid to the teachers of Government Colleges?

THE HON. DR. H. V. HANDE: That is why I said that it was being examined. It has been there for long and this question might have been put to the person who had fixed this pay. It is only now that we are trying to repudiate it and set at naught the crime done by the old Ministry.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கதிரியல் துறையில், குறிப்பாக வெளி நாடுகளில் பணி புரிபவர்களுக்கு, மருத்துவர்களுக்கு இணையாகச் சம்பளம் தரப்படுகிறது. அந்த அடிப்படையிலே சம்பளத்தை உயர்த்தவும், ஓய்வு நேரத்தை அதிகப்படுத்தவும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஊதியத்தை அதிகப்படுத்தும் உத்தேசம் இருக்கிறது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆனால் இப்போது நாம் வழங்கும் ஒரு மாத ஓய்வுக் காலத்தை மேலும் அதிகப்படுத்தத் தேவையில்லை. ஒரு நாளைக்கு 8 மணி நேரம் என்ற விதத்தில் 11 மாதங்களுக்கு முழுக்க ஒருவர் வேலை செய்திருந்தால், ஏற்பட்டிருக்கக் கூடிய ரேடியோலாஜிக்கல் எக்ஸ்போஷர் 15 நாட்கள் ஓய்வெடுத்தாலே போய்விடும். நாம் மேற்கொண்டு 15 நாட்கள் கொடுத்து ஒரு மாதத்திற்கு ஓய்வு கொடுக்கிறோம். ஊதிய உயர்வுபற்றி நிச்சயமாக கவனிக்கப்படும். அதைச் செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்.

### கன்னியாகுமரி மீனவர்கள்.

* 183. வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி, கடற்கரையோர மீனவ மக்கள், அவர்கள் தொழிலுக்குரிய கட்டுமரத்தை நிறுத்தும் இடத்தை, 1979 ஆம் ஆண்டில் விவேகானந்த நினைவு மண்டபத்தினர் கையகப்படுத்தி விட்டார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனால் அவர்களுடைய தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

[1981 மார்ச் 27

மனைகள் மூலம் அல்லாமல் தாலுக்கா தலைமை மருத்துவ மனைகளில் உள்ள டாக்டர்களைப் பயன்படுத்தி பள்ளி மாணவர்களின் மருத்துவ பரிசோதனையைச் செய்து வருகிறோம். குறிப்பாக பல் மற்றும் தோல் வியாதி பற்றிய பரிசோதனையைச் செய்து வருகிறோம். இதை மேலும் விரிவுபடுத்திச் செய்வதற்கான திட்டமிட்டிருக்கிறோம். இதற்காக லையன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் ஆகியவை உதவிட முன்வந்திருக்கின்றன. இதற்கென்று ஓர் ஒருங்கிணைந்த திட்டம் போட்டு சுமார் 60 சதவீத வெற்றியை அடைய முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 181 மற்றும் 182 இரண்டும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படலாம்.

கதிரியல் துறை.

*** 181. வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கதிரியல் துறையில் கதிரியல் பௌதிகத் துணைப்பேராசிரியர் பதவிகள் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ளன என்பது உண்மையா ?

(இ) அத்துறையில் நீண்ட நாட்களாக பதவியில் இருப்பவர்கள், கதிர் விச்சுக்கும், அதனால் ஏற்படும் தீயவிளைவுகளுக்கும் ஆட்படுகிறார்கள் என்பதும் உண்மையா ?

(உ) பதவியில் சேருமாறு கோரப்பட்டும் சிலர் சேராமல் இருப்பதற்கு, மேலே குறிப்பிடப்பட்டது ஒரு காரணமா ?

(எ) ஆம் எனில், காலி இடங்களை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(இ) இல்லை. கதிர் விச்சால் தீய விளைவுகள் ஏற்படாமல் இருக்கத் தேவையான தற்காப்பு முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, கதிரியல் துறையில் பணி புரிபவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 11 மாத பணிக்காலம் முடிந்தவுடன் 1 மாதம் கட்டாய விடுப்பு அளிக்கப்படுகிறது.

(உ) இல்லை.



1981 மார்ச் 27]

(எ) இப்பொழுது ஐந்து பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இவைகளை நிரப்ப, தகுதி பெற்றோரைத் தேர்வு செய்து தருமாறு தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையே வேலை வாய்ப்பு அலுவலகம் வாயிலாக தற்காலிகமாக இவ்விடங்களை நிரப்பும் கருத்துரு ஆய்வில் உள்ளது.

*** 182 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கதிரியல் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, வருடம் ஒரு மாதம் கட்டாய விடுப்பு கொடுக்கும் முறை இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அம்முறை தற்பொழுதும் அமுல்படுத்தப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(இ) ஆம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கதிரியல் துறையில், கதிரியல் பௌதிகத் துணைப் பேராசிரியர் பதவிகள் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதோடு தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் மூலம் தொடர்பு கொண்டு அந்தப் பதவிகள் நிரப்பப்படும் என்றும் சொன்னார்கள். எவ்வளவு நாட்களாக அந்தப் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன ? 5 ஆண்டுக் காலமாகப் பல பதவிகள் காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு பலர் வெகு காலமாகப் பணியில் சேராமல் இருப்பதற்குக் காரணம் அங்கேயிருக்கும் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்று கருதப்படுவதேயாகும். எனவே அரசு இது குறித்து உரிய வகையில் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. டாக்டர் எச். வி. ஹண்டே :** என்னுடைய பதிலில் நான் இதைச் சரியாக விளக்கியிருக்கிறேன். அங்கே சரியான பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது என்று கருதுவது ஒரு கற்பனையான நினைப்பே தவிர வேறல்ல. அந்தக் காரணத்தால் யாரும் பணிக்கு வராமல் இல்லை. அவர்களில் பெரும்பான்மையோர் பணிக்கு வராமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்குத் தரப்படும் ஊதியம் குறைவானது என்று கருதப்படுவதுதான். எத்தனை நாட்களாக அந்தப் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று கேட்டார்கள். அதுபற்றிய விவரத்தை மட்டும் நான் இங்கே தர விரும்புகிறேன். ஸ்டான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட

(உ) இது குறித்து அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஏ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) இல்லை.

(இ), (உ) & (ஏ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரியின் கடற்கரையோரத்தில் மீனவர்கள் வாழும் பகுதியை ஒட்டியுள்ள பகுதியில் விவேகானந்தர் மண்ட பத்தார் சுமார் 100 ஏக்கருக்கு மேலாக நிலத்தைக் கையகப்படுத்தியிருக் கிறார்கள், விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். மீனவர்கள் கட்டு மரங்களைப் போடுகிற இடங்களைக் கையகப்படுத்தியிருக்கிறார்கள். அதனால் அவர்கள் படகுகளைப் போட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மீனவர்களுக்கும், படகு ஓட்டிகளுக்கும், விவேகானந்தர் மண்டபத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய தகராறைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று முறை பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய தகராறுக்கு மூல காரணம் இதுதான். முன்பு இப்படிப்பட்ட தகராறு அங்கே இல்லை. நிலத்தைக் கையகப்படுத்திய பிறகு படகுகளை நிறுத்த அனுமதிக்கவில்லை என்பதால்தான் தகராறு. நிலைமை இப்படி இருக்க, அரசுக்கு வந்திருக்கக் கூடிய குறிப்பில் இப்படிப்பட்ட தகவல் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி, நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர்கள் கையகப்படுத்தப்பட்டதாகத் தகவல் இல்லை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நகரத்தினுடைய எல்லையிலே, கேந்திரத்திற்குப் போகும் படகுகளை, கேந்திரத்திற்குச் சொந்தமான படகுகளை நிறுத்த 1973 ஆம் ஆண்டு ஆணையின்படி 14-4-1974-ல் இருந்து இருபது ஆண்டுக் காலத்திற்கு குத்தகைக்குக் கொடுத் திருக்கிறார்கள். ஓராண்டுக்கு 2,500 ரூபாய் வாடகை என்று வாங்குகிறார்கள். 36,800 சதுர அடி வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற வாடகையை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தலாம் என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். உண்மை நிலைமை என்னவென்றால்



36,800 சதுர அடியை இரண்டு பேரும் பயன்படுத்தியிருக்கிறார்கள். குத்தகை கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு இருந்த ஒற்றுமையின் காரணமாக மீனவர்களும், கேந்திரத்தாரும் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக் குள்ளே பிரச்சினை ஏற்பட்டவுடனே, இது எங்களுக்குச் சொந்தமான இடம். அரசாங்கம் 1973-லே எங்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்துவிட்டது, எனவே வெளியேற வேண்டும் என்று மீனவர்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்கள். மீனவர்கள் "நாங்களும் பயன்படுத்தி வந்திருக்கிறோம். ஆகவே போக முடியாது" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இரண்டு முறை நான் சென்றேன். முதலமைச்சர் அவர்களும் ஒருமுறை போயிருக்கிறார்கள். இப்போது ஓரளவிற்குச் சுமுகமான நிலை ஏற்பட்டிருக் கிறது. இன்னும் ஒருமுறை நேரிலே பேசினால், அந்தப் பிரச்சினை தீர்ந்து விடும் என்று நாங்கள் நம்புகிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : மீனவர்கள் கட்டு மரத்தை நிறுத்த வைத்திருந்த இடத்தில் இப்போது கேந்திரத்தார் தங்கள் படகுகளை நிறுத்த அனுமதிக் கிறார்கள். குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக மீனவர்கள் தங்களுடைய படகுகளை அங்கே நிறுத்துவதில் இடையூறுகள் இருப்பதாக அறிகிறேன். இப்போது கேந்திரத்தார், படகுகளை நிறுத்த முடியாத நிலையில் டிரன்ச்சர்களை வைத்து மணலை அகற்றிவிடுகிறார்கள். அதைத் தடுத்து, முன்னால் இருந்த நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒப்பந்தப்படி அந்த 36,800 சதுர அடியை அந்தக் கேந்திரத்தார் மட்டும் பயன்படுத்தவேண்டும் என்றும், அதை வேறு யாரும் பயன்படுத்தக் கூடாது என்றும் ஒப்பந்தமிருக்கிறது. அரசாங்கம் அதற்கு ரூ. 250 வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி வாடகைக்கு விட்டாகியிருக்கிறது. ஆனால் அவர்களிடத்திலே ஒற்றுமையாக, மீனவர்கள் இருந்தபோது, அவர்கள் சம்மதித்து மீனவர்களை அனுமதித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக, அவர்களை மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே பிரச்சினை ஏற்பட்டு, நாம் அதைப்பற்றிப் பேசவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இரண்டு முறை அதைப்பற்றிப் பேசியபோது, அந்த இடத்தை ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கருத்துக்கள் சொல்லியிருக்கிறோம். அந்தக் கேந்திரத்தார் வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்ளலாம் என்று சொல்லியிருக் கிறோம். அதுபற்றி ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறோம். வெகு விரைவிலே அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அரசாங்கம் அந்தப் பகுதியை ஒப்பந்தத்திற்குக் கொடுத்திருந்தாலும், அங்கே பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படி பிரச்சினை வரும்போது, அரசாங்கத்திற்கு அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய அதிகாரம் உண்டு. அதைப் பயன்படுத்தி, அந்த கேந்திரத்தார் ஒரு நியாயமான ஒப்பந்தத்திற்கு வரத் தயாராக இல்லை என்றால், அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதையெல்லாம் முன்னதாகவே ஆராய்ந்து பார்த்து செய்திருக்க வேண்டும். இதற்கு முன்பு இருந்த நிலைமைகளைப்பற்றி நான் சொல்லக்கூடாது என்று கருதுகிறேன். இந்த விஷயத்தில் இரண்டு பேர்களுக்கும் பிரச்சினைகள் இல்லாமல் செய்திருக்க முடியும். அந்தப் பிரச்சினை இன்றையதினம் பெரிதாகி அந்தச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டிய நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். நாங்கள் கேட்க வேண்டிய நிலை மாறி, அங்கத்தினர் அவர்கள் இன்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கேந்திரத்தாருக்கும் அந்தப் பகுதி மீனவர்களுக்கும் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அந்த இடத்தை முழுவதுமாகக் கொடுத்தால்கூட, அந்த மீனவர்களுக்குப் போதாது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, கேந்திரத்தாருக்கு அதற்கு அடுத்த பக்கத்திலே வேறு இடம் மாற்றி தனி அமைப்பாக்கிக் கொடுப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : நாங்கள் செய்ய வேண்டியதை, இப்போது உள்ள அரசு செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். நாங்கள் இருந்த வரை, இரண்டு பேர்களும் சுமுகமாக இருந்திருக்கிறார்கள். ஆகவே அந்த மாதிரியான பிரச்சினைகள் வரவில்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதுவும் தவறுதான். மன்னிக்கவும். அப்போதே அந்தப் பிரச்சினைகள் ஆரம்பமாகிவிட்டிருக்கின்றன. யாரும் அங்கே போய்க் கவனிக்கவில்லை. அந்தப் பிரச்சினை 1975 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமாகியிருக்கிறது. அந்த விவரங்கள் கோப்புகளில் அப்படியே இருக்கின்றன. அப்போது யாரும் பேசுவதற்குத் தயாராக இல்லை. இப்போது பேசுவதற்குத் தயாராகியிருக்கிறார்கள். இதில் பேச்சு வார்த்தைகளை பூர்த்தி முடித்திருக்கிறோம்.





முதியோர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம்.

* 184 வினா.—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் (i) முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழும் (ii) ஆதரவற்ற விதவையருக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழும் பண உதவி பெற்று வருகின்ற நபர்கள் மொத்தம் எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முதியோர் மற்றும் விதவைகள் உதவித்தொகை பெறும் நபர்களின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :

சென்னையில் 3,196 முதியோர்களுக்கும், 1967 விதவைகளுக்கும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 5,371 முதியோர்களுக்கும், 1,052 விதவைகளுக்கும் வட ஆற்காடு மாவட்டத்தில் 7,483 முதியோர்களுக்கும், 2,945 விதவைகளுக்கும், தென்னாற்காடு மாவட்டத்தில் 5,408 முதியோர்களுக்கும், 1,487 விதவைகளுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 10,697 முதியோர்களுக்கும், 2,330 விதவைகளுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 5,281 முதியோர்களுக்கும், 3,887 விதவைகளுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்தில், 2,008 முதியோர்களுக்கும், 1,298 விதவைகளுக்கும், மதுரை மாவட்டத்தில் 2,170 முதியோர்களுக்கும், 4,136 விதவைகளுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 6,701 முதியோர்களுக்கும், 2,773 விதவைகளுக்கும்; திருநெல்வேலி மாவட்டத்தில் 8,384 முதியோர்களுக்கும், 1,800 விதவைகளுக்கும்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,317 முதியோர்களுக்கும், 639 விதவைகளுக்கும்; தர்மபுரி மாவட்டத்தில் 5,811 முதியோர்களுக்கும், 696 விதவைகளுக்கும், சேலம் மாவட்டத்தில் 7,921 முதியோர்களுக்கும், 2,043 விதவைகளுக்கும்; பெரியார் மாவட்டத்தில் 3,132 முதியோர்களுக்கும், 782 விதவைகளுக்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4,248 முதியோர்களுக்கும், 1,779 விதவைகளுக்கும்; நீலகிரி மாவட்டத்தில் 607 முதியோர்களுக்கும், 235 விதவைகளுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. மொத்தம் 87,735 முதியோர்களுக்கும், 29,849 விதவைகளுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : இந்தப் பண உதவி எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது ? இந்த உதவியைக் கொடுப்பதற்கு என்ன விதிமுறைகள் இருக்கின்றன ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** இந்தப் பண உதவி 65 வயதிற்கு மேற்பட்டுள்ள முதியோர்களுக்கும், 40 வயதிற்கு மேற்பட்டுள்ள ஏழை விதவைகளுக்கும் வழங்கப்படுகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் தஞ்சை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் அதிகமாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? மனு செய்தவர்கள் அதிகமாக இருக்கின்றார்களா? இந்த இரண்டு மாவட்டத்திற்கு மட்டும் ஏன் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** ஒவ்வொரு மாவட்டத்திலும் மனு செய்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து அனுமதி கொடுக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி அ. லீலாவதி:** இப்போது விலைவாசி ஏற்றம் இருப்பதனால், அவர்களுடைய உதவித் தொகையை அதிகமாக்க அரசிடம் ஏதாவது செயற் குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** முன்பு ரூ. 20 தான் உதவித் தொகையாக வழங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் தமிழகத்தில் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் அந்தத் தொகையுடன் ரூ. 5 கூட்டி ரூ. 25 ஆகக் கொடுக்கப்பட்டு நல்ல முறையில் உதவித் தொகை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** விதவைகளுக்கு ஓய்வு ஊதியம் பெறுவதற்கு 40 வயது என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் விதவைகள் ஆகிவிட்ட துர்ப்பாக்கியமான பெண் சகோதரிகள் திரும்பவும் திருமணம் நடக்கிற வாய்ப்பு இருக்கிறது என்று நம்பி மனுச் செய்யாமல் விட்டுவிட்டிருக்கலாம். மறுமணம் செய்யும் இளம் வயதிலேயே விதவைகள் ஆனவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த உதவித் தொகை தரப்படுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** 40 வயதிற்குக் கீழ் சில பெண்மணிகள் விதவைகளாக காணப்படுகிறார்கள். அப்படிப்பட்ட விதவைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுமா என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கின்றார்கள். 40 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள் விதவைகளாக



இருந்தால், அவர்களுக்கு வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு கைத்தொழில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தையற் தொழில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குத் தையல் இயந்திரம் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குப் படிப்பு வசதியும் செய்து கொடுக்கிறோம். இன்றைக்கு நல்ல முறையில் அவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** விதவைகள் மறுமணம் செய்து கொண்டால், அவர்களுக்கு ரூ. 5 ஆயிரம் பத்திரமாகக் கொடுக்கிறார்கள். இந்த ரூ. 5 ஆயிரம் அவர்களுக்கு 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் கிடைக்கிறது. அவர்களுக்கு உடனே பணம் கொடுத்தால், அவர்களுக்கு வாழ்வு நடத்த வசதியாக இருக்குமே என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** விதவைகள் மறு திருமணம் செய்து கொண்டால், அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பத்திரத்தைக் கொடுக்கிறார்கள். அதைப் பணமாகவே கொடுத்தால், நல்லதாக இருக்கும் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ரூ. 5,000ஐ அவர்களுக்கு உடனே கொடுத்துவிட்டால், சிலர் பணத்திற்காகவே விதவைகளைத் திருமணம் செய்துகொண்டு அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அந்த விதவையைக் கைவிட்டுவிடுகிறார்கள். அதன் அடிப்படையிலேதான் இந்த ரூ. 5,000த்தைத் தேசிய சேமிப்புப் பத்திரமாக அவர்களுக்கு வழங்குகிறோம். அதை 7 ஆண்டுகள் பிக்சட் டெபாசிட் என்று வங்கியில் போடுகிறார்கள். 7-வது ஆண்டு கழித்து அவர்கள் வட்டியும் முதலுமாகச் சேர்த்து ரூ. 10,000 ஆக வாங்கிக்கொள்ளலாம். இடையிலே பணம் அவர்களுக்கு ஏதாவது தேவை என்றால், இரண்டு ஆண்டுகள் கழித்து கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் வாங்கிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** விதவைகள் மறுமணம் செய்துகொண்ட பின்பும் இந்த ஓய்வூதியம் கொடுக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** இதுவரைக்கும் இந்த மாதிரி நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. க. இராமமூர்த்தி : ஆதரவற்ற விதவைகளுக்கான ஓய்வூதியத் திட்டம் இருக்கிறது. இன்றைக்கு வயதான பல பெண்மணிகள் அவர்களுடைய கணவர்களாலே கைவிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வேறு வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். எனவே இப்போது இருக்கும் திட்டத்தின் அடிப்படை யிலேயே, அப்படிக் கணவனாலே கைவிடப்பட்ட வயதான பெண்மணிகளுக்கும் ஓய்வூதியம் அளிப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : கணவனால் கைவிடப்பட்ட வயதான பெண்களுக்குக் கண்டிப்பாக உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, நான் சி.ஐ.டி. கண்காணிப்பு பற்றி ஓர் உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்ட பிறகு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசலாம்.

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம், மதுரை வேளாண்மைக் கல்லூரி ஆகியவற்றின் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பா. ரா. தாமஸ், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், செல்வி அ. லீலாவதி, திரு. ம. சங்கரலிங்கம் ஆகியோர் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம், மதுரை வேளாண்மைக் கல்லூரி ஆகியவற்றின் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதிக்குள் வருகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, விவசாயப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், அந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிற விவசாயப் பண்ணைகளிலே பணி





புரிந்துகொண்டிருக்கிற ஊழியர்கள் அனைவரும் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதன் காரணமாக விவசாயப் பல்கலைக் கழகமும், அதனை ஒட்டியுள்ள, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிப் பண்ணைகளும் மூடப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்திருக் கின்றன. அவர்கள், தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து, இப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் வரையில் போராட்டத்திலிருந்து பின் வாங்கப் போவதில்லை என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். விவசாயப் பல்கலைக் கழகத்தில் பணி புரியும் அலுவலக ஊழியர்கள்கூட, ஏற்கெனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அமுல்படுத்தப்படவில்லை என்று சொல்லி, நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக செய்திகள் வந்திருக்கின்றன. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகளை நான் சொல்ல வேண்டியதில்லை. இதனால் எவ்வளவு பாதிப்புகள் ஏற்படுமென்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அரசுக்கே அது தெரியும். எனவே இவர்களுடைய கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், விவசாயப் பல்கலைக் கழகமும் மூடப்பட்டுள்ள விவசாயப் பண்ணைகளும் மீண்டும் திறக்க ஏற்பாடுகள் செய்யவும், அவற்றுக்கான வழி வகைகளைக் காணவும் மேலவையில் இந்தப் பொருள் பற்றி விவாதிக்க, மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஊழியர்களும், கோவை வேளாண்மைக் கல்லூரி ஊழியர்களும், மதுரை வேளாண்மைக் கல்லூரி ஊழியர்களும், தூத்துக்குடி மீன் துறை ஆராய்ச்சித் துறையின் ஊழியர்களும் கடந்த சில நாட்களாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அதன் காரணமாக கோவையிலுள்ள தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், கல்லூரிகளும் நேற்றையிலிருந்து நிரந்தர மாக மூடப்பட்டிருக்கின்றன என்ற அறிவிப்பு வந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நீண்ட காலமாக வற்புறுத்தி தங்களுடைய சம்பள விகிதங்கள், பல்கலைக் கழக மானியக் குழு அறிவித்த சம்பள விகிதத் திற்கேற்ப திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, பலமுறை பல்கலைக் கழகத்திற்கு முறையிடு செய்திருக்கிறார்கள். பல்கலைக் கழகம் ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பாகும். அது, தன்னுடைய ஊழியர் களின் சம்பள விகிதங்களை உயர்த்திக் கொடுக்க அரசோடு கலந்து, அரசு கிராண்ட் வாங்கித்தான் கொடுக்க முடியும். அரசிடம் இது குறித்து தொடர்பு கொண்டு, இதில் வெற்றி பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோ என்று

[திரு. ம. சங்காலிங்கம்] [1981 மார்ச் 27

நான் ஐயுறுகிறேன். தேர்வுகள் நடக்க இருக்கும் இந்த நேரத்திலே பல்கலைக்கழகம் மூடியிருப்பதும், கல்லூரிகள் மூடியிருப்பதும், தொடர்ந்து இந்த நிலை உருவாகிக்கொண்டிருப்பதும் வருத்தத்திற்குரியது. அங்கே 25 ஆராய்ச்சி நிலையங்கள் பல்வேறு துறைகளிலே பணி புரிந்து வருகின்றன. இப்போது நம் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலையில், வேளாண்மைத் துறையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய கால கட்டத்திலே, வேளாண்மைத் துறையிலே உன்னிப்பாக ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சி நிலையங்கள் அடைபட்டுக் கிடப்பது உண்மையிலே அனைவரையும் பாதிக்கக்கூடிய பிரச்சினையாகும். இந்த முக்கியமான பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பதை இந்த அவையில் விவாதித்து, எல்லாத் தலைவர்களுடைய கருத்தையும், அமைச்சர் அவர்களின் கருத்தையும் அறிந்து, சுமுகமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மேலவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் போன்றவற்றின் முறையீடுகளை ஆய்வு செய்ய 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திரு. சி. வி. ஆர். பணிக்கர், ஐ.எ.எஸ். அவர்களைக் கொண்ட ஒரு நபர்க் குழுவை அரசு அமைத்தது. அக்குழு தன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அரசு அந்த அறிக்கையை ஆய்ந்து, அரசு ஆணை நிலை எண் 574, வேளாண்மைத் துறை, 17-3-1981-ல் ஆணை வெளியிட்டுள்ளது. ஒரு நபர்க் குழு அவர்கள் முறையீடுகளிலே சிலவற்றை ஏற்றும், சிலவற்றை ஏற்காமலும் தந்த அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையிலே ஆணை வெளிவந்துள்ளது. அதன் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மனக் குறையைப் புலப்படுத்தும் வகையிலேதான் அவர்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. எனவே அவர்களையும், தொடர்புடைய அரசுச் செயலாளர்களையும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தலாமென்று பல்கலைக் கழகப் பதிவாளர் மூலமாக நான் தெரிவித்திருக்கிறேன். சற்று முன்புகூட அவர்களுடைய சங்கப் பிரதிநிதிகளோடு பேசினேன். அவர்கள், சங்கத்தின் மற்ற பிரதிநிதிகளையும் கலந்து சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு நல்ல முடிவு ஏற்படுமென்று நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மார்ச் 27]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, வேளாண்மைத் துறை இப்பொருள் குறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி, என் அனுமதியை மறுக்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை.

### சட்டமன்ற நடவடிக்கைகள் காவல் துறையினரால் கண்காணிக்கப்படுவது குறித்து.

**திரு. ம. சங்காலிங்கம்:** தலைவரவர்களே, கடந்த மாதம் 26 ஆம் தேதி ஓர் உரிமைப் பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதைப்பற்றி எடுத்துச் சொன்னேன். அதற்கு அவை முன்னவர் அவர்கள் 5-3-1981 அன்று அரசு சார்பிலே ஒரு விளக்கம் கொடுத்தார்கள். அப்போதே எழுந்து, அந்த விளக்கம் திருப்தியளிக்கவில்லை என்ற கருத்தைச் சொல்ல நான் முன்வந்தேன். அதை விவாதமாக்கக்கூடாதென்று தாங்கள் கேட்டுக் கொண்டீர்கள். அதற்குப் பிறகு, அதையொட்டி 6-3-1981 அன்று விளக்கமாக எழுதித் தந்தேன். அந்த அறிக்கையை அவையிலே படித்ததன் மூலம் இன்னொரு உரிமைப் பிரச்சினை வந்துள்ளது என்று சொல்லியிருக்கிறேன். அது குறித்து தங்கள் தீர்ப்பு எப்போது வருமென்று அறிய விரும்புகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, அந்த உரிமைப் பிரச்சினையின் அடிப்படையிலேயே நானும் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இதுபற்றி தொடர்பான துறையிலிருந்து கிடைத்த பதிலை இந்த அவையிலே படித்தார்கள். அந்தத் துறையினுடைய பதில் அவையினுடைய உரிமைக்கு உகந்ததாக இல்லை. அதனுடைய வாசகம் ஏற்புடையதாக இல்லை என்பதையும், அந்த வாசகம் வேறுவிதமாக அமைந்திருக்க வேண்டுமென்பதையும் சொல்லி, அது தொடர்பாக மேலும் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். முதலிலே ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதன் அடிப்படையிலே இவைகளெல்லாம் தொடர்பாக அமைந்திருக்கின்றன என்ற காரணத்தாலே, அவையினுடைய உணர்வுகளையும் பார்க்க வேண்டும். ஓர் உரிமைப் பிரச்சினை, அதன் அடிப்படையிலே கொடுத்த பதில், அதன் அடிப்படையிலே ஏற்பட்டுள்ள மற்றைய பிரச்சினைகள் இவைகள் அனைத்தும் சேர்ந்து, ஒட்டுமொத்தமாக இந்த அவையின் பிரச்சினையாக மாறியிருக்கிற காரணத்தால் மாண்புமிகு தலைவரவர்கள் தீர்ப்பு வழங்குவதற்கு

அவருடைய விளக்கத்தைத் தெரிவித்திருக்கிறார். அந்தக் கருத்தும் அரசுக்கு ஏற்புடையதாக இருப்பதால், அரசும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அரசுக்குத் தெரிந்து என்று சொன்னால் அமைச்சர்கள், செக்கரட்டேரியட் என்கிற அளவிலே வெளியிடப்படுகிற அரசினுடைய ஆணைகள் என்று பொருள். அல்லது அரசு அறிக்கை என்று பொருள். அல்லது சுற்றறிக்கை என்று பொருள். ஆகவே அரசு ஆணை என்கிற அளவில் இல்லாமல் கீழ் மட்டத்திலே நிர்வாக நடவடிக்கை மூலம் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்ட ஒரு அறிவிப்பு மீது அந்தத் துறையினுடைய தலைவர் பொறுப்பேற்று அவருடைய வருத்தத்தை, தவறைத் தெரிவித்திருக்கிறார் என்பதையும் அரசு அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அரசே இதில் நேரடியாகப் பொறுப்பேற்று மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கேட்பதிலே அடிப்படை இருப்பதாக அரசு கருதவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நாளைக்கு என்னுடைய தீர்ப்பு வழங்கப்படும்.

* THIRU A. R. DAMODRAN: Sir, I have a submission to make, because of the Hon. Minister's statement that this circular was issued by a departmental official and that therefore, the Government do not accept full responsibility for it. The Hon. Minister has also mentioned that the concerned Official has submitted his apology to the Hon. Chairman. I wish to state that no such apology has been tendered and all that has been stated by the Official is that this circular has aroused misgivings and that too, mistaken misgivings in the minds of the Members. In my opinion, the explanation given adds insult to injury. This is a very important master not only concerning two hon. Members who have raised the privilege issue but concerning the entire House. Before you give your ruling, I request that we may be given on opportunity, in view of the necessity to uphold the dignity of the House, to represent o the Government how we feel in the matter. Your ruling is there to come. I would only request that an opportunity being afforded to us so that the Government may know the views of the Members. It is not a political matter; it is a non-political matter on which all of us feel very strongly and we would like to express our opinion.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அன்றைக்கே உறுப்பினர் அவர்கள் இதை எழுப்பியிருந்தால், எனக்கு இதுபோன்ற ஆட்சேபனை இருந்திருக்காது. என்ன நடந்தது என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும்.



முன்பு திரு. இளம்பரிதி பிரச்சினை வந்தபோது, இந்த அவை கேட்காமலேயே நானே அவையினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன். அந்த அளவுக்கு நான் தெளிவாக அன்றைக்கே சொன்னேன். தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே நான் தெளிவாகச் சொன்னேன். இப்போது நான் விவாதத்திற்கு அனுமதித்தால், அது தவறான முன்மாதிரியாக ஆகிவிடும். இப்போதே கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீர்மானம் கொடுத்தவர் என்கிற முறையில் அவர்கள் பேச எழுந்தபோது பேச அனுமதித்தேன். அதோடு மட்டுமல்லாமல், அரசுத் தரப்பிலுள்ள விளக்கத்தையும் கேட்டேன். ஆகவே நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதையும், அரசு சொன்னதையும் கவனத்தில் வைத்து என் தீர்ப்பை இந்த அவையினுடைய உரிமையைக் காக்கிற வகையில் நாளைக்கு வழங்குவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, நான் மாண்புமிகு தலைவர் அவர்களுடைய தீர்ப்பைப் பற்றிச் சொல்லவில்லை. அரசு அந்தக் குறிப்பில் ஏதாவது மாற்றம் கொண்டு வருகிறதா என்றுதான் கேட்டேன். அரசு அந்த அறிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்கிறது என்று சொன்ன பிறகு, உறுப்பினர்களாகிய எங்களுக்கு அந்த அறிக்கையின் மீது எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அந்த அறிக்கை அன்றைக்கே படிக்கப் பட்டது. அறிக்கை படிக்கப்பட்ட அன்றைக்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அதுபற்றிக் கேட்டிருக்க வேண்டும். படிக்கப்பட்டபோது மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றும் கேட்கவில்லை. பிறகு நான் தீர்ப்பை மட்டும் ஒத்தி வைத்தேன். அதை மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துக்கொண்டிருக் கிறார்கள். இப்போது விவாதம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு நான் தயாராக இல்லை. புதிய மரபை மாண்புமிகு உறுப்பினர்கள் படைக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 'ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்கிற முறையில் புரசிஜரைத்தான் நான் சொல்கிறேன். சப்ஜெக்டுக்குள் நான் போகவில்லை. அன்றைக்கே, அறிக்கையைக் கொடுத்து முடிந்த உடனேயே மாண்புமிகு தலைவரவர்கள் அதைருசித்து பின்னால் தீர்ப்பு அளிப்பதாகக் கூறினார்கள். உடனே நான் "தாங்கள் தீர்ப்பு அளிப்பதற்கு முன்பு அரசு தந்திருக்கிற விளக்கம் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு

முன்னால் இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு, எல்லாவற்றையும் சேர்த்துப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒரேயொரு வேண்டுகோள். அவையின் உரிமை பற்றிய முக்கியமான பிரச்சினை என்பதால், தலைவரவர்கள் உசிதமென்று கருதினால், பல்வேறு கட்சிகளின் தலைவர்களையும் இது குறித்து கருத்துக்கள் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அரசின் சார்பில் ஏதாவது சொல்லப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, காவல் துறையினருடைய துப்பறியும் இலாகாவினர் அனுப்பியுள்ள சுற்றறிக்கைபற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் உறுப்பினர்களும் எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினை குறித்து அரசுக்கு அந்தத் துறையின் தலைவர் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட விளக்கத்தில், எந்த நோக்கத்திற்காக அந்தச் சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக விளக்கி, வேறு எந்தவிதமான உரிமை மீறல் உணர்வோடு செய்யவில்லை, சட்டமன்ற, மேலவை உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதைத் தடுக்கும் முறையில் செய்யவில்லை என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை, அந்த உணர்வை அரசு ஏற்றுக்கொண்டு, அவர்கள் தெரிவித்த கருத்தையும் அரசு தன்னுடைய கருத்தாகத் தெரிவித்திருக்கிறது. ஆகவே அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய இறுதியான முடிவை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அவர்கள் அளித்த அறிக்கை மேலும் அவையின் உரிமையைப் பாதிக்கிறது. அது முறையாக இல்லை என்று சொன்னேன். எனவே அரசுத் தரப்பில் மாற்றங்களைச் செய்வார்களென்று எதிர்பார்த்தோம். அதுவே அரசினுடைய அறிக்கை என்று இப்போது கூறுவதால், அது குறித்து எங்களுடைய கருத்தையும் தலைவரவர்கள் அறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(முற்பகல் 10.30)**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அன்றைக்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். தீர்ப்பு ஒத்தி வைக்கப்படுகிறது என்று நான் தெளிவாகச் சொன்னேன். விஷயம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று முன்னாலேயே சொன்னேன். உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தபோது



மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் எழுந்து "தீர்ப்பு அளிக்கப் போகிறீர்களா" என்று கேட்டார்கள். விஷயத்தைத் தான் இன்னொரு நாளைக்கு ஒத்தி வைத்திருக்கிறேன் என்று நான் சொன்னேன். அடுத்த நாள் விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தீர்ப்பைப் பிறகு வழங்குகிறேன் என்று தெளிவாகச் சொன்னேன். ஆனால் அப்போது விஷயத்தை ஒத்தி வைக்கவில்லை. ஆகவே இனிமேல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேண்டியதெல்லாம் தலைவரின் தீர்ப்பு ஒன்று தான். உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தவர்கள் என்ற முறையிலே அவர்கள் விரும்பியதால்தான், அதை நான் தெரிவித்தேன். அரசுத் தரப்பிலே ஏதாவது சொல்ல இருக்கிறதா என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டேன். அரசுத் தரப்பிலே ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே தலைவரின் தீர்ப்பு ஒன்று தான் வழங்க வேண்டியிருக்கிறது. இங்கே சொன்னவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்து நாளைக்கு என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். "இது ஒரு அதிகாரியிடமிருந்து வந்த சமாதானம் தான். காவல் துறை மேல் அதிகாரியிடமிருந்து வரவில்லை. அரசுத் தரப்பிலிருந்து இதற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை" என்பது தான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய குறைபாடு. அதைப்பற்றி அரசின் நிலைமையை இங்கே தெளிவுபடுத்தினால், எனக்கு மிகவும் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** அரசு மேல் மட்டத்திலே அரசு நடவடிக்கைகள் என்பது அரசினுடைய சுற்றாணை அல்லது அரசினுடைய அறிக்கை அல்லது அரசினுடைய ஆணை என்று வெளியிடப்படும்போது மட்டும் தான். அப்படி வெளியிடப்படும்போது மட்டும்தான் அது அரசினுடைய கவனத்திற்கு வருகிறது என்று பொருள். அரசுக்குக் கீழே பணியாற்றுகின்ற பல்வேறு அமைப்புகள், துறைகள், அவற்றினுடைய தலைவர்கள் சுற்றறிக்கைகளாக அனுப்பும்போது, அது அரசாங்க நிர்வாகத்துக்குக் கீழே இருக்கிற நிர்வாகிகள் செய்கிற காரியங்கள் என்றுதான் பொருள். ஆகவே அரசினுடைய மேல் மட்டத்திற்குத் தெரியாமல் சில காரியங்கள் கீழ் மட்டத்திலே நடைபெறும்போது சம்பந்தப்பட்ட, பொறுப்பேற்றிருக்கிற அந்த அதிகாரிகள் தாம் அவர்கள் செய்கிற காரியத்திற்கு வருத்தத்தை அல்லது தவறு என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அல்லது அதிலே நியாயம் இருக்கிறது என்று சொன்னால் அதை நியாயம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு துறையினுடைய தலைவர், பொறுப்பேற்றிருக்கிறவர், தான் எடுத்திருக்கிற நடவடிக்கை சம்பந்தமாக இந்த மாமன்றத்திற்கு

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 மார்ச் 27

கிறேன்" என்று சொன்னேன். அந்த விளக்கம் இந்தக் குறிப்பாணையை விட மிகவும் மோசமாக இருந்தது. அந்தக் குறிப்பாணையின் மூலமாகப் பாதிக்கப்பட்ட உரிமையை விட, அப்போது கொடுக்கப்பட்ட விளக்கத்தின் மூலம் மேலும் உரிமை பறிக்கப்படுகிறது என்பதையும் நான் சொன்னேன். உடனே மாண்புமிகு தலைவரவர்கள் "நான் இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை, ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை விவாதிக்க ஆரம்பிக்கக் கூடாது" என்று சொன்னார்கள். ஆகவே, நான் அன்றைக்கே விவாதிக்க அனுமதி கேட்டிருக்கிறேன் என்பதையும் மாண்புமிகு தலைவரவர்கள் விவாதிக்க அனுமதி மறுத்து விட்டார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். உடனே நான் எழுந்து "குறிப்பாணையின் மீது அளித்த விளக்கத்தின் மீது எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல மாண்புமிகு தலைவரவர்கள் வாய்ப்பு அளிக்க வேண்டும்" என்று சொன்னேன். "இப்படிப் பட்ட விளக்கம் கொடுக்கப்பட்டதன் மூலம் விளக்கத்தின் மீதே உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது" என்று நான் சொன்னேன். அதற்கு மாண்புமிகு தலைவரவர்கள் "ஒரு உறுப்பினர் உரிமைப் பிரச்சினைக் கொடுத்திருக்கிறார், அதற்கு சர்க்காரின் கருத்தைத் தெரிவித்தாகிவிட்டது, உறுப்பினரும் தன்னுடைய கருத்தைத் தெரிவித்து விட்டார், எஞ்சியிருப்பது தலைவரின் தீர்ப்பு ஒன்று தான்" என்று சொன்னார்கள். ஆகவே திரும்பவும் விவாதத்தை ஆரம்பிப்பது என்ன நியாயம் என்று கேட்டார்கள். உடனே நான் "புதிய மரபை உருவாக்கவும் விரும்பவில்லை, விவாதம் ஆக்கவும் விரும்பவில்லை, ஆனால் மாண்புமிகு தலைவரவர்களுடைய தீர்ப்புக்குப் பிறகு நான் பேசக் கூடாது என்பதால் இப்போதே அதுபற்றிப் பேச வாய்ப்பு கொடுக்க வேண்டும்" என்று கேட்டேன். அதற்கு மாண்புமிகு தலைவரவர்கள், "உறுப்பினர் தான் தனக்குள்ள குறையை ஏற்கெனவே சொல்லியாகிவிட்டதே" என்று சொன்னார்கள். அதற்கு உடனே நான் எழுந்து "மாண்புமிகு தலைவரவர்கள் எனக்குச் சொல்ல நேரம் தந்தால், சொல்ல முடியும்; இல்லையென்றால் வெளியே செல்கிறேன்" என்று 6-3-1981 அன்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். ஆகவே பேசுவதற்கான வாய்ப்பினை மாண்புமிகு தலைவரவர்கள் எனக்குத் தர வேண்டுமென்று அன்றைக்கே நான் எழுத்து மூலமாகவும், பேச்சு மூலமாகவும் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு தலைவரவர்கள் இனியும் அந்த வாய்ப்பினைத் தர வேண்டுமென்று உரிமையுடனும், பணிவுடனும் கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 27]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எழுதிக் கேட்டிருக்கிறார் என்று சொன்னால், தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர் அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிறார் என்று பொருள். அது என் கவனத்தில் இருக்கிறது. ஆகவே, அதுபற்றி இப்போது விவாதிக்கத் தேவையில்லை. திரும்பவும் நான் சொல்கிறேன். தவறான முன்மாதிரியை இது பிறப்பித்து விடும். தவறான முன்மாதிரிக்கு என்னால் போக முடியாது. இது ரொம்பப் பெரிய விஷயம். தலைவர் நாளைக்கு தீர்ப்பு வழங்குகிறேன் என்று சொன்னதற்குப் பிறகு, இப்போது விவாதிக்க வேண்டுமென்று கேட்டால், இதை எப்படி அனுமதிக்க முடியும்?

(திரு. ஆ. நல்லசிவன் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கும் சேர்த்துத் தான் சொல்கிறேன். தீர்ப்பு அளிக்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு, இதில் விவாதம் நடைபெற அனுமதிக்க முடியாது.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவரவர்கள் இதைப்பற்றி விவாதிக்க அனுமதிக்கப் போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மாண்புமிகு தலைவரவர்கள் தீர்ப்பை வழங்குவதற்கு முன்னதாக உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிய வேண்டாமா? அதற்குரிய வாய்ப்பினை அளிக்க வேண்டாமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அன்றைக்கே தலைவரின் முடிவை ஏற்று உறுப்பினர்கள் ஒப்புக்கொண்ட பிறகு, இன்றைக்கு விவாதிக்க வேண்டுமென்ற பிரச்சினையைக் கிளப்பினால், என்ன அர்த்தம்? மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி, ஏ. ஆர். தாமோதரன், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் சொன்னவற்றையெல்லாம் கவனத்தில் வைத்து என்னுடைய தீர்ப்பு இருக்கும். இதைத் தவிர இப்போதைக்கு நான் வேறு ஒன்றையும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### புதுக் கல்லூரியில் நடைபெறும் போராட்டம் குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தற்போதுள்ள நிர்வாகக் குழு நீக்கப்பட வேண்டும்; புதிய குழு அமைக்கப்பட வேண்டும்; முன்னதாக அட்ஹாக் குழு அமைக்கலாம் என்ற கோரிக்கைகளை வற்புறுத்தி சென்னை புதுக்கல்லூரி ஆசிரியர், இதர மாணவர்கள் ஆகியோரின் கூட்டு நடவடிக்கைக் குழு 26—2—1981 அன்று முதல் போராட்டம் நடத்தியதால் அப்பகுதி பொது மக்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் இடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, இங்கே தரப்பட்டிருக்கின்ற இந்த விவர அறிக்கையைப் பொறுத்தவரையில், 26—2—1981 முதல் போராட்டம் நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறேன். அப்போதே நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு 27—3—1981-லே தான் விவர அறிக்கை தரப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த அவையிலே ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் போன்றவற்றைக் கொண்டு வருகிறோம் என்றால், அந்தக் குறிப்பிட்ட பிரச்சினை குறித்து அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும், முடிவு காணப்படும் என்கிற நம்பிக்கையில் தான். தந்திருக்கிற குறிப்புப்படி போராட்டம் நடத்துகின்ற ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றவர்களை அழைத்துப் பேசி அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதைக் கேட்டறிந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், நிர்வாகத்துடன் கல்லூரிக் கல்வித் துறை விரைந்து பேசும் என்று போராட்டம் ஆரம்பித்த ஒரு மாதத்திற்குப் பிறகு அறிக்கை தந்திருக்கிறார்கள். போராட்டம் நடத்தியவர்களைத்தான் கல்லூரிக் கல்வித்துறை அழைத்துப் பேசியிருக்கிறது. ஆனால், புதுக் கல்லூரி நிர்வாகத்துடன் இதுவரை பேசவில்லை. கல்லூரி மூடிக் கிடக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் கல்லூரிக் கல்வித் துறை இருந்தால், பிரச்சினைகளை எப்படித் தீர்க்கும்? எப்போது தீர்க்கும்? இவ்வளவு மெத்தனமாக நடைமுறைகளைக் கையாள இந்த அரசு அனுமதித்திருக்கிறதா?

---

@ 88 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, புதுக் கல்லூரி விவகாரத்தில் அரசு மெத்தனமாக இல்லை. அவர்களோடு கலந்து பேசி கல்லூரி இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாணவர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிர்வாகத்தோடு கலந்து பேசி அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். உறுப்பினர்களுக்கு மற்றோர் உண்மையையும் நான் சொல்லியாக வேண்டும். இந்தப் புதுக் கல்லூரி நிர்வாகம் என்பது ஒரு முஸ்லிம் கல்வி ஸ்தாபனம், மைனாரிட்டி, சிறுபான்மையினர் நிர்வாகம் என்கிற வரம்புக்கு உட்பட்ட ஒன்று என்பதால், சில வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 10.30)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, தற்போது அந்தக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் அவையில் வைக்கப்பட்டிருக்கும் அரசு அறிக்கையில் அக்கல்லூரி மூடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அறிக்கை தவறா அல்லது அமைச்சர் அவர்களின் தகவல் தவறா என்று எனக்குப் புரியவில்லை. அதுபோலவே அக்கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர் திரு. எ. எ. ரஷீத் அவர்களாகும். ஆனால் இங்கே தரப்பட்டிருக்கும் அறிக்கையில் அவரது பெயர் அகமத் பாஷா என்று சொல்லப்பட்டிருக்கிறது அந்த அளவுக்கு இந்த அறிக்கையே மிகுந்த கவனக் குறைவோடு தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அதோடு கல்லூரி இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டிய நிதி அறிக்கையை உரிய காலத்தில் அனுப்பாததன் காரணமாக அந்தக் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் அல்லாதார் 16 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வேலை இழந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே அவர்களின் வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, கல்லூரிக் கல்வி விதிகளின்படி ஆட்களை எடுக்காமல்—அதாவது சொல்லப்பட்டிருக்கும் நார்ம்ஸ்க்கு உட்பட்டுச் செயல்படாமல் ஆட்களை வேலைக்கு எடுத்தவர்களுக்கு இத்தகைய பணிப்பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசு அதைப் பரிசீலனை செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு தரும் நிலை இருக்கிறது.

அடுத்து, விவர அறிக்கையில் அக்கல்லூரி மூடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது சரியல்ல. கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது தான் எனக்குத் தரப்பட்ட விவரமாகும். மாணவர்களுடைய தலைவர், ஆசிரியர்களின் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதோர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் என்னை இரண்டு மூன்று முறை சந்தித்துப் பேசினார்கள். "கல்லூரியில் படிப்பதற்கு எங்களால் எந்தப் பாதகமும் இல்லை, போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் படிப்பு கெடவில்லை, எனவே இந்தப் பிரச்சினையில் அரசு தலையிட்டு நல்ல முடிவைக் காண வேண்டும்" என்று என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். நானும் கல்லூரி நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசினேன். அவர்களும், இவர்கள் சொன்னதை ஒப்புக்கொண்டு சுமுகமாகச் செய்யும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசு நேரடியாக இதில் ஈடுபட்டு நடவடிக்கை எடுக்க முடியாதபடி சில சட்டச் சிக்கல்கள் இருப்பதுதான் இந்த நிலைமைக்குக் காரணம். எனினும் நாங்கள் அதில் ஈடுபட்டு பிரச்சினையைத் தீர்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. அஹமத் பாஷா என்பவர் ஹாஸ்டல் வார்டன் பொறுப்பில் இருப்பவர். அவர் நிர்வாகத்தில் இருக்கிறாரா இல்லையா என்பது தெரியாது. வார்டன் பொறுப்பில் இருக்கிற அவர்மீது ஹாஸ்டல் மாணவர்கள் புகார்களைச் சொல்லியிருக்கிறார்கள். போராட்டத்திற்கான மிக முக்கியமான காரணமே அதுதான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே அவையில் தரப்பட்டிருக்கிற அறிக்கையில் அக்கல்லூரி மூடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்களோ அக்கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார். அதோடு அக்கல்லூரியின் நிர்வாக குழுத் தலைவர் என்று ஒருவரின் பெயர், தவறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு மிக மோசமான முறையில், மிகுந்த கவனக் குறைவோடு அறிக்கை தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முறையில் அரசுத் தரப்பிலிருந்து அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்தால், உறுப்பினர்கள் எவ்வாறு உரிய முறையில் பணியாற்ற முடியும் என்பதை மட்டும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இனியாவது இத்தகைய தவறான தகவல்கள் உள்ள அறிக்கையை அவையில் தராதவாறு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இவ்விவர அறிக்கையில் காணப்படும் தவறான தகவல்களுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. రா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, on a point of clarification " அவையில் அளிக்கப்படும் அறிக்கைகள் எந்தத் தேதியில் கொடுக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிடுவதே இல்லை. துறையினர் அறிக்கைகளைத் தரும்போது தேதியிட்டுக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அறிக்கை என்று அவையில் தரப்படுகிறதோ அந்தத் தேதியதாகக் கருதப்பட வேண்டும்.

## 5. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு, 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, மிகவும் காலம் கடந்து இந்த அவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. எனினும் இந்த நிதிநிலை அறிக்கை "மணம் இல்லாத காகிதப் பூவாக" அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைய தினம் ஆளும் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் பேசும்போது, நிதிநிலை அறிக்கையில் உள்ள ஒவ்வொரு தலைப்பாக எடுத்துச் சொல்லிப் பேசினார்கள். அவர் சென்ற இடத்திற்கு விளக்கமாக இருப்பதற்காக அவர் பேசியதாக அவருடைய பேச்சு அமைந்ததே தவிர, இந்த ஆட்சியாளர்கள் ஏதோ புதிதாகக் கொள்கையை வடித்தெடுத்து அதற்குப் புதிதாக நிதி ஒதுக்கீடு செய்து, நாட்டு மக்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுத்த அல்லது வளத்தைக் காண இந்த நிதிநிலை அறிக்கையில் வழி ஏற்பட்டிருக்கிறது என்று அவர்களால் சுட்டிக்காட்ட முடியாத அளவுக்குத்தான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது

[திரு. சோ. ஆறுமுகம்] [1981 மார்ச் 27

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி நிலை வரும்போதெல்லாம், அதுவும் பொதுமக்களுடைய வெறுப்புக்கு ஆளாகிற நேரத்தில் திருவள்ளுவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்களையெல்லாம் துணைக்கு அழைத்து அவர்கள் கருத்துக்களைச் சொல்வது என்பது வழக்கமாகிவிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ராஜ்ய சபையில் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தேவை என்று பேசியதை இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெறச் செய்து, தங்களைக் காப்பாற்றிக்கொள்ள பெருமுயற்சியைச் செய்திருக்கிறார்கள் என்பதைத்தான் என்னால் பார்க்க முடிகிறதே தவிர, இந்த நிதிநிலை அறிக்கையில் மக்களுடைய நன்மையை மையமாக வைத்து, எந்தத் திட்டமும் தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் ஆட்சியில் இருப்பவர்கள் பதவியைப் பற்றி அக்கறையில்லாமல் மக்களுடைய நல்வாழ்வில் அக்கறை கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, சிறை போகவும் தயார் என்று அண்ணா தி.மு.க.வின் பொதுச் செயலாளர் பேசியதாக இன்றைக்குக்கூட நான் செய்தியைப் பார்த்தேன். பதவி பற்றி

(முற்பகல் 10.40)

அக்கறை இல்லாதவர்கள்தாம் இந்த மேலவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகியும் இன்னும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளாமல், மந்திரி ஆனால்தான் இரண்டு பொறுப்புகளுக்கும் சேர்த்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு மக்களுக்காகச் சிறைச்சாலை செல்லத் தயார் என்று சொல்லுகிற வாதம் எந்த அளவிற்குப் போலியானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே, தமிழ் நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் வறட்சி நிலைமை கடுமையாகக் கப்பிக் கொண்டிருந்த நேரத்தில், ஆட்சியாளர்கள் அதைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். இப்போது தான் அதிகாரிகள் எங்களுக்கு அறிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள். காலம் கடந்து அறிக்கைகளை அனுப்பிய அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகள் மீது பழியைப் போட்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் நான் ஒன்றை அவைக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1981 மார்ச் 27] [திரு. சோ. ஆறுமுகம்]

1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆனந்தவிகடன் வார இதழின் பொன் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்வதாக இருந்தது, ஆனால் கலந்துகொள்ளவில்லை. ஏன் கலந்துகொள்ளவில்லை என்ற கேள்வி நிருபர்கள் மத்தியிலேயும், மற்றவர்கள் மத்தியிலேயும் எழுந்தபோது, “வட ஆற்காடு மாவட்டத்திலே வறட்சி நிலைமை இருக்கிறது. அதைப் பார்க்க நான் செல்ல வேண்டியிருப்பதால், இந்தப் பொன்விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இதை 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சொன்னார். ஆனால் நிலைமை மோசமான பிறகு, அதிகாரிகள் மீது பழியைப் போட்டு தப்பித்துக்கொள்ள ஆட்சியில் இருப்பவர்கள் நினைப்பது தவறான வழிமுறையைத் தமிழகத்திற்குக் காட்டுவதாக அமையும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியைப் பற்றி சட்டமன்றப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையிலும், வெளியேயும் பேச வேண்டிய நேரத்தில் எல்லாம் அலட்சியப்படுத்திவிட்டார்கள். இந்த முதலமைச்சர் வட ஆற்காடு மாவட்டத்திற்குச் சென்று நிருபர்கள் மத்தியிலே பேசுகிறபோது, “எதிர்க் கட்சித் தலைவர்கள் சட்டமன்றத்திலே, மேலவையிலே மிகைப்படுத்திப் பேசினார்கள் என்பதால், நானே வந்து பார்த்தேன். அவர்கள் சொன்னதை விட அதிகமாக வறட்சி நிலைமை இருக்கிறது” என்று சொல்லியிருக்கிறார். அன்றைக்கு நாங்கள் சொன்னபோது அதை அலட்சியப் படுத்திவிட்டு இன்றைக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வறட்சி நிலைமை இருந்ததை நினைவுபடுத்தி, மக்கள் குடிநீருக்குக் கஷ்டப்பட்டு ஊரை விட்டு ஓடினார்கள், ஆடுமாடுகளையெல்லாம் விற்றார்கள் என்று கடந்த கால ஆட்சியின் மீது பழியைப் போட்டிருக்கிறார்கள். இப்போது வட ஆற்காடு மாவட்டத்திலும், இராமநாதபுரம், சேலம் ஆகிய மாவட்டங்களிலும் இருக்கின்ற ஆடு மாடுகளுக்குத் தீவனம் இல்லாமல் அவைகள் இன்றைக்கு விற்கப்படுகின்றன. மாடுகள் அடிமாடுகளாக ஆகி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கடுமையான வறட்சியால் குடிதண்ணீருக்குக் கூட கார்டு முறை அமுல்படுத்தப் பட்டு ஒரு கார்டுக்கு 20 லிட்டர் குடிதண்ணீர் என்று சொல்லி விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே இவ்வளவு கடுமையான வறட்சி ஏற்பட்டபோது நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டு, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நடவடிக்கை எடுக்காததைப் போல பேசுகிறார்கள்.

[திரு. சோ. ஆறுமுகம்] [1981 மார்ச் 27

ஆந்திராவிலே இருக்கின்ற அரசு, ஆந்திர மாநிலத்தில் கடுமையான வறட்சி இருக்கிறது என்பது குறித்து மத்திய அரசுக்குக் குறிப்பிட்ட காலத்திலே தகவல் கொடுத்து, 23 கோடி ரூபாயைப் பெற்று, அங்கே நிவாரணப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள். ஆனால், நம்முடைய அரசாங்கம் இன்றைய தினம் யார் மீது பழியைப் போடலாம், தி.மு.க.வின் மீது போடலாமா அல்லது அதிகாரிகள் மீது போடலாமா என்று நினைப்பது தவறான போக்கு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 3,150 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்புதல் பெற்றிருக்கிறோம் என்பதைப் பெருமிதத்தோடு எடுத்துக்காட்டி, 3,150 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதால், உடனே தமிழகத்திலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு நிவாரணம் கிடைக்கப்பெற்று அதனாலே தமிழகமே ஒரு புது பொலிவைப் பெறப்போகிறது என்பதைப் போல சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறுகிற காலத்தில் ஒவ்வொரு ஆண்டிக்கும் நம்முடைய மாநிலத்தினுடைய வருவாயின் அடிப்படையிலே மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறபோது எந்த அளவிற்கு ஏற்பளித்திருக்கிறார்கள் என்று பார்த்தால், வேதனை தரக்கூடிய அளவிற்குத்தான் அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசிடத்திலே கொடுத்து அனுமதியைப் பெறுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். போக்குவரத்துத் துறை மூலம் மாநில அரசுக்கு நிறைய இலாபம் வரும். அந்த இலாபத்தை எடுத்து நாங்கள் திட்டப் பணிக்குச் செலவிடுவோம் என்று நிதியாதாரத்தைக் காட்டி ஒப்புதல் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே 1979-80 ஆம் ஆண்டில் 6 கோடி ரூபாய்க்கு மேல் இலாபம் கிட்டியது என்றாலும் 1980-81 ஆம் ஆண்டில் 16 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த நஷ்டத்திற்குக் காரணம் நிர்வாகத் திறமையின்மை என்பதா அல்லது பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் கவனிக்கவில்லை என்பதா? அல்லது அதிகாரிகள் முன்பு கொடுத்த தகவல் தவறா? இதற்கெல்லாம் ஆட்சியில் இருப்பவர்கள்தான் பொறுப்பான பதிலைச் சொல்ல வேண்டும். இதற்கு



1981 மார்ச் 27] [திரு. சோ. ஆறுமுகம்]

அவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். எதிர்க் கட்சியினர்மீது பழி போட்டுத் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைப்பது தவறானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உணவு நிலைமையைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1980-81 ஆம் ஆண்டில் அரிசி, ராகி, சோளம் ஆகிய எல்லா தானியப் பொருள்களையும் சேர்த்து மொத்தமாக 80.20 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படும் என்று மதிப்பிடப்பட்டது. இந்த மதிப்பீட்டை நிறைவேற்றிவிட்டோமா என்ற சந்தேகத்தை எழுப்ப விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் 1981-82 ஆம் ஆண்டில் 92.14 இலட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு தமிழகம் பூராவும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. கிணற்றிலே தண்ணீர் இல்லை. ஏரியிலே தண்ணீர் இல்லை. குளங்கள் காய்ந்து போயிருக்கின்றன. அப்படி இருக்கும் போதும் 1981-82-ல் 92.16 இலட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படும் என்று எப்படிச் சொல்லுகிறார்கள்? யார் இந்தக் கணக்கை இந்த அரசுக்குக் கொடுத்தது? கிராமங்களிலே சாகுபடிக் கணக்கைத் தயாரித்தவர்கள் கணக்குப் பிள்ளைகளும் கிராம அதிகாரிகளும்தாம். அவர்களுடைய பதவியை ஒழித்துவிட்ட பிறகு இந்தக் கணக்கை எப்படி அரசாங்கம் பெற்று இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்தது? கிராம அதிகாரிகளின் பதவிகளை ஒழித்துவிட்டு வருவாய்த் துறைப் பணியாளர்களை அந்தப் பணியைச் செய்யச் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கு ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நிலத்தின் நிலைமை என்னவென்று தெரியாது. நிலத்தைப் பார்க்காமல் அலுவலகத்திலேயே உட்கார்ந்து கொண்டு ஏற்கெனவே கணக்கு எழுதிய சில பேரைத் தாஜா செய்து வரவழைத்து அவர்களே வட்டாட்சியர் அலுவலகத்திலே இருந்து தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கை வைத்துக்கொண்டு 1981-82 ஆம் ஆண்டில் 92.16 இலட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்படும் என்று சொல்லி தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வதோடு இந்த நாட்டு மக்களுக்குக் கடுமையான பஞ்சத்தைக் கொண்டுவர திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் 1980-81-ல் 1.75 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 1981-82-ல் 1.80 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் வறட்சி இல்லாத நேரத்தில் கென்யா, கியூபா

[திரு. சோ. ஆறுமுகம்] [1981 மார்ச் 27

போன்ற நாடுகளுக்கு அரிசியை அனுப்பப் போகிறோம் என்று சொன்ன நேரத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு ஒதுக்கப்பட்டது ரூபாய் 1.75 கோடி. இந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலை இருப்பதால் நாம் இறக்குமதி செய்தாக வேண்டும். ஆனால் இப்போது ஒதுக்கப்பட்டிருப்பது 1.80 கோடி ரூபாய் மட்டுமே. ஆந்திராவிலிருந்து அரிசி வந்தால்தான் தமிழகத்தில் உள்ள வீடுகளில் பானைகள் பொங்கும் என்ற சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சென்ற கூட்டத் தொட ரிலேயே பேசினார்கள். நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதால், வெளி மாநிலத்திலிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்து தமிழகத்திற்குக் கொண்டு வந்தால் அதை அனுமதிக்க வேண்டும், அதிலே 40 சதவிகிதம் லெவி

(முற்பகல் 10-50)

முறையைக் கொண்டு வருவது கண்டிக்கத்தக்கது என்று அவர் சொன்னார். ஆனால் அதற்குப் பின்னாலே நீக்கப்படுவதாகச் சொல்லிவிட்டு மீண்டும் உறுதிப்படுத்தி செய்யக்கூடிய காரணத்தினாலே வியாபாரிகள் வெளி மாநிலத்திலிருந்து தமிழகத்தில் உணவுப் பொருள்களைக் கொண்டு வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலேயே கோடிட்டுக் காட்டிவிட்டார்கள். இதை அவர்கள் மறுக்க முடியாது. ஆனால் நேற்றையதினம் மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்து அவர்கள் பேசும்போது "இந்த மின்சாரத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டிருக்கின்றது பார்த்தீர்களா? 2.19 மெகாவாட்டாக இருப்பதை 2.63 மெகாவாட்டு என்று அதிகப்படுத்தி உற்பத்தி செய்யப்போகிறோம்" என்று சொன்னார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே திட்டமிட்டபடி தமிழகத்திலே தொடங்கப்பட்ட திட்டங்களின்படி அந்த 2.19 மெகாவாட்டு மின் சாரத்தை உற்பத்தி செய்கிறோமா? தமிழகத்திலே உள்ள மின் உற்பத்தி நிலை யங்கள் கடந்த மூன்று ஆண்டு காலமாக உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றனவா? அதைப்பற்றி அரசு பார்க்க வேண்டும். நெய்வேலி அது எண்ணூர் மின் நிலையம் ஆனாலும் சரி. மின் நிலையம் ஆனாலும் சரி, மேட்டூர் மின் நிலையம் ஆனாலும் சரி. தூத்துக்குடி மின் நிலையம் ஆனாலும் சரி. இந்த மூன்று ஆண்டு காலமாக என்ன உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது? எப்படி உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது? ஒரு ஆண்டில் அவைகள் 150 மெகாவாட் உற்பத்தி



1981 மார்ச் 27] [திரு. சோ. ஆறுமுகம்]

செய்தது என்றால், அடுத்த ஆண்டு 100 மெகாவாட் என்றும் அதற்கு அடுத்த ஆண்டு 50 மெகாவாட் என்றும் குறைந்துகொண்டு வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் இயந்திரக் கோளாறு என்று சொல் கின்றார்கள். அதற்கு வேண்டிய நிலக்கரி இல்லை என்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். ஆட்சியாளர்கள் தூங்கிக்கொண்டு இருந்துவிட்டு இன்றைய தினம் நாம் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த மின் நிலை யங்கள் உற்பத்தி செய்யாத நிலையில் இருக்கின்றன. அதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த ஆட்சியாளர்கள் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு 30 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் சப்ளை செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மின்சார வெட்டு எந்த அளவுக்குக் கிராமப்புறங்களிலே, நகர்ப்புறங்களிலே இருக்கின்றது என்று பார்க்க வேண்டும். 30 சதவிகிதம், 70 சதவிகிதம் என்று மாற்றினாலும்கூட, தமிழ் நாட்டிலே கடுமையான மின் வெட்டு இருக்கிறது. அதை ஆட்சியா ளர்கள் மறுக்க முடியாது. இன்றைக்கு 70, 75 சதவிகிதம் அளவுக்கு மின்வெட்டு தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. இதனாலே தொழில்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற கடுமையான வறட்சியிலேயும்கூட கட்டுப்பாடு இருக்கிறது. கிணற்றி லேயிருந்து நீர் பாய்ச்சி பயிர் செய்ய முடியாத சூழ்நிலையிலே அந்த விவசா யிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கடுமையான மின்வெட்டு இருக்கின்றபோது இந்த ஆண்டு 30 ஆயிரம் புதிய பம்பு செட்டுகளுக்கு மின் சப்ளை என்று சொல்கிறார்கள். சமீபத்திலே ஒரு உத்தரவு போட்டிருக் கிறார்கள். இனிமேல் புதிதாக மின்சாரம் பம்புசெட்டுகளுக்குப் பெறவேண்டு மானால், ஆர்.டி.ஓ. இடத்தில், தாசில்தார் இடத்தில், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இடத்தில் இருந்து அனுமதி பெற வேண்டும். அந்த விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் தரலாம் என்று சான்றிதழ் கொடுத்த பிறகுதான் மின்சாரம் தர முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அனுமதி வந்த பிறகுதான் மனுவைப் பரிசீலிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் இல்லாத உத்தரவு இது. விவசாயிகளுக்கு 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கான உத்தரவையும் பிறப்பித்திருக்கிறார்கள். விவசாயிகள் மின்சாரம் பெறக் கூடாது என்பதற்காகத்தான் வருவாய்த் துறை ஆய்வாளர்கள் அவர்களுக்குச் சான்றிதழ் கொடுத்த பிறகுதான் மின்சாரம் பெற முடியும், சப்ளை கொடுப்ப தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், இது நடக்கக்கூடிய

காரியமா? இதிலே பெருமை அடைந்துகொள்வதிலே என்ன பயன் இருக்க முடியும் என்ற கேள்வியை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்த நேரத்திலே தமிழகத்திலே இவ்வளவு கடுமையான வறட்சி இருக்கிறது. கடுமை யான மின்வெட்டு இருக்கிறது. ஆனால் இந்த நேரத்திலேயும்போய் மின் பட்ட நிலைமைகளில் ஜப்தியும் செய்கின்றார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை சாரக் கட்டணம் கட்டவில்லை என்று மின் துண்டிப்பு செய்கிறார்கள். இப்படிப் களை ஆட்சியாளர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு வறுமை யிலே வாடிக்கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டிய அவசி யத்திலே இருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா? விவசா யிகள் விவசாயச் சங்கத்திலே இருந்துகொண்டு போராடுகிறார்கள். அவர்களை முறியடிக்க வேண்டும் என்று இப்படிச் செய்கிறார்கள். யார் யார் விவசாயச் சங்கத்திலே பங்கு கொண்டிருக்கின்றார்களோ அவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற அளவில் இந்தமாதிரியான நடவடிக்கைகளை எடுக் கிறார்கள். இன்றையதினம் தமிழகத்திலே இந்த நிலைமைகள்தான் ஏற்பட் டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையைப்பற்றி நான் சொல்லவே தேவையில்லை. இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நலிந்துபோன கூட்டுறவுச் சங்கங்களாகத்தான் இருக்கின்றன. நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்பு கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமலிங்கம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையிலே கைத்தறி நெசவாளர்கள் முன்னேற்றத் திற்கு எந்த அளவுக்கு இந்த சர்க்கார் முயற்சி எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பாராட்டினார்கள். அவர்கள் முழுமையாக இதைப் படித்திருந்தால், அதிலே இருக்கிற விஷயம் தெரிந்திருக்கும். இன்றைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. அதுபோலவே கூட்டுறவு நிறுவனம், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் எல்லாம் இருக்கின்றன. இன்றைக்கு கூட்டுறவு நூற்பாலைகளிலே தயாரிக்கப்படுகின்ற நூல்களில் குறிப்பிட்ட சதவிகிதம் இந்தக் கூட்டுறவு நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மீதி 80 சத விகிதம் நூல்களை தனியார்கள் எப்படி மார்க்கெட் நிலவரத்தையொட்டி விற்பனை செய்கிறார்களோ, அப்படி இன்றைக்கு விற்பனை செய்துகொண்டி ருக்கிறார்கள். அதனால் கூட்டுறவுச் சங்க நெசவாளர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அதனாலே உறுப்பினர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே அப்படி நெசவாளர்களாக இருப்பவர்களுக்கு உண்மையான நண்பர்களாக இருந்தால் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கூட்டுறவு நூற்பாலைகளிலே தயாரிக்கப்படுகின்ற அத்தனை நூல்களையும் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். 9 சதம் 10 சதம் லாபம் என்று வைத்து கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி நெசவாளர் சங்கம் கொள்முதல் செய்கிறபோது 5 சதவிகிதம் லாபம் கொடுத்து அதற்குப் பின்னாலே அவர்கள் லாபம் கூடுதலாக ஆக்கி விற்கிறார்கள். அந்த அளவில் தான் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. இராமலிங்கம்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். 5 சதவிகிதம் அல்ல. அவர்களுக்கு 9 சதவிகிதம் லாபம் கொடுக்கிறார்கள். ஜனதா ரகம் என்று இருக்கிறது. மத்திய சர்க்காரிலே குறைந்த அளவிலே 5 சதவிகிதம் லாபம் கொடுக்கிறார்கள். இப்போது 9 சதவிகிதம் கொடுக்கிறார்கள். சாயத்திலே, தட்டுமுட்டு வேலைகளுக்கு என்று 2 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆக மொத்தத்தில் 11 சதவிகிதம் பிரைமரி சங்கங்களுக்கு லாபம் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: துணைத் தலைவரவர்களே, அவர்கள் அந்த இடத்திலேயே இருக்கின்ற காரணத்தினாலே, அதற்கு ஆதரவாகப் பேசி னார்கள். நான் உதாரணத்திற்குத்தான் சொன்னேன். நான் கரெக்டாகச் சொன்னேன் என்று சொல்லவில்லை. கைத்தறிச் சங்கங்களிலே, கொள்முதல் செய்யப்படுகின்ற பொருள்களுக்குக் கூடுதலாகக் கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஒரு குறிப்பிட்ட சத விகிதத்தை மட்டும் இவர்களுடைய நிர்வாகச் செலவுகளுக்கு என்று கோ-ஆப்டெக்ஸ் வைத்துக்கொண்டு மீதியைக் கொள்முதல் செய்கின்ற கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுத்து, அவர்கள் லாபம் அடையக்கூடிய வகையில் நியாயமான கொள்முதல் விலையை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். அது மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் லாபம் அடைந்து செயல்பட முடியாத நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நெசவாளர்களைப்பற்றிப் பேசுகிறபோது சொல்லியிருக்கிறேன். இங்கே சமீப காலத்திலேகூட ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். சேலம் மாவட்டத்திலே குமாரபாளையம் பகுதியில் எஸ்.எஸ். புராசசிங் அண்டு எம்ப்ராய்டரி யூனிட் என்று ஒரு நிறுவனம் இருக்கின்றது. அங்கே 1,200 தொழிலாளர்கள் 10, 12 ஆண்டுகாலமாக நெசவு வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் சரியாக நிர்ணயிக்கப்படவில்லை,

அவர்களுக்கு பி.எப்., ஈ.எஸ்.ஐ. மூலம் மருத்துவ மனை வசதிகள் எல்லாம் இல்லை. அவர்கள் அதற்காகக் கடந்த மாதத்திலேயிருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். 6—3—1981லே இருந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். அந்தப் போராட்டத்தை நடத்தி வருகின்ற காரணத்தினாலே, டெபுட்டி லேபர் கமிஷனரிடம் சென்று பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அங்கே மூன்று கோரிக்கைகள் நிர்வாகத்தினாலே அமுல்படுத்தப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தும் அந்தக் கோரிக்கைகள் நிறை வேற்றப்படாமல் இருக்கின்றன. அங்கே தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். அதனாலே தொடர்ந்து போராட்டம் நடக்கிறது. அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் இந்த அரசு முடிவு காணாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்த மௌனம் சாதிப்பது எதற்காக? இதனால் என்ன நிலைமை ஏற்படுகிறதென்றால், அங்கே

(முற்பகல் 11-00)

இருக்கின்ற பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர்கள் மீது அல்லது தொழிலாளர்கள்மீது அந்த நிர்வாகம் பொய்ப் புகார்களைக் கொடுத்து, 307வது பிரிவின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இன்றைக்கு அவர்கள் பெருத்த தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, போலீஸ் துணையோடு இன்றைக்கு அந்தப் போராட்டத்தை நசுக்கித் தீர வேண்டுமென்று வெளியிலிருந்து ஆட்களை அங்கே கொண்டு வருகிறார்கள். இந்தப் பிரச்சினைபற்றி ஆட்சியாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, முடிவு காணாமல், இன்றைக்கு தங்களுடைய கட்சிக்காரர்கள் என்று அவர்களுக்கு நோக்கமிருந்தாலும், தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டாமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.. தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்கு மாசு கற்பிப்பதுதான் ஆட்சியாளர்களின் நிலைமை என்றால், எரிமலைமீது உட்கார்ந்து மகுடி வாசிக்கிறார்கள். என்றுதான் பொருளாக இருக்க முடியுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இணைப்புச் சாலை வசதிகளைப்பற்றி நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு 6 கோடி, 7 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். இதெல்லாம், போதாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கெல்லாம் இணைப்புச் சாலைகள் அமைப்பதென்று திட்டமிட்டு, நிறைவேற்றப்பட்டது. இன்றைக்கு அந்தச் சாலைகள் செப்பனிடப்படாமல், ஜல்லி போட்டு கப்பிப்



பாதையாக மாற்றாமல், இன்றைக்குப் பல்லாங்குழி போல் இருக்கின்றன. இப்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு மிக மிகக் குறைவு. இதற்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நெடுஞ்சாலைத் துறையைப்பற்றி ஒன்று சொல்லியாக வேண்டும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதற்குப் பிறகு துறைகள் பகிர்ந்து கொடுக்கும் காரியத்தில் செயல்படுகின்றன. ஆனால் கடந்த 3, 4 ஆண்டுகளாக எப்படி நடைபெறுகிறதென்றால், நிதி ஒதுக்கீட்டை நாம் நிறைவேற்றிக் கொடுத்த பிறகும், இலாக்கா தக்க நடவடிக்கை எடுக்காததால், நவம்பர், டிசம்பர் மாதத்தில்தான் நெடுஞ்சாலைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு கிடைக்கிறது. இப்படி நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு, மார்ச் 25 ஆம் தேதிக்குள் வேலைகள் முடிக்கப்பட வேண்டுமென்று துறைக்குத் தகவல் போகிறது. ஆகவே இந்தக் குறுகிய காலத்தில் அவர்கள் மதிப்பீடுகள் தயார் செய்து, டெண்டர்கள் கேட்டு, வேலை செய்ய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் அவர்கள் அந்த நிதியைச் செலவு செய்தாக வேண்டும். அதற்காக அந்தத் துறையிலே இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒதுக்கீடு செய்த பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்பதற்காக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மூலம் தார் வாங்க கோடிக் கணக்கான ரூபாயை அட்வான்ஸ் என்ற பெயரிலே செக் போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் தார் உடனடியாக வாங்குவதில்லை. கோடிக் கணக்கான ரூபாய் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்குப் போகிறது. அப்போது விற்கப்படும் விலைக்குத் தகுந்தாற்போல் பணத்தை அட்வான்ஸ் செய்கிறார்கள். இடையிலே தார் விலை ஏறிவிட்டால், அதனையும் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. குறிப்பிட்ட காலத்தில் நாம் நிதியை ஒதுக்கித் தந்தாலும், அதைச் செலவு செய்வதில்லை. ஒதுக்குகின்ற பணம் எங்கோ போய் முடங்கிக் கிடக்கின்றது. அதனால்தான் தமிழ் நாட்டில் நெடுஞ்சாலைகள் அத்தனையும் மிகவும் மோசமாக அமைந்துள்ளன என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உழைப்பிற்கு உணவுத் திட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதுபற்றி இங்கே பேசினார்கள். இதெல்லாம் இந்த அரசு செய்யவில்லையா என்று கேட்டார்கள். மத்திய அரசு கொண்டு வந்த திட்டத்தை நாம் அமுல் படுத்துகிறோம். அவர்களும் உதவி செய்கிறார்கள். நாமும் நிதி ஒதுக்கீடு செய்கிறோம். எப்படி இருந்தாலும், வரவேற்கக்கூடியதுதான். இதில் நடைபெறுகிற ஊழல்கள் வேறு எதிலும் நடைபெறவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அனுபவ ரீதியாகப் பார்க்கிறேன். அதிலிருந்து பணம் அமைச்சர்களுக்கு வருகிறது, ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அப்படிச் செய்கிறார்கள் என்று நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. உணவுக்கு வேலைத் திட்டம் என்று சொல்லும் போது, அந்த வேலைகளை டெண்டர் மூலம் விடாமல், துறையேதான் செய்ய வேண்டுமென்று ஆணை போட்டிருக்கிறோம். அதனால் என்ன நடை பெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே இருக்கும் ஊராட்சி ஒன்றிய ஆணையர், அவர்கள், ஆட்களை வைத்து, என்.எம்.ஆர். தயார் செய்து, வேலை வாங்க முடியாது. மதிப்பீடு தயார் செய்து, காண்ட்ராக்டர்களைக் கூப்பிட்டு இந்த வேலையைச் செய் என்று ஒப்படைத்துவிடுகிறார். 30 சத விகிதம் அவர்கள் செய்துவிட்டு, மீதியுள்ள 70 சதவிகிதம் அரிசியையும், பணத்தையும் அதிகாரிகளும், ஒப்பந்தக்காரர்களாக இல்லாதவர்களும் இன்று நாட்டிலே கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டாமா? இதைத் தடுக்க என்ன முயற்சிகளை அரசு எடுத்திருக்கிறது? இவற்றையெல்லாம் சொன்னால் ஆத்திரப்படுகிறார்கள். வேலைக்கு உணவுத் திட்டத்தில், தரப்படும் 1 கிலோ அரிசியின் விலை ரூ. 1.67 என்று அரசு நிர்ணயித்திருக்கிறது. அவர்களுக்கு தினமும் எத்தனை கிலோ அரிசி கொடுக்கிறார்கள்? இரண்டு கிலோ அரிசி கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதன் விலை 3 ரூபாய் 34 காசுகள். இது அல்லாமல் அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி 2 ரூபாய் தருகிறார்கள். ஆக 5 ரூபாய் 34 காசுதான் வேலைக்கு உணவுத் திட்டத்தில் தரப்படுகிறது. 5 ரூபாய் 34 காசுக்குக் கல் உடைக்கின்ற தொழிலாளி அல்லது கட்டடம் கட்டும் தொழிலாளி அல்லது தச்சு வேலை செய்யும் தொழிலாளி அல்லது வயலிலே வேலை செய்கின்ற தொழிலாளி வேலை செய்ய வருவானா? யாரும் வரமாட்டார்கள். அரசாங்கம் கட்டாயக் கூலி நிர்ணயம் செய்திருக்கிறது. அதற்குப் புறம்பாக இப்படி உத்தரவு போட்டு, 5 ரூபாய் 34 காசுக்கு தமிழகத்தில் வேலை செய்யுங்கள் என்றால், எப்படி வேலைகள் நிறைவேறும்? ஆகவேதான் யாரும் வருவதில்லை. ஆனால் இந்தத் திட்டத்தின் பெயரால் கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.





தொழில் வளர்ச்சிபற்றி நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுகுறித்து ஒரு கருத்து சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே சாதனை சிறப்பாக இருக்கிறதென்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். என்ன சிறப்பாக இருக்கிறதென்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. கடந்த மூன்றாண்டுகளாகத் தமிழ் நாட்டில் தொழில் இலாக்கா ஒரு அமைச்சரிடம் இருந்தால்கூடப் பரவாயில்லை; இரண்டு அமைச்சர்களிடம் இருக்கிறது. அந்தத் துறையை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அப்படி இரண்டாகப் பிரித்திருக்கிறார்களே தவிர, அந்த இலாக்கா செயல்படுவதை அவர்கள் பார்க்கிறார்களா என்று சந்தேகம் பொதுவாக எழுந்துள்ளது என்ற குற்றச்சாட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், தமிழ் நாட்டிலே பேப்பர் மில் ஆரம்பிக்க வேண்டுமென்று, மதுரையிலிருந்து நாராயணன் செட்டியார் என்பவர் வந்து, தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் நிதி பெற்று, தொடங்கினார். மெஷின்கள் எல்லாம் வாங்கி வைத்தார். மேற்கொண்டு அவருக்கு நிதி உதவி செய்யாமல், அந்தத் தொழிற் சாலையை எப்படியாவது முடக்க வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டதால், ஏற்கெனவே கொடுத்த தொகையை வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லி, ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட்படி நடவடிக்கை எடுத்ததால், அவர் ஆத்திரப்பட்டு, ஒரே காசோலை மூலம் 23 லட்சம் ரூபாயையும் சர்க்காருக்கு—அந்த முதலீட்டுக் கழகத்திற்கு அனுப்பிவிட்டார். பிறகு தமிழ் நாட்டில் தொழில் ஆரம்பிப்பதில்லை, கர்நாடகத்தில் ஆரம்பிக்கிறேன் என்று சொல்லிப் போய் விட்டார். இப்படி தொழிலை நடத்தக்கூடியவர்கள் எல்லாம் அண்டை

(முற்பகல் 11-10)

மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் அவர்களுக்கு உற்சாகத்தை, ஊக்கத்தைக் கொடுக்கத் தவறியிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே இருந்த எத்தனையோ தொழில் நிறுவனங்களை தமிழகத்திலேயிருந்து வேறு வெளி மாநிலங்களுக்கு மாற்றிச் சென்றிருக்கிறார்கள். இதுகுறித்து தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகமானாலும் சரி, இந்தத் துறையானாலும் சரி, சரிவாக் கவனம் செலுத்தவில்லை. வண்ணக் கம்பெனி, அலுமினியக் கம்பெனி, டேல்ஸ் கம்பெனி போன்றவைகள் எல்லாம் தமிழ் நாட்டிலே அன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், இன்றைக்கு அவர்கள் எல்லாம் தங்கள் கம்பெனிகளை தமிழ் நாட்டிலே மூடிவிட்டு, வெளி

மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தொழில் முதலீட்டு நிறுவனம் முன்பு 600 தொழில்களுக்கு உதவி செய்தது. இன்றைக்கு அந்தத் தொழில்கள் எல்லாம் நல்லமுறையில் நடைபெறக் கவனம் செலுத்துவதற்கு நேர்மாறாக அவர்கள் கொடுத்த பணத்தை எப்படி எப்படியெல்லாம் திருப்பி வாங்கலாம் என்பதிலே மட்டும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். தொழில்களே நசித்துப்போய் விடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

முதலில் தொழிலைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு முதல் இடத்தைப் பெற்றிருந்தது. இன்றைக்கு தமிழ் நாடு 10வது இடத்திற்குச் சென்று விட்டது என்று சொல்லுகிறார்கள். டி.ஐ.ஐ.சி., சிப்காட் போன்ற நிறுவனங்களில் கடந்த 3 ஆண்டுகளாக இந்த ஆட்சி வந்ததிலிருந்து சேர்மென் போடப்படவில்லை. நான்-அபிஷியல் மெம்பர்களைத்தான் அங்கே போட்டிருந்தோம். ஏற்கெனவே அங்கே இருந்தவர் லோன் வாங்கியிருந்தார் என்று சொல்லி, அதனால் பிரச்சினைகள் வந்த காரணத்தால், அவரை வாபஸ் வாங்கி விட்டார்கள். இப்போது அதிகாரியை வைத்து நிர்வாகம் நடத்து கிறார்கள். தலைவரை இன்னும் நியமிக்கவில்லை. தொழிற்சாலைகளை ஆரம்பிக்கக்கூடியவர்களுக்கு தமிழக அரசு உற்சாகமூட்டி, உதவி செய்யாத தால் இன்றைக்கு தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப் பட்டிருக்கிறது.

அதுபோல் இப்போது பப்ளிக் செக்டார் பற்றி நாம் பேசுகிறோம். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏற்றுக்கொள்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை, ஒரு வேளை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கும் என்று நினைக் கிறேன். அவர்களும் இன்றையதினம் ஆளும் கட்சிக்குக் கூட்டாளிகளாக இருப்பதால் ஒருவேளை எதிர்க்காமலும் இருக்கலாம்.

திரு. ஆ. நல்லசிவன்: கம்யூனிஸ்ட் கட்சி பப்ளிக் செக்டார்களை எதிர்க்கும் என்பதை எந்த ஆதாரத்தை வைத்து உறுப்பினர் சொல்கிறார்? (சிரிப்பு).

திரு. சோ. ஆறுமுகம்: தமிழ் நாட்டிலே அரக்கோணத்திலே ஸ்டீல், இரும்பு தயாரிக்கின்ற கம்பெனி இருக்கிறது. அதற்குப் பங்கு மூலதனம் போட்டு ஆரம்பித்தது ரூ. 3.50 கோடி செலவில். ஆனால் 1980 ஆம் ஆண்டு அதனுடைய நஷ்டம் 4.50 கோடி ரூபாய். தூத்துக்குடி உரத் தொழிற்சாலை [illegible] கோடி ரூபாய் பங்கு மூலதனம் போட்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு



1980 ஆம் ஆண்டு 45 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தேர்ன் போர்ன் எஞ்சினியரிங் நிறுவனம் 40 லட்சம் ரூபாய் முதலீட்டிலே ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு அதிலே 85 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாடு கெமிக்கல் நிறுவனத்திற்கு 2 கோடி ரூபாய் மூலதனம் ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு அதற்கு 2.75 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு நிறுவனங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே. இதற்கெல்லாம் யார் யார் பொறுப்பேற்றிருக்கிறார்கள்? இந்தத் துறையினுடைய அமைச்சர் என்ன செய்கிறார்? மக்களுடைய வரிப் பணம் இந்த ஆட்சியால் பெருத்த நஷ்டத்திற்கு உட்பட்டிருக்கிறது என்று நாங்கள் சொன்னால், ஆட்சியிலே இருப்பவர்கள் கோபப்படக்கூடாது. இந்தத் துறையினுடைய அமைச்சர் இதையெல்லாம் கவனிக்க வேண்டாமா? நாங்கள் சொல்வதையெல்லாம் முதலில் கேட்டுக்கொள்ள வேண்டும்.

அடுத்து, அரசு ஊழியர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படும் என்றும், இவ்வாறு மாற்றியமைக்கப்படும் ஊதிய விகிதங்கள் 1-4-1978 முதல் அமுல் செய்யப்பட்டு, அதன் நிதிப் பலன் 1-1-1981 முதல் அளிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இன்றும் அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து அமுல்படுத்தப்படும் என்றெல்லாம் கூடச் சொல்லியிருக்கிறார்கள். "தற்போது ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு ஊதியத்தில் வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை கணக்கில் கொள்ளப்படுவதில்லை, இனி, அந்த இரண்டு படிகளும் ஒப்புவிப்பு ஊதியத்தில் சேர்த்து அளிக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சலுகை ஏற்கெனவே நடைமுறையில் இருந்த ஒன்றுதான். இடையிலே இதை இந்த அரசு நிறுத்தி விட்டு இப்போது மறுபடியும் வழங்கியிருக்கிறது. இது புதிய சலுகை அல்ல. இன்னொன்றையும் நாம் பார்க்க வேண்டும். ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு ஊதியத்தில் வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை கணக்கில் கொள்ளப்படும் என்று சொல்லியிருக் கிறார்களே இந்தச் சலுகை தமிழ் நாட்டிலே உள்ள எல்லா அரசு ஊழியர் களுக்கும் பொருந்தக்கூடிய ஒன்றா என்றால், இல்லையென்று சொல்வேன். சில பகுதிகளிலே உள்ளவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சலுகை பயன்படும். ஆகவே இதை ஒட்டு மொத்தமாக என்.ஜி.ஓக்கள் அனைவரும் எப்படி வரவேற்க முடியும்? தேர்வு நிலை ஊதிய உயர்வு என்றும் சொல்லியிருக் கிறார்கள். ஆனால், எந்த அளவுக்கு இதை வழங்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. 100 ரூபாயா, 200 ரூபாயா என்று தெளிவாகச் சொல்ல வில்லை. இந்த அளவிற்குக் கொடுக்கப் போகிறோம் என்று இப்போதே

சொல்லிவிட்டால், கொடுக்க வேண்டிவரும், ஆனால் அதைச் சொல்லாமல் விட்டு பின்னால் பணம் இல்லையென்று பிடிகை போடுவதற்குத் தானே இப்படிச் செய்திருக்கிறார்கள். அதுபோல் பயணச் சலுகைபற்றி அறிவித்திருக்கிறார்கள். திரும்பி வர முடியாதபடி தான் குடும்பத்தோடு பயணம் செய்வார்களா? அதனால்தான் 'இரயில் கட்டணத்தில் ஒரு வழிச் செலவை அரசு ஏற்கும்' என்று சொல்லியிருக்கிறார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இராமேஸ்வரத்திற்குக் குடும்பத்தோடு செல்லுகிறார்கள் என்றால், இராமேஸ்வரத்திலேயே தங்குங்கள், இங்கே வர வேண்டாம் என்று சொல்லுகிறார்களா? இப்படி ஒரு வழிச் செலவை மட்டும்தான் அரசு ஏற்கும் என்றால், எந்த அரசு ஊழியர்கள் இத்திட்டத்தை வரவேற்பார்கள்? ஆகவே இந்தப் பயணச் சலுகை குறித்து, ஒரு வழிச் செலவை அரசு ஏற்கும் என்பதற்கு பதிலாக இருவழிச் செலவையும் அரசு ஏற்கும் என்கிற வகையில் அரசு முடிவெடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு ஊழியர்களுக்கு மூன்று அகவிலைப்படி தவணைகளை மத்திய அரசு அளித்துள்ளது. ஆனால், நம்முடைய அரசு ஊழியர்களுக்கு ஒரே ஒரு அகவிலைப்படி தவணைதான் இந்த நிதி நிலை அறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்தால், அரசு ஊழியர்களிடமிருந்து எப்படிப் பாராட்டு கிடைக்கும்? இப்படிச் செய்வதில் நியாயம் இருக்க முடியாது. அவர்கள் எப்படி இந்த அரசை வரவேற்பார்கள்? இதையெல்லாம் இந்த அரசு யோசிக்க வேண்டும்.

அடுத்து, காவல் துறையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 10 ஆயிரம் பேரை போலீஸ் வேலைக்கு எடுக்கிறோம் என்று சொன்னார்கள். பிறகு 12 ஆயிரம் பேர் என்று சொன்னார்கள். ஆனால் அதன்படி 12 ஆயிரம் பேரைத் தேர்ந்தெடுத்தார்கள். வேலையில்லாத லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும் போட்டியில் கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு போலீஸ் அதிகாரியும் சொன்னபடி போட்டியில் கலந்துகொண்டவர்கள் நடந்து, ஓடி, நின்று தங்களுடைய திறமைகளைக் காட்டினார்கள். தேர்வெல்லாம் முடிவடைந்த பின்பு, இந்த 12 ஆயிரம் பேரை நியமிப்பது சம்பந்தமாக முடிவு தெரிய அரசுக்கு அதை அனுப்பி வைத்தார்கள். ஆனால் 4 ஆயிரம் பேரை மட்டும் நிதியாண்டில் நியமித்தால் போதும் என்று அனுமதியளித்து விட்டு மீதிப் பேரை நியமிக்காமல் விட்டுவிட்டார்கள். நான் கேட்கிறேன், இந்த ஆட்சிக்கு வேண்டிய கட்சிக்காரர்களாகப் பார்த்து 4 ஆயிரம் பேரைத் தேர்ந்தெடுத்தார்களா?



அப்படி இல்லையென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுத்து அனுப்பிய 12 ஆயிரம் பேரையும் நியமித்திருக்க வேண்டாமா? அதற்கு மாறாக 4 ஆயிரம் பேரை மட்டும் நியமித்தால், அதற்கு என்ன அர்த்தம்? இதிலே தவறு நடந்திருக்கிறது.

அடுத்து, சிறைக் காவலர்கள்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். காவல் துறையில் பணியாற்றக் கூடியவர்களுக்கு வழங்குவதுபோல் இவர்களுக்கும் மலிவு விலையில் உணவுப் பொருள்கள் வழங்க வேண்டும். அதேபோல் காவல் துறையில் கொடுப்பதுபோல் சீருடை, ரிஸ்க் அலவன்ஸ் போன்றவற்றையும் கூடுதலாக வழங்க வேண்டும்.

அடுத்து, மதுவிலக்குபற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் திறந்து பேசினார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கா அவர்கள் பேசும்போது, கட்சி வித்தியாசமின்றி நடந்து வருவதாகக் குறிப்பிட்டார்கள். அவர் அப்படிச் சுட்டிக்காட்டியதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் நான் இங்கே சொல்ல வருவதெல்லாம் உங்களுடைய கட்சிக்கு இருக்கிற இரட்டை இலைச் சின்னம் போல் ஆட்சியிலும் இரண்டு வகையான கொள்கைகளை வகுக்க வேண்டாம் என்பதைத்தான். மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், ஒன்று பரிபூரணமாக அதை ரத்து செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால், மதுவிலக்குக் கொள்கையை தீவிரமாக அமுல்படுத்த வேண்டும். இப்படி அரசாங்கமே நிதிநிலை அறிக்கையிலே இரண்டுவிதமான கொள்கைகளைக் கோடிட்டுக் காட்டியிருப்பதன் மூலம், தமிழ் நாட்டிலே சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் என்பதை சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது. அதோடு மாத்திரமல்லாமல் இப்படிப்பட்ட அறிவிப்பின் மூலம் அரசுக்கு முறையாக வரவேண்டிய வருமானம் கூட வர முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு இந்த அரசு எதிர்காலத்திலே நிச்சயமாகப் பொறுப்பேற்றாக வேண்டும். அரசுக்கு வரவேண்டிய வருமானத்தைக்கூட எதிர்பார்க்க முடியாத நிலை இந்த அறிவிப்பின் மூலம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு "25 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மது அருந்த அனுமதிக்கப்படுவர் என்றும் அவர்கள் முறைப்படி அனுமதிச் சீட்டு பெற வேண்டும் என்றும் பாட்டில்களில் சாராயம் அடைக்கப்பட்டு உரிய கடைகளில் விற்பதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்றும், கடைகளில் இருந்து குடிக்க யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி லைசன்ஸ் மூலம் நாம் அனுமதித்தால் நிச்சயமாக எதிர்பார்க்கின்ற வருமானத்தை நாம் பெற முடியாது. ஏலத்தில் விட்டால்

தான் அதிகமான வருமானம் வரும். "கள் இறக்குவதற்கு முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட மரமேறுவோர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மட்டுமே அனுமதி அளிக்கப்படுவார்கள்" என்று சொல்லப்பட்டிருந்தாலும் கூட, அது கூட்டுறவுத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு லாபத்தை ஈடு செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட ஒன்று என்ற காரணத்தால் விற்பனை, தயாரிப்பது போன்றவற்றை அளவில் விடுவதுதான் அரசுக்கு அதிக வருமானத்தைத் தரும். உரிமம் பெற்றவர்கள்தான் சாராயம் விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

திரு. சே. ஆறுமுகம்: தலைவரவர்கள் திரும்பி வரும்வரையாவது தயவுசெய்து பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தலைவர் ரொம்ப நேரம் கழித்து வரலாம். அதுவரை அனுமதிக்க முடியுமா? சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. சே. ஆறுமுகம்: சாராயம் குடிக்க பெர்மிட் வைத்திருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், "கடைகளில் இருந்து குடிக்கவோ, பொது இடத்தில் குடிக்கவோ கூடாது" என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவர் வீட்டிலேயிருந்து குடித்து விட்டு வீதியிலே வந்தால், என்ன செய்வது? போலீஸ்காரர் வந்து அப்படிப்பட்டவரைப் பிடித்தால்கூட, பெர்மிட் ஆர்டரைக் காட்டினால் அவரை ஒன்றும் செய்ய முடியாது. இப்போதே

(முற்பகல் 11-20)

நாடு முழுவதும் கள்ளச் சாராயக் கடைகள் இருக்கின்றன. இனி லைசென்ஸ் வாங்கிக்கொண்டு சாராயக் கடைகள் வைக்கப்பட்டால், அங்கெல்லாம் அரசாங்கம் நிர்ணயிக்கும் விலைப்படி, செல் டாக்ஸ் உட்பட, ஒரு குறிப்பிட்ட விலைக்குத்தான் விற்க வேண்டியிருக்கும். அப்போது கள்ளச் சாராயம் தயாரிப்போர் விற்கும் விலைக்கும், அரசாங்கம் நிர்ணயம் செய்யும் விலைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும். ஒரு பாட்டில்—அதில் எவ்வளவு அவுன்ஸ் இருக்கும் என்று எனக்குத் தெரியாது—சாராயத்தின் விலை ரூ. 10 என்று அரசாங்கம் நிர்ணயம் செய்தால், கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பவர்கள் ஒரு பாட்டில் சாராயத்தை ரூ. 2 அல்லது ரூ. 5-க்கு விற்பார்கள். அதோடு போதை [illegible] சர்க்கார் சாராயத்தைவிட தனியார் சாராயத்தில்தான் போதை அதிக



மாக இருக்கும். எனவே, அங்கேதான் மக்கள் போவார்கள். இந்த நிலையில் அரசாங்கம் அவர்களோடு எப்படிப் போட்டியிடப் போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆக இப்படி பெர்மிட் மூலம் சாராயக் கடை கொண்டு வருவதால், சர்க்காருக்கு எதிர்பார்க்கும் வருமானம் கண்டிப்பாக வராது. இதைத்தான் மலையாள மனோரமாவில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதாவது யாரோ சில சாராய வியாபாரிகளுக்குச் சலுகை காட்டுவதற்கும், அனுமதி கொடுக்கவும் சர்க்கார் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முனைந்திருக்கிறதோ என்ற சந்தேகம் நாட்டு மக்கள் மத்தியிலே எழுந்திருக்கிறது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஏழைத் தாய்மார்களின் மகள்களுக்குத் தாலிக்குத் தங்கம் தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் தமிழ் நாட்டில் இருக்கிற முறை அல்லது பண்பாடு என்னவென்றால், மாப்பிள்ளை வீட்டார்தான் தாலி செய்வார்கள். இந்தத் திட்டத்தை ஏழைகளுக்கு என்று வைத்துக்கொண்டு, அவர்களின் மகள் அல்லது மகனுக்கு இந்தப் பலன் கிடைக்காமல் செய்வது சரியல்ல. எனவே அனைவருக்குமே திருமணத்திற்குத் தாலிக்குத் தங்கம் தர அரசு முன்வர வேண்டும். அதன் மூலம் தமிழர்களை [illegible] காப்பாற்ற அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபோது டாக்டர் பட்டம் வாங்கியதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். தயவுசெய்து அவர்களெல்லாம் கொஞ்சம் திரும்பிப் பார்க்க வேண்டும். "திரும்பிப் பார்" என்று ஒரு படம் வந்தது நினைவுக்கு வரும். ஆனால் ஆட்சியில் இருப்பவர்கள் திரும்பிப் பார்க்காமல் முன்னாலேயே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது என்னென்ன குற்றச்சாட்டுகளையெல்லாம் எங்கள் மீது சொன்னார்கள் என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் நான் தவறு என்றுகூடச் சொல்லவில்லை.

"பிள்ளையோ பிள்ளை" என்று ஒரு படம் வெளிவந்தது. அப்போது முதலமைச்சராக இருந்த எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் மகன் அந்தப் படத்தில் நடித்திருந்தான். அதை ஒரு குற்றமாக்கி முதலமைச்சர் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தப் படத்தை எடுத்தார் என்றும், விநியோகம் செய்யும்போது தனியாரிடம் கூடுதலான பணத்தை வாங்கினார் என்றும் சொன்னார்கள். நான் இன்றைக்குக் கேட்கிறேன், "உங்கள்

[திரு. சோ. அழகேசன்]   [1981 மார்ச் 27

ஆட்சியில் அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறவில்லையா?" "வெள்ளாடு வேங்கையாகிறது" என்று ஒரு படம். அதற்கு இப்போதுதான் பூசை போடப்பட்டிருக்கிறது. அடுத்தது "இராணுவ வீரன்". இது ஒரு படம். இதற்கு ஒரு அமைச்சரே கதை வசனம் எழுதியதாக நான் பார்த்தேன். அன்றையதினம் இதற்கெல்லாம் எங்கள் மீது குற்றஞ்சாட்டியவர்கள் இன்றைக்கு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? இதையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டாமா?

எங்களைப் பார்த்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சொல்வதிலே பயனில்லை. மதுரையிலே எப்போது இவர்கள் உலகத் தமிழ் மாநாடு கொண்டாடினார்கள்? 15 கோடி ரூபாயைச் செலவழித்து அங்கே விழாக் கொண்டாடினார்களே அது எப்படிப்பட்ட நேரம்? தமிழகத்தில் பெரும்பாலான விவசாயிகள் அப்போது சிறையிலே அடைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களின் போலீஸ் துறைத்தளத்தில் 11 பேர் விவசாயிகளும் பொதுமக்களும் துப்பாக்கிச் சூட்டில் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள். அவ்வாறு அவர்களைச் சுட்டு வீழ்த்திய பிறகு, உலகத் தமிழ் மாநாடு நடத்தி அங்கே "மதுர நாயகி" நாடகம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் தமிழகம் மறந்துவிடவில்லை. இவைகளெல்லாம் அவர்கள் நினைவில் நீறு பூத்த நெருப்பாகத்தான் இருக்கின்றன. இன்றையதினம் ஆட்சியில் இருக்கிறோம் என்ற நிலையில் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

விரைவில் முடித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் மதுக் கடைகளைத் திறந்துவிட்டுவிட்டு, மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக என்று ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். எதற்காக இந்த ஒதுக்கீடு? அவர்களின் கட்சிப் பேச்சாளர்கள் பயன்படுத்திக்கொள்ளவா? அல்லது அவர்களின் கட்சியில் இருப்பவர்கள் பயன்படுத்திக்கொள்ளவா? இப்படிப் பிரச்சாரத்திற்கு என்று ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி வைத்து, அதன் மூலம் இந்த அரசாங்கப் பணத்தைக் கூட்டுக் கொள்ளை அடிக்க இருக்கிறார்கள். இல்லையென்றால், விளம்பரத்திற்காக என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவதன் அர்த்தமென்ன? திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்த நேரத்தில், மக்கள் மத்தியில் மதுவிலக்குக் கொள்கையைப் பரப்ப வேண்டுமென்று அப்போதுகூட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கு அன்றைய



1981 மார்ச் 27]   [திரு. சோ. அழகேசன்]

முதலமைச்சர்தான் தலைவராக இருந்தார். அப்போதெல்லாம் இந்த மாதிரி ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித்தான் பிரச்சாரம் செய்ய வேண்டும், விளம்பரம் செய்ய வேண்டும் என்று எங்கள் முதல்வர் சொன்னாரா? இல்லையா? இன்றையதினம் அரசாங்கம் தன் கையில் விளம்பரத் துறையை வைத்துக் கொண்டு, குடும்ப நலத் துறையை வைத்துக்கொண்டு, அரசாங்கச் செய்திப் படங்கள் போடுவது என்ற நிலை இருக்கும்போது, மதுவிலக்குப் பிரச்சார விளம்பரத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினால் என்ன அர்த்தம்? நாடு முழுவதும் சாராயம் விற்கலாம், கள் விற்கலாம் என்று அறிவித்து, கடைகளைத் திறந்து வைத்த பிறகு, தாய்மார்களின் கழுத்தில் இருக்கிற தாலியைச் சாராயக் கடையிலும் கள்ளுக் கடையிலும் கொண்டு போய்ச் சேர்க்கிற நிலைமை உருவாக்கிவிட்ட பிறகு, எதற்காக சர்க்கார் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை ஒதுக்குகிறார்கள்? இந்த மோசடியின் பின்னணி என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த ஆட்சி சொல்வதற்கு நேர்மாறாகச் செயல்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளாக இதே நிலைதான் இங்கே இருந்து வருகிறது. நாடு முழுவதும் 8.5 சதவிகிதம் வேலையற்றோர் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவர்கள் ஆட்சி செய்யும் தமிழகத்தில் மட்டும் வேலையற்றோரின் எண்ணிக்கை 16.1 சதவிகிதம் என்ற அளவில் இருக்கிறது என்றால், இவர்களின் நிர்வாகத் திறமை நமக்குப் புலப்படவில்லையா? வேலையில்லாதார் பிரச்சினைக்கு இவர்கள் என்ன பரிகாரம் கண்டிருக்கிறார்கள்? கடந்த காலத்தில் எங்கள் மீது காழ்ப்புணர்ச்சி காரணமாகப் பழியைச் சுமத்திவிட்டு, அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்திவிட்டு, இன்றையதினம் அதைவிட 100 மடங்கு அதிகமான குற்றங்களை இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இன்றையதினம் இதன் காரணமாக இவர்களையே காப்பாற்றிக்கொள்ள முடியாத அளவுக்குத் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கை வரவேற்கத் தகுதியுடையதும் அல்ல, வரவேற்பதற்கான வாய்ப்பையும் உருவாக்கித் தரவில்லை என்பதையும் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

3. உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. எம். மியாகான் ஆட்டோ ரிக்ஷா டிரைவரால் தாக்கப்பட்டது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் இன்று அவைக்கு வரும்போது, அவருக்குப் பல இன்னல்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அவர் அவைக்கு உரிய நேரத்தில் வர முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அவைக்கு வருவதற்காக அவர் ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் ஏறியிருக்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, இம்மாதம் 30 ஆம் தேதிக்கு முன்பாக கூடுதலாக ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சிக்காரர்கள் வாடகை கேட்டால் தர வேண்டியதில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இன்று அவைக்கு வருவதற்கு ஆட்டோ ரிக்ஷாவில் அமர்ந்தபோது, அவரிடம் 6 ரூபாய் கேட்கப்பட்டதாம். அவர் அதிகமான தொகை கொடுக்க மாட்டேன் என்று சொன்னதால், அவரை அந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர் தாக்கியிருக்கிறார். அதன் காரணமாக அவருடைய பவுண்டன் பேன் காணாமல் போயிருக்கிறது. அவருக்கு உரிய பாதுகாப்பு கொடுக்க வேண்டியது இந்த அவையின் கடமை. எனவே நடைபெற்ற சம்பவம் குறித்து அவரிடம் தகவல் கேட்டு, அவருக்குப் பாதுகாப்பு கொடுப்பதோடு, ஆட்டோ ரிக்ஷா டிரைவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தெரிவித்த கருத்தோடு இன்னொரு விஷயத்தையும் நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நானும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பா. ரா. நாமல் மற்றும் செல்வி அ. லீலாவதி ஆகியோரும் சேர்ந்து அன்றையதினம் இது குறித்த ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வந்தோம். அன்றையதினமே ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் இத்தகைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் யார் என்று கோஷம் போட்டதாகவும், அவர்களை ஒரு கை பார்ப்போம் என்று மிரட்டியதாகவும் ஆதாரபூர்வமான செய்தி கிடைத்திருக்கிறது. அவை உறுப்பினர்களான நாங்கள் பொதுமக்களின் சங்கடங்களைத்தான் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானங்களாகக் கொண்டு வருகிறோம். ஆனால் அதற்காக எங்களுக்கு அச்சுறுத்தலை



வருமானால், எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகிறது. இதுகுறித்து மாண்புமிகு தலைவர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அரசுக்கு முறையான முறையீடு அளிக்கப்பட்டால், அரசு உரிய நடவடிக்கை எடுக்கும், எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும், நானும் இது சம்பந்தமாகத் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் இதையே முறையீடாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதுபற்றி முறைபாக ஒரு "நோட்டீஸ்" வடிவில் தந்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

5. 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனது கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இரண்டு விதக் கோணத்திலிருந்து எதிரும் புதிருமாகக் கருத்துக்கள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு கருத்துக்களையும் முழுவதுமாக என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

உதாரணமாக, அரசின் கொள்கையை விமர்சிக்கக்கூடிய நேரத்தில் Extreme form -க்குப் போய் இந்த பட்ஜெட்டிலே ஒன்றுமே இல்லை என்று ஒரு தரப்பிலேயிருந்து கூறியதற்கு, இந்த ஆண்டு 1,138 கோடி ரூபாயைச் செலவழிக்கிறபோது அதிலே அடங்கியிருக்கிற திட்டங்கள், சலுகைகள், நிவாரணங்கள் பற்றி பெரியவர் திரு. முத்து அவர்கள் தொகுத்து படித்துக் காட்டினார்கள். ஆகவே ஒன்றுமே இல்லை என்று சொல்லுவது எப்படிச் சரியாக இருக்கும் என்ற கேள்வி எழுகிறது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 27

இந்த பட்ஜெட் ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது என்று ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்து சொல்லப்படுகிறது. இதுவும் யதார்த்த நிலைமையை முழுவதுமாகப் பிரதிபலிக்கவில்லை. இப்படிப் பேசுவதை இங்கேயும் கேட்டிருக்கிறேன், பேரவையிலேயும் கேட்டிருக்கிறேன். இதற்கு எதிர்மாறாக இன்னுமொரு தரப்பிலேயிருந்து வரும்போது அதுவும் யதார்த்தமாக இல்லை.

இந்த நிதிநிலை அறிக்கையின் இரண்டாவது பாராவில் "இத்தகைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட உரிமைகளையும், அதிகாரங்களையும், வாய்ப்புகளையும், வசதிகளையும், நிதி ஆதாரங்களையும் மட்டுமே வைத்துக்கொண்டு, ஏற்பட்டுள்ள பாதிப்புகளை இயன்ற அளவிற்குச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. பாதிப்பு நிலைமைகளைச் சமாளிக்க அரசிற்குக் கூடுதலான நிதி தேவைப்படுகின்றது. மாநில அரசு மத்திய அரசின் உதவியைப் பெருமளவிற்கு எதிர்பார்த்து இருக்கிறது" என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு பட்ஜெட் தயாரிப்பதிலே எவ்வளவு பெரிய நிதிச் சங்கடங்கள் இந்த அரசுக்கு இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்திலிருந்து வசூலிக்கக்கூடிய வரியில் 75 சதவீதத்தை அந்த மாநிலத்திற்கே தர வேண்டுமென்று கோரிக்கைகள் வருகின்றன. 75 சதவீத வரியை அந்த மாநிலத்திற்கே கொடுக்க வேண்டும் என்பது பொதுவான கோரிக்கை. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டை பிரசன்ட் பண்ணுகிற காலத்தில், "நமக்கு இருக்கிற நிதிப் பற்றாக்குறையின் காரணமாக மாநில மக்களுக்கு எதையும் செய்ய முடியவில்லை. மத்தியிலிருந்து நமக்கு வர வேண்டிய நிதி வராமல் இருக்கிறது" என்று மாநில மக்களுக்குச் சொல்லுவதற்குக்கூட இந்தச் சந்தர்ப்பத்தை ஆளும் கட்சியினர் பயன்படுத்த மறுக்கிறார்களே என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. பட்ஜெட்டிலே அப்படிப்பட்ட வாசகங்கள் இல்லை. ஆளும் கட்சியினர் பேசும்போதாவது மத்திய அரசிலிருந்து வரவேண்டிய நிதி மாநிலத்திற்கு வரவில்லை என்று பேசுகிறார்களா என்றால், இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். அவர் சொன்ன பல குறைபாடுகளில் நியாயம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்த அவையில் பேசுகின்றபோது இதை மட்டும்தானா பேச வேண்டும்? பேச வேண்டிய விஷயத்தைப் பேசாமல் விட்டுவிடவில்லையா? அரசியல்



1981 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது என்று சொன்னார். அதுபோல் அண்ணா தி.மு.க. ஆட்சி எதிர்ப்பு காரணமாக, பட்ஜெட் மீது பேச வேண்டிய பூரா விவரங்களையும் நண்பர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசினார்களா என்று தன் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்க்க வேண்டும். மாநிலங்களுக்கு அதிக நிதி வேண்டும் என்ற விஷயத்தை அவர் சொல்லாமலே விட்டிருக்கிறார். இன்றைக்கு இருக்கிற பணத்தை வைத்துக்கொண்டு பூராவையும் செய்ய வேண்டும் என்று சொல்லுவதைப் போல கருத்துக்கள் அந்தத் தரப்பிலேயிருந்து வருகின்றன. இந்த மாநிலத்தில் இருக்கிற நிதியைக் கொண்டே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற கருத்தை அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த மாநிலத்திற்குப் போதிய பணம் கொடுக்காத கட்சியைச் சார்ந்த திரு. இராமமூர்த்தி அவர்கள், இந்த அரசிலே என்ன செய்தார்கள் என்று தாக்குகிற நிலைமையைப் பார்க்கிறோம். தரவேண்டிய பணத்தைத் தராமல் மத்திய அரசிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இங்கே அண்ணா தி.மு.க. ஆட்சி இருக்கிறது. நாளைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தால், தமிழகத்திற்குக் கிடைக்கக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு பூரா திட்டங்களையும் நிறைவேற்றுவார்களா? அப்படிச் செய்ய முடியுமா? தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அப்படிச் செய்திருந்தால், மக்களிடத்திலே நல்ல நம்பிக்கையைப் பெற்றிருப்பார்களே. போதிய அளவிற்குப் பண வசதி இல்லாததால்தான், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது என்பதை அவர்கள் உணரவில்லை. அவர்கள் எதிர்த் தரப்பிலே வந்த பிறகு, அதை அறவே மறந்துவிட்டால், மறுபடி ஆட்சிக்கு வந்த பிறகு, "மத்திய அரசு நிதி தர வேண்டியிருக்கிறது, தரவில்லை" என்று சொன்னால், யாராவது நம்புவார்களா? ஏனென்றால் அவர்களும் ஆளும் கட்சியாக வர விரும்புகிறார்கள். மாநிலத்தில் இப்போது இருக்கக்கூடிய நிதியாதாரத்தை வைத்துக்கொண்டு, அண்ணா தி.மு.க. இப்போது செய்யாததையெல்லாம் அவர்கள் செய்வார்களா? இப்படி இரண்டு பேரும் மாறி, மாறிப் பேசிக்கொண்டிருப்பதால், தமிழ் நாட்டிற்குத் தர வேண்டியதைத் தராமல் மத்திய அரசு தப்பித்துப் போக விட்டு விடுகிறார்கள்.

மாநிலங்களுக்கு அதிக நிதியாதாரம் வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறபோது, மத்திய அரசு, "அடிஷனல் எக்ஸைஸ் டியூட்டி ஆக்ட்" என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி சர்க்கரை, துணி, புகையிலை போன்ற மூன்று பொருள்களின் மீது மாநில

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 27

அரசு விதிக்கின்ற விற்பனை வரியைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். இதை ஆட்சேபித்து மேற்கு வங்க அரசு சென்ற ஆண்டு சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கைப் போட்டிருக்கிறது. அது இன்னும் பெண்டிங்காக இருக்கிறது. சொல்லப்போனால் மாநிலங்களுடைய நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு இருக்கின்ற ஒரே ஆதாரம் விற்பனை வரிதான். 'Lynchpin of the state's taxes' என்று சேல்ஸ்-டாக்சைப் பற்றிச் சொல்லுகிறார்கள். விற்பனை வரியைப் பொறுத்தவரையில், அதன் மீது மத்திய அரசு படிப்படியாக கை வைக்க ஆரம்பித்துவிட்டது.

மத்திய அரசு புதியதாக ஒரு சட்டத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறது. மருந்துகள், வனஸ்பதி, பருத்தி, நூல், கச்சா இரும்பு, பெட்ரோலியம் பொருள்கள், இரும்பு உருக்குப் பொருள்கள் ஆகிய பொருள்கள் எல்லாம் விற்பனை வரி விதிக்கப்படக்கூடிய பொருள்கள். இப்பொருள்களை "அடிஷனல் எக்சைஸ் டியூட்டி ஆக்ட்டின்" கீழ் கொண்டு வருவதன் மூலமாக மாநில அரசின் நிதி ஆதாரங்களைக் குறைக்கிற முயற்சியில் மத்திய அரசினர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. உரத்தைப் பொறுத்தவரையில், சென்ட்ரல் சேல்ஸ்-டாக்ஸ் ஆக்ட் இருக்கிறது. அதிலே 'டிக்ளேர்ட் குட்ஸ்' என்று அறிவித்து விட்டால், அந்தப் பொருளின் மீது மாநில அரசு வரி விதிப்பதை மத்திய அரசு கட்டுப்படுத்த உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையிலே "டிக்ளேர்ட் குட்ஸ்" என்று அறிவித்து, மாநிலங்களுக்கு உள்ள சேல்ஸ் டாக்ஸ் உரிமையைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் "டிக்ளேர்ட் குட்ஸ்" என்ற பெயராலே, உரத்தை மட்டுமல்லாமல் மற்ற பொருள்களையும் அறிவித்திருக்கிறார்கள். மேற்கு வங்காளத்திலே நான்கு முக்கியமான பொருள்கள் உற்பத்தியாகின்றன. நிலக்கரி, இரும்பு உருக்கு, சணல், தேயிலை ஆகிய இந்த நான்கு பொருள்கள் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 2,100 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தியாகின்றன. இதன் மேல் ஆண்டு ஒன்றுக்கு 55 கோடி ரூபாய்தான் மாநில அரசு வரி போட முடிகிறது. அதாவது இரண்டரை சதவிகிதத்திற்கு மேல் வரி போட முடியவில்லை. மாநிலத்திலிருந்து மத்திய அரசு வசூலிக்கக்கூடிய வரியில் 75 சதவிகிதம் தராவிட்டாலும் பரவாயில்லை. கான்ஸ்டிடியூஷனில் ஏழாவது ஷெட்யூலில் 54-வது என்ட்ரியில் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் பொருள்களை மத்திய அரசினர் படிப்படியாக எடுக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில் 2,100 கோடி ரூபாய் வருமானம் உள்ள நான்கு பொருள்களின் மேல் 55 கோடி ரூபாய்க்கு மேல் வரி



1981 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

போடக்கூடாது என்று தடுக்கிறார்கள். இரண்டரை சதவிகிதத்திற்கு மேல் வரி போடக்கூடாது என்று தடுக்கிறார்கள். மேற்கு வங்க மாநில அரசின் பட்ஜெட் உரையின் மீது பேசுகின்றபோது, "இதை எதிர்க்க வேண்டும். எல்லா நிலைகளிலும் இதை எதிர்ப்போம்" என்று சட்டசபையிலே சொல்லியிருக்கிறார் அந்த மாநில முதலமைச்சர். ஆனால் நம்முடைய மாநில அரசு இந்த பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கின்றபோது, போகிற போக்கிலே, மத்திய அரசிலிருந்து நிதி வர வேண்டியிருக்கிறது என்று மட்டும் சொன்னால் எப்படி? ஒரு பக்கத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி உதவி செய்ய

(முற்பகல் 11-40)

வில்லை என்று தாக்குகிறார். மாநில அரசிடம் பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்கின்றார்கள். மத்திய அரசினர் பணம் தரமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். என் தரமாட்டார்கள் என்று சொல்லவில்லை. நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பேசும்போது என்ன சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. அங்கே அறைக்குள்ளேயே பேசிவிட்டு வந்துவிடுகிறார்கள். தமிழ்நாட்டிலே ஏன் எதையும் செய்ய முடியவில்லை என்று தெரியவில்லை. பட்ஜெட் வந்து பேசுகிறபோதுகூட சொல்வதில்லை. கட்சிக்குள்ளேயே பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்கு வரக்கூடிய வருமானம் எல்லாம் கட்டுப்படுத்தப்படுகிறதே, இதைப்பற்றி ஏன் கேட்கக்கூடாது? இந்த வருமானம் எல்லாம் கிடைக்காமல் அரசு எந்த வருமானத்தை வைத்துக் கொண்டு அரசுத் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற கேள்வியை ஏன் கேட்கக்கூடாது என்று கேட்கிறேன். மாநில அரசுக்கு வருமானம் வரவில்லை. இதைப்பற்றி வெளியே சொல்லாமல் புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாம் பட்ஜெட் விவாதத்தின்போது சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த பட்ஜெட்பற்றி நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும். தமிழ்நாட்டு மக்களை அதைப்பற்றி 'எஜுகேட்' பண்ண வேண்டும். இந்தப் புத்தகத்தை தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அதை தமிழ்நாட்டு மக்களும் பயன்படுத்த வேண்டும். அப்படி இல்லையென்றால், அரசு செய்த தவறுகளுக்குப் பழி ஏற்பதுபோல செய்யாத தவறுகளுக்கும் பழி ஏற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இந்த அரசு இந்த விஷயத்திலே எவ்வளவு கவலைக் குறைவாக இருக்கிறது என்பது தெரியும். பட்ஜெட் வரும்போது தமிழ்நாட்டிலே பண நிலைமைகள் எப்படிப் போகின்றன என்பது தெரிய வேண்டும். நம்முடைய வருமானங்களைப் பெருக்க நாம் என்னென்ன முயற்சிகளை எடுத்துக்கொள்கிறோம் என்பதெல்லாம் மக்களுக்குப் பகிரங்கமாகத் தெரிய வேண்டும். மேற்கு வங்கத்திலே உள்ள

மக்களுக்குப் புத்தகங்களாகக் கொடுக்கிறார்கள். அதன்மூலம் அவர்கள் இதைத் தெரிந்துகொள்கிறார்கள். அதுபோல் நம் தமிழகத்திலும் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், மாநில அரசு எப்படிச் செயல்பட முடியும் என்பதை நாடு முழுவதும் தெரியப்படுத்த வேண்டும். அப்போது தான் பயன் பெற முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்திலேதான் இங்கே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லாமல், எதிர்க்கட்சியைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். யோசனை சொல்லுங்கள். அவர்கள் செய்கின்ற குறைகளை விமர்சனம் செய்யுங்கள். அதிலே தப்பில்லை. தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் வருமானம் பெறுவதற்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும். அதற்கு ஆதரவாகப் பேச வேண்டும். அதற்குப் பதிலாக ஆதரவு தராமல், அவர்கள் பதுங்குகின்றார்கள், தைரியமாகச் செய்ய வில்லை என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போதும் சொல்கிறார்கள். அவ்வளவு பணத்தையும் வைத்துக்கொண்டு மத்திய அரசினர் தரமாட்டார்கள் என்று கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். அரசியல் காரணங்கள் என்று சொல்கிறார்கள். தங்கள் கட்சிக்கு அதிகாரம் இருக்கிறது. தமிழ்நாட்டு அரசுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம்:** அவைத் தலைவரவர்களே, மாநில அரசாங்கத்தி னுடைய நல்ல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்பதற்கு இந்த ஆட்சி மத்திய சர்க்காரிடத்திலே எந்த அளவுக்கு நிதி பெற முயற்சி எடுக்கின் றதோ அதற்கெல்லாம் என்றென்றைக்கும் ஆதரவாகத்தான் எங்கள் கட்சியும் இருக்கின்றது. இந்த ஆட்சி அப்படிப் போராடுகின்றபோது, அவரோடு சேர்ந்து போராட திராவிட முன்னேற்றக் கழகமும் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** ஆட்சியில் இருப்பவர்கள் தைரியமாகக் கேட்க மாட்டார்கள் என்று சொல்கின்றார்கள். இன்றைக்கு எதிர்க் கட்சியிலே ஆதரவு கொடுப்பதாகச் சொல்கின்றார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம் :** ஆட்சியிலே இருப்பவர்கள் தைரியமாகக் கேட்க மாட்டார்கள் என்று இருக்கும்போது, எங்களைக் கேளுங்கள் என்று சொல்கி றார்கள் என்று கருதுகிறேன். அப்படி நாங்கள் கேட்பதால் என்ன பயன் ஏற்படப்போகிறது என்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ஆ. நல்லசிவன் :** ஆட்சியில் இருப்பவர்கள் தைரியமாகக் கேட்க மாட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. நான்கூட பல தடவைகள் இங்கே இதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன். இதிலே நான் என்ன சொல்கிறேன் என்றால், தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை கட்சிகளுக்கும் இதில் பொறுப்பு இருக்கிறது என்று சொல்கிறேன். தமிழ் நாட்டிலே மட்டும் சொல்லவில்லை. மற்ற எல்லா மாநிலங்களிலும்கூட அந்த நிலைமைகள் வரமாட்டேன் என்கின்றதே என்பதற்காகத்தான் சொல்கிறேன். நான்கூட அரசியல் கட்சியைச் சார்ந்தவன்தான். கட்சி நடத்துகின்றவன்தான். இருந்தாலும், கேட்கிறேன். இந்த அரசுகளை இந்த அளவுக்குக் கட்டுப் படுத்துவது சரியா என்று கேட்கிறேன். அரசியல் கட்சிகள் இதையெல்லாம் எடுத்துச் சொல்லத் தயங்கலாமா என்று கேட்கிறேன். அவர்கள் அதைத் தப்பாக எடுத்துக்கொண்டாலும்கூட, நாம் இந்த ஜனநாயக அமைப்பிலே, சொல்கின்றோமே. அதுபோல மற்றவர்களும் தமிழ்நாட்டில் உள்ள நிலைமை களைப்பற்றிப் பேச வேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதுபோல் மத்திய அரசிடம் நாங்கள் கேட்காமல் இல்லை. குறைகளைக் கேட்பதில் முந்தியிருக்க வேண்டும் என்பதில் தயக்கமில்லை. நேற்றுகூட பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பி னர்கள் உரிமையோடு தமிழ்நாட்டிலுள்ள நிலவரத்தைத் தெரிவித்துப் பேசி யிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசி யிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் பத்திரிகையிலே, வானொலியிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறியவில்லையா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** இந்தியாவில் உள்ள மாநிலங்கள் பலவற்றைப் பார்க்கிறோம். அண்ணாவினுடைய அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். இந்த வறட்சி நிவாரணம்பற்றி மட்டும் பேசினால் போதுமா? இயற்கை விபரீதத்தினாலே வரக்கூடிய ஒன்றைப்பற்றி மட்டும் கேட்டால் போதுமா? மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று இன்றைய தினம் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருகின்றபோது, அதை ஆளும் கட்சி மட்டும்தான் கேட்க வேண்டும், அதைப்பற்றிப் பேச வேண்டும் என்று இருக் கிறதா? நாங்களும் எதிர்க்கட்சிக்காரர்கள்தான். நாங்கள் எல்லாம் கேட்க வில்லையா? ஆளும் கட்சியின் உறவு எப்படி இருந்தாலும், ஆளும் கட்சிகளு டைய மூலாதாரமான கொள்கையாக, முக்கியமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற

மாநில சுயாட்சிக் கொள்கைக்கு உயிர் ஊட்ட வேண்டாமா? அப்படிச் செய்யாமல், அதைக் குழப்புகின்ற அளவில், அதிலிருந்து கவனத்தைத் திருப்புகின்ற அளவில் காரியம் செய்துகொண்டிருக்கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். செய்யட்டும். அதை ஏற்றுக்கொள்கிறேன். இரண்டு கட்சியினரும் அதைப்பற்றி ஒன்றும் பேசாமல் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிற்கு வரக்கூடிய வருமானத்தைக் கட்டுப்படுத்துகின்ற நிலை இருக்கிறது. தமிழ்நாடு பாதிக்கப்படும் நிலைமைகள் இருக்கின்றன. அதைப் பெறுவதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்தச் சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி நாங்கள் பேசி வளர்த்த விரும்பவில்லை. அவர்களிடம் வலியுறுத்திப் பேசவில்லை. ஏனென்றால் நாங்கள் இதற்குமேல் வலியுறுத்திக் கேட்டால், இங்கு ஆட்சியில் உள்ளவர்களுக்கு அது இடையூறாக ஆகிவிடக்கூடாதே என்பதற்காகத்தான் அப்படி இருக்கிறோம் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மத்திய அரசு கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆளும் கட்சியோடு நாமும் சேர்ந்து சண்டை போடலாம். எல்லோரும் சேர்ந்து சண்டை போடலாம். அதனால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. மத்திய அரசுக்கு இருக்கின்ற வாய்ப்பு அது. நாம் பட்ஜெட் என்று போடும்போது, அதைப்பற்றி நாம் பேசும்போது, எரி சாராயம் பற்றிய கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம். எரி சாராயம் பற்றிய விஷயம் விசாரணையில் இருக்கின்றது. இரண்டு மாநிலங்களும் சேர்ந்து தவறு செய்திருக்கின்றது. இந்தப் பிரச்சினையில் இரண்டு மாநிலங்களுக்கும் சம்பந்தம் இருக்கின்றது. ஆக அந்தந்த மாநிலத்திலே ஆராய வேண்டும் என்றும் விசாரணை என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எரிசாராய வழக்கில் லைசென்ஸ் கொடுப்பது என்று வருகிறது. அப்படி வருகின்றபோது மாநில அரசிலும் லைசென்ஸ் கொடுக்கப்படுகின்றது. அந்த அளவில் தமிழ்நாடு விசாரணைக் கமிஷன் வருகிறது. அதுபோலவே அந்த மாநிலத்திலிருந்து கொடுக்கப்பட்ட லைசென்ஸ் முறையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்ற பிரச்சினை வருகிறது. இப்படி இரண்டு மாநிலங்களிலும் பிரச்சினையை ஆராயும் நிலை ஏற்படுகின்றது. இந்த இரண்டு மாநிலங்களிலும் விசாரணை கமிஷன் இருந்தாலும், மத்திய அரசும் இதில் தலையிடும் என்ற நிலை ஏற்படும். அவர்களை



அதை நாங்கள்தான் சரியாகச் செய்வோம் என்பார்கள். இப்படி விசாரணைக் கமிஷன் போடுவதில் பொருள் இருக்கின்றதா? இல்லை. ஏன் இல்லை என்று சொல்கிறேன்? இதற்கு முன் ஷா கமிஷன் வந்தது, குப்தா கமிஷன் வந்தது. அந்தக் கமிஷன்கள் விசாரணைக்கு அவர்கள் போகவில்லை. அவர்கள் அங்கே கோர்ட்டிற்குப் போய் சாட்சியம் சொல்ல மாட்டேன் என்றார்கள். அங்கே அவர்கள் கேள்வி கேட்டு பதில் சொல்ல முடியாது என்று சொன்னார்கள். அப்படி மறுத்ததற்காக ஒரு வழக்குப் போட்டார்கள்.. அந்த வழக்கு நடக்கும்போது, இந்த ஆட்சி வந்துவிட்டது. இப்படி ஷா கமிஷன், குப்தா கமிஷன் என்று இருந்தன. அவைகளின் நடவடிக்கைகள் எல்லாம் பலவில்லாமல் போய்விட்டன. அது குப்பைத் தொட்டிக்குப் போய் விட்டது. அவர்கள் எல்லாம் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள்தான். அவர்கள் என்றைக்கு இருந்தாலும் ஜஸ்டிஸ்தான். ஜஸ்டிஸ் ஜஸ்டிஸ்தான். அவர்கள் அந்த வேலையை விட்டுப் போனாலும், அவர்களை எப்போது திரும்பப் போட்டாலும் ஜஸ்டிஸ்தான். அவர்களின் கமிஷன் அப்படி ஆகியிருக்கிறது. இதையெல்லாம் அந்த மாதிரி கமிஷன் போட்டு கண்டு பிடிக்க முடியும் என்று நம்புகிறார்கள். தமிழ் நாட்டிலே பட்ஜெட் வருகிறது. இங்கே நாம் ஒற்றுமை இல்லாமல் இங்கே நடக்கின்ற சம்பவங்களைப்பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்கிறோம். சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம். இரண்டு, இரண்டரை மணி நேரம் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம், பட்ஜெட் பற்றி பேசவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டு அவரும் அந்தக் குற்றத்தையே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: பணம் வேண்டும் என்று கேட்கிறோம். பட்ஜெட் எப்படி இருக்கிறது? மாநிலத்திற்குப் பணம் இல்லாமல் இருக்கிறது. அதைப் பற்றி யார் சொல்கிறார்கள்? எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. அது என்ன என்று கேட்டால், ஒரு கிராமியக் கதை அது. ஒரு நாட்டில் ஒரு ராஜா இருந்தார். அவர் மக்களிடம் ஒரு மூட்டை நெல் கொடுத்துவிட்டு ஒரு மூட்டை அரிசி வாங்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு மக்கள் ஒரு மூட்டை நெல் கொடுத்தால் அரை மூட்டை அரிசிதானே கிடைக்கும் என்று வருத்தப்பட்டார்கள். அவர்கள் ஒரு மூட்டை அரிசியாகவே செலுத்தி விட்டார்கள். அதற்குப் பிறகு அவருடைய மகன் ஆட்சிக்கு வந்தான். அவனிடம் மந்திரி இந்த விஷயத்தைச் சொன்னார். அவன் அதைவிட நல்லது செய்ய வேண்டும் என்று சொல்லி, ஒரு மூட்டை உமி

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 27

கொடுத்து ஒரு மூட்டை அரிசி வாங்குங்கள் என்று சொன்னானாம். அதைக் கேட்டு மக்கள் அவனுடைய அப்பாவே மேல், இது என்ன இப்படிக் கேட்கிறார்களே என்று வருத்தப்பட்டார்களாம். அதுபோலத்தான் இருக்கின்றது நிலைமை. ஜனநாயகத்திலே நாம் இந்த நிலைமைகளை உருவாக்கியிருக்கிறோம். யாரும் தவறே செய்யவில்லை என்று சொல்லவில்லை. இப்படி விசாரணைக் கமிஷன் வைப்பதால் பிரயோசனம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். இவைகள் எல்லாம் ரிக்கார்ட் ஆகின்றன. சரித்திரங்கள் ஆகின்றன. பக்கம் பக்கமாக ரிக்கார்ட் ஆகின்றன. ஆனால் பயன் இல்லை. மாநில அரசுக்கும் யோக்கியதை கிடையாது, மத்திய அரசுக்கும் யோக்கியதை கிடையாது என்பதுபோல நிலைமைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. நான் லீகல் பிரச்சினைக்கு வரவில்லை. இந்த இடத்தில் அதைப்பற்றிப் பேச

(முற்பகல் 11-50)

விரும்பவில்லை. மந்திரியைக் கண்டிக்கிறார்கள். என்ன சொல்லுகிறார்கள்? எதிரியா, நண்பரா சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். பேரவையில் கேட்கிறார்கள். எதிரி என்றால் கலைக்கத் தயாராக இருக்கிறார்கள். எதிரியா, நண்பரா சொல்லுங்கள் என்று சொல்லும் பிரச்சினை ஏன் வருகிறது? மத்தியிலே ஆட்சிப் பொறுப்பு அவர்கள் கையிலே இருப்பதால், இந்த ஆட்சியை எப்போது கலைக்கலாமென்று நினைத்து, மிரட்டுகிறார்கள். ஒரு அமைச்சர் பேசுகிறார் என்றால், முதலமைச்சரின் அனுமதியோடு பேசுகிறார் என்று கேட்கிறார்கள். முதலமைச்சரிடம் எழுதிக் காட்டி, அதைப் படித்துப் பார்த்துவிட்டுத்தான் பேசுவார்களா? எனவே அவர்கள் வேறு கமிஷன் போட்டால், மாநில அரசு தைரியமாக நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கமிஷன் வந்தால் ரிக்கார்ட்சை 'ப்ரொட்யூஸ்' பண்ணக் கூடாது. 'ஓவர்-லுக்' பண்ண வேண்டும். அப்படிச் செய்யும்போது, ஆட்சி கலைக்கப்பட்டாலும் பரவாயில்லை. ஏற்கெனவே அப்படி கலைக்கப்பட்டுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். மாநில சுயாட்சிப் பிரச்சினைபற்றிப் பேசுகிறார்கள். இதில் மாநில அரசுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா? நம்முடைய மாநிலம் இங்கே நடந்த பிரச்சினைபற்றி விசாரிக்கிறது. வேறொரு மாநிலம், அவர்கள் மாநிலத்தில் நடந்த பிரச்சினைபற்றி விசாரிக்கிறது. இந்த நிலையில் வேறொரு கமிஷன் போடுவோமென்று மத்திய அரசினர் சொல்லுகிறார்கள். இதில் தமிழ்நாடு எவ்வாறு ரீ-ஆக்ட் பண்ணப் போகிறது? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதைத் தைரியமாக செலன்ஜ் பண்ணி தீர்மானம் போட்டதை வரவேற்கிறேன். அதில் உறுதியாக நிற்க வேண்டும். மத்திய அரசின் அநீதியை எதிர்த்து, மாநில சுயாட்சிக் கொள்கையில் வலுவாக இருக்க வேண்டும்.



1981 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

அடுத்து, நிதிநிலை அறிக்கைபற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பக்கத்தில் விலைவாசி உயருவதால் சங்கடங்கள், இன்னொரு பக்கத்தில் வறட்சி நிலைமைகள், இன்னொரு பக்கத்தில் இவைகளைச் சமாளிக்கப் போதிய பணம் இல்லாமை—இப்படிப்பட்ட சங்கடங்களுக்கிடையே உள்ள பட்ஜெட்டாக இதைப் பார்க்கிறேன். அகில இந்திய அளவில் ஏற்பட்டுள்ள இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி உயர்வும், பண வீக்கமும், பயன்படுத்தப்பட வேண்டிய பொருள்களின் பற்றாக்குறையும் தமிழ் நாட்டைப் பெருமளவிற்குப் பாதித்துள்ளன என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசின் கொள்கையால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டியிருப்பதை நான் பார்க்கிறேன். ஆனால் ஆளுநர் அவர்கள் உரையில் இப்படிச் சொல்லப்படவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னால், ஆளுநர் அவர்கள் உரையில், 8 ஆம் பத்தியில், விலை உயர்வுக்குக் காரணம் ஆர்கனைஸ்டு மைனாரிட்டியினரின் அதிகமான சம்பளம் என்று தவறான செய்தியைத் தந்திருக்கிறார்கள். இப்போது அகில இந்தியக் கொள்கையால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுவதைப் பார்க்கிறேன். 'பேசிக் எகனாமிக் ட்ரெந்த்ஸ்' இருக்கின்றன. அண்ணா தி.மு.க. ஆட்சி இருந்தாலும், தி.மு.க. ஆட்சி இருந்தாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி இருந்தாலும், இந்திரா காங்கிரஸ் ஆட்சி இருந்தாலும், 'பேசிக் ட்ரெந்த்ஸ்' அப்படியேதான் இருக்கும். மத்திய அரசின் கொள்கை காரணமாக மாநில அரசின் உரிமைகள் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஓர் உரையிலே இதை விட்டுவிடுகிறோம். இன்னொரு உரையிலே சொல்லுகிறோம். இது அரசியல் சந்தர்ப்பவாதமாகாதா என்று கேட்க விரும்புகிறேன். போன முறை, ஆர்கனைஸ்டு மைனாரிட்டியினரின் சம்பள உயர்வுதான் இன்றியமையாப் பொருள்களின் விலை உயர்விற்குக் காரணம் என்று சொன்னார்கள். அதாவது 1980 ஜூன் அறிக்கையில் இப்படிச் சொன்னார்கள். மத்திய அரசை எதிர்க்கும்போது ஒன்றைச் சொல்லுகிறார்கள். மத்திய அரசை எதிர்க்காமல் இருக்கும்போது அதை விட்டுவிடுகிறார்கள். இது சரியா? தோழமைக் கட்சி உறுப்பினர் என்ற முறையில் சொல்லுகிறேன். இது குறித்து சரியாகப் பரிசீலனை செய்ய வேண்டும். யார் ஆட்சியில் இருந்தாலும், 'பேசிக் ட்ரெந்த்' அப்படியேதான் இருக்கும். அது தளர்ந்து கொடுக்காது. எனவே உறுதியாக நிற்க வேண்டும். போன தடவை, ஆர்கனைஸ்டு மைனாரிட்டியினர் சம்பள உயர்வால்தான் விலை உயர்வு என்று சொல்லி, அவர்கள் ஸ்டிரைக் பண்ணாமல் இருக்க அவசரச் சட்டம், ஸ்டிரைக் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அதை நிறைவேற்றவில்லை. இன்னும் அப்படியே வைத்திருக்கிறார்கள். அகில அதிகாரம்

வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்காக மத்திய அரசை எதிர்க்க வேண்டும். அப்போது யாரை வைத்துக்கொண்டு எதிர்க்கப் போகிறார்கள்? 1980 ஜூன் எலக்ஷனின்போது ஏழை மக்கள் அ.தி.மு.க. பக்கம் நிற்க வில்லையா? அகவிலை உயர்வுதான் தங்கள் வாழ்க்கைத்தரத்தைப் பாது காக்க முடியுமென்று அவர்கள் கேட்கும்போது, எசன்ஷியல் சர்விசஸ் ஆக்ட் கொண்டுவந்து, அவர்களை மிரட்டுகிறார்கள். மத்திய அரசை எதிர்க்க வேண்டுமென்று சொல்லும்போது சாதாரண உழைப்பாளிகளின் ஆதரவு தேவை. அவர்கள் போராட்டங்களை எசன்ஷியல் சர்விசஸ் ஆக்ட்-ன் கீழ் தடுப்பதை மாற்ற வேண்டும். மத்திய அரசுபற்றி நாசுக்காகச் சொல்லு கிறார்கள். நான் பச்சையாகச் சொல்லுகிறேன். மத்திய அரசு மானாபலி முதலாளிகளின் கைக்கருவி. அரசு, நாட்டிலே விளையும் விளைபொருள் களைக் குறைந்த விலையில் வாங்கும் மெகானிசத்தைக் கண்டு பிடித்திருக் கிறது. ஆனால் அவை 'பினிஷ்டு கூட்ஸ்' ஆக வெளிவரும்போது அதிக விலைக்கு விற்க ஏற்பாடு இருக்கிறது. அதிகமாகக் கொள்ளை அடிக்கும் பணம் இருக்கிறதே, அது வருமானக் கணக்கில் வராமல், இன்கம்டாக்ஸ் துறைக்கு டிமிக்கி கொடுத்து, கள்ளப் பணமாக மாற ஏற்பாடு இருக்கிறது. நம் நாட்டில் 35 ஆயிரம் கோடி ரூபாய் கள்ளப் பணம் இருக்கிறதென்று சொன்ன பிறகு, திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 'டிமானிடைசேஷன்' செய்ய மாட்டேன் என்கிறார். 1000, 100 ரூபாய் நோட்டுக்களைப் புதிதாக அச்சிட ஏற்பாடு செய்ய மாட்டேன் என்கிறார். 35,000 கோடி ரூபாயைக் கையிலே வைத்துக்கொண்டு, பற்றாக்குறைப் பொருள்களைக் கள்ள வியாபாரம் செய்து, நாட்டு மக்கள் வறுமையில் வாடுவதைவிட வேறு துன்பம் என்ன ஏற்பட்டுவிடும்? 'பேரலல் எகானமி' நாட்டில் இருக்கிறதென்று பொரு ளாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். அந்த நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்ற ஏற்பாடு செய்யுங்கள் என்றால், செய்யவில்லை. 100, 1000 ரூபாய் நோட்டுகளை மாற்றினால், யாருக்குச் கஷ்டம் ஏற்படும்? இன்றைய தினம் கள்ளப் பணம் வைத்துக்கொள்ள ஏற்பாடு, விளை பொருள்களைக் குறைந்த விலையில் வாங்க ஏற்பாடு, பினிஷ்ட் கூட்ஸ் அதிக விலைக்கு விற்க ஏற்பாடு, இன்கம்டாக்ஸ் கணக்கில் அது வாராமல் இருக்க ஏற்பாடு—இவ்வளவும் இருக் கின்றன. அந்தப் பணத்தில், கள்ள மார்க்கெட்டில் சாமான்கள் வாங்கி, விற்க ஏற்பாடு. அந்நியப் பொருள்கள், பன்னாட்டுப் பொருள்கள் உள்ளே வந்தால், அதனால் ஏற்படும் லாபத்தை எடுத்துச் செல்ல அனுமதி கொடுக்கிறார்கள். பணம் இல்லை என்றால், எக்சைஸ் டியூட்டி போடுகிறார்கள். இன்றைக்கு 2000 கோடி அளவிற்குப் பண வீக்கம் உயர்ந்திருக்கிறது என்றால், அதன் சுமை மக்கள் மீதுதான். பணம் இல்லை என்றால் நோட் அடிக்கிறார்கள்.



அதனால் 24 மாதங்களில் 50 சதவிகிதம் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதில் 18 மாதங்கள் இந்திரா காந்தி அவர்கள் ஆட்சி நடைபெற்றிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு 18 காசுதான் மதிப்பு இருக்கிறது. இப்படி ஏற்படும் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். பன்னாட்டு மூலதனங்களையும், மானாபலி மூலதனங்களையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று கேட்கிறோம். எறும்பு ஊறக் கல்லும் தேயும் என்று சொல்லுவார்கள். மக்கள் இதை ஒத்துக்கொள்ளும் காலம் வரத்தான் போகிறது. அவசரச் சட்டத்தின் மூலமாக பினாமி நிலங்களைக் கையகப்படுத்த அரசு நினைத்தது. ஆனால் அதற்கு அனுமதி தரவில்லை. என்ன கேலிக்கூத்து பாருங்கள். டாக்டர் மஹலனோபிஸ் அவர்கள், ஜவஹர்லால் நேரு அவர்கள் 1958-ல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இதைக் கொண்டுவர விரும்பினார்கள். அப்போது ஆறு கோடி ஏக்கர்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது என்று பழமொழி சொல்லுவார்கள். அதைப்போல எமர்ஜென்சி நேரத்தில் எவ்வளவு நிலம் என்று கணக்குப் பார்த்தால், இருபது லட்சம் ஏக்கர்தான் என்று கணக்கெடுக்கப்பட்டது.

(நண்பகல் 12-00)

அப்படி கண்டுபிடிக்கப்பட்ட நிலம் 20 லட்சம் ஏக்கர். ஆனால் அரசாங்கம் எடுத்தது 11 லட்சம் ஏக்கர். விநியோகம் செய்தது 5 லட்சம் ஏக்கர். ஆனால் அதே சமயத்தில் மொத்தம் 6 கோடி ஏக்கர் இம்மாதிரி இருப்பதாகச் சொல் கிறார்கள். அதுபோல் இங்கே உபரியாக உள்ள நிலங்களை எடுப்பதற்குச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் மூலம் 1 லட்சம் ஏக்கர் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவையில் இல்லை. அவர் இதுகுறித்து விளக்கம் அளித்திருப்பார். இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. பினாமி நிலங்களைக் கைப்பற்றுவது குறித்து சட்டம் இயற்றியபோது, நான் மிகத் தெளிவாக இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து, நாட்டில் இப்போது நிலவி வருகின்ற வறட்சி நிலைபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் இங்கே சொன்னார். எப்போதுமே வறட்சி வருகிறது என்று சென்னால், அரசாங்கம் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். நாமோதரன் அவர்கள் மிகவும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த 10 மாத காலமாக தமிழ் நாட்டிலே மழையே இல்லை. பொதுவாக அறுவடைக் காலம் அக்டோபர் மாதம். வறட்சி நிலை நாட்டிலே இருப்

பதை அரசாங்கம் தெரிந்தும்கூட, தானும் ஒன்றும் செய்யவில்லை, அதிகாரிகளையும் தூண்டாமல் விட்டு விட்டது. இதன் காரணமாக இன்றையதினம் திருநெல்வேலி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களிலே உற்பத்தியே இல்லை. அந்த அளவுக்கு அங்கே வறட்சி நிலவுகிறது. இவ்வளவு வறட்சி இருந்தும்கூட, அது குறித்து துரிதமாக ரிப்போர்ட் தயாரிக்கப்படவில்லை. இப்போதுகூட ஏதோ 'அன்டர்-எஸ்டிமேட்' தான் கொடுத்திருக்கிறார்கள். "இப்போது அரசு தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்த காரணத்தால், இந்தப் பெருங்கேடு தவிர்க்கப்பட்டுள்ளது." என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்குக்கூட பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. நாகர்கோவிலில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் டேங்க் மூலமாக 'சப்ளை' பண்ணுகிறார்கள். இன்னொன்றும் பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. "வறட்சி நிலை கடுமையாக இருந்தபோதிலும், அது நமது கட்டுக்குள்தான் இருந்து வருகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கை அரசாங்கத்தின் கட்டுக்குள் வரும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இதுபோன்ற "காம்பிளசென்சி", அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இருக்கலாமா? இந்த மிகப் பெரிய ஆபத்தான நிலையைத் தவிர்க்க வேண்டுமென்றால், மாநில அரசு மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. இந்த மாநிலத்து மக்களை இந்த மிகப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால், மாநில அரசுடன் மத்திய அரசும் சேர்ந்து உதவி செய்ய வேண்டும். 'வார் புட்டிங்' என்று சொல்வார்களே அதுபோல் மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு விரைந்து உதவி செய்ய வேண்டுமென்ற கூக்குரலை அனைவரும் சேர்ந்து இட வேண்டும். அப்படி இதை ஒளிவு மறைவின்றி செய்வதற்குப் பதிலாக ஒரு 'காம்பிளசென்சி' மாதிரி நினைத்துச் செயல்பட்டிருக்கிறார்கள். எந்தெந்த மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அரசாங்கமே அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது. இப்படிப்பட்ட மிகப் பெரிய வறட்சி நிலையைப் போக்குவதற்கு 10 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பெரும்பான்மை நிதி டிரிங்கிங் வாட்டருக்காகத்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், பொதுமக்களுக்கு இருக்கக்கூடிய இன்னல்களை அரசாங்கம் நல்ல முறையில் உணர்ந்திருக்கிறது என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டிலே உள்ள மக்களுடைய உணர்வுகளை மத்திய அரசுக்குத் தெரிவித்து, உதவியைக் காலா காலத்தில் பெற்றிருக்க வேண்டும். இதிலே என்ன 'காம்பிளசென்சி' பார்க்க வேண்டியிருக்கிறது? இப்படி இருக்கின்ற நிலைமையைச் சரியாக எழுதாமல் மக்கள் அஞ்சிவிடுவார்களே என்று பயப்பட்டு விட்டுவிட்டுப் போயிருப்பது நல்லதல்ல. இது அபாயகரமான போக்கு. ரொம்ப அன்டர்-எஸ்டிமேட் செய்து காட்டி





யிருப்பதன் மூலம் அத்தகைய ஒரு அபாயத்தை இந்த அரசு தேடிக்கொண்டிருக்கிறது. பொதுமக்களை அச்சப்படுத்திவிடக்கூடாது என்கிற எண்ணத்தில்தான் இந்த அரசு அப்படி 'அன்டர் எஸ்டிமேட்' செய்திருக்கும் என்று நான் கருதுகிறேன். 1973-74 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பயங்கரப் போக்கு இந்த ஆண்டு இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வடாற்காடு, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் மக்கள் மிகவும் கஷ்டப்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது. 1973-74-ல் எப்படி மக்கள் குடி பெயர்ந்து போகக் கூடிய நிலை ஏற்பட்டதோ அதேபோன்ற நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். 100 கோடி ரூபாய்க்கு நிவாரணம் வேண்டுமென்று கேட்டார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, 40 கோடி ரூபாய்க்கு நிவாரணம் தேவை என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 75 கோடி ரூபாய் நிவாரணத்துக்குத் தேவை என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் நிதி நிலை அறிக்கையிலே அதைப்பற்றிக் கூறவில்லை. இது ஆபத்தான போக்கு. இவ்வளவு கோடி ரூபாய் பஞ்சத்தைப் போக்க தேவை என்று உறுதியாகச் சொல்லியிருக்க வேண்டாமா? இதைப் பற்றி பட்ஜெட்டிலே ஒன்றுமே இல்லை. காலா காலத்தில் இதைப்பற்றி மத்திய அரசுக்குச் சொல்லி, காலா காலத்தில் மத்திய அரசின் உதவியை நாம் பெறாமல் போவோமானால், அதைச் செய்யாத குற்றச்சாட்டுக்கு நாம் ஆளாகி விட நேரிடும். இன்றைக்குத்தான் அதைப்பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இன்ன பகுதிதான் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்வதை விட்டு விட்டு, தமிழகம் முழுமைக்குமான நலனுக்கு அரசு பாடுபட வேண்டும். இதைச் சாதாரண விஷயமாகக் கருதாமல் 'வார் புட்டிங்' அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு மத்திய அரசின் உதவி மிக மிகத் தேவை.

ஒரு அரசாங்கம் மக்களுக்குத் தேவையான சாப்பாட்டை அளிக்காவிட்டாலும் கூட, மக்களைப் பஞ்சத்திலிருந்தாவது காப்பாற்ற வேண்டுமென்று முன்பே பெரியவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் அரசின் போக்கு சரியில்லை. இன்றையதினம் நமது மாநிலத்தின் உணவு நிலைமைகூட திருப்திகரமாக இல்லை. செங்கற்பட்டு ஜில்லாவில் 66 ஆயிரம் ஏக்கர்களில் 6 ஆயிரம் ஏக்கரில்தான் விளைச்சல் கண்டிருக்கிறது. பாக்கியெல்லாம் காய்ந்து போய்விட்டது. இன்றைக்குக்கூட வறட்சிபற்றி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. காவிரி ஓடுகிற தஞ்சை, திருச்சி, தாமிரவருணி ஓடுகிற பகுதி இப்படி 4 தாலுக்காக்களில் மட்டும் தான் விளைச்சல் கண்டிருக்கிறது என்று அப்பட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலே எவ்வளவு அரிசி ஸ்டாக் இருக்

கிறது என்று தெரியவில்லை. விளைச்சல் அறுவடை ஆக எப்படியும் அக்டோபர் மாதம் ஆகலாம். மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோம சுந்தரம் அவர்கள் சொல்லியதுபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்லியதுபோல் குறைந்தபட்சம் 6 லட்சம், 7 லட்சம் டன் அரிசியாவது நமக்குத் தேவைப்படும். ஒரு லட்சம் டன் என்றால் கூட அதற்குக் குறைந்தபட்சம் 8 கோடி ரூபாய் தேவை. ஆக, அப்படிப் பார்த் தாலும் நமக்குக் குறைந்தபட்சம் 50 கோடி ரூபாய் தேவை. இதைக் காலம் தாழ்த்தாமல் மத்திய அரசிடம் சொல்லி வற்புறுத்தி நாம் காலா காலத்தில் பெற வேண்டும். கொள்முதல் 2 லட்சம் டன்னுக்கு மேல் செய்ய முடியாது என்று நான் கருதுகிறேன். 1976-77 ஆம் ஆண்டில் 8 லட்சம் டன் கொள் முதல் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தக் கொள்முதல் பிரச்சினை யைப் பொறுத்தவரையில், தும்பை விட்டு வாலைப் பிடிப்பதுபோல் இருக் கிறது. இன்றைக்கு 20 குவிண்டாலுக்கு மேல் நெல்லும், 13 குவிண்டாலுக்கு மேல் அரிசியும் இருந்தால், கணக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கி றார்கள். அவர்கள் கணக்குக் கொடுக்க மறுத்தால், என்ன செய்வது? இன்றைக்கு வெளியிலே விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. எங்கள் ஊரிலே ஒரு மூட்டை 210 ரூபாய்க்கு யாரும் கொடுக்க மாட்டார்கள். வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில், தமிழகத்திலுள்ள கொள்முதலை மட்டுமே நம்பி அதை மக்களுக்கு விநியோகித்து மக்களைக் காப்பாற்றுவது என்பது மிகவும் கஷ்டமான காரியம். மத்திய சர்க்காரின் 'பூல்'-ல் இருந்து வாங்கித்தான் மக்களைக் காப்பாற்றியாக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் திண்டிவனம் போயிருந்தபோது, மக்கள் முறையிட் டிருக்கிறார்கள். அங்கே 4 ரூபாய்க்குக் குறைந்த அரிசியே இல்லை. அதுவும் மிகவும் மட்டமான அரிசிதான் 4 ரூபாய்க்குக் கிடைக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற பஞ்சத்தைப் போக்க குறைந்தபட்சம் நமக்கு 7 லட்சம் டன் அரிசியும், 2 அல்லது 3 லட்சம் டன் புஞ்சை தானியங்களும் அவசியம் இருக்க வேண்டும். இந்தக் கையிருப்பைப் பெற அரசு என்ன திட்டம் தீட்டி யிருக்கிறது? இதை மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம் என்றாவது சொல்லி யிருக்க வேண்டாமா? இதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது, தற்போதைய உண்மை நிலைமை என்ன என்பது எனக்குப் புரியவில்லை. இது குறித்து மத்திய அரசிலிருந்து 7, 8 பேர் விரைவில் வருவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் வரும்போது அவர்களுடன் நம்முடைய அதிகாரி களும் பார்வையிடச் செல்ல வேண்டும். அப்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த அபாயகரமான நிலைமைகளை எடுத்துச் சொல்லி மத்திய சர்க்காரி லிருந்து [illegible] லட்சம் டன் அரிசியைப் பெற வேண்டும். அப்படி உடனடி





யாகப் பெறாவிட்டால், 2, 3 மாதங்களுக்குள்ளாக தமிழகத்தில் 1940 ஆம் ஆண்டு ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைப் போல் பஞ்சம் ஏற்படும் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1973-74-ல் ஏற்பட்ட வறட்சியை விட மிகவும் மோசமான வறட்சி இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தகைய கடுமையான வறட்சி நிலை நிலவுகிறது என்பதைத் தெளிவாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையினுடைய காரஸ்பான்டன்ட் ரிப்போர்ட் எடுத்துச் சொல்லியிருக்கிறது. முன்பெல்லாம் ஏற்பட்ட வறட்சி களைவிட மிகவும் கொடிய வறட்சி நிலை வரப்போகிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறது. இப்போதே திட்டமிட்டு, வலியுறுத்தி இதை மத்திய அரசிடமிருந்து வாங்கி வைக்காவிட்டால், பிறகு பஞ்சம் ஏற்பட்டதற்குப் பின்னால் வாங்க டைம் இருக்காது, கால அவகாசம் இருக்காது. இந்த வகையில் இதுசம்பந்தமாக தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, ஆண்டுத் திட்டம் ரூ. 514 கோடி அளவில் அமையும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதற்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை. அதிகமான அளவுக்குப் பட்ஜெட்டில் துண்டு விழுகிறது என்ற காரணத்தின் அடிப்படையில் ரூ. 20 கோடிக்குப் புதிதாக வரிபோட்டு இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப் பிட்டதைப்போல், அரசாங்கத்தில் எதிர்பார்க்கும் வருவாய் இனத்தைச் சரியாகக் கணக்கிட்டு உண்மையான நிலையை நமக்குச் சொல்வதில்லை. வழக்கமாக, வருவாய் இனத்தைக் குறைவாகக் காட்டுவது என்பதுதான் நடைமுறையாக இருந்து வருகிறது. எனவேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இந்த வரி விதிப்பின் மூலம் சுமார் 30 கோடி ரூபாய்க்கு வருவாய் கிடைக்கும் என்று குறிப்பிட்டார்கள். அதோடு எக்ஸைஸ் டியூட்டி மூலம், மேலும் ஒரு 50 கோடி ரூபாய்க்கு அரசுக்கு வருவாய் வரும் என்றும் தெரிவித்தார்கள். இனி சாப்பாட்டிற்குப் பயன்படுத்துகிற பணத்தைத்தான் சாராயத்திற்குப் பயன்படுத்தப் போகிறார்கள். அந்த வகையில் அரசாங்கத்திற்கு அதிகமான வருவாய் வர இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது தமிழ் நாட்டில் தொழிற்கூடங்களுக்குப்

பயன்படும் மின்சாரமான "ஹை-டென்ஷன் கரண்ட்" ஒரு யூனிட் 24 பைசாவுக்குத் தரப்படுகிறது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் அப்போது யூனிட் முக்கால் பைசாவுக்குக்கூட கொடுக்கப்பட்டது. பிறகு அது 1¼, 3½ என்று போய், நிரந்தரமாக இன்றையதினம் மின் வாரியம் கடனில் மூழ்கியிருக்கிறது என்ற நிலையில், யூனிட் ஒன்றுக்கு 24 பைசா வாங்கும் நிலை இருக்கிறது. அதனால் ஒரு யூனிட் மின்சாரம் வாங்குவதற்கு நமக்கு 30 பைசா அடக்கமாகிறது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தையும் சேர்த்துப் பேசுகிறேன். அடக்க விலை அதிகமாயிருந்தும்கூட, நாம் இப்போது பெரிய தொழிற்சாலைகளுக்கு 24 பைசா ஒரு யூனிட் என்ற விலையில்தான் கொடுத்து வருகிறோம். பொதுவாக எல்லாவற்றின்மீதும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்குப் பதில் இந்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டணத்தை மட்டும் உயர்த்துவது நல்லது.

பட்ஜெட்டைப்பற்றி எப்போதும் நல்ல முறையில் பேசும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இந்த முறை "H...s and ...uthless Budget" என்று குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு இது தயாரிக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விதிக்கப்படும் விற்பனை வரி மீதான சர் சார்ஜ் தற்போதுள்ள 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த சர் சார்ஜை சென்னை நகரில் மட்டும் போடாமல் சென்னையைச் சுற்றி 32 கிலோ மீட்டர் எல்லைக்குள் இருப்பவர்களுக்கும் சேர்த்துப் போட்டிருக்கிறார்கள். காரணம் சென்னை மாநகராட்சி, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இது செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் சென்னையில் இருப்பவர்களைத் தவிர சுற்றியுள்ள 32 கிலோ மீட்டர் தொலைவில் இருப்பவர்கள் யாரும் சென்னை மாநகராட்சி கொடுக்கும் எந்தச் சலுகையையும் அனுபவிப்பதில்லை. எனவே அவர்கள் மீது இந்த மேல்வரி விதிப்பது என்பது எந்த வகையிலும் நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணியடித்தார்.)

சலுகையை அனுபவிப்பவர்களுக்கு வரி போட்டாலாவது அதில் நியாயம் உண்டு. ஆனால் எந்தச் சலுகையையும் சென்னை மாநகராட்சியிடமிருந்து பெறாதவர்களுக்கு வரி போடுவது எப்படி நியாயமாகும் என்று கேட்க





விரும்புகிறேன். பெட்ரோல், டீசல் மீதுகூட விற்பனை வரியை இப்போது அதிகரித்திருக்கிறோம். 11 சதவிகிதமாக அது உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தத் தவறை ஏற்கெனவே மத்திய அரசு செய்திருக்கிறது. அதையே நாமும் செய்வது சரியில்லை. இப்படி நாம் போடுகிற வரியனைத்தும் பொருள்களின் உற்பத்தி விலையை—காஸ்ட்டை—அதிகரிக்கப் போகிறது. கேட்டால் ஃபாரின் எக்ஸ்சேஞ்சுக்காகப் போடுகிறோம் என்று சொல்கிறார்களே, அப்படி ஏதாவது கிடைக்குமா என்றால் கிடைக்கவே கிடைக்காது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் விலை அதிகரிக்கும்போது, நிச்சயமாக நாம் எதிர்பார்க்கும் அந்நியச் செலாவணி கிடைக்காது. எனவே மத்திய அரசு போட்டதே தவறு என்னும்போது, அவர்களைப் பார்த்து மாநில அரசு போடுவதும் தவறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேண்டுமானால் சென்னையில் உள்ள பெரிய பெரிய கட்டிடங்களுக்கு நிறைய வரி போடுங்கள். அவர்களைக் கேட்டால், எங்களிடம் வெள்ளை அடிக்கக்கூட பணமில்லை என்றுதான் சொல்வார்கள். கம்பெனிகள் வைத்துக் கொண்டிருக்கும் பெரிய பெரிய கட்டிடங்களுக்கு வரி போடுவதன் மூலமாக இதைச் செய்யலாமே தவிர, அதை விடுத்து 32 கிலோ மீட்டருக்குள் இருப்பவர்களுக்கு மேல் வரியை உயர்த்துவது என்பது எந்த வகையிலும் சரியல்ல.

அடுத்து, பத்திரங்கள் மீதான ஸ்டாம்ப் டியூட்டியை அதிகரித்திருக்கிறார்கள். யார் இந்த நாட்டில் அதிகமான பரிவர்த்தனை செய்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். ஒரு 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவன் தன்னுடைய 4 மகன்களுக்கும் அதைத்தான் பிரித்து வைப்பான். நம் நாட்டு நிலை இதுதான். ஆக, பரிமாற்றங்கள் மீது போடுகிற வரி உண்மையில் அவர்களைத்தான் பாதிக்கிறது. மேற்கு வங்கத்திலே கூட வரி போட்டிருக்கிறார்கள். தயவு செய்து நமது அரசு அதைக் கொஞ்சமாவது பார்க்கக்கூடாதா? 42 கோடி ரூபாய்க்கு அங்கே இப்போது வரி போட்டிருக்கிறார்கள். அதில் 37 கோடி ரூபாய்க்கான வரி 2 பொருள்கள் மீது மட்டும் போடப்பட்டிருக்கின்றது. அதாவது நிலக்கரி மீது மட்டும் 7 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். கோல் மீதான செஸ் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போலவே தேயிலை மீது ஒரு கிலோ கிராமுக்கு 6 ரூபாய் செஸ் போட்டிருக்கிறார்கள். இதன் மூலம் மட்டும் 30 கோடி ரூபாய் வருகிறது. அந்த வரியும் ஜனங்கள் மீது தானே விழும் என்று இங்கே பலரும் கேட்கலாம். ஆனால் வரி போட்டாலும், விலை கண்ட்ரோல் செய்வதை அங்கே அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. இதைச் சொல்வதற்கான காரணம் என்னவென்றால்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 27

இந்தக்கைய வரிகளைப் போடுவதன் மூலமாக சாதாரண மக்கள் மீது போடப்படும் வரியை நாம் தவிர்க்க முடியும். மேற்கு வங்கத்தின் நிலக்கரிக்குக் கிடைக்கும் ராயல்டியை அதிகரிக்க வேண்டும் என்று மாநிலத்தில் வாதாடினார்கள், போராடினார்கள். சுப்ரீம் கோர்ட் வரை இந்தப் பிரச்சினை சென்று இறுதியில் 15 சதவீதம் ராயல்டி உயர்த்திக் கொடுக்கப்பட்டது. அதைப் போல மத்திய அரசிடமிருந்து நாமும் வாங்க வேண்டும். நெய்வேலிக்கு மத்திய அரசு நமக்கு எவ்வளவு ராயல்டி தருகிறது என்று எனக்குத் தெரியாது. நெய்வேலி, தமிழ் நாட்டின் சொத்து. அப்படி மத்திய அரசிடமிருந்து அதற்கெல்லாம் ராயல்டி வாங்கினால் நாம் சாதாரணப் பொது மக்கள் மீது போடும் வரியைத் தவிர்க்க முடியும் அல்லது குறைக்க முடியும்.

அடுத்து, டிராவல் கன்செஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது, போவதற்காவது வேண்டியிருக்கும்போது இப்போது ஒரு இன்ஸ்டால்மென்டை மட்டும் அரசு கொடுத்திருக்கிறது. அதைக்கூட 1-9-1980 முதல் தந்திருக்க வேண்டும். மத்திய அரசு எப்பொழுதெல்லாம் தன் ஊழியர்களுக்குப் பஞ்சப் படியை உயர்த்திக் கொடுக்கிறதோ அப்போதெல்லாம் நாம் இதுவரை உயர்த்திக் கொடுத்து வந்திருக்கிறோம். கடைசியாக 1-7-1980-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1-9-1980, 1-12-1980 மற்றும் 1-2-1981 ஆக 3 தவணைப் பஞ்சப்படி கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் வாழ்க்கைச் செலவு புள்ளி 376-ல் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது இப்போது 392 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. 376 புள்ளிக்குத்தான் இப்போது கொடுத்திருக்கிறார்கள். எனவே இன்னும் இரண்டு இன்ஸ்டால்மென்ட் தரப்பட வேண்டியிருக்கிறது. எனவே இன்னொரு இன்ஸ்டால்மென்ட் கொடுத்தால்தான், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மத்தியில் ஒரு நல்ல நம்பிக்கை ஏற்படும். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாமல் இருப்பதால்தான் இன்றையதினம் இந்த அரசு பிழைத்துக் கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ள 8 லட்சம் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஒன்றாக இருந்தால், ஒற்றுமையாக இருந்தால், நிலைமையே வேறு. நான் இதைப் பயமுறுத்துவதற்காகச் சொல்லவில்லை. இந்த 8 லட்சம் ஊழியர்களும் ஒரு அமைப்பின் கீழ் ஒற்றுமையாக வந்தால், மத்திய அரசு ஒரு இன்ஸ்டால்மென்ட் கொடுக்கும்போது, நாமும் ஒரு இன்ஸ்டால்மென்ட் கேட்காமலேயே கொடுப்போம். ஆனால் அவர்கள் பிளவுபட்டிருப்பதால்தான் நாம் இப்போது 3 மாதம் தராமல் இருப்பதோடு, ஒரு இன்ஸ்டால்மென்ட் மட்டுமே கொடுக்க முன்வருகிறோம்.



1981 மார்ச் 27] [திரு. ஆ. நல்லசிவன்]

அடுத்து, அரசு ஊழியர்களுக்கு 3 இன்ஸ்டால்மென்ட் பஞ்சப் படி கொடுக்கிறார்களே என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே பாராட்டிப் பேசினார். போகிறவர்கள் திரும்பி வருவதற்கும் அரசு பணம் தர வேண்டும். அதோடு இந்தச் சலுகையைப் பெற 15 நாள் ஈட்டிய விடுப்பு எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நியாயமில்லை. ஒரு 3 நாட்களுக்கு ஒரு கல்யாணத்திற்குப் போய்விட்டு வந்தால் கொடுக்கக்கூடாதா? 15 நாள் ஈட்டிய விடுப்பைக் காலி செய்தால்தான், இந்தச் சலுகை என்றால், அது நியாயமாய்ப் படவில்லை. இதெல்லாம் இங்கேயுள்ள 'ப்யூராக்கிரசி' போடுகிற கண்டிஷன். இதை ஏன் போட்டார்கள் என்று அமைச்சர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். கொடுப்பதைக் கொஞ்சம் நல்ல எண்ணத்தோடு கொடுக்கக்கூடாதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஏதாவது அவசரத்திற்கு உபயோகிக்க வைத்துக்கொண்டிருக்கும் 15 நாளைக் காலி செய்ய வேண்டும் என்று போடுவது சரியல்ல. எனவே 15 நாள் லீவு எடுக்க வேண்டும் என்பதை எடுக்க வேண்டும். திரும்ப வருவதற்குப் பணம் கொடுக்காவிட்டாலும், இதையாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சினைபற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். 5 ஏக்கர் நஞ்சை, 10 ஏக்கர் புஞ்சை அல்லது அதற்குக் கீழே நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்குக் கடன் தொகையில் அசல் மற்றும் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. அதற்கு மேல் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு வட்டியை மட்டும் தள்ளுபடி செய்துவிட்டு அசலைத் தவணை முறையில் செலுத்த அனுமதிக்க வேண்டும் என்பதும் அவர்களின் கோரிக்கையாகும். ஏற்கெனவே இந்திரா காந்தி அம்மையாரின் கட்சியினர் டெல்லியில் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். அப்போது தான் நமது நாட்டு விவசாயிகள் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்களைப் பார்த்து எங்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். அந்தக் கோரிக்கையை தமிழ் நாடு அரசு பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். 15,000 பிரதிகள் விற்கும் பத்திரிகைகளுக்கு நியூஸ் பிரிண்ட் மீதான 8 சதவீத வரியை

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 27

4 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். ஆனால் மேற்கு வங்கத்தில் 50,000 பிரதிகள் வரை விற்பனை செய்யும் அனைத்துப் பத்திரிகைகளுக்கும் நியூஸ் பிரிண்ட் மீதான சேல்ஸ் டாக்ஸ் நீக்கப்பட்டிருக்கிறது.

இந்த நாட்டுப் பத்திரிகைகள் பாலேகர் அவார்டு பளுவையும் ஒரு பக்கம் தாங்க வேண்டியிருக்கிறது. அதோடு மாநில அரசுகள் போடுகிற வரியையும் தாங்க வேண்டியிருக்கிறது. இப்படிச் சிறு பத்திரிகைகள்மீது அதிகமான வரியைப் போடுவதன் மூலம், நாட்டு மக்களுக்குச் சேவை செய்து வரும் பத்திரிகைகள் இயங்காமல் போகும் நிலைதான் உருவாகும். தமிழ் நாட்டிலுள்ள 48 பத்திரிகைகளில் 36 பத்திரிகைகள் அப்படிப்பட்ட பத்திரிகைகள். எனவே அந்தப் பத்திரிகைகள் வாழ வழி செய்யும் வகையில் 15,000 பிரதிகள் வரை விற்கும் பத்திரிகைகள் மீதான விற்பனை வரி முழுவதையும் நீக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

2. மேலவை உறுப்பினர் திரு. மியாகான் ஆட்டோ ரிக்ஷா டிரைவரால் தாக்கப்பட்டது குறித்து.

THIRU J. M. MIAKHAN: Sir, I raise a privilege issue in this House. I want to make mention of an incident that happened to me while I was coming to the House to perform my duty as a Legislator. I came by electric train and and arrived at Park Railway Station at about 9.40 a.m. today. Then I came to the main road, namely, Poonamalle High Road to take an auto-rickshaw. An auto-rickshaw came and I got into it. He demanded Rs. 5/- as fare for taking me to the Secretariat buildings. I said that it was too much and I refused to give the fare as demanded. The auto-rickshaw driver refused to ply the vehicle. He did not stop with it but began to use vituperative language. Then I told him, 'I am an M.L.C. and I have to go to the Fort to attend the meeting of the Council". I even offered to pay something more. Even that I should not have done. He refused to take the vehicle. Then he used certain words which I should not mention in this House and which are not even printable and he stoutly refused to ply the vehicle.

(பிற்பகல் 12-20)

" எம்.எல்.ஏ. வாக இருந்தால் என்ன, எம்.எல்.சி. யாக இருந்தால் என்ன,
*** *** *** *** ***
என்று மோசமான வார்த்தைகளை உபயோகப்படுத்தினார்.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1981 மார்ச் 27]

திரு. ஏ. ஆர். தாமோதரன்: துணைத் தலைவர் அவர்களே, "அப்யூசிவ் லேங்குவேஜில்" பேசினார் என்று இருந்தால் போதும். அந்த வார்த்தைகளை எடுத்துவிடலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மோசமான வார்த்தைகளால் திட்டினார் என்று இருந்தால் போதுமானது. மற்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

THIRU J. M. MIAKHAN: Sir, I am sorry. I mentioned the words used only for the purpose of indicating the gravity of the situation. Then, another auto-rickshaw carrying four or five persons came and I think they are the office-bearers of some Union. They came and asked me to get down from the auto-rickshaw. I said to them: "Wherever you want to take me, you may take me. I will make a report and then go to the Secretariat". They also began using vituperative language and they dragged me out from the auto-rickshaw. They virtually pulled me out and in the process, I even lost the Identify Card/Pass issued to me by the Department and one rupee note fell down and I could not pick it up. I was actually man-handled by them. Only after some time, a policeman came to my rescue. He rescued me and took me away. All this took about one hour and I came to the House only by about 11.05 a.m. and I have been prevented from doing my duty as a legislator. On my behalf and on behalf of other Legislators, I request that we may be given sufficient protection and that the incident may be enquired into, so that the offenders may be properly dealt with. I have addressed a letter to the Hon. Chairman, which I am passing on to you Sir.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் மேலவைக்கு வர முயன்ற நேரத்தில் ஏற்பட்ட சம்பவம் குறித்துச் சொன்னார்கள். அது வருந்தத்தக்கது மட்டுமல்ல, கண்டிக்கத்தக்கதுமாகும். அந்த ஆட்டோ ரிக்ஷாவின் நெம்பர், மற்ற விவரங்கள் எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்குமானால், கடுமையான நடவடிக்கை எடுக்க அரசுக்கு வாய்ப்பு இருக்கும். இந்த மாதிரி இனிமேல் நிகழாமல் இருக்க என்ன செய்ய முடியுமோ அதை அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்துச் செய்யும் என்று தெரிவித்துக்கொண்டு

அங்கே நடந்த சம்பவத்திற்காக வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு உறுதியாக கண்டிப்பான நடவடிக்கையை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேரம் இல்லாததால் மிகவும் சுருக்கமாகப் பேச விரும்புகிறேன். நேற்றே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். நான் அதை நேரிடையாகவும் கேட்டேன், பத்திரிகை வாயிலாகவும் படித்தேன். பொதுவாக நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கை நிறைய பக்கங்களை உடையதாக இருக்கிறது என்று சிலர் சொன்னார்கள். தமிழில் 56 பக்கங்கள் இருக்கின்றன என்றாலும், ஆங்கிலத்தில் உள்ள அறிக்கையில் 48 பக்கங்கள்தாம் இருக்கின்றன. ஆங்கிலத்திலே சிறியதாக இருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த முயற்சி எடுத்ததற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறையில் யாரோ புகுந்து கலாட்டா செய்திருக்கிறார்கள். நல்ல வேளையாக அவருக்கு ஒன்றும் கெடுதல் நடக்காததால் நாம் எல்லோரும் சந்தோஷப்பட வேண்டும். நானும் நாற்பது, ஐம்பது வருடங்களாகப் பார்க்கிறேன், ஐந்து மணி ஆகிவிட்டால் இங்கு யாருமே இருக்க மாட்டார்கள். ஐந்து மணிக்குப் பிறகு சட்டசபைக்குள் யார் வேண்டுமானாலும் வரலாம். ஒரு 'பாம்ப்'ஐக் கொண்டுவந்து இந்தச் சபையிலோ, மந்திரி அறையிலோ, செக்கரட்டரி அறையிலோ போடலாம். யாரும் காவலுக்கு இருப்பதில்லை. இப்போதுதான் வாட்ச் அண்டு வார்டுகளைப் போட்டிருக்கிறார்கள். அவர்களும் ஐந்து மணிக்குமேல் போய் விடுகிறார்கள். சட்டசபை நடக்கிற போது ஆட்கள் இருக்கிறார்கள். கூட்டம் நடக்காதபோதும் காவல் பார்க்க ஆளைப் போட வேண்டும் என்று தலைவர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன். 24 மணி நேரமும் கோட்டையில் உள்ள அலுவலகங்களில் காவல் போட்டுப் பாதுகாக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.



இப்போதுள்ள சிரமமான நிலையிலும் நிறைவான பட்ஜெட்டைக் கொண்டு வந்ததுபற்றி நாம் சந்தோஷப்பட வேண்டும். வறட்சி நிலைமை இருக்கிறது. வரும்படி இல்லை. டில்லியிலிருந்து, மத்திய அரசிடமிருந்து பணம் வர வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையிலும் இப்படிப்பட்ட நல்ல பட்ஜெட்டைக் கொண்டு வந்ததற்காக நிதியமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும். இந்த வருடம் மழை இல்லை. வறட்சியைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. அதைப்பற்றி எல்லோரும் பேசிவிட்டார்கள். முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் வறட்சி இடங்களைப் பார்வையிட போய்க் கொண்டிருக்கிறார்கள். சட்டசபை முடிந்த பிறகு, மழை வரும்வரை எல்லா ஜில்லாக்களுக்கும் மந்திரிகள் போக வேண்டும். மந்திரிகள் போனால்தான் அந்த வேலைகள் உற்சாகமாக நடக்கும். கிணறுகளை ஆழப்படுத்துவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது நல்ல காரியம். அதைப்பற்றி எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். 'பஃப்பர் ஸ்டாக்' வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அரசைப் பாராட்ட வேண்டும். இந்திய அரசிலிருந்து பணம் எதிர்பார்க்கிறார்கள். இதில் இந்த அவையும், பேரவையும் மந்திரி சபைக்கு ஆதரவாக இருந்தால்தான், நிறைய பணம் வரும். இரு அவையிலும் ஆதரவு கொடுக்க வேண்டியது அவசியம். மந்திரிகளுக்காக அல்ல, மக்களுக்காக நாம் செய்ய வேண்டிய கடமை அது.

ஸ்டேட் பிளானுக்கு 3,150 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு மேலும் கேட்டிருக்கிறோம். லோன் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ரிசர்வ் பேங்க் இருக்கிறது. அந்த பேங்கிலே நிறைய பணம் இருக்கிறது. அவர்கள் லோன் கொடுக்காமலே இருக்கிறார்கள். எலெக்ட்ரிசிட்டி போர்ட்டுக்கு லோன் கேட்டால்கூட பப்ளிக் லோன் வரும். அதற்கு யாரும் தரமாட்டேன் என்று சொல்ல மாட்டார்கள்.

சைக்கிள் ரிக்ஷாவுக்கு சப்சிடி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் சப்சிடி கொடுக்க வேண்டும். ஸ்பின்னிங் மில்களுக்கு சப்சிடி கொடுக்க வேண்டும். அதைப் போலவே பி அண்டு சி மில்லை அரசாங்கம் எடுக்காமலே பணம் கொடுத்தாலே போதும். சப்சிடி கொடுத்தாலே போதுமென்று தொழிலாளர்கள் நினைக்கிறார்கள். அரசாங்கம் எடுப்பதால் தொழிலாளர்களுக்கு நல்லது இல்லை. தொழிலாளர் நல அமைச்சர்

[டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்] 27 மார்ச் 1981]

முன்பு மாற்றுவதாக இருந்தது. அதை ஒரு காலத்தில் ஸ்பர்டாங்க் ரோட் பகுதிக்கு மாற்றுவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதை நான் தான் மாற்றக்கூடாது என்று கருத்துச் சொல்லி, அதனால் இங்கே இருக்கிறது. இப்போது அதில் பெர்னார்ட் இன்ஸ்ட்டிடியூட் என்று எல்லாம் வந்திருக்கிறது. நன்கு வளர்ந்திருக்கிறது.

போலீஸ் இலாகாவைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்த இலாகாவை நாம் பாராட்ட வேண்டும். சமீபத்தில் அரசு அவர்களுக்கு புட்ரெய்ன் கன்செஷன் எல்லாம் கொடுத்திருக்கிறது. அதையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் எந்த வேலையைக் கொடுத்தாலும் செய்கிறார்கள். சென்னையிலே உள்ள போலீஸ்காரர்கள் எல்லாம் மிகவும் திறமையாக வேலை செய்கின்றார்கள். அவர்கள் ஏதாவது வீரத்தனமாகச் செய்தால், அதற்குத் தகுந்த சன்மானம் கொடுக்க வேண்டும். அதைப்பற்றி நான் பலமுறைகள் சொல்லியிருக்கிறேன். போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப் வசதிகள் வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறேன். அவர்கள் அவசரத்திற்கு கை மாற்றாக வாங்கிக்கொண்டு சென்றால், தவறாகச் சொல்லிவிடுவார்கள். அவர்கள் மேல் கம்ப்ளெயிண்ட் வந்துவிடும். ஆகவே இரண்டு போலீஸ் ஸ்டேஷன் என்று இருப்பதை ஒன்று என்று குறைத்தால்கூடப் பரவாயில்லை. ஆனால், அவர்களுக்கு இந்த ஜீப் வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவோ லட்சக்கணக்கான ரூபாய்கள் பல காரியங்களுக்குச் செலவு செய்கிறோம். இதெல்லாம் சிறிய செலவுகள். இதையெல்லாம் ஏன் செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மெட்ராஸ் கார்ப்பரேஷன் பற்றிச் சொல்லும்போது, சென்னையில் சுகாதார வசதிகள் குறைவாக இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். 6 கோடி ரூபாய் அளவில் சேல்ஸ் டாக்ஸ் வருமானம் வருகிறது. நாம் அதில் கார்ப்பரேஷனுக்கு நிதி ஒதுக்கி சென்னையின் சுகாதாரம் நல்ல முறையில் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு கவர்ன்மெண்ட் கிராண்ட் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

ஆஃப் ஷோர் டிரிலிங்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லவில்லை, அதைப்பற்றி அவர் பதில் சொல்லும் போது சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



1981 மார்ச் 27] [டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்]

அடுத்து, 8 பர்சென்ட் என்பது 4 பர்சென்ட் என்று இருக்கிறது. அதை சிங்கிள் பாயின்ட் சேல்ஸ் டாக்சாகச் செய்ய வேண்டும். எல்லாப் பொருள்களுக்கும் அப்படிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், பிளாக் மார்க்கெட் செய்வது குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இந்த பட்ஜெட் உரையை நான் பாராட்டுகிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் பாராட்டி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12.40)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

*Nil.*

*B. Reports, Notifications and Other Papers.*

* 81. Vote on Account for Expenditure in 1981-82 of the Government of Tamil Nadu. (Tamil and English).

* 82. Notice of Demands for "On account" Grants during the year 1981-82. (Tamil and English).

83. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Council on the 28th August 1969 :

*Returns as on 30—6—1979.*

Thiru G. Swaminathan.

Returns as on 31—3—1980.

1. Thiru D. Santosham.
2. Thiru A. R. Damodaran.
3. Thiru C. R. Lakshmikandhan.

* Laid on the Table of the House on 26th March 1981.

[டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்] [1981 மார்ச் 27

திரு. இராகவானந்தம் அவர்களே இதை ஒத்துக்கொள்வார். அரசு எடுத்துக் கொள்வதைவிட பிரைவேட் செக்டாரே நடத்தினால் தொழிலாளர்களுக்கு நன்மை. அரசு எடுத்துக்கொள்ளக் கூடாது. பிரைவேட் செக்டாரே நடத்த வேண்டுமென்று தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே நிதியை மட்டும் கொடுக்க வேண்டும். இது போல எத்தனையோ கம்பெனிகளுக்குப் பணம் தந்திருக்கிறார்கள். டெக்ஸ்டைல் மில்களுக்கு எல்லாம் கூடக் கொடுத்திருக்கிறார்கள். என்.டி.சி.-யில் இப்போது நல்ல இலாபம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் பின்னாலே வந்துவிடும்.

அடுத்து, கால்நடையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 9 இடத்தில் பண்ணைகளை வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இராமநாதபுரத்தில் உள்ள கால்நடைப் பண்ணைதான் இந்த நாட்டிலேயே பெரியது. 2,600 ஏக்கரில் ஆயிரம் மாடுகளுக்குக் குறைவில்லாமல் இருக்கிறது. இதைப் பற்றிப் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஒன்றும் நடக்கவில்லை. நான் மெம்பராக வருவதற்கு முன்பிருந்து சொல்லி வருகிறேன். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. அமைச்சர் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** நீர்ப்பாசனம்பற்றிச் சொல்லும்போது நம்முடைய அவையின் முதல்வர் மாண்புமிகு திரு. இராசா முகமது அவர்கள் பெரும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதற்காக அவரைப் பாராட்ட வேண்டும். இதற்காக மட்டுமல்ல. இந்த அவையை ரொம்ப அழகாக நடத்தி தலைவருக்கு உதவியாக இருந்து வருவதற்காகவும் அவரைப் பாராட்ட வேண்டும். 150 கோடி ரூபாயை மேஜர் இர்ரிகேஷனுக்காகவும், 18 கோடி ரூபாயை மைனர் இர்ரிகேஷனுக்காகவும் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல விஷயம்தான். ஆனால் ஒன்றைப்பற்றி மட்டும் தகவல் சொல்லவில்லை. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டத்திற்கு மதுரையிலிருந்து குற்றாலம் போகும் வரை ஐம்பது மைல் பக்கத்திலே ஒரு அணையைக் கட்ட வேண்டும் என்று திரு. காமராஜர் இருக்கும் காலத்திலேயே சொன்னேன். அதனால் ரொம்ப தூரத்திற்குத் தண்ணீர் கிடைக்கும். புதுக்கோட்டைவரை, நாகர்கோவில் வரை தண்ணீர் வரும். ஏன் அதுபற்றிக் குறிப்பிடவில்லை என்று கேட்கிறேன். நீர்ப்பாசன அமைச்சர் அதைப்பற்றிக் கவனிப்பார் என்று நம்புகிறேன்.



1981 மார்ச் 27] [டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்]

(பிற்பகல் 12.30)

அடுத்தபடியாக, மின்சாரம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தூத்துக்குடி மின் திட்டம் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டும். மின்சாரத்திற்காக அதிகமான பணம் செலவழிப்பது குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. தொண்டி துறைமுகம் எல்லாம் முன்பு இருந்தது. அப்போது அங்கே பர்மாவிலிருந்து மரம் எல்லாம் வரும். தொண்டி ஒரு முக்கியமான இடம். இப்போது இல்லாவிட்டாலும் பிற்காலத்திலாவது அதைக் கவனிக்க வேண்டும். எலெக்ட்ரிசிடி பற்றிச் சொல்லும்போது, பட்ஜெட்டில் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே பணம் ஒதுக்கியிருப்பதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது ரொம்ப முக்கியமான விஷயம். தூத்துக்குடி, கல்பாக்கம் மின் திட்டம் எல்லாம் இருக்கிறது. அவர்கள் ஒன்றும் அதுகுறித்து சொல்லவில்லை. அது வரும் என்று சொல்வார்கள் என்று நம்புகிறேன். கல்பாக்கம் திட்டம் இரண்டு வருடங்களில் வரும் என்று சொல்கிறார்கள். அது ஏன் இரண்டு வருடம் முன்னதாக வரமுடியாது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த ஆண்டு விவசாயிகளுடைய பம்பு செட்டுகள் 30,000-த்திற்கு மின் சப்ளை கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது நல்ல விஷயம்தான்.

இன்டஸ்ட்ரீஸ் பற்றிச் சொல்லும்போது, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்டஸ்ட்ரீஸ் ஆரம்பித்து நடத்துபவர்களுக்கு ஒரு நல்ல இன்சென்ட்டிவ் கொடுத்தால் போதும் என்று நம்புகிறேன். அது மேஜர் இன்டஸ்ட்ரியாக இருந்தாலும், மைனர் இன்டஸ்ட்ரியாக இருந்தாலும், நாம் எல்லாவற்றிற்கும் இன்சென்ட்டிவ் கொடுக்கலாம். கொலாபரேஷன் வைத்துக் கொண்டுகூட செய்யலாம். அதனால் பாரின் மெஷின்கள் இங்கு வரும். அயல் நாடுகளிலேயிருந்து வரும். அப்படி வந்தால் நமக்கு நல்லதாக இருக்கும். எல்லாத் தொழில்களுக்கும் சப்சிடி கொடுக்க வேண்டும். இந்த மாதிரி சப்சிடி கொடுப்பது நல்லது. என்.டி.சி. போன்ற ஸ்தாபனங்கள் உதவியாக இருக்கின்றன. அது நன்றாக வேலை செய்கின்றது என்பது என்னுடைய அபிப்பிராயம். சிக் யூனிட்டுகளுக்கு ஒரு மார்ஜினல் உதவி தரவேண்டுமென்று சொல்கிறேன். அதுமட்டுமல்லாமல், பாங்க் கேரண்டி கொடுத்தால், அவர்களுக்குப் பணம் கிடைக்கும். அந்தப் பணம் திரும்ப வந்துவிடும். கவர்ன்மென்ட்டில் எடுத்துக்கொள்ளாமல் நடத்த வேண்டும். சில நேரங்களில் 2 கோடி, 3 கோடி ரூபாய் அளவில் மெஷின்கள் வாங்கிவிடுகின்றார்கள். அந்தப் பணத்தை வாங்கி திருப்பிக் கட்டுவதற்கு 10, 20 வருடங்கள்கூட

[டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்] [1981 மார்ச் 27

ஆகிவிடுகின்றன. ஆகவே இருப்பதைச் சரிசெய்து உபயோகப்படுத்தி, அதிலிருந்து சம்பாதித்து, லாபகரமாக நடத்தி வரவேண்டும். இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் அவர்களும், இண்டஸ்ட்ரியலிஸ்ட்களும் கலந்து இருந்து, இரண்டு பேர்களும் சேர்ந்து செய்ய வேண்டும் இதற்கு என்று ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து, டூரிஸம் பற்றிச் சொல்லும்போது, நமது அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அந்தத் துறையை நன்றாகக் கவனிக்கிறார்கள். அறநிலையத் துறையையும் நன்றாகத்தான் பார்த்துக்கொள்கிறார்கள். தஞ்சை, புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் எல்லாம் நல்ல டூரிஸ்ட் இடங்கள் இருக்கின்றன. சித்தன்ன வாசல் என்றுகூட பார்க்கக்கூடிய இடம் இருக்கிறது. டெம்பிள் பற்றிகூட பலமுறை சொல்லியிருக்கிறேன். காலேஜாக அங்கு வைக்காவிட்டாலும், பள்ளிகளாக அங்கு வைத்து பிள்ளைகளுக்குக் கல்வி அளிக்கலாம். கல்விக்காக ரூ. 250 கோடி வரையில் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை இந்தக் கல்விக்காகச் செலவழிப்பார்கள் என்று கருதுகிறேன். அதைப்பற்றி எனக்குச் சந்தேகம் இல்லை.

அடுத்து, தமிழ் யூனிவர்சிடி. நான் அதை ரொம்ப வரவேற்கிறேன். தமிழ் யூனிவர்சிட்டி தஞ்சையில் வைக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அப்படி வைக்கலாம். அதற்கு இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் செலவு என்று சொல்கிறார்கள். அதுகூடப் போதாது என்பது என்னுடைய அபிப்பிராயம். காரைக்குடி பல்கலைக் கழகம் வருவதை நான் வரவேற்கிறேன். இன்னும் அதிகமான மாணவர்கள் படிக்கும் அளவுக்கு இருக்க வேண்டும். பாலிடெக்னிக் பற்றி நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். செங்கற்பட்டு செங்கல்வராய பாலிடெக்னிக்கில் முன்பு 100 மாணவர்கள்கூட இருந்தார்கள். இப்போது எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. 66 மாணவர்கள் இருக்கின்றார்கள். ஜூனியர் பாலிடெக்னிக் என்று சொல்லும்போது, 4வது 5வது பாரம் வரைகூட படிக்க வேண்டியதில்லை. அந்த அளவுக்குப் படித்து விட்டு பாலிடெக்னிக்கில் சேர்ந்துவிடலாம். ஓபன் எஜு[illegible]ன் முறை வந்திருக்கிறது. அது எல்லோருக்கும் பயன்படும். 'இன்[illegible]டேடியம்' என்று சென்னையில் இருக்கிறது. அதுவும் வரவேற்க [illegible]யதுதான்.



1981 மார்ச் 27] [டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்]

சுகாதார விஷயம்பற்றிச் சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் அந்தத் துறையை மிகவும் உற்சாகமாகப் பார்த்துக்கொள்கிறார்கள். அதையும் நான் பாராட்டுகிறேன். அடுத்து, டிரக்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். டிரக்ஸ் இல்லை என்று சொல்கின்றார்கள். அது மட்டுமல்ல, டிரக்ஸ் திருட்டு போகிறது என்றும் சொல்கின்றார்கள். அப்படித் திருட்டு போகாமலிருக்க வேண்டிய அளவுக்கு பந்தோபஸ்து செய்ய வேண்டும். அதற்கு ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன். சில மருந்துகளை வெளி நாட்டிலேயிருந்து வரவழைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு மத்திய அரசிடமிருந்து பெர்மிஷன் எல்லாம் வாங்க வேண்டியிருக்கிறது. அதையும் பார்த்து அந்த மருந்துகள் கிடைக்கவில்லை என்றால் கிடைக்க வழிசெய்ய வேண்டும். அது ஒரு முக்கியமான விஷயம்.

அடுத்து, ரீஹாபிலிடேஷன் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதற்காக இன்ஸ்ட்டிடியூட் எல்லாம் வைத்து பயிற்சி அளிக்கின்றார்கள். அதிலே பயில்கின்றவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, ஒன்று சொல்லிக்கொள்கிறேன். ஆஸ்பத்திரியில் ஜெனரேட்டர்கள் இருக்க வேண்டும். எலக்ட்ரிசிடி நின்றுவிட்டால் சிக்கல் வந்துவிடும். அங்கேயுள்ள எக்ஸ்ரே கருவிகள் இயங்க வேண்டுமானால், எலக்ட்ரிசிடி பெயிலூர் ஆகும்போது ஜெனரேட்டர்கள் உதவும். தாலூக்கா ஹெட் குவார்ட்டர்சிலேயெல்லாம்கூட இவைகள் இருக்க வேண்டும். சின்ன ஜெனரேட்டர்களாவது வைத்திருக்கலாம். அதற்கு அதுவே போதுமானது. எவ்வளவோ செலவு செய்கின்றார்கள். அதற்கெல்லாம் அவ்வளவு செலவாகாது. அடுத்து கேட் ஸ்கேன்னர், (C. A. T. Scanner) ஈகோ காரிடியோகிராம் போன்ற கருவிகள் கூட அங்கே இருக்க வேண்டும். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இப்போது வைக்கப்பட்டிருக்கிறது. இங்கு டீச்சிங் இன்ஸ்ட்டிட்யூட்கூட இருக்கின்றது. இதுபோல் 4 கல்லூரிகள்தாம் இருக்கின்றன. அது ஐந்தாகக் கூட ஆகலாம். மதுரையிலே, கோயம்புத்தூரிலே எல்லாம்கூட இந்த ஸ்கேன்னர் கருவிகள் இருக்கவேண்டும். ஒரு கோடி ரூபாய் செலவு என்றாலும் செய்யலாம். இதை அவசியமாகச் செய்ய வேண்டும்.

வறட்சி நிவாரணம்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக இவ்வளவு தொகை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் பாராட்டுகிறோம். இந்த ஜெனரல் ஆஸ்பத்திரியை

அறிக்கை தர, வல்லுநர் குழு ஒன்றை அமைத்து, அவர்களும் அது குறித்து ஆராய்வதற்கு வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இது தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினரவர்கள், தமிழ்ச் சொற்கள் சீர்திருத்தம் என்ற அடிப்படையிலே வினா கேட்டிருக்கிறார்கள். அது தமிழ் அறிஞர்கள் அல்லது பல்கலைக் கழகங்களிலே இருக்கிற தமிழ்த் துறைகள் ஆராய வேண்டிய ஒன்றாகும். அவர்கள் அது தேவை என்று கருதி, ஆராய்ந்து சொன்னால், அந்த அடிப்படையிலே அதைப் பரிசீலிக்கிற வாய்ப்பு அரசுக்கு ஏற்படும்.

**திரு பி. ரா. லெட்சுமிகாந்தன் :** எழுத்துச் சீர்திருத்தம், சொற்கள் சீர்திருத்தம் சம்பந்தமான வினாவாக இருந்தாலும், மாண்புமிகு அமைச்சரவர்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். தமிழ் எழுத்துக்களை, தமிழ்ச் சொற்களைக் குறுகிய காலத்தில் அயல் நாட்டினரும், தமிழ் தெரியாத மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் ஏதாவது முறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியென்றால் அவற்றைச் செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதற்கு குறுகிய காலப் பயிற்சி அளிக்க ஏதேனும் அரசு செய்திருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்களென்று நினைக்கிறேன். அதற்காக நாம் தனி ஏற்பாடு செய்து, 15 நாட்களுக்குட்பட்ட ஓர்க்ஷாப் என்று மைசூர் மொழிப் பயிற்சி நிறுவனத்திலே நடைபெற்றிருக்கிறது. அங்கே அவர்களெல்லாம் கலந்து, பல்வேறு விஷயங்களைப்பற்றி விவாதித்து, தேவையான விவரங்களைக் குறித்து வந்திருக்கிறார்கள். கூடிய விரைவிலே பாடப் புத்தகங்களாக, அகராதியாக, பயிற்சி உபகரணங்களாகச் செய்யப்பட்டு, குறுகிய காலத்தில் தமிழ் கற்றுக்கொள்ள பயிற்சி அளிக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆங்கிலம்கூட போகன் ஆங்லோ ஸ்டைல் என்று இருந்த முறையை மாற்றி, ஒருமைப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்ச் சொற்கள் மாவட்டத்திற்கு மாவட்டம், தமிழ் நாட்டிற்கும் வேறு நாடுகளுக்கும் இடையே மாறுபட்டிருக்கின்றன. விஞ்ஞானச் சொற்களைப் பல்வேறு முறையில் பயன்படுத்துகிறார்கள். இப்படியெல்லாம் இல்லாமல், தமிழ்ச் சொற்களை ஒருமைப்படுத்த தமிழ் பல்கலைக் கழகம் மூலமாக முயற்சி எடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? மேலும் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு ஏற்ற முறையில் தட்டச்சுப் பொறிகளை உருவாக்க வேண்டுமென்று அந்தப் பொறிகளை உருவாக்கும் நிறுவனங்களுக்குத் தெரிவிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எல்லோரும் ஒரே மாதிரியான சொற்களை, எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் வரவேற்கத்தக்கது. அது மொழியின் வளர்ச்சிக்குத் தேவையான ஒன்று. தற்கால விஞ்ஞான வளர்ச்சியைப் பார்க்கும்போது, தமிழ் அறிவுத் துறையிலே முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்றால், அதை எல்லாப் பகுதிகளிலும் ஒரே முறையில் பயன்படுத்த வேண்டும் என்பது மிக மிக இன்றியமையாததாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதற்கேற்ற ஒத்துழைப்பு பல்வேறு பகுதிகளிலிருந்து வர வேண்டும். அதற்கான காரியங்களைப் பல்கலைக் கழகங்களும், மற்றவர்களும் செய்ய வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது இன்னும் உருவாகி, செயல்முறைக்கு வராத காரணத்தால், அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சொல் சீர்திருத்தமென்பது சொல்லாட்சியைப் பயன்படுத்துகிற முறையில் உள்ள சீர்திருத்தமாகும். தொல்காப்பியர் அதைச் செய்தார். அதற்குப் பிறகு, 13 நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பவணந்தி முனிவர் செய்தார். இப்போது அத்தகைய இலக்கண அமைப்பு முறை வர வேண்டுமென்றால், இலக்கணப் புலவர்களை வைத்து, பரிசீலிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தத் தேவையை வலியுறுத்தி தமிழ் அறிஞர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள் அல்லது இப்படிச் செய்யலாமென்ற கருத்து வருமானால், அரசு அதைப் பரிசீலித்து தேவையான உதவிகளைச் செய்ய முன்வரும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சொற்களில் சீர்திருத்தம் செய்ய அரசு முனையுமானால், அது குறித்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். பாவாணர் போன்றவர்கள் தூய தமிழ்ச் சொற்களை உருவாக்கியிருக்கிறார்கள். 'அகர முதலி' உருவாக்கியிருக்கிறார்கள். எனவே தூய தமிழில் சொற் சீர்திருத்தம் கொண்டுவர அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சொற் சீர்திருத்தம் அந்தந்த துறையிலிருந்து வர வேண்டுமென்று விரும்புகிறேன். இப்படித்தான் சீர்திருத்தம் இருக்க வேண்டுமென்று அரசு நினைக்கின்ற முறையில் வருமானால், அபிப்பிராய பேதங்களுக்கு இடம் கொடுக்கும். அல்லது வீணான பிரச்சினைகள் வருமே தவிர அதனால் பலன் இராது. எனவே அரசின் சார்பிலே சொல்லிக்கொள்வது என்னவென்றால், திட்டவட்டமாக இப்படித்

மென்று கேட்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அண்மையில் திருச்சியில் கூடிய ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட இதில் ஒரு 'ரிபாம்' என்கிற முறையில் கொண்டு வர வேண்டுமென்று ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பரிசீலித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : கேள்வித் தாளில் மாற்றம் செய்வது பற்றிய கருத்தரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது 'நியூ மெதட்' என்கிற முறையில் அதுவா, இதுவா என்று எழுதுவது மாணவர்களுக்கு வசதியாக இருக்கிறது. முன்பெல்லாம் 'எஸ்ஸே டைப்' விடை அளிக்க வேண்டும். பார்க்காமல் எழுதுவதை விட பார்த்து எழுதுவதற்கு நன்றாகப் புத்தகங்களைப் படித்திருக்க வேண்டும். இரண்டு மூன்று தடவை புத்தகம் பூராவும் படித்திருந்தால்தான் பார்த்து எழுத முடியும். அமெரிக்காவில் உள்ள விடையளிக்கும் முறையும் அந்த வகையில்தான் இருக்கிறது. ஆகவே, இதற்கென்று ஒரு கால வரையறையை நிர்ணயித்து, அதற்குள் இந்த முறை மாற்றியமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேள்வித் தாள் முறையை மாற்றுவது என்பது பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய ஒன்று. ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எங்களிடம் மட்டும் அறிக்கை தரவில்லை. பல்கலைக் கழகத்திடமும் அறிக்கை தந்திருக்கிறார்கள். அரசாங்கமும் இதைப் பல்கலைக் கழகத்ினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து கேள்வித் தாள் முறையில் தேவையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்க இருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அதிகாரிகள் இப்போது 'அக்கவுண்ட் டெஸ்ட்' எழுதுகிறார்கள். அவர்கள் எல்லாம் புத்தகத்தைப் பார்த்து எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதிகாரிகளையே பார்த்து எழுத அனுமதிக்கும் போது, மாணவர்களைப் பார்த்து எழுத அனுமதிப்பதில் தவறு இல்லை. அந்த வகையில் மாணவர்களும் பார்த்து விடையளிக்கும் வகையில் விஞ்ஞான ரீதியில் இதை மாற்றியமைக்க அரசு முன்வருமா ? மேலும் பார்த்து விடை எழுதுவது என்பது கடினமான ஒன்று என்பதை அரசு உணருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேர்வே எழுதாமல் பட்டம் தந்தால் என்ன என்கிற யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லாமல் இருந்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். படித்துப் பட்டம் பெறுகின்றவர்கள் வேலைக்கு, இன்னும் பல



காரணங்களினால் வெளியே செல்லுகின்ற இடங்களில் அவர்களுடைய பட்டங்களை மதித்து அவர்களுக்கு உரிய இடத்தைத் தராவிட்டால், அவர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆனால் பொதுவாக காப்பி அடிப்பது என்று சொல்லும்போது, அது சமுதாய விரோதச் செயல் என்ற உணர்வை மாணவர்கள் மத்தியில் நாம் புகுத்தியாக வேண்டும். எவ்வளவு பெரிய படிப்பு படித்திருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, காப்பி அடிப்பது என்பது தவறான விஷயம் என்பதை மாணவர்களுக்கு நாம் உணர்த்த வேண்டும். அப்படி நாம் உணர்த்தினால், இப்போது காப்பியடிக்கின்ற அந்த ஒரு சில மாணவர்களும் கூட காப்பியடிக்க முன்வரமாட்டார்கள். அந்த முயற்சியில் ஈடுபடமாட்டார்கள். ஆனால், அப்படித் தவறு செய்கிறவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்பட்டாக வேண்டும். தவறு செய்தவர்கள் மீது அவ்வாறு நடவடிக்கை எடுக்கும்போது, அவர்களுக்காக யாரும் விதி விலக்கு தர வேண்டுமென்றோ, அவர்களைக் காப்பாற்றுகிற முயற்சியில் ஈடுபடாமலோ இருக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவித்தாக வேண்டும் என்கிற முறையில் நாம் நடவடிக்கை எடுத்தால், இத்தகைய குறைகள் போய்விடும். மேற்கு வங்கத்தில் இரகசியமாக அரசு ஈடுபட்டு பெரு வெற்றி பெற்றதாக அங்கிருந்து வந்தவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, irrespective of examination reform, to restrict the number of people who copy, there is no alternative for the Government excepting to provide proper security arrangements where examinations are conducted. May I know from the Hon. Minister, because I do not want to side-track the issue and those who copy must be punished, whether the Government will consider proposals to recruit during the Examination time, at least for Centres where they have trouble, retired police officers to act as Superintendents on temporary basis so that the people who copy may be rusticated for three or five years ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தத் தேர்வு மையங்களில் தேர்வு நடக்கும்போது பொறுப்பாக இருக்கின்றவர்கள் அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களைச் சொல்லி பாதுகாப்பு தேவை என்று சொன்னால், அதன் அடிப்படையில் நாம் தகுந்த ஏற்பாட்டினைச் செய்யலாம். எல்லாக் கல்லூரிகளிலும் இப்படிப்பட்ட நிலை இல்லை. சில கல்லூரிகளில்தான் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. போலீஸ் பாதுகாப்பு தேவை என்று கேட்டால், தரலாம். இல்லாவிட்டால் படித்தவர்களை, வங்கி போன்றவற்றில் வேலை

[1981 மார்ச் 23

தான் இருக்க வேண்டுமென்று எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இப்படி இருந்தால் நல்லதென்று தமிழ் அறிஞர்கள் கூறினால், அதற்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

### பல்கலைக்கழகத் தேர்வு மேற்பார்வையாளருக்குக் கத்திக் குத்து

*** 186 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979, ஏப்ரல் மாதத்தில், சென்னையில் பல்கலைக்கழகத் தேர்வை மேற்பார்வை பார்த்து வந்த பேராசிரியர் ஒருவர், மாணவர்களை அத்தேர்வில் பார்த்து எழுத அனுமதிக்காததால், கத்தியால் குத்தப்பட்டார் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

(இ) இத்தகைய நிலை இனி ஏற்படாமல் இருப்பதற்கு, அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 27—4—1979 அன்று ஒரு மாணவன் தேர்வில் பார்த்து எழுத அனுமதிக்கப்படாததால், அக்கல்லூரியைச் சார்ந்த ஒரு உதவிப் பேராசிரியர் அன்று மாலை அம்மாணவனாலும் கத்தி வைத்துக் கொண்டிருந்த மற்றும் சிலராலும் தாக்கப்பட்டார்.

(ஆ) இது குறித்து பரிசீலித்த பல்கலைக் கழக ஆட்சிக் குழு, 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இம்மாணவன் எழுதிய தேர்வு தள்ளுபடி செய்யப்படலாம் என்ற முடிவினை மேற்கொண்டது. மற்றும் காவல் துறை ஆணையர் மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட இரண்டு நபர்களுக்கு தலைக்கு ரூ. 150 அபராதமும் ஓர் ஆண்டு காலம் நன்னடத்தைக் கட்டுப்பாடும் நீதி மன்றத்தினால் ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) கல்லூரிகளில் மாணவர்கள் இது போன்ற பல நிகழ்ச்சிகளில் ஈடுபடும்போது, காவல் துறையினரும் மற்றும் கல்லூரித் துறை அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசு அறிவுரைகள் வழங்கி உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒரு கணிதப் பேராசிரியர் தாக்கப்பட்டதையும், தாக்கியவர்கள் தண்டிக்கப்பட்டதையும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த நிலை இப்போது பரவலாக எல்லாப்



981 மார்ச் 28]

பகுதிகளிலும் இருக்கிறது. வேலூரில் முத்துரங்கம் அரசுக் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் மாணவர்கள் காப்பி அடிப்பதைக் கண்டித்ததற்காகத் துரத்தி அடிக்கப்பட்டார் என்றும், தன்னுடைய வீட்டிற்குள்ளே நுழைந்தால், எங்கே தன்னுடைய கர்ப்பிணி மனைவி தாக்கப்படுவாளோ என்று அஞ்சி பக்கத்து வீட்டிலே நுழைந்தார் என்றும், அதனால் அடுத்த வீட்டார் தாக்கப்பட்டதாகவும் செய்திகள் வந்தன. ஒரு சம்பவத்தை மட்டும் நான் சொன்னேன். இப்படிப் பல சம்பவங்கள் இருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பார்த்தால், தக்க அறிவுரைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இப்போது மாணவர்களில் 50 சதவிகிதத்தினருக்கு மேல் காப்பி அடிக்கும் மனோநிலை வந்திருக்கிறது. எனவே புத்தகத்தை வைத்து தேர்வு எழுதும் முறையில் வினாக்களைத் திருத்தி அமைக்க வேண்டும். அமெரிக்காவில் இருப்பதுபோல, புத்தகங்களைப் பார்த்து தேர்வு எழுதும் முறையைக் கொண்டுவரவேண்டுமென்றும், இதைப்பற்றிப் பல்கலைக் கழகங்கள் பரிசீலிக்க வேண்டுமென்றும் அரசு கேட்டுக் கொள்ளுமா ?

/ **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தேர்வுகளில் காப்பி அடிக்க வேண்டுமென்ற மனோபாவம் வளர்ந்திருப்பதும் அதை ஆசிரியர்கள் தடுக்க முனைகிறபோது அவர்கள் தாக்கப்படுவதும் நடைபெறுகிறது. இந்த ஆண்டு மூன்று, நான்கு இடங்களிலே இப்படி நடைபெற்றுள்ளதாகச் செய்திகளைப் பார்த்தோம். அதிலே அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கத்தான் விரும்புகிறது. அப்படித் தாக்கியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கின்றபோது கோர்ட்டுக்குப் போகிறார்கள். கோர்ட்டிலே தண்டனை பெறுகிறார்கள். தண்டனை குறைவாக இருக்கலாம். முதல் தடவையாக இருப்பதால், குறைவாகத் தண்டனை தந்திருக்கலாம். பின்னால் மீண்டும் அவர்கள் கோர்ட்டுக்கு வந்தால், அதற்குரிய தண்டனை தருவார்கள். பரீட்சைகளைப் பொறுத்து இரண்டு கருத்துக்கள் சொல்கிறார்கள். பரீட்சை நடத்தும்போது ஆசிரியப் பெருமக்களுக்கும் பாதுகாப்பு தந்து, இரண்டு ஆசிரியர்களுக்குப் பதிலாக மூன்று அல்லது நான்கு ஆசிரியர்கள் இருந்து நடத்தும் முறைகளைக் கொண்டு வருவதற்கும் பரிசீலனை செய்ய விரும்புகிறோம்.

(முற்பகல் 9-40)

அதற்கு அடுத்து, கேள்வித் தாள் என்பது புத்தகத்தைப் பார்த்த உடனேயே எடுத்து எழுதுகிறது போல் இல்லாமல் அல்லது அவர்கள் கையில் கொண்டு வருகிற துண்டுக் காகிதங்களைப் பார்த்து எழுதுகிறது போல் இல்லாமல், கொஞ்சம் சிந்தித்து, நினைவில் கொண்டு வந்து எழுதுகிற அளவுக்கு படித்த அறிவை 'அப்ளை' பண்ணுகின்ற முறையில் மாற்றியமைக்க வேண்டு

## இணைப்பு I

(32 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

புதுக்கல்லூரி : கல்லூரி, மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் போராட்டம் காரணமாக மூடப்பட்டுள்ளது. துணைக் கல்லூரி கல்வி இயக்குநர், கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள், மேலும் மாணவர்கள் முதலியவர்களுடன் பேசியபின் ஒரு அறிக்கை தந்துள்ளார். அதன் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

விடுதி மாணவர்கள், கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவரான திரு. அகமத் பாச்சா ஒழுக்கமற்றவர் என்றும், அவர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்றும் போராட்டம் நடத்தி காவல் துறையினரிடம் இதுபற்றி புகார் கொடுத்துள்ளனர். அது காவல் துறையின் விசாரணையில் உள்ளது.

தனி சிறப்புக் கட்டணை நிதி துறையின் விதிகளின்படி கல்லூரி முதல்வரால் நிர்வகிக்கப்பட வேண்டும். ஆனால் இது கல்லூரி நிர்வாகம் சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாப்பதாகக் கூறி இதை தங்கள் பொறுப்பிலேயே வைத்துக் கொண்டுள்ளது. இது நிவர்த்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

கழிப்பிட வசதி, குளியல் வசதி புதிதாக ஒரு கட்டிடம் சகல வசதிகளுடனும் கட்டி முடிக்கப்பட்டிருந்தும், மாணவர்களின் உபயோகத்திற்குத் திறந்து விடப்படவில்லை. இது நிவர்த்திக்கப்பட வேண்டிய குறை.

நூலகத்திற்கு ஒரு சிறந்த நான்கு மாடிக் கட்டிடம், மின்தூக்கி (Lift) இணைப்புடன் கட்டப்பட்டுள்ளது. முதுநிலைப்பட்டப் படிப்புத் துறை நூலகமும் இதில் அடங்கும். இந்தக் கட்டிடமும் மாணவர்கள்/ஆசிரியர்கள் உபயோகத்திற்கு திறந்துவிடப்படவில்லை. நூலகத்திற்கு புத்தகங்கள், மேஜை, நாற்காலிகள் போட சுமார் மூன்று இலட்சம் ரூபாய் செலவாகும். இதை நிர்வாகம் செலவு செய்யத் தயங்குகிறது.

ஆசிரியர்கள் பணப்பதிவேடு எழுதப்பட்ட பின்னரும், நிர்வாகக் குழுவின் உறுப்பினரிடம் சிக்கிக் கொண்டு இருப்பதாகவும் அவைகளை அவர் முதல்வரிடம் தர மறுப்பதாகவும் தெரிகிறது. அதனால் பணிப்பதிவேடுகள் நாளதுவரை எழுதப்படவில்லை.

கல்லூரி நிர்வாகக் குழுவுடன் மேற்கண்ட எல்லாப் பொருள்கள் பற்றியும் கல்லூரி கல்வித் துறை உடனடியாக விவாதிக்க இருக்கிறது.



# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

சனிக்கிழமை, 1981 மார்ச் 28.

பங்குனி 15, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ்ச் சொற்களில் சீர்திருத்தம்

• 185 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி வேண்டுகிறேன்—
அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க செய்யப்பட்டிருப்பது போல,

(அ) தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அரசு பரிசிலித்து வருகிறதா ?
தமிழ்ச் சொற்களில் சீர்திருத்தம் செய்ய, எந்நிலையில் உள்ளது ?

(இ) ஆம் எனில், அப்பரிசிலனை தற்போது

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, தமிழ்ச் சொற்களைச் சீர்திருத்தம் செய்வது குறித்து பல்கலைக் கழகத்தின் மூலமாக ஏதாவது ஆராய்ச்சி செய்வதற்கு அரசின் சார்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ? இது போன்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். அதன் அடிப்படையிலேதான் கேள்வி கேட்டிருக்கிறேன். தமிழ் எழுத்துக்களிலே சீர்திருத்தம் செய்திருப்பதுபோல, தமிழ்ச் சொற்களிலே சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எக்கப்பட்டு வருகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத்தான் நாம் கொண்டு வந்திருக்கிறோம். மேற்கொண்டு அந்த எழுத்துச் சீர்திருத்தம் எந்த அளவிற்குத் தேவை என்று ஆராய்ந்து,

[1981 மார்ச் 28

## கடலூரில் ஆசிரியர் இல்லம்

* 188 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூரில் ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கென குழு அமைக்கப்பட்டு கணிசமான தொகையும் வசூலிக்கப்பட்டு ஆண்டு பலவாகியும், இல்லம் கட்டும் பணி தொடங்கப் பெறாததை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) கடலூரில் ஆசிரியர் இல்லம் கட்டுவதற்காக அரசிடம் நிதி உதவி கேட்கப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கடலூரில் ஆசிரியர் இல்லம் கட்ட அங்குள்ள ஆசிரியர்களிடமிருந்து கணிசமான தொகை வசூலிக்கப்பட்டு, குழுவிலுள்ளவர்களுடைய இஷ்டத்திற்கு இணங்க அந்தப் பகுதியிலுள்ள சுமார் 10 வங்கிகளில் பணம் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் பல்வேறு வங்கிகளில் போடப்பட்டிருப்பதால், யார் செயலாளராக இருந்துகொண்டு பொறுப்பினை ஏற்றிருக்கிறாரோ அவர் அந்த வங்கிகளிலேயிருந்து வேறு வேறு வகைகளிலே பயன் அடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அங்கேயுள்ளவர்களிடமிருந்து புகார் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, எல்லாத் தொகையையும் தேசியமயமாக்கப்பட்ட ஏதாவது ஒரே ஒரு வங்கியில் மட்டும் தான் போடலாம் என்றும், அப்படியானால்தான் அரசு தர உள்ள தொகையையும் தரும் என்றும், ஆசிரியர் இல்லமும் கட்டப்படும் என்கிற முறையில் அரசு இதுகுறித்து விரைவில் முடிவு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கென்று ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் ஒரு நாள் ஊதியம் கட்டாயமாக வசூலிக்கப்பட்டது. 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. மிகக் கணிசமான தொகை, அநேகமாக லட்சத்திற்கு மேற்பட்ட தொகை கல்வி அதிகாரியின் துணையுடன் கட்டாயமாக ஆசிரியர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு நாள் ஊதியத்தைத் தந்திருக்கிறார். அந்தத் தொகை ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கல்வி இயக்குநர் அங்கு வந்திருந்தபோது, ஒரு கருத்தைச் சொன்னார், மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில்



1981 மார்ச் 28]

ஐந்து அல்லது ஆறு பேர் அடங்கிய ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் கட்டிட வேலையை முடிப்பதற்கு ஒப்புக்கொண்டால், மிக விரைவாக அரசு நிதி தருவதுபற்றிப் பரிசீலிக்கும் என்று சொன்னார். நான் அந்தக் கருத்தை வரவேற்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் அவ்வாறு ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவிடம் முழுத் தொகையையும் ஒப்படைக்க வேண்டும். அதோடு அரசு கொடுக்கின்ற நிதியையும் ஒப்படைத்து விடலாம். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டினைச் செய்து 15 வருடங்களுக்கு மேல் தாமதப் படுத்தப்பட்டு வரும் இந்தப் பணியை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது கட்ட இருக்கும் ஆசிரியர் இல்லத்திற்கு மதிப்பீட்டுத் தொகை 2 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய். ஆசிரியர் சங்கத்திடம் இருப்பது 99,907 ரூபாய். செலவு மற்றும் மேற்பார்வைக் கட்டணம் ரூபாய் 43 ஆயிரம் போக, பொதுப் பணித் துறைக்கு 56 ஆயிரம் ரூபாய்தான் இருக்கும். மேற்கூறிய அந்தச் சிறிய தொகையை வைத்துக்கொண்டு ஆசிரியர் இல்லத்தைக் கட்ட முடியாது. ஆகவேதான் அரசிடம் பணம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுகுறித்துப் பரிசீலனை செய்கிறோம். பணம் கேட்கப்பட்டு அதுவும் வந்து இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) தற்போது அதன் மதிப்பீட்டுத் தொகை 2 இலட்சத்து 60 ஆயிரம் என்று கூறியிருக்கிறார். உறுப்பினர் சொல்வதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 9-50)

திரு. செ. முத்துசாமி : இதைப்போன்றே பல்வேறு மாவட்டங்களிலும் ஆசிரியர் இல்லங்களுக்கான கட்டடங்கள் கட்டப்படாமல், நிதியும் பயன் படுத்தப்படாமல் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆசிரியர் இல்லம் அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் சொந்த மாவட்டமான—என்னுடைய தொகுதியைச் சார்ந்த—கோவை மாவட்டத்திலேயே ஆசிரியர் இல்லம் இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றது. எனவே அங்கெல்லாம் ஆசிரியர் இல்லங்களைக் கட்டுவதற்கான உடனடி நடவடிக்கையை அரசு எடுப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆசிரியர் இல்லம் கட்டப்பட வேண்டும் என்றுதான் அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. அதைக் குறித்த நடவடிக்கையும் எடுத்து வருகிறது. அங்கங்கே கிடைக்கும் இட வசதிகள், நிதி வசதிகள் ஆகியவைகளைப் பொறுத்து துரிதமாக இந்தப் பணியைச் செய்து வருகிறோம்.

ஓய்வு கால நிதி.—பத்து அல்லது அதற்கு மேல் தொழிலாளர்கள் ஒரு நிறுவனத்தில் பணி புரிந்தால் அந்த நிறுவனத்துக்கு 1972 ஆம் ஆண்டு பணிக்கொடைச் சட்டம் பொருந்தும். அந்த ஊழியர்கள் இதன் பலனை நுகர்வர்.

பணிக்காலத்தில் இறந்தால் குடும்பத்தாருக்கு நிதி உதவி.—ஏற்கனவே நடைமுறையிலுள்ள 1974 ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.

வீடு கட்டிக் கொடுத்தல்.—வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து பயனடையலாம்.

பிராவிடண்டு பண்டு தீவிரமாக்குதல்.—பத்து தொழிலாளர்களுக்கு மேல் உள்ள நிறுவனங்களுக்கு இது பொருந்தும்.

குடும்பத்துக்கு வைத்திய வசதி.—இம்மாநிலத்தில் இ.எஸ்.ஐ. திட்டம் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டு எல்லா இடங்களிலும் 20-ம் அதற்கு மேற்பட்ட சிப்பந்திகள் பணிபுரியும் கடைகளுக்கு மற்றும் சில புதிய பிரிவுகளைச் சேர்ந்த நிறுவனங்களோடு இத்திட்டம் ஏற்கனவே நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொழிலாளர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் இ.எஸ்.ஐ. வைத்திய வசதிகள் அனைத்தும் கிடைக்க வாய்ப்பு உண்டு. இருபது நபர்களுக்கு குறைவாய் பணிபுரியும் கடைகளிலுள்ள சிப்பந்திகள் பொதுமக்களைப் போலவே அரசினர் பொது மருத்துவமனையில்தான் வைத்திய வசதி பெற வேண்டும்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Bonus Act, the Gratuity Act—all these Acts are applicable to only establishments which have more than 10 employees. May I know from the Hon. Minister whether any representation has been received from Chambers of Commerce to exclude the establishment employing less than five persons from the provisions of the Minimum Wages Order which the Government have passed on October 7, 1980 ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நிரம்ப முறையீடுகள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளைப்பற்றியெல்லாம் அரசு ஆழமாகப் பரிசீலனை செய்யும்.

THIRU J. M. MIAKHAN : Will these facilities that have been extended to various workers be extended to the Hotel Workers also, provided there are more than 10 employees in an establishment ?





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஹோட்டல் ஊழியர்களைப் பொறுத்த வரையில், "கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட்" இருக்கிறது. மற்றபடி, அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை அரசு நிர்ணயித்திருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : அமைச்சர் அவர்களின் பதிலில் "பரிசீலிக்கப்படுகிறது" என்று குறிப்பிட்டார்கள். அது குறித்து முடிவு ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா ? தொழிலாளர்கள் 10 பேராக இருந்தாலும், 5 பேராக இருந்தாலும் அல்லது 4 பேராக இருந்தாலும், ஒரே மாதிரியான தொழிலைத்தான் செய்கிறார்கள். எனவே மற்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால், அது இன்னும் எவ்வளவு காலத்திற்குப் பரிசீலனையிலேயே இருக்கும் ? அல்லது முடிவு எடுக்கப்பட்டிருந்தால், என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முடிவெடுக்கப்பட்டிருந்தால், அதை நான் இங்கே அறிவித்திருப்பேன். பரிசீலிப்பது என்று சொல்லும்போது ஆங்கிலத்தில் அதை "We are examining the issue" என்று சொல்லுகிறோம். காலத்தைச் சொல்ல வேண்டும் என்றால் எப்படிச் சொல்வது ? நாளைக்குக் காலை இருப்போமா என்பதே நிச்சயமில்லாத ஓர் உலகத்தில் எப்படி நிச்சயமாகக் காலத்தைச் சொல்ல முடியும் என்று எனக்குப் புரியவில்லை. we will expedite it. எவ்வளவு விரைவில் பரிசீலனை செய்து முடிவெடுக்க முடியுமோ அதை இந்த அரசு செய்யும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : ஐந்து ஆண்டுக் காலத்திற்கு ஆட்சியில் இருப்போம் என்ற அடிப்படையில்தான் நாம் பொதுவாக வாக்குறுதிகளைக் கொடுத்து வருகிறோம். அந்த நிலையில் "நாளைக்கு நிச்சயமில்லை" என்ற தத்துவத்தை அமைச்சர் சொல்வது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்கு ஆட்சேபனை இல்லை.

திரு. ஆ. நல்லசிவன் : வர்த்தக குமாஸ்தாக்களுக்கு இன்னும் அடிப்படையான குறைந்தபட்ச சம்பளம் வழங்குவது அமுல்படுத்தப்படாமல் இருப்பதென்பது மாநிலம் முழுவதும் இருக்கிறது. எனவே இந்தச் சட்டம் ஒழுங்காக அமுல்படுத்தப்படுவதை மேற்பார்வையிட அரசு விசேஷ ஏற்பாடு எதையேனும் செய்ய முன்வருமா ?

பார்க்கிறவர்களையெல்லாம் இந்தப் பொறுப்பிலே ஈடுபடுத்தலாம். நமக்கு எந்தவிதத்திலாவது ஒழுங்காகப் பரீட்சை நடைபெற்றாக வேண்டும். காரணம் சமுதாயத்தில் ஒழுங்காகப் பரீட்சை எழுதுகின்ற மாணவனை மீறிக் கொண்டு காப்பியடிக்கின்ற மாணவன் சென்று விடலாம் என்கிற உணர்வை, அத்தகைய ஒரு வாய்ப்பினை நாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்படுத்தக்கூடாது. அப்படி ஏதாவது தேர்வு மையங்களில் உதவி தேவையென்று யாராவது கேட்பார்களேயாகில், தேவையான உதவிகளைக் கொடுப்பதுபற்றி இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பொதுவாகத் தேர்வுக்குச் செல்கின்ற மாணவர்களுக்கு கேள்வித் தாள்களில் சில சமயங்களில் எழுகின்ற சந்தேகங்களைத் தேர்வு மையங்களில் மேற்பார்வையிடுகின்ற பேராசிரியர்கள் விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வேறு துறைகளிலே இருக்கிறவர்களை மேற்பார்வையாளர்களாக நியமிப்பது மாணவர்களின் நலனுக்கு உகந்ததல்ல. இப்படிப்பட்ட தாக்குதலைத் தவிர்க்கின்ற வகையில் மேற்பார்வையாளர்களாகச் செல்கின்றவர்கள் கத்தியை வைத்துக்கொண்டோ அல்லது கைத்துப்பாக்கியை வைத்துக்கொண்டோ மாணவர்களின் தாக்குதலைச் சமாளிக்கலாம் என்கிற முறையில் அதற்குரிய வாய்ப்பினை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட அவசியம் ஏற்படவில்லை. ஏதோ ஒரு சில இடங்களில் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றாலும் கூட, ஆசிரியர்கள் ஓரளவுக்கு அச்சம் ஒன்றுமில்லாமல் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற செய்தி பத்திரிகையில் வந்து விட்டால், ஒருவேளை பயந்துதான் போய்விடுவார்கள். (சிரிப்பு) ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அதிகமான நல்ல மாணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகவே அவர்களுடைய பாதுகாப்பின் துணை என்பது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற பாதுகாப்பை விட மிக அதிகமான பாதுகாப்புக்கு ஈடானது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

### மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம்.

* 187 வினா.—செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு மேல், மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, 15—6—1980 வரை ஊதிய நிர்ணயம் செய்யப்படாமல் இருப்பது, அரசு கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?



(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பணிவிதிகள் வெளியிட அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. பணிவிதிகள் வெளியிட்டதும் அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்படும். அதுவரை அவ்வாசிரியர்களுக்கு ரூபாய் 675—1,200 என்ற சம்பள விகிதத்தில் அடிப்படைச் சம்பளம் ரூபாய் 675 அல்லது பணிக்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு பி.டி. சம்பளத்துடன் சிறப்பூதியம் ரூ. 25-ம் சேர்த்து 1—7—1978 முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

செல்வி வ. லீலாவதி : தமிழ் நாடு அரசின் அரசாணை எண் 1091, நாள் 15—6—1978-ன் மூலம் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு தகுதி நிர்ணயம் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அரசாணை எண் 1959, கிகி, நாள் 5—10—1978 மற்றும் அரசாணை எண் 1072, நாள் 6—10—1978-ல் அவர்களின் ஊதிய விகிதங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், அவர்களுக்குப் பல்வேறு மாவட்டங்களில் பணி விதிகள் வரவில்லையென்ற காரணத்தைச் சொல்லி இதுவரை ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஊதியம் நிர்ணயம் செய்யப்படுவது மறுக்கப்படுகிறது. இதுகுறித்து அரசு விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வெளியிடப்பட்டிருக்கிற அரசாணைகளின்படி அவர்களுக்கு மேல் நிலைப் பள்ளிகளில் சம்பளம் தரப்படவில்லையென்றால், அதுகுறித்துப் புகார் தந்தால் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், அதுகுறித்த பணி விதிகள் விரைவில் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : சமீபத்தில் நடைபெற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுடைய உண்ணாவிரதப் போராட்டத்தின்போது நம்முடைய கல்வி இலாக்கா டைரக்டர் அங்கு சென்று இன்னும் 10 நாட்களில் தேர்வு பணி விதிகள் வந்து விடும் என்று கூறியிருக்கிறார். இது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியுமா ? இன்னும் 10 நாட்களுக்குள் வந்து விடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த விவரம் எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கடலூரில் ஆசிரியர் இல்லம் அமைப்பதற்காக, ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கென்று சில பைலாக்கள் இருக்கின்றன. அதன் அடிப்படையில்தான் அந்தக் குழுவிற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. அப்போது ஒருவர் மட்டுமே முயற்சி எடுத்து ஒரு அட்-ஹாக் குழு அமைத்தார்கள். அதில் ஆசிரியர்கள் யாரும் பங்கு பெறவில்லை. எனவே அந்தக் குழுவிற்கான தேர்தலைச் சட்டப்படி நடத்தி, குழுவை அமைத்து இந்தப் பணியைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து முறையான வேண்டுகோள் வருமானால், அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.

## B. Litt. (Oriental) Colleges.

* 189 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS and THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the University Grants Commission scales of pay are not implemented in B.Litt. (Oriental) Colleges ; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்கள் கீழ்திசை கல்லூரி ஆசிரியர்களுக்கு நீட்டித்து அரசு ஆணை எண் 1579, கல்வி, நாள் 24—8—1979-ல் ஆணைகள் பிறப்பித்துள்ளனர்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பல்கலைக் கழக மானியக் குழு விதித்த ஊதிய விகிதங்கள் கீழ்த்திசைக் கல்லூரிகளுக்கும் பொருந்தும் என்று அரசாணை அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அப்படி அரசாணை அனுப்பப்பட்ட பிறகும்கூட, கீழ்திசைக் கல்லூரிகள் என்று வழங்கப்படும் தமிழ்க் கல்லூரிகளில் பல்கலைக் கழக மானியக் குழு விதித்த ஊதிய விகிதங்கள் அமுல்படுத்தப்படவில்லை என்ற புகார் ஏதேனும் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பழனியாண்டவர் தேவஸ்தானத்தால் நடத்தப்படும் பழனி செந்தமிழ்க் கல்லூரியில் இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை



இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அரசிடமிருந்து அந்நிருவாகத்தினர் கிரான்ட் ஏதும் வாங்குவதில்லை என்ற காரணத்தைக் காட்டி, நாங்கள் பல்கலைக் கழக மானியக் குழு தெரிவித்த ஊதிய விகிதங்களையோ, சிபாரிசுகளையோ அமுல் நடத்தவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது குறித்து என்ன செய்யலாம் என்று அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.

## விருதுநகர் கடை சிப்பந்திகள்

* 190 வினா.—திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. த. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருதுநகர் வர்த்தக காரியஸ்தர்கள் ஐக்கிய சங்கத்திடமிருந்து, கடை சிப்பந்திகளுக்கு நியாயமான அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்றும், ஓய்வுகாலச் சலுகைகள் கிடைக்கப் பெறச்செய்ய வேண்டுமென்றும், பணிப்பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், சில கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று அரசுக்கு வந்துள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (இ) விருதுநகர் வர்த்தகக் காரியஸ்தர்கள் ஐக்கிய சங்கத்திடமிருந்து அடிப்படைச் சம்பளம், சர்வீஸ் முறையை தீவிரமாக அமுல் செய்யக் கோருதல், ஓய்வு கால நிதி கிடைக்கக் கோருதல், கடை சிப்பந்திகளுக்கு பணிக்காலத்தில் இறந்தால் அன்னாரின் குடும்பத்தாருக்கு நிதி உதவி கோருதல், வீடு கட்டிக் கொடுத்தல், பிராவிடண்டு பண்டு தீவிரமாக்குதல் மற்றும் குடும்பத்திற்கு வைத்திய வசதி கோருதல் போன்ற கோரிக்கைகள் கொண்ட மனு ஒன்று வந்தது. இக்கோரிக்கைகளின் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் வருமாறு :—

அடிப்படைச் சம்பளம்.—2—10—1980 முதல் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சர்வீஸ் முறையை அமுலாக்குதல்.—தமிழ்நாடு கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் விதிகள்படி தொழிலாளர்களுக்கு ஊழிய கால குறிப்பு அட்டை கொடுக்க வேண்டும் என்ற விதி உள்ளது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அவர்களுக்கு மட்டும்தான் இந்த நிலை என்பதில்லை. விவசாயத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் போன்றவைகள்கூட சரியாக அமுல் படுத்தப்படுவதில்லை. இதனைச் சரிபார்க்க வேண்டிய இயந்திரம் திருப்திகரமாகச் செயல்படவில்லை என்பதுதான் அரசின் கருத்து. எனவே அதிகாரிகளை அழைத்துப் பேசியிருக்கிறோம். இதையெல்லாம் இன்னும் 'இன்டென்சிவ்' செய்வதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதுபற்றி அரசு தற்போது பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**மதுரை கட்டிடம் கட்டும் தொழிலாளர்களின் கோரிக்கைகள்**

* 191 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, டிசம்பரில், மதுரையில் உள்ள கட்டிடம் கட்டும் தொழிலாளர்கள், தங்களது கோரிக்கைகளை அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்கோரிக்கைகள் யாவை ?

(உ) அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ), (இ) மற்றும் (உ) ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** விவர அறிக்கையில் தொழிலாளர்களிடமிருந்து சிமெண்ட் கண்ட்ரோல் முறையை ரத்து செய்ய வேண்டும், சிமெண்ட் கிடைக்காத காரணத்தால் கட்டிட வேலைகளைத் தொடர முடியாத நிலை இருக்கிறது ; தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலை இருக்கிறது என்றெல்லாம் கோரிக்கை பெறப்பட்டிருக்கிறது. இவைகளைக் குறித்து அரசு என்ன பரிசீலனை செய்துள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** விவர அறிக்கையின் இறுதியில் கடைசி வாக்கியத்தில் அதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். "பிற கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு, தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு அனுப்பப்படும்" என்று சொல்லியிருக்கிறோம்.

---

@ 87-190 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





(முற்பகல் 10-30)

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஒவ்வொரு கோரிக்கையையும் சொல்லி சம்பந்தப் பட்ட துறைகளுக்கு அனுப்பப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது சிமெண்ட் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. மின்சாரத்தை வழங்குவதிலும் 40 முதல் 50 சதவீதம் வரை வெட்டு இருக்கிறது. ஆகவே கட்டிடத் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாமல் கட்டிட வேலைகள் முடங்கியிருக் கின்றன. ஆகவே, ஏற்கெனவே தொடங்கப்பட்ட கட்டிடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து சிமெண்ட் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? கட்டிட வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை நேரத்தில் இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைக் குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அவைகளைப்பற்றி இந்த இலாக்கா பரிசீலனை செய்கிறது. சிமெண்டைப் பற்றிய கோரிக்கை சம்பந்தப் பட்ட இலாக்காவிற்கு அனுப்பப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதன் விளைவாக அதை விரைவாக அனுப்பி தொடர் நடவடிக்கை (ஃபாலோ-அப் ஆக்ஷன்) எடுக்க இந்த அரசு முயற்சி எடுக்கும்.

**வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் தொழிற்கூடங்களில் நியமனங்கள்**

* 192 **வினா.—திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசு கடன் அல்லது மானியம் பெற்று நடைபெறுகின்ற மற்றும் துவக்கப்படுகின்ற தொழிற்கூடங்களில், வேலைக்கு ஆள் எடுக்கின்றபோது, பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ அடிப்படையில், நியமனங்கள் தரப்படு கின்றனவா ?

(இ) இல்லையெனில், அத்தகைய நிபந்தனை விதிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) வேலைக்கு ஆள் எடுக்கின்ற பொழுது அரசுத்துறை நிறுவனங்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் நியமனங்கள் செய்கின்றன. அரசு கடனோ அல்லது

மானியமோ பெற்று நடைபெறுகின்ற அல்லது அவக்கப்படுகின்ற தனியார் தொழிற் கூடங்களில் வேலைக்கு ஆள் எடுக்கும்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை இல்லை.

(இ) மேற்படி வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் தனியார் துறையில் நியமனங்கள் செய்ய வேண்டும் என்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தொழில்துறையில் ஆய்வில் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில் அரசினுடைய கார்ப்பரேஷன், வாரியங்கள் ஆகியவற்றில் இந்தக் கொள்கையை அமுல்படுத்த அரசு முன்வருமா ? அல்லது இப்போது இந்தக் கொள்கை அவற்றிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : நான் ஏற்கெனவே சொன்னேன். அரசுத் துறை சம்பந்தப்பட்ட கார்ப்பரேஷனாக இருந்தாலும், வாரியமாக இருந்தாலும், அங்கேயும் ஏற்கெனவே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இருந்து வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : அரசினுடைய மானியம், கடன் உதவி பெற்று நடைபெறுகின்ற தொழிற்கூடங்கள், தொழிற்சாலைகள் ஆகியவைகளில் அவர்களுடைய சொந்த மூலதனத்தை விட அரசின் மூலதனம் அதிகமாக இருப்பதால், இந்தக் கொள்கையை அவர்களும் அமுல்படுத்த வேண்டும், அது ஒரு மாரல் ஆப்ளிகேஷன் (moral obligation) என்று அறிவுறுத்த அரசு முன்வருமா ? அதை அவர்கள் தடுக்கின்ற நேரத்தில் நிறைவேற்றித்தான் ஆகவேண்டும் என்று சட்டப்படி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இந்தக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்பதைப் போல ஏற்கெனவே ஒரு 'எக்சிகியூட்டிவ் டைரக்ஷன்' ஜாயின்ட் செக்டாரைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. உரிமைப் பிரச்சினைகள்.

(1) காவல் குற்றப் புலனாய்வுத் துறை சட்ட மன்ற அவைகளின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுக்கும்பொருட்டு தனது அதிகாரிகளுக்கு இடப்பட்ட இரகசியச் சுற்றறிக்கை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்ற மேலவையில் 20—2—1981 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி திரு. ம. சங்கரலிங்கம் ஆகியோர் காவல் குற்றப் புலனாய்வுத் துறை இவ்வவையின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுக்கும்பொருட்டு (Coverage of the Proceedings) தனது அதிகாரிகளுக்கு இடப்பட்ட இரகசியச் சுற்றறிக்கை குறித்து ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் அச்சுற்றறிக்கையின் வாசகங்களைப் படித்துக் காட்டி, " இச்சுற்றறிக்கை வெளியிட்டதன் மூலம் இந்த அவையை மிரட்டியிருக்கிறார்கள். அவைத் தலைவரின் அதிகார வரம்பிற்குள் தாங்கள் தலையிட முடியும் என்றும் காட்டியிருக்கிறார்கள். இப்படி ஒரு சுற்றறிக்கை வெளியிட்டதன் மூலம் அவையின் கண்ணியத்தையும், மரியாதையையும் பாதித்திருக்கிறார்கள். இது இந்த அவையின் உரிமையை மீறிய செயல் " என்று வாதிட்டார்.

திரு. சங்கரலிங்கம் அவர்கள், " பாராளுமன்ற உரிமை பெரும் அளவிற்கு மீறப்பட்டு, ஆதிக்கம் செலுத்தப்பட்டு, நிர்வாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது இந்தக் குறிப்பாணை மூலமாக என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இந்த அறிக்கை வராமலேயே கண்காணித்துக் கொண்டிருப்பதாகத்தான் என் குற்றச்சாட்டு. இப்போது அறிக்கை வந்து கண்காணிக்கப்பட்டு இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது அவை உரிமை மீறிய பிரச்சினை " என வாதிட்டார்.

இது குறித்து அரசின் விளக்கத்தை அறிந்தபின் எடுத்துக் கொள்வதாக அறிவித்திருந்தேன்.

5—3—1981 ஆம் நாளன்று இது குறித்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கையை அளித்தார்கள். அதில் " இரு அவைகளிலும் விவாதிக்கப்படக்கூடிய பிரச்சினைகளை உடனுக்குடன் தெரிந்துகொண்டு, தேவையான முழுமையான தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதென்றும், இந்த நடவடிக்கை அவையின் உரிமையைப் பாதிக்கும் என்று சி.ஐ.டி. துறை சிந்தித்தும் எதிர்பார்க்கவில்லை என்றும், அப்படி பாதிக்கப்படுவதாகக் கருதப்படுமென்று ஐயம் எழுந்ததுமே இந்தக் குறிப்பாணை திரும்பப் பெறப்

பட்டது" என்றும் கூறினார். மேலும் இம்மாதிரி எதுவும் நிகழாது என்று துறை உறுதி கூறுகிறது என்றும், எதிர்பாராதவிதமான தவறான ஐயத்தை இந்தச் செயல் ஏற்படுத்தியதற்கு சி.ஐ.டி. துறை தன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது என்றும், சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் கூறியிருக்கிறார் என்றும் கூறினார். மேலும் "இனி இந்த மாதிரியாக நடைபெறக்கூடாது என்றும், நடைபெற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் சி.ஐ.டி. துறைக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது" என்றும் கூறினார்.

இது குறித்து நான் என் தீர்ப்பை பின் அறிவிப்பதாகக் கூறினேன். அதன்பின் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் 6—3—1981 ஆம் தேதியன்று எனக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அதில் அவர்—

". . . தற்போது கூடுதல் ஐ.ஜி. கொடுத்த அறிக்கையின் முற்பகுதி தவறை நியாயப்படுத்துவதும், பிற்பகுதி இவ்வவையை ஏமாற்றுவதாகவும் அமைகிறது. எனவே இவ்விளக்கத்தை இம்மன்றம் ஏற்றுக்கொள்வது தன்னையே அவமதிப்புக்கு உள்ளாக்கிக் கொள்வதாகும். குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் அவை உரிமை மீறல் நடந்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்.

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு கடமைகள் ஆற்றுவதற்கு இந்த அவைக்கு எல்லா உரிமைகளும் உண்டு. அதன் நடவடிக்கைகளை மேற்பார்வை இடுவதற்கோ அல்லது கண்காணிப்பதற்கோ எவருக்கும் அதிகாரமோ உரிமையோ இல்லை. உத்தரவின் நோக்கம் அவர்கள் கூறுவது போல எவ்வளவுதான் நல்லதாக இருப்பினும், இது இடப்பட்டுள்ள முறை ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாக இல்லை.

அரசியல் சட்டம் இயற்றப்பட்டு அதன்படி சட்டமன்றங்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக நம் நாட்டில் இயங்கி வருகின்றன. சட்டமன்றங்களின் சிறப்பு உரிமைகள் பற்றி அரசுத் துறை குறிப்பாக குற்றப் புலனாய்வுத் துறை அறியாமல் இருந்தது வியப்பளிக்கிறது.

சட்டமன்ற மேலவைத் துறையிலிருந்து எந்த சி.ஐ.டி. அதிகாரிக்கும் அனுமதிச் சீட்டு வழங்கவில்லை. அவைத் தலைவரின் அனுமதியின்றி அவையில் சி.ஐ.டி. அதிகாரிகள் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டும் எனக்கு இதுவரை வரவில்லை. சி.ஐ.டி. துறை இதற்கு வருத்தம் தெரிவித்து இனி இம்மாதிரி ஏதும் நிகழாது என உறுதி கூறியுள்ளதாலும், இம்மாதிரியாக நடைபெறக்



கூடாது என்றும், நடைபெற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்றும் சி.ஐ.டி. துறையினருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாலும், இதனால் இந்தச் சுற்றறிக்கைக்கு அரசு நேரடிப் பொறுப்பல்ல என்பதும் இந்தச் சுற்றறிக்கையை நியாயப்படுத்த அரசு முயலவில்லை என்பதாலும், அதிலுள்ள தவறை ஒப்புக்கொண்டு மேலும் இவ்விதம் நிகழ்ந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டிருப்பதாலும் இதில் மேற்கொண்டு நடவடிக்கை தேவையில்லை என்று கருதுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள், தாம் நேற்று சட்டமன்ற மேலவைக் கூட்டத்திற்கு வரும்போது ஒரு ஆட்டோ-ரிக்ஷா. . .

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, தங்களுடைய முதல் தீர்ப்பைப் பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஆனால் அரசு சார்பிலே குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் ஐ.ஜி. இந்த அவையின் முன்னவர் வழியாக அளித்துள்ள விளக்கத்திலே, அவர்களுடைய செயல் நல்லெண்ணத்திலே அமைந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பது பிரச்சினைக்குரியது. இந்தச் சுற்றறிக்கையைப் பிறப்பித்தவர்களுக்கு, இரு அவைகளையும் மறைமுகமாகக் கண்காணிப்பது என்பது பெரிய தவறு என்று தெரிந்திருக்கிறது என்று குறிப்பாணையின் ஐந்தாவது பாராவின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலையில் "நல்லெண்ணத்தோடு பிறப்பிக்கப் பட்டதாகச்" சொல்லுவது "எதிர்பாராத விதமாக தவறான ஐயத்தை இந்தச் செயல் ஏற்படுத்தியது" என்று குற்றப் புலனாய்வுத் துறை ஐ.ஜி. இந்த அவையின் முன்னவர் வழியாக விளக்கம் தருவது இந்த அவையை மேலும் அவமதிப்பதாகும்; இந்த அவையின் அறிவாற்றலை, ஆழ்ந்த அறிவை எள்ளி நகையாடுவதாக அமைந்துள்ளது. குற்றப் புலனாய்வுத் துறை போலீசார் திட்டமிட்டு தங்களுடைய அனுமதியைக் கேட்காமல் சுற்றறிக்கையை விட்டது பெரிய தவறு. "அந்தச் செயல் தவறான ஐயத்தைத் தந்துவிட்டது" என்று உரிமைப் பிரச்சினையாக வந்த பிறகு விளக்கம் தருவது என்பது இந்த அவையை மேலும் அவமானத்திற்கு ஆளாக்கி "வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது" போலாகும். எனவே வருத்தம் தெரிவிக்க அறிவுறுத்தியதால் அரசு இந்தச் செயலுக்கு உடந்தையாக இருப்பதைக் கண்டித்து, இந்த அவையின் மானத்தைக் காக்கும் முறையில் அரசின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

நடவடிக்கை களைக் குறிப்பு எடுக்கும் பொருட்டு



திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே தங்களுடைய தீர்ப்பு இந்த அவையினுடைய உரிமைகளைக் காக்கின்ற உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தியிருக்கிறது என்பதற்காகத் தங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அரசுத் தரப்பைப் பொறுத்த வரையில், இதற்காக சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து பெற்றிருக்கிற பதில் இந்த அவையின் முக்கியத்துவத்தை, மரியாதையைக் காக்கின்ற அளவிலே அமையவில்லை என்று வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட துறையினுடைய உயர் அதிகாரி, செயலாளர் அல்லது சம்பந்தப்பட்ட துறையின் பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் பொறுப்பேற்று இந்த அவைக்கு மதிப்பு தந்து பதில் அளித்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமல், "இந்த அவையில் இருப்பவர்கள் தவறாக நினைத்தால் அதற்காக வருந்துகிறேன்" என்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரி கொடுத்திருக்கிற பதிலில் தெரிவித்திருப்பது, அந்தச் சுற்றறிக்கையைக் கொடுத்தது நியாயம் என்ற உணர்வை வெளிப்படுத்துகிற முறையில் அமைந்திருக்கிறது. அதையே அரசு சார்பில் படித்து அதுதான் எங்களுடைய பதில் என்று அறிவித்திருப்பது இந்த அவையின் உணர்வுகளையும், மரியாதையையும், உரிமைகளையும் காக்கின்ற ஒன்றாக அமையவில்லை. ஆகவே அதைக் கண்டிக்கிற வகையிலே எங்களுடைய உணர்வுகளைத் தெரிவிக்க எங்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

* THIRU A. R. DAMODARAN : Sir, I wish to bring to your kind notice that, while I am grateful for your decision and while we accept your ruling, this circular has been issued by the Special Branch of the Criminal Investigation Department. If this had been issued by the law and order enforcement machinery with your consent, there might have been some excuse. Secondly, in the letter that has been written by the Additional Inspector-General of Police, it is clearly not accepted that any fault has been done. In that letter, they have only stated that because this circular has created misapprehension and a mistaken doubt in the minds of the Legislators, the circular is being withdrawn. We do not want, Sir, anybody else than the Hon. Chairman to sit in judgment over the doubts that Members may have in the House. I, therefore, feel that, while your ruling contains all the matters necessary to enforce the dignity of this





House, I must express my deep agony and pain that no apology has been tendered by the Superintendent of the Criminal Investigation Department, the Criminal Investigation Department which has sent this circular. Although it has been my principle never to stage a walk-out in this House, because this is clearly a matter that is entirely non-political, which affects the dignity of the Members and which is a direct affront to all the legislative privileges that have been guaranteed under the Constitution, I must express my deep regret at having been forced to the necessity of walking out of this House in protest against the attitude of the Government which has not forced this Superintendent to express his apology in clear and precise terms.

(உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.)

(மு.ப. மணி 10-10)

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பு இந்த அவையினுடைய கௌரவத்தைப் பாதுகாக்கின்ற அளவுக்கு இருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த அரசாங்கத்தினுடைய விளக்கமும், அரசாங்கத்தின் அணுகு முறையும் சரியாக இல்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சுற்றறிக்கையிலே, "Secret, discreet, without disclosing their identity, leading to an embarrassing situation" என்றெல்லாம் சொல்லப்பட்டுள்ளது. இந்த சர்குலரை உருவாக்கியவர்கள் மனதில் இந்தச் செயல் அவையின் உரிமையை மீறுவதுபோன்ற எண்ணம் அப்போதே இருந்திருப்பதன் காரணமாகத்தான், "உங்கள் அடையாளத்தைக் காட்டிக்கொள்ளாதீர்கள், உங்களை யார் என்று காட்டிக்கொள்ளாதீர்கள் ரகசியமாகச் செய்யுங்கள்" என்றும், "இல்லாவிட்டால் தர்மசங்கடமான நிலைமைகள் ஏற்படும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். தர்மசங்கடமான நிலை ஏன் ஏற்படுகிறது? அவையின் உரிமையை மீறி நடப்பதை அவர்கள் உணர்ந்திருந்ததனால்தான் அந்த நிலை ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இப்போது தர்மசங்கடமான நிலை அரசுக்கு மட்டுமல்ல, இந்த அவைக்கும் ஏற்பட்டிருக்கிறது, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சட்டவிரோதமான காரியம் செய்திருக்கிறார்கள். அவர்கள் தரப்பிலே தப்பு நடந்திருக்கிறது என்று

ஒத்துக்கொள்ளாமல் அவர்கள் சொல்வதை நியாயப்படுத்துவதுபோல அரசும் இருப்பதாக நான் கருதுவதால், எங்கள் கட்சியின் சார்பில் நானும் வெளிநடப்பு செய்கிறேன்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் வெளிநடப்பு செய்தார்.)

THIRU J. M. MIAKHAN : Sir, on behalf of my Party, the Indian Union Muslim League, I fully associate myself with the sentiments expressed by the hon. Members, Thiru Sankaralingam, Thiru Ramamoorthy and Thiru Damodaran and I also walk out.

(உறுப்பினர் திரு. ஜெ. எம். மியாகான் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.)

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உங்களது தீர்ப்புக்கு எந்தவிதமான வேறுபட்ட கருத்தும் சொல்லவில்லை. ஏதோ காவல் துறையினருக்குக் கடமை இருந்தது போலவும், அந்தக் கடமையை நிறைவேற்ற வந்தது போலவும் சொல்லி, உறுப்பினர்கள் மத்தியிலே அந்தச் செயல் சந்தேகத்தையும், சங்கடத்தையும் உண்டாக்குமேயானால், அதற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் சொல்லியிருப்பது, அரசியல் சட்டத்திலே வழங்கியிருக்கின்ற மேலவை உறுப்பினர்களின் உரிமையை மீறியிருப்பதாகும். அதிகாரிகள் அவையை அவமதித்திருப்பதாக நான் கருதுகிறேன். முதலில் இது தங்கள் கடமை இல்லை என்பதை ஒப்புக்கொண்டு, இல்லாத ஒன்றைச் செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ளாத அளவிலே, இப்படி மேலும் சொல்லியிருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே அந்தச் செயலை நான் கண்டித்து, அதைக் கண்டிக்கும் வகையிலே நானும் இந்த அவையிலேயிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவையிலிருந்து வெளி நடப்பு செய்தார்)

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் துறையில் ஒரு 'technical term' பயன்படுத்துவார்கள். 'Motive' என்ன என்பதைச் சொல்லி, அந்தக் குறிப்பிட்ட காவல் துறை அதிகாரி அனுப்பிய ஆணையில், அந்த ஆணைக்கான 'Motive' என்ன என்பதைச் சொல்லி இந்த அவையைப்பற்றிப் புரிந்துகொண்டு சொல்லியும். 'Motive' -ஐ விளக்கியும் அவையினுடைய உணர்வுகளை வெளிப்படுத்திய பிறகுங்கூட, அந்த 'Motive' -ஐ நியாயப்படுத்துகின்ற வகையிலே அந்த அதிகாரி பதில் கொடுத்திருக்கிறார் அந்தப் பதில் எங்களுக்குத்



திருப்தி அளிக்காததால், அந்தப் பதிலுக்கு எங்கள் வருத்தத்தையும், எதிர்ப்பையும் எங்கள் அணியின் சார்பில் தெரிவித்து இந்த அவையினருடன் கலந்துகொண்டு நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(உறுப்பினர் திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் அவையிலிருந்து வெளி நடப்பு செய்தார்.)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, இலாகாவில் உள்ள. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அங்கத்தினர் அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : என்னிடத்திலே வரும்போது சொல்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்படி ஏன் உறுப்பினர் அவர்கள் நினைக்கிறார்கள் ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : எப்போதுமே அப்படித்தான் வருகிறது. நானும் சுருக்கமாகவே சொல்கிறேன். தலைவர் அவர்களே, தங்களின் தீர்ப்பை நான் வரவேற்கிறேன். அவர்கள் தீர்ப்பிலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். காவல் துறையினர் இங்கே வந்து ஆராய்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தீர்ப்பைப்பற்றி விளக்கம் சொல்லக்கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நேற்றையதினம் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் கவனத்திற்கு இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கொண்டுவந்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப்பற்றித் திரும்பவும் பேசக் கூடாது. இந்தப் பிரச்சினையைப்பற்றி முடிவு படுத்தித்தான் பேச வேண்டும். திரும்பவும் அந்த விவாதத்திற்கு, பின்னுக்குப்போகக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, என்னுடைய சந்தேகத்தைத்தான் சொல்லிக்கொள்கிறேன். இப்போதுகூட அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் இந்த அவையைக் கண்காணித்துக்கொண்டிருப்பதாக நான்

கலைவர் குற்றப் புலனாய்வுத் துறை சட்டமன்ற அவைகளின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுக்கும் பொருட்டு தனது அதிகாரிகளுக்கு இடப்பட்ட இரகசியச் சுற்றறிக்கை குறித்து.



சந்தேகப்படுகிறேன். இங்கே அதைப்பற்றி வருத்தம் சொல்லப்படுகிறதே தவிர, அந்த நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இந்த விவாதம் ஆரம்பித்த பிறகு, ஒருவர் எழுந்து ஓடினார். நான் பார்த்தேன். அவர் யார் என்று எனக்குச் சொல்ல முடியவில்லை. இப்படிப்பட்ட அறிக்கை அவையினர் மத்தியிலே வைக்கப்பட்ட பிறகும், அதையே தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு அதற்கு என் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டு நானும் வெளி நடப்புச் செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.)

(2) மேலவை உறுப்பினர் திரு. ஜே. எம். மியாகான் அவைக்கு வரும்போது தாக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் நேற்று தாம் சட்டமன்ற மேலவைக் கூட்டத்திற்கு வரும்போது ஒரு ஆட்டோ ரிக்ஷா அமர்த்தியதாகவும், அவர் கோட்டைக்கு வருவதற்கு அதிகப் பணம் தன்னிடமிருந்து கோரியதாகவும், தாம் சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்றும் தமது கடமையை ஆற்ற கோட்டைக்குச் செல்ல வேண்டியிருப்பதாகவும் கூறியபோது, இன்னும் 2, 3 பேர் அங்கு வந்து தன்னை ஆட்டோ ரிக்ஷாவிலிருந்து கீழே இறங்கும்படி செய்து வன்முறையில் ஈடுபட்டதாகவும், அப்போது காவல் துறை ஊழியர் ஒருவர் தன்னைப் பாதுகாத்ததாகவும் எனக்கு அறிக்கை கொடுத்துள்ளார். இது குறித்து அவர் நேற்றே அவையிலே இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்கள் அதுகுறித்து விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்கள்.

பொதுவாக சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்ற முறையில் கடமை ஆற்றும்போது எவ்விதமான தடங்கலோ, அச்சுறுத்தலோ இருந்தால் அது அவை உரிமை மீறிய செயலாகும். இது மிகவும் கண்டிக்கத் தக்கது. ஆகவே இது குறித்து தீவிர பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.





## 3. கவன ஈர்ப்பு.

தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் உள்ள செயின்ட் ஆன்ஸ் மாணவர் மேல்நிலைப் பள்ளி கடந்த இரண்டு வாரங்களாக மூடப்பட்டிருப்பது குறித்து.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் உள்ள செயின்ட் ஆன்ஸ் மாணவர் மேல்நிலைப் பள்ளி கடந்த இரண்டு வாரங்களாக மூடப்பட்டிருப்பதும், அதன் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்தும்."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (மாண்புமிகு கல்வி அமைச்சர் சார்பில்) : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

## 4. அறிவிப்பு.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்குத் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு.

(2) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/81)

---

@ 181 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 31/81)

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டது :

மார்ச் 30—நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.

மார்ச் 31—நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலுரை.

ஏப்ரல் 1 முதல் 19 வரை—கூட்டம் இல்லை.

ஏப்ரல் 20—சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

ஏப்ரல் 21— ”

ஏப்ரல் 22—நெடுஞ்சாலை, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சித் திட்டங்களும்.

ஏப்ரல் 23—மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு.

ஏப்ரல் 24—தொழில்.

ஏப்ரல் 25—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம்.

ஏப்ரல் 26—ஞாயிறு விடுமுறை.

ஏப்ரல் 27—கல்வி.

ஏப்ரல் 28— ”

ஏப்ரல் 29—உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் தொழிலாளர் நலன்.

ஏப்ரல் 30—காவல் துறை.

மே 1 முதல் 11 வரை—கூட்டம் இல்லை.

மே 12 முதல் 15 வரை—அரசின் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

மேலவை வழக்கம் போல் காலை 9-30 மணி முதல் பிற்பகல் 12-30 மணி வரை நடைபெறும்.





(முற்பகல் 10-30)

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (என் 2) சட்ட முன்வடிவு

(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 30/1981)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (என் 2) சட்ட முன் வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 30/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ”

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (என் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 30/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்)”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (என் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 30/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும் ”

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (என் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 30/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும் ”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 182–184 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1981).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ” என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும் ”
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும் ”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 185–195 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.





6. 1981-82ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்— தொடர்ச்சி.

* திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நிதிநிலை அறிக்கையில் வறட்சி நிலைமை பற்றியும், துயர் துடைக்கும் பணிகள் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழ் நாட்டில் முன்னுரிமை தரப்பட வேண்டிய மிகப் பெரிய பிரச்சினையாக வறட்சி நிலைமை இருப்பதால், துயர் துடைப்புப் பணிகள் செம்மையாக நடைபெற்று, அதனுடைய பலன் நேரடியாக மக்களுக்குக் கிடைக்கின்ற வகையில் இருக்க வேண்டும். இடையிலே இடைத்தரகர்கள், கான்ட்ராக்டர்கள் அல்லது அதிகாரிகளுடைய தவறுகள் போன்றவற்றின் மூலமாக ஏழை மக்கள் பாதிப்பிற்கு ஆளாகாமல் அல்லது ஏழை மக்களுக்கு நிவாரணம் கிடைக்காமல் முட்டுக்கட்டை போடும் நிலைமைகளை எல்லாம் உருவாக்காமல் அல்லது அப்படி உருவாக்கியிருந்தால், அவற்றை நீக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறதென்று சொல்லி, இது குறித்து அரசு விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஊராட்சி மன்றங்களுக்கு நாம் தேர்தல்கள் நடத்தவில்லை. அந்த அமைப்புகள் இயங்கவில்லை. பல இடங்களிலே, பெருவாரியான இடங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கவில்லை. ஆக ஊராட்சி ஒன்றியங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இயங்காத நிலையில் மக்களுடன் தொடர்பு கொள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நிலையில், அதிகாரிகளே அவற்றையெல்லாம் ஏற்று நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களால் காரியங்கள் ஒழுங்காகச் செய்யப்படுகின்றன என்பதைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிலையை ஒட்டி அரசின் கவனத்திற்கு மற்றொரு கருத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். வருகின்ற மாதங்களில் தானியப் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அல்லது தானியங்களுடைய விலை மிக அதிக அளவிற்கு, கட்டுக்கடங்காத அளவிற்குப் போகாமல் பார்த்துக்கொள்ளுவது அரசின் கடமை. அதற்காக அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது மிக மிக முக்கியமானதென்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தற்போது அரிசிக்கு ஆந்திர மாநிலத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மின்சாரத்திற்குக் கேரள மாநிலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். தண்ணீருக்குக் கர்நாடக மாநிலத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆக மக்களுடைய வாழ்க்கையில் இன்றியமையாத இந்த அம்சங்களையெல்லாம் அண்டை மாநிலங்களிலிருந்து எதிர்

பார்க்கும் சூழ்நிலையில், வறட்சியின் பாதிப்பு அதிகமாக ஏற்படும். ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் ஏறாமல் பார்த்துக்கொள்ளுவது அரசின் கடமையாகும்.

அடுத்து, சாலை வசதிகள்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கிராமச் சாலைத் திட்டம் என்று செயல்படுத்துகிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சாலைகளில் வெறும் கருங்கல் ஜல்லியைத்தான் போடுகிறார்கள், தார் போடுவதில்லை. இன்று இந்தியாவில் நூற்றுக்கு எண்பது பேர் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட கிராமங்களில் உற்பத்தியாகும் பொருள்களையெல்லாம் மார்க்கெட்டுக்கு எடுத்துச் செல்லப் பயன்படும் இணைப்புச் சாலைகளுக்குத் தார் போடுவது அவசியம். எனவே, அந்தச் சாலைகளில் கருங்கல் ஜல்லி போடுவதற்குப் பதிலாக தார் போட வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அவைகளை தார்ச் சாலைகளாக மாற்றும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலை வாய்ப்பு பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஜனவரி மாதத்தில், ஆளுநர் அவர்கள் உரையில் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலையில்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பின், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை தர அரசு நடவடிக்கை எடுக்குமென்று ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அரசின் சார்பாக ஓர் உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. அந்த உறுதிமொழியை நிறைவேற்றும் வகையிலே நிதிநிலை அறிக்கையிலே குறிப்புகளோ அல்லது திட்டங்களோ இல்லை. ஒரு குடும்பத்திலே ஒருவருக்கு வேலை என்ற அடிப்படையிலே திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்தாத வகையிலே, எப்படி ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

தமிழகத்தின் சார்பாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற ஒரு புத்தகத்தை அரசு எங்களுக்கு வழங்கியிருக்கிறது. அதிலே பக்கம் 44இலே, "ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கேனும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்கிற நோக்கத்துடன் புதிய திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும், இதற்கு முதற்கட்டமாக, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் இனம் காணப்பட்டு, அக்குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவருக்காவது வேலை வாய்ப்பு அளிக்கப்படும். முதற்கண், இத்திட்டம் முன்னோடியாக நிறைவேற்றப்பட்டு, அதன்பின் மாநிலம் முழு



வதிலும் செயற்படுத்தப்படும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக ஆளுநர் அவர்கள் உரையிலும், ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட நகலிலும் திட்டவட்டமாக வேலைவாய்ப்புபற்றிக் குறிப்பிட்டு, முதற்கட்டமாக ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு, அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுமென்று உறுதி கொடுத்துவிட்டு, அதற்கான திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் இல்லாததால், அதற்காக என்னுடைய ஏமாற்றத்தை வெளியிட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலும், ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட நகலிலும் அளிக்கப்பட்ட வாக்குறுதியைச் செயல்படுத்த, முதற்கட்டமாக வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களில் ஒருவருக்காவது வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காக திட்ட விவரங்கள் நிதிநிலை அறிக்கையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உலகத் தமிழ் மாநாட்டை நாம் கோலாகலமாக நடத்திய நேரத்தில், தமிழகத்தின் பெருமையை உலகத்திற்கெல்லாம், வெளிநாடுகளுக்கெல்லாம் பறை சாற்றிக்கொண்டிருந்த நேரத்தில், ஜனவரி மாதத்தில் ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தியின் தலைப்பு, 'ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டத்தில் தமிழகத்திற்கு முதலிடம்' என்பதுதான். அப்படித் தலைப்பிட்டு 4—1—1981 தினமணியில் செய்தி வந்தது. ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்பது மத்திய அரசினுடைய ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட நகலிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று ஆதாரபூர்வமான அந்த விவரங்களைச் சேகரித்து, பத்திரிகையிலே செய்தியாக வந்துள்ளது. இப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்தக் கட்சி மட்டும்தான் இதற்குப் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் சிந்தித்துப் பார்த்து, வேதனைப்பட வேண்டிய பிரச்சினை இது. ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டத்தில் இந்தியாவில் உள்ள அத்தனை மாநிலங்களில் தமிழகம் முதலிடம் வகிக்கிறதென்றால், அதற்கு இந்த மாநிலத்திலுள்ள அத்தனை கட்சிகளும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அத்தனை கட்சிகளும் இதைச் சவாலாக ஏற்றுக்கொண்டு, அந்த அவல நிலையை மாற்ற தங்களைத் தயார்க்கொண்டு, இணைந்து செயல்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். அந்த வகையிலே தமிழகத்தில் ஏழ்மையை ஒழிக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் மத்திய அரசிடமிருந்து கணிசமான அளவிற்கு உதவி பெற, அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டுமென்று நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூறிய கருத்தை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அப்படிப்

[திரு. சி. ரா. வெங்கடாசலம்] [1971 மார்ச் 28

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-30)

பட்ட ஏழ்மை நிலைமை தமிழகத்திலே வரக்கூடாது. ஏழ்மையிலும், வறுமையிலும் தமிழகம் முதலிடம் என்கிற நிலை வரவே கூடாது. நான் ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது ஒரு கருத்தைச் சொன்னேன். Developmental Activities and Non-Developmental Activities பற்றிச் சொன்னேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் கூட தமிழில் சொல்லுமாறு கேட்டார்கள். நான் சிந்தித்துப் பார்த்தேன். Developmental Activities என்று சொன்னால் வளர்ச்சிப் பணிகள் என்றும் Non-Developmental Activities என்றால் கவர்ச்சிப் பணிகள் என்றும் சொல்லலாம் என்று தோன்றியது. இப்படி இந்த இரண்டையும் வளர்ச்சிப் பணிகள், கவர்ச்சிப் பணிகள் என்று பிரித்துப் பார்த்தோம் என்றால், வளர்ச்சிப் பணிகளுக்குத்தான் முதலிடம் தேவை. கவர்ச்சிப் பணிகளுக்கு முதலிடம் தேவையில்லை. ஓர் அரசுக்கு கவர்ச்சிப் பணிகள் கூட அவ்வப்போது அவசியம்தான், அறவே கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டியது வளர்ச்சிப் பணிகளுக்குத்தான். கவர்ச்சிப் பணிகளுக்கு அல்ல. வளர்ச்சிப் பணிகளுக்கு அப்படி முன்னுரிமை கொடுக்காததால்தான். இன்றையதினம் வறுமையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்ற அவச்சொல் ஏற்பட்டிருக்கிறது.

மாநில அளவிலே இன்றையதினம் திட்டக் குழு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. பல்வேறு துறைகளிலே அனுபவம் உள்ள பெரியவர்கள் மாநிலத் திட்டக் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதுகுறித்து நான் அரசுக்கு ஒரு ஆலோசனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டக் குழு மாநில அளவிலே மட்டுமல்ல, மாவட்ட அளவிலே, தாலுக்கா அளவிலே அமைக்கப்பட வேண்டும். பரவலான அடிப்படையில் பணிகள் அமைய வேண்டுமென்று தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் சொல்லியிருக்கிறார்கள். கிராமப்புறங்கள் முன்னேற வேண்டுமென்று நாம் உண்மையிலேயே ஆசைப்படுவதாக இருந்தால், அந்த முன்னேற்றத்திற்கான திட்டங்கள் கிராமங்களிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமேயொழிய, சென்னையிலிருந்து கிராமப்புறங்களுக்குச் செல்லுவதாக இருக்கக்கூடாது. அந்தக் கண்ணோட்டத்தில் வட்டார அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கப்பட்டால் தான் கீழ் மட்டத்திலே பல்வேறு துறைகளிலே அனுபவம் பெற்றவர்களாக



1981 மார்ச் 28] [திரு. சி. ரா. வெங்கடாசலம்]

இருக்கக்கூடிய பெரியவர்கள் தங்களுடைய அனுபவங்களையெல்லாம் ஆலோசனைகளாகச் சொல்லி திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த அரசுக்கு உறுதுணை செய்வதாக அது இருக்கும். ஆகவே வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இந்தத் திட்டக் குழுக்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த அரசை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோர் நலன் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இது குறித்து ஒன்றை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த இனத்துக்கு நாம் கணிசமான தொகையை, அதிகமான தொகையை ஒதுக்குகிறோம். கல்வித் துறையிலும் வேலை வாய்ப்பிலும் இவர்களுக்காக முன்னுரிமை அளித்து குறிப்பிட்ட சதவிகிதம் இடம் அளிக்கிறோம். தமிழக அரசு இப்போது 50 சதவிகிதம் என்கிற அளவில் இவர்களுக்கான வாய்ப்புகளை உயர்த்தி இட ஒதுக்கீடுகளை அதிகப்படுத்தியிருக்கிறது. இது பாராட்டத் தக்க ஒன்று. ஆனால் அதேசமயத்தில் இது சம்பந்தமாக சில இடங்களிலிருந்து சில கோரிக்கைகள் இப்போது எழுந்துள்ளன. பிற்பட்டவர்களுக்கு என்று மொத்தமாகக் குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கி முன்னுரிமை அளிக்கும்போது, இந்த வாய்ப்பினால் பிற்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்ற குறிப்பிட்ட சில ஜாதியினர்தான் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் வேறு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கையில் அதிகமான அளவில் இருந்தால் கூட, அவர்கள் இந்த வாய்ப்புக்களை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே பிற்பட்ட பிரிவினருக்குள்ளேயே ஜாதி அடிப்படையில் பிரதிநிதித்துவம், இட ஒதுக்கீடு போன்றவற்றிற்கு வழிவகை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இப்போது வைத்திருக்கிறார்கள். அண்டை மாநிலங்களிலும் அந்த அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்திருப்பதை அவர்கள் மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். இது விஷயமாக அரசுக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்றைக்கு மத்திய அரசால் Backward Classes Commission என்கிற ஒரு குழு அமைக்கப்பட்டு அது தன்னுடைய அறிக்கையையும் தந்திருக்கிறது. அது ஒருபுறம் இருக்கட்டும். அந்த அறிக்கை வந்த பிறகு, அதுபற்றி ஆராயலாம். ஆனால், அதில் சில பாதகமான கருத்துக்கள் இருப்பதாகக் கூடச் சொல்கிறார்கள். நான் இந்த சந்தர்ப்பத்தில் மாநில அரசுக்கு ஒன்றைச் சொல்கிறேன். தமிழக அரசு ஒரு குழுவினை அமைக்க வேண்டும். அந்தக் குழு மாநில அளவிலே பிற்பட்டோருக்காக நாம் கொடுத்திருக்கின்ற வாய்ப்புகளை, உரிமைகளை, ஒதுக்கீடுகளை எந்தெந்த பிற்பட்ட ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் பயன்படுத்தி முன்னுக்கு வந்திருக்கிறார்கள்,

எந்தெந்த ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் முன்னுக்கு வராமல் இன்னும் பின் தங்கியே இருக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். Backward among the Backward என்கிற அடிப்படையில் யார் யார் அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்து, சர்வே செய்து, அந்தக் குழு அரசுக்கு ஓர் அறிக்கை கொடுக்க வேண்டும். இதை அமைப்பதற்குரிய அதிகாரம் அரசிடம் இருக்கிறது. ஆகவே, இந்த மாநில அரசு இதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உண்மை நிலை என்ன என்பதை நாம் அறிந்தால், ஜாதி வாரியாகப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கிற கோரிக்கையில் உள்ள நியாயத்தை நாம் உணர்ந்து அதற்கேற்ற முறையில் நடவடிக்கை எடுக்க முடியும். காரணம் இல்லாமல் எப்போதுமே கோரிக்கைகள் வராது. கொடுக்கப்பட்ட வாய்ப்புகளைக் கூட பயன்படுத்தாமல் இன்னும் ஒருசிலர் பின்தங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக இது அரசால் பரிசீலிக்கப்பட வேண்டிய மிக மிக முக்கியமான கோரிக்கை.

அதோடு மாத்திரமல்லாமல், சமீபத்தில் இந்தியப் பிரதமர் அவர்கள் கூட டில்லியில் இதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். பிற்பட்டோர் குறித்து அமைக்கப்பட்ட கமிஷன் அறிக்கையை அரசுக்குக் கொடுக்கின்ற நிறைவு விழாவிலே பாரதப் பிரதமர் அவர்கள் பேசும்போது, "கோரிக்கைகள் அரசுக்கு வருவதில் தவறு இல்லை. தங்களுக்கு அநீதி ஏற்பட்டால் ஏற்பட்ட அநீதியைப் போக்கத்தான் கோரிக்கைகளைப் பாதிக்கப்பட்டவர்கள் வைக்கிறார்கள். இல்லாததை உருவாக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை. ஆகவே இதையெல்லாம் அரசு கவனமாக அணுக வேண்டியிருக்கிறது" என்பதை அரசியல் சட்டத்திலே இருக்கிற மேற்கோள்களை எல்லாம் கோடிட்டுக் காட்டிப் பேசியிருக்கிறார்கள். அந்த வகையில் தமிழக அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினருக்கு மலிவு விலையில் உணவுப் பண்டங்கள் வழங்குவதை வரவேற்கிறேன். காவல் துறையில் இருப்பவர்கள் நாட்டிற்காக தங்கள் உயிரைக் கூட எந்த நேரத்திலும் அர்ப்பணிக்கத் தயாரான நிலையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். அவர்களுக்கு இந்தச் சலுகையை அளித்ததை உள்ளபடியே எல்லோரும் வரவேற்கிறார்கள். அதேநேரத்தில் இதே சலுகை இவர்களையொத்த ஏழையெளிய நலிந்த பிரிவினருக்கும் அளிக்கப்பட வேண்டும். இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எல்லாம் இந்தச் சலுகையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இந்தச் சலுகையைக் கொடுங்கள் என்று கேட்டுக்



கொண்டிருக்கிறோம். அப்படி இந்த அரசு ஏழையெளிய நலிந்த பிரிவினருக்கு மலிவு விலையில் உணவுப் பண்டங்களை அளிப்பது என்பது அவர்களுக்கு மன நிறைவைக் கொடுக்கிற ஒரு நல்ல செயல். ஆனால் அவர்களிலேயும் கூட அரசு ஊழியர்கள் என்று எடுத்துக்கொண்டால், மிகவும் குறைந்த சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய கடைநிலை ஊழியர்கள் இருக்கிறார்கள். அது போல் ஆசிரியர்களில் மிகவும் குறைந்த சம்பளம் பெறக்கூடியவர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் உடனே கொடுக்க முடியாவிட்டால் கூட, இப்படிப்பட்ட அடித்தளத்தில் இருக்கிற குறைந்த சம்பளம் பெறுகிற அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முதலில் வழங்க வேண்டும். படிப்படியாக, அடுத்த கட்டமாக மற்றவர்களுக்குச் செயல்படுத்தலாம். அதுபோல் சமுதாயத்திலே மிகவும் குறைந்த வருமானம் உள்ள ஏழையெளிய வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற சாதாரணப் பாட்டாளி மக்களுக்கு மலிவு விலையில் அரிசி போன்ற உணவுப் பண்டங்களை வழங்குவது என்பது ஒரு Social Justice ஆக, சமூக நீதியாக அமைய முடியும். சமுதாயத்தில் மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்களுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு, அன்றாடம் வேலை செய்து பிழைப்பவர்களுக்கு, ஒரு வேளை உணவுக்குக் கூட வழியில்லாது இருப்பவர்களுக்கு எல்லாம் மலிவு விலையில் அரிசி போன்ற உணவு தானியங்களை அரசு அளிப்பது என்பது மிகவும் புரட்சிகரமான காரியமாகச் சமுதாயத்தில் இருக்கும். மக்களும் இதைப் பெருமனதுடன் பாராட்டி மகிழ்வார்கள். அந்த வகையில் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்குச் சலுகை என்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அரசு அளிக்கக் கூடிய நன்மைகளுக்கும், சலுகைகளுக்கும் எப்போதுமே நாங்கள் நன்றி செலுத்துவது உண்டு. அரசு கொடுக்கின்ற நன்மை பனையளவு இருந்தாலும் சரி அல்லது தினையளவாக இருந்தாலும் சரி, நாங்கள் பாராட்ட, நன்றி செலுத்தப் பின்வாங்கியதே இல்லை. அரசாங்கம் தினை அளவு தான் சலுகைகளை அறிவித்திருக்கிறது என்றால் கூட, நாங்கள் அதற்காக அரசாங்கத்துக்கு நன்றி சொல்ல மறக்கவே மாட்டோம். அவ்வாறு அளிக்கப்பட்ட தினையளவு சலுகையிலே ஒன்றாகிய அகவிலைப் படி உயர்வு பற்றி ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தினை தினை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். தினை என்றால் சுவையாக இருக்கும் என்ற பொருளில் அவ்வாறு உறுப்பினர் சொல்கிறாரா ?

(முற்பகல் 10-40)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நான் தேன் என்று சொல்லவில்லை. சலுகைகளின் எண்ணிக்கை அளவில் குறைந்தவை என்ற காரணத்தாலும், சிறியவை என்ற காரணத்தாலும், "தினை" போன்றது என்றுதான் குறிப்பிட்டேன்.

அகவிலைப் படியைப்பற்றி நான் குறிப்பிட்டேன். இந்த அரசைப் பொறுத்த வரையில், அகவிலைப் படியை அதிகரிக்கும்போது, அத்தகைய அறிவிப்பை எந்தத் தேதியிலிருந்து செய்கிறதோ அந்தத் தேதியிலிருந்து அகவிலைப்படி உயர்வு அமுலுக்கு வரும் என்றில்லாமல், முன்தேதியிட்டு—அதாவது 2, 3 மாதங்களுக்கு முன்பிருந்தே கொடுப்பது என்ற மரபை உருவாக்கிக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதால் நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டிய அகவிலைப்படி உயர்வு முழுவதையும் கொடுக்காமல் ஒரு தவணையை மட்டும் இப்போது கொடுத்துவிட்டு, மற்றதை அப்படியே விட்டு விடுவது என்பது எந்த வகையிலும் நியாயமில்லை. இப்போது ஒரு தவணையை மட்டும் கொடுப்போம், பிறகு பல்வேறு சங்கங்களிலிருந்து கோரிக்கை வந்தால், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று இந்தப் பிரச்சினையை விட்டுவிடுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுகூட ஒன்றும் குறைந்துவிடவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை விவாதத்திற்கான பதிலை அளிக்கும்போது, விட்டுப்போன இரண்டு தவணைகளான அகவிலைப் படி உயர்வைக் கொடுப்போம் என்று அறிவிப்பாரானால், நான் அதை மகிழ்ச்சியோடு வரவேற்பேன். எப்போதெல்லாம் மத்திய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்வை அளிக்கிறதோ அப்போதெல்லாம் மாநில அரசும் தன்னுடைய ஊழியர்களுக்கும் அதே முறையில் அகவிலைப் படி உயர்வை அளிக்கும் என்று மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைத்ததை இந்த அரசு அப்படியே ஏற்றுக் கொண்டதாக அறிவித்தது. அப்படிப்பட்ட நிலையில், அரசாங்கம் மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைத்த கொள்கையைச் செயல்படுத்தாமல், மூன்று அகவிலைப் படி உயர்வு அளிக்கப்பட வேண்டிய நேரத்தில் ஒன்றை மட்டும் கொடுப்பது சரியல்ல. வரவேண்டியதோ மூன்று அகவிலைப் படி உயர்வு, நமக்குக் கொடுத்திருப்பதோ ஒன்று, எனவே மீதி இரண்டு தவணைகள் என்னவாயிற்று என்று அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் கேட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மத்திய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு நான்காவது தவணையாக, அகவிலைப் படியை உயர்த்தலாமா என்று





பரிசீலித்துக் கொண்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படித் தாமதம் செய்யச் செய்ய, அரசு ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய எண்ணிக்கை அதிகமாக அதிகமாக, அரசுக்குத் தான் அதிகமான நிதிச் சுமை ஏற்படும். அவ்வப்போது கொடுத்துவிட்டால், அரசுக்கும் நல்லதாக இருக்கும். சேர்த்து வைக்கும்போது அனாவசியமான நிதிச்சுமை அரசுக்கு ஏற்படும் என்பதைத் தெரிவித்து, அவ்வப்போது மத்திய அரசு அறிவிக்கும் அகவிலைப் படி உயர்வுக்கேற்ப மாநில அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப் படி உயர்வை அறிவித்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை அப்படியே ஏற்று செயல்படுத்துமாறும் இப்போது ஒரே ஒரு அகவிலைப் படி உயர்வை மட்டும் கொடுத்திருப்பது சரியல்ல என்பதையும் தெரிவித்து, மற்ற இரு அகவிலைப் படி உயர்வையும் அரசு அளித்து ஒரு நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு நபர்க் குழு தெரிவித்த பரிந்துரைகளை அடுத்து, 100-க்கும் மேற்பட்ட பதவிகளுக்கான ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட இருக்கும் அந்த 100-க்கும் மேற்பட்ட பதவிகள் எவை யெவை என்பன இன்னும் மர்மமாகவே இருக்கிறது. அவை யார் யாருக்கு என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது. இவ்வாறு மாற்றியமைக்கப்படும் ஊதிய விகிதங்கள் காரணமாக அரசுக்கு ஆகும் செலவு ரூ. 3 கோடி என்று மட்டும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதிகமான நிதிச் சுமை அரசுக்கு இருக்காது என்று தெரிவிக்கும் வகையில் ரூ. 3 கோடி மட்டும் செலவாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒன்றை நாங்கள் யூகித்துக் கொள்ள முடிகிறது. ரூபாய் 3 கோடியில் 100-க்கும் மேற்பட்ட பதவிகளுக்கு ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படும் என்றால், இதனால் அதிகமான பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியவில்லை. நியாயமான வகையில் பல சங்கங்கள் தங்களின் ஊதிய முரண்பாடுகளைப்பற்றி அரசிடம் பல்வேறு கோரிக்கைகளை விட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி நாங்கள் ஏற்கெனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் தெரிவித்தபோது, இவைகளைப்பற்றி அரசுக்குக் கோரிக்கையாகக் கொடுங்கள், நாங்கள் அவைகளையெல்லாம் மறுபரிசீலனை செய்வோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அதை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றோம். அதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டோம். எனவே இப்போது முரண்பாடுகளைக்

கமைய அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை அரசு அலட்சியப்படுத்தியிருக்கிறது. அரசின் நிதித் துறை தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தற்போது அவர்கள் அனைவரும் Vacation Department staff ஆகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் தாங்கள் Non-vacation Department staff ஆகக் கருதப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கையை வைத்து வருகிறார்கள். இப்போது Vacation Department staff ஆகக் கருதப்படுகிற காரணத்தால், ஆண்டொன்றுக்கு அவர்களுக்கு மூன்று நாட்களுக்கு மட்டுமே ஈட்டிய விடுப்பு கிடைக்கிறது. மற்ற துறைகளில் பணியாற்றுகிற அனைத்து அரசு ஊழியர்களுக்கும் ஆண்டுக்கு 33 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு கிடைக்கும்போது, ஆசிரியர்களுக்கு மட்டும் ஆண்டுக்கு மூன்று நாட்களுக்கு மட்டுமே ஈட்டிய விடுப்பு கிடைக்கிறது. இப்போது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அரசு ஊழியர்கள் 240 கிலோ மீட்டருக்கு மேல் தங்கள் குடும்பத்தோடு 15 நாள் ஈட்டிய விடுப்பு எடுத்துக்கொண்டு பயணம் செய்தால், ஒரு வழிச் செலவுக்கான தொகையை அரசு தரும் என்ற சலுகை தரப்பட்டிருக்கிறது. ஆனால் இத்தச் சலுகையை ஆசிரியர்கள் அனுபவிக்க முடியாத நிலை இருக்கிறது. காரணம் அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு மூன்று நாட்களுக்கு மட்டுமே ஈட்டிய விடுப்பு கிடைக்கிறது. எனவே அவர்களால் இதைப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பே இருக்காது. ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் கோடை விடுமுறை நாட்களில்கூட எப்படிப்பட்ட முறையில் பணி செய்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விடைத் தாள்களைத் திருத்துவதற்கு அவர்களுக்கு 10 நாட்கள் தேவைப்படுகின்றன. அட்மிஷன்களைக் கவனிக்க 10 நாட்கள் தேவைப்படுகின்றன. மாணவர் தேர்ச்சியைக் கவனிக்க ஆசிரியர்களின் கூட்டத்திற்கு 10 நாள் தேவைப்படுகிறது. இப்படி 30 அல்லது 35 நாட்கள் விடுமுறைக் காலங்களில் பள்ளிக்கு வந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது. இப்படி 40 நாள் விடுமுறையில் 35 நாட்கள் பள்ளிக்கு வந்து பணியாற்றும் நிலை இருக்கும்போது, இவர்களை Vacation Department staff என்று சொல்லி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகையைக்கூட கிடைக்காமல் செய்வது எந்த வகையில் நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். எனவே, இதை அரசு பரிசீலனை செய்து இவர்களையெல்லாம் Non-Vacation Department Staff ஆக மாற்ற வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.



இவ்வாறு முடிவெடுப்பதற்கு முன்பாக முதற்கட்டமாக அரசு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதாவது ஆண்டுக்கு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஒரு முடிவெடுத்தால், அது நல்லதாக இருக்கும். எனவே ஆசிரியர்கள்பால் அரசுக்கு இருக்கும் நல்லெண்ணத்தைக் காட்டும் வகையில் இனி ஆண்டுக்கு 15 நாள் ஈட்டிய விடுப்பு அளிக்கப்படும் என்ற அறிவிப்பை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மூன்றாவது ஊதியக் குழு ஆசிரியர்களுக்கு "ஸ்பெஷல் கிரேடு" என்று சொல்லப்படும் சிறப்பு நிலை என்ற சலுகையை அளித்தது. நாங்கள் அதை வரவேற்று அதற்காக நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். இது ஆசிரியர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட சலுகையாகும். இந்தச் சிறப்பு நிலை, 20 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகு தரப்பட வேண்டும் என்று மூன்றாவது ஊதியக் குழு நிர்ணயித்திருந்தது. ஆனால் இப்போது என்ன சொல்லப்படுகிறது என்றால், 'ஏற்கெனவே தேர்வு நிலையில்—செலக்ஷன் கிரேடில்—இருக்கும் ஆசிரியர்கள் அதை எந்தத் தேதியில் பெற்றார்களோ அதற்குப் பிறகு 10 ஆண்டுகள் பணியாற்றிய பிறகுதான் சிறப்பு நிலை கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். முதலாவது தேர்வு நிலை 1971-ல் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. அதைப்போலவே வேறு சில ஆசிரியர்களுக்கு 1973-ல் தேர்வு நிலை வழங்கப்பட்டது. 1974-ல் சில ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட்டது. அதைப்போலவே 1975-ல் சில ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட்டது. இப்படி நான்கு கட்டங்களில் தேர்வு நிலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் பல முரண்பாடுகள் இருக்கின்றன. இந்த நிலை இருக்கும்போது, தேர்வு நிலை பெற்று 10 ஆண்டுகள் கழித்த பிறகுதான் ஸ்பெஷல் கிரேடு கிடைக்கும் என்றால், அதற்குள் நான்காவது ஊதியக் குழுவே அமைக்கப்பட்டு அதன் அறிக்கையே வெளிவந்துவிடும் நிலைதான் இருக்கும். அந்த வகையில் தற்போது நிதித் துறை ஒரு புதிய வியாக்கியானத்தை (Interpretation) கொடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை நடைபெறுவதற்கான வகையில் போதிய உறுப்பினர்கள் அவையில் இல்லை என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதைச் சொல்வதற்காகவாவது தாங்கள் அவைக்கு இப்போது வந்தீர்களே ! (சிரிப்பு)

**திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்போது நிதித் துறை என்ன சொல்கிறது என்றால், இந்தத் தேர்வு நிலைப் பதவிகள் அனைத்தும் 1—10—1978 தேதியில் தான் இயங்க ஆரம்பிக்கின்றன என்று சொல்கிறது. அப்படியென்றால் 1988-க்கு முன்பாக யாருக்கும் Special grade கிடைக்கவே கிடைக்காது. இவ்வாறு சொல்வதன் மூலம் புதிய பிரச்சினைகளை நிதித் துறை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவேதான் 20 ஆண்டுக்காலம் பணி செய்த பிறகு ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும் என்று நான் அரசை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

மற்ற உறுப்பினர்கள் பேசாத கருத்துக்களைத்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து அனுமதிக்க வேண்டுகிறேன். இந்த வகையில் மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை அப்படியே ஏற்று அதை நடைமுறையில் அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

நேற்றையதினம் மேல் நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அதாவது இண்டக்டட் ஆசிரியர்களான அவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் சிறப்பு ஊதியத் தொகையான ரூ. 25-ஐ ரூ. 75-ஆக உயர்த்த வேண்டும் என்றும், இதன் காரணமாக 5,000 ஆசிரியர்கள் பயனடைவார்கள் என்றும், கோரப்பட்ட கோரிக்கையைப் பொறுத்தவரை, அரசு ஒரு சாதகமான முடிவுக்கு வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாகவே சுமார் 500 உயர் நிலைப் பள்ளிகளில் ஓவிய ஆசிரியர்களின் பதவிகள் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன. இதன் காரணமாக பல ஆண்டுகளாகவே நிதிநிலை அறிக்கையில் ஓவிய ஆசிரியர்களுக்கான புதிய பதவிகள் உருவாக்கப்படாமலேயே இருந்து வந்திருக்கிறது. இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, இந்த 500 ஓவிய ஆசிரியர்களின் பதவிகளையும் நிரப்புவதற்கு அனுமதியை விரைவில் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினை, ஆயிரக்கணக்கான ஆசிரியர்களைப் பாதிக்கும் பிரச்சினைபற்றி சொல்ல விரும்புகிறேன். பி.டி. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள்,



தங்களுடைய ஊதிய விகிதத்தில் 450 ரூபாயைத் தாண்டியவர்கள் தங்களைப் பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு அல்லது upgradation செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை அவர்கள் பல்லாண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பி.டி. பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாக உள்ளவர்களை பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்த்த அரசு முடிவு எடுக்க வேண்டும். அந்த வகையிலே ஆந்திர அரசு ஒரு அருமையான முடிவை எடுத்திருக்கிறது. பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் அத்தனை பேரும் ஒரு குறிப்பிட்ட தேதியில் பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்த்தப்படுவார்கள் என்று ஆணையை வெளியிட்டிருக்கிறது. இந்த ஆணையின் காரணமாக ஆந்திர மாநிலத்தில் இந்தக் கோரிக்கை வெகு சுலபமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதனால் அரசுக்கு அதிக நிதிச் செலவு ஆகாது. ஏனென்றால் ஏற்கெனவே அவர்கள் அந்த ஊதிய விகிதத்தைத் தாண்டி வந்துவிட்டார்கள். இந்த ஆணையை அரசின் கவனத்திற்கு, அவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளைக் களைய இரண்டு ஒரு நபர் குழுக்கள் போடப்பட்டன. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள முரண்பாடுகளைக் களைய திரு. பணிக்கர் தலைமையில் ஒரு குழுவும், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலர்கள் அவர்களுடைய ஊதிய விகிதத்தில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்காக ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கும் திரு. பணிக்கர்தான் பொறுப்பேற்றார். இந்தக் குழுவினுடைய அறிக்கை இன்னும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த அறிக்கையை வெளியிடுவதற்குரிய காலக்கெடு கூட முடிந்துவிட்டது. இந்த ஒரு நபர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆகவே இப்போது அதனுடைய பணிகள் முடிந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆகவே அந்த அறிக்கையை வெளியிட்டு, அந்த அறிக்கையை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் நேற்றுகூட ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆசிரியர்கள் பல கிளர்ச்சிகளைச் செய்து, போராட்டங்களை நடத்தி, பல கோரிக்கைகளை வைக்கும்போது, அரசு அவர்களுடைய கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்து, பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி மேற்கொண்டு அரசாணையை

வெளியிடுகிறது. அரசு ஓர் ஆணையை வெளியிட்ட பிறகு கூட, அந்த ஆணையை அமுல்படுத்துவதில் ஏன் காலதாமதம் ஆகிறது என்றால், இதை நாங்கள் எப்படி விமர்சிப்பது என்று தெரியவில்லை. சென்ற ஆண்டு கல்லூரி ஆசிரியர்கள் பல கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள். அதன் நியாயத்தை உணர்ந்த அரசு ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணையின் எண் (பல்வகை) 895, கல்வித் துறை, நாள் 21—5—1980. பத்து ஆண்டுக் காலம் பணி முடித்த உதவிப் போராசிரியர்களை போராசிரியர்களாக பதவி உயர்த்துவதற்கான ஆணை இது. இவ்வாணை நிதித் துறை ஒப்புதலுடன், கல்வித் துறையால் 21—5—1980 அன்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வரை இவ்வாணை கல்லூரிகளில் அமுலாக்கப்படவில்லை. அரசுக் கல்லூரியிலேகூட இவ்வாணை அமுலாக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், இது குறித்த கோப்பு பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையில் தேங்கியிருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். இதுபற்றிய விளக்கங்களை இந்தத் துறை திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே அமுல்படுத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அரசு நல்லெண்ணத்துடன் ஆணை வெளியிட்ட பிறகும், நிதித் துறையினுடைய ஒப்புதலோடு, கல்வித் துறையினுடைய ஒப்புதலோடு ஆணையை வெளியிட்ட பிறகும், இதை அமுல்படுத்துவதில் இன்னொரு துறை குறுக்கே நிற்கிறது என்றால், எப்படி ? இந்த ஆணையை வெளியிட்டு ஏறக்குறைய ஓராண்டு ஆகப்போகிறது. இன்னும் அந்த ஆணையை அமுல்படுத்தவில்லையென்றால், ஆணையை அமுல்படுத்துவதற்காக ஒரு போராட்டம் ஆரம்பித்தால், நிலை என்னவாகும் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பிரச்சினைகளை எப்படி நாமே உருவாக்கியிருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், என்னுடைய கோரிக்கை ஒன்றை வைக்க விரும்புகிறேன். பெண்களுக்காக பாலிடெக்னிக் ஒன்று வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கை இன்னும் செயல்படுத்தப்படவில்லை. மிகவும் பின்தங்கிய பகுதிகளாந தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய இந்தப் பகுதிகளுக்குப் பயன் தரக்கூடிய வகையிலே பொதுவாக ஒரு விவசாயப் பல்கலைக் கழகத்தைத் துவக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. மத்திய அரசைச் சேர்ந்த நிபுணர் குழு ஒன்று அண்மையில் சிதம்பரத்திற்கு வந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உள்ள விவசாயப் பேராசிரியர்களைச் சந்தித்து விவாதம் நடத்திய





போது, " பல மாநிலங்களில் மூன்று, நான்கு விவசாயப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஆனால் இங்கே அப்படி இல்லை. ஆகவே விவசாயப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலை, வாய்ப்பு இங்கே இருக்கிறது. விவசாயப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த வேண்டும் " என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே நான்கைந்து மாவட்டங்களுக்குப் பயனளிக்கக் கூடிய அளவிற்கு ஒரு விவசாயப் பல்கலைக் கழகத்தைத் துவக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒரு சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பேரவை உறுப்பினராக இருந்தாலும், மேலவை உறுப்பினராக இருந்தாலும், அவர்களுக்கு அளிக்கக் கூடிய ஊதியம், படிகள் ஆகியவற்றை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை பொதுவாகவே இருக்கிறது. இந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதாகவே தெரிகிறது. பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுடைய கடமைகளைச் செம்மையாகச் செய்வதற்கு அவர்களுக்கு வேண்டிய குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், இதைச் செய்ய வேண்டும். அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதிய உயர்வைக் குறித்து அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு என்னையே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த உறுப்பினர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் காரணமாக பல்வேறு செய்தித் தாள்களைப் படித்து செய்திகளைத் திரட்ட வேண்டும் என்ற அடிப்படையிலே பல ஆங்கிலப் பத்திரிகைகளையும், தமிழ்ப் பத்திரிகைகளையும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பத்திரிகைகளையும் வாங்கிப் படித்து செய்திகளைச் சேகரிக்கவேண்டியிருக்கிறது. இதற்காக நான் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரையில் செலவழிக்கிறேன். இந்தப் பொறுப்புக்கு வராமலிருந்தால், ஒரு செய்தித் தாள்தான் வாங்கிப் படிப்பேன். ஆகவே ஊதிய உயர்வைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்பே ஒரு முறை குறிப்பிட்டதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மேலவை உறுப்பினராக இருந்தாலும், சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருந்தாலும், அவர்கள் தங்களுடைய கடமைகளைத் திறமையாகச் செய்ய, ஒழுங்காக, விரைவாகச் செய்வதற்கு அவர்களுடைய தொகுதியிலே முக்கியமாக ஓர் அலுவலகம் இருக்க வேண்டும். உறுப்பினர்களுடைய தொகுதியில் உள்ள மக்களுடைய கோரிக்கைகளை, மனுக்களை, முறையீடுகளை அவர்களிட

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 மார்ச் 28

மிருந்து பெற்று, பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க ஓர் அலுவலகம் தேவை. ஆகவே அலுவலகத்தை ஏற்படுத்தி அந்த அலுவலகத்திலே இளநிலை உதவியாளர் அந்தஸ்தில் ஒரு பதவியையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்கள் தொகுதிகளுக்கு வருகிறார்கள், மனுக்களை வாங்குகிறார்கள், பிறகு போய்விடுகிறார்கள். ஆனால் அந்த மனுக்கள் என்ன ஆயிற்று என்று பார்த்து பதில் சொல்ல வேண்டிய பொறுப்பில் இருக்கிறவர்கள் நாங்கள். ஆகவே இது போன்ற மனுக்களைச் சேகரித்து மேல் நடவடிக்கை எடுக்க, பொது மக்களோடு தொடர்பு கொள்ள, கொடுக்கப்பட்ட மனுக்கள் என்ன ஆயிற்று என்று தெரிந்து கொண்டு மக்களுக்குத் தெரிவிக்க தொகுதிக்கு ஓர் அலுவலகம் வேண்டும். அந்த அலுவலகத்தில் Junior Assistant அந்தஸ்தில் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு தன்னுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கும் பாதுகாப்புத் துறையில் பழுதடைந்த நிலையில் உள்ள வேன்களை, ஜீப்புகளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்கிறது. அதை எல்லோரும் வாங்கிப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அது போன்ற நடைமுறையை நாமும் பின்பற்ற வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். மாநில அரசில் உள்ள பல்வேறு துறைகள் பயன்படுத்திய, பழுதடைந்த நிலையில் உள்ள வாகனங்களை ஏலத்தில் விடுவதற்குப் பதிலாக அப்படிப்பட்ட வாகனங்களைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள டைப்ரைட்டர்களை ஏலத்தில் விடுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டைப்ரைட்டர்களை வழங்கினால், அது அவர்களுடைய பணிகளைச் செய்வதற்கு உதவியாக இருக்கும். ஆகவே டைப்ரைட்டர்களை ஏலத்தில் விடுவதற்குப் பதிலாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு இந்த வாய்ப்பைக்

(முற்பகல் 11-00)

கொடுக்கும்போது, மாநில அரசும் இந்த வாய்ப்பைக் கொடுப்பதிலே எந்தவிதமான சங்கடமும் இருக்க முடியாது. அந்த வகையிலே இந்த வாய்ப்பைக் கொடுத்தால், நாங்கள் எங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்ய, சிறமையாகச் செய்வதற்கு இது உதவியாக இருக்கும், நன்கு பயன்படும் என்ற அளவில் இந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 28] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அடுத்து, கட்சி அலுவலகங்கள் பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பலரும் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நானும் அதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சி அலுவலகங்களில் தொலைபேசி வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். சட்டமன்ற அலுவலகங்களுக்குத் தொலைபேசி வசதி என்பது கிடையாது. சட்டமன்றக் கட்சி அலுவலகங்களுக்கு என்று ஓர் அலுவலர் ; ஊழியர் கிடையாது. ஒவ்வொரு அலுவலகத்திற்கும் ஓர் ஊழியரை அரசே நியமித்து அவர்களுக்கு உதவ, அந்தக் கட்சி அலுவலகங்களில் செயல்படுவதற்கு வசதி செய்ய வேண்டும். இந்தப் பாராளுமன்ற, ஜனநாயக அமைப்பிலே, அவைகள் சரியான முறையில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால், அரசே அதற்கு வழிசெய்ய வேண்டும். இதிலே அரசுக்கு அதிகமாகச் செலவாகப் போவதில்லை. அங்கே ஒரு ஜூனியர் அஸிஸ்டெண்ட் அந்தஸ்திலே ஒரு ஊழியரை நியமிக்க வேண்டும். அரசு அதற்கு வழிசெய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நேரமாகி விட்டது. இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துவிடுகிறேன்.

அரசு பல்கலைக்கழகங்களுக்கு மானியம் கொடுக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் நம்முடைய அரசு மானியம் கொடுக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குக் கோடிக்கணக்கான ரூபாயை மானியமாக பல ஆண்டுகளாகக் கொடுக்கிறோம். அதை வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பல்கலைக்கழகம் சரிவரச் செயல்படுகிறதா என்றால் இல்லை. அதை அரசு கவனிக்க வேண்டும். இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் போராட்டம் ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப ஆசிரியர்கள் அங்கு போராட்டத்தை முடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஓர் ஒப்பந்தமும் ஏற்பட்டது. ஆனால் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு, ஊழியர்களுக்கு சென்ற ஆண்டு மார்ச் மாத ஊதியம் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தில் பணி புரியும் ஊழியர்களுக்குத் தரப்படவில்லை. இன்றுவரையில் தரப்படவில்லை என்பதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த ஒப்பந்தத்தை ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்டால், என்ன ஒப்பந்தம், இது என்ன 'சரான்-சராக் ஒப்பந்தமா ?' என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் கேட்கிறார் ? இது நியாயமா ? இது நல்லதா ? "சரான்-சராக் ஒப்பந்தமா" என்று துணைவேந்தர் கேட்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மேலவையிலே கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலே பேச்சுவார்த்தை நடந்து ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டு அங்கு சுமுகமாகப் பல்கலைக்கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது ; அரசுக்கும், மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்திற்கும், ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் இடையே ஒரு நல்ல ஒத்துழைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் இது

[திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 மார்ச் 28

என்ன 'சரான்-சராக் ஒப்பந்தமா' என்று துணைவேந்தர் சொல்கின்றார்கள். அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக்கூட மனு அனுப்பியிருக்கிறார்கள். இப்படி துணைவேந்தர் அவர்கள் கேட்கலாமா? இது நியாயமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதை அரசு உணர்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் ஒரு எரிமலை வெடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடக்கூடாது. இரண்டு கைகளும் சேர்ந்தால்தான் ஓசை உண்டாகும் என்ற தத்துவத்தை மனதில் வைத்துக்கொண்டு, அரசும் அதனுடைய பொறுப்புக்களை உணர்ந்து அங்கே என்னென்ன செய்ய வேண்டுமோ, அதைத் தக்க நேரத்தில் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் அந்தப் பிரச்சினை திரும்பவும் உருவாகாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன், வணக்கம்.

திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என் நன்றியைக் கூறிக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம் அரசு, ஏழையெளிய மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவிடும் வண்ணம் நிதிநிலை அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் வறட்சி நிலையை நேரில் கண்டறிய நம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அதன் விளைவாக, வறட்சி நிலையை நீக்கும் வகையில், நிதிநிலையை முட்டுக்கட்டையாகக் கருதாமல் 'துயர் தணிப்பு' நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று கூறியதற்கு ஏழை மக்களின் சார்பில் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

வேளாண்மை, விரிவாக்கப்பணியைச் சீரமைத்து, வலுப்படுத்த புதிய திட்டம் குறித்தும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகப்படுத்தி சமையல் எண்ணெய் பற்றாக்குறையைப் போக்கிடும் திட்டமும் வரவேற்கக் கூடிய திட்டமாகும்.

ஆதி திராவிட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அந்த வகுப்பினைச் சார்ந்த ஒரு லட்சம் வேளாண்மைக் குடும்பங்களை, கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வந்து, அவர்களில், ஒரு குடும்பத்திற்கு ஒருவரை 'வேளாண்மை பணிக்கூட்டுறவு' சங்க உறுப்பினராகச் சேர்த்து, அவர்களுக்குக் கடன் உதவியும் மற்ற பணிகளையும் கொடுத்து அவர்களின் வருமானத்தைப்



1981 மார்ச் 28] [திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி]

பெருக்கிட வழிவகை செய்வது மிகவும் பெருமைப்படவேண்டியதாகும்.

நகரங்களில், மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களை அதன் விலையில் கால் பங்கினை உதவித் தொகையாகவும், மீதியை அவர்கள் கடன் வாங்குவதன் மூலம் பெறச் செய்வதும் ஏழை மக்களின் நலனுக்கான திட்டமாகும்.

கோழி வளர்ப்பிற்காகவும், கால்நடைப் பராமரிப்பு, மருந்தகங்கள் தொடங்குவதும், மருந்தகங்களின் தரம் உயர்த்துவது போன்ற திட்டங்களும் தேவையான நல்ல திட்டங்கள் ஆகும். புதிதாக நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கும் திட்டமும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், இறால் மீன் வளர்ப்பில் கிராமத்து இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும், கிராமத்தில் வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் திட்டம் ஆகும்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை, மதுரை மாவட்டத்தில் சிமெண்ட் ஆலை நிறுவ ஆவன செய்வது குறித்தும், வட ஆற்காடு மாவட்டத்தில் வெடி மருந்துகள் தயாரிக்கும் திட்டமும் வரவேற்கக்கூடிய ஒரு திட்டமாகும். நலிந்த சிறு தொழில் பிரிவுகளுக்கு வேண்டிய நிதி உதவியளித்து அவற்றை நல்ல முறையில் இயங்கச் செய்யவிருப்பது குறித்தும் நான் அரசுக்கு நன்றி கூறுகிறேன்.

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக 33,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து சிறு தொழில்களையும், கிராமத் தொழில்களையும் மேலும் வளர்ச்சியடைய வழி செய்யவிருக்கிறது.

சுற்றுலா வளர்ச்சிக்காக அரசு பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஊட்டி, கோவை போன்ற இடங்களை, சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திடும் வண்ணம் மேலும் அழகுபடுத்தித் தரவேண்டும்.

கல்விக்காக நம் அரசு, மேலும் பல ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதுடன், பல புதிய பள்ளிக்கூடங்களையும் மைய சமையல்கூடம், விஞ்ஞான அறிவியல் கூடம் அதற்கான சாதனங்கள் வாங்குவதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

தமிழ் நாட்டில் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுகள் மேல்நிலை அடைவதில் அரசின் அக்கறைபற்றிப் பெருமைப்படும் நேரத்தில் எங்கள் ஊரான கோவையில் "நீச்சல் குளம்" ஒன்று கட்டினால், குழந்தைகளுக்கும்

இளைஞர்களுக்கும் நீச்சல் பயிற்சி அளிக்க வசதியாகவும், அதே நேரத்தில் உற்சாகமாகவும் பொழுதுபோக்காகவும் இருக்கும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரை, பொதுவாக எல்லா மருத்துவ மனைகளிலும் இடம் பற்றாக்குறையாக இருக்கிறது. கோவை மருத்துவ மனையில் பெண்கள் பகுதியை மேலும் விரிவுபடுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டான இந்த ஆண்டில் அரசு அவர்கள்மீது தனிக் கவனத்துடன் அவர்களுக்கு வேண்டிய பள்ளிகள், கைகால் முடமானவர்களுக்கு நிலையங்கள் தொடங்க இருப்பதும், உதவித் தொகை வழங்க இருப்பதும் பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய வாய்ப்பளிக்க இருப்பதும் ஊனமுற்றோர்களின்பால் அரசின் அக்கறையை, பொறுப்பைக் காட்டுகிறது.

ஏழைப் பெண்களின், குறிப்பாக விதவைத் தாய்மார்களின் பெண்களுக்கு திருமணத்திற்கு "தாலிக்குத் தங்கம்" வழங்கும் திட்டத்திற்காக, அந்த ஏழைத் தாய்மார்களின் சார்பில் நான் நன்றியைக் கூறுகிறேன். இப்பொழுது அரசால் வழங்கப்படும் ஊனமுற்றோர், விதவைகள் ஆகியோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இன்னும் அதிகமான பேர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தனை நல்ல திட்டங்களை நல்ல முறையில் செய்ய இருக்கும் அரசுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கான ஒரு வாய்ப்பை அளித்தமைக்கு முதலில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் முடிந்த அளவுக்கு இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி, விவசாயிகளுடைய பிரச்சினைகள், இன்னும் மற்ற பிரச்சினைகளை எல்லாம் முடிந்த அளவுக்குச் சொல்லி, நிவாரண காரியங்களைச் செய்திருக்கின்றனர் என்பதை நாம் மறைக்கத் தேவையில்லை. அதே சமயத்தில் வருமானத்தைப் பொறுத்த அளவில் இருக்கக்கூடிய இரண்டொரு விஷயங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வருமானத்தைப் பொறுத்த வரையில், இங்கே கொடுத்திருக்கின்ற விவரங்களின்படி, ஏதோ ஓரளவுக்குக் கூடுதலாக வருவதுபோல் அமைந்திருக்கிறதே தவிர வேறல்ல. விற்பனை வரியிலிருந்து 449 கோடி ரூபாய் அளவுக்கு



வருமானம் அதிகமாகக் கிடைக்கிறது. இதுவும்கூட இன்னும் சற்று கடுமையாக வசூலித்தால் அதிகமாகும். அதிகாரிகள் மூலம் கடுமைப்படுத்தி வரி வசூலை அமுல்படுத்தினால், பற்றாக்குறை பட்ஜெட்டாக இந்த பட்ஜெட் வந்திருக்காது. அப்படிச் செய்தால், இப்போது வரி கூட்டப்படவேண்டிய அவசியம் இருந்திருக்காது என்று நான் சொல்வேன். அடுத்து வாகன வரி ஏற்கெனவே கடந்த ஆண்டு ரூ. 75 கோடியாக இருந்தது, இந்த ஆண்டு 72 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. இப்படி குறைந்த வசூல் ஆகப் போவதாகக் குறிப்பிட்டிருப்பதன் பொருள் என்ன ? வாகனங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றபோது, ஏன் வரி வசூல் குறைய வேண்டும் ? இந்த நிதி நிலை அறிக்கையில் சில கோடி ரூபாய் வருவாய் குறைந்திருப்பதற்கான காரணத்தை நமது நிதி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அடுத்து, ஆயத் தீர்வை, எக்சைஸ் டியூட்டி குறித்துச் சொல்கிறேன். மது விலக்குக் கொள்கையை முழுமையாகத் தளர்த்திவிட்டதாகச் சொல்கிறார்கள். மது விலக்குக் கொள்கையைத் தளர்த்துவதுபோல் தளர்த்தியிருக்கிறோம் என்று இங்கே கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்துவிட்ட பிறகு, இன்றைக்கு இந்த பட்ஜெட்டிலே வருமானம் 7.90 கோடியில் இருந்தது. 8.47 கோடியாக உயர்ந்திருக்கின்றது என்று சொல்கிறார்கள். இது என்ன கணக்கு ? இது என்ன நிதித் திட்டம் ? என்ன கணக்கை அதிகாரிகள் தந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த அரசு அதை ஏற்றுக் கொண்டு இங்கே எப்படி அந்தப் புள்ளி விவரங்களை வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து, கல்வித் துறையைப் பொறுத்தவரையில், புதிய பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 1,000 செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், 200 பி.டி. தர ஆசிரியர்கள், இடைநிலைப் பள்ளிகளில் பி.டி. தரத்தில் 200 தலைமை ஆசிரியர்கள், 250 உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவிகள் புதியதாக உருவாக்கப்படுமென்றும், 250 கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் பதவி பகுதி நேர நிலையிலிருந்து முழு நேரப் பதவிகளாக மாற்றி அமைக்கப்படுமென்றும் நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 50,000, 60,000 ஆசிரியர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கும்போது, இன்றைக்கு அரசு வைத்திருக்கக்கூடிய ஆசிரியர்-மாணவர் விகிதத்தின் அடிப்படையில் 25,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற நிலைமை இருக்கும்போது, இப்போது உருவாக்கியுள்ள பதவிகள் ஒப்புக் கொள்ள முடியாதவை, கொஞ்சமும் திருப்திப் படுத்த முடியாதவை. 10 சத

விதம் என்றுகூடச் சொல்ல முடியாத அளவிற்குப் பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்ற பரிதாப நிலையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

ஏற்கனவே கல்வி அமைச்சராக இருந்தவர், நிதி அமைச்சராக வந்த பிறகும் இப்படிப்பட்ட நிலையா என்ற கேள்வி வருகிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையை மாற்றி, மத்திய அரசு மூலம் நிச்சயமாக வரக்கூடிய வருமானத்தில்—நிச்சயமாக அந்த வருமானம் வருகிறது, முதலமைச்சரவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள், அப்படி வரும்போது—ஆசிரியர்களின் பணியிடங்களை உயர்த்தித் தருங்களென்று கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே சொல்லியிருப்பது ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக்கப்படுவார்கள் என்பதாகும். இதற்காக அட்வான்ஸ் ஜி.ஓ. போடப்பட்டுள்ளது. இது குறித்து சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை வரவிட்டாலும், இந்த நடவடிக்கை எடுக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அரசாணை வெளியிடுகிறார்கள். நான் பாராட்டுகிறேன். இதைப்போல் இன்னும் பல விஷயங்களில் இப்படி அரசாணைகள் வழங்கப்பட்டிருந்தால், கல்வித் துறையில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுந்திருக்க முடியாது. அரசு அறிவித்திருக்கக்கூடிய கொள்கை அடிப்படையில், மேல்நிலைக் கல்வியைப் பொறுத்த அளவில் இத்தகைய முறையிலே ஒரு அரசாணை வழங்கப்பட்டிருந்தால், இன்றைக்கு ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படாது. இப்படி அரசாணை வழங்குவதன் மூலம் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பதை கடந்த கால அனுபவத்தின் மூலம் சொல்ல விரும்புகிறேன். ஜில்லா போர்ட் பள்ளிகள் 1—4—1970 முதல் அரசுப் பள்ளிகளாகக் கருதப்படுமென்று அரசாணை போடப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் அவர்களுடைய பிரச்சினை தீரவில்லை என்ற நிலை இருக்கும்போது, அரசாணை மூலமாக, எக்சிக்யூடிவ் ஆர்டர் மூலமாக, நிர்வாக ஆணை மூலமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடுமென்று சொல்லுவது எப்படி நியாயமாகும்? குழு அறிக்கை தருவதற்கு முன்பே ஆணையிடப்பட்டிருக்கிறது. அப்படி ஊராட்சிப் பள்ளிகளையும், ஆசிரியர்களையும் எடுக்கும்போது சட்டத் திருத்தம் வந்தாக வேண்டும். சட்டத் திருத்தம் வராமல், அரசாணைகள் மூலம் செய்தால், அது நன்மை பயக்க முடியாதென்று சொல்ல விரும்புகிறேன்.



ஆட்சியின் கொள்கை எதுவாக இருந்தாலும், நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒரு லட்சம் ஆசிரியர்கள் இன்றைக்கு அரசு ஊழியர்களாக்கப்படும்போது, அவர்களுக்குச் சலுகைகள் அளிக்க எங்கே நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்? நிதி ஒதுக்காமல், அவர்களை அரசு ஊழியர்கள் என்று அறிவிப்பது எந்தவிதத்தில் நியாயமாகும்? ஏற்கனவே 7 லட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்களென்றால், அவர்களோடு இன்னொரு லட்சத்தையும் சேர்த்து, அந்த ஒதுக்கீட்டிலேயே அப்ளிகேஷன் போட்டு, வரிசையில் நில் என்று சொல்வதுபோல இருக்கிறது. எனவே இவர்களுக்குச் சலுகைகள் அளிக்க நிதிநிலை அறிக்கையிலே எங்கே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சம்பளத்தை உயர்த்தித் தருவதற்கு ஒரு தேதியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறதென்பது பிரச்சினையல்ல. நிதித் துறை, அதிகாரிகள் செய்யும் தவறுகாரணமாக ஏற்படும் நிலைமைகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஐந்தாவது நிதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும், ஆறாவது நிதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுடைய, ஆசிரியர்களுடைய சம்பளத்தை உரிய காலத்தில் உயர்த்தாததால், மத்திய அரசின் நிதி உதவி பெற முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று ஏற்கனவே கேட்டிருக்கிறேன். இதற்கு முன்பு முதலமைச்சரே நிதி அமைச்சராக இருந்தார்கள். இந்தத் தவறு ஏற்கனவே செய்யப்பட்டிருக்கிறதென்று சுட்டிக்காட்டியிருக்கிறேன். மீண்டும் அவர்கள் அதே தவறைச் செய்திருக்கிறார்கள். எனவே இதுபற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு நிதிக் கமிஷன்களிலும் இந்த மாநில அரசு ஏமாந்துவிட்ட பிறகு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் சம்பளத்தை 1—4—1978 முதல் உயர்த்துவதன்மூலம் மத்திய நிதி உதவி பெற வாய்ப்பு இருக்கிறதே, அதை விட்டுவிட்டு, 1—9—1980 முதல் உயர்த்தப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இதன் நியாயம் என்ன? கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள அதே தவற்றை, அதே நிதித் துறை அதிகாரிகள் மீண்டும் செய்கிறார்களென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு நிதியமைச்சராக இருக்கக்கூடியவர்கள், கல்வி அமைச்சராக இருந்தபோது ஏமாந்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு அப்போது பதில் சொல்ல முடியவில்லை. அந்தத் தவறு இப்போது நடந்திருக்கிறது. முன்பு இருந்த ஆட்சி அகவிலைப்படியை உயர்த்துவதற்கு ஒரு குழுவைப் போட்டது. 6 மாத காலம் ஆராய்ச்சி செய்து, ஒரு ஆண்டுக்குப் பிறகு உயர்த்தித் தந்தார்கள். இதைக்

குறைத்துத் தருவதற்கா கமிட்டி போட்டோம்? ஆறாம் நிதிக் கமிஷனில் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டார்கள். இந்தத் தேதிக்கு முன்னால் வந்திருந்தால் தந்திருப்போமென்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். மீண்டும் தமிழ்நாடு அரசு மத்திய அரசிலிருந்து கிடைக்கும் நிதியை இழக்கப் போகிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. எனவே இதுபற்றிச் சிந்தித்து, நல்லமுறையிலே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், மதிப்பிற்குரிய திரு. ஜேப்பியார் அவர்கள் 'டெல்லி சென்றீர்களே, டெல்லி சென்றீர்களே' என்று அடிக்கடி கேட்டார்கள். அவர் தனியாகக் கேட்டாலும், அவருக்கும், மற்றவர்களுக்கும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் டெல்லி போவதற்கு உதவி செய்தது இந்த அரசு. நான் முதலிலே அதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இங்கே, இந்த அவையிலே நாங்கள் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை எழுப்பும்போது, கல்வி அமைச்சரவர்கள் எங்களால் முடியவில்லை, சட்டங்களில் இடமில்லை, பாராளுமன்றத்தில்தான் திருத்தங்கள் செய்ய வேண்டும், இது மத்திய அரசு செய்ய வேண்டிய காரியம், நாங்கள் என்ன செய்வது என்று பல முறை, பல பிரச்சினைகளில் உதவி செய்ய வழியில்லாமல் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள், இப்படி நாட்டில் பார்த்திருக்கக்கூடிய கொடுமைகள் குறித்து பாராளுமன்றம் என்ன செய்திருக்கிறது என்று கேட்க உரிமையுண்டு. அதன் அடிப்படையிலே இத்தனை நாட்களாக மாநிலத்தில் செய்ய வேண்டிய பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேசி, இங்கே தீர்த்துக்கொண்டிருந்த நாம், டெல்லியில், மத்திய அமைச்சர்களிடத்தில், மத்திய அரசு தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினைகளை வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில், அங்கே மாநாடு நடத்தினோம். அதில் கலந்துகொள்ள 15 நாட்கள் ஸ்பெஷல் கேஷுவல் லீவ் கேட்டோம். முதலமைச்சரவர்கள் வாழ்த்து தெரிவித்து, அதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி அமைச்சரவர்கள் மூலமாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பிராவிடன்ட் பண்ட் சேமிப்பிலிருந்து 500 ரூபாய் முன்பணமும், 15 நாள் ஸ்பெஷல் கேஷுவல் லீவும் கொடுத்து, மாநாடு வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்தி, மாநில அரசுதான் அனுப்பியது. மாநில அரசு உதவி செய்தது. இந்த நேரத்தில் அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி அன்போடு மாநில அரசு இந்தச் சலுகைகளைத் தந்து, 2,500 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். டில்லியிலே மத்திய அமைச்சர்கள், 6 கோரிக்கைகளுக்குச் சம்பந்தப்பட்ட 6 மத்திய அமைச்சர்கள், பட்ஜெட் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போது, குறிப்பிட்ட நேரத்திலே



மாநாட்டுக்கு வந்து, ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி விவாதித்தார்கள். சட்ட அமைச்சரவர்கள் சட்டத் திருத்தம் கொண்டுவருவது குறித்து விவாதித்தது, சங்கப் பிரதிநிதிகளைக் காட்டிலும் ஆர்வம் காட்டியதாக இருந்தது. நாங்கள் செய்வோமென்று சொன்னார்கள்.

"As a responsible member of the Union Cabinet, I endorse this resolution. I know how to do it. I will do it" என்ற உத்தரவாதத்தை, சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்காக சட்ட அமைச்சரவர்கள் 2,500 ஆசிரியப் பிரதிநிதிகள் மத்தியில் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகையிலே பல விஷயங்கள் வந்திருக்க முடியாது. வந்திருக்கக்கூடிய விஷயங்களைப் பார்த்திருக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்க முடியாது. தேசிய அளவில் ஊதியக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று பிரதமரிடத்திலே விண்ணப்பம் செய்தோம். மாநாட்டில் அவர்கள் கலந்துகொள்ள முடியாமையால், ஆசிரியர்களை அவர்கள் வீட்டிற்கு அழைத்திருந்தார்கள். 2,500 ஆசிரியர்கள் மாநாடு போல அமர்ந்து, உரையாடினார்கள். 40 நிமிட நேரம் எங்களுக்கு ஒதுக்கி, ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்த மெமோராண்டத்தை அவர்களுக்குப் படித்துச் சொல்லி, அவர்கள் அதற்குப் பதில் சொல்லி வந்தார்கள். உலகத் தமிழ் மாநாட்டின்போது கொடுத்த வாக்குறுதியை, தமிழ்நாட்டு ஆசிரியர்களிடமும் சொன்னார்கள். இந்தியைத் தமிழ்நாட்டில் திணிக்கமாட்டோமென்ற உத்தரவாதத்தினை, அரசு நடத்திய விழாவில் தந்த உறுதியை, மீண்டும் தெரிவித்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஒரு சாதனையாகச் சொல்லவில்லை. தமிழ்நாட்டை அவர்கள் பார்க்கிறார்கள். தமிழ்நாடு அரசு ஏற்கெனவே செய்யும் உதவிகளைச் சொன்னோம். மத்திய கல்வி அமைச்சரவர்களைப் பொறுத்தவரையில், அவரிடம் நேஷனல் பே கமிஷன் அமைப்பது, சட்டத் திருத்தங்கள் செய்வது, இன்னும் மற்றைய கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறோம். ரெயில்வே அமைச்சரிடம் முழுக் கட்டணச் சலுகையை கேட்டிருக்கிறோம். இங்கேகூட சலுகை தந்திருக்கிறார்கள். இது ஆசிரியர்களுக்கு மட்டுமில்லை என்பதுபோல அறிவித்திருக்கிறார்கள். நீண்டகாலம் கல்வி அமைச்சராக இருந்தவர்கள், நிதி அமைச்சராக வந்து அறிக்கை தரும்

(முற்பகல் 11-20)

போதும், இது விடப்பட்டிருக்கிறது. 15 நாள் கட்டிய விடுப்பில் சென்றால் தான் அதுவும் 240 கிலோ மீட்டருக்கு அதிகமாக இருந்தால்தான் பயணச் சலுகை என்று சொல்லியிருக்கிறார்கள். வெக்கேஷன் டிப்பார்ட்மென்டில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு ஆண்டுக்கு இரண்டேயரைக்கால் நாள் தான்

[திரு. செ. முத்துசாமி] [1981 மார்ச் 28

பிரிவிலேஜ் லீவ் என்று இருக்கிற நிலையில் அவர்கள் எப்படி 15 நாள் ஈட்டிய விடுப்பைச் சேமிக்க முடியும்? 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்கள் எப்படி பயணம் செய்ய முடியும்? இரண்டாவதாக அவர்களுக்கு இந்தச் சலுகை பொருந்துமா இல்லையா என்பது பற்றிய ஒரு குறிப்பையும் காணோம். இப்படி ஒரு சலுகையை அரசாங்கம் அறிவிக்கும்போது, நம்முடைய நிதித் துறைக்கு ஆசிரியர்களையும் சேர்க்க வேண்டுமென்கின்ற எண்ணம் ஏன் வர மாட்டேன் என்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இதை நான் நீண்ட காலமாக வேண்டுகோளாக வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். நிதித் துறைக்கு அந்த மனம் வர மறுக்கிறது. அரசு அலுவலர்களுக்கு என்று சொல்லும்போது, ஏன் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்கிற அறிவிப்பைத் தரக்கூடாது? இன்றைக்கு 2½ லட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயரையும் அறிக்கையில் சேர்ப்பதில் என்ன சிரமம் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நிதிச் செயலாளராக இருப்பவரும் ஒரு காலத்தில் ஆசிரியரிடத்தில் படித்து வந்தவர் தான். அறிக்கையைத் தயாரிக்கும் முறையையும் அவர் ஆசிரியரிடத்திலிருந்துதான் படித்து வந்தவர். அப்படிப்பட்ட ஆசிரியர் சமுதாயத்தை அவர் மறந்து விடுகிறார் என்றால், அது என்ன தர்மம்? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அன்றைக்கு ½ மணி நேரம் வந்து விட்டுச் சென்றார்கள். அதோடு மாத்திரமல்லாமல் "உங்களுடைய கோரிக்கைகள் ஒருநாளும் பயனற்றுப் போகாது என்பதை இந்தக் கூட்டத்தில் உறுதியோடு சொல்கிறேன்" என்று அன்றையதினம் வாக்குறுதி அளித்தார்கள். நேஷனல் பே கமிஷன் அமைப்பது பற்றியும், வீடு கட்டக் கடன், சைக்கிள் வாங்கக் கடன் குறித்தும் பேசப்பட்டது. மாநிலத்தினுடைய வருவாய் குறைவு. ஆதலால், மத்திய சர்க்காரால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் இந்தக் கடன்களை ஆசிரியர்களுக்குத் தனி லோனாக வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதுபற்றி என்னுடைய துறை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்கிற வாக்குறுதியும் அந்த மாநாட்டிலே அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் இன்னொரு மாநாட்டை எப்படி வெற்றிகரமாக நடத்திக் காட்ட எண்ணினார்களோ அது போல் எங்களுடைய அடுத்த மாநாடும் வெற்றிகரமாக நடைபெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும் எங்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்கான ஏற்பாட்டினை ஏற்படுத்தித் தருவதுடன் எங்களுடன் இங்கே பணியாற்றுபவர் என்கிற முறையில் இதுகுறித்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 28]

திரு. ஜேப்பியார்: ஆசிரியர்களுடைய தலையாய கோரிக்கை தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்பது தான். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. அதுகுறித்துப் பேச டெல்லிக்குச் சென்றார்களே, அங்கீகாரம் கிடைத்து விட்டதா?

திரு. செ. முத்துசாமி: இந்தப் பிரச்சினையை ஏற்கெனவே [illegible] எழுப்பியிருக்கிறார்கள். அதுகுறித்துச் சொல்கிறேன். சட்ட அமைச்சர் அதுகுறித்து வாக்குறுதி அளித்திருக்கிறார். மைனாரிட்டிப் பள்ளிகளில் ஆசிரியர்கள் எந்த அளவுக்குச் சூறையாடப்படுகிறார்கள் என்பது குறித்துக் குறிப்பிடும்போது "free to administer" என்ற தத்துவத்தை மிகக் கடுமையாக எதிர்த்தார். அவர்களுக்கு 'டோட்டல் பிரான்சைஸ்' அளிக்க வேண்டும் என்பது தான் அரசியல் அமைப்புச் சட்டத்தின் நோக்கம் என்று குறிப்பிட்டார்.

"As a responsible member of the Central Cabinet, I endorse your resolution. I know how to do it. I will do it." என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "மத்திய அரசில் அங்கம் வகிக்கின்ற ஒருவர் என்கிற முறையில் நான் இந்தத் திருத்தங்களைச் சிபாரிசு செய்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். 'இதை நான் செய்வேன்' என்று அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் சொன்னதை நான் இங்கே தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே, ஆசிரியர்களுக்கு வாக்குரிமையைத் தர வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் வாக்குறுதியாகத் தந்திருக்கிறார்கள். இந்த அரசும் அதற்கான உரிமையைப் பெற்றுத் தர வேண்டுமென்று நாங்கள் நடத்துகின்ற எல்லாக் கூட்டங்களிலும் தீர்மானமாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். இந்த அரசுக்கும் அதில் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால், பிரச்சினை தீரும் வகையில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்றைக்குக் கூட மைனாரிட்டி ஸ்தாபனங்கள் என்றால், அவர்களுக்கு என்று சில அதிகார வரம்புகள் இருப்பதாகப் பேசப்படுகிறது. கேரளாவிலே சங்கடங்களையெல்லாம் போக்கி நல்ல முறையில் செய்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து இதை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிற இந்த கால கட்டத்தில் பஸ்களில் திருக்குறளை எழுதியிருக்கிறார்கள். அந்தத் திருக்குறள்களிலே பிழைகள் இருக்கின்றன. சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நீலகிரியில் ஓடுகின்றன. அந்தப் பேருந்துகளில் எழுதப்பட்டுள்ள குறள்களில் பல பிழைகள் இருப்பதைப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர்

டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஒரு கட்சித் தேர்தலுக்கு அங்கே வந்திருக்கிறார்கள். அதைத் தயவு செய்து உறுப்பினர் அவர்கள் கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் திருவள்ளுவருடைய குறள்களை பஸ்களில் எழுதுகிறார்கள் என்பதை நான் கேட்கவில்லை. வள்ளுவர் குறளை பஸ்களில் எழுதும்போது, பிழையாக எழுதுகிறார்களே என்கிற வருத்தத்தில்தான் நான் இதை இங்கே சொல்கிறேன். இப்படிப் பிழையாக எழுதுவதை விட எழுதாமல் விட்டால் தான் அது திருவள்ளுவருக்குச் செய்யும் நன்மையாக இருக்கும். ஆகவே, தயவுசெய்து திருக்குறளை எழுதுவதாக இருந்தால், பிழை இல்லாமல் எழுதுவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்யுங்கள். இதற்காக ஒரு பார்ட் டைம் தமிழ் ஆசிரியரை இந்த அரசு நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர் சரி என்று சொல்லிய பிறகு, குறளை அப்படியே பஸ்களில் பார்த்து எழுதுவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கு சலுகை என்று அறிவித்திருக்கிறது இந்த அரசு. அதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அறிவித்துள்ள சலுகைகள் எப்படிப்பட்டவைகள் என்பதை நான் இங்கே தெளிவு படுத்துகிறேன். அரசு ஊழியர்களுக்கு சலுகைகள் தனி நபர்க் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் தரப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு நபர்க் குழுவினுடைய சிபாரிசு என்ன என்பதை இந்த மன்றத்திலே அரசு வைக்க வேண்டாமா? மூன்றாவது ஊதியக் குழு சிபாரிசு செய்வதையெல்லாம் அரசு அமுல்படுத்தாததால், முன்பு போராட்டத்தில் குதித்தார்கள். இப்போது முரண்பாடுகளைக் களைய என்று நியமிக்கப்பட்ட குழு தன் அறிக்கையை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. ஒரு நபர்க் குழுவின் சிபாரிசின் அடிப்படையிலே சலுகைகளை அளித்திருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. அப்படி இருக்கும்போது, இந்த அறிக்கையை அவையிலே வைப்பதில் என்ன சிரமம் அரசுக்கு இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். தயவுசெய்து அறிக்கையை அவையிலே வையுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதில் இருக்கிற விஷயங்களையெல்லாம், சிபாரிசுகளையெல்லாம் அரசு நினைத்தால் அமுல்படுத்தவும் செய்யலாம், அமுல்படுத்தாமலும் இருக்கலாம். முதலிலே ஓய்வு பெறும் வயது 55 என்று இருந்தது. 55 வயதை 58 வயதாக உயர்த்தவில்லையென்று முதலிலே மந்திரி சபை கூடி முடிவு செய்தது. இதற்கு முன்பு ஆட்சியிலிருந்த இதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மந்திரி சபைதான் அப்படி முடிவெடுத்தது. அதற்குப் பிறகு, மீண்டும் ஒரு முறை கூடி இதே மந்திரி சபை அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்





வயது 55 என்று முடிவு செய்தது. இதன் காரணமாக பல பிரச்சினைகள் அரசுக்கு ஏற்பட்டன. சி. அண்ட் டி.-யில் இருப்பவர்கள் எல்லோருக்கும் 58 வயது என்று இருப்பதை ஏற்கவில்லை. இப்போது 58 வயது என்று ஆக்கியிருப்பதால் என்ன நிலைமை என்றால், ஹார்ட் அட்டாக், பிளட் பிரஷர் உள்ளவர்கள் எல்லாம் இன்னும் மூன்று வருடம் இருக்கிறதே, பார்க்கலாம் என்று சொல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய அதிகாரிகளுக்குக்கூட 58 வயது வரை என்று இருப்பது தேவைதானா என்பதைப்பற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரும்பவும் இதைப்பற்றி அரசு முடிவு செய்தது.

**திரு. ஜேப்பியார் :** ஆசிரியர்களுக்கு 58 என்று இருப்பதை 56 ஆகக் குறைப்பதிலே தனக்கு ஆட்சேபணையில்லையென்று உறுதியளிக்க உறுப்பினர் தயாரா ?

**திரு. செ. முத்துசாமி :** ஆசிரியர்களுக்கு 58 வரை என்று ஆண்டு ஆண்டு காலமாக, பழைய காலத்திலேயிருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை உறுப்பினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆண்டாண்டு காலமாக ஆசிரியர்களுக்கு ஓய்வுபெறும் வயது 58 தான். எங்களுக்கு அது உயர்த்தப்படவில்லை. ஆகவே குறைப்பது பற்றிய பிரச்சினையும் எழாது. ஆனால் இந்த அரசாங்கம் 58 ஆக உயர்த்தியுள்ளவர்களுக்கு ஏதாவது சங்கடம் இருந்தால், அதைக் குறைக்கலாம். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், ஒரு அரசாங்கம் முதலில் ஒரு முடிவெடுத்து பிறகு மீண்டும் அதைத் திருத்துவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. அதேபோல முதலில் ஒரு முடிவை அறிவித்து விட்டு பிறகு வேறொரு கன்செஷனைக் கொடுப்பதற்கும் அரசுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே இந்த ஒரு நபர்க் குழுவினுடைய அறிக்கையை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை இதுவரை ஏன் அரசு வெளியிடவில்லை? இங்கே மாண்புமிகு முதலமைச்சர் இல்லாவிட்டாலும் கூட, அவை முன்னவர் இருக்கிறார். மாண்புமிகு அவை முன்னவர் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்வார் என்கிற நம்பிக்கையில் நான் இதை வேண்டுகோளாக வைக்கிறேன்.

அடுத்து, இங்கே செலக்ஷன் கிரேட் பதவிக்கு குறைந்தபட்ச ஊதிய உயர்வு கீழே இருப்பவர்களுக்கு 10 ரூபாய் என்றும் அதற்கு மேல் இருப்பவர்களுக்கு 15 ரூபாய் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களிலே கீழ் மட்டத்தில் இருக்கிற பியூன்களுக்கும் ஒரே சம்பள விகிதங்கள் கொடுக்கப்படுகின்றன. கீழே இருப்பவர்கள் எல்லாம்

ஊழியர்கள் என்று பார்த்தால் அரசாங்கம் பல காரியங்களைச் செய்கிறது? உத்தியோகத்தில் கீழ் மட்டத்திலே இருந்து கொண்டு, ஊதியத்திலும் குறைந்த சம்பளத்தைப் பெறுகின்றவர்களுக்கு, கஷ்டப்படுகிறவர்களுக்குக் குறைந்த பட்சம் வாழ்க்கையை ஓட்டுவதற்குரிய சம்பளத்தையாவது வழங்க வேண்டாமா? கடைசியில் இருக்கிற நான்கு கேட்டகரிகளை மட்டும் எப்போதும் அப்படியே விட்டுவிடுகிறார்கள். மந்திரிசபையில் முடிவெடுக்கும் போது கூட அங்கேயும் பியூன்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தாவது கொடுக்க வேண்டாமா? ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கும்போது குறைந்தபட்சம் 10 ரூபாயாவது அதிகமாக வழங்க வேண்டும் என்று இந்த அரசு சொல்லாமல் இருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? ஆகவே இளைநிலை ஆசிரியர்களுக்கும் குறைந்தபட்சம் 10 ரூபாய் உயர்வு அளிக்கவேண்டுமென்று திருத்தம் கொண்டுவர வேண்டும். இந்த ஆட்சி அப்படிக் கொடுத்து பெருமை பெற வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன். நான் முதலமைச்சர் அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் "சாதாரண மக்களுக்காக நீங்கள் ஏன் பேசக்கூடாது?" என்று என்னிடம் கேட்டிருக்கிறார். அந்த வகையில் இளநிலை ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகையினை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செலக்ஷன் கிரேடு பதவிகளுக்கு 10 ரூபாய் வழங்கப் போகிறது இந்த அரசு. ஆனால் ஸ்பெஷல் கிரேட் டீச்சர்களுக்கு என்ன கொடுக்கப் போகிறது இந்த அரசு? முதலில் 10 வருடப் பணி முடித்து விட்டால் செலக்ஷன் கிரேட் பதவியும் 10 ரூபாய் ஊதிய உயர்வும் கிடைக்கிறது. அதற்குப் பிறகு மேலும் 10 வருடம் பணி முடித்த பிறகு என்ன கொடுக்கப் போகிறார்கள் என்பதுபற்றித் தெரியவில்லை. மூன்றாவது பே கமிஷன் கொடுத்த சலுகையை ஒரு பிரிவினருக்குக் கொடுத்து விட்டு இன்னொரு பிரிவினருக்குக் கொடுக்கவில்லை. மகனுக்குக் கொடுத்த சலுகையை அப்பனுக்குக் கொடுக்க வேண்டாமா? மனைவிக்குச் செலக்ஷன் கிரேட் இருக்கிறது. ஆனால், கணவனுக்கு செலக்ஷன் கிரேட் இல்லை. கணவன் அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் பணியாற்றுவதால் அவருக்குச் சம்பளம் குறைவு. மனைவி மானாகிட்டி பள்ளிக்கூடத்தில் பணியாற்றுவதால் சம்பளம் அதிகம். யாராவது வீட்டுக்கு வந்தால் "மனைவிக்குச் சம்பளம் அதிகம், ஆகவே அவருக்கு மதிப்பு கொடுங்கள், நான் அரசாங்கப் பள்ளியில் பணியாற்று கிறேன், ஆகவே எனக்குச் சம்பளம் குறைவு". என்று சொல்லுகிறான். பயிற்றுவித்த ஆசிரியருக்குச் சம்பளம் குறைவு, ஆனால், மாணவனுக்குச் சம்பளம் அதிகம். நாவலரால் தான் செலக்ஷன் கிரேட் கிடைத்தது என்று அவர்கள் சொல்கிறார்கள்.





(முற்பகல் 11-30)

இன்றைக்கும் அதே நிலைதான் நீடிக்கிறது. எனவே 20 ஆண்டுக்காலம் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களுக்கு ஸ்பெஷல் கிரேடு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேர்வு நிலைக்கு வந்து 10 ஆண்டுகள் கழித்துத்தான் சிறப்பு நிலை என்பதால் இப்போது தேர்வு நிலையில் இருக்கும் ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை ஊதியம் கிடைக்க இயலாமல் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி 20 ஆண்டுக் காலம் பணியாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் சிறப்பு நிலை ஊதியம் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு அகவிலைப் படி உயர்வு அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். என்றாலும், இது குறித்து அரசின் கொள்கை ஏற்கெனவே தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்தும், அதிலிருந்து அரசு பின்வாங்குவது சரியல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எப்போதெல்லாம் மத்திய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்வை அளிக்கிறதோ அப்போதெல்லாம் மாநில அரசும் அதன் ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்வை அளிக்கும் என்று சொல்லி விட்டு, இப்போது ஒரே ஒரு தவணை அகவிலைப் படி உயர்வை மட்டும் கொடுத்திருப்பது எந்த வகையில் நியாயம் என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, ஊதியவிகிதத்தில் கூட இந்த மாநிலத்தில் இருக்கிற முரண்பாட்டை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நமது அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் ஒரு ஹையர் கிரேட் ஆசிரியரின் ஊதியம் 400 ரூபாய். ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியரின் ஊதியம் ரூ. 450, இது 1—4—1978 முதல் இருந்து வரும் நிலை. நம் மாநிலத்திலிருந்து பிரிந்து சென்ற மாநிலம் ஆந்திர மாநிலம், ஆனால் அந்தச் சேய் மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு அதிகமான ஊதியம் கிடைக்கும்போது, தாய் மாநிலமான நமது மாநிலத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குறைந்த ஊதியம்தான் வழங்கப் படுகிறது என்றால், இதற்குக் காரணம் என்ன? அதைப்போலவே நமது தாய் மாநிலத்திலிருந்து பிரிந்துபோன சேய் மாநிலமான கேரளத்தில் ஆசிரியர்கள் அதிகமான ஊதியத்தைப் பெறும்போது, நமது மாநிலம் மட்டும் இதில் பின்தங்கியிருக்கிறது என்றால், அதற்கு என்ன காரணம்? அதைப் போலவேதான் அகவிலைப் படி வாங்குவதிலும் நாங்கள் ஏமாந்தவர்களாக இருக்கிறோம். மத்திய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு அகவிலைப் படியில் உயர்வு கொடுக்கும்போது, மாநில அரசும் அவ்வாறு தன் ஊழியர்களுக்குக் கொடுக்கும் என்று கொள்கை ரீதியாக அறிவித்துவிட்டு, இப்போது ஒரு அகவிலைப் படி உயர்வை மட்டும் கொடுக்கிறோம் என்றால், அது என்ன

நியாயம்? மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு உயர்வை வழங்கிய தேதியிலிருந்து தானே விலைகள் நமக்கும் உயருகின்றன? இதைக் கேட்டால் நமது சகோதரர்களும், அமைச்சர் பெருமக்களும் எங்களைப் பார்த்து, "நமது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு நாம் நல்லதைச் செய்ய வேண்டாமா? ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்ய வேண்டாமா?" என்று கேட்கிறார்கள். வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், அரசு ஊழியர்களுக்கு என்று சில விதிமுறைகளை வைத்துவிட்டு, அவர்களுக்கு நாங்கள் இன்னின்னதைச் செய்வோம் என்று வாக்குறுதி அளித்துவிட்டு, சட்ட ரீதியான சில நிலைமைகளை உருவாக்கிவிட்டு, அதை இந்த அரசு அமுல்படுத்த மறுக்கிறது என்றால், என்ன அர்த்தம்? அரசே தன்னுடைய கொள்கைகளை மீறி, வாக்குறுதிகளை மீறிச் செயல்பட்டால், நாங்கள் யாரிடம் வந்து புகார் செய்வது? இந்த மாமன்றத்திடம்தானே வந்து சொல்ல முடியும்? அரசாங்கத்தின் கொள்கை அறிவிப்பை அரசாங்க இயந்திரமே மீறுவதா? இதையெல்லாம் சீர்திருத்த வேண்டாமா? எனவே இதையெல்லாம் சீர்திருத்த வேண்டும், ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் மூன்று அகவிலைப் படி உயர்வைக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அவையில் இல்லையென்றாலும், மாண்புமிகு முன்னவர் அவர்கள் இதை அவர்களுக்கு எடுத்துத் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கையில் நான் இதைச் சொல்கிறேன். ஒப்புக்கொண்ட கொள்கையின் அடிப்படையில் இதை வழங்கிட வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஈட்டிய விடுப்பை ஒப்படை செய்யும்போது நகர்ப்புறங்களில் பணியாற்றுகிறவர்களுக்குப் பயன் ஏற்படும் வகையில் வீட்டு வாடகைப் படியும், நகர ஈட்டுப் படியும் நன்கொடையாகக் கிடைக்க இருக்கிறது என்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்குப் பயணச் சலுகை வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 240 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள இடங்களுக்கு, அரசு ஊழியர்கள் தங்கள் குடும்பத்துடன் 15 நாள் ஈட்டிய விடுப்பில் சென்றால், அதற்கான ஒரு வழிப் பயணத் தொகையை அரசே மேற்கொள்ளும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மிகவும் மரியாதை கொண்டவரும், அவரது படங்களின்மீது நிரம்ப அன்பு



கொண்டவருமான, கருநாடக மாநிலத்தின் முதல்வரான மாண்புமிகு திரு. குண்டுராவ் அவர்கள் தமது மாநிலத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு சலுகையை ஏற்கெனவே வழங்கியிருக்கிறார். அதன்படி அம்மாநிலத்தில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, தங்கள் குடும்பத்துடன் இந்தியா முழுவதும் பயணம் செய்து—அது 4,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு என்று வரையறை செய்யப்பட்டுள்ளது—தங்களின் பொது அறிவை வளர்த்து இன்னும் கூர்மையாக்கிக் கொள்ளும் வகையில் அரசே அதற்கான செலவை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் நமது மாநிலத்தில் 240 கிலோ மீட்டருக்கு மேல் சென்றாலும், தமிழகத்தைத் தாண்டிச் செல்லக்கூடாது என்று சொல்லப்படுமானால், நமது மாநில முதலமைச்சர் அவர்கள் எவ்வாறு நமது ஆசிரியப் பெருமக்கள் தங்கள் கல்வியறிவைக் கூர்மையாக்கிக்கொள்ள முடியும் என்றோ, வளர்த்துக் கொள்ள முடியுமென்றோ கருதுகிறார் என்பது எனக்குப் புரியவில்லை. ஏற்கெனவே ஆசிரியப் பெருமக்களைப் பொறுத்தவரையில், ரயிலில் பாதிக் கட்டணத்தில் பயணம் செய்யச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதை முழுமையாகத் தர வேண்டும் என்று மத்திய அரசின் ரெயில்வேத் துறையைச் சார்ந்த ஸ்டேட் அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு கோரிக்கை விடுத்து, அவரும் அதைத் தன்னுடைய துறை அனுதாபத்தோடு பரிசீலிக்கும் என்று வாக்குறுதியளித்திருக்கிறார்கள். எனவே ஆசிரியப் பெருமக்கள் இந்த மாநிலத்தில் மட்டும் சுற்றுப்பயணம் செய்து தங்கள் கல்வியறிவைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்ற கருத்தை மாற்றிக் கொண்டு, மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல் பயணச் சலுகைகள் வழங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் ஆசிரியப் பெருமக்கள் நல்ல, கூர்மையான கல்வியறிவைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தச் சலுகையைப் பொறுத்தவரையில், இது ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடாது என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். காரணம் ஆசிரியப் பெருமக்களுக்கு 15 நாள் ஈட்டிய விடுப்பு என்பது கிடைக்காது. எனவே இப்படி ஒரு கன்செஷன் கொடுத்துவிட்டு, அதை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையை ஆசிரியர்களுக்கு உருவாக்கினால், அது நல்லதல்ல. அதிலும் ஒருவழிப் பயணத்திற்கு மட்டும் சலுகை தரப்படும் என்பதும் சரியல்ல. ஒரு ஊழியர் தன் குடும்பத்தோடு ஒரு இடத்திற்குச் சென்றால், அங்கேயே தங்கிவிட வேண்டுமா என்று தெரியவில்லை. அரசாங்கத்திடம் அரசாங்கப் போக்குவரத்து நிறுவனம் இருக்கிறது. பெரும்பாலான கவர்ன்மெண்ட் சர்வெண்ட்களுக்கு முதல் வகுப்புப் பயணத்திற்கான தகுதி இருக்கிறது. இருந்தாலும் அனைத்து ஊழியர்களும் அரசாங்கப் போக்குவரத்து பஸ்கள்

மூலம் எங்கேயும் சென்று வரலாம் என்று போட்டுவிட்டால், அவர்கள் கஷ்டமில்லாமல் எங்கே வேண்டுமானாலும் சென்றுவர ஏதுவாகும். வேண்டுமானால் தூரத்தைக் குறைத்துவிடலாம். அப்படிச் செய்வோமானால், அரசாங்கம் அந்தத் தொகையை "ரி-இம்பர்ஸ்" செய்ய வேண்டிய அவசியம் கூட இருக்காது. தற்போது சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சலுகையைப்போல் அவர்களுக்கும் செய்து கொடுக்கலாம். எனவே ஒரு வழிப் பயணத்திற்கான சலுகை என்று சொல்லியிருப்பதை மறுபரிசிலனை செய்ய வேண்டும். இதையெல்லாம் அரசு நினைத்தால் சாதாரணமாகச் செய்து முடித்துவிடலாம். ஆனால் முத்துசாமி சொன்னாரே என்பதற்காக இதைப் பரிசிலனையே செய்ய முடியாது என்று ஒதுக்கித் தள்ள வேண்டியதில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும் போது, இங்கே உள்ள நிர்வாக இயந்திரம் எந்த அளவுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி விளக்கினார்கள். அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் போராட்டத்தின்போது கல்வி இலாக்காவின் டைரெக்டர் 10 நாட்களுக்குள் ஒரு குறிப்பிட்ட காரியம் நடைபெற்றுவிடும் என்று அறிவிக்கிறார். ஆனால் அதைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் நான் திரும்பத் திரும்பக் கேட்டுப் பார்த்தேன். அது எத்தனை நாட்களுக்குள் நடைபெறும் என்று சொல்ல முடியாது என்று சொல்லி விட்டார். இப்படி ஒரு துறையின் தலைவர், கல்வித் துறைக்கே அமைச்சராக இருக்கிறவர் குறிப்பிட்ட காலத்தைச் சொல்ல முடியவில்லை என்றால், நாம் எதற்காக அரசு இயந்திரத்தை வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. இந்தக் காலவரையறைக்குள் இது நடைபெறும் என்று நம்மால் சொல்ல முடியாது என்றால், இந்த அரசாங்க இயந்திரம் இருந்து தான் என்ன பயன்?! கல்வி இலாக்காவைப் பொறுத்த வரையில், விழாக்களுக்கோ பஞ்சமில்லை. தவறாமல் விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு பள்ளியின் நிருவாகத்தினர் ஓர் ஆசிரியரை வேலை நீக்கம் செய்துவிட்டு, அதற்குப் பிறகு கல்வி இலாக்காவின் அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து பள்ளியிலே விழா நடத்தினால், அந்த விழாவையொட்டி அவருக்குப் போடப்படுகிற மாலையும் விருந்தும் அவருடைய நினைவில் நின்று கொண்டு, அந்த நிருவாகத்தைப்பற்றிய பேப்பர் அவருடைய அலுவலகத்தைவிட்டே நகர மறுக்கிறது. இப்போதுதானே நாம் அங்கே போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்தோம். அதற்குள் அவர்கள்மீது நடவடிக்கையா? கொஞ்சம் காலம் பொறுத்துப் பார்க்கலாம் என்று பேப்பரை எடுத்துவைத்து



விடுகிறார். ஓர் அரசாங்க உத்தியோகஸ்தர் அரசாங்க வாகனத்தில் பயணம் செய்யாமல், பள்ளி நிருவாகங்கள் அனுப்பும் பெரிய பெரிய கார்களில் பயணம் செய்தால், அத்தகைய நிருவாகங்கள் தவறு செய்தால்கூட, அவர்களால் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? இப்படிப்பட்ட நிலைமை கல்வித் துறையில் இன்றையதினம் சாதாரணமாக நிலவி வருகிறது.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, இங்கே 60 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் 50 சதவிகிதத்திற்கு மேல் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட மக்களைப்பற்றியெல்லாம் நாம் சிந்திக்க வேண்டாமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதையொட்டி, நான் சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அரிசன மக்களுக்கு என்று நாம் இப்போது வீடு கட்டித் தரும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே நான் அரசை அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், அரிஜன மக்களைப் போலவே விவசாயக் கூலிகளாக இருக்கும் மக்களை நாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? காலை முதல் மாலை வரை தோட்டத்திற்குச் சென்று பாடுபட்டு, அன்றாடம் கஞ்சிக்கே வழியில்லாமல் நலிந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கும் நாம் வீடு கட்டித் தரும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டாமா? அதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வரக்கூடாதா? கோவணத்தைக் கட்டிக்கொண்டு

(முற்பகல் 11-40)

வாழ வழியில்லாமல் வீதியில் இருப்பவர்களை நினைத்துப் பாருங்கள்; அரிசன மக்களுக்கு நிறைய செய்யுங்கள்; அவர்களுக்கென்று தனியாகத் திட்டத்தை வையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்த வரையில், பங்களாவைக் கட்டிக்கொண்டு குளிர் சாதன வசதியை வைத்துக்கொண்டு ஒரு சிலர் வாழ வழியுண்டு. ஆனால், அவர்களுடைய வீட்டிற்கு வெளியே வீதியில் சாக்கடை ஓரங்களில் ஆடுமாடுகளைப்போல நாட்டு மக்கள், சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் வாழ்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கெல்லாம் நான் யாரையும் தனிப்பட்ட முறையிலே குறை சொல்ல விரும்பவில்லை. அரசாங்க இயந்திரத்தின் மூலம் இத்தனை காலம் கொள்கைகள் அறிவிக்கப்பட்ட பின்னரும், இத்தனை தேர்தல்கள் நடந்த பிறகும், இந்த நாட்டில் நிலைமைகள் இப்படியே நீடிக்குமானால், இனி வழிதான் என்ன?

[திரு. செ. முத்துசாமி] [1981 மார்ச் 28

முன்பெல்லாம் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று நினைப்பார்கள். இப்படி நீண்டகாலம் கடவுளை நினைத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். கடவுளைப் பற்றி வசதியுள்ளவர்களுடைய மனதிலே பயம் இல்லை. வசதியுள்ளவர்கள், மேலும் வசதியைப் பெறப் பெற அதிகாரிகளையும், அமைச்சர்களையும் விலைக்கு வாங்கிவிடுகிறார்கள். இப்படிச் செய்வதற்காகத்தான் அவர்கள் விழாக்கள் நடத்துகிறார்கள், பெரியவர்களைக் கூப்பிடுகிறார்கள், அமைச்சர்களைக் கூப்பிடுகிறார்கள். அப்படி கூப்பிட்டு அமைச்சர்களைத் திருப்திப்படுத்துகிறார்கள். அவர்கள் இப்படி நடப்பதில் உள்ள கோளாறுகளைப்பற்றி சமுதாயக் கண்ணோட்டத்தோடு சந்திக்கும்போது இவ்வளவு பெரிய ஏற்றத் தாழ்வுகள் இருப்பது நியாயம்தானா? இதைத் தீர்க்க வழி என்ன? இதற்காக மாநில அரசு தன்னுடைய திட்டத்தின் மூலமாக என்ன செய்திருக்கிறது? இவ்வளவு பெரிய இடைவெளியைப் போக்க புரட்சிகரமானதொரு திட்டம் வேண்டாமா? சமுதாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டாமா? சமுதாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்க இந்த பட்ஜெட்டிலே என்ன இருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கக் கூடிய விலைவாசி ஏற்றத்தால் மக்கள் எல்லோரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே விலை ஏறிக் கொண்டே இருக்கிறது, அதனாலே பாதிக்கப்பட்டவர்கள் கூக்குரலை எழுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். மறு பக்கத்திலே விவசாய விளைபொருள்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை, வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது, வறட்சி இல்லாத காலங்களில் நோய் வந்து பயிர்கள் பாழாகியிருக்கின்றன, ஆகவே, விவசாயிகளுக்குச் சலுகைகளை வழங்க வேண்டும், பாதுகாப்பு வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, அந்த மக்கள் அன்-ஆர்கனைஸ்ட் செக்டாராக இருந்து, பிறகு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு ஆர்கனைஸ்ட் செக்டாராக மாறி குரல் கொடுத்து எழுந்து நிற்கும்போது. எந்த ஆட்சியாக இருந்தாலும் அவர்கள் மீது கோபப்படக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். சில நேரங்களில் மக்களுக்காக இருக்கக் கூடிய சங்கங்கள் நடவடிக்கை எடுக்கும்போது தீவிரமான நடவடிக்கையில் ஈடுபடலாம். நாட்டுக்கு நாடு இருக்கக்கூடிய அராஜகங்களைப் பார்க்கும்போது, நாட்டுக்கு நாடு அடிமைப்படும் சூழ்நிலை இருக்கும்போது, ஒரு சாதாரண சமுதாயம், ஆயுதங்கள் கையில் இல்லாமல் அரசாங்கத்தோடு போட்டி போட்டு மன்றாடிக் கேட்கும்போது கோபப்படக் கூடாது. சில சமயங்களில் சண்டை போட்டுக் கேட்பார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் ஒரு சில பேருக்கு மட்டும் பாதுகாப்புக் கொடுத்துவிட்டு மற்றவர்



1981 மார்ச் 28] [திரு. செ. முத்துசாமி]

களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலையை உருவாக்கும்போது, அந்தப் பாதுகாப்பையே பயன்படுத்தி பயங்கரமான வேலைகளைச் செய்கிறார்கள். போராட்டத்தின்போது வீட்டில் இருக்கக் கூடிய பெண்களையெல்லாம் தூக்கித் தூக்கி அடித்த காட்சியைச் சென்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போதும் சொன்னேன், இப்போதும் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு நிறைய சலுகைகள் அளித்ததன் மூலம்தான் இந்தப் பற்றாக் குறையே ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். நீண்டகாலமாக குறைவாகப் பெற்று வந்தவர்கள் திரும்ப எழுந்து வந்து, விவரம் புரிந்து வரும்போது சற்று வேகமாகத்தான் இருப்பார்கள். பொதுவாக ஒருவரை நீண்டகாலமாக ஏமாற்ற முடியாது. இத்தனை காலம் ஏமாந்து இருக்கிறாய், இவ்வளவு வேகமாக இருக்கிறாய், எழ வேண்டாமா என்று சொல்லும்போது, உணர்ச்சி தானாகவே வரும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் நிச்சயமாக அதைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்தாற்போல நடக்க வேண்டும். சென்ற முறை நாங்கள் கருத்தைத் தெரிவித்தபோது அவர்கள் கொஞ்சம் வேகமாகப் பேசினார்கள். இந்த முறை அவ்வளவு வேகம் இல்லை. இந்த பட்ஜெட்டிலே சில நன்மைகள் செய்திருக்கிறார்கள். இன்னும் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எல்.ஏ.-வாக இருந்தாலும், எம்.எல்.சி.-யாக இருந்தாலும், தன்னிடம் வருகிற பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு அலுவலகம் இருக்க வேண்டுமா, வேண்டாமா? இது சாதாரண கேள்வி. வேண்டும் என்று சொல்வதைத் தவிர வேறு விதமாகப் பதில் சொல்ல முடியாது. இப்போது வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் 50 ரூபாய் அளிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு மேலும் 150 ரூபாய் கொடுத்து அவர்களை இந்த அலுவலகங்களில் நியமித்தால், அவர்களுக்கும் வேலை கிடைக்கும். அவர்களை எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அதைப்போலவே டைப்ரைட்டர்களையும் கொடுக்கலாம். அது அரசாங்கத்தினுடைய சொத்தாகவே இருக்கலாம். போகும்போது அலுவலகத்திலேயே ஒப்படைக்க வேண்டும் என்று வைக்கலாம். ஒவ்வொரு இடத்திலும் பஞ்சாயத்து ஆபீஸ், முன்சிப் ஆபீஸ் என்று அலுவலகங்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் உறுப்பினர்களுக்கு ஓர் அலுவலகம் ஏற்படுத்தித் தந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைப் பார்த்து மக்கள் விண்ணப்பம் கொடுப்பதற்கு உதவியாக இருக்கும். அப்படிக் கொடுக்கும்போது அவர்களுக்கும் ஒரு மனத்திருப்தி கிடைக்கும். அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க காலம் ஆனாலும், மனுவைக் கொடுத்த திருப்தியாவது அவர்களுக்கு இருக்கும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போதிய நிதி வசதிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த மனத்திருப்தியாவது அவர்களுக்கு இருக்க

வேண்டுமா, இல்லையா? இந்த ஏற்பாட்டுக்கு எத்தனை இலட்சம் ரூபாய் ஆகும்? தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைப் பார்த்து மனுக்களைக் கொடுத்துவிட்டு வந்தால் பதில் வரும் என்று நினைப்பார்கள். இந்த அமைச்சரவையைப் பொறுத்த வரையில், மத்திய அரசு கடைப்பிடிக்கும் நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அமைச்சருக்கோ, அமைச்சரவையில் உள்ள அதிகாரிகளுக்கோ ஒரு கடிதம் எழுதினால்—எழுதுபவர் வி.ஐ.பி.-யாக இருக்க வேண்டியதில்லை, சங்கத்தின் சார்பாக எழுதினால்கூட—பதில் வருகிறது. ஆனால், மாநில அரசிலிருந்து, ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-வாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியினராக இருந்தாலும் சரி, சங்கப் பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி, யார் எழுதினாலும், பதில் வருவதில்லை. இது ஜனநாயக நடைமுறைதானா? இல்லையென்றால், இல்லை என்று பதில் சொல்லட்டும். அப்படிப்பட்ட பதில் வந்தால், "இல்லை" என்று பதில் வந்திருக்கிறது, மறுபடியும் கேட்கிறேன் என்று சொல்ல முடியும். மக்கள் எவ்வளவு காலத்திற்குத்தான் பொறுமையாக இருப்பார்கள்? அவர்களும் மனிதர்கள்தானே. கடைசியில் வேறுவிதமாக ஆகிவிடுகிறார்கள். மனிதர்களுக்கு எவ்வளவுதான் பொறுமை இருக்க முடியும்? இவ்வளவு பெரிய பொறுப்பில், வசதி வாய்ப்புகளோடு இருக்கும்போதே கோபப்படுகிறார்களே! வயிற்றுக்கு சோறும் இல்லாதவர்கள் ஏன் தங்கள் வேகத்தைக் காட்டமாட்டார்கள்? ஆகவே, மக்களுடைய மன உணர்ச்சிக்கு ஆறுதல் தர, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க இந்த வசதிகளைத் தாருங்கள் என்று கேட்கிறேன். நான் ஐந்தாயிரம், பத்தாயிரம் ரூபாய் தர வேண்டுமென்று கேட்கவில்லை. ஒரு ஆபீஸ், அங்கே ஒரு டைப்ரைட்டர், ஒரு ஜூனியர் அசிஸ்டெண்ட்—ஜூனியர் அசிஸ்டெண்ட் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, ஒரு அட்டெண்டரையாவது—தாருங்கள் என்று கேட்கிறேன். இப்படிச் செய்தால், இந்த முதலமைச்சருடைய காலத்திலே இது நடந்தது என்ற பெயர் வராதா? எத்தனை சம்பளம் ஏற்றினாலும், அது பெரிய மாற்றம் ஆகாது. கலைஞர் அவர்கள் இருந்த காலத்திலே 25 ரூபாயை உயர்த்தினார்கள். இவர்கள் வந்து 50 ரூபாயை உயர்த்தினார்கள் என்பதுதான் சொல்வார்கள். ஆகவே இந்த அடிப்படை மாற்றத்தை உண்டாக்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரியானா, பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்த வரையில், அங்கெல்லாம் நல்ல தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே தொழில் வளர்ச்சி இல்லை. பஞ்சாப், அரியானா மாநிலங்களில் தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்குவதில் கட்டுப்பாடுகள் இல்லை. ஆனால் இங்கே தேவையில்லாத கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அங்கே தொழில்கள் வேகமாக



வளர்கின்றன என்றால், அதற்கேற்ப அங்கே நிர்வாக நடைமுறைகள் இருக்கின்றன. பஞ்சாபில் குடிசைத் தொழிலின் மூலமாகப் பந்து, பேட் போன்ற விளையாட்டுப் பொருள்களை அரியானா என்ற கிராமத்தில் 18 கோடி ரூபாய் அளவிற்குத் தயாரிக்கிறார்கள். 18 கோடி ரூபாய் பொருளில் 12 கோடி ரூபாய்க்கான பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அங்கே அத்தனை சலுகைகள் இருக்கின்றன. அதைப் போல இங்கேயும் திட்டமிட வேண்டும். தொழில் ஆரம்பிக்க வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். குடிசைத் தொழிலை அதிகமாக ஆரம்பிக்கலாம். அதற்குப் பிறகு சிறு தொழில்களை ஆரம்பிக்கலாம். அதற்குப் பிறகு நடுத்தரத் தொழில்களை ஆரம்பிக்கலாம். அதற்குப் பிறகு பெரிய ஆட்டோமேடிக் இயந்திரத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். குடிசைத் தொழிலை வளர்ப்பதன் மூலம் நிறைய வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும். ஒரு பெரிய தொழிலை ஆரம்பித்தால், ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்க முடியும் என்றால், அதைவிட குடிசைத் தொழிலை உருவாக்குவதன் மூலம் ஐந்தாயிரம், பத்தாயிரம் பேருக்கு வேலையைக் கொடுக்க முடியும்.

சீன நாட்டின் திட்டம் என்ன என்பதை "தினமணி" பத்திரிகையிலே எழுதியிருந்தார்கள். சிறுசிறு தொழில்களின் மூலம் உபயோகப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள் என்று அந்தக் கட்டுரையில் எழுதியிருந்தார்கள். அந்த நாடு எப்படி முன்னேற்றம் அடைந்திருக்கிறதோ அதைப் போலவே, தொழில் துறையைப் பொறுத்த வரையில், நமது நாட்டில் மறுமலர்ச்சியை உண்டாக்கி அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை வகுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சில நாடுகளில் "உழைக்காதவனுக்குச் சோறு இல்லை, உழைப்பவனுக்குத்தான் உணவு" என்ற சொல்லையே அந்த நாட்டு அரசுகள் குறிக்கோளாக வைத்திருக்கின்றன. ஆனால், இங்கே உழைக்காதவன் சுகமாக இருக்கலாம். டெலிபோன் வைத்துக் கொண்டு என்ன காரியம் வேண்டுமானாலும் செய்யலாம். அவன் உட்கார்ந்த படியே இருக்க அவனுடைய பேங்க் கணக்குக்குப் பணம் போகிறது. இங்கே விடிய விடிய உழைப்பவன் பிள்ளைக்குச் சட்டைத் துணி கூட வாங்கிக் கொடுக்க முடியாமல் இருப்பதைப் பார்த்து சில நேரங்களில் நான் கண் கலங்கியிருக்கிறேன். இந்த மாதிரி சட்ட மன்றங்களுக்கு நாம் எல்லாம்

(முற்பகல் 11-50)

வந்திருக்கிறோம். இந்தச் சட்ட சபைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சாதாரண மக்கள் நிறைய வோட்டுப்போட்டு இந்த அரசு அமைந்திருக்கிறது, இந்த அமைச்சரவை வந்திருக்கிறது. பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம்கூட

நிறைய ஓட்டுக்கள் பெற்று இங்கே வந்திருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஏழையெளிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு முறை என்னிடம் சொன்னார்கள். இப்படிப்பட்ட மக்களுக்குப் பாடுபடுகின்ற அளவுக்கு ஆட்களே இல்லையே என்று வருந்தப்பட்டிருக்கிறார்கள். "நானே என் முதலமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு, அவர்களுக்காக ஒரு இயக்கம் நடத்தலாம் என்று இருக்கிறேன்" என்றார்கள். நான் அவர்களுக்குச் சொன்னேன். "நாங்கள்கூட உங்களுக்கு நிச்சயமாகத் துணை இருப்போம், அதற்கு ஒத்துழைப்போம்" என்று நேரடியாகவே ஒரு உத்தரவாதத்தைச் சொன்னேன். பொதுவாகவே இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம், அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். லஞ்ச ஊழல்கள் நடக்கின்றன என்று அறிவிக்கின்றார்கள். இப்படிப்பட்ட பல சம்பவங்கள் குறித்து தக்க நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கின்றார்கள் ஆனால் அது நடைமுறையில் வருகின்றபோது, எல்லாவற்றையும் விட்டு விடுகிறார்கள். இங்கே பல தவறுகள் நிகழ்கின்றன. மனிதன் என்றால் குறையுடையவன். குறையுடையவன் மனிதன்.

தன்னிறைவுத் திட்டம் என்று ஒரு திட்டம் சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் தன்னிறைவுத் திட்டம். அந்தத் தன்னிறைவுத் திட்டம் தனக்கு நிறைவு தரும் திட்டம், தனக்கு, தனக்குத் தான் திட்டம் என்ற அளவில் முடிவு பண்ணிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம் என்று பஞ்சாயத்து யூனியன்களிலே வந்திருப்பதற்கு சமூக நலத் திட்டம் என்றாவது பெயரை மாற்ற வேண்டும். அவர்கள் அது தங்களுக்கு நிறைவு உண்டாக்குகின்ற திட்டம் என்று நினைக்கிறார்கள். வறட்சியின்போது மக்களுக்கு நிவாரணம் அளித்தல், குடிசைகள் எரிந்துபோய் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல் போன்ற நேரங்களில் எல்லாம் சில பேர்கள் தப்பு செய்கின்றார்களே, அவர்கள் மேல் கொஞ்சம்கூட கருணை காட்டாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதான் என்னுடைய வேண்டுகோள். வறுமையில் மக்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள். வீடுகள் எரிந்துபோயிருக்கின்ற நிலைமையிலே மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வறட்சியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்காக என்று ஒதுக்கிக்கொடுக்கின்ற பணத்திலேயிருந்து ரூ. 5, ரூ. 10 என்று எடுக்கின்றார்களே, அவர்கள் மீது அரசின் பார்வை கடுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கும் நடவடிக்கைகள் சீராக நடக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது என்று கேட்டால், கீழே இருப்பவன் மேலே



இருப்பவனைச் சொல்கிறான், மேலே இருப்பவன், அவனுக்கும் மேலே இருப்பவனைச் சொல்கின்றான். "என் அப்பா, நான் தான் பண்ணுகிறேனா, நாடு பூராவும் தான் நடக்கிறது" என்று சொல்கின்றான். ஆக இப்படியே எல்லாவற்றையும் பொதுமைப்படுத்தி, அதன் மூலமாகவே தவறுகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன.

(பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் முடிக்கும்படி சைகைசெய்தார்கள்.)

ஒரே ஒரு விஷயம். அதைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். சமீபத்திலே கூட, திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் டெலிவிஷனிலே ஒரு பேட்டியிலே சொல்லியிருக்கிறார்கள். நீண்டகாலமாக அரசியலிலே இருந்துகொண்டிருப்பவர். அரசியல் நிர்ணய சபையிலேகூட மெம்பராக இருந்தவர். அவர்கள் ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய தேர்தல் நடைமுறைகளே இந்த நாட்டினுடைய நிர்வாக ஊழல்களுக்கு வழிவகை செய்கின்றன என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம் ஒருவர் எம்.பி. ஆக வரவேண்டுமென்றால், ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ. 20 லட்சம் வரையில் செலவு செய்யவேண்டியிருக்கிறது. அந்த முறையில் வந்தவுடன், இப்படிப் போட்ட பணத்தை எப்படி எடுப்பது என்ற அளவிலே பல நேரங்களில் நிர்வாக ஊழல்கள் ஏற்படுகின்றன. பணம் இல்லாமல் எதுவுமே நடத்த முடியாது என்பதனால்தான் இப்படி நடக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் எவ்வளவு உத்தமமானதாக இருந்தாலும், உத்தமமான கொள்கைகளை வைத்திருக்கக்கூடிய அமைச்சர்களை உடையதாக இருந்தாலும், அரிய கொள்கைகளை வைத்திருப்பதாக இருந்தாலும், தேர்தலுக்கு என்று தனி நிதி வசதி பெறுவதற்கு வழிவகை செய்கிறார்கள். நான் சத்தியமாகச் சொல்கிறேன். இதிலே யாரும் மறுப்பே சொல்ல முடியாது. தேர்தல் நிதி வாங்கவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. அது ஆட்சியிலே இருந்தவர்களாக இருந்தாலும் சரி, இருப்பவர்களாக இருந்தாலும் சரி, இருக்கப்போகின்றவர்களாக இருந்தாலும் சரி, அப்படி இல்லை என்று சொல்ல முடியாது. அதற்குக் காரணம் இன்றைக்கு இருக்கும் தேர்தல் நடைமுறைகள்தான். இந்த மாதிரி தேர்தல் முறை, நடைமுறைகள் இருப்பதால்தான், தேர்தல் நிதி திரட்டுகிறார்கள். அதனால் சலுகைகள் கொடுக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை நான் இங்கே பட்ஜெட்டிலே சொல்வதற்கு, அனுமதித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரையும் மனதில் வைத்துக்கொண்டு சொல்லவில்லை. அப்படி யாரும் என்னைப்பற்றித் தவறாகக் கருதிவிடவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டிலே அப்படிப்பட்ட ஒரு கேவலமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இது யாருக்கும் தெரியாததல்ல. தெரிந்தே இருக்கிறது. அதையே தொடர்ந்து செய்வது தர்மம்தானா என்று மனச்சாட்சியைக் கேட்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

'சிறுமைகள் கண்டு பொங்குவாய்' என்று இளய பாரதத்தினரை நோக்கி பாரதியார் பாடினார். சிறுமைகள் எங்கே இருந்தாலும், கண்டு பொங்கக் கூடியவர்களாக இளய பாரதத்தின் மக்கள் இருக்க வேண்டும் என்று பாரதியார் சொன்னார். சிறுமைகள் தொடர்ந்துகொண்டு இருக்கின்றன. ஆனால் பொங்குவது எங்கும் இல்லை, பொங்குவது எங்கும் இல்லை என்ற நிலை இருக்கிறது. "பாதகம் செய்வோரைக் கண்டால், பயம் கொள்ளல் ஆகாது பாப்பா" என்றார்கள். ஆனால் பயந்து அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருக்கக்கூடிய மக்களைப் பார்க்கிறோம். பாரதி சொன்னது கனவாக இருக்கிறது. நம்முடைய துணைத் தலைவராக இங்கே புலவர் புலமைப்பித்தன் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் பாரதியினுடைய உவமையாக இருக்கிறார்கள். இந்த இளய பாரதத்தினர் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்கின்ற வாய்ப்பினைத் தந்ததற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் பாருங்கள். நிதித் துறையிலே குறைந்திருக்கக்கூடிய சலுகைகளை மாற்றியமையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என் வேண்டுகோள்களை விடுக்கின்றேன். என்னைப் பற்றித் தவறாகக் கருதிக்கொள்ள வேண்டாம். என்னுடைய உள்ளத்திலே உள்ளதை அப்படியே தங்களிடம் வைத்திருக்கிறேன் என்பதைச் சொல்லி எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடந்துகொண்டிருக்கின்ற இந்த விவாதத்திலே கலந்துகொள்கின்ற பெரு வாய்ப்பினை நல்கியதற்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் பெரு மக்கள் ஒவ்வொருவருக்கும் தங்களுடைய மனதில் தோன்றியதற்கு ஏற்ப இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி விமர்சனம் செய்தார்கள். இதிலே ஆலோசனை கூறுகின்ற அளவுக்கு பல பெரியவர்கள் தங்களுடைய ஆலோசனைகளை எடுத்து வைத்தார்கள். அவர்கள் இதைப்பற்றி விமர்சனம் செய்கின்ற நேரத்தில், அவர்கள் ஏதாவது குற்றத்தைச் சொல்ல வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், தான் சேர்ந்த இயக்கத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற அளவில், இதைப்பற்றி பலவிதமாக விமர்சனம் செய்து குறைகளைச் சொன்னார்கள். இதைப்பற்றி



விமர்சிக்கின்றபோது, மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் 'மணம் இல்லாத காகிதப் பூ' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். நான் இந்த மேலவையிலே கேட்பது, காகிதப் பூவிற்கு மணம் ஏதாவது இருக்க முடியுமா என்ற என் சந்தேகத்தை நான் ஆரம்பத்திலேயே எழுப்ப விழைகிறேன். "காகிதப் பூ" என்று சொன்னால், அதிலே மணம் இருக்க முடியாது. மணத்தோடு கூடிய காகிதப்பூ என்று நிதிநிலை அறிக்கையைச் சொன்னால், அதை அவர்கள் காகிதப் பூ கதாநாயகருக்குத் தான் வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற திட்டங்களைப்பற்றி விமர்சனம் செய்கின்றபோது, அதற்கு உபமானம், உபமேயம், உதாரணம் என்று சொல்லிக் குறிப்பிட்டுப் பேசுவது என்றால், அவைகள் எல்லாம் பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி பேசத் தொடங்குகின்றபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வள்ளுவர் பெருந்தகையினுடைய குறளை இங்கே ஆரம்பத்திலே சொல்லி இந்த நிதி நிலை அறிக்கையைத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தத் திருக்குறளை, அந்த பொய்யா மொழியாருடைய குறளை விமர்சனம் செய்யும்போது, மரியாதைக்குரிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. நெடுநாராயணன் அவர்களும், மரியாதைக்குரிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், இப்படி திருக்குறளை இந்த பட்ஜெட்டுக்குச் சாட்சியாக அழைக்கலாமா என்று சொன்னார்கள். அந்தக் குறளை எடுத்துச் சொன்னார்கள்.

"பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்(கு) இவ்வைந்து" என்று சொன்னார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகளிலே ஒரு நாடு இருக்க வேண்டுமென்று இந்த ஆட்சி கருதுகின்றது என்று சொல்கின்ற அளவிலே அதைச் சொல்லியிருக்கிறார்கள் இப்படி ஒரு நாட்டிற்கு 5 அணிகலன்கள் அழகு செய்கின்றன என்று ஆரம்பத்திலே சொல்லி, அப்படிப்பட்ட அணிகலன்கள் இந்தத் தமிழ் நாட்டிற்குத் தேவை என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். அதற்கு மாண்புமிகு அங்கத்தினர் திரு. நெடுநாராயணன் அவர்கள், "பிணியே இல்லையா? ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கின்றதே. ஆஸ்பத்திரியிலே இறந்து செத்த பிணம் இல்லாமல் இருக்கின்றதா? செல்வம் அதிகமாக இருக்கிறதா? விளைவு என்று சொல்லியிருக்கிறதே, விளைச்சல் இருக்கிறதா? இன்பம் என்று சொல்லியிருக்கிறதே, அந்த இன்பம் இருக்கின்றதா, எங்கே இருக்கின்றது? ஏமத்தைப்பற்றிச் சொல்லவே தேவையில்லை" என்று குற்றச்

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1981 மார்ச் 28

சாட்டு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குறளை நாம் சாட்சிக்கு அழைக்கலாமா என்று சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம் இப்படிப் பட்ட 5 அணிகலன்களும் நாட்டிற்குத் தேவை என்ற பெருநோக்கோடு தான் இந்த ஆட்சி இதைச் சொல்கின்றது. அதைத்தான் இந்த ஆட்சி இந்த நிதி நிலை அறிக்கையிலே தெரிவிக்கின்றது என்று சொல்கின்றேன். அதற்குப் பதிலாக நான் ஒரு குறளை இங்கே சொல்லலாம் என்று கருது கிறேன். சாட்சிக்கு அழைக்கலாம் என்று சொல்கிறேன். "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்" என்று சொல்கிறார் வள்ளுவர். எண்ணுவது எல் லாம் சிறப்பான எண்ணமாக, உயர்வான எண்ணமாக இருக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அதன்று நான் இன்னொரு குறளை அழைக்க லாம் என்று நினைக்கிறேன்.

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"

என்று சொல்லியிருக்கின்றார்கள். இரண்டு வேடர்கள் காட்டிலே வேட்டைக் குப் போகிறார்கள். ஒருவன் முயலைத் துரத்திச் செல்கிறான். இன்னொருவன் தன்னை எதிர்த்து வருகின்ற ஒரு மதயானையை எதிர்க்கின்றான். முயலைத் துரத்திச் செல்கின்றவன், முயலை அடித்துத் தூக்கி வருகிறான். ஆனால் மத யானையை எதிர்த்து நிற்கின்றவன் தன் கையிலே இருக்கின்ற வேலை மத யானையின் முகத்திலே எறிந்து, அந்த வேலையும் இழக்கிறான், அந்த யானையையும் விட்டுவிடுகிறான். ஆனால் யானை புறமுதுகிட்டு ஓடுகிறது. இந்த நிலையில் இருவருக்குள்ளே யார் வீரன் என்ற பிரச்சினை எழுகிறது. அப்படிப் பிரச்சினை எழுந்தபோது, அவர்கள் வள்ளுவர் பெருந்தகையிடம் சென்று கேட்கிறார்கள். அங்கே வள்ளுவரைப் பார்த்து முயலை அடித்துத் தூக்கி வந்தவன் சொல்கிறான். 'நான் முயலை அடித்துத் தூக்கிக்கொண்டு வந்து விட்டேன். நான் வீரனா, அவன் துரத்திய மிருகத்தை விட்டுவிட்டதோடு, வேலையும் இழந்து வெறுங்கை யோடு வந்திருக்கிறான், அவன் வீரனா?' என்று கேட்கிறான். அதற்கு அவர் சொல்கின்றார். "அந்த முயலை அடித்துத் தூக்கிவா ஆள் தேவை யில்லை, வேட்டை நாயை விட்டிருந்தால் அதுவே அப்படித் தூக்கி வந்திருக்கும்" என்றார். "ஆனால், அவன் அந்த மத யானை அவனை எதிர்த்து அவனையே கொல்ல வருகின்றது என்று தெரிந்தும், அந்த மத யானையை எதிர்த்து நிற்கின்றானே அவன் தான் வீரன்" என்று சொன்னார். உறுப்பினர் திரு. நிலநாராயணன் அவர்கள் இங்கே சொல்கின்றபோது, ஏழ்மையைப் பற்றிச் சொல்லலாமா என்று சொல்கின்றார்கள். செல்வம் இல்



1981 மார்ச் 28] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

(நண்பகல் 12-00)

லையே, எப்படி செல்வத்தைப் பற்றிச் சொல்லலாமென்று சொன்னார்கள். இது எப்படி இருக்கிறதென்றால் யானையை இழந்து வெறும் கையோடு வந்திருக்கிறானே, அவனை எப்படி வீரன் என்று சொல்ல முடியுமென்று சொல்வது போல இருக்கிறது. அந்த வகையிலேதான் மாண்புமிகு உறுப் பினர் திரு. நிலநாராயணன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் குறளுக்கேற்ப இந்த நாடு இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு நல்லபல திட்டங்களைத் தீட்டியிருப்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்பு கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் பேசும்போது, அந்தத் திட்டங்களையெல்லாம் வரிசைப்படுத்திச் சொன்னார்கள்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, இந்த நிதிநிலை அறிக்கை காலதாமதமாக அளிக்கப்பட்டிருக்கிறதென்று சொன் னார்கள். நேற்றையதினம் ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். நிதிநிலை அறிக்கை காலதாமதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இதைப்பற்றி இன்றையதினம் பெரிய அரசியல் பூகம்பமாகப் பேசப்படும் காட்சியைக் காண முடிகிறது. நிதிநிலை அறிக்கையைக் காலத்தில் கொடுக்க முடியாத ஆட்சி, காலத்தில் தர முடியாத ஆட்சி என்று சொல்லி, இந்த ஆட்சியைக் கேவலப் படுத்தும் காட்சியைக் காண முடிகிறது. எப்போது நிதிநிலை அறிக்கை தருகிறோமென்பதல்ல பிரச்சினை. எப்படித் தருகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். தருகிற நிதிநிலை அறிக்கையில் யார் யாருக்கு எப்படி நன்மை செய்திருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் நிதிநிலை அறிக்கையைக் காலதாமதமாக அளிக்கலாமா என்ற குற்றச்சாட்டை எழுப்பினார்கள். நான் அவருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கேரள மாநிலத்திலே 20—3—1981 அன்று நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது; கர் நாடக மாநிலத்திலே 18—3—1981 அன்று நிதிநிலை அறிக்கை தாக்கல் செய் யப்பட்டது. தமிழ் நாட்டில் 21—3—1981 அன்று தாக்கல் செய்யப்பட்டது. ஆக தென் மாநிலங்களில் இரண்டொரு நாட்கள் இடைவெளியில் நிதி நிலை அறிக்கை வாசிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மரியாதைக்குரிய உறுப்பின ரவர்கள் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுள்ள பாண்டிச்சேரியில் 26 ஆம் தேதிதான் நிதிநிலை அறிக்கையைத் தந்திருக் கிறார்கள். யார் நிதிநிலை அறிக்கை தருவதில் பொறுப்போடு முனைப்போடு இருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். காலம் தாழ்த்தித் தருகிறோமென்று சொல்லி, அதைக் காரணமாக்கி அரசியல் நடத்தும் சூழ் நிலை இருக்கிறதென்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் இரண்டாவது பாராவிலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்றும், அதே நேரத்தில் இந்த அரசுக்குள்ள சங்கடமான சூழ்நிலைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக்களை சாட்சிக்கு அழைத்திருக்கிறார்கள். இதையும் ஒரு குற்றச்சாட்டாக எடுத்து வைத்தார்கள். எதற்கெடுத்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சொல்லுகிறார்கள்; மாநில அரசு மைய அரசோடு மோதி, அதன் காரணமாகச் செய்ய முடியாத—நல்ல பல காரியங்களைச் செய்ய முடியாத காரணத்தாலே, மாநில அரசாக இருந்துகொண்டு, மத்திய அரசிடம் உங்களுடைய கோபதாபத்தைக் காட்டலாமா என்றெல்லாம் பேசினார்கள். இந்த அரசுதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறது என்று எண்ணிவிட வேண்டாம். அதிக நிதி உதவியை இந்த அரசுதான் மத்திய அரசிடம் கேட்கிறதென்று எண்ணிவிட வேண்டாம் கேரள நிதிஅமைச்சரவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது, மத்திய அரசின் நிதிப் பங்கீட்டு முறை சரியில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆந்திர நிதியமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் மத்திய அரசின் நிதி உதவி போதவில்லை, மத்திய அரசு அனைத்து நிதி ஆதாரங்களையும் தன் கையில் வைத்துக்கொண்டு, மாநில அரசுகளுக்கு ஒதுக்கும் பங்கீட்டு முறை போதவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கர்நாடக நிதியமைச்சர் திரு. வீரப்பமொய்லி, மத்திய அரசு தரும் நிதி உதவி தாராளமாக இல்லை, போதவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருக்கும் கர்நாடக மாநிலத்தில், அந்த மாநில நிதியமைச்சர் மத்திய அரசைக் குற்றம் சாட்டியிருக்கிறார். மேற்கு வங்க நிதியமைச்சர் மத்திய அரசின் நிதியுதவி போதவில்லை என்று சொல்வதோடு நிற்கவில்லை. ஏறத்தாழ முக்கால் பங்கு வரி மத்திய அரசுக்குப் போகிறது, அவர்கள் விருப்பப்படி செலவு செய்கிறார்கள், நிலப்பிரபுக்கள், தொழிலதிபர்கள் ஆகியோர்களுக்குக் கொடுத்திருக்கும் சலுகைகள் ஏராளம்; ஆனால், 'உழைப்புக்கு உணவு' திட்டத்திற்கு தரும் அரிசியைக் கூட்டித் தர வேண்டுமென்று கேட்டால், தர மறுக்கிறார்கள் என்று மேற்கு வங்க நிதி அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே தமிழக அரசு மட்டும்தான் மத்திய அரசின்மீது பழியைப்போட்டு, தான் தப்பித்துக்கொள்கிறது என்பதுபோல மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். நாங்கள் மட்டும் சொல்லவில்லை. பாரத நாட்டிலே இருக்கிற மாநில முதலமைச்சர் அனைவரும் இந்தச் சூழ்நிலையிலேதான் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.



அடுத்து, இந்த நிதி நிலை அறிக்கையிலே யாருக்குமே நன்மைகள் இல்லை, அடித் தளத்திலுள்ள மக்களுக்கு எந்தவிதமான ஆதாயமும் இல்லை என்று மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் விமர்சனம் செய்தார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1971-72-ல் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் தாக்கல் செய்கிறபோது அவர்கள் தந்த சலுகை, விவசாயப் பெரு மக்களுக்கு 3 கோடி ரூபாயிலிருந்து 21 கோடி ரூபாய் கடனாகத் தந்தார்கள் என்பதுதான். அப்படி 21 கோடி ரூபாய் கடனாகத் தந்த நிதிநிலை அறிக்கையை மாபெரும் புரட்சி அறிக்கை என்று அப்போது எடுத்துச் சொன்னார்கள். 1981-82 நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 71 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நாங்கள் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். 3 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்ததை பெரிய சாதனை என்று சொன்னால், இந்த ஆண்டு ஏறத்தாழ 71 கோடி ரூபாயை நாங்கள் தள்ளுபடி செய்திருக்கிறோமே, இதை என்ன சொல்வது? அதைச் சாதனை என்று பாராட்டியவர்கள், 71 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்த எங்களைப் பாராட்டுவதற்கு மனமில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்றால், அவர்களை எப்படி நினைத்துப் பார்ப்பது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படிப் பாராட்ட மனமில்லாவிட்டாலும், எங்களைப் பழி சொல்லாமல் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்

அது மட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற அருமை நண்பர்கள் விவசாயிகளுடைய பிரச்சினைகள் வருகின்றபோது, இரட்டை வேடம் போடுகிறார்களென்றுதான் என்னால் சொல்ல முடியும். அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த 16 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் வீற்றிருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசு தன்னுடைய கோரிக்கையாக பாராளுமன்றத்தை ஆண்டுகொண்டிருக்கிற இந்தியப் பிரதம அமைச்சரிடம் "கோதுமைக்கு 117 ரூபாயிலிருந்து 130 ரூபாய்வரை அனுமதித்திருக்கிறீர்கள், ஆனால், தமிழ் நாட்டில் விளைபொருளாக இருக்கிற அரிசிக்கு, நெல்லுக்கு நீங்கள் தருகிற விலையை அதிகப்படுத்தித் தர வேண்டும்" என்று கேட்கிறது. ஏதோ விவசாயிகளை இந்த அரசு காட்டிக் கொடுப்பது போலவும், இவர்கள்தான் விவசாயிகளை ரட்சிக்கின்றவர்கள் போலவும், இங்கே பேசுகின்றார்கள். ஆனால் பாராளுமன்றத்தில் விவசாயிகளின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு வாயக்கில்லாமல், அந்தப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லாமல், வாய் மூடி மௌனியாக இருக்கிறார்கள். இங்கே விவசாயிகளுக்கு ஏன் செய்யவில்லை என்ற கேள்வியைத் தொடுத்து, அந்த விவசாயிகள் என்ற போர்வையில் அவர்கள் ஒளிந்துகொண்டு, போராட்ட உணர்வுகளை உண்டாக்குவதை

நாம் காண முடிகிறது. பாராளுமன்றத்திலே கேட்கத் திராணியில்லாமல், அங்கே கேட்க முடியாமல், இங்கே விவசாயிகள் என்ற போர்வையிலே ஒளிந்து கொண்டு, குற்றம் சொல்லும் காட்சியைத்தான் பார்க்க முடிகிறது.

இன்றைய தினம், மதுவிலக்குக் கொள்கையை பலரும் விமர்சிக்கின்ற காட்சியை என்னால் பார்க்க முடிகிறது. மதுவிலக்குக் கொள்கையை இங்கே விமர்சனம் செய்யும்போது, நான் அவர்களுக்கு மெத்தப் பணிவோடு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர், கலைஞர் அவர்கள் மதுவிலக்குப் பிரச்சினைபற்றி, 1974 என்று எண்ணுகிறேன். ஒரு

(பிற்பகல் 12-10)

கருத்தைச் சொன்னார்கள். 'கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ் நாடு எத்தனை ஆண்டுகளுக்குத் தான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்? ஆகவே, நான் மதுவிலக்கை ஒத்தி வைக்கிறேன்' என்று அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள் அப்படிச் சொல்லியவர்கள்தான் இன்றையதினம் எங்களைப் பார்த்து, "நீங்கள் மதுவிலக்கைத் தளர்த்தலாமா" என்று கேட்கிறார்கள். அவர்களோடு சேர்ந்திருக்கிற மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களும் மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தலாமா என்று குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிலே மரியாதைக்குரிய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதுவிலக்கைத் தேசியமயமாக்க வேண்டும், எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று அன்றையதினம் தீர்மானமே கொண்டு வந்தார்கள். இதை ஏன் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிற மாநிலங்களில் எல்லாம் கையாளக் கூடாது? இதை ஏன் அவர்கள் தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளக் கூடாது? இதுபற்றி இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு புத்தகத்தில் "மதுவிலக்கின் தீமையைப் பிரச்சாரம் செய்வதோடு ஆட்சி நின்று விட வேண்டும், மதுவிலக்கை அமுல்படுத்த முனைவது அல்லது அமுல் படுத்த நினைப்பது நோயை விட நோய் தீர்க்கும் மருந்து மோசமானது என்பதற்கு ஒப்பானது" என்று எழுதியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி விமர்சனம் செய்கிறபோது ரொம்ப வேகமாக விமர்சனம் செய்தார். "இதைச் செய்யலாமா?" என்று கேட்டார். தளர்த்தலாமா என்றும் கேட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் பேசும்போது, தமிழ்நாட்டிலே இருக்கிற பெண்களுடைய தாலிகள் சாராயக் கடைகளுக்குப் போகின்ற நிலையை உருவாக்கலாமா என்று கேட்டார்.





அவருடைய தலைவர் கோடிட்டுக் காட்டிய கருத்தை நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். அதை உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களால் தான் இந்த நாட்டிலே குடிகாரன் அதிகமானான். இதை இந்தத் தமிழ் நாட்டிலே வாழ்கிற ஒருவரும் மறுக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்களும் மறுக்க முடியாது. அவர்களாலேதான் இந்த நாட்டிலே குடிகாரர்கள் அதிகமானார்கள், ஒரு தலைமுறையே உருவாக்கப்பட்டது. இத்தகைய ஒரு நிலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டது. "ஏன் தளர்த்தினீர்கள்?" என்று கேட்ட போது, "கொழுந்து விட்டு எரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப் படாத கற்பூரமாக தமிழ் நாடு எத்தனை ஆண்டுகளுக்குத் தான் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்" என்று சொன்னது தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது. அவர்களாலேதான் குடிக்கின்ற ஒரு புதிய சமுதாயமே, ஒரு புதிய தலைமுறையே உருவாக்கப்பட்டது. மக்கள் குடிக்கின்ற கொடுமையான நிலைக்கு ஆளானார்கள். அதை இந்தத் தமிழகம் நிச்சயமாக மறந்திருக்காது. இங்கே காங்கிரஸ் உறுப்பினர்களும் "நீங்கள் மதுவிலக்கைத் தளர்த்தலாமா?" என்கிற கேள்வியை எழுப்பினார்கள். அண்டையில் இருக்கின்ற கர்நாடக மாநிலத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும், காங்கிரஸ் முதலமைச்சர்கள் ஆளுகின்ற மாநிலங்களுக்குச் சென்று அவர்கள் மறியல் செய்யத் தயாரா? அவர்களிடத்தில் சென்று, "நீங்கள் மதுவிலக்கைத் தளர்த்தியது, மதுவிலக்கை எடுத்தது நியாயம் தானா?" என்று கேட்கத் தயாரா? இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நாங்கள் தான் மதுவிலக்கைத் தளர்த்தியது போலவும், பிரச்சினையை உருவாக்கி விட்டது போலவும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. ஏ. ஜே. தாஸ்: மற்ற மாநிலங்களில் முழுமையாக மதுவிலக்கை அமுல் படுத்துகிறார்கள். ஆனால் இங்கே ஒரு புறம் கள்ளச் சாராயம் இருக்கும் போது, மறுபுறம் மதுவிலக்கு தளர்த்தப்படும் என்று சொல்லியிருப்பது சரியில்லை. ஒன்று, மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும். அல்லது முழுமையாக ரத்து செய்ய வேண்டும். இதில் உறுதியான கொள்கை இருக்க வேண்டும். அதுதான் எங்களுடைய வாதம்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: தளர்த்துகிறோம் என்று சொல்லியிருப்பதற்கே இவ்வளவு எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். முழுவதும் எடுத்திருப்பதாக அறிவித்திருந்தால், எந்த அளவுக்கு எதிர்ப்பைக் காட்டியிருப்பார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லை. எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் தளர்த்துகிறோம் என்று சொன்னதற்கே மக்கள்

மன்றத்திலேயும், சட்டமன்றத்திலேயும், "ஐயய்யோ பார்த்தீர்களா பார்த்தீர்களா என்று பேசுகிறீர்களே, முழுவதும் எடுத்திருப்பதாக அறிவித்திருந்தால் எப்படி, எப்படி எல்லாம் பேசியிருப்பீர்கள்?" தளர்த்தப்படும் என்று சொல்லுவதற்கு முன்பு, மக்கள் மன்றத்திலேயும் சட்டமன்றத்திலேயும் அவர்கள் என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். கள்ளச் சாராயம் ஆறாக ஓடுகிறது என்று சட்டமன்றத்திலேயும், வெளியிலேயும் பேசினார்கள். ஆகவே, இந்த அரசு என்ன முடிவை எடுத்தாலும், அனைத்து வாதங்களையும் எடுத்து வைக்கிறவர்கள் எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் தான். எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், எவ்வளவோ கட்டுப்படுத்தித் தான் வந்திருக்கிறார்கள். தளர்த்துகிற அந்த உணர்வு எழுந்தபோது கூட, எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ரத்தக் கண்ணீர் விட்டார்கள் என்றால், அவர்களுடைய இதயம் எந்த அளவுக்கு வேதனைப்பட்டிருக்கும் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். எதிர்க் கட்சிகளுடைய போக்கு தவறான அணுகுமுறை என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். நாங்கள் இன்றைக்கு மதுவிலக்கைத் தளர்த்தக் கூடிய சூழ்நிலைக்கு, ஒரு கட்டாயத்திற்கு வந்திருக்கிறோம். ஆனால், அதேசமயத்தில் நாங்கள் மதுவிலக்குச் சட்டத்தை மிகக் கடுமையாக்க நடவடிக்கை எடுத்தபோது, இப்படிப்பட்ட சட்டத்தைப் போடலாமா?" என்று எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் கேட்டார்கள். அதே சமயத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஆறாக ஓடுகிறது என்றும் பேசினார்கள். இன்றைக்குத் தளர்த்தியிருக்கிறோம் என்று சொன்னவுடன் தளர்த்தலாமா என்றும் கேட்கிறார்கள். நாங்கள் எதைச் செய்தாலும் குற்றம் என்று சொன்னால், எப்படி? நல்ல காரியங்களை இந்த அரசு செய்தால், அதை வரவேற்க வேண்டும். அது தான் எதிர்க் கட்சிகளுக்கு அழகு. தூங்குபவனை எழுப்பி விடலாம். ஆனால் தூங்குபவனைப் போல பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது. வேண்டுமென்றே குற்றம் சொல்ல வேண்டுமென்ற மனப் பான்மையோடு இருப்பவர்களை மாற்றவே முடியாது. விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் 73 கோடி ரூபாய்க்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. செலுத்த முடியாதபடி சேதம் ஏற்பட்டது என்று சொல்கிறார்கள், நாமும் தள்ளுபடி செய்கிறோம். ஆனால் 1971-72 ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டை ஆண்டவர்கள், கூட்டுறவுக் கடன் என்கிற பெயரால் 70 கோடி ரூபாயைக் கடனாக 2 ஆண்டு காலத்திலே கொடுத்திருக்கிறார்கள். பினாமியாக ஏராளமான பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1971, 1972 ஆம் ஆண்டுகளிலே பினாமி பெயர்களுக்கெல்லாம் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் தரப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களையும் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம் 73 கோடி ரூபாயை நாம் தள்ளுபடி செய்யும் அதே நேரத்தில் பினாமியாகக் கடனை யார், யார் பெற்றிருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களுடைய முகமூடியை எல்லாம் இந்த நாட்டுக்கு தயவுசெய்து அடையாளம் காட்டுங்கள் என்பதைத்தான். இதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களையும் நாம் நிச்சயமாக இந்த நாட்டுக்கு அடையாளம் காட்டியாக வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், வேடசந்தூர் பகுதியிலே சங்கம பட்டியிலே சுடுகாட்டைக் காட்டி பயிர்வாரிக் கடன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பெறப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை, சுடுகாட்டைக் காட்டி கடன் பெற்றிருக்கிறார்கள். இது நடைபெற்றது யாருடைய ஆட்சிக் காலத்திலே? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே சுடுகாட்டுக்குப் பயிர்வாரிக் கடன் தரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே நாணயமிக்கவர்களாக இருந்து கொண்டு, நாணயத்தின் உச்சாணிக் கொப்பில் இருக்கிற எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து ஊழல் பேர்வழி என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், இந்த நாடு அவர்களுடைய கூற்றை ஏற்றுக்கொள்ளுமா? புறம் போக்கு நிலத்துக்கு, சுடுகாட்டு நிலத்துக்குப் பயிர்வாரிக் கடன் கொடுத்தது யார்? அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யார் யார்? அவர்களுடைய முகமூடித் திரைகளைக் கிழித்து இந்த நாட்டு மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டாமா? ஏழையெளியவர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்கிறோம். ஏழையெளியவர்களின் நலனுக்காகச் சட்டங்களைப் போடுகிறோம். எந்தச் சட்டத்தைப் போட்டாலும், இந்த நாட்டிலே முதலாளிகள் அரசாங்கம் போடுகிற சட்டத்தை ஏமாற்றுகிற காரியத்தில் அரசியலின் பெயரால் ஈடுபட்டு வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அரசாங்கம் கடனைத் தள்ளுபடி செய்வதை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால், பினாமி பெயரில் கடனைப் பெற்றவர்களுடைய பெயர்களை நீக்கிவிட்டு மற்றவர்களுக்கு மட்டும் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திலே இதற்கு முன்பெல்லாம் வறட்சியே வராதது போலவும், இப்போது தான் வந்திருப்பது போலவும், அதுவும் எங்களுடைய புரட்சித் தலைவர் ஆட்சி வந்ததற்குப் பிறகு தான் வந்திருப்பது போலவும் சட்டமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் "ஐயகோ ஐயகோ எம்.ஜி.ஆர் ஆட்சியில் வறட்சி, வறட்சி" என்று பேசி வருகிறார்கள். இதற்கு முன்பும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வறட்சி ஏற்படும்போதெல்லாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பணம் ஒதுக்கி வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1981 மார்ச் 28

பட்டுள்ளன. ஆனால், பேசுகின்றவர்கள் எங்களுடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் மட்டும்தான் வறட்சி ஏற்பட்டுள்ளது என்கிற மாதிரி பேசுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 7 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததே, அப்போதெல்லாம் வறட்சி ஏற்படவில்லையா? ஏன் அப்போதே இதற்கு நிரந்தரமான ஏற்பாட்டினைச் செய்திருக்கக் கூடாது? அப்படி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இதற்கு நிரந்தரமான தீர்வு காணப்பட்டிருந்தால், இன்றைக்கு இத்தகைய நிலை ஏற்பட்டிருக்குமா? ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1975 ஆம் ஆண்டிலே வறட்சி நிலை எப்படி இருந்தது என்பதை அன்றைக்கே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விமர்சனம் செய்திருக்கிறார். அவர் சொல்லியதை நான் இங்கே படிக்கிறேன். தலைவரவர்களுடைய அனுமதியை நான் கேட்டுவிட்டேன். இன்றையதினம் இரு கட்சிகளும் கொண்டுள்ள உறவு இணக்கமானது என்கிற முறையில் சொல்கிறேன். வறட்சிப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து விட்டு, 31—1—1975 அன்று பத்திரிகையாளர்கள் மத்தியில் சொல்கிறார். "எங்கே பார்த்தாலும் வறட்சியின் கொடுமை. குடிக்க தண்ணீரே இல்லை. அங்கே எறும்புகளுக்கும் மக்களுக்கும் இடையே பெரும் போட்டி." என்று தமிழ் நாட்டிலேயுள்ள வறட்சி நிலைபற்றிச் சொல்லியிருக்கிறார். தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில் நிரந்தரப் பரிகாரம் காண்பதற்காக 69 ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து மக்களுக்கு முனைப்பான திட்டங்களைத் தீட்டியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மாத்திரமல்லாமல், இன்றைக்கு நூற்றுக்கணக்கான ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து, தொலைவு நோக்கில், நீண்ட நெடுங் காலத்திற்குத் திட்டமிட்டு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டுமென்ற அடிப்படையில் எத்தகைய வறட்சி வந்தாலும், அதனால் மக்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படக் கூடாது என்பதற்கான வகையில் திட்டமிட்டு, செயலாற்றிக் கொண்டு வருகிறது இந்த அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதைக் குறை சொல்லுகிறவர்கள் காலத்தில் நிலைமை எப்படி இருந்தது என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். எறும்புகளுக்கும் மனிதர்களுக்கும் போட்டி யாருடைய ஆட்சிக் காலத்தில் தெரியுமா? மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின்போது. வயல் வரப்புகளில் எறும்பு சேமித்து வைத்திருக்கிறதே அரிசி, அதை எடுப்பதற்காக மனிதன் வரப்பை வெட்டி அங்கேயிருக்கும் அரிசியை எடுத்துக் கஞ்சியாகக் காய்ச்சிக் குடிக்கின்றான். இது யாருடைய ஆட்சிக்காலத்தில் தெரியுமா? 1975 ஆம் ஆண்டு தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருந்தபோது. இப்போது அவர்கள்தாம் அண்ணா திராவிட



1981 மார்ச் 28] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைப் பார்த்து, "உங்கள் ஆட்சியில் மக்கள் கஷ்டப்படுகிறார்கள், சாப்பிடுவதற்கு அரிசியில்லாமல் அவதிப்படுகிறார்கள், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்" என்று பேசுகிறார்கள். பேசட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதில் சிறிதளவாவது உண்மை இருக்க வேண்டாமா? நியாயம் இருக்க வேண்டாமா?

(பிற்பகல் 12-20)

பஞ்சம் என்பதும் வறட்சி என்பதும் நாட்டில் எப்போது வேண்டுமானாலும் வரலாம். இயற்கை பொய்த்துவிட்டதால், இயற்கை சதி செய்துவிட்டதால், நாம் வறட்சியில் வாடுகிறோம். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் எங்கள் ஆட்சியில் வறட்சிப் பணிகள் தொடங்கப்படவில்லையா? வறட்சிப் பணிகள் என்ன முடங்கிவிட்டனவா? 7½ ஆண்டுக் காலம் தமிழகத்தை திராவிட முன்னேற்றக் கழகம்தானே ஆண்டது? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தின்போது நெடிய தொலை நோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியிருந்தால், இன்றையதினம் தமிழகத்தில் வறட்சியைச் சமாளித்திருக்க முடியாதா? எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். 3, 4 ஆண்டுகள்கூட ஆகவில்லை. அப்படி இருக்கும்போது, எங்களைப் பார்த்து குறை சொல்வதிலே என்ன நியாயம் இருக்க முடியும்? ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் மக்கள் பால் பாயசம் குடித்துவிட்டு உறங்கியதைப் போலவும், இப்போதுதான் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் மக்கள் வேதனைப்படுவதைப் போலவும் பேசினால் என்ன அர்த்தம்? "தண்ணீருக்கு ரேஷன் கார்டு கொடுத்திருக்கிறீர்களே" என்று எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். 1965 ஆம் ஆண்டிலேயே தண்ணீருக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்படவில்லையா? நான் இல்லை என்று சொல்லவில்லை. சங்ககிரியில் தண்ணீருக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, மக்களுக்குத் தண்ணீருக்குக்கூட ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆம். சங்ககிரியில் கார்ப்பரேஷனில் முனிசிபாலிட்டியில் தண்ணீருக்கு ரேஷன் கார்டு, அடையாள கார்டு கொடுத்திருக்கிறார்கள். காரணம் சங்ககிரியில் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே முனிசிபாலிட்டியில் நல்ல தண்ணீரை லாரிகளில் கொண்டுவந்து ஊர் மக்களுக்கு அடையாளக் கார்டுகள் மூலம் வழங்குகிறார்கள். தண்ணீர் லாரிகளைத் தெருக்களில் கொண்டு வந்து நிறுத்தினால் . . .

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்ககிரி கார்ப்பரேஷன் அல்ல. அது ஒரு பேரூராட்சி. அங்கே பொதுமக்களுக்கு, குடி தண்ணீருக்காக ரேஷன் கார்டு இப்போதுதான் கொடுக்கப்பட்டதே தவிர, 1965-ல் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மைக்கு மாறான தகவல்களை அவையில் சொல்வதன் மூலம், தாங்கள் செய்துவிட்ட தவறுகளை மாற்றிவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** சங்ககிரி பேரூராட்சிதான். நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்தப் பேரூராட்சியில் சங்கடப்படும் பொது மக்களுக்காக, பேரூராட்சி நிர்வாகம் லாரிகளில் தண்ணீரைக் கொண்டு வந்து விநியோகம் செய்கிறது. சங்ககிரியில் தண்ணீர் கிடைக்கிறது. ஆனால் அது உப்புத் தண்ணீராக இருப்பதால், நல்ல தண்ணீரை, வெளியிலிருந்து லாரிகளில் கொண்டு வந்து மக்களுக்கு விநியோகிக்கிறார்கள். நான் சங்ககிரிக்குப் பக்கத்து ஊரைச் சேர்ந்தவன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களும் பக்கத்து ஊர்தான். என்றாலும், அந்த ஊரோடு எனக்கு அதிகமான தொடர்பு உண்டு. அந்த ஊருக்கு நான் அடிக்கடி செல்கிறவன் என்ற காரணத்தால், அங்கே உள்ள நிலைமை எனக்கு நன்கு தெரியும். இப்படி லாரிகளில் பேரூராட்சியினர் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கும்போது, கொஞ்சம் வலிமைபடைத்தவர்கள் நான்கு அண்டா தண்ணீரைப் பிடித்துக் கொள்கிறார்கள். வலிவற்றவர்கள் ஒரு அண்டா தண்ணீரைக்கூட பிடித்துச் செல்ல முடியாத நிலை இருக்கிறது என்ற காரணத்தால், நல்ல தண்ணீர் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அங்கே ரேஷன் கார்டு கொடுத்திருக்கிறார்கள். அது ஒரு கார்டு 10 லிட்டர் 20 லிட்டர் தண்ணீருக்கு என்று அல்ல. நல்ல தண்ணீர் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமே என்ற பாதத உள்ளத்தின் அடிப்படையில். உயர்ந்த எண்ணத்தின் அடிப்படையில் அந்த அடையாள கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட தவறான முறையில் குறை சொல்வது என்று சொன்னால், அது எந்த வகையில் நியாயம் என்றுதான் கேட்கிறேன். ஏனென்றால் நான் முதலிலேயே சொன்னேன் " தூங்குகிறவர்களை நாம் எழுப்பலாம், ஆனால் தூங்குவதைப்போல் பாசாங்கு செய்பவர்களை நாம் எப்படி எழுப்புவது ? " என்று. இப்படி எதைப் பார்த்தாலும் குறை சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு நாம் வேறு எதையும் பதிலாகச் சொல்ல முடியாது.



மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், இந்த அரசு மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லி பிரச்சாரம் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. அதைப்பற்றிக் குறிப்பிடும் போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், " இந்தத் தொகை அனைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கட்சிக்காரர்கள் பங்கிட்டுக் கொள்வதற்காகவா ? " என்று கேட்டார்கள். இது அரசாங்கத் தால் மேற்கொள்ளப்பட இருக்கிற பிரச்சாரம். அங்கே கட்சிக்காரர்களுக்கு வேலையில்லை. " திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது எங்கள் முதலமைச்சரும் இதற்கு என்று ஒரு குழு போட்டார். அதன் மூலம் நாங்களும் பிரச்சாரம் செய்தோம், ஆனால் அதற்காக நிதி ஒதுக்கவில்லை " என்று அவர் குறிப்பிட்டார். ஆனால், இங்கே அரசாங்கத்தில் இதற்காக என்று ஒரு கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், அதில் ஒருவர் நன்றாகப் பாடினால்கூட, அல்லது மதுவின் தீமைகளைப்பற்றிப் பிரச்சாரம் செய்தால் கூட அவருக்கெல்லாம் சம்பளம் போட்டுக் கொடுத்து பிரச்சாரம் செய்யச் சொல்லலாம் என்ற அடிப்படையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. யார் விரும்பினாலும் அதில் சேரலாம் . . .

**திரு. சோ. ஆறுமுகம் :** ஒரு சமுதாய நலத் திட்டத்திற்காக, பொது வாழ்க்கையில் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருப்பவர்கள், அதிலும் குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் என்னைப் போன்றவர்கள், பணத்திற்காக என்று சமுதாய அல்லது சமூக நலத் திட்டங்களை மேற்கொள்ளத் தயாராக எந்தக் காலத்திலும் இருக்க மாட்டோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** நான் இந்தக் கருத்தைச் சொன்னதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இந்த ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீட்டைக் குறிப்பிட்டு, இதை அன்னை தி.மு.க. கட்சிக் காரர்கள் பங்கீடு செய்து கொள்வதற்காகவா என்று கேட்டார். அதற்காகத் தான் விளக்கம் தந்து கொண்டிருக்கிறேன். இது கட்சி சார்பாக விளக்கக் கூட்டங்களையோ அல்லது நிகழ்ச்சிகளையோ நடத்துவதற்காக ஒதுக்கப் பட்டதல்ல. அரசு நிர்வாகத்தில் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்கே ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கமே அந்தப் பிரச் சாரத்தை மேற்கொண்டு நடத்தப்போகிறது. கட்சிக்கும் அரசாங்கப் பணிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்

திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, இந்த ஒதுக்கீடு அண்ணா தி.மு.க. கட்சிக்காரர்கள் பங்கிட்டுக் கொள்வதற்காகவா என்று கேட்டதால், நான் வருத்தத்தோடு இதனைத் தெரிவிக்க வேண்டியதாயிற்று. அத்தகைய உணர்வு எங்களுக்கு எப்போதும் வராது.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு ஒன்றை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி, மதுவினுடைய தீமையைக் குறித்துப் பிரச்சாரம் செய்ய தற்போது ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரு கோடி ரூபாயை எந்த வகையில் இந்த அரசு செலவிடப்போகிறது என்றுதான் நான் கேட்டேன். ஏற்கெனவே அரசாங்கத்தின் திட்டங்களை விளம்பரப்படுத்துவதற்கென்றே அரசாங்கத்தின் செய்தித் துறை இருக்கிறது. அதோடு குடும்ப நலத் துறை இருக்கிறது. இந்தத் துறைகளின் மூலம் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு நல்ல விளம்பரமும் பிரச்சாரமும் செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலையில் இதற்காக என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை எப்படிப் பயன் படுத்தி மதுவின் தீமையை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லப் போகிறீர்கள் என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மதுவிலக்கின் நிலைபற்றியல்ல. மது அருந்துவதன் தீமையைப்பற்றி எடுத்துச் சொல்ல என்று சொல்லுங்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சின் மூலம் கடந்த காலத்தில் இவ்வாறு ஒதுக்கப்பட்ட பணம் கட்சிக் காரர்களால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டதோ என்ற சந்தேகத்தைத்தான் எழுப்புகிறது.

**திரு. சோ. ஆறுமுகம் :** குடும்ப நலத் திட்டத்திற்கான பிரச்சாரப் பணியை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. அதைக் குறித்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவரை—அவர் யாரென்று அனைவருக்கும் தெரியும்—யாராவது குடும்ப நலத் திட்டம் பற்றிய பிரச்சார நாடகம் போடுவதாக அணுகினால், அல்லது விளம்பரத்திற்கு அல்லது நாடகத்திற்கு எங்களுக்குப் பணம் ஒதுக்க வேண்டுமென்று மனுப் போட்டால் "நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து கொள்ளுங்கள், உங்களுக்கு விளம்பரம் செய்வதற்கான நாடகத்தை ஒதுக்குகிறோம் என்று கட்டாயப் படுத்திக் கொண்டிருக்கிறார்" என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.





**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அதற்கு என்ன ஆதாரம் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** ஆதாரத்தோடு இதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். இந்த அவை அதற்காக ஒரு விசாரணையை வைத்தால், அதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் நேரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடியும் வரை நீட்டிக்கப்படுகிறது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** தற்போது மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக ஒரு கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது. அந்தப் பிரச்சாரத்திற்கான பொறுப்பை அரசே மேற்கொள்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இந்த ஒரு கோடி ரூபாயை இந்த அரசு எப்படிச் செலவழிக்கப் போகிறது என்று கேட்டிருந்தால், நான் அதற்காக வருத்தப்பட்டிருக்க மாட்டேன். மாறாக இந்த ஒரு கோடி ரூபாயை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பங்கிட்டுக் கொள்ளப் போகிறார்களா என்று கேட்டதால்தான், நான் இதனைப்பற்றி இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமே ஏற்பட்டது. இதற்கு முன்னாலே ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் அவர்கள். அப்படிப்பட்ட பொறுப்பில் இருந்த முன் அனுபவம் எங்களுக்கு இல்லை. எனவே அப்போது செய்ததை முன்னுதாரணமாகக் கொண்டு, அல்லது அப்போதைய முன்னனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு ஒருவேளை கேட்டிருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து எங்களைப்பற்றி அப்படிப் பார்க்க வேண்டாம். அதுபோன்ற எண்ணம் எங்களுக்கு எப்போதும் ஏற்படாது.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் குறுக்கிடுவதற்காக மன்னிக்கக் கோருகிறேன். முன்பிருந்த அனுபவத்தின் அடிப்படையில் அப்படிச் சொன்னார்களோ என்று எனக்குத் தெரியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது, இப்படி அரசாங்க விளம்பரத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை எதேனும் தவறான முறையில் செலவழித்திருந்தால், அதைப்பற்றி இன்றைக்குள்ள ஆளும் கட்சியும் அமைச்சரவையும் கண்டுபிடித்து என்

நடவடிக்கை எடுக்கவில்லை? இல்லாத ஒன்றை, கற்பனையாகச் சொல்லி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது களங்கம் கற்பிப்பது சரியல்ல. இப்படிக் கூறுவதன் மூலம் இவர்கள் செய்கிற தவறுகளை மூடி மறைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்றுதான் நான் எண்ண வேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 12-30)

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அப்படிப்பட்ட பெருந்தவறு நடக்கவில்லை, ஆகவே தவறு நடந்திருந்தால் விசாரித்திருக்கலாம். அப்படிப்பட்டதொரு உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது சரியல்ல" என்று சொல்கிறார். மதுவிலக்குக் கொள்கையை இந்த நாட்டிலே பரப்புவதற்காக ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு பகிரங்கமாக மக்கள் மன்றத்திலே வைக்கின்றபோது அதை எப்படித் தவறாகப் பயன்படுத்த முடியும்? அப்படித் தவறாகப் பயன்படுத்துவார்களோ என்ற சந்தேகம் தனக்கு வருவதாகச் சொன்ன காரணத்தாலே தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன், "உங்களுக்கு அனுபவம் இருக்கிறது போல இருக்கிறது. ஒதுக்கப்பட்ட தொகையை இப்படிச் செலவழித்திருக்கிறீர்களோ என்ற ஐயம் எழுகிறது" என்று சொல்லியிருக்கிறார். எங்கள் மீது சந்தேகப்படும்போது, எடுத்துச்சொல்லுங்கள் என்று கேட்கிறபோது, ஒதுக்கியிருக்கிற பணத்தை எப்படிச் செலவழிக்கிறோம் என்பதைப் பார்த்துவிட்டு, அப்போது கேட்கலாம். அதற்கு முன்னாலேயே பணத்தை ஒதுக்குகிறபோதே சந்தேகம் வருகிறது என்று எண்ணினால், "யார் யாருக்கு எந்தெந்த நினைப்புகளோ அந்தந்த நினைப்புகள்தான் வரும்" என்றுதான் சொல்ல வேண்டும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் சொல்லியிருக்கிறார்.

இன்னுமொன்றை விளக்கிவிடுகிறேன். குடும்ப நலத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்படுகிறது என்றால், அதை குடும்பநலத் துறைதான் ஒதுக்கிச் செலவு செய்கிறது. ஆனால் செய்தித் துறைக்கு நிதி ஒதுக்கும்போது, இப்படிப்பட்ட விசேஷத் தன்மையோடு நிதி ஒதுக்கம் செய்யப்படுவதில்லை. பொதுவாக அரசின் செயல்முறைகளை, திட்டங்களை விளம்பரப்படுத்த நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது.

இப்போது இந்த நாட்டிலே புதிய நிலைமை தோன்றியிருக்கிறது. முன்னாலே யார் வைத்த கொள்ளியோ வீடு வந்து சேர்ந்தது என்பதைப் போல, 1973-74 ஆம் ஆண்டில் திறந்துவிடப்பட்ட மதுக் கடைகளால் இந்த





நாட்டிலே ஒன்றும் அறியாத இளைஞர்களுக்கும் பழக்கமாகி இப்போது பற்றிக் கொண்டிருக்கிற நெருப்பாக இருக்கிறது. அதை அணைக்கிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. ஆகவே மதுவால் ஏற்படக் கூடிய நிலைகளைப்பற்றி அரசு எப்படி பிரச்சாரம் செய்யப் போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் எழுதிய "திக்கற்ற பார்வதி" என்ற மதுவிலக்கை வலியுறுத்துகிற கதை ஒருவராலே திரைப்படமாக ஆக்கப்பட்டது. அந்தப் படம் வெற்றிகரமாக ஓடவில்லை. படத்தை எடுத்தவர் நஷ்டப்பட்டுவிட்டார். நல்ல நோக்கத்திற்காக எடுக்கப்பட்ட அந்தப் படம் ஓடவில்லை. அதனாலே அவர் நொந்து போய் கடனாளியாகிவிட்டார். ஆகவே முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே வந்து ஒரு வேண்டுகோளை வைத்தார். அதை ஏற்றுக்கொண்டு தமிழக அரசு அவருடைய கடனைத் தீர்த்து திரைப்படத்தை வாங்க முடிவு செய்திருக்கிறது. அந்தத் திரைப்படத்தை வாங்கி, இந்த நாட்டு மக்களிடத்திலே காட்டி, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மதுவிலக்கை எப்படி வலியுறுத்தியிருக்கிறார்கள், மதுவின் கொடுமையால் எப்படிப்பட்ட நிலைமை விளைகிறது என்பதை எடுத்துக் காட்டவிருக்கிறது. 1974 ஆம் ஆண்டில் திறந்துவிடப்பட்ட மதுக் கடைகளால் எப்படி இந்த நாட்டிலுள்ள ஏழையெளிய தாய்மார்கள் "திக்கற்ற பார்வதிகளாக" ஆகியிருக்கிறார்கள் என்ற வரலாற்றை அந்தத் திரைப்படம் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும். இதை உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட பல விளம்பர முறைகளை அரசு எப்படி இந்த ஒரு கோடி ரூபாயில் செய்யப் போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் அருள்கூர்ந்து பொறுத்திருந்து பார்க்க வேண்டும். பழைய கதைகளை நினைத்துக்கொண்டு உள்ளத்தை வருத்திக் கொள்ளக் கூடாது.

**திரு. சோ. ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "திக்கற்ற பார்வதி" சினிமா படத்திற்கு மக்கள் மத்தியிலே செல்வாக்கு இல்லை, அப்படிப்பட்ட நல்ல கொள்கைப் படங்கள் தோல்வி அடைந்ததால், அரசாங்கப் பணத்தைக் கொடுத்து அதை வாங்கி திரையிட்டு மக்களுக்கு அறிவுப் பிரச்சாரம் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். இப்போது தெரிகிறது அவர்களுடைய உள்நோக்கம். இந்த நிதியை எப்படிப் பயன்படுத்துவார்கள் என்று இப்போது தெரிகிறது.

## 7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

231. Notification issued with G.O. Ms. No. 205, Labour and Employment, dated the 29th January 1981 in regard to exemption for a period of one year from the date of the publication of this notification in the Tamil Nadu Government Gazette, granted to the Taj Coromandel Hotel, Madras-600 034, from the provisions of sub-section (1-A) of section 12 of the Tamil Nadu Catering Establishment Act, 1958. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Catering Establishments Act, 1958 (Tamil Nadu Act XIII of 1958).]

232. Notification issued with G.O. Ms. No. 903, Home (Cinemas), dated the 25th March 1980 in regard to amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955)].

### *B. Reports, Notifications and Other Papers.*

* 84. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1981 (L.A. Bill No. 30 of 1981), as passed by the Assembly.

* 85. The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1981 (L.A. Bill No. 31 of 1981), as passed by the Assembly.

## இணைப்பு I

(104-ஆம் பக்கத்தில் வினா எண் 101-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

மதுரை மாவட்டக் கட்டிடக் கலைத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளரிடமிருந்து டிசம்பர், 1980-ல் ஒரு மனு அரசுக்குக் கிடைத்தது. அம்மனுவில் கீழ்க்கண்ட கோரிக்கைகள் அடங்கியுள்ளன :—

(1) சிமெண்ட் கன்ட்ரோல் முறையை ரத்து செய்ய வேண்டும்; அரசு அறையில் தனியார் காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்ய வேண்டும்.

(2) கட்டிடத் தொழிலாளர்கள் குடியிருக்க இலவச வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

* Circulated to all M.L.Cs. on 27th March 1981.



(3) வேலை நேரத்தில் விபத்தில் இறப்போருடைய குடும்பத்திற்கு ரூ. 10,000 நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

(4) கட்டிடத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரையிலும் இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும்.

(5) கட்டிடத் தொழிலுக்கு தேவையான கருவிகளைப் பெற கடனுதவி வழங்க வேண்டும்.

(6) கட்டிடத் தொழிலாளர்களின் குறைகளை எடுத்துக்கூற சட்ட மன்றத்தில் அல்லது சட்ட மேலவையில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.

(7) கட்டிடத் தொழிலாளர்களைப் பாதுகாக்க இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி வழங்கப்பட வேண்டும்.

(8) சிமெண்ட் மற்றும் இரும்பு, பெயிண்ட் போன்ற அத்தியாவசிய பொருட்கள் நியாய விலையில் கிடைக்க நியாய விலைக் கடைகளை சர்க்காரே திறந்து விநியோகம் செய்ய வேண்டும்.

(9) வயது முதிர்ந்த மற்றும் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு மாதாமாதம் நிவாரணத் தொகை வழங்க வேண்டும்.

(10) கட்டிடத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அரசாங்க வேலைகளில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

2. இக்கோரிக்கைகளில் தொழில் தகராறு எதும் இல்லை. மூன்றாவது கோரிக்கையான வேலையிலிருக்கும்போது விபத்து ஏற்பட்டு கட்டிடத் தொழிலாளி இறக்க நேரிடின், அவரது குடும்பத்தினருக்கு ரூ. 10,000 உதவிப் பணம் கொடுக்க வேண்டும் என்பது சம்பந்தப்பட்ட வரை தற்போதைய தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் பிரிவு 2 (1) (N) அட்டவணை - II இனம் VIII -ல் இவை போன்ற விபத்துக்களுக்கு இழப்பீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

3. மேலும் கட்டிடத் தொழிலாளர்கள் வேலை நிலைமைகளை ஒழுங்கு படுத்தவும், அவர்களுக்கு பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் நலன்களை ஏற்படுத்தும் வகையில் கட்டிடத் தொழிலாளர்களின் நலனுக்கு சட்டம் இயற்றும் குறிப்பு ஒன்று மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இச்சட்டத்தில் கட்டிடத் தொழிலாளர்களுக்கு காப்புறுதி Insurance Coverage அளிக்கவும் விபத்து நேரிடின் இழப்பீடு அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

4. கட்டிடத் தொழிலாளர்களைப் பாதுகாக்க இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி வழங்கப்பட வேண்டும் என்பது ஏழாவது கோரிக்கை ஆகும். ஏற்கெனவே இப்பொருள், மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுகுறித்து புதுடெல்லியிலுள்ள தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகத்துடன் அரசு கலந்து முடிவு செய்யும்.

5. பிற கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு அனுப்பப்படும்.

## இணைப்பு II

(115 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனத்தில் உள்ள உதவி பெறும் தூய ஆன்ஸ் மேல்நிலைப் பள்ளியின் மாணவர்கள் 8—12—1980 ஆம் நாளன்று மாணவர் தலைவர் தேர்தல் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையினை பள்ளி நிர்வாகத்தின் முன் வைத்துப் போராடினார்கள். ஆனால், பள்ளித் தலைமை ஆசிரியரின் முயற்சிகளால் மேற்படி போராட்டம் நிறுத்தப்பட்டு, பள்ளி 11—12—1980 முதல் தொடங்கி நடைபெற்றது. மேற்படி பள்ளிக்கு 20—12—1980 முதல் 19—1—1981 வரை கிறிஸ்துமஸ் விடுமுறை விடப்பட்டது. கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பின் பள்ளி 20—1—1981-ல் தொடங்கப்பட்டது. 22—1—1981 அன்று பள்ளியின் மாணவர்களில் சிலர், மாணவர் தலைவர் தேர்தலுக்குரிய சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த நேரத்தில் அடையாளம் தெரியாத வெளியாட்கள் சிலர், அதில் மூன்று மாணவர்களை அடித்துக் காயப்படுத்தியதால் மாணவர்கள் திரும்பவும் 25—1—1981 முதல் போராட்டத்தைத் தொடங்கினர். அதனால், மேற்படி பள்ளி 23—1—1981 முதல் மூடப்பட்டது. சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியோர் 28—1—1981 அன்று பள்ளியினைப் பார்வையிட்டனர். பள்ளியின் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் முயற்சியால், பள்ளி நிர்வாகத்தின் துணையுடன் 11—2—1981 முதல் பள்ளி திரும்பவும் தொடங்கப்பட்டு, தற்போது அமைதியாக இயங்கி வருகிறது.





## இணைப்பு

(29 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 30 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April 1980.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 2) Act, 1981.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April 1980.*—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1980, a further sum not exceeding four hundred and fifty-eight crores eighty-seven lakhs and eighty-two thousand rupees being money required to meet—

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

(*See* section 2.)

| Demand number. | Services and purposes. | *Sums not exceeding.* Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department. | 23,16,000 | .. | 23,16,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration .. .. | 21,33,000 | *10,000* | 21,43,000 |
| 5 | Stamps—Administration | 22,69,000 | .. | 22,69,000 |
| | Charges Debt .. .. | .. | *2,22,10,000* | 2,22,10,000 |
| 7 | State Legislature .. .. | 14,03,000 | *37,000* | 14,40,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff .. | 31,68,000 | *1,55,000* | 33,23,000 |
| 10 | Milk Supply Schemes.. .. | 1,83,000 | .. | 1,83,000 |
| 11 | District Administration .. | 1,83,91,000 | *2,58,000* | 1,86,49,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. | 14,60,000 | *18,000* | 14,78,000 |
| 14 | Jails .. .. .. .. | 38,11,000 | .. | 38,11,000 |
| 15 | Police .. .. .. .. | 3,23,72,000 | *91,000* | 3,24,63,000 |
| 16 | Fire Services .. .. .. | 29,83,000 | .. | 29,83,000 |
| 17 | Education .. .. .. | 8,29,77,000 | *19,000* | 8,29,96,000 |
| 18 | Medical .. .. .. | 73,38,000 | .. | 73,38,000 |
| 19 | Public Health .. .. | 3,50,65,000 | .. | 3,50,65,000 |
| 20 | Agriculture .. .. .. | 26,89,99,000 | .. | 26,89,99,000 |
| 21 | Fisheries .. .. .. | 1,000 | .. | 1,000 |
| 22 | Animal Husbandry .. .. | 8,58,000 | .. | 8,58,00 |
| 23 | Co-operation .. .. .. | 1,07,93,000 | .. | 1,07,93,000 |
| 24 | Industries .. .. .. | 2,000 | .. | 2,000 |
| 25 | Cinchona .. .. .. | 8,48,000 | .. | 8,48,000 |
| 26 | Handlooms and Textiles .. | 3,61,12,000 | .. | 3,61,12,000 |
| 27 | Khadi .. .. .. | 14,33,000 | .. | 14,33,000 |
| 28 | Community Development Projects, etc. .. .. | 43,20,25,000 | *25,000* | 43,20,50,000 |
| 29 | Labour including Factories .. | 4,43,000 | .. | 4,43,000 |
| 30 | Social Welfare.. .. .. | 91,70,000 | .. | 91,70,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. | 11,29,16,000 | *1,89,000* | 11,31,05,000 |
| 32 | Welfare of Backward Classes, etc. | 3,21,000 | .. | 3,21,000 |
| 34 | Urban Development .. | 2,03,44,000 | .. | 2,03,44,000 |
| 35 | Civil Supplies .. .. | 1,000 | *1,05,000* | 1,06,000 |
| 36 | Irrigation .. .. .. | 6,62,000 | .. | 6,62,000 |
| 37 | Public Works—Buildings .. | 73,10,000 | *7,13,000* | 80,23,000 |
| 38 | Public Works—Establishment Tools and Plant .. | 2,47,89,000 | .. | 2,47,89,000 |
| 39 | Roads and Bridges .. .. | 3,34,76,000 | .. | 3,34,76,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. .. | 29,88,000 | *1,38,000* | 31,26,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. .. | 59,12,000 | .. | 59,12,000 |
| 42 | Pensions and other Retirement Benefits .. .. | 7,11,000 | *1,36,52,000* | 1,43,63,000 |
| 43 | Miscellaneous .. .. | 85,91,60,000 | *2,58,000* | 85,94,18,000 |
| 44 | Stationery and Printing .. | 2,45,41,000 | .. | 2,45,41,000 |
| 45 | Forest Department .. .. | 91,75,000 | .. | 91,75,000 |
| 46 | Compensation and Assignments .. .. .. | 59,85,000 | *11,000* | 59,96,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. .. | 37,07,000 | .. | 37,07,000 |
| 48 | Capital Outlay on Agriculture. | 1,74,11,000 | | [illegible] |

| | | | | |
|---|---|---|---|---|
| 49 | Capital Outlay on Industrial Development .. .. | 1,63,39,000 | .. | 1,63,39,000 |
| 50 | Capital Outlay on Irrigation. | 1,000 | | 1,000 |
| 51 | Capital Outlay on Public Works—Building | 7,000 | .. | 7,000 |
| 52 | Capital Outlay on Roads and Bridges .. .. .. | 3,000 | .. | 3,000 |
| 53 | Capital Outlay on Road Transport Services and Shipping .. .. .. | 2,37,04,000 | .. | 2,37,04,000 |
| 54 | Capital Outlay on Forests .. | 4,000 | .. | 4,000 |
| 55 | Miscellaneous Capital Outlay. | 4,21,60,000 | 45,000 | 4,22,05,000 |
| 56 | Loans and Advances by the State Government .. | 2,38,26,68,000 | .. | 2,38,26,68,000 |
| | GRAND TOTAL .. | 4,55,08,48,000 | 3,79,34,000 | 4,58,87,82,000 |

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
Date: 27th March 1981.

K. RAJARAM,
*Speaker,*
*Tamil Nadu Legislative Assembly.*



இணைப்பு

*(30 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)*

## L.A. BILL No. 31 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for the service of a part of the financial year commencing on the 1st April* 1981.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1981.

2. *Withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for a part of the financial year commencing on the 1st April* 1981.—The State Government may withdraw from and out of the Consolidated Fund of the State sums not exceeding three hundred and four crores seventy-five lakhs and eighty-nine thousand rupees being moneys required to meet—

(*a*) the grants made in advance by the Tamil Nadu Legislative Assembly for a part of the financial year commencing on the 1st April 1981 as set forth in column (3) of the Schedule; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for the same part of the same financial year, as set forth in column (4) of the Schedule.

3. *Appropriation.*—The sums authorized to be withdrawn from and out of the Consolidated Fund by this Act shall be appropriated for the services and purposes expressed in the Schedule in relation ao the said year.

THE SCHEDULE

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department. | 1,46,61,000 | .. | 1,46,61,000 |
| 2 | State Excise Department .. | 6,16,000 | .. | 6,16,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration .. .. | 38,27,000 | .. | 38,27,000 |
| 4 | General Sales Tax and other Taxes and Duties—Administration .. .. | 1,70,85,000 | *5,000* | 1,70,90,000 |
| 5 | Stamps—Adminstration .. | 13,96,000 | .. | 13,96,000 |
| 6 | Registration .. .. .. | 76,48,000 | *1,000* | 76,49,000 |
| | *Debt Charges* .. .. | .. | *18,99,18,000* | 18,99,18,000 |
| 7 | State Legislature .. .. | 20,56,000 | *29,000* | 20,85,000 |
| 8 | Elections .. .. .. | 6,39,000 | .. | 6,39,000 |
| 9 | Head of State, Ministers and Headquareters, Staff .. | 4,27,72,000 | *17,60,000* | 4,45,32,000 |
| 10 | Milk Supply Sehemes .. | 21,47,000 | ... | 21,47,000 |
| 11 | District Administration .. | 6,29,71,000 | *21,000* | 6,29,92,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959 .. .. .. | 45,01,000 | *5,000* | 45,06,000 |
| 13 | Administration of Justice .. | 1,83,44,000 | *29,52,000* | 2,12,96,000 |
| 14 | Jails .. .. .. .... | 1,13,85,000 | *1,000* | 1,13,86,000 |
| 15 | Police .. .. .. | 12,38,80,000 | *10,000* | 12,38,90,000 |
| 16 | Fire Services .. .. .. | 77,19,000 | *1,000* | 77,20,000 |
| 17 | Education .. .. .. | 46,94,01,000 | *1,000* | 46,94,02,000 |
| 18 | Medical .. .. .. | 13,90,48,000 | .. | 13,90,48,000 |
| 19 | Public Health .. .. | 11,78,53,000 | .. | 11,78,53,000 |
| 20 | Agriculture .. .. .. | 12,31,16,000 | *1,000* | 12,31,17,000 |
| 21 | Fisheries .. .. .. | 69,02,000 | *2,000* | 69,04,000 |
| 22 | Animal Husbandry .. .. | 3,22,33,000 | *1,000* | 3,22,34,000 |
| 23 | Co-operation .. .. | 2,02,30,000 | .. | 2,02,30,000 |
| 24 | Industries .. .. .. | 2,12,67,000 | *1,000* | 2,12,68,000 |
| 25 | Cinchona ... .. .. | 37,14,000 | .. | 37,14,000 |
| 26 | Handlooms and Textiles .. | 85,30,000 | .. | 85,30,000 |
| 27 | Khadi .. .. .. | 27,55,000 | .. | 27,55,000 |
| 28 | Community Development Projects and Municipal Administration .. .. | 16,98,32,000 | .. | 16,98,32,000 |



| Demand number. | Services and purposes. | Sums not exceeding. Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 29 | Labour including Factories | 1,71,27,000 | .. | 1,71,27,000 |
| 30 | Social Welfare .. .. | 3,67,16,000 | .. | 3,67,16,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. | 4,58,21,000 | *33,000* | 4,58,54,000 |
| 32 | Welfare of the Backward Classes, etc. .. .. | 1,45,15,000 | *1,000* | 1,45,15,000 |
| 33 | Housing .. .. .. | 1,88,03,000 | .. | 1,88,03,000 |
| 34 | Urban Development .. | 2,15,55,000 | .. | 2,15,55,000 |
| 35 | Civil Supplies .. .. | 98,79,000 | *9,000* | 98,88,000 |
| 36 | Irrigation .. .. .. | 4,85,15,000 | *2,000* | 4,85,17,000 |
| 37 | Public Works—Buildings .. | 47,19,000 | *1 ,000* | 47,32,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant .. | 2,77,69,000 | .. | 2,77,69,000 |
| 39 | Roads and Bridges .. .. | 10,06,75,000 | .. | 10,06,75,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. .. | 10,99,000 | *1,000* | 11,00,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. .. .. | 72,000 | *1,43,16,000* | 1,43,88,000 |
| 42 | Pensions and other Retirement Benefits .. .. | 7,60,84,000 | *17,02,000* | 7,77,86,000 |
| 43 | Miscellaneous .. .. | 11,68,60,000 | *2,29,000* | 11,70,89,00 |
| 44 | Stationery and Printing .. | 1,61,03,000 | *41,000* | 1,61,44,000 |
| 45 | Forest Department .. .. | 1,55,60,000 | *1,000* | 1,55,61,0000 |
| 46 | Compensations and Assignments .. .. .. | 3,57,69,000 | *3,75,,000* | 3,61,44,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. .. | 39,37,000 | .. | 39,37,000 |
| 48 | Capital Outlay on Agriculture | 46,46,000 | *1,000* | 46,47,000 |
| 49 | Capital Outlay on Industrial Development .. .. | 6,43,46,000 | *1,000* | 6,43,47,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Capital Outlay on Irrigation. | 5,51,73,000 | .. | 5,51,73,00 |
| 51 | Capital Outlay on Public Works—Buildings .. | 5,56,05,000 | *3,44,000* | 5,59,49,000 |
| 52 | Capital Outlay on Roads and Bridges .. .. .. | 1,32,52,000 | *1,000* | 1,32,53,000 |
| 53 | Capital Outlay on Road Transport Services and Shipping. | 36,85,000 | .. | 36,85,000 |
| 54 | Capital Outlay on Forests .. | 1,59,78,000 | .. | 1,59,78,000 |
| 55 | Miscellaneous Capital Outlay. | 1,98,58,000 | *1,000* | 1,98,59,000 |
| 5: | Loans and Advances by the State Government .. | 25,95,84,000 | .. | 25,95,84,000 |
| | *Public Debt—Repayment* .. | .. | *29,55,76,000* | 29,55,76,000 |
| | GRAND TOTAL. | 2,54,02,33,000 | *55,73,56,000* | 3,04,75,89,000 |

I certify that this is a money Bill.

K. RAJARAM,
*Speaker,*
*Tamil Nadu Legislative Assembly.*

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1981 மார்ச் 30.

---

பங்குனி 17, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 2-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண் 193-ம் வினா எண் 194-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வினா 195-ம், வினா 196-ம் நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப் பட்டதாக இருப்பதால் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத்துறை ஆய்வு நிலையம்

* 195 வினா.—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலைத் துறை ஆய்வு நிலையம் என்ற பிரிவு அமைக்கப் பட்டுள்ளது உண்மையா ?

(இ) இந்நிலையத்தின் ஆய்வறிக்கை அவ்வப்பொழுது அரசுக்கு அனுப்பப்படுகிறதா ?

(உ) ஆம் எனில், 15—6—1980 ஆம் நாள் வரை, எந்த அளவுக்கு இந்த ஆய்வறிக்கைகளின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆய்வறிக்கைகளிலும், ஆண்டறிக்கைகளிலும் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மறுபடியும் "உள்நோக்கம், உள்நோக்கம்" என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் நல்லபடியாக வெளி நோக்கத்திற்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே, வெளி நோக்கத்திலே என்றைக்கும் இருப்பவன் நான். நிதிநிலை அறிக்கையிலே ஒரு கோடி ரூபாயை ஒதுக்குகிறபோது, இதன் மூலம் மதுவிலக்குக் கொள்கையை எந்தெந்த வகையிலே பிரச்சாரம் செய்யப் போகிறோம் என்று தெளிவாக வலியுறுத்துச் சொல்லியிருந்தால், இத்தகைய பிரச்சினைகளுக்கு இடமில்லை.

இன்னுமொன்றை அவர் சொன்னார். 1973-74 ஆம் ஆண்டில் யாரோ வைத்த கொள்ளி இன்றைக்குத் தொடர்கிறது என்றார்கள். அன்றைக்கும் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்ற கொள்ளி வைத்தவர் இன்றைக்கு முதலமைச்சராக இருப்பவர்தான். இன்றைக்கும் தமிழகத்திலே "திக்கற்ற பார்வதிகளாகத்" தாய்மார்கள் இருப்பதற்குக் காரணமாக இருப்பவர் இந்த முதலமைச்சர்தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, வார்த்தைகள் கொஞ்சம் கடுமையாகப் போவதற்குப் பொருத்தருள வேண்டும். அன்றைக்கு இருந்த முதலமைச்சர் கொள்ளி வைத்து, இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் வேறு வகையில்லாமல்—கூடப் பிறந்த சகோதரர்கள் செய்த காரியங்களைப் பார்த்துக்கொண்டு கை கட்டி, வாய் பொத்தி இருக்க வேண்டிய சூழ்நிலை இருந்ததால்—பார்த்துக் கொண்டிருந்தார்.

**திரு. சோ. ஆறுமுகம் :** கோயம்புத்தூரில் நடந்த கழகப் பொதுக் குழு கூட்டத்தில்—இன்றைக்கு செய்தித் துறை அமைச்சராக இருப்பவர் அன்றைக்கு வந்திருக்கமாட்டார்—மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்ற கழகத் தீர்மானத்தை முன்மொழிந்து அதற்கான காரண காரியங்களை எடுத்துப் பேசியவர் இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர்தான் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் என்ன நடைபெற்றது, எப்படி நடைபெற்றது, எந்தச் சூழ்நிலையில் நடைபெற்றது என்பதை இந்த மன்றத்திலே விவாதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு தகவலைத் தெரிவித்திருக்கிறார். அதையேதான் நானும் சொன்னேன். கொள்ளி வைக்கிற



போது பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு கைகள் கட்டப்பட்டு, வாய் பொத்திக் கொண்டிருந்தார். அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால், அறிஞர் அண்ணா அமைத்த அரசு கலைக்கப்படும் என்று அபாயக்குரல்கள் எழுப்பப்பட்டதால், அறிஞர் அண்ணா அமைத்த அரசு போய்விடக் கூடாதே என்ற கருணை உள்ளத்தாலே, அந்த மன நிலையை ஏற்றுக்கொண்டு, அந்தச் சூழ்நிலையில் தாங்காத வேதனையோடு இன்றைக்கு இருக்கிற புரட்சித் தலைவர், முதல்வர் அன்றைக்கு இருந்தார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அறியமாட்டார். நாங்கள் எல்லோரும் அறிவோம், இந்த நாடும் அறியும்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அவைத் தலைவர் அவர்களே, பழைய விவாதங்களைத் தொடர்ந்தால் அது தொடர் கதையாக இருக்கும். சில பல வேதனைகளை நிச்சயமாக ஏற்படுத்திவிடும். எனவே பழைய தொடர் கதைக்கு நான் போகாமல் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி மட்டும் பேச விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே எந்த முறையிலே அணுகியிருக்கிறோம் என்பதை நாம் பிரத்தியட்ச நிலையிலே பார்க்க வேண்டும். பழைய நிலைமைக்குப் போகக் கூடாது. மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக ஒரு கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது.

அதைப் போலவே 1981-82 ஆம் ஆண்டுக்கு, குடிதண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காக 24.5 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே ஓராண்டுக் காலத்திலே நிச்சயமாக குடிதண்ணீர்ப் பிரச்சினை தமிழகத்திலே ஒழிக்கப்பட்டுவிடும் என்பதை இந்த நிதிநிலை அறிக்கை காட்டுகிறது. எனவே இதையெல்லாம் நான் வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாக எடுத்துச் சொன்னால் நேரம் கடந்துவிடும். ஆகவே ஒரே ஒரு வரியிலே சொல்லுகிறேன். தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பினருடைய உணர்வுகளையும், மன நிலையையும் கண்டு அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற வகையில் இந்த அரசு முனைப்பாகச் செயல்படுகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை காட்டுகிறது என்று சொல்லி பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் 30—3—1981, திங்கட்கிழமை, காலை 9-30 மணிக்குக் கூடும்.

**பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.**

**(பிற்பகல் 12-40)**

[1981 மார்ச் 30

## நெடுஞ்சாலைத்துறை ஆய்வு நிலையம்.

*196 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் பதவியை, தலைமைப் பொறியாளர் அந்தஸ்துக்கு உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலைத் துறை ஆய்வு நிலையப் பிரிவு அவ்வப்போது நெடுஞ்சாலையில் ஆய்வு செய்து அறிக்கைகளை அரசுக்கு அனுப்பி வருவதாகத் தெரியவருகிறது. இதிலே என் கேள்வி ஒன்று. உள்ளூரிலேயே கிடைக்கின்ற மிகவும் விலை குறைவான அளவிலே கிடைக்கின்ற பொருள்களைப் பயன் படுத்தி சாலை அமைத்தால் செலவு குறையும் என்றும், நெய்வேலி, எண்ணூர் போன்ற இடங்களில் கிடைக்கின்ற நிலக்கரியின் Flyash என்று சொல்லக்கூடிய பொருளை, சேதமாகக்கூடியதாக இருக்கின்ற பொருளைப் பயன்படுத்தி சாலை அமைக்கலாம் என்றும், அதனால் ஆகக்கூடிய செலவு மிகவும் குறைவு என்றும் ஆய்வில் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே தாருக்குப் பதில் விலை குறைவான கீலைப் பயன்படுத்தி சாலை அமைத்தால் செலவு குறைவாக ஆகும் என்று அரசுக்கு அறிக்கை வந்ததாகத் தெரிய வருகிறது. இந்த அறிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா ? அந்த ஆய்வுகளை அமுல் நடத்துவது குறித்து அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாலைப் போக்குவரத்திற்காகக் குறைந்த செலவில் சாலைகளை அமைக்கும் பணிக்காக என்று அந்த ஆராய்ச்சி நிலையம் 1948-லே ஆரம்பிக்கப்பட்டது. 1957-ல் ரூ. 15 லட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டு, மிகுந்த விரிவான முறையில் ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சாலைகளுக்காக உபயோகப்படுத்தப்படுகின்ற தார் விலை அதிகமாக இருப்பதால், அந்தத் தாருக்குப் பதிலாக வேறு பொருள்களைக் கொண்டு மிகமிக எக்கனாமிக்கலாக சாலைகள் அமைக்க வேண்டும் என்ற நிதியிலே பரிசீலித்தார்கள். வேறு பொருள்களைப் பாதைகளுக்குப் போட்டு அதிக காலம் உழைக்கின்ற அளவிலே செய்ய வேண்டும் என்பதற்காக, அந்தப்



1981 மார்ச் 30]

பணி நடைபெற்று வருகிறது. குறிப்பாக பெட்ரோலியப் பொருள்கள், நிலக்கரி பொருள்கள், மாற்று ஒட்டுப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆய்வுகள் மிகவும் உதவிகரமாக இருக்கின்றன. பல்வேறு காலங்களில், பல்வேறு ஆய்வுகள் எல்லாம் நடைபெறுகின்றன. அந்த ஆய்வுகளைப் பற்றி விரிவாக இங்கே சொல்வதாக இருந்தால், குறைந்தது அரை மணி நேரமாவது ஆகும். அதன் ஆய்வுப் பணி 1957-58-லேயிருந்து நடைபெற்று வருகிறது. குறிப்பாக லிக்னைட் பொருள் மூலமாகவும், நிலக்கரி கண்டுபிடிக்கின்ற அளவுக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதையெல்லாம் உபயோகப்படுத்தி நல்ல சாலைகள் போடுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டு அதன் மூலம் பல்வேறு இடங்களிலே பரிசோதனை செய்யப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதில் மிக முக்கியமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கடற்கரை ஓரங்களில் பால வேலைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்ற இரும்புக் கம்பிகள் 'கரோஷன்' ஆகிவிடுகின்றன அதாவது உப்புக் காற்றினால் சேதம் அடைகின்றன. இது குறித்து ஆய்வு நிலையம் ஏதாவது ஆய்வில் சொல்லியிருக்கிறதா ? சில இடங்களில் மண் வளம் சரியாக இல்லாததால், சாலை மேம்பாட்டுப் பணியில் அமைக்கப்படுகின்ற சாலைகள் உறுதியாக இல்லாமல், 'சிங்க்' என்று சொல்லக்கூடிய, சாலை உள்ளே அமிழ்ந்துவிடுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இன்று தமிழகத்திலே 'கரோஷன்' என்ற பிரச்சினையும் 'சிங்க்' என்னும் சாலைகள் உள்ளே அமிழ்கின்ற பிரச்சினையும் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகள் மிகவும் முக்கியமானவையாக இருப்பதால், நெடுஞ்சாலைத் துறை இதுகுறித்து ஆராய்கிறதா ? இந்த ஆராய்ச்சி நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மேலவைத் தலைவர் அவர்களே, வளைந்த இரும்புப் பாலம் பற்றியும் ஆராய்ச்சி இருக்கிறது. குறிப்பிட்டிருக்கின்ற இந்தப் பிரச்சினை கடலூரில் உள்ள பாலம் ஒன்றில் இருக்கின்றது. இது குறித்தும் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதுபற்றி ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்து, மண் சோதனை செய்து அதன் மூலமாகவும், எந்த மண்ணுக்கு, எந்தவிதமான சாலையை ஏற்படுத்துவது அவசியம், நிலக்கரி போடுவது அவசியமா என்பதைப் பற்றியும்கூட சில பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, வினா 196 சம்பந்தமாகத் துணைக் கேள்வி கேட்கிறேன்.

[1981 மார்ச் 30

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 195, 196 இரண்டையும் ஒன்றாகத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நான்கு கேள்விகள் போடலாமே என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அதற்காக அல்ல இது வேறுவிதமான கேள்வி. அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வினா 196-க்குப் பதில் அளிக்கையில், அது பரிசீலனையில் இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆய்வைப் பொறுத்தவரையிலே, நான்கு ஆய்வுக்கூடங்கள் இருக்கின்றன. அதற்கு நான்கு துணை இயக்குநர்கள், டிவிஷனல் என்ஜினியர்கள் அந்தஸ்தில் தேவைப்படுகின்றனர். ஆனால், இப்போது இருப்பது 2 டிவிஷனல் என்ஜினியர்கள்தாம். 2 துணை இயக்குநர் பதவிகள் தாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த 4 ஆய்வுக்கூடங்களுக்கு மேலும், 2 துணை இயக்குநர் பதவிகளை ஏற்படுத்த வேண்டும். தரக் கட்டுப்பாடு நிலையம், குவாலிட்டி கன்ட்ரோல் நிலையம் அமைப்பது குறித்தும் அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்த வரையில், இருக்கின்ற இயக்குநர் அவர்களும், டைரக்டர் அவர்களுமே அவைகளை யெல்லாம் காப்பாற்றி வருகிறார்கள். மேலும் சில பதவிகளை உருவாக்க வேண்டுமென்பதற்காகவும், மேலும் ஆராய்ச்சிப் பணிகளை இன்னும் உறுதிப் படுத்தவேண்டுமென்பதற்காகவும் வேண்டிய நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சில மேலை நாடுகளிலே, மலேசியா போன்ற நாடுகளிலே, தாரை உறுதிப்படுத்த ரப்பரை இணைத்து பாதையை அமைக்கிறார்கள். அது போன்று இங்கும் ரப்பரைக் கலந்து சாலை அமைக்கும் ஆராய்ச்சி ஏதாவது இருக்கின்றதா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விரைவுப் பேருந்துகள் அதிகமாகச் செல்வதால், அந்த மாதிரி போகும் வண்டிகளுக்கு என்று 'ஆட்டோ பான்' பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ரப்பர் போன்று உள்ள ஒரு பொருளை இங்கே உபயோகிக்க வேண்டுமென்ற ஆராய்ச்சி இதுவரையிலும் இல்லை. மேலும் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், அதிகமான ரப்பர் கிடைப்பதில்லை. அதே நேரத்தில் நிலக்கீலுக்குப் பதிலாக வேறு ஒரு



1981 மார்ச் 30]

புதிய பொருள் கண்டுபிடிக்கும் ஆய்வு நடத்தப்படுகிறது. அதில், முந்திரி, கிளிஞ்சல், தார் இவைகளைச் சேர்த்து அதன் மூலம் ஒரு புதிய பொருளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஒரு ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. குறிப்பாக ரப்பர் சேர்ந்த பொருள் கண்டுபிடித்து அமைக்கும் திட்டம் எதுவும் இதுவரையில் இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நெடுஞ்சாலைகளில் ஓடுகின்ற மாட்டுவண்டிகள் இரும்புப் பட்டை போடப்பட்டவைகளாக இருக்கின்றன. அதனால் பாதைகள் சீக்கிரம் பழுதடைந்துவிட ஏதுவாக இருக்கிறது. அந்த இரும்புப் பட்டைக்கு ரப்பர் டயர் போட வேண்டுமென்று ஆராய்ச்சி நிறுவனம் சிபாரிசு செய்திருக்கிறதா ? அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்ததா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அதுபற்றிய குறிப்புகள் என்னிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அங்கத்தினர் அவர்கள் வினா பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** ஆராய்ச்சி செய்து, சில முக்கியமான முடிவுகளை அரசு ஏற்றுக்கொண்டு, செயல்படுத்துகிறது. அந்த முடிவுகளைப்பற்றி ஒரு அறிக்கையை அமைச்சரவர்கள் அவைக்குத் தந்தால், உறுப்பினர்களும் அவற்றைப் பற்றித் தெரிந்துகொண்டு, பேசுவதற்கு வாய்ப்புள்ளதாக இருக்கும்.

நெடுஞ்சாலைத் துறையில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று தேசிய நெடுஞ்சாலை, மற்றொன்று மாநில நெடுஞ்சாலை. தேசிய நெடுஞ்சாலைகளுக்கான செலவில் 50 சதவிகிதம் மத்திய அரசு தருவதாகவும், அவற்றைக் கண்காணிக்க மத்திய அரசு சார்பிலே, எக்சிகியூடிவ் என்ஜினியர் அந்தஸ்திலே ஒரு அதிகாரி மாநிலத் தலைநகரில் இருப்பதாகவும் அறிகிறேன். அவருடைய சிபாரிசுப்படிதான் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. மாநிலப் பொறியாளர்கள் அவருடைய அந்தஸ்தில் இல்லாததால், அவருடன் பேசி, அதிக நிதியை மாநிலத்திற்கு வாங்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. இதற்கு நேர்மாறாக கேரள மாநிலத்தில் சீஃப் இன்ஜினியர், எக்சிகியூடிவ் இன்ஜினியரின் அந்தஸ்தில் இருப்பதால், அவருடன் பேச்சு வார்த்தை நடத்தி, கயர் எல்லாம் கடந்து பாலங்கள் கட்டப்பட்டு, மலைகள் எல்லாம் கடந்து பாதைகள் போடப்பட்டு வருவதை உணர முடிகிறது. எனவே மத்திய அரசு அதிகாரியோடு நம்முடைய மாநில அதிகாரிகள் தொடர்பு கொண்டு, மாதந்தோறும் அவரைச் சந்தித்து, பேச்சுவார்த்தை குறித்து ரிப்போர்ட் தர வேண்டுமென்று அரசு அவர்களைப் பணிக்குமா ?

[1981 மார்ச் 30

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்து, ஏற்கெனவே ஒரு தலைமைப் பொறியாளர் நம்மிடம் இருக்கிறார். அதுமட்டுமல்லாமல், தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசு புதியதாக ஒரு கிலோ மீட்டர் அளவிற்குக்கூட புதிய சாலைகள் அமைக்கும் திட்டத்தை மாநில அரசிடம் கொடுக்கவில்லை. அஸ்ஸாம் போன்ற மாநிலங்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலம், பக்கத்து மாநிலங்கள் எவற்றுக்கும் நிதி ஒதுக்கவில்லை. இருக்கக் கூடிய தேசிய நெடுஞ்சாலைப் பராமரிப்பிற்கு மட்டுமே பணத்தை ஒதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து நாம் அதிகமாக வலியுறுத்தி வரு கிறோம். 16 சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்கப்பட வேண்டு மென்று செயற்குறிப்பு ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே வைத் தோம். இதுவரை ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும் நாம் வலியுறுத்தி வருகிறோம்.

## கிராமப்புறங்களுக்கு மருத்துவர்கள்.

* 197 வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) குறுகியகால மருத்துவப்பயிற்சி அளித்து கிராமங்களில் பணிபுரியத் தகுந்த மருத்துவர்களை தனியாக தயார் செய்யவேண்டுமென்று, மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) & (இ)—கிராமப்புற மக்களுக்கு, மருத்துவ வசதி செய்யும்பொருட்டு, சைனாவில் உள்ள Barefoot Doctors Scheme என்ற திட்டத்தை முன்னோடியாகக் கொண்டு, ஒரு திட்டத்தை உருவாக்க மத்திய அரசு 1976 டிசம்பர் மாதத்தில் மத்திய திட்டக்குழு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு ஒன்றை அமைத்தது. இந்தத் திட்டம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை பரிசீலனையில் இருந்த சமயத்தில், இந்தக் குழு செப்டம்பர் மாதம் 77-ல் கலைக்கப்பட்டுவிட்டதால் இது குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.



1981 மார்ச் 30]

திரு. ம. சங்கரலிங்கம் : மத்திய அரசு, குறுகிய கால மருத்துவப் பயிற்சியை இப்போது கைவிட்டுவிட்டதா ? மாநில அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொன்னதாக அறிந்தேன். ஆனால் மத்திய அரசு அந்தத் திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறதா ? இந்த மாநிலத்தில் பல பகுதிகளில் குவேக் டாக்டர்ஸ் என்று சரியாகப் பயிற்சி பெறாதவர்கள் சிகிச்சை பண்ணும் நிலைமைகள் இருக்கின்றன. அதைத் தடுக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மத்திய அரசு அந்தத் திட்டத்தை, திட்டவட்டமாகக் கைவிட்டதாகத் தெரியவில்லை. ஆனால் மாநில அரசைப் பொறுத்தவரையில், அந்தத் திட்டத்தை நாம் கடைப்பிடிப்பதாக இல்லை. குவேக் டாக்டர்களைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். ரெஜிஸ்டிரேஷன் இல்லாமல் மருந்துகளைப் பயன்படுத்தக்கூடாதென்று சட்டத் தில் இருக்கிறது. அல்லோபதிக் பிராக்டிஸ் இல்லாமல், பயிற்சி இல்லாமல், அவர்கள் அந்த மருந்துகளைப் பயன்படுத்தினால் நிச்சயமாக, உறுதியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : குறுகிய காலப் பயிற்சி என்பது, கிராமங் களுக்கு மருத்துவர்கள் போக வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையாக இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களுக்கு மருத்துவ பயிற்சி பெற்ற டாக்டர்கள் போகத் தயாராக இருக்கிறார்கள். எனவே அவர் களை ஊக்கப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் சொன்னதுமாதிரி, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், பேர்-புட் டாக்டர்களுக்குத் தேவையிருப்பதாகத் தெரியவில்லை. இங்கே மருத்துவ பயிற்சி பெற்றிருக்கக்கூடிய, டிகிரி ஹோல்டர்ஸ் இருக் கிறார்கள். ஆகவே ஷார்ட் டேர்ம் கோர்ஸ் தேவையில்லை என்று முடிவு செய்திருக்கிறோம். முன்பு இருந்த சில குறைபாடுகளைச் சொல்ல விரும்பு கிறேன். பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம், இத்தனை இடங்களுக்கு டாக்டர்கள் வேண்டுமென்று முதலில் சொல்லுவோம். அதற்கிடையில் ஜாஸ்தியாக இடங்கள் காலியாகிவிடும். எனவே சில இடங்களில் மருத்துவர்களை நிய மிக்க முடியாமல் இருந்தது. இப்போது அப்படியில்லாமல், Pragmatic assessment of the vacancies என்று கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்கிறோம். இப்போது 1,400 டாக்டர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். லிஸ்ட் வந்திருக்கிறது. எனவே மருத்துவர்கள் பற்றாக்குறை கிராமங்களில் இல்லை என்று அரசு கருதுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : 1,400 டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல இடங்களுக்கு அனுப்பப்பட இருக்கிறார்களென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கிராமப்புறங்களுக்குச் சென்று பணி புரியும் டாக்டர்களுக்கு ஊக்கச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். இப்போது நான்-பிராக்டிசிங் அலவன்ஸ் கொடுத்தாலும்கூட, அவர்கள் தங்க அங்கே வசதிகள் இல்லை. கிராமப்புறங்களுக்கு அனுப்பும் டாக்டர்களுக்கு தங்க வீடும், சிறப்பு ஊதியமும் வழங்குவது குறித்து அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் தங்குவதற்கு ஒரு வீடு இருக்கிறது. 3 மருத்துவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்கு இப்போது வீடு இருக்கிறது. பெண் டாக்டர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பிரபான்ஸ் கொடுத்து, அந்த வீடுகள் அவர்களுக்குத் தரப்படுகின்றன. இன்னொரு வீட்டை அங்கே கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். இரண்டாவது வீட்டைக் கட்டிவிட்டால், கிட்டத்தட்ட 75 சதவிகிதம் பிரச்சினைகளைத் தீர்த்து, முற்றுப்புள்ளி வைக்கலாம். அந்த அடிப்படையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். விரைவில் அது முடிந்துவிடுமென்று கருதுகிறேன்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : சில குறிப்பிட்ட துறைகளில் தேர்ச்சி என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட ஸ்பெஷலிஸ்டுகளின் அனுபவங்கள், திறமைகள் பல்வேறு மாவட்டங்களிலும் கிடைக்கும் வகையில் இருக்க வேண்டும். சென்னையில் பணியாற்றும் சிறந்த மருத்துவர்களின் சேவை, கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கும் கிடைக்கும்படியாக இருக்குமென்ற முறையில் அரசு ஒரு அறிவிப்பு செய்தது. பிறகு அந்த அறிவிப்பைத் திரும்பப் பெற்றது. அதன் காரணங்களை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அப்படிப்பட்ட அறிவிப்பு எனக்குத் தெரிந்தவரையில் நிச்சயமாக இல்லை. வேறு எதையோ மனத்திலே வைத்துச் சொல்லுகிறார்களென்று எண்ணுகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுமாதிரி எந்தவிதமான அறிவிப்பும் செய்யவில்லை. சிறப்புப் பயிற்சி பெற்றவர்களை கிராமங்களுக்கு அனுப்ப முடியாது. உலகத்தில் எங்கும் செய்ய முடியாத வேலை அது. ஏனென்றால் கிராமப்புறங்களில் அவர்களுக்குத் தேவையான இன்ப்ராஸ்டிரக்சர் இல்லை. எம். எஸ். படித்தவர்களை ஆரம்பச் சுகாதார நிலையத்தில் போட்டால், ஆபரேஷன் தியேட்டர்கள் வைக்க வேண்டும். அதற்குப் பிறகு ரிசசிடேஷன் மெஷர்ஸ்—ஆக்சிஜன் எல்லாம் வைத்தால் தான் முடியும். அதனால் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றவர்களை கிராமங்களுக்கு அனுப்ப முடியாது. ஆனால் டி.ஜி.ஓ. படித்தவர்களை அனுப்புவதன் மூலம் தாய்மார்களைக் கவனிக்க நல்ல வாய்ப்பு



ஏற்படும். எனவே எதில் சாத்தியக்கூறு இருக்கிறதென்று பார்த்து, அனுப்ப வேண்டும். சர்விஸ் கமிஷனில், எம்.எஸ்., எம்.டி., டி.சி.எச்., படித்தவர்களின் தேவையை முதலிலேயே அசெஸ் செய்து, அதற்குரிய வகையில் செலக்ஷன் செய்திருக்கிறார்கள். எந்தெந்த கிராமங்களில் எப்படி எப்படி மருத்துவ மனைகள் நடத்த முடியுமோ, அதற்குரிய வகையிலே சிறப்புப் பயிற்சி பெற்றவர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறோம்.

## *Filarial Clinical Research Unit in Thanjavur Medical College.*

* 198 *Q.*—DR. T. R. JANARTHANAM (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether there is any proposal to start a Filarial Clinical Research Unit in Thanjavur Medical College, Thanjavur; and

(*b*) if so, whether such unit will be started during 1980, itself ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) & (இ) இதுபற்றிய செயற் குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

டாக்டர் இரா. சனார்த்தனம் : யானைக்கால் வியாதியை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்தும் முறை இருக்கிறதா ? கேரளத்திலிருந்து ஒரு சபாநாயகர் இங்கே வந்து, அறுவை சிகிச்சை செய்து கொண்டு போனதாகத் தெரிகிறது. அதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதற்கு அறுவை சிகிச்சை இருக்கிறது. யானைக்கால் என்று சொல்லும்போது, நான்காம் ஸ்டேஜ் வந்த பிறகு, அதாவது கால் வீங்கியதற்குப் பிறகு, அந்தச் சதையை எடுத்து, எக்ஸ்பிரிமென்டல் பிராசசாக, தஞ்சையில் டாக்டர் ஜமால் என்பவர் செய்திருக்கிறார்கள். சிறப்பான வகையிலே, அகில உலகமும் போற்றும் அளவிற்கு, தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் அந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே, இங்கேயும் சிகிச்சைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், மூலக் கேள்வி ரிசர்ச் சென்டர்ஸ் பற்றியதாகும். யானைக் கால் நோய்க்கு, கால் வீங்கியதற்குப் பிறகு வைத்தியம் செய்வது கஷ்டம். மேலும் இந்த நோயை ஒழிக்க கொசு ஒழிப்பு—பைலேரியா கன்ட்ரோல் மெஷர்ஸ்—மிக மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

[1981 மார்ச் 30

(முற்பகல் 9-50)

திரு. ம. சங்கரலிங்கம் : " 1980ஆம் ஆண்டிலேயே தொடங்கப்படுமா " ? என்று மூலக் கேள்வியில் கேட்கப்பட்டுள்ளது. அப்படியானால் இந்த வினா 5, 6 மாதங்களுக்கு முன்பே கேட்கப்பட்ட வினாவாக இருக்கலாமென்று நான் கருதுகிறேன். அதுபற்றி ஆராய்ந்துகொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சாவூரில் நல்ல டாக்டர் சிறப்பாகச் சிகிச்சை செய்தார் என்றும் சொன்னார்கள். பொதுவாக நோய் வருவதற்கு முன்பே நோயைத் தடுப்பது முக்கியம் என்றும் சொன்னார்கள். அப்படியானால் அரசு உடனடியாக இதில் தீவிரமாக ஈடுபடாமலிருப்பதற்குக் காரணம் என்ன ? எந்தெந்தப் பகுதிகளில் இந்த நோய் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பொதுவாகக் கொசு உற்பத்திக்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் இந்நோய் அதிகமாக, ஜாஸ்தியாக இருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட கொசுக்கள்தான் ஃபைலேரியா, மலேரியா போன்ற நோய்களுக்கு மூல காரணமாக இருக்கின்றன. The establishment of a filarial clinical reseach unit with provision for a total of thirty beds (15 male, 10 female and 5 children) in the Thanjavur Medical College Hospital, Thanjavur and the employment of some stac. . . . . அதற்குப் பிறகு ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சர் என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள்.

The Director of Medical Education has stated that the proposals could not be included in the Sixth Five-Year Plan and will be taken up for consideration as a non-Plan scheme.
ஆகவே அந்த வகையில் அதைச் செயல்படுத்தலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் ஃபைலேரியா நோய்க்கென்று ஒரு பிரிவை ஆரம்பிப்பது கூட நலமாக இருக்கும். அந்தவகையில் இதை நாம் கட்டுப்படுத்த முடியும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று வீதமாவது இதை ஏற்படுத்துவது நல்லது. ஆனால் நிதி நிலைமையெல்லாம் பார்த்துத்தான் ஆரம்பிக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் கூட நிதி நிலைமை பற்றித் தெரியும். அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் விரைவில் இதுகுறித்து நடவடிக்கை எடுப்போம்.



1981 மார்ச் 30]

திரு. ம. சங்கரலிங்கம் : யானைக்கால் நோய்க்கும் கொசுக்கள் தான் மூல காரணம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே கொசுக்களை ஒழித்து விட்டால், பல நோய்கள் ஏற்படாமல் நாம் தடுக்க முடியும். உலகச் சுகாதார நிறுவனம் மலேரியா ஒழிப்புத் திட்டம் என்கிற திட்டத்தை முன்பு வைத்திருந்தார்கள். இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். உலகச் சுகாதார நிறுவனத்துடன் இந்த அரசு தொடர்பு கொண்டு கொசு ஒழிக்கும் திட்டத்தைப் பார்வையிடுக முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : உலகச் சுகாதார நிறுவனத்திடமிருந்து கொசுக்களை ஒழிப்பதற்காக பணம் பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இதுசம்பந்தமாக ஒரு ' இன்டகிரேட்டட் அப்ரோச் ' இருந்தால் தான், இதை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். அதற்கும் நிதி நிலைமை அதிகமாகத் தேவைப்படுகிறது. ஒவ்வொரு துறையும் சேர்ந்து ' இன்டகிரேட்டட் அப்ரோச் ' என்கிற முறையில்தான் இதைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் இதை ஒழிக்க வேண்டுமென்கிற முறையில். ' இன்டகிரேட்டட் அப்ரோச் ' என்கிற முறையில் செய்தால், இதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படும். ஆனால், இதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டு படிப்படியாக இதில் முன்னேற்றம் அடைவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் யானைக்கால் நோய்க்கான பிரிவு இருப்பதற்குக் காரணம் அங்கு யானைக்கால் நோய் அதிகமாக இருப்பதுதான் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ? அதிலும் குறிப்பாக கும்பகோணம் கொசுக்களுக்கு தனிப் பெருமை உண்டு என்று கூறப்படுகிறது. மன்னார்குடி, கும்பகோணம் போன்ற இடங்களில் உள்ள கொசுக்களை அடியோடு ஒழிக்க அரசு திட்டமிருக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மூலக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் சரியாகப் படித்திருப்பார் என்றுதான் கருதுகிறேன். யானைக்கால் நோய் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்கான செயற் குறிப்பு ஏதும் உள்ளதா என்றுதான் கேட்கப்பட்டுள்ளது. அதற்குரிய மெட்டீரியல்ஸ் எல்லாம் தேவை. மேலும் தமிழ் நாட்டில் அதற்குரிய வசதிகள் உள்ள 8 மருத்துவக் கல்லூரிகள்தான் இருக்கின்றன. அதற்குப் பேராசிரியர்கள் எல்லாம் தேவை. இதை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் காலேஜ் ஓரியன்டட் ரிசர்ச் யூனிட் என்கிற முறையில் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த நோய்பற்றி ஆய்வு செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது உற்பத்தியாகக் கூடிய கொசுக்களை ஒழிப்பது என்கிற முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். பத்து கொசுக்களை ஒழிக்கிறோம் என்றால், லட்சக் கணக்கான கொசுக்கள் உற்பத்தியாவதற்குரிய மூலகாரணங்களைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபடவில்லை. இதையெல்லாம் ஆய்வு செய்து தான் கண்டுபிடித்து ஒழிக்க வேண்டும் என்பதல்ல. கொசுக்கள் உற்பத்தி யாவதற்கான மூலாதாரமான சுகாதாரக் கேடுகள் நிறைய இருக்கின்றன. குறிப்பாக நகரங்களில் இத்தகைய சூழ்நிலைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, அதற்கு இன்டென்சிவ் கேம்பைன் என்கிற வகையில் தீவிர நடவடிக்கை மேற்கொண்டால்தான் பலன் காண முடியும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி நிலைமை சரியில்லையென்று சொன்னாலும்கூட, குறிப்பிட்ட கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாகிற இடங்கள் எவையெவை என்று தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளிலாவது 'இன்டென்சிவ் கேம்பைன்' என்கிற முறையில் தீவிர திட்டத்தைச் செயல்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அதை இப்போதே செய்து கொண்டுதான் இருக்கிறோம். மலேரியா, ஃபைலேரியா இரண்டையும் இணைத்து அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். பொதுவாக 'மஸ்கிட்டோ எராடிகேஷன் கேம்பைன்' என்கிற முறையில் தீவிர திட்டத்தை அமுல்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆகவே படிப்படியாக இந்த விஷயத்தில் வெற்றி காண முடியும் என்று நான் நம்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கொசு ஒழிப்பு மருந்து மூலம் கொசுக் களை ஒழிப்பதால், அது கொசுக்களுக்குப் பழக்கமாகிவிட்டது. எத்தனை முறை மருந்து அடித்தாலும், அது அவைகளுக்குப் பழக்கமாகிவிட்ட மருந் தாகையால், கொசுக்கள் சாவதில்லை. ஆகவே புதிதாக மருந்து கண்டு பிடிக்கப்படுமா? அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் தீவிர கொசு ஒழிப்புத் திட்டம் என்கிற முறையில் ஆயிரம் கொசுக் களைப் பிடித்துக் கொடுத்தால் இவ்வளவு பணம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற முறை சைனா முறை. அங்கு இத்தனை கொசுக்களைப் பிடித்துக் கொடுத்தால் அல்லது இத்தனை 'ஃபிளைஸ்' பிடித்துக் கொடுத்தால் அதற்கு இவ்வளவு என்று கணக்கு இருக்கிறது. சைனாவிலுள்ள டாக்டர்



முறையே நமக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு இது விஷயமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தடை செய்யப்பட்டுள்ள மருந்துகள்.

* 199 வினா.—திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படக் கூடாது என அரசு தடை செய்துள்ள மருந்துகள் எவையும் இருப்பின், அவற்றின் பெயர்கள் யாவை?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பென்சிலின் மருந்தைத் தடைபடுத்துகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நோயாளிகளுக்கு பயன்படுத்தப் படக் கூடாது என அரசு தடை செய்துள்ள மருந்துகள் எவையும் இருப்பின், அவற்றின் பெயர்கள் யாவை என்பதுதான் மூலக் கேள்வி. பென்சிலின் என்று சொன்னால், ஆயின்ட்மென்டும் இருக்கிறது, இன்ஜெக்ஷனும் இருக்கிறது. இன்ஜெக்ஷனைப் பொறுத்தவரை, சில நேரங்களில் சிலருக்கு 'ஷாக்' வருகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இரண்டு மூன்று ஆண்டு களுக்கு முன்பு அரசு மருத்துவமனைகளில் இதைப் பயன்படுத்த வேண்டா மென்று 'ஓரல் ஆர்டர்' கொடுக்கப்பட்டது. இப்போது அதை சற்று மாற்றி யதற்குப் பிறகு குழந்தைகளுக்கு ஷாக் வரக்கூடிய வாய்ப்பு இல்லை . . . . anathelactic shock. . . .Penicillin ointment (ai) Vaselline base- -இல் செய்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக இதைச் சரியாகப் பயன் படுத்தினால் நன்றாக இருக்கிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்குரிய எண்ணம் அரசுக்கு இல்லை. பொதுவாகவே ஏழையெளிய மக்களுக்கு விலை அதிகமில்லாமல் பயன்படக்கூடிய ஒன்று இது. பிரிஸ்கிரிப்ஷன் இல்லாமல் இத்தகைய மருந்துகளைச் சிலர் பயன்படுத்திக் கொண்டு வருவ தால்தான் இத்தகைய நிலை ஏற்படுகிறது. டாக்டரின் ஆலோசனைப் பேரில்

தான் இதைப் பயன்படுத்த வேண்டும். நோயாளிகளுக்கு டாக்டரின் ஆலோசனை இல்லாமல் பயன்படுத்தக்கூடாது. அந்த வகையில் நாங்கள் திட்ட வட்டமாக உத்தரவு போட்டிருக்கிறோம். Indiscriminate use of penicillin ointment—whether it should be banned, the Government will give serious consideration to it.

### அழூருக்கு பேருந்து வசதி.

*200 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் வட்டத்திலுள்ள அழூருக்கு, நாகப்பட்டினத்திலிருந்து நாகூர் வழியாகவும், திருவாரூரிலிருந்து தங்களாஞ்சேரி வழியாகவும், நகரப் பேருந்து அல்லது மினி பஸ் விடும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி: (அ) & (இ) அழூருக்கு நாகப்பட்டினத்திலிருந்தும் திருவாரூரிலிருந்தும் நகரப் பேருந்துகள் விடுவதற்கான செயற்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள வழி முறைகளைப் பின்பற்றி பேருந்துகளை விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு முன்பாக தற்போது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கக்கூடிய நகரப் பேருந்தை சோழங்கநல்லூரிலிருந்து அழூர் வரை நீட்டித்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: புதிதாகப் பேருந்துகளை விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இரண்டு இடங்களுக்கும் விடுவதற்கு ஒப்புதல் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்பது மாதிரி தர வேண்டுமென்று கேட்டால், வாய்ப்பு தருவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)



### 2. கவன ஈர்ப்பு.

கர்நாடக அரசு ஹேமாவதி நீர்த்தேக்கத் திட்டத்தைத் துவக்கியுள்ளதால் தமிழ்நாட்டிற்கு மேலும் காவிரி நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு விவசாயத்திற்குப் பாதகம் ஏற்பட்டிருப்பது குறித்து.

திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"கர்நாடக அரசு ஹேமாவதி நீர்த்தேக்கத் திட்டத்தைத் துவக்கியுள்ளதால் தமிழ்நாட்டிற்கு மேலும் காவிரி நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு விவசாயம் பெருமளவுக்குப் பாதிக்கக்கூடிய நிலை குறித்தும், மாநில அரசு இது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்".

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, ஏற்கெனவே ஹேமாவதி நீர்த் தேக்கத் திட்டத்தைத் தொடங்க கர்நாடக அரசு 1959-லே உத்தேசித்தது. அப்போது நமது தமிழக அரசினுடைய எதிர்ப்பை அவர்களுக்குத் தெரிவித்தோம். 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டு உடன்படிக்கைப்படி இது தமிழகத்தினுடைய விவசாயத்தைப் பாதிக்கும் என்பதால், எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். இதுபற்றி மத்திய அரசின் உதவியை நாம் வேண்டியும் இதுபற்றிய பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. Central Water Commission கூட இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் இருந்தாலுங்கூட, 1968-லே இந்தத் திட்டம் துவக்கப்பட்டு இப்போது முழுமையாக முடிந்துவிட்டது என்றும், அணைக்கட்டு வேலை முடிந்துவிட்டது என்றும், படிப்படியாக அதிலிருந்து இப்போது பாசனத்திற்குத் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது என்றும், இப்போது அண்மையிலேகூட 1939-லே 24,500 ஏக்கர் பாசனத்திற்கு நீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இடையிடையே பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும் இப்போதுகூட நம்முடைய விவசாயத்தைப் பாதிக்கும் அளவுக்கு—கர்நாடக அரசு மத்திய அரசினுடைய அறிவுரையைக்கூட புறக்கணித்துச் செயல்படுவது ஒரு அச்சத்தை ஏற்படுத்துகிறது. நம்முடைய நியாயமான

@ 259-260 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1981 மார்ச் 30

மாண்புமிகு மேலவைத் தலைவர்: என்ன விளக்கம் கேட்க வேண்டுமோ அதைக் கேட்கலாம். அதை விட்டுவிட்டு அறிக்கையையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்களே.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தமிழகத்தினுடைய நியாயமான கோரிக்கையை நம்முடைய மாநில அரசு கர்நாடக அரசுக்கும், மத்திய அரசுக்கும் தெரிவித்து, இதன்மீது துரிதமான நடவடிக்கை எடுத்து, ஒரு சுமுகமான முடிவு காண்பதற்கு இந்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கும் முக்கியமான பிரச்சினை காவிரி நீர்ப் பிரச்சினைதான். அதன் காரணமாகத்தான் 27—12—1980-ம் நாளன்று கடைசியாக முதலமைச்சர்கள் எல்லாம் சென்னையிலே கூடிப் பேசியிருக்கிறார்கள். இதில் ஒரு சுமுகமான முடிவு காணப்படும் என்று நினைக்கிறேன். மத்திய அரசு கூட தமிழகத்தினுடைய உதவிக்கு வரும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தான் இந்தப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடக்கிறது. அதுபோலத்தான் அவர்கள் வருணா திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். அப்போதும்கூட கர்நாடக அரசுக்கு எதிராக எடுத்துச் சொன்னோம். அந்தத் திட்டத்தைக் கொண்டுவரக்கூடாது என்று எடுத்துச் சொன்னோம். அப்படி அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால், அவர்கள் காவிரி நீரை அதிகமாக எடுத்துக் கொள்வார்கள் என்றும் எடுத்துச் சொன்னோம். இப்போது மத்திய அரசின் மூலமாக ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். முதலிலே சிறு பாசனத் திட்டங்களுக்கு 25 லட்சம் ரூபாய் என்ற நிதிபொறுக்கீட்டின் அடிப்படையிலே சிறுபாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசு நமக்குத் தாக்கீதுகள் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், அதன் 'நார்ம்ஸ்' இப்போது மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. 5 ஆயிரம் ஏக்கருக்குக் குறைவாக இருக்கக்கூடிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் சிறு பாசனத் திட்டங்களாக இன்று அறிமுகப்படுத்தப்பட்டு நமக்குத் தாக்கீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக இதுபோன்ற சிறிய சிறிய அணைகளைக் கட்டியிருந்தாலும்கூட, இவைகளை எடுத்துக்கொள்ளும் வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தக் கருத்துக்கள் தமிழக அரசின் மூலமாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி நமக்குக் காவிரி நீரைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் வலியுறுத்தியிருக்கிறோம்.



1981 மார்ச் 30]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, தமிழகத்துக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கர்நாடகம் விட்டுக்கொடுக்காது என்று அந்த மாநில முதலமைச்சர் அவர்கள் இங்கே சென்னைக்கு வந்தபோதுகூட நிருபர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையிலேகூட சொல்லியிருக்கிறார்கள் தமிழ்நாட்டில் கடலோரப் பகுதியிலே பெய்த மழை கடலிலே போய் வீணாகிறது. (Fact Finding Commission) கூட சொல்லியிருக்கிறது. அதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு தமிழகத்தினுடைய நலன் காக்க ஒரு நல்ல தீர்வு காண வேண்டும். அந்த அடிப்படையிலே நாம் சட்டமன்றப் பேரவையிலேயும், மேலவையிலேயும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, அந்த வேண்டுகோளின் மீது மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள் ஒரு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏன் கேட்கக்கூடாது? நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய ஒருங்கிணைந்த பணியை நாம் ஏன் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது? அந்த வகையிலே ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 27—12—1980 ஆம் தேதியன்று நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலும் கூட சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய வரைவு செயற்குறிப்பை மத்திய வேளாண்மை மற்றும் பாசன அமைச்சருக்கு அனுப்ப வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக பிரதம அமைச்சர் அவர்களுக்கும் இந்தச் செயற்குறிப்பு வேளாண்மை மற்றும் பாசன அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிவிக்கப்படும் என்று நினைக்கிறோம். மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள், இதிலே மிகவும் முக்கிய கவனம் எடுத்துக் கொண்டு, செயல்முறைப் படுத்துவார்கள் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. இது சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை. கர்நாடக முதலமைச்சர் அவர்கள் ஒரு சொட்டு தண்ணீர்கூடக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோலச் செய்திகள் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் கேரளா நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகை மூலமாக ஒரு செய்தியைப் படித்திருக்கிறோம். அதை வைத்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

3. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்— தொடர்ச்சி.

*திரு. வி. வி. வி. ஆனந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 123 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினர் பெருமளவில் பற்றாக்குறை பட்ஜெட்டை அளித்திருக்கிறார்கள். பற்றாக்குறை பட்ஜெட் பணவீக்கத்தை ஏற்படுத்தி பொருள்களின் விலை உயர்வுக்கு வழி வகுக்கும். பற்றாக்குறை பட்ஜெட்டினால் நாம் நாட்டு முன்னேற்றத்தைக் காண முடியாது. பற்றாக்குறை பட்ஜெட்டை நிறுத்தினால்தான் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் நிர்வாகச் செலவினங்களை நாம் குறைக்கலாம். இப்போது பல நிறுவனங்களில் குறிப்பாக நகராட்சிகளிலே வரக்கூடிய வருமானத்தின் பெரும் பகுதி நிர்வாகத்திற்காகச் செலவிடப்படுவதால், மக்களின் நன்மைக்கான காரியங்களுக்குச் செலவிட நிதி கிடைக்கவில்லை. நிர்வாகத்தில் உற்பத்தித் திறன் இல்லை. மற்றும் இப்போது அரசு மேற்கொண்டு நடத்துகின்ற கார்ப்பரேஷன்களிலே ஏற்படும் நஷ்டமெல்லாம் பொது மக்கள் தலையிலேதான் விழுகிறது. ஆகவே, நஷ்டத்தில் வரும் லாபம் ஈட்டாத கார்ப்பரேஷன்களை நாம் நிறுத்திவிடுவது நல்லது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறினார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு மக்கள் வரிப்பணம் வீணாக்கப்படுவதை அரசு தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழகத்தில் வறட்சி நிலைமையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முனைந்து தீவிரமாகச் செயல்படுவதைத் தான் வரவேற்கிறேன். தமிழ் நாட்டிலே மழை குறைந்த அளவு பெய்தாலும்; [illegible] பெய்யக்கூடிய காலங்களில் அந்த மழை நீர் நன்கு சேமிக்கும் வகையிலே, அந்த நீர் வீணாகச் செலவிடாத வகையிலே, நல்ல புது திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். கண்மாய், குளங்கள் எல்லாம் சீரான முறையில் பராமரிக்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு அவற்றில் நீரைத் தேக்கி வைக்க வேண்டும்.



1981 மார்ச் 30] (திரு. வி. வி. வி. ஆனந்தம்)

வறட்சியின் காரணமாக நம்முடைய மாநிலத்திலே நெல் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, [illegible] சில இடங்களில்தான் இப்போது விளைந்திருக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் விளைச்சல் இல்லை. விளைச்சல் குறைவாக இருக்கும் இப்போது விலை இருப்பது உற்பத்தி செய்பவர்களுக்கும், அதை வாங்கிச் சாப்பிடுவோருக்கும் பாதகமாக இருக்கிறது. மேலும் விளைச்சல் அதிகமாக இருக்கும்போது, விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களின் விலை குறையவிடாமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களின் உற்பத்தியை நியாய விலையில் அரசே வாங்க வேண்டும். பற்றாக்குறை காலங்களில் வேறு மாநிலங்களிலிருந்து தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்து நம்முடைய மாநிலத்தில் விநியோகிக்க வேண்டும். பஞ்சாப், ஆந்திரா போன்ற மாநிலங்களிலே நல்ல விளைச்சல் இருக்கிறது. அங்கிருந்து நெல், அரிசி போன்றவற்றைக் கொள்முதல் செய்து கொண்டு வந்து, அதை இங்கு விநியோகிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

சமீபத்தில் மத்திய விவசாயத் துறை துணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள்கூட தமிழ் நாட்டிற்குத் தேவையான உணவுப் பண்டங்களை அனுப்பி வைப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதைப் பயன்படுத்தியும், மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து அரிசி, கோதுமை போன்ற பண்டங்களைப் பெற்றும், பொது விநியோக முறையைச் சீர் செய்ய வேண்டும்.

[illegible] முறையை அமுல் செய்வதன் மூலமாக அதிகமான அளவுக்கு வேலை செய்வதற்குத்தான் வாய்ப்பு ஏற்படுகிறது. வேலை செய்யாதவர்கள் தொழிலில் இருக்க முடியாததொரு நிலை இதன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, [illegible] முறையை அடியோடு எடுத்துவிட வேண்டும். அல்லது [illegible] குறைக்க வேண்டும். [illegible] என்றால், போட்டி போட முடியாத நிலைதான் உருவாகிறது. எனவே [illegible] விதிப்பதைப் [illegible] நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது புதிதாகப் போடப்பட்ட சட்டப்படி இருப்பு வைப்பதிலும் பல கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட [illegible] தங்களின் [illegible] பெருகிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் ஒரு லட்சம் [illegible] குறைவாக உள்ள

(திரு. வி. வி. வி. ஆனந்தம்) [1981 மார்ச் 30

நகரங்களில் வியாபாரம் செய்பவர்கள் 100 மூட்டை சர்க்கரைதான் அதிகபட்ச இருப்பாக வைத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. அதோடு 100 மூட்டை என்பது ஒரு யூனிட்டாக இருப்பதால், ஒரு லாரியில் அதற்குக் குறைவாக 'சப்ளை' செய்ய முடியாத நிலை இருக்கிறது. அதோடு 100 மூட்டைக்குக் குறைவாக ஆலையிலிருந்து பெற முடியாது. எனவே 100 மூட்டை சர்க்கரையையும் விற்ற பின்னரே ஆலையிலிருந்து சர்க்கரையைப் பெற வேண்டிய நிலை உருவாகிறது. அப்படி 100 மூட்டை சர்க்கரையையும் விற்ற பிறகு தான், சர்க்கரை ஆலைக்கு ஆர்டர் போட்டு அது வர வேண்டும் என்றால் புதிதாகச் சர்க்கரை வருகிற வரை உள்ள இடைக்காலத்தில் வியாபாரிகளின் கையில் இருப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக அங்குள்ள மக்களுக்குச் சிரமம் உண்டாவதோடு, பற்றாக்குறையும் ஏற்படு கிறது. எனவே அதிகபட்ச இருப்பாக 100 மூட்டை சர்க்கரை வைத்துக் கொள்ளலாம் என்பதற்குப் பதிலாக 200 மூட்டை வைத்துக்கொள்ளலாம் என்று அரசு அறிவிக்க வேண்டும். அதோடு, பெரிய நகரங்களில் 250 மூட்டை சர்க்கரை இருப்பு வைத்துக்கொள்ளலாம் என்றிருப்பதையும் மாற்றி 300 மூட்டை வரை இருப்பு வைத்துக்கொள்ளலாம் என்று அறிவிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இடைக்காலத்தில் பற்றாக் குறை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடிவதோடு, சீரான விநியோகத்தையும் நாம் உறுதி செய்ய முடியும். அதோடு, ஒரு பெரிய வர்த்தகர் இன்னொரு பெரிய வர்த்தகருக்கு (அதாவது ஹோல்சேலருக்கு) சர்க்கரையை விற்கக் கூடாது என்ற தடையும் இப்போது இருக்கிறது. சில சமயங்களில் சில ஊர்களில் இருப்பவர்கள் பெரிய அளவில் மில்களிலிருந்து கொள்முதல் செய்ய இயலாதவர்களாக இருப்பார்கள். மில்களில் டெண்டர் போட்டு உடனே தருவிப்பதற்கான வசதி பெற்றவர்களும் இருப்பார்கள். எனவே அப்படிப் பட்டவர்களிடமிருந்து வேறு பெரிய வியாபாரிகள் சர்க்கரை வாங்கத் தடை இருப்பது சரியல்ல. அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உளுந்து, துவரை போன்ற பருப்பு வகைகளுக்கும் எண்ணெய் வித்துக்களுக்கும் பெருமளவுக்கு நாம் வெளி மாநிலங்களைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. உத்திரப்பிரதேசம், பஞ்சாப் போன்ற மாநிலங்களி லிருந்துதான் அவைகள் நமது மாநிலத்திற்கு வரவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் நாம் ஜனவரி மாதத்தில் போட்ட ஆர்டருக்கு "வாகன்" கிடைத்து சரக்கு வருவதில்லை. மார்ச் மாதத்தில் போட்ட ஆர்டருக்கு சரக்கு வந்து சேர்ந்துவிடும். காரணம் "வாகன்"



1981 மார்ச் 30] (திரு. வி. வி. வி. ஆனந்தம்)

பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு நமது நாட்டில் ரயில் வாகன்களுக்குப் பற்றாக்குறை இருந்து வருகிறது. இந்த நிலையில் அதிகபட்சக் கையிருப்பைக் குறைந்த அளவில் வைத்திருப்பதால், பல நேரங் களில் கையிருப்பு தீர்ந்து பற்றாக்குறை ஏற்பட்டு விடுகிறது. எனவே, ஒவ்வொரு வர்த்தகருக்கும் அவர்களின் 3 வருஷ சராசரி விற்பனையைக் கணக்கிட்டு, குறைந்தது 3 மாதத் தேவையையாவது அதிகபட்ச கையிருப்பாக வைத்துக்கொள்ளலாம் என்று அறிவிப்பு செய்தால், அதன் மூலம் நாட்டில் சீரான விநியோகத்தை உறுதி செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், 3 மாதத் தேவையை இருப்பாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதே முறையை மற்றவற் றிற்கும் பயன்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் மின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதற்கு முன்னுரிமை கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். மின் உற்பத்திதான் வேளாண்மைக்கும், தொழிலுக்கும் மூல காரணமாக அமைந் திருக்கிறது. அதோடு நமது மாநிலத்தில் அதிகமான மின் உற்பத்தி செய்யப் பட்டால், அதைக் கொண்டு மத்திய அரசின் ரெயில்வேக்கும் நாம் கொடுத்து, பலவற்றை மின்சார மயமாக்க முடியும். நமது மாநிலத்தில் நீர் மின்சாரத் திட்டங்களைப் பொறுத்தவரையில், பெருமளவுக்கு அவை ஏற்கெனவே நிறை வேற்றப்பட்டு விட்டன. இனி நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் ஒகேனக்கல் திட்டம் மட்டும்தான். அதற்கு கருநாடக அரசு ஆட்சேபணை செய்திருக்கிறது. எனவே இதுகுறித்து மத்திய அரசிடம் நமது மாநில அரசு விண்ணப்பித்து, அத்திட்டத்தை நாம் விரைவில் நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மாநிலத்தில் காற்று ஆற்றலையும் மற்றும் சூரிய சக்தியையும் பயன்படுத்துவதற்கான ஆய்வுகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். நமது மாநிலத்தில் அநேகமாக எல்லா இடங்களிலும் தடையற்ற காற்று தாராளமாகக் கிடைக் கிறது. எனவே காற்றின் ஆற்றலைக் கொண்டு, நீர் இறைக்கும் இயந்திரம் போன்ற மற்ற பயன்படும் திட்டங்களுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஆய்வுகளை நாம் மேற்கொள்ள வேண்டும். உலகில் பல இடங் களிலும் சூரிய சக்தியைப் பயன்படுத்தி இயந்திரங்களை இயக்குகிறார்கள் என்று அறிகிறோம். நமது நாட்டைப் பொறுத்தவரையில், சூரிய சக்தி

எப்படியும் எப்போதும் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. எனவே, அதையும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கான ஆய்வுகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராமங்களில் தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். கிராமங்களில் பணி புரிகிறவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், சிறப்பு ஊதியம் அளித்தால், அவர்கள் உற்சாகத்தோடு அங்கே போய்ப் பணி புரிய முன்வருவார்கள். இப்போது ஈரான், ஈராக் போன்ற பிற நாடுகளுக்கு நமது நாட்டவர் பெருமளவுக்குப் போய் அங்கெல்லாம் வேலை செய்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அங்கே அதிகமான ஊதியம் அவர்களுக்குத் தரப்படுவதுதான். ஆகவே, நகரங்களில் பணி புரிகிறவர்களைக் காட்டிலும், கிராமங்களில் பணி புரிகிறவர்களுக்கு அதிக ஊதியம் தரப்படும் என்றால், நமது மக்கள் மிகுந்த ஆசையோடு அங்கே பணிபுரியச் செல்வார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பண்டங்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்குப் போய்ச் சேருவதற்குப் போக்குவரத்து வசதிகள் மிகவும் இன்றியமையாதவையாகும். அதுவும் துரிதமான போக்குவரத்து வேண்டும். அதற்கேற்ற வகையில் நமது நாட்டில் உள்ள சாலைகளை நாம் நன்றாகவும், சீராகவும் வைத்துக் கொள்ள வேண்டும். பல சாலைகள் வளைவு நெளிவுகளோடு இருக்கின்றன. அதன் காரணமாகப் பல விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, இவற்றையெல்லாம் சீர்படுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

துவரங்குறிச்சியிலிருந்து நத்தத்திற்கு குறுக்கு வழியில் மதுரை-திருச்சியை இணைத்துவிட்டால் அதன் காரணமாக 15 அல்லது 20 கிலோ மீட்டர் தொலைவு குறையும். சேக்குறிச்சி பாலாற்றின் மீது பாலம் கட்டுவதன் மூலம் மற்றொரு வழியும் கிடைக்குமாதலால், போக்குவரத்திற்கு இன்னொரு பாதையும் கிடைக்கும். அதன் காரணமாகப் போக்குவரத்து விரைவாகச் செல்வதற்கு ஏதுவாக இருக்கிறது.

சிவகாசி-விருதுநகர் ஆகியவைகள் தொழில் பெரிய நகரங்களாகும். கொல்லத்திலிருந்து செங்கோட்டை வழியாக தேசிய நெடுஞ்சாலை விருதுநகருக்கு வருகிறது. ஆனால் அந்தச் சாலை இப்போது சீர்குலைந்திருக்கிறது. இரண்டு ஆறுகளுக்கும் ஒடுபாலம்தான் இருக்கின்றன. மழைக் காலத்தில் வாகனங்கள் செல்ல முடியாதபடி மிகுந்த வெள்ளம் அங்கே நிரம்பியிருப்பதால், அந்தச் சாலையை அரசு சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்தி கிழக்குக் கடற்கரைச் சாலையை விரைவில் மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நமது மாநில அரசு மத்திய அரசிடம் தொடர்ந்து வற்புறுத்தியதன் காரணமாகச் சேதுசமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. அதைப்போலவே கரூர்-திண்டுக்கல் ரெயில் பாதையை மத்திய அரசு ஏற்று செயல்படுத்திட தொடர்ந்து வலியுறுத்தி அதை விரைவில் காரிய சாத்தியமுள்ளதாகச் செய்ய வேண்டும்.

நமது அரசு இப்போது விடும் அரசுப் பேருந்துகள் மிகவும் சிறப்பாகவும் வசதியானதாகவும் இருக்கின்றன. எனவே அத்தகைய பேருந்துகள் 'ரிப்பேர்' அதிகமில்லாமல் இருக்க வேண்டுமென்றால், அதற்கு அந்தப் பேருந்துகள் செல்லக்கூடிய பாதைகளில் குண்டும் குழியும் இல்லாத நிலை இருக்க வேண்டும். அதோடு குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பஸ்களில் இருக்கைகள் மிகவும் நெருக்கமாக இருப்பதால், அங்கெல்லாம் கால்களை வசதியாக வைத்துக்கொள்ள முடியவில்லை. நமது நாட்டில் இரவு நேரத்தில் செல்லக்கூடிய பேருந்துகளில் குளிர்சாதன வசதி தேவையில்லை என்றுதான் நான் கருதுகிறேன். அதன் காரணமாகச் சுத்தமான காற்று உள்ளே வர இயலாமல் இருக்கிறது. மேலும் பயணமும் அதனால் சுகமில்லாமல் இருக்கிறது. மேலும் அதில் காட்டப்படும் சினிமாவும் 5 நிமிடத்திற்கு ஒருமுறை நின்று விடுகிறது. அந்தப் பேருந்துகளில் சினிமா காட்ட வேண்டியது அவசியம்தானா என்பதைக்கூட நாம் சிந்திக்க வேண்டும் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சினிமா நின்றுவிடுவதால், குளிர்சாதன வசதி வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறாரா ?

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** இராமேஸ்வரம் நமது மாநிலத்தில் ஒரு பெரிய க்ஷேத்திரமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், ஒரு பெரிய சுற்றுலாத் தலமாகவும் இருக்கிறது. அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்குமிடமாகவும் அது இருக்கிறது. அங்கெல்லாம் இன்னும் அதிகமான வசதிகளை நாம் செய்து தர வேண்டும். அதோடு இராமேஸ்வரத்தை அடுத்துள்ள குருசடைத் தீவுகளில் 'மெரைன் பயாலஜி' என்று சொல்லப்படும் கடல் உயிரினங்களைப்பற்றி நாம் ஆய்வு செய்ய வேண்டும். அதோடு அங்கெல்லாம் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கத் தக்க வகையில் கண்ணாடி அடித்தளம் கொண்ட படகுகளை விடவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. வி. வி. வி. ஆனந்தம்) [1981 மார்ச் 30

காடு உற்பத்திக்காக சுவிடன் நாட்டு உதவியோடு சுமார் 45 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை மேற்கொள்ள இருப்பதை நான் வரவேற்கிறேன். நமது மாநிலத்தில் நிறைய குன்றுகள் இருக்கின்றன. அங்கெல்லாம் சின்னஞ் சிறு செடிகள்தான் வளர்கின்றன. அங்கெல்லாம் இந்தப் புதிய திட்டத்தின் மூலம் அடர்ந்த மரங்களை வைத்து காடுகளை உற்பத்தி செய்ய இந்தத் திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்பட வேண்டும்.

அதோடு நகரங்களில்கூட பார்க்குகள் போன்றவைகளையும் சாலைகளில் மரங்களையும் நாம் இன்னும் அதிகமாக வைக்க வேண்டும். மரங்கள் நமது சாதாரண உபயோகத்திற்கு பயன்படுவதோடு மட்டுமல்லாமல் சுற்றுப்புறத்தையும் காற்று மண்டலத்தையும் சுத்தம் செய்கின்றன. 60, 80 வருஷமான மரங்கள் காற்று மண்டலத்தையும் அதிகமாகச் சுத்தப்படுத்தும் என்பதால், அதிகமான மரங்களை வளர்ப்பதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கோர்ட்டுகளில் வழக்குகள் தாமதமாக நடத்தப்பட்டு மிகவும் அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்றன. தாமதமாக அவைகள் நடத்தப்பட்டு, நீதி வழங்குவதற்கு நீண்ட காலமாவதால், அது நீதி மறுக்கப்பட்டதற்குச் சமமாகிறது. ரூ. 50,000 பெறுமானமுள்ள சொத்து மதிப்புள்ள வழக்குகள் இப்போது சப்-கோர்ட்டிலிருந்து முன்சிப் கோர்ட்டுக்கு மாற்றப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவரை சப்-கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு பாதியளவில் இருக்கும் வழக்குகளும், தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய நிலையில் உள்ள வழக்குகளெல்லாம்கூட இப்போது முன்சிப் கோர்ட்டுக்கு மாற்றப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-20)

ஏற்கனவே சப்-கோர்ட்டில் இரண்டு வருடங்கள் தாமதமாகி, பிறகு முன்சிப் கோர்ட்டுக்குப் போய் நம்பராகி, மீண்டும் வழக்கை எடுத்துக்கொள்வதில் பல ஆண்டுக்காலம் ஆகிறது. ஆகவே சப்-கோர்ட்டில் விசாரணையில் இருந்து வரும் வழக்குகளை சப்-கோர்ட்டிலேயே முடிவு செய்தால் நல்லதாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்விக்காக பெரும் நிதியை ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். கல்வி ஏட்டுச் சுரைக்காயாக, உத்தியோகத்தைப் பெறுவதற்காக மட்டும் உள்ள ஒரு கருவியாகச் செயல்படாமல், சமுதாயத்திலுள்ள மக்கள் நல்லொழுக்கம் பெற கல்வியாற்றலும் அறிவும் பயன்படக்கூடிய முறையிலே



1981 மார்ச் 30] (திரு. வி. வி. வி. ஆனந்தம்)

கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். கல்வி பயில்வோருக்கு எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிட்டீஸில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நமது மாநிலத்தில் விளையாட்டுக்களுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. விளையாட்டுக்களுக்காகப் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. விளையாட்டுக்களுக்கு உற்சாகம் கொடுத்தால்தான், வருங்கால சமுதாயத்தில் உள்ளவர்களுடைய உடலும் உள்ளமும் சிறப்பாக இருக்க வசதியாக இருக்கும். கல்விச் சலுகைகளை அளிப்பதில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும், வேலையற்றவர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் வகையிலே ஒரு மாறுதலைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் நலம் குறித்து சமுதாயச் சேவை செய்யும் நிலையங்களுக்கு இந்த அரசு நல்ல ஊக்கம் கொடுக்க வேண்டும். நகரங்களில் பணி புரியும் மகளிருக்காக விடுதிகள் கட்ட மத்திய அரசு பெருமளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதைப் பயன்படுத்தி நகரங்களில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளைக் கட்ட முன்வரும் சேவை ஸ்தாபனங்களுக்கு உதவி புரிய வேண்டும்.

பொதுவாக சமூக விரோதிகளுக்கும் காவல் துறையினருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற சமூக விரோதிகளுக்கும் அங்காங்கேயுள்ள காவல் துறை அதிகாரிகளுக்கும் நெருங்கிய உறவு இருப்பதால், சமூக விரோத சக்திகள் வேறு சமுதாயத் தீங்குகளைச் செய்யும்போது, அவர்கள் மீது புகாரைக் கொடுக்காமல் அவர்கள் மீது வழக்கு போட முடியாத நிலையில் காவல் துறையினர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையிலும் டி.எஸ்.பி. போன்ற உயர் அதிகாரிகள் கூட இருக்கிறார்கள் என்பதை நான் பல இடங்களிலே பார்த்திருக்கிறேன். அவர்களிடம் சமூக விரோதிகளைப்பற்றிப் புகார் கொடுத்தால், அதைப் பெற்றுக் கொள்ளுவதில்லை. அதற்கு மாறாக, சமூக விரோதிகள் மேல் யாராவது புகார் கொடுத்தால், அதைப் போலவே புகார் கொடுத்தவரின் மேலே ஒரு புகார் இருக்கிறது, ஆகவே அவர் மேலே நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று பயமுறுத்துகிறார்கள். ஆகவே காவல் துறையினருக்கும், சமூக விரோதிகளுக்கும் தொடர்பு ஏற்படாத வகையில் நிலைமையை சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பத்திரப் பதிவு சம்பந்தப்பட்ட ஸ்டாம்புகளுக்கான கட்டணத்தை மிகவும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். பாகப் பிரிவினை, செட்டில்மென்ட் போன்றவைகள் எல்லாம் விற்பனையல்ல.

[திரு. வி. வி. வி. ஆனந்தம்] [1981 மார்ச் 30

ஆகவே, அதற்கெல்லாம் கூடுதலாகக் கட்டணத்தை வசூலிப்பது சரியல்ல. அந்தக் கட்டணத்தைக் குறைக்க முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் மீது விற்பனை வரியை உயர்த்தியிருப்பது, பண்டங்களுக்கான போக்குவரத்துக் கட்டணம் உயர்ந்து பண்டங்களின் விலை உயர வழி வகுக்கும் என்று கருதுகிறேன். பாலித்தீன் பாலி புரோபிலீன் பொருள்களிலிருந்து செய்யப்படும் கேன், குழாய்கள் போன்றவற்றிற்கு 8 சதவிகிதம் ஒரு முனை வரியை 4 சதவிகித ஒரு முனை வரியாகக் குறைத்திருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன். இப்படி வரியைக் குறைத்திருப்பதன் மூலமாக, முன்பு 8 சதவிகித வரி இருந்தபோது எவ்வளவு வருமானம் வந்ததோ அதற்குக் குறையாமல் இனியும் வருமானம் வரும் என்று உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பொருள்களுக்கு எட்டு சதவிகிதம் வரி விதித்தபோது அவற்றையெல்லாம் குறைந்த வரியுள்ள வெளி மாநிலங்களில், பம்பாய், பெங்களூர் போன்ற வெளி மாநிலங்களிலிருந்து தருவித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது 4 சதவிகிதமாகக் குறைத்திருப்பதால், இங்கேயே அவற்றைக் கொள்முதல் செய்வார்கள். அதனால் நம்முடைய மாநிலத்திற்கு வரி வருவாயும் கிடைக்கும், இங்கே தொழில்கள் பெருக வசதியாகவும் இருக்கும். வரியைக் குறைத்தாலும் அதிக அளவிற்கு வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அப்பளம், சேமியா, ரொட்டி போன்றவைகளுக்கு நான்கு சதவிகித பலமுனை வரியை நீக்கியிருக்கிறார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். குறிப்பாக அப்பளம் குடிசைத் தொழிலாகச் செய்யப்படுகிறது. அப்பளம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மகளிர். மகளிரை ஊக்குவிக்கும்வண்ணம் வரியை நீக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்த மாதிரியான தொழிலை வர்த்தகமுறையில் ரிஜிஸ்டர் செய்திருப்பவர்களுக்கு 8 சதவிகித ஒருமுனை வரி என்று வைத்திருப்பது சரியல்ல. ஒரே வர்த்தகத்தில் உள்ளவர்களை, ரிஜிஸ்டர் செய்தவர்கள், ரிஜிஸ்டர் செய்யாதவர்கள் என்று பிரித்து ரிஜிஸ்டர் செய்தவர்களுக்கு வரியென்று வைத்தால், ரிஜிஸ்டர் செய்தவர்கள் தொடர்ந்து வர்த்தகத்தைச் செய்ய முடியாது. ரிஜிஸ்டர் செய்ததற்காக அவர்களுக்கு 8 சதவிகித வரி போடுவது அவர்களுக்குத் தண்டனையாகத் தெரிகிறது. நல்ல பொருள்களை விநியோகம் செய்பவர்கள் அவர்களுடைய பொருள்களுக்கு அதற்குரிய கூலியை ரிஜிஸ்டர் செய்வது தவறாகாது. ஆகவே, பாகுபாடின்றி எல்லோருக்கும் வரி நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 30] (திரு. வி. வி. வி. ஆனந்தம்)

சர்சார்ஜை 10 சதவிகிதமாக உயர்த்தியிருப்பது நம்முடைய மாநிலத்தின் வாணிபத்தைப் பாதிக்கும். 10 சதவிகிதமாக சர்சார்ஜை உயர்த்தியிருக்கிறார்கள். அண்டை மாநிலங்களில் வாங்கினால் விலை குறைவாக இருக்கும் என்பதால், அங்கேயே வாங்குவார்கள். அதனால் நம்முடைய மாநிலத்திற்கு வருவாய் குறையும். 10 சதவிகிதம் சர்சார்ஜ் என்பது மிகவும் அதிகம். ஆகவே அந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, மதுவிலக்கின்பால் தீவிர நம்பிக்கையையும் மன உறுதியையும் கொண்ட மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் சொல்லுகிறேன். அவருடைய ஆட்சியில் மதுவிலக்கு நிச்சயமாகத் தீவிரப்படுத்தப்படும் என்று நம்பிக்கொண்டிருந்தேன். இருந்தாலும் மதுவிலக்கின் காரணமாக கள்ளச் சாராய சாம்ராஜ்யம் பெருத்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டு, அரசுக் கஜானாவுக்கு வரவேண்டிய வருவாய் கள்ளச் சாராய சாம்ராஜ்யத்திற்குப் போகிறது என்பதை அறிந்து அந்த நிலையைத் தடுக்கத்தான் இந்த மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மதுவின் காரணமாக மாணவச் சமுதாயம் சீரழியும் வாய்ப்பு இருக்கிறது. 1978 ஆம் ஆண்டு நீதிபதி சதாசிவம் கமிஷன் கொடுத்த அறிக்கையில், மது அருந்துபவர்களில் 40 சதவிகிதம் பேர்கள் மாணவர்கள் என்றும், தொழிலாளர்களில் 90 சதவிகிதம் பேர் மது அருந்துகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாகப் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள். மாணவர்கள் நம்முடைய வருங்காலச் சந்ததியினர். தொழிலாளர்கள் உழைப்பின் சின்னம். இந்த இரண்டும் ஊனமுற்றால் சமுதாயத்தில் எத்தனை கேடு வரும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுவை ஏற்கனவே அருந்தி கெட்டுப் போனவர்கள் எப்படி வேண்டுமானாலும் கெட்டுக் குட்டிச்சுவராகலாம். அவர்களுக்கு வேண்டுமானால் மது அருந்த லைசென்ஸ் கொடுக்கலாம். ஆனால் சமுதாயத்தில் உள்ள மற்றவர்கள் மது அருந்தும் பழக்கத்திலே வராதபடி கட்டுப்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் நமது மாநிலத்தின் தலைநகரை திருச்சிக்கும், தஞ்சைக்கும் இடையிலே உள்ள காலியிடத்தில் வைக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். அங்கே சாகுபடிக்குப் பயன்படாத காலியிடங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே புதிய தலைநகரை ஏற்படுத்துவது என்பது

நல்ல யோசனை. மாநிலத்தினுடைய கடைசிப் பகுதியில் உள்ள, கன்னியாகுமரி மாவட்டம் போன்ற பகுதியில் உள்ளவர்கள் குறைந்த செலவில் தலைநகருக்கு வந்து போவதற்கு வசதியாக இருக்கும். புதிய தலைநகரங்களை ஏற்படுத்துவது என்பது நம்முடைய நாட்டிற்குப் புதியதல்ல. சண்டிகாரில், புவனேஸ்வரத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

ஆக புதிய தலைநகர யோசனையை நான் வரவேற்கிறேன். அமெரிக்கா போன்ற பெரிய நாட்டில் நியூயார்க் பெரிய நகரமாக இருக்கிறது. அந்த நாட்டில் டெட்ராய்ட், சிகாகோ நகரங்களில் தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. அமெரிக்கத் தலைநகரமான வாசிங்டனில் காரியாலயங்கள் இருக்கின்றன. அலுவலகங்கள் மட்டுமே இருக்கின்றன. அதுபோல மதுரை அல்லது வேறு இடத்தில் தலைநகரம் ஏற்படும்போது, அந்த இடத்தில் மேலும் தொழில்களுக்கு என்று லைசென்ஸ் கொடுக்கக்கூடாது. அமெரிக்கா போன்ற நாடுகளில், தொழில்களுக்கு என்று இடம் ஒதுக்கினால் அந்த இடங்களில் தொழில்கள் அமைய வாய்ப்பு கொடுக்கின்றார்கள். விவசாயத் தொழில்கள் உள்ள இடம் என்றால் அந்த இடத்தில் விவசாயத் தொழில் வளர வாய்ப்புகள் செய்து கொடுக்கின்றார்கள். இந்த மாதிரி பிரித்து வைக்கப்பட்டு வாய்ப்புகள் தருவதால், ஜன நெருக்கடியும், மற்ற பிரச்சினைகளும் ஏற்படாது. தஞ்சைக்கும் திருச்சிக்கும் நடுவில் தலைநகரம் ஏற்படுத்தினால், காவிரித் தண்ணீர் கிடைப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அந்த யோசனையை முழுமையாக ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

* திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுவதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு முன் நிதிநிலை அறிக்கையைப்பற்றி பல நாட்களாக பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் மிகச் சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறார்கள். அவரவர்களுடைய கோணங்களிலேயிருந்து அவரவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் பல ஆண்டுகளாக அரசாங்க அலுவலிலே இருந்திருக்கிறேன். நிதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலனாக இருக்கின்றேன். அந்தக் கோணத்திலே இருந்து கொண்டு, என்னுடைய சில கருத்துக்களை வேறு கருத்தாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.





அரசு அலுவலர்களுக்குச் சலுகைகள் என்று 59வது பாரா முதல் 62வது பாரா வரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இவை நல்ல சலுகைகள். இதற்கு முன்னாலேகூட பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சலுகைகள்பற்றி இந்த பட்ஜெட்டில் அறிவித்த உடனே அரசு ஊழியர்களும் இந்தத் திட்டத்தை வரவேற்றிருக்கிறார்கள். இந்தியன் ஆபிசர்ஸ் அசோசியேஷன் செயற்குழு அரசாங்க ஊழியர்கள், ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுத்த சலுகைகள் குறித்து ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது. நானும் அந்தச் செயற்குழுவிலே உறுப்பினனாக இருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசு அலுவலர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இன்னும் பல சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவருகிறது. என்னைப் பொறுத்த வரையில், ஒன்று சொல்ல முடியும். நான் அரசு அலுவலராக இருந்தபோது எனக்குக் கீழே பணிபுரிந்தவர்கள், நான் உயர்ந்த பணியில் இருந்தபோது எந்த அளவுக்குச் சம்பளம் பெற்றேனோ, அந்த அளவுக்கு இப்போது பெறுகிறார்கள். அந்த அளவுக்கு அரசு அலுவலர்கள் நிதி நிலை இன்று அதிகரிக்கப்பட்டு சம்பளம் அவர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை இன்றைய அரசு செய்திருக்கிறது. அதற்காக இந்த அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு, அரசு அலுவலர்களுக்குக் கொடுத்ததுபோல ஓய்வு பெற்றவர்களுக்கும் கொடுத்தால், நன்றாக இருக்கும். நான் இப்போது ஓய்வு பெற்ற அரசு அலுவலராக இருப்பதால்தான் நான் அதைப்பற்றி வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இப்போது பணியில் இருக்கும் அரசு ஊழியர்களுக்கு எப்படி அகவிலைப்படியை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்களோ, அதேபோல ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும், அகவிலைப்படியைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒரு முக்கியமான சலுகை. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கும் சலுகை. அதாவது கம்யூடேஷன் ரெஸ்டோரேஷன் என்பது. அதைப்பற்றி இங்கே நான் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அது ஒரு நல்ல சலுகை. இந்த அரசு அதைக் கொடுத்ததற்காக நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசுக்கு ஓய்வு பெற்றவர்கள் சார்பாகவும், அவர்கள் சங்கத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சங்கத்திலேகூட நான் உப தலைவனாக இருக்கிறேன். ஆகவே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே ஒரு மாண்புமிகு உறுப்பினர் இது 15 ஆண்டுகளுக்குப்

பின்னர் தானே கிடைக்கும், அதுவரைக்கும் அவர்கள் உயிரோடு இருப்பார்களா, இந்தச் சலுகை கொடுத்து என்ன பலன் என்று கேட்டார். அவர் உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளவில்லை. ஓய்வு பெற்றபின் கம்யூடேஷன் கொடுப்பது என்பதை சுமார் 11, 12 வருடங்களில் வருமானத்தைக் கணக்கிட்டுக் கொடுப்பார்கள். ஆதலால் நிச்சயமாக 11, 12 வருடங்கள் கழிந்த பின்னர்தான் அவர்கள் கேட்கவேண்டும். 15 வருடம் வரை காத்திராமல், அரசு அதைப்பற்றி பரிசீலித்து 11 அல்லது 12 வருடங்களுக்குப் பின்னாலேயே கொடுப்பதற்குப் பரிசீலிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தக் காலத்தை குறைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆந்திராவிலேகூட 70 வயதானபின்தான் பெற முடியும். அப்படித்தான் அங்கே உத்தரவு இருக்கிறது. நம்முடைய அரசு 15 வருடங்கள் என்று சொல்லி சலுகை கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கும் ஒரு குறை இருக்கிறது. அதாவது இப்போது நீதிபதிகளுக்கு எந்தவிதமான சலுகையும் கொடுக்கவில்லை. நீதிபதிகளுக்கு அவர்களின் நிலைக்கு ஏற்ற வகையில், அவர்களுடைய சம்பள விகிதங்களை மாற்றியமைத்து, அவர்களுக்கு அதிகச் சம்பளம் கிடைக்கச் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை இப்போது செய்ய முடியாது என்று கருதினால், அலவன்ஸ் போன்றவற்றைக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சொல்லப்போனால், அவர்கள் வீட்டிலிருந்து கோர்ட்டுக்குப் போவதற்கு பஸ் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் பஸ்களில் கோர்ட்டுக்குப் போவது அவ்வளவு கண்ணியமானதாக இருக்காது. ஆகவே அவர்கள் கோர்ட்டுக்குப் போகும் போது, அவர்களுக்கு வசதியாக ஒரு 'ஸ்டாப் கார்' கொடுத்தால் நல்லதாக இருக்கும். நீதிபதிகள் அதில் சென்றால், அது அவர்களுக்குக் கண்ணியமானதாக இருக்கும். அரசு இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் வேறு எந்த எந்த வகையிலே அவர்களுக்குச் சம்பளம் உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தி, அவர்களின் அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





வீட்டு வசதியைப் பொறுத்த வரையில், வெளி மாவட்டங்களிலே நீதிபதிகளுக்கு வீடுகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு வீடுகள் கிடைப்பதில்லை. ஆகவே அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர ஒரு திட்டம் உருவாக்க வேண்டும். அவர்களை மேம்படுத்த, அவர்களுக்கு இன்னும் அதிகமான வசதிகளைப் பெற்றுத்தர வேண்டும். நான் இன்னும் அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இங்கே எனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Deputy Chairman, before I speak on the Budget, as I was not able to catch the eye of the Hon. Chairman during Question Hour, I would like to point out to the hon. the Leader of the Opposition and to the Government that the Medical Council of India which is a statutory body has opposed very strongly the starting of short-term Medical course and that even now a large number of doctors are there without employment and consequently many of them are going out of the country seeking employment. I have suggested a very good policy of giving a short-term medical course or two year high-level para-professional course to train multi-purpose health workers who could function at a level below sub-centres for delivering health education and health care and other things. It is very difficult to classify doctors separately for serving in the villages and there are many who are not able to go to villages. But what kind of security have we given to them to go to villages? Have we given them accommodation and other facilities? This has become a burning problem and I think more facilities should be given to them and we should also see that their children are able to get proper education. I wonder whether we would be able to allow them to have private practice also.

Now, Sir, coming to the Budget for the year 1981-82, as I understand, there are three things which I want to point out. I find that it is not a tax-free Budget like the previous Budget for 1980-81. The closing balance is Rs. 102.96 crores and, therefore, we must find additional funds for development programmes which the Government feel necessary to sustain a much larger annual plan and what I feel is that the Planning Commission may not be

[Thirumathi Tara Cherian] [1981 மார்ச் 30

willing to endorse it *in toto*. Number two is that the Government want more money and have, therefore, imposed tax on petroleum products and increased the stamp duty. People like me who have got their own cars are at the mercy of mechanics and petrol is not enough. I would very much like this particular levy on petroleum products to be abolished.

(முற்பகல் 10-40)

The other important decision which has been taken in the correct direction is to relax, or shall I say even scrap, Prohibition to some extent. Now, persons above 25 years of age are going to be permitted to drink if he or she chooses to have a permit. The Government now propose to intensify the propaganda to wean away hardened drunkards and to keep the younger ones away. Sir, Prohibition is a subject which has been talked about and which has evoked interest in almost all the legislators. Now, it has taken seven years for the Government to take a decision as mentioned in the Budget documents. If they had been able to get the revenue, they would have been able to spend a big chunk of that revenue on providing relief to the small farmers, etc. But, before taking this decision, the Hon. the Chief Minister must have gone through a lot of heart-searching. In fact, he had invited the views of legislators on this issue. But one look at the reports of various fact-finding committees, including the Sadasivam Commission Report, would make it very clear that Prohibition has been a complete failure despite all efforts. There were over 125 deaths following hooch-tragedies in 1976 and no one knows how many more are ruined physically and disabled for life. Illicit distillation including killer-brew has become a flourishing small-scale and cottage industry and millions of rupees have gone into the pockets of bootleggers and illicit distillers. I had the privilege of presiding over a Citizens' meeting when the Hon. Thiru R. Venkataraman came to Madras last year soon after he accepted the onerous responsibility of being the Finance Minister of India. I congratulated him at that time on the bold stand he had taken on Prohibition. He made an announcement on the floor of the House and said that the Union Government would not be too rigid on the subject and that it was for the State Governments to decide. Comparison is odious, Sir, but many many States, except perhaps Gujarat, have become wet. They have got their own way of having relaxations like having dry days on two days in a week, etc.



1981 மார்ச் 30] [Thirumathi Tara Cherian]

Therefore, I do not see why this policy could not be followed in places like Tamil Nadu. Prohibition policy has been an uncompromising moral rectitude. From the beginning, in India, various yardsticks have been applied for the implementation of this policy. For example, in some areas, the tribal people have had the privilege of being permitted to drink. We do not have the same yardstick for everybody. We have to realise that even cigarette-smaking is very, very dangerous. But, we have not passed any law prohibiting people from cigarette-smoking because it has now been established that cancer may result by smoking. Prohibition was tried, with good intention, in many countries but without success. Poverty, hunger and lack of respect for human personality are there all over the world and they are here in Tamil Nadu also. Therefore, we will have to see that the money which we are going to get from the present decision is properly utilised. I find from the newspapers that the Government have already bought a film the story of which was written by Rajaji. But all this preaching and sermonising is not going to have any effect on the pepole who have been hardened drunkards. Therefore, the amount of Rs. 1 crore that has been set apart should be not only for teaching pepole but also for other effective purposes. For instance, the Trade Fair may be made a permanent feature and some beautiful parks may be set up so that the under-privileged pepole may be able to tire themselves with good recreation and may not have time to afford for sexual evils or drinking evil. Therefore, I hope that the Hon. the Chief Minister, while releasing this amount of Rs. 1 crore, will find it possible to have a committee so that experience people who have worked among the poor pepole may participate in the work. 'Alcoholic Annonymous' is an organisation which has helped many pepole in other countries to keep off from too much drinking. Therefore, I hope that it will be possible for the Hon. the Chief Minister to have a committee whose services could be utilised before spending the sum of Rs. 1 crore. The total outlay on Education has been stepped up from Rs. 205 crores to Rs. 238 crores. The plan out-lay for 1981-82 has also been increased. Thousands of teachers are to be recruited. A number of B.T. Headmasters will be appointed. Physical Education teachers are to be appointed. Industrial and Technical Institutes are to be started. Thousands of Pancayat Union School teachers will be taken in and will become Government teachers. The wisdom of it will be known only later. The profitable openings for selection of candidates for higer study and selection for jobs will not and

cannot be helpful when one section of the society is completely or more or less debarred because of the sin of being born in the so-called forward community. I have spoken about it earlier also. I see the writing on the wall and even a worm will turn. One will have to look at this as so-called revolution. When a man is starved, he will steal and he will even kill. When students are starved for want of knowledge and deprived of their opportunities for higher educational facilities, it will have serious consequences. The Government should not make them frustrated and desperate. A great injustice has been done and it is not too late to correct it. I do hope our Hon. Chief Minister who is very sympathetic towards the poor and down-trodden and who had, in fact, passed one Government Order where the criterion was the economic backwardness of the people and whereby only those with an annual income of less than Rs. 9000 were made eligible to get the concessions of Backward Community, will correct the situation. Now, Sir, with the fixation of a quota of 50 per cent for Backward Classes and 18 per cent for Schedule Castes and Tribes, in Government Service and for admission to professional Colleges, there remains only 32 per cent for merit students. This needs to be corrected. The Chief Minister himself has said that social justice demanded that the economically backward people should supported. It is a pity that the list of Backward Classes is getting longer and longer. I feel very strongly that it is only political compulsion that has caused a drastic departure from the correct policy. This type of reservation will result in the over-all lowering of educational standards with the consequent deterioration in over-all progress. It will be desirable, therefore, to provide special educational facilities. I have talked about it earlier also. The Government can open any number of school buildings and also a certain number of schools specially for the people who are backward in education, so that they may remain there at least till middle school level and they can get into exising general schools, after an eligibility test. This would be fair to both the Backward Classes and Scheduled Castes and Tribes and others. The Government should budget for such schools immediately. I find in the Budget terrific amount of money earmarked for tuition. What I feel is that we can take a horse to water but we cannot make it drink. If they are not in a mood to study, any amount of tuition will not help them and this type of tuition and special classess will be of no use to the Backward Classes. All these things should be given to them at the lower



level itself. Recruitment of teachers should be done through applications received after advertisements and through Employment Exchanges.

(முற்பகல் 10-50)

Sir, I want to say a few words about the teacher-pupil ratio. I must say that the Members representing Teachers' constituencies in this House have a heyday because this House is in a somewhat lopsided position with 21 seats still remaining vacant. Quite rightly, the teachers' representatives speak about the welfare of teachers. But what about the taught? Except for providing small things like water facilities, etc, we are not that anxious to see to the welfare of the taught. The present teacher-pupil ratio of 1:50 or 1:60 results in the equipments, etc. not being properly utilised. Therefore, I suggest that a teacher-pupil ratio of 1:35 will be a desirable ratio. I find from the Budget documents that the Government are going to appoint more teachers this year. Therefore, a reasonable teacher-pupil ratio may be followed. I would also like to suggest that all educational institutions need not be brought under Government control. If there is a lot of Government control, it will cause inordinate delay in making appointments to posts. The Government procedure usually takes a long time and the vacancies of posts may remain unfilled for a long time. In that case, the students will have to suffer a lot. If all institutions are brought under Government control, a kind of totalitarian outlook and attitude may come in. Sir, one swallow does not make a summer. It is true that there may be some alleged malpractices. But, the Government have got enough power to correct such malpractices. On the other hand, if the authority for correction is at a distance, neglect of duty will become greater.

Sir, recently, the Hon. the Chief Minister made a remark about shifting the capital of the State. I think that the remark has been blown out of proportion because the Hon. the Chief Minister has made it very clear that nothing would be done until he consults the public and takes their opinion. Of course, a number of 'Letters to the Editor' appear in the Press about the present condition of Madras City and about the measures to be taken to make it better for people and officers to live in. But, Sir, Rome was not built in one day. This grand old City of Madras was the capital even during the time of the composite State of Madras which comprised parts of the present Kerala, Andhra Pradesh and

Karnataka. This is a cosmopolitan city where so many individuals belonging to various communities have been living for many years. Many industrialists and entreprenreurs live here and many offices of the Government of India are located here. An International Airport is located here and there are many travel factilities. Therefore, it will be difficult, in the present condition, to try to shift the capital elsewhere. Madras is an integral part of our great country of India. Recently, when the Spencer's building was burning and when my daughter 'phoned to tell me the news, I shed tears, not because I have anything to do with that building but because of the sentiments I attach to this City of Madras. To think of shifting the capital from Madras will have to take a long time and I hope that the proposal will not come about because it appears to me to be rather impracticable, unwise and premature. The bad points are there, but I am sure that we will be able to correct them instead of thinking of shifting the capital. The Chairman of the Metropolitan Water Board has recently announced in the papers that after September there will be no difficulty in drinking water supply in Madras. But, I am sorry to say that many parts of Madras City have not got water-supply even to this day. Many places which have been recently brought into the jurisdiction of the Madras Corporation are completely neglected and so many things have got to be done in those areas.

Sir, I would like to say a few words about the Family Welfare Scheme. Since the Emergency, we are fighting shy to call it Family Planning scheme. I do not know why. Our State was not subjected to any criticism during the Emergency also. The birth-rate, compared to other States from the statistics that have been published in the papers, is comparatively low in Tamil Nadu and Kerala. This seems to be a favourable point which is based on some vague calculations. The sterilisation programme in Tamil Nadu has been very good and it has got to be commended. Because of some remark made by an evaluation team, which was quoted in the Budget, the Government have dispensed with the intensive Family Welfare programme. I am very sorry about it. I hope the Health Minister will go all-out to have a relentless drive and programme to carry out the Small Family Scheme. It has got to be done. It has got to be propagated so that people may be able to enjoy their hard labour and also benefit by the achievements made by Science and Technology. Many industries have been started and many improvements have been made. But the



result will be multified completely, unless we have a Small Family programme. Sir, I find that we have been working in a kind of water-tight compartment. I find from he Budget that there does not seem to be any lack of funds because allocations have been made very generously to various items. I have a little bit of knowledge and experience and I find that every department including the Health Department, is working in water-tight compartments, so much so that there is no cohesion or co-operation between the various departments. If there is such co-operation, the result will be much better. I was thinking particularly of the mention made by my hon. Friend Thirumathi Mandakini Krishnamurthi about the help given in the field of Co-operation. They are going to enrol one lakh members in the co-operative soieceties and there are going to be several new co-operative societies. Another 40,000 members are going to be enrolled in those societies. It will help a large number of Scheduled Caste and Tribe people. There are very many co-operative societies and they have come to stay in our country and, particularly in Tamil Nadu, the Co-operative movement is a great success. In many countries all over the world, including the U.K., for over 50 years, the Co-operatives and Family Planning have been working together. The member of the Co-operative is told about the benefits of family planning. A booklet can be brought out and that can be publicised by the Government staff who can take the help of social workers also. All the time we are talking about sterilisation and going to the clinics. This could be avoided and all the benefits that could be obtained by adopting family planning could be brought home to them. This can be done by social welfare agencies and other voluntary agencies with the help of the Government. People like us who have some expertise will be helpful to make such a scheme successful. The International Planning Parenthood Association, of which I am a Member, has brought out beautiful magazines and literature, with wonderful schemes which are being adopted in many developing countries of the world. Therefore, it is worth while having a talk round the table over a cup of tea on the problem, if the Hon. Minister could look into the programmes of the voluntary agencies who have been in the field for so many years. I am happy that the other day the Hon. the Minister for Rural Industries, Thiru Krishnaswamy was with me when a huge building was given by the

(மு.பகல் 11-00)

voluntary organisation at Pailiapattu. I am glad that the Ministers are participating in such functions. They do it in order to give encouragement to those institutions and not for getting any cheap

[Thirumathi Tara Cherian] [1981 மார்ச் 30

publicity. We have got national and international organisations who have been doing good work, sometimes, getting not even a single pie from the Government. Therefore, I would very much suggest that there should be a co-ordinated, concerted programme. We have before us a great challenge in which social welfare workers, voluntary organisations, Government, quasi-Governmental bodies like Municipalities, and the medical profession could get together and play their part. Organisations like the Red Cross Society will be too willing to provide para-medical workers in required numbers. Labour organisations may also be made to involve themselves in this work. Mass education, motivation and intensive propaganda through films, radio, the Press, etc., should be there for people to understand all the benefits that they will get through the Family Planning Programme. The Prime Minister also has been writing to the Chief Ministers to strengthen the work under Family Planning. I hope that the Hon. Ministers, particularly the Hon. the Health Minister, will see to it that a special allotment is made for various projects which have a practical effect on the lives of women. These projects should be innovative ones and should support the Family Planning Scheme.

Sir. I am glad that the Hon. Health Minister is here. He made a statement recently that he was going to revive the Hospital Advisory Committees. Without interfering with the internal administration of the hospitals, many of us have worked on such committees. I had the privilege of working on such a committee attached to the Women and Children's Hospital for over 28 years till I had to accompany my husband to Bombay. There are many voluntary organisations which will render service and I hope the Hon. the Health Minister will think of the Amnesty Sisters, which organisation was started in 1875 in the U.K. In our hospitals, the doctors are overworked and insanitary conditions prevail. There is no water in the infectious diseases wards and the bath-rooms are not kept clean. Most of the patients who come to the hospitals are from the slums. Therefore, it is very necessary to have the Hospital Advisory Committees revived. I hope that the Hon. the Health Minister will see that our hospitals are run in such a way that the patients, paricularly the under-privileged ones are benefited



1981 மார்ச் 30] [Thirumathi Tara Cherian]

Sir, I would like to take a few more minutes because all these days I have been a good student learning to speak. Because we are now in the International Year of the Physically Handicapped, I would like the Government to set apart a sizable amount for the welfare of the physically handicapped. The society is still not prepared to accept the physically handicapped. Therefore, a specific amount must be set apart for their welfare. The Hon. the Chief Minister is very kind towards the poor and particularly towards the handicapped persons. He is thinking of giving a monthly allowance of Rs. 50 to Graduates, including the physically handicapped people. But, such giving away of money will not do. There are many institutions which will do follow-up work and which will be able to give the Government an idea as to how best the money could be utilised for the welfare of the physically handicapped and for ensuring a living for them right through their lifetime. The Hon. the Chief Minister has announced that he is going to do many things for the blind people. I would like to state that the mentally retarded people have been completely neglected and society is not willing to accept them. According to the 1971 Census, there are approximately 1,20,000 mentally retarded persons in Tamil Nadu alone. Of them, only 70,000 to 80,000 would require special education. Since the ratio of rural and urban population is 2:1, about 54,000 of them will be in the rural areas. The problem of their rehabilitation is very much severe in the urban areas because jobs have to be created for them.

Therefore, I very much request the Government to do one thing. I know they have the Social Welfare Department. Almost the Hon. Member Thiru A. R. Damodaran took it up from my mouth when he said that people who were dedicated, whether I.A.S. officers or not, should be put in charge of the Directorate of Social Welfare. The I.A.S. Officers, and even the I.C.S. officers, used to be transfeered once in three years and there must be continuity so that they may be able to carry on the work. Very often people who come there are relieved within a very short time. All that I am asking for here is that the Social Welafre Department should make a united effort. We have got a very nice Minister who has humanitarian outlook, who is educated and who is able to catch up all that comes on her head. I have been on the Madras Social Welfare Board and also on the Central Board. But I cannot understand the allergy of the Government

towards this particular Board. We nominate a Chairman to the Board and every district is being represented and it is not any charity money that we ask for from any Government or any, particular individual. We have a legitimate right to get our share from the Central Government. If only the Madras Social Welfare Minister, the Department and the Social Welfare Board join together and see eye to eye and make use of the Central Board, many things could be achieved. The Social Welfare Board does not take up any work by itself but it makes all the voluntary organisations work. More and more power should be given to the voluntary organisations. There are blind schools and deaf schools run by dedicated workers. In the allotment given, they think of starting new schools and new institutions and putting Government people in them. The Government people are nice in their work and people with dedication to the work are required. Working between 10 A.M. and 5 P.M. and putting tools down at 5 P.M. will not be sufficient. They will have to work all the 24 hours among the people. I request the Government to make use of the voluntary organisations. The other day I was very happy to find the Chief Minister giving away hearing aids, wheel-chairs and sewing machines. The Government are giving so much aid to the needy pepole. I would like to ask the Government whether they have any record and whether they have any follow-up programme. The person who gets the hearing aid finds it not working when the battery is down and he throws it away, when the battery could have been re-charged and the hearing aid made to work. All these aids should be routed through voluntary organisations so that they may be able to see that the sewing machines are made use of and not pledged for some loan. All the things that have been given by the Government have got to be accounted for because they are given out of the State funds. I would very much request the Hon. the Chief Minister and the Cabinet to see that the money which has been allocated is spent through the voluntary organisations so that the people may be benefited by them.

Sir, my colleague who is sitting next to me has not mentioned about the amount given to the orphans though the other day she had made a note of it. The orphans are given an allowance of Rs. 15 per month. I think I am right. I am told that it is only Rs. 14 per month. Why should we give the allowance on a different scale to different institutions? They are all children of our State. I would like to bring to the attention of the Government



that the Servants of India Society are doing yeoman service for the welfare of bounded labour and tribal people in the Nilgiris. They have been asking, for over a year, for a building which has come down in the flash floods. They have not been given the funds for the building. To carry the materials up the hills will cost much more. The maintenance is very low. I, therefore, appeal to the Government to see that the allowance given to the orphans and destitutes is raised and made uniform so that there may not be any heart-burning. If more and more welfare officers and social welfare organisations are made to work together, many things can be carried out through them. However much the Government may plan, the Government alone will not be able to do everyhing. So, if the Government agencies and the social welfare organisations work together, they can bring about prosperity. Thank you.

(முற்பகல் 11-10)

* திரு. ஓ. எஸ். துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பேசுவதற்கு அனுமதித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் மின்சார உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். மின் உற்பத்திக்காக 30 சதவிகிதம் தொகை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தமிழகத்தின் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க உதவும் என்பதால், இந்த மன்றத்தின் மூலம் அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 4,709 மெகாவாட் மின்சாரம் இங்கே உற்பத்தியாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக விவசாயத் துறையில் நாம் மிகப் பெரிய சாதனையை உண்டாக்க முடியும் என்பதோடு, தற்போது விவசாயிகளுக்கு இருக்கும் குறையைப் போக்க உதவும் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது, இது மிகவும் பெருமைப்பட வேண்டிய ஒன்று என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதன்மையான இடத்தை வகிக்கிறது என்பதும் நாம் பெருமைப்படத் தக்க நிலையாகும். அதுமட்டுமல்லாமல், தமிழகத்தின் முக்கியத் தொழிலான வேளாண்மை வளர்ச்சிக்கு 20 சதவிகிதம் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும். உலக வங்கி

உதவியுடன் சிறந்த நவீனப் பண்ணை முறைகளை இங்கே புகுத்துவதில் இந்த அரசு பெரிய சாதனையைப் புரிய இருக்கிறது என்பதற்காகவும் நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டமும், எண்ணெய் உற்பத்திக்காக இந்த அரசு மேற்கொள்ள இருக்கிற திட்டங்களும் பாராட்டுக்குரியவை. அதோடு, பாசனத் திட்டங்களுக்காக இந்த அரசு ரூ. 150 கோடி ஒதுக்கியிருப்பதும் பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, இந்த அரசு பெரிய சாதனையைப் புரிந்துள்ளது. பஸ் போகாத வழித்தடமே இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு எல்லாத் தடங்களிலும் பேருந்துகளை விட்ட பெருமை இந்த அரசுக்குத்தான் உண்டு. இதன் காரணமாகத்தான் ரூ. 35 கோடி போக்குவரத்துத் துறைக்காக இந்த நிதிநிலை அறிக்கையில் அரசு ஒதுக்கியிருக்கிறது.

இதற்கு முன்னால் இருந்த அரசு தரையில் உள்ள பயிர்களுக்கு ஆகாயத்தில் சென்று மருந்து தெளித்தது. ஆனால் இந்த அரசோ ஒரு ரூபாய் செலவு செய்தாலும், அது பயனுள்ள முறையில் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் செலவழித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே முன்னால் இருந்த அரசு, பின்தங்கியோருக்குள்ளேயே ஒரு முன்னேறிய சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டிருந்தது. அதாவது ஒரு சமுதாயத்தை மாநிலமட்டத்தில் 3, 4 பிரிவுகளாகப் பிரித்து வைத்துக்கொண்டிருந்தது. அந்தப் பிரிவுகளையெல்லாம் இந்த அரசு நன்கு பரிசீலித்து, அந்தச் சமுதாயத்தை ஒரே பிரிவில் சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் எங்கள் பகுதியான பெரியார் மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டமாகும். அந்த மாவட்டத்தின் வழியாக, நாள்தோறும் பல ரெயில்கள் சென்னை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. அதைப்போலவே கொச்சி போன்ற இடங்களுக்கும் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த ரெயில்களிலெல்லாம் எங்களுக்கு எந்தவிதமான இட ஒதுக்கீடும் செய்யப்படாததால், மக்கள் அவதிப்படுகிற நிலை இன்றைக்கு இருக்கிறது. எனவே ரெயில்வே இலாக்கா அப்படி இட ஒதுக்கீடு செய்யவில்லை என்றாலும், தமிழக அரசு அதற்கான சிபாரிசைச் செய்து, ஒவ்வொரு ரெயிலிலும் சில இடங்களை ஒதுக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இறுதியாக, இந்த நிதிநிலை அறிக்கை விவசாயிகளுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார் என்பதும், அது எந்த அளவுக்கு நாட்டு மக்களால் பாராட்டப்பட்டிருக்கிறது என்பதும் நாமெல்லாம் அறிந்ததே. அதிலும் குறிப்பாக "ஃபைனான்சியல் எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகை அதை எந்த அளவுக்குச் சிறப்பித்திருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

"Mr. V. R. Nedunchezhian has undoubtedly done a neat job of framing the State budget. He has seen to it that his tax proposals, which will net an extra Rs. 20 crores, do not hurt any one segment of the population too severely. Nor has he pinned his hopes on larger Central assistance."

இதைச் சொல்லுவதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் நிச்சயம் மகிழ்ச்சியடைவார்கள் என்பது எனக்குத் தெரியும். அதாவது மத்திய அரசை எதிர்பார்த்துத்தான்—அதன் உதவியை எதிர்பார்த்துத்தான்—இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார் என்று சொல்ல முடியாத வகையில் இது பாராட்டுக்குரிய ஒன்று என்று அவரே ஒப்புக்கொள்வார் என்று கருதுகிறேன்.

பட்ஜெட் என்பதன் வரலாற்றை எண்ணிப் பார்க்கும்போது, "அகஸ்டஸ் சீசர்" என்ற மன்னன்தான் முதன் முதலாக நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தான் என்பது தெரிகிறது. ரோமாபுரியில் ஒரு முறை ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக, அன்றைய தினம் இத்தகைய பட்ஜெட் தயாரிக்கப்பட்டதாகவும், அப்போது திருமணமாகாதவர்களுக்கு முதன் முறையாக வரி போடப்பட்டு அந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. ஆனால் அப்படிப்பட்ட முறையில் இல்லாமல், நியாயமான முறையில், யாரையும் அதிகமாகப் பாதிக்காத வகையில் தயாரிக்கப்பட்ட சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கை இது என்பதால், நான் இதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் எந்த அளவுக்கு ஆற்றல் மிக்கவர் என்பதையும், திறமை பெற்றவர் என்பதையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் காலத்தில் எந்த அளவுக்கு அதைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்போது பொதுச் செயலாளர் பதவியிலிருந்த நாவலர் அவர்களைப்பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை மட்டும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"பொதுச் செயலாளர் நான் இந்தக் கட்டுரை தீட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை என்னால் யூகித்துக் கொள்ளவும் முடிகிறது—பரிதாபப்படவும்தான் செய்கிறேன். இளமை எழிலளிக்கிறது, இன்பபுரிக்கு அழைக்கிறது (அண்ணா அவர்கள் 1956-ல் இதை எழுதினார்.) இயக்கமோ அவரைத் திருச்சிக்குத் தூக்குகிறது. தாமரை பூத்த தடாகத்தருகே சென்று முகத்தாமரையாளிடம் அகத்துறை இலக்கணம் கற்றிட வேண்டிய காளையர்தான்—பருவத்தை எண்ணிடின்—எனினும், களம் சென்று தமிழரின் தன்மானத்தைக் காத்திட வேண்டிய கட்டம் வருகிறபோது, வல்லூறு வட்டமிடும் களத்தில், மலர்தோட்டத்தில் காணும் இன்பத்தைவிட அதிகமன்றோ காண்பராம், வீரத் தமிழர்கள்—வீழ்ச்சியுறாத நாட்களில், நமது பொதுச் செயலாளர், அகமும் புறமும் நன்கு பயின்றவர்—எனவே, புறநானூற்றுக் காட்சிகளைத் துணைக்கழைத்துக் கொண்டு திருச்சிக்குச் சென்றுள்ளார்".

அந்த அளவுக்குப் பணியாற்றுகிற திறமையைப் பேரறிஞர் அண்ணா அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஆற்றல் பெற்ற நாவலர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையோடு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள்.

"அங்கேயிருந்து வந்தவர்" என்று அரசியலுக்காகச் சொன்னாலும் "இங்கே இவரை நாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்" என்று நாமெல்லாம் பெருமைப்படத் தக்க அளவுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ணப்படி, இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் முதற்கட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிற கருத்தைத்தான் நான் என்னுடைய இன்றைய பேச்சுக்கு ஆதாரமாகக் கொண்டு, உரையாற்ற விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில



உரிமைகளைப்பற்றி நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்த விளக்கத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது அவர் குறிப்பிட்டது என்னவென்றால்:

"கடந்த பல ஆண்டுகளாக இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் நடைமுறைப் போக்கானது, மாநிலங்களின் மனப்பான்மையில் ஒருவிதமான விரக்தி நிலையை உருவாக்கியிருக்கிறது. மாநிலங்கள் வெறும் சுங்கம் பெறும் மாநகராட்சி மன்றங்களைப் போல் மிக விரைவாக மாறி வருகின்றனவோ என்று கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. மாநிலங்கள் நாளுக்குநாள், மேலும் மேலும் விரக்தி அடைந்து கொண்டே போகின்றன. மத்திய அரசானது அரசமைப்புச் சட்டத்தை மறுபார்வையிடவும், மறுஆய்வு செய்யவும் வேண்டும் என்பதைத்தான், மாநிலங்கள் இப்பொழுது கோரிக்கையாகக் கொண்டிருக்கின்றன"

என்பதாகும்.

ஒரு பக்கம் "கமிஷனிலே காலம் ஓடுது" என்று பாடப்படும்போது, மாநில உரிமைகள் என்பவை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற வேண்டும் என்ற கோரிக்கை ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்று சொல்லுகிற கோரிக்கையல்ல. இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே மறைந்த நேதாஜி போன்றவர்கள், இன்னும் பெரிய காங்கிரஸ் தலைவர்களாக இருந்தவர்கள் சொல்லி வந்த கோரிக்கையாகும். அவர்களுக்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி" என்ற கோஷத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டு வந்தது. அதுமட்டுமல்ல "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று வார்த்தைகளில் வண்ண ஜாலங்களோடு பேசப்பட்டு, பிறகு விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் பிறந்த குழந்தையாக வளர்க்கப்பட்டதுதான் இந்த மாநில சுயாட்சிக் குழந்தை. அன்றையதினம் புராணத்திலாவது மேனகை அந்தக் குழந்தைக்குச் சொந்தம் கொண்டாடினாள். ஆனால் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த உரிமையும் [illegible] காரணத்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் அதை எடுத்து வைத்துக்கொண்டு மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வாதாடி வருகிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாநில சுயாட்சி என்கிற குழந்தை அனாதையாக விடப்பட்டுவிட்டது என்று சொல்வதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அந்தக் குழந்தை அனைத்துத் தமிழக மக்களின் சொத்தாகும் என்பதை மறந்துவிட்டு இப்படிப் பேசுவது சரியல்ல. ஒருவேளை இன்றையதினம் அதற்காக அ.தி.மு.க. உரிமை பாராட்டிக்கொண்டிருக்கலாம். ஆனால் அனைத்துத் தமிழ் மக்களும், அனைத்துக் கட்சிகளும் இதை உரிமையோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் மறந்துவிடக்கூடாது.

(முற்பகல் 11.20)

திரு. சு. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் அவருக்கே உரிய முறையில் மேனகை விட்டுச் சென்ற அனாதைக் குழந்தையை எடுத்துக்கொண்டதாகச் சொன்னார். அவர் விசுவாமித்திரராக மீண்டும் பணியாற்றுகிறாரா அல்லது விஸ்வாமித்திரர் கிடைக்கவில்லை என்பதால் மேனகைக்காக அவர் அதைச் செய்கிறாரா?

டாக்டர் இரா. சனார்த்தனம்: விஸ்வாமித்திரர் இன்றைக்குத் தேவையில்லை என்பதால், இருக்கின்ற 'மிகவும் அதிகாரம் வேண்டும்' என்ற அந்தக் குழந்தைக்காக வாதாடக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப் பார்க்கிறபோது, அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற உரிமைக்காக எந்த அளவிற்கு எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் முழக்கமிட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்

5-3-1975 அன்று, வழக்கறிஞர் கே. எஸ். ஆனந்தம் எழுதிய "மலர்க மாநில சுயாட்சி" என்ற நூலுக்கு கலைஞர் அவர்கள் முன்னுரை எழுதியிருக்கிறார்கள். அதிலே "1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே மாநில சுயாட்சித் தீர்மானத்தை நான் முன்மொழிந்த நாளும், அந்தத் தீர்மானம் பேரவையில் நிறைவேற்றிய நாளும் தமிழ் மாநில வரலாற்றில் மட்டுமின்றி இந்திய நாட்டு வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க நாட்களாகும். அதிகாரமற்ற சூழ்நிலைக் கைதியாக மாநில முதலமைச்சர்கள் இருப்பதை எடுத்துக் கூறிய அண்ணா அவர்கள், மாநிலங்கள் உரிமைக் கொடி உயர்த்த மக்களைத் தயார்படுத்தவும், ஒரு நேரம் வரும்போது உறுதியுடன் நின்று போராடவும் தயாராக இருக்க வேண்டுமென்று தனது இறுதிக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்." என்று சொல்லியிருக்கிறார். ஒருவேளை அண்ணா அவர்கள் சொன்னதாலே நினைவுபடுத்தியிருக்கக் கூடும்.



அதோடு கலைஞர் தொடர்ந்து சொல்லுகிறார், "இந்த நூல் வெளிவரும் இந்நேரத்தில் டெல்லி நாடாளுமன்றத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மாநில சுயாட்சிக்கு இணங்க முடியாது என திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். இதே போன்று திடமான மறுப்புத்தான் திரு. ஷேக் அப்துல்லாவுக்கும் சில ஆண்டுகளுக்கு முன் தரப்பட்டது. ஆனால், மறுப்பு வழங்கிய அதே மத்திய அரசு இன்று திரு. அப்துல்லாவை அழைத்துப் பேசி காஷ்மீர் சிம்மாசனத்தில் உட்கார வைத்து, தன் பிடிவாதப் போக்கிலிருந்து கீழே இறங்கி வந்துள்ளது.

தியாகத்தின் வாயிலாகத்தான் இந்த இலட்சியம் ஈடேற வேண்டும் என்ற நிலை பிறக்குமானால் அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும், இருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்.

இதைவிட மிகச் சுவையாக ஒரு படி மேலே போய் பேராசிரியர் அவர்கள், அவருக்கே உரித்தான பாணியிலே சொல்லியிருக்கிறார், "ஆலமரத்தின் விழுதுகள் வேர்விட்டு வளரின் அவை மரம் போன்று தோன்றுமே என்று மயங்கி விழுது இறங்கும்போதே வெட்டிவிடும் செயலில் ஈடுபடுவோர் மதியுடையோராகார். அதைப் போன்றே இந்திய நடுவண் அரசுக்குப் பொருந்திய விழுதுகள் மாநில அரசுகள்" என்று தெரிவித்திருக்கிறார்.

மேற்கூறிய கருத்துக்களின்படி அவர்கள் செயல்பட்டு வருகிறார்களா என்றால், இல்லை. அவர்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள், எப்படிப் பேசுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இப்படிப்பட்ட பெரிய அதிகாரங்களைப் பெறுவதற்கு அவர்கள் தடையாக இருக்கிறார்களே என்று வேதனைப்பட வேண்டியிருக்கிறது என்பது என்னுடைய கருத்தாகும். இப்போதுள்ள அதிகாரங்களையெல்லாம் நாம் இழந்துவிட்ட பிறகு. அவர்கள் இந்த கட்டடத்திற்குள் வந்தால், எரிந்து கண்ணாடி உடைந்து விழுந்திருக்கின்ற நாற்காலிகளைப் பழுது பார்க்க எவ்வளவு காலம் ஆகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒருவேளை இந்தக் கட்டடத்திற்குள்ளே நுழைய முடியாது, போக முடியாது என்ற கோபத்தின் காரணமாக எதற்கெடுத்தாலும் மத்திய அரசை அழைக்கிறார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது. எதெற்கெடுத்தாலும் மத்திய அரசு தலையிட வேண்டும், சி.பி.ஐ. வர வேண்டும் என்று அவர்களை அழைக்கிறார்கள். அப்படி அழைக்கப்படுமானால், இங்கே ஒரு காவல் துறை இருக்க வேண்டிய அவசியம், நீதித்துறை இருக்க வேண்டிய

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1981 மார்ச் 30

அவசியம் என்ன? ஆனால் ஒட்டுமொத்தமாக ஒரு காரியத்தைச் செய்யலாம். மாநிலம் தேவையில்லை, மாநிலத்தினுடைய அதிகாரிகள் தேவையில்லை என்று சொல்லலாம். அதைத் தவறு என்று சொல்லமாட்டேன்.

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிக உரிமை வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்பது, சி.பி.ஐ. என்கொயரியைப் பொறுத்த வரையிலா? அதைப்பற்றி கொள்கை அடிப்படையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏதாவது வகுத்திருக்கிறதா? இந்த ஆட்சிக்கு இதுதான் மாநில சுயாட்சிக்கான உரிமைகள், கோரிக்கைகள் என்று ஏதாவது வைத்திருக்கிறார்களா? ஏனென்றால், முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது இராஜமன்னார் குழுவை அமைத்து, ஒரு புத்தகம் தயாரித்து அதன் அடிப்படையிலே அணுக வேண்டும் என்ற முடிவை எடுத்திருந்தார்கள். அவர்கள் நடைமுறையில் அந்தக் கொள்கையை அமுல்படுத்தாவிட்டாலும், இதுதான் கொள்கை என்று அறிவித்தார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கை சோற்றை எடுத்துப் பார்க்கும் தாயைப் போன்ற நிலையில் நான் அதை உதாரணத்திற்குச் சொன்னேன். இப்படி ஒவ்வொன்றிலும் போக்கு போனால் இது எங்கே முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதைக் கேட்கும் போது, சிறு வயதிலே படித்த பூனைகளின் கதைதான் நினைவுக்கு வருகிறது. இரண்டு பூனைகள் சண்டையிட்டுக் கொண்டு தராசிலே நிறுத்தவதற்கு நடுநிலையாளரிடம் சென்ற கதையைப் போல இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, இன்னும் பூனைகளாகவே இருக்கிறார்களே, மனிதர்களாக மாற வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பூனைகள் பங்கிட்ட கதையாக வந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் வேதனையோடு இதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னுமொன்று இருக்கிறது. ஒற்றையாட்சி முறை. யூனிட்டரி சிஸ்டம். ஒரு அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களும் ஒரு குறிப்பிட்ட மையத்திலிருந்து செலுத்தப்படுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டால், விவகாரம் இல்லை, ஆகவே மாநில அரசுகள் தங்களுக்குள்ள அதிகாரங்களைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மார்ச் 30] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

21-7-1968 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள், சென்னையில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் பேசினார்கள். "மேல் அதிகாரங்கள் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்திருக்கிறது. மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல." என்று அவர் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஒற்றையாட்சி முறையைப் புகுத்த முடியாது என்பதற்கான அடிப்படைக் காரணம் என்னவென்பதைப் பார்க்க வேண்டும்.

1971 ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் பேசப்படும் மொத்த தாய்மொழிகள் 1,652, இலட்சம் பேருக்குக் குறைவாகப் பேசப்படும் தாய் மொழிகள் 857. இப்படிப்பட்ட நிலையிலே எப்படி ஒற்றையாட்சி முறையைப் புகுத்த முடியும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

"இந்தியாவின் வேற்றுமைகள் மகத்தானது. அது வெளிப்படையானதும்கூட. அது மேலெழுந்தவாரியாகப் படிந்துள்ளது. எவரும் அதைக் காணலாம்." இதை திராவிட முன்னேற்றக் கழகமோ, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ சொல்லவில்லை. திரு. பண்டித நேரு அவர்கள், தன்னுடைய "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" என்ற நூலில் 48 ஆம் பக்கத்திலே சொல்லியிருக்கிறார். வேற்றுமையிலே ஒற்றுமை என்ற நிலையிலே நமக்குச் சில உரிமைகளை வழங்க வேண்டும், நாமும் பெற வேண்டும். வேறு வழியில்லை.

10-12-1834—பக்கம் 80—கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகிகள் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பிய குறிப்பாணையில்,

"இந்தியா முழுவதும் ஆட்சி செய்யும்போது, கண்காணிக்கும்போது, மைய அரசுக்குரிய அதிகாரங்கள் எவையென்றும் அதன் கீழுள்ள மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள் எவையென்றும் வேறுபடுத்தித் தெளிவு செய்து கொண்டு கவர்னர் ஜெனரல் செயல்பட வேண்டும்." என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்சியில் உள்ளவர்கள் எப்படி ஆள வேண்டும் என்பதற்கு அவர்கள் வைத்த அடிப்படைக் கொள்கை இது.

25-8-1911 அன்று வைஸ்ராய் கோமகன் ஹார்டிஞ்ச் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

"இந்திய நாட்டை முழு சுயாட்சியுடன் கூடிய பல மாகாணங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சியாக (யூனியன் ஆஃப் அட்டானமஸ் பிராவின்செஸ்) நிகழச் செய்யும் முறையிலேயே இனி ஆங்கில அரசின் கொள்கை நடைமுறைப் படுத்தப்படும்." என்று சொல்லியிருப்பது உரிமை வரலாற்றைத் தெரிவிக்கிறது.

மிதவாதிகளின் பெருந்தலைவரான திரு. கோகலே, 1915ஆம் ஆண்டு எழுதிய "அரசியல் ஏற்பாடு" (பொலிட்டிக்கல் டெஸ்டமெண்ட்) என்ற நூலில்,

"டில்லி குறிப்பானை கோடிட்டுக் காட்டும் மாகாணச் சுயாட்சி, முதல் உலகப் போர் முடிந்த பின்னர் இந்திய மக்களுக்குக் கொடுக்கப்பட இருக்கும் பொருத்தமானதோர் சலுகையாகும்." என்று தெரிவித்திருக்கிறார்.

திரு. அபுல்கலாம் ஆசாத் இறந்த பிறகு வெளிவந்த "இந்தியா விடுதலை வெற்றி" என்ற நூலில்

"உலகமெங்கும் அரசியல் அதிகாரத்தை பிரித்து விநியோகிக்கும் போக்குத்தான் காணப்பட்டது. இந்தியா முழுவதற்கும் ஒற்றை ஆட்சி சரிப் படாது. கூட்டாட்சி முறையில் அதிகாரங்கள் பரவலாக விநியோகிக்கப் பட்டிருப்பதுதான் சிறுபான்மையோரின் பயத்தைத் தணிக்க உதவும்படியாக இருக்கும்" என்று சொல்லியிருக்கிறார். மேலும் 'மாகாணங்களுக்கு முழு தன்னாட்சி கொடுக்கக்கூடிய இந்திய அரசமைப்பு வகுப்புவாதப் பிரச்சினைக்கு மட்டும் தீர்வு காணக்கூடிய ஒரு முறையல்ல. பல மொழிகளையும் பல இனங்களையும் படைத்த இந்தியப் பெரு நாட்டிற்கேற்ற முறையாகும்' என்று இக்கருத்தை காங்கிரஸ் கமிட்டியிடம் எடுத்துச் சொன்னேன். காந்திஜி இதை முழுவதும் ஒப்புக்கொண்டார். அதுவரை எவராலும் வழிகாண முடியாமல் இருந்த ஒரு பிரச்சினைக்கு, நான் தீர்வு கண்டுவிட்டதாக காந்திஜி என்னைப் பாராட்டினார். இந்தியா போன்ற நாட்டில் பெடரல் அரசியல் அமைப்புத் தான் செயலாற்றக் கூடியது என்று காந்திஜி நிச்சயமாக நம்பினார்." என்று சொல்லுவதிலேயிருந்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்பது காங்கிரஸ் தலைவர், காந்தி அவர்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உணர வேண்டும்.

13-12-1946-ல் பண்டித நேரு, "குறிக்கோள் தீர்மானத்தை (அப்ஜெக்டிவ் ரெசல்யூஷன்)" அரசமைப்புச் சபையில் முன்மொழிந்தார். அப்போது "நாட்டாட்சிப் பகுதிகள் எல்லாம் சுயாட்சி கொண்ட உறுப்பினர்களின் (மாநிலங்களின்) தகுதியோடு விளங்கும். ஒன்றியத்தின் அதிகாரங்கள் நீங்கலாக அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களையும், வினைச் செயல்களையும்





சுயாட்சி நிறைந்த உறுப்புக்களே (மாநிலங்களே) கைக்கொள்ளும்" என்று பண்டித நேரு அவர்கள் சொன்னார்கள். அவருடைய எண்ணங்கள் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, அச்சத்தின் காரணமாக மாறிவிட்டது என்பதை திரு. கே. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"இந்தியத் துணைக் கண்டம் பிரிவினை செய்யப்பட்ட விளைவு என்ன வெனில், ஊசல் ஒரு முனையிலிருந்து எதிர்முனைக்கு ஓடிச்சென்றுவிட்டது. குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட ஒரு மத்திய அரசிலிருந்து அதிக பட்ச அதிகாரங்களைக் கொண்ட ஒரு மத்திய அரசை நோக்கி எல்லாத் தலைவர்களும், தலைவர்களைக் காட்டிலும் தொண்டர்கள் விரைந்து செயல் பட விரும்பினார்கள்." என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழு வந்தது. அது ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தபோது அதிலே,

"இந்தியக் கூட்டாசி உருவாக்கப்பட வேண்டும். பாதுகாப்பு வெளி நாட்டுக் கொள்கை, அனைத்திந்தியப் போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் ஆகிய அதிகாரங்கள் மட்டும் இந்திய அரசிற்குத் தரப்பட வேண்டும். மத்திய அரசுக்கு அளிக்கப்பட்ட மேற்சொன்ன மூன்று அதிகாரங்கள் தவிர மற்ற அதிகாரங்கள் முழுவதும், எஞ்சிய அதிகாரங்கள் உட்பட மாகாணங்களுக்கே தரப்பட வேண்டும்," என்று அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த தொழிற் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் பண்டித நேரு அவர்கள் பம்பாயிலே நிருபர்களிடம் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

(முற்பகல் 11-30)

"அரசியல் நிர்ணய சபையில் தனக்குச் சிறந்ததென தோன்றும் வகையில் தூதுக்குழு திட்டத்தை மாற்றவோ திருத்தவோ அச்சபைக்கு சுதந்திரம் உண்டு"

என்று தெரிவித்தார்கள். அந்த நேரத்தில் இப்படி அவர் சொன்னது திரு. ஜின்னா அவர்களுக்குக் கொஞ்சம் வேதனையாக இருந்தது. தூதுக்குழுத் திட்டத்தை சில நிபந்தனைகளுடன் ஏற்றிருந்த ஜின்னா அவர்கள், "அரசியல் நிர்ணய சபையில் தனக்கிருக்கக்கூடிய பெரும்பான்மைப் பலத்தின் மூலம் தூதுக்குழு திட்டத்தை காங்கிரஸ் மாற்றிக்கொள்ளலாம் என்று நேரு அறிவிப் பதால்—பெரும்பான்மையினர் தயவில் சிறுபான்மையினர் வைக்கப்படுவதாகப் பொருள்படுகிறது. . . " என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தோடு, அந்தப் பிரிவு ஏற்படலாயிற்று.

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1981 மார்ச் 30

அப்போதுதான் "சரித்திரத்தின் போக்கை மாற்றக்கூடிய துரதிர்ஷ்ட நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று" என்று திரு. அபுல்கலாம் ஆசாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் நாள் நேரு மொழிந்த குறிக்கோள் தீர்மானம். பின்னர் 1947 ஜனவரித் திங்கள் அரசமைப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். பிறகு மத்திய அரசு அதிகாரக் குழுவின் இரண்டாவது அறிக்கை. இந்த இடைப்பட்ட காலத்தில், 90 நாட்கள் பற்றிச் சொல்லப்பட்டது. மாநில சுயாட்சி, மாநிலத்தினுடைய அதிகாரங்கள் இந்தியாவிலே அந்த 90 நாட்களிலேதான் புதைக்கப்பட்டது எனலாம். அன்று மத்திய அமைச்சராக இருந்தவரும், மத்தியப் பிரதேச ஆளுநராக இருந்தவரும், அரசமைப்புச் சபையின் உறுப்பினருமான திரு. எச். வி. படாஸ்க்கர், சொன்னார்கள். '90 ஆண்டுகளை கறைபட்ட இந்த 90 நாட்கள் வென்றுவிட்டன' என்றார்கள். மேலும் சொன்னார்கள். 'நாம் கூட்டாட்சியின் உருவத்தைத்' தான் வைத்துக்கொண்டோமே தவிர, கூட்டாட்சியின் சத்தையும் உட்பொருளையும் மாற்றிவிட்டோம். உண்மையான கூட்டாட்சிக் கருத்துடன்தான் மாகாணங்களின் பெயரைக்கூட மாநிலங்கள் என்று மாற்றினோம். ஆனால், மாநிலங்கள் என்ற பெயர்தான் இப்போது உள்ளவே அன்றி, மாநிலங்களின் அதிகாரங்கள் எந்த அளவிற்குக் குறைக்கப் பட்டு உள்ளன என்றால் இனிமேல் அவற்றை மாநிலங்கள் என்று அழைப்பது கூடத் தவறாக வழங்கும் பெயராகிவிடும். . . ' என்று சொன்னார்கள்.

அறிஞர் கே. வி. ராவ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'மாநிலப் பட்டியலில் உள்ள 66 அதிகாரங்களில் 30 அதிகாரங்கள் முக்கியமற்ற வெறும் போலீஸ் கடமைகள் பற்றியவை. இன்னும் 22 இனங்கள் வரி விதிப்புப் பற்றியவை. மாநிலச் சட்ட மன்றம் கொஞ்சமாவது உற்சாகம் காட்டக்கூடிய வளர்ச்சிப்பணிகள் பற்றியவை மீதமுள்ள 14 தலைப்புகளில் வரும் அதிகாரங்கள் மட்டுமே" என்றார்கள்.

அதையொட்டிப் பார்த்தால்தான், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே வளர்ச்சித் திட்டப் பணிகளிலே நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் காட்டியுள்ள ஆர்வமும், அதற்காக ஒதுக்கியிருக்கின்ற கோடிக்கணக்கான ரூபாயினுடைய பயனையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.



1981 மார்ச் 30] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

"மாநிலப் பட்டியலின் 18 ஆம் பதிவான 'நிலம்-விளை நிலம்' என்பது மாநில அதிகாரம். ஆனால் பொதுப்பட்டியலில் 42 ஆம் பதிவான 'நிலத்தை கையகப்படுத்திக் கொள்ளுதல்' என்ற இனம் மாநில இனம் போலவே தோற்றம் தருகிறது. பொதுப்பட்டியலில் உள்ள எந்த இனத்தில் வேண்டுமானாலும் மத்திய அரசு சட்டம் செய்யலாம்" என்பதுதான் இப்போதுள்ள நிலை.

1971-லே, டாக்டர் பி. வி. இராசமன்னார் குழு அறிக்கையிலே கூறப் பட்டிருப்பது—

"அரசமைப்பு சட்டத்தினால் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நாடாளுமன்றம் ஒருதலைப் பட்சமாகத் தன்னிடம் மாற்றிக் கொள்ள அனுமதிப்பது என்பது சட்டத் திருத்தமே கூட்டாட்சிக் கொள்கை யிலிருந்து அடியோடு விலகிச் செல்வதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டப்பேரவை மாநிலங்களுக்குச் சொந்தமான அதிகாரங்களைத் தன்னிடம் முறையாக மாற்றிக்கொள்ள முடியாது." அதனாலே இன்றைக்கு ஒரு முடிவு காண "அரசியல் சட்டத் திருத்தம் வேண்டும்" என்றுதான் டாக்டர் பி. வி. இராசமன்னார் குழு கருத்து தெரிவித்தது.

"மாநிலச் சட்டங்களுக்கான இசைவினை, குடியரசுத் தலைவர் வழங்கும் போதெல்லாம் மத்திய அரசு, அதன் கொள்கைகளையும் கட்டளைகளையும் மாநிலங்களின் மேல் விதித்துக்கொண்டுதான் இருக்கிறது" என்று பேராசிரியர் அலெக்ஸ் ஜேக்கப், திரு. எஸ். என். ஜெயின் போன்றவர்கள் கருத்து வழங்கி யிருக்கிறார்கள்.

அதனாலே, அதிக அதிகாரம் இருப்பதாலேயே நாடும் அல்லது ஒரு அமைப்பும் கூட்டாட்சி என்ற பெயராலேயே வாழ்ந்துவிடும் என்று நீங்கள் கனவு காணாதீர் என்று சொல்லியிருக்கிறார்கள்.

நாம் 'மௌரியப் பேரரசை' பார்த்தோம். அடுத்து குப்தப் பேரரசைப் பார்த்தோம், அடுத்து விஜயநகரப் பேரரசைப் பார்த்தோம், மொகலாயப் பேரரசையும் பார்த்தோம். ஆங்கில ஏகாதிபத்தியத்தையும் பார்த்தோம். இந்தப் பேரரசுகள் எல்லாம் வைத்துக்கொண்ட அதிகாரமா, அல்லது தேடிக் கொள்ளாத அதிகாரமா அல்லது அடக்குமுறையா நிலைத்தது? இந்த அரசோ, மத்திய அல்லது நடுவண் அரசோ அந்த நிலைமைகளை மேற்கொள்ள முடியுமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியில் பெருந்தலைவராக இருந்த மேற்கு வங்க முன்னாள் முதல்வர் டாக்டர் பி. சி. ராய் அவர்கள் சொன்னார்கள்—

"வலிவிழந்த மாநிலங்கள் என்ற அடித்தளத்தின்மேல் வலிவான மத்திய அரசொன்றைக் கட்ட முயற்சிப்பதானது வலுவான ஒரு கட்டிடத்தைப் புதை மணல் மேல் கட்டுவதற்கு ஒப்பாகும்" என்றார்கள். அப்படிச் சொன்னவரும் ஒரு காங்கிரஸ்காரர்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அதிக அதிகாரங்கள் என்பதற்கு அழகான விளக்கங்களைத் தந்தார்கள். 21—7—1968-லே மதிப்பிற்குரிய மேலவைத் தலைவர் அவர்கள் நடத்திய மாநில சுயாட்சிக் கருத்தரங்கிலே அவர்கள் பேசியபோது சொன்னார்கள்—

'பலமான மத்திய அரசு வேண்டும் என்கிறார்கள். அந்தப் பலம் யாருக்கு எதிராக—பலம்—தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம். மாநிலத்திற்கு மத்திய அரசைத்தனத்திற்கு இருக்கலாம். ஆனால் இந்த அதிகாரம் எதற்காக? யாருக்காக, யார் மீது பயன்படுத்துவதற்காக என்பதை விளக்குங்கள் அல்லது நீங்களாவது விளங்கிக் கொண்டு இருங்கள்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'இந்த பலத்தை ஒருவேளை சீனத்திற்கு எதிராக பயன்படுத்தப் போகிறார்களா அல்லது இந்த பலத்தை பாகிஸ்தானுக்கு எதிராகப் பயன்படுத்தப் போகிறார்களா! அப்படியென்றால் நிச்சயமாக அதைத் தேடித்தர தயாராக இருக்கிறோம். அதை விட்டுவிட்டு அந்தப் பலத்தை அசாமுக்கு 'அச்சத்தைத் தர, தமிழ்நாடு தத்தளிக்க, கேரளத்தைக் கலக்க' என்றால் சுதந்திரச் சிந்தனையை சிறுகச்சிறுக அழித்து சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத்தான் என்றால், நமது கூட்டுச் சக்தியின் மூலம் நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்கிரம வலுவைச் சிறுகச்சிறுகக் குறைப்பதுதான் அவர்கள் கடமை" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அவுரங்கசீப் தேடிக்கொள்ளாத வலிவை எந்த அரசு தேடிக் கொள்ள முடியும்? ஆனால், அப்பேர்ப்பட்ட ஈடு இணையில்லாத அதிகாரத்தைத் தேடிய அவுரங்கசீப் என்ன ஆனார்? அவரின் அதிகாரம் நிலைத்ததா என்று கேட்டார்கள். நமக்கு இருக்கின்ற கவலை மத்திய அரசு போக்க முடியாத பளுவைத் தாக்கிக்கொண்டிருக்கிறதே என்பதுதான். அதுதான் நம்முடைய கவலையே தவிர வேறு ஒன்றுமில்லை. நாட்டிலே என்ன நிலைமை வந்தாலும் அந்தத் துன்பங்களை அனுபவிப்பது மாநில அரசுதான். அது பள்ளிக் கல்வியானாலும் சரி, காலரா நோய் என்று மக்களிடையே வந்து





சமாளிப்பதானாலும் சரி, குடிசைப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் கவலைகளைத் தீர்ப்பது என்று வந்தாலும் சரி, எல்லாவற்றையும் தீர்ப்பது மாநில அரசுதான். அந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிட்டதா என்று கேட்பார்கள் என்றால், அது எப்படி இருக்கிறது என்று கேட்டால் அந்தக் காலத்தில் நாடக மேடைகளில் இராசாக்கள் அரச சபையில் மந்திரிகளை வைத்துக்கொண்டு கேட்பார்கள். 'மாதம் மும்மாரி பெய்ததா, மழை பெய்கிறதா' என்று கேட்பது போலத்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் அழகாகவே சொன்னார்கள். மூன்றாவது மாடியிலே இருக்கின்ற ஒருவன் தூரத்திலே ஒரு குடிசை எரிந்து கொண்டிருந்தால், என்னவோ எரிகிறது என்ற மன நிலைதான் அவனுக்கு இருக்கும். ஆனால் அங்கேயே உள்ளவனுக்கோ உள்ளத்தையே கலக்கும். குடிசைக்குப் பக்கத்திலே குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கின்றானே, அவனுக்கு அவன் குடிசையையும் பற்றிக்கொண்டு விடுமோ என்கின்ற பயம் வரும் என்பதையும் போல மாநில அரசு தன்னுடைய முழு நிலையையும் மக்களுடைய துன்பங்களையும் நேரடியாகவே தீர்க்க வேண்டிய பொறுப்புக்களை வைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான் அதிக அதிகாரம் தேவை என்பதைச் சொன்னார்கள். அது மட்டுமல்ல எல்லா அதிகாரங்களையும் நீங்களே வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் உங்களுக்கே உரிமையாக்கிக்கொண்டு விடுவது என்ற நிலைமை வந்தால் எங்களுக்கு இருக்கின்ற பயம் எல்லாம் அந்த மிகப் பெரிய வலிமையை வைத்து ஒரு பாதுகாப்பை இந்த நாட்டிற்குத் தேடவேண்டியவர்கள் அதிலே கோட்டை விட்டு விடுவார்களோ என்ற கவலையைத்தான் நாங்கள் பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்தக் கவலை நமக்குத் தேவையில்லை என்ற முறையிலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் 'அச்சமில்லை அச்சம் இந்திரா காந்தி அவர்களுக்கு இல்லை' என்று சொன்னபோது அவரைக் காட்டிலும் நான் ஆனந்தப்பட்டேன். காரணம் தென்கோடியிலே சுற்றும் கடல் சூழ்ந்த பகுதியிலே இருக்கின்ற நமக்கு எவ்வளவோ பாதுகாப்பு தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட பாதுகாப்பைத் தருகின்ற வலிமை மிகுந்த பிரதமர் இருக்கின்றார் என்று சொல்லும்போது நாமே மகிழ்ச்சி அடைகிறோம். அதைப்போலவே அச்சமில்லை அச்சமில்லை என்ற உணர்வைப் பெற்ற முதல்வர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம் என்ற அளவில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் எங்களுக்கு இருக்கின்ற பயம் எல்லாம் அச்சமில்லை அச்சமில்லை என்பவர்கள் மற்றவர்களை ஆட்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதுதான். அதற்கு மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் துணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 மார்ச் 30

அத்தோடு 21—8—1970-லே நம்முடைய மேலவைத் தலைவர் அவர்களே சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து முன்மொழிந்தார்கள். அதிலே—

"மாநிலங்கள் சுயாட்சி அந்தஸ்து உடையவையாக இருக்கும் வகையில் அவற்றிற்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கவும் மத்தியில் மேலும் மேலும் அதிகாரங்களைக் குவித்துக்கொண்டு இருப்பதைத் தவிர்க்கவும் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த மத்திய அரசை வற்புறுத்த தமிழ்நாடு அரசே பரிந்துரை செய்ய வேண்டும்" என்ற கருத்தினை அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இராஜாஜி அவர்கள்கூட சுயராஜ்யா 2—11—1957 இதழில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்:—

"மாநிலங்களின் நலிவைத் தடுப்பதும் மத்திய வல்லாண்மைக்கு எதிரான அமைப்பினை உருவாக்குவதும் அதன் வழி மாநிலச் சுயாட்சியை போற்றிக் காப்பதும் இன்றைய தலையான அரசியல் பணியாகும். அரசியல் கட்சிகள் தத்தமது மற்றைய பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு மாநிலச் சுயாட்சியை மட்டுமே தமது இலட்சியக் கருவாக ஏற்றுக்கொண்டு மாநில முன்னணி அமைத்தால் அதுவே மாநில நலன்களையும் மாநிலத் தன்னாட்சியையும் காக்கும்".

இன்னொன்று மதிப்பிற்குரிய சிலம்புச் செல்வர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்: "உலகில் மாநிலச் சுயாட்சியை ஒத்துக்கொண்ட எந்த ஒரு கூட்டாட்சியும் இதுவரை கலைந்து போகவில்லை. ஒப்புக்கொள்ள மறுத்த எந்த ஒரு நாடும் தன்னுடைய தக்க தன்மையைக் காப்பாற்றிக் கொண்டதுமில்லை" என்ற உண்மையைத் தெரிவித்தார்கள்.

அதனாலே இந்த அடிப்படையிலே எண்ணுகின்றபோது அதிக அதிகாரங்கள் என்பது ஏதோ இப்போது ஆண்டு கொண்டிருக்கின்ற அரசுக்காகத் தேடிக் கொள்வது அல்ல என்பதும் நாளை ஆள வருகின்ற ஆசையிருந்தால் அது மற்றவர்களும் பெறவேண்டிய ஒன்று என்பதும் இப்படி தலைவர்கள் எல்லாம் சொல்லியிருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே நாம் சிந்திக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இப்போது ஒரு கமிஷன் என்பதுபோன்ற விஷயங்கள் இருப்பதால் இக்கருத்தினைச் சொல்கிறார்களா என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். எனக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம் பொது மக்களிடையே …



1981 மார்ச் 30] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

நம்முடைய நீதித் துறையைப்பற்றி ஒரு தவறான எண்ணத்தைக் கொண்டு வரக்கூடாது என்பதுதான். மாநில அரசு ஒரு கமிஷன் நியமித்தால் அந்தக் கமிஷன் மாநில அரசு விரும்புகின்றவாறு தீர்ப்பு வழங்கும் மத்திய அரசு ஒரு கமிஷன் நியமித்தால் மத்திய அரசிலே இருப்பவர்கள் விரும்புகின்றது போலப் பிரதிபலிக்கும் என்று ஒரு எண்ணத்தைத் தோற்றுவித்துவிடக்கூடாது. அப்படி மக்கள் கருதக்கூடிய அளவிலே மக்களை விட்டுவிட்டார்களென்றால் இந்த நீதித் துறையை யார் நம்புவார்கள்?

(முற்பகல் 11-40)

நீதிபதிகள் அவருக்குச் சொந்தம், இவருக்கு நண்பர் என்றெல்லாம் சொல்லும்போது நான்கூட நினைத்துப் பார்க்கிறேன். ஒருவருடைய ஆட்சிக் காலத்திலே சில நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். அந்த நீதிபதிகள் ஒரு கட்சியின் மாவட்டச் செயலாளராகக்கூட இருக்கக்கூடும். பல அரசியல் தலைவர்கள் இருக்கக்கூடும். அவர்களுடைய சகோதரர்கள் நீதிபதிகளாக இருக்கக்கூடும். வழக்கு மன்றத்திற்குப் போகிறவர்கள் எதிர்க் கட்சிக்காரர்கள். "முன்பு அவருக்கு அந்தக் கட்சி வாடை, அவர் இன்றைக்குக்கூட கதர் கட்டிக்கொண்டுதான் வருகிறார். எனவே அந்த நீதிபதியிடம் போகமாட்டேன்" என்று சொன்னால் எத்தனை ஆயிரம் நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** வழக்கு தொடுப்பவர் இந்த நீதிபதியிடத்தில் எனக்கு நீதி கிடைக்காது என்று தெரிவித்தால் அடுத்துள்ள நீதிபதியிடம் வழக்கை மாற்றிக் கொடுப்பதுதான் நீதித் துறையில் உள்ள வழக்கம். குறிப்பிட்ட நீதிபதிகூட என்னிடத்தில் இந்த வழக்கு வேண்டாம், அடுத்தவரிடத்தில் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி விடுவார். ஓய்வு பெற்ற நீதிபதிக்குப் பதிலாக உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் ஒரு நீதிபதியை ஒதுக்குங்கள் என்று கேட்கின்ற ஒரு முறையை அரசு கொண்டு வருமா?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நீதிபதி நியமிப்பதற்கு முன்னாலே இந்த கருத்துக்களெல்லாம் வந்திருக்குமானால் அது வேறு விஷயம். ஆனால் நீதிபதி நியமித்த பிறகு அதற்குரிய பொறுமைகூட எங்களுக்கு இல்லாமல் போய்விட்டது. ஒருவேளை நியாயங்களிலே உங்களுக்குள்ள நம்பிக்கையில் சந்தேகமா அல்லது நபர்களைப் பற்றிய சந்தேகமா என்று எழுந்தாலும் கூட . . .

திரு. சோ. ஆறுமுகம் : மாநில சுயாட்சிக் கொள்கைபற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போதாவது இந்த உணர்வு வந்திருப்பதற்கு நன்றி. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இது ஒரு மாநிலத்திலே நடந்த பிரச்சினையல்ல. இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதனால் உயர் மட்ட மேல் விசாரணைக் கமிஷன் மூலம்தான் உண்மையைக் காண முடியும். தவறுகளுக்குப் பரிகாரம் காண முடியும் என்றும், அந்த அடிப்படையிலே உயர் மட்ட மேல் விசாரணை தேவை என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்துகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த ஒரு அடிப்படையை எண்ணியாக வேண்டும். இப்போதாவது இந்த உணர்வு வந்திருக்கிறதே என்று சொன்னார்கள். அது ஒரு புறம் இருக்கட்டும். இதற்காக வாதாடி வந்த தி.மு.க.வினருக்கல்லவா கோபம் வந்திருக்க வேண்டும் . . . .

திரு. சோ. ஆறுமுகம் : திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முழுக்க முழுக்க மாநில சுயாட்சியில் நம்பிக்கை உண்டு. அதற்காகப் போராடிக் கொண்டு வருகிறோம். மாநில சுயாட்சி என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்பது தன்னாட்சி போன்ற நிலையாகும். அது பிரிவினைக் கோரிக்கை என்றுகூட இன்றைக்கு ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் பேசுகிறார்கள். நாங்கள் சொல்வது மாநில சுயாட்சிக் கொள்கைக்குப் பாதகமாக இல்லை. ஒரு மாநிலத்தில் நடந்த பிரச்சினையாக இருந்தால் இந்த மாநிலத்திலேயே ஒரு நீதிபதி போட்டு விசாரியுங்கள் என்றும், அந்த நீதிபதியிடம் நம்பிக்கை இல்லையென்றாலும் இன்னொரு நீதிபதி போட்டு விசாரியுங்கள் என்றும் நாங்கள் சொல்லியிருப்போம். ஆனால் இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இது இருப்பதால் மத்திய அரசு இதில் தலையிட்டு விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று கேட்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இப்படியே இந்த நிலை வளருமானால் என்னவாகுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே பின்னி கம்பெனி இருக்கிறது. அதற்குக் கோவையிலே கிளை இருக்கிறது. மதுரையிலே கிளை இருக்கிறது. வரி விதிப்புக் கொள்கை பற்றி அவர்கள்



ஒரு வழக்கு தொடருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். உடனே அவர்கள் கேட்பார்கள். இது மூன்று மாநிலங்கள் சம்பந்தப்பட்ட விஷயம். எனவே பொது நீதிபதி வேண்டுமென்று கேட்கக்கூடும். இங்கே வேறு மாநிலத்தவர்கள் குடியிருக்கிறார்கள். அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். அவர்கள் எங்களுடைய மாநிலத்திலிருந்து ஒருவரை அழைத்து வாருங்கள் என்று கேட்பார்கள். எனவே இது தொடர்கதையாக வளரக்கூடாதென்ற கருத்தில்தான் சொல்லுகிறேன்.

மது விலக்குபற்றி சிலர் மகிழ்ச்சி அடைந்தார்கள். சிலர் வருத்தப் பட்டார்கள், சிலர் வியப்படைந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்கள்கூட இப்படி நடந்துவிட்டதே, தளர்த்தி விட்டார்களே என்று சொன்னார்கள். தளர்த்தப்படவில்லை, முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதுதான் உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும். இந்த மாநிலத்தில் போடப்பட்ட ஒரு கமிஷன் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறதென்று சொன்னால் நீங்களெல்லாம் ஒத்துக் கொள்ள மாட்டீர்கள். மத்திய அரசு 'ஸ்டடி டீம் ஆன் ப்ரொஹிபிஷன்' என்று 1963-லே ஜஸ்டிஸ் டேக் சந்த் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்து ஓர் அறிக்கையைத் தயாரித்துத் தரச் சொன்னது. அந்தக் குழு என்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறதோ அந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் மதுவிலக்கை நடைமுறைப்படுத்த இந்த அரசு ஒரு வழிமுறையை மேற்கொண்டிருக்கிறது. அவர்களுடைய பரிந்துரைகளிலே,

"False value attached to liquor as worry-dissolvent is to be counteracted widespread knowledge of its deleterious effects on the individual and the soicety.".

என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது குடிப்பது தன்னுடைய துன்பத்தை மறப்பதற்கென்ற மனோநிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு தகுந்த பிரச்சாரம் செய்ய வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பிரச்சாரம் செய்கிறபோது ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் போன்றவர்களெல்லாம் எங்கே சந்தேகப்பட்டு விடுவார்களோ என்று கருதித்தான் இதைச் சொன்னார்களோ என்னவோ தெரியாது. அடுத்து, "youth is to be prevented from drinking". என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் 25 வயது என்று வைத்திருக்கிறார்கள். இளைஞர்கள் தடுக்கப்பட வேண்டும். அதற்கு என்ன வழிவகை என்பது இரண்டாவது கட்டம்.

மூன்றாவதாக 'The present incumbents of Government post who drink may be allowed to do so on permits.' என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது மதுவிலக்கு எதனால் தோல்வியடைந்தது என்று ஆராயும்போது மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் சிலருக்கு அந்தப் பழக்கம் இருப்பதால் இதை முழு அளவில் செயல்படுத்த முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் குடிக்கும் அதிகாரிகள் இருந்தால் அவர்களுக்குப் பெர்மிட் தந்து விடுங்கள் என்று சொன்னது நாங்களல்ல. அப்படி பெர்மிட் தருவது அவர்கள் குடிப்பதற்காக அல்ல, வரன்முறைப்படுத்தத்தான். இதனால் தாங்கள் தவறு செய்து விட்டோம் அதை மற்றவர்கள் செய்யக்கூடாது என்று எண்ணி அவர்கள் தாங்களாகவே திருந்த முடியும். எனவே பெர்மிட் தரச் சொன்னது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசல்ல, ஜஸ்டிஸ் தேக் சந்த் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த முறை பாதுகாப்பாக ஜஸ்டிஸ் தேக் சந்த் அவர்களின் புத்தகத்தை எடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் சென்ற முறை ஆளுநர் அவர்களின் உரையின் மீதான விவாதத்தில் பேசுகின்றபோது "மது விலக்கை முறையாக அமுல்படுத்த முடியாது. இதனால் மக்கள் பெரிய அளவில் சங்கடப்படுகிறார்கள். சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டது, எனவே ரத்து செய்ய வேண்டும்" என்று அந்தத் தரப்பிலிருந்து பேசி முதலமைச்சரவர்களுக்கும் ஆட்சிக்கும் அறிவுரை சொன்னார்கள். இன்றைக்கு தேக் சந்தை அழைத்து வந்து வேறு விதமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எது உண்மை? அவருடைய கருத்து இதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒன்றை நன்கு அறிவார்கள். மனம் திறந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று சொன்னது எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்து மாத்திரம் சொன்ன வாசகமல்ல, எங்களையும் மனம் திறந்து சொல்லச் சொன்னார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : திறந்த மனம் இப்படித்தான் இருக்கிறதென்றால் சரிதான்.



டாக்டர் இரா. சனார்த்தனம் : தனிப்பட்ட முறையிலே என்னைக் கேட்டால் இப்போது மகாராட்டிர மாநிலத்திலே இருப்பதுபோல பீர், மற்றவற்றுக்குத் தடையில்லாமல் விடுவது நல்லதென்பேன். இது மனம் திறந்து சொல்லும் கருத்து. நடைமுறையிலே எடுத்திருக்கும் நடவடிக்கை 'தளர்த்தப்படவில்லை' என்பதுதான்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் மனம் திறந்து சொன்ன கருத்து, மதுவிலக்கு முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டுமென்பதுதான். அந்தக் கருத்திலே இப்போதும் நிற்கிறார்களா?

டாக்டர் இரா. சனார்த்தனம் : அந்தக் கருத்திலே உறுதியாக நிற்கிறேன். அதில் ஒன்றுமில்லை. இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கை, தளர்த்தப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. நடைமுறைப்படுத்துவது குறித்து, ஜஸ்டிஸ் தேக் சந்த் அவர்களே கூறுகிறார். Prohibition has achieved relative success in Gujarat and Madras, but there are at least five ways resorted to for making liquor available, which need prevention. 1964-ல் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடந்தபோது, இந்தக் குழு அமைக்கப்பட்டு 5 வழிகளில் இந்தத் தவறுகள் நடைபெறுகின்றன என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இனிமேல் மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு தூரம் மதுவிலக்கிற்காகப் பேசினாலும், அவருடைய மனதுக்கு எதிராக, மனசாட்சிக்கு விரோதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்களென்றுதான் பொருள்படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பொதுவாக மது எல்லோரையும் குழப்பும். (சிரிப்பு.)

டாக்டர் இரா. சனார்த்தனம் : அடுத்து மது விலக்கை நடைமுறைப்படுத்துகிறபோது என்ன செய்ய வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

"The wet states should be induced to give up vice-bred liquor revenue. Lowering of the rate of liquor tax will to some extent reduce the profit of the illicit distiller." மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது போல, இதை நடைமுறைப்படுத்துகிறபோது, பெரிய வரி விதிப்பு செய்து, அதன் மூலம் கள்ளச் சாராய வியாபாரிகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது

என்பதை நான் ஆதரிக்கிறேன். நம்முடைய நோக்கம் நிதி திரட்டுவதல்ல. இந்த மாநிலம் இவ்வளவு பெறுகிறது, அந்த மாநிலம் இவ்வளவு லாபம் பெறுகிறது, தமிழ்நாடு பெறவில்லையே, அந்தப் பணத்தையாவது தாருங்கள் என்று லாப நோக்கோடு ஒரு வாதத்தை முன்பு வைத்தார்கள். எங்களைப் பொறுத்தமட்டில், லாபத்திற்காக அல்ல. கள்ளச் சாராயம் தயாரிக்கப்படுகிறது. அதைக் குடிப்பவர்கள் கண் இழந்து போகிறார்கள், உடல் நலமிழந்து போகிறார்கள். அதையெல்லாம் கருதி இப்படிப்பட்ட சமூக விரோத சக்தியை ஒழிப்பதுதான் இப்போது எடுத்திருக்கிற நடைமுறையே தவிர, மதுக் கடைகளைத் திறப்பதனாலோ அல்லது பெர்மிட்டுகளை வாரி வழங்குவதனாலோ எவ்வளவு வருமானம் வருகிறதென்ற அடிப்படையிலே செயலாற்றவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இதை அமுல்படுத்துகிறபோது, கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் என்ன என்பதற்குக்கூட ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்,

"Prohibition campaigns should be organised on the pattern of the anti-saloon league of America which published books, leaflets and weekly and monthly magazines by the billion. The campaign by the National Committee of Poland in 1961 which arranged 14,000 lectures, 200 exhibitions, 250 cultural events provided materials for 10 movies and distributed 2 million leaflets and posters, is worthy of emulation as also the campaign by an organisation of 1,200 medical students." என்று சொல்லியிருக்கிறார்கள்

(முற்பகல் 11-50)

அதனாலே இந்தப் படங்களை வாங்கியது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபோது இதற்கெல்லாம் முன்னேற்பாடா என்று உறுப்பினர் அவர்கள் சொல்லி வருத்தப்பட்டார்கள். அது ஒன்று வாங்கினால் போதாது என்று 10 வாங்கப்பட்டிருக்கிறது. போலந்து நாட்டிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. பல திரைப் படங்கள் நாட்டிலே வந்து நாட்டு மக்களிடையே நல்ல பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். அதற்கு இவைகள் துணையாக வேண்டும் என்பது என்னுடைய நம்பிக்கை.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு அவைத் தலைவர்களே, தங்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திக்கற்ற பார்வதி படம் வாங்கியது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்குத்தான் நான் பதில் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். மது ஒரு தீமையான கெட்ட பழக்கம். அதைப்





பற்றி மக்களிடத்தில் நல்ல முறையில் பிரச்சாரம் செய்வதற்காக நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். மது அருந்துவதனால் எப்படி எப்படி உடல் நலன் பாதிக்கப்படுகிறது, என்னென்ன தீமை ஏற்படுகிறது என்பதை அரசு வேண்டுமானால் செய்திப்படமாக எடுத்து மக்களுக்குப் போட்டுக் காட்டலாம். அதை விடுத்து ஏற்கெனவே எடுத்திருந்த படத்தை விலைக்கு வாங்குவது தவறு. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்திலே 'நான் குடித்துக்கொண்டிருப்பேன்' என்று ஒரு படத்துக்கு விளம்பரம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விளம்பரத்திற்குப் பக்கத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அப்படி 'நான் குடித்துக்கொண்டிருப்பேன்' என்று இருக்கக்கூடிய விளம்பரத்திற்குப் பக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிற்பது மாதிரி உள்ள விளம்பரப் படத்தை வைத்திருந்தால் அது குடியைத் தவிர்ப்பதற்குப் பயன்படுமா ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** படத்தில் முதலமைச்சர் படம் இருந்தால்கூட அதில் தவறில்லை. காரணம் பார்த்தாலாவது தெரிந்து கொள்வார்கள். இப்படிக் குடிப்பவர்கள் எல்லாம் எப்படி அழிந்து போகிறார்கள் என்று சுட்டிக்காட்ட அந்தப் படம் பயன்படும்.

**திரு. க. இராமமூர்த்தி:** அந்தப் படத்தில் பூதம், பிசாசுபோல் எல்லாம் போட்டு முதலமைச்சரை மிரட்டுகிற மாதிரி இருக்கிறது. முதலமைச்சர் நான் மதுவை ஒழிக்கிறேன் என்று சொல்வது மாதிரி இருக்கிறது. பூதம் முதலமைச்சரைச் சாப்பிடுவது மாதிரி இருக்கிறது. இப்போது மதுக்கடைகளையெல்லாம் அரசு திறப்பதாக வேறு அறிவித்திருக்கிறது என்பதற்காகத் தான் சொல்கிறேன்.

DR. T. R. JANARTHANAM: "The growing awareness of the alcoholic danger should be brought home by devising special programmes including audio-visual aids, seminars, special periods in schools and colleges, cultural programmes, dramatic performances, poetical symposia. . .

Women's organisations on the pattern of women's crusade in America will go a long way in bringing home the good results of prohibition. . .

The matter of prohibition should be taken in the Central Committee on prohibition. The Central Government may consider sympathetically for making a financial provision which should not be less than Rs. 1 crore. . ."

என்று எல்லாம் எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றிச் சொல்லிவிட்டு, எவ்வளவு செலவு செய்யலாம் என்பதைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே வருத்தப்பட்டதைக்கூட அப்போதே அவர்கள் புரிந்துகொண்டார்களோ என்னவோ தெரியவில்லை, அதைப் பற்றியும் சொல்லிவிட்டு மத்திய அரசே அதைச் செய்ய வேண்டுமென்ற கருத்தையும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தப் பணியை எல்லாம் மத்திய அரசைக் கேட்காமலேயே இந்த அரசு செய்திருக்கிறது என்பதையும் அந்தப் பணியின் மூலம் நாளடைவிலே இந்த நாட்டிலே இருந்து தவறான பழக்கம், தீய பழக்கம் ஒழிந்து விடக் கூடிய வாய்ப்பு, வசதி இதன் மூலம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, நிதிநிலை அறிக்கையிலே மிகவும் கவனமாக மாண்புமிகு உறுப்பினர்கள் காண வேண்டிய ஒன்று இருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டுத் திட்டம் 514 கோடி ரூபாய் அளவிலே அமையலாமென்று மத்திய திட்டக் குழு வரையறை செய்துள்ளது. வரும் ஆண்டிலே புதிதாக மேற்கொள்ள இருக்கும் திட்டங்கள் 35 கோடி ரூபாய்க்கு ஆண்டுத் திட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய முக்கிய ஒதுக்கீடுகளை ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட அளவிலே 3,150 கோடி ரூபாய் அளவில் இணைத்துப் பரிசீலித்து 563.26 கோடி ரூபாய் அளவிலே அடுத்த ஆண்டிலே இத்திட்டம் வரையறுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே 49.26 கோடி ரூபாய் அளவுக்கு அதிகப்படி வளர்ச்சித் திட்டத்திற்கு இந்த மாநில அரசு செலவு செய்ய முன் வந்திருப்பது வளர்ச்சிப் பணிகளிலே இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறது என்பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. அதிலே குறிப்பாக மின்சார உற்பத்திக்கு 169.59 கோடி ரூபாய் அளவிலேயும், பாசனத்துக்கு 26 கோடி ரூபாய் அளவிலேயும், வேளாண்மைக்கு 104 கோடி ரூபாய் அளவிலேயும், தொழில் துறைக்கு 55 கோடி ரூபாய் அளவிலேயும், சாலைப் போக்குவரத்துத் துறைக்கு 37 கோடி ரூபாய் அளவிலேயும் சுகாதாரத் துறைக்கு 25 கோடி ரூபாய் அளவிலேயும், குடிநீர் வசதிப் பணிக்காக 51 கோடி ரூபாய் அளவிலேயும், வீட்டு வசதிப் பணிக்காக ரூபாய் 33 கோடி அளவிலேயும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக 17 கோடி ரூபாய் அளவிலேயும், பிற துறைகளுக்கு 16 கோடி ரூபாய் அளவிலேயும் பெரிய அளவிலே இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம், ஏதோ இந்த அரசு மத்திய அரசின் அதிகாரத்தைக் குறிப்பிட்டு எங்களால் முடியாது என்று கைவிரித்து விடாமல் எல்லாப் பணிகளையும் நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம், எங்களுடைய கடமையை





ஆற்றத் தயாராக வந்திருக்கிறோம், என்கிற முறையில் நல்ல உணர்வுகளை இதன் மூலம் காட்டியிருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, மின்சார நிலையைப்பற்றிச் சொல்லும்போது, இன்னும் பல நெருக்கடிகளை நாம் கடந்தாக வேண்டும். அதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு மக்களுக்கு வேண்டிய அறிவுரையை வழங்க வேண்டும். அதற்குரிய பிரச்சாரம் செய்யப்பட வேண்டுமென்றுகூட நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் பெல்ஜியம் நாட்டிலே மின்சாரத்துக்கு அதிகப் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருப்பதால், அவர்கள் மின்சாரத்தைச் சிக்கனப்படுத்த பல வழிமுறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். 4, 5 மாடிகள் இருக்கிற ஒரு வீட்டிலே மேலே ஏறுகிறபோது கீழே பொத்தானை அழுத்தினால் அது ஒரு நிமிடம் அல்லது 2 நிமிடம் தான் எரிகிறது. 4-வது மாடியைத் தாண்டிய உடனே அது தானாகவே அணைந்து விடும். இப்போது நாம் இங்கே பார்க்கிறோம். பல இடங்களிலே, பல கட்டிடங்களிலே இரவு முழுவதும் விளக்குகள் எரிந்துகொண்டே மின்சாரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் நாம் சிக்கனத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அதன் மூலம் ஓரளவுக்கு மின்சாரத்தை நாம் பாதுகாக்க முடியும். மின்சாரத்திற்காக பெரிய பெரிய திட்டங்களையும், புதிய திட்டங்களையும் நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இறுதியாக நான் மாண்புமிகு உறுப்பினர்களிடம் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தலையாய வல்லமையோடு தாங்கள் இருப்பதாகக் கருதிக் கொண்டு ஆளுபவர்கள் எதைச் சொன்னாலும் அதை கேலி பேசுவதும், ஆளுபவர்கள் எந்தக் கருத்தைச் சொன்னாலும் அதை எடுத்துப் பார்க்காமல் ஏனோ தானோ என்று எதிர்க் கட்சி நண்பர்கள் நடந்து கொள்வதும் ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு உள்ளபடியே வேதனை தருகிற காரியமே தவிர வேறொன்றுமில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது கூட, எதிர்க் கட்சியிலே இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களைப் பார்த்து அன்போடு ஒன்றைச் சொன்னார்கள். "நான் இவ்வளவு நாள் எதிர்த்துப் பழக்கப்பட்டவன். இப்போது ஆள வந்திருக்கிறேன். நீங்கள் ஆண்டு கொண்டிருந்தவர்கள். இப்போது எதிர்க்கப் போகிறீர்கள். எனக்கு ஆளுவது எப்படி என்று நீங்கள் சொல்லித் தாருங்கள். எதிர்ப்பது எப்படி என்று உங்களுக்கு நான் சொல்லித் தருகிறேன்" என்று அன்போடு தெரிவித்தார்கள். ஆகையினாலே ஆண்டு பழக்கப்பட்டவர்கள் சொல்லித் தந்தால் சிறப்பாக இருக்குமே தவிர, எல்லாவற்றையும் கேலி பேசினால்

ஆளுபவர்களுக்கு உற்சாகம் இழந்து விடுவதன் மூலம் தமிழ் நாட்டினுடைய தலைமையும், பணியாற்றுபவர்களுடைய சிறப்பையும் அழித்து விட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை பொதுவாக மிகவும் நல்ல உணர்வுகளைத்தான் பிரதிபலிக்கிறது. வறட்சி நிலையிலும் தமிழின் எழுச்சியை மறக்கவில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்குகின்ற பணியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. உலகத் தமிழ் மாநாடு மதுரையிலே மிகவும் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது. அதிலே கோபப்பட்டவர்கள், மிகவும் கேவலமான சொல்லாலே கக்கூஸ் மாநாடு என்று சொன்னாலும் கூட, அப்படி இல்லையில்லை, இது மணம் வீசுகின்ற மலர், மல்லிகை என்று பாராட்டுகின்ற அளவுக்குச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. உலகத் தமிழர்கள் எல்லாம் எண்ணி எண்ணி வியக்கின்ற விதத்திலே உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. உலகத் தமிழ் அறிஞர்கள் எல்லாம் அங்கே வந்து தங்கள் தங்கள் அரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

தமிழிலே எழுத்து சீர்திருத்தத்தை, தந்தை பெரியார் அவர்கள் எண்ணிய சீர்திருத்தத்தை ஒருவேளை அவரிடம் பணியாற்றியவர்கள், குடியரசு இதழிலே தமிழுக்கு ஆற்றிய பணிக்காக தங்களுடைய வீட்டுக்கு முன்னாலே இருக்கிற பெயர்க் கல்லிலே தங்களுடைய பெயரைப் பொறித்து வைத்துக்கொண்டிருந்தாலும் கூட, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கூட, முதலமைச்சராக இருந்தபோது கூட, நிறைவேற்றாத அரிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைக் குறிப்பாக பத்திரிகையாளர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்து இந்த அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே விஞ்ஞானச் சொற்கள், தமிழ்ச் சொற்கள், தமிழ் நாட்டிலே பல மாவட்டங்களிலே இருக்கிற வளர்ச்சிச் சொற்களிலே இருக்கிற வேறுபாடு, பிற நாடுகளிலே வாழ்கிற தமிழர்களுக்கும் நமக்கும் இருக்கிற சொற்களைப் பயன்படுத்துகிற முறையிலே இருக்கிற மாறுபாடுகள் இவற்றையெல்லாம் ஆராய்ந்து, களைந்து ஒருமுகப்படுத்தி தமிழுக்கு சீரையும், சிறப்பையும் ஏற்படுத்த புதிதாக அமைய இருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் துணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்



**திரு. சோ. ஆறுமுகம் :** எழுத்துச் சீர்திருத்தம்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதேசமயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.. பேசுகின்ற தமிழும், எழுதுகின்ற தமிழும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் விளக்கினால் மிகவும் நலமாக இருக்கும்

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்த ஆராய்ச்சியில் மாண்புமிகு உறுப்பினர் ஈடுபடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். உறுப்பினருடைய கோப தாபங்களையெல்லாம் குறைத்துக்கொள்வதற்கு இதிலே இன்னும் உறுப்பினர் ஆராய்ச்சி செய்து அவருடைய கருத்துக்களையும் சொன்னால், இந்த அரசு நிச்சயம் அதைப் பரிசீலிக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த முறையில் நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்வதற்கும், நல்ல தோழமைகளை வளர்த்துக்கொள்வதற்கும் நாம் உறுதுணையாக இருக்க வேண்டும். ஊட்டியிலே இப்போது நல்ல மகிழ்ச்சிகரமான நேரம் இது. நான் அந்தத் தொகுதியிலே இப்போது இருக்க வேண்டியவன். இப்போது இங்கே சட்டமன்றம் நடந்துகொண்டிருப்பதால், நான் இங்கே இருந்தாலும் கூட, பலர் அங்கே போகிற நேரத்தில், சுற்றுலாத் துறையின் மூலம் தகவல் நிலையங்கள் அமைப்பது குறித்து ஏற்கனவே அதற்கென்று ஒரு திட்டம் இருக்கிறது; அங்கே போகிறவர்களுக்கு எல்லாம் எங்கெங்கு அறைகள் காலியாக இருக்கின்றன என்பதைக் காட்டிக் கொடுப்பதற்கு அந்தந் துறையிலிருப்பவர்கள் துணையாக இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் பார்த்து அங்கே திடீரென்று வாடகையை உயர்த்தி நடுத்தர மக்கள் தங்க முடியாத நிலையை ஏற்படுத்துவதை இந்த அரசு தடுக்க வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவையிலே பன்னெடுங்காலமாக ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றன. மீட்டர் ஆட்டோக்களில் பொருத்தப்பட்டிருந்தும், ஆயிரக்கணக்கான ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்ற வழக்கம் இருந்துகொண்டிருந்தும் அவைகள் எல்லாம் மீட்டர் போடாமல் ஓடுகின்ற வழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையினால் நேற்று மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது. அதன்படி வருகிற 1-ம் தேதியிலிருந்து அவர்கள் மீட்டர் போட்டு கட்டணம் வசூலிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு செய்தி. அதே நேரத்தில் சென்னை நகரிலே இருக்கிற கட்டணத்தின் அளவிலேதான் மாவட்ட அளவிலேயும் கட்டணம் இருக்க வேண்டுமென்று

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1981 மார்ச் 30

நிலையை மாற்றி அந்தந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய நிலைமைகளுக் கேற்ப கட்டணம் இருக்க வேண்டுமென்று முடிவு செய்தால் தான், அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களுக்குத் துணை புரிவதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கேற்ற வகையில் விதிமுறைகளை மாற்ற வேண்டும் அல்லது அதற்குரிய வழிவகையைக் காண வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களுடைய பிரச்சினைகளையும் நாம் களைய முடியும். அதே நேரத்தில் அவர்களும் மக்களுக்குப் பணியாற்று கிறோம், பணியாற்ற வேண்டுமென்ற பண்போடும், பணிவோடும் பணியாற்ற வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நிகழ்ந்த நிகழ்ச்சி யைப் போல் அல்லாமல் நல்ல முறையிலே அவர்கள் நடந்துகொள்ள வேண்டும், தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்கு கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(நண்பகல் 12-00)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

*Nil.*

*B. Reports, Notifications and other Papers*

86. Tamil Nadu—An Economic Appraisal, 1979 (English).



## இணைப்பு

(205 ஆம் பக்கத்தில் இலம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கர்நாடக அரசு ஹேமாவதி அணையைக் கட்டி முடித்துவிட்டது. அதன் கீழ் பாசனமும் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி காவிரி ஆற்றின் பெரிய உபநதியான ஹேமாவதி ஆற்றின் குறுக்கே கிருஷ்ணராஜசாகர தேக்கத்திற்கு மேல் சுமார் 100 கி.மீ. தூரத்தில் ஒரு அணை கட்டப்பட்டது. அணை கர்நாடக மாநிலத்தில் ஹாசன் மாவட்டத்தில் கோரூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 34 டி.எம்.சி. இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக ஒரு லட்சம் ஏக்கர்கள் பாசன வசதிபெறும். ஆண்டுதோறும் 14 டி.எம்.சி. நீர் பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக கர்நாடக அரசு கால்வாய்களுக்கு காரை பூசியும், கொள்ளளவை அதிகப்படுத்தியும் கால்வாய்களின் நீளங்களை அதிகரித்தும், முதல் கட்டத்திலுள்ள ஒரு லட்சம் ஏக்கர் ஆயக்கட்டுக்குமேல், ஆறுலட்சத்து முப்பதாயிரம் புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க உத்தேசித்துள்ளது. ஆக இத்திட்டத்தின் கீழ் மொத்த ஆயக்கட்டு ஏழு லட்சத்து முப்பதாயிரம் ஏக்கர் ஆகும். முதலாவது கட்டத்தில் பயன்படுத் தும் 14 டி.எம்.சி.-யைத் தவிர இரண்டாவது கட்டத்தில் மேலும் 51 டி.எம்.சி. பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் 1968-ல் துவங்கப்பட்டது. அணைக்கட்டு வேலை முற்றிலும் முடிந்துவிட்டது. 1975 ஆம் ஆண்டு முதல் இந்த அணையில் கர்நாடக அரசு நீரைத்தேக்க ஆரம்பித்துவிட்டது. இப்போது, இடது வலது கால்வாய்களின் ஒரு பகுதியும் வெட்டப்பட்டு விட்டது. இக்கால்வாய்களின் கீழ் சுமார் இருபத்து நான்காயிரத்து ஐநூறு ஏக்கர் பாசனத்திற்கு நீர் 1980-ம் ஆண்டு திறந்துவிடப்பட்டது என்று கூறப்படுகிறது.

1892 மற்றும் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி கர்நாடக அரசு இத் திட்டத்தின் முழு விவரங்களையும் தமிழ் நாட்டுக்கு கொடுத்து, தமிழ் நாட்டின் அனுமதியை திட்டம் துவக்குவதற்கு முன்பே பெறவேண்டும். 1959-ல் கர்நாடக அரசு இத்திட்டத்தை உத்தேசித்திருந்தபொழுது, தமிழ்நாடு அரசு கர்நாடக அரசிடம் இத்திட்டத்தின் முழுவிவரங்களையும் கொடுக்கும்

படி கேட்டுக்கொண்டது. இதைத் தொடர்ந்து மத்திய அரசுடனும், கர்நாடக அரசுடனும் கடிதப்போக்குவரத்து நடந்தது. மத்திய அரசு மட்டத்தில் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க நடந்த பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை. தமிழ் நாட்டின் எதிர்ப்பினால் மத்திய நீர்க்குழுவும் (Central Water Commission) இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

இதற்கிடையில் தமிழ் நாட்டின் அனுமதியில்லாமலேயே கர்நாடக அரசு இத்திட்ட வேலைகளை தொடர்ந்தது. இதன் விளைவாகவே காவிரி பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தைகள் மத்திய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்குள் நடந்து வருகின்றன. 1970 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இப்பிரச்சினையைத் தீர்க்க நடுவர் மன்றம் ஒன்றை அமைக்கும்படி, தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. 1971-ல் நடுவர் மன்றம் (Tribunal) அமைக்க மத்திய அரசுக்கு அறிவுரை வழங்கும்படி உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்தது. இந்தியப் பிரதமரின் அறிவுரையின்பேரில் வழக்குத் திரும்பப்பெறப்பட்டது.

1972-ல் பிரதம மந்திரியின் முயற்சியினால், கர்நாடக, கேரள மற்றும் தமிழக முதலமைச்சர்கள் காவிரிப்படுகையில் கிடைக்கும் மொத்த நீர், பயன்படுத்தும் நீர் முதலிய விவரங்களைச் சேகரிக்க உண்மை அறியும் குழு ஒன்றை அமைக்க ஒப்புக்கொண்டார்கள். இக்குழு சேகரித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் மத்திய நீர்ப்பாசன அமைச்சரின் தலைமையில் முதலமைச்சர்களின் கூட்டங்கள் பலமுறை நடந்தும் இதுவரை தீர்வு காண முடியவில்லை. முதலமைச்சர்கள் கடைசியாக சென்னையில் 27—12—1980 அன்று கூடிப் பேசினார்கள். இம்மாநாட்டில் சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய வரைவு செயற்குறிப்பை மத்திய வேளாண்மை மற்றும் பாசன அமைச்சருக்கு அனுப்ப வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. மத்திய அரசுக்கு அனுப்பப்படவுள்ள தமிழகத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசுக்கு இது விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

---

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்கிழமை, 1981 மார்ச் 31.

பங்குனி 18, ரௌத்திரி, 2012 திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### கிராமிய ஊர்க்காவல் படை.

" 201 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமிய ஊர்க்காவல் படை [Rural Home Guards] அமைக்கும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது உண்மையா ?

(இ) இதற்காக பயிற்சி வகுப்பு ஏதேனும் நடத்தப்பட்டுள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதில் ஒரு நீண்ட விளக்கமாக இருப்பதால், அதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். அதைக் கேள்வியின்போது விளக்கமாகப் பதில் சொல்கிறேன். இந்த ஊர்க்காவல் படையினருக்கு ஆரம்பப் பயிற்சி கீழ்க்கண்ட பாடத் திட்டங்களின் படி பதினைந்து வேலை நாட்களுக்கு அந்தந்த மாவட்டத் தலைமையிடங்களில் அளிக்கப்பட்டது.

| பாடங்கள். | பயிற்சி நாட்கள், 15 வேலை நாட்கள். | காலம் 45 நிமிடங்கள் கொண்ட 30 கால அளவுகள். |
|---|---|---|
| (1) | (5) | (3) |
| 1. உடற்பயிற்சி | | 3 கால அளவுகள் |
| 2. ஆயுதமில்லா சண்டை | | 1 கால அளவு |
| 3. கவாத்து ஆயுதமுடனும்/ ஆயுதமில்ல மலும் | | 12 கால அளவுகள் |
| 4 உள்நாட்டு, பாதுகாப்பு பாடங்கள் (தீயணைப்பு, முதலுதவி, மீட்புப் பணி) | | 8 கால அளவுகள் |
| 5. கூட்டுக் கட்டுப்பாடு | | 3 கால அளவுகள் |
| 6. செய்தி எழுதுதல் | | 1 கால அளவு |
| 7. சட்டம், ஒழுங்கு சம்பந்தப்பட்ட உத்தியோகக் கடமைகளும், பொறுப்புகளும் | | 2 கால அளவுகள் |

ஆரம்பப் பயிற்சியைத் தவிர, மேற்கண்ட ஒவ்வொரு இடத்திலிருந்தும் (சிதம்பரம் தவிர) ஒரு கம்பெனி கமாண்டர் அல்லது ஒரு பிளாட்டுன் கமாண்டருக்கும் பெங்களூரில் உள்ள மத்திய பயிற்சி நிலையத்தில் 8-10-1979 முதல் 27-10-1979 முடிய (15 வேலை நாட்கள்) மத்திய அரசினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வெள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணி பயிற்சி அளிக்கப்பட்டது.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தப் பயிற்சியில் இதுவரை கலந்து கொண்ட இளைஞர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? இந்தப் பயிற்சிக் காலம் முடிந்த பிறகு, அவர்களை எந்த அளவுக்கு அரசு பயன்படுத்துகிறது என்ற விவரங்களை அரசு அளிக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஊர்க் காவல் படைப் பிரிவு தமிழகத்திலே ஏழு முக்கியமான மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தமிழ் நாட்டில் புயலால் அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகள் என கருதப்படக்கூடிய முக்கியமான இடங்களில் 1,092 பேர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1,092 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். பயிற்சி அளிக்கப்பட்ட பிறகு



இவ்வளவு பேரும் முறையாக ஊர்க்காவல்படை என்று அமைக்கப்பட்ட அந்த அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டனரா? அல்லது இனிமேல் தான் வர இருக்கிறார்களா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை விபரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அறிக்கையை இந்த அவையிலே வைத்தால் படித்து விவரங்கள் தெரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும். அந்த அறிக்கையும் இந்த அவையிலே வைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்தக் கேள்விக்கான விடை ஒரு பெரிய அறிக்கையாக இருப்பதால், அந்த அறிக்கையை அப்படியே ஓர் அறிக்கையாக வைத்து இங்கே கொடுத்துவிடலாம் என்று தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். இந்த அறிக்கையை அப்படியே அளிக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அவர்களுக்கு காத்தே பயிற்சி அளிக்கப்படுமா? இந்தப் பயிற்சிக்கு தைரியமான பெண்களையும் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** ஊர்க் காவல் படையில் பெண்களும் இருக்கிறார்கள். தேவை ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பயிற்சியும் அளிப்பதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

## அந்நியப் பொருட்கள்.

* 202 வினா.—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்காலிங்கம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இலங்கையிலிருந்து அந்நியப் பொருட்கள் தூத்துக்குடி, இராமேசுவரம் பகுதிகளில் கொண்டு சேர்க்கப்படுவது பற்றி, அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** (அ) இலங்கையிலிருந்து அந்நியப் பொருட்கள் தூத்துக்குடி பகுதிக்கு கொண்டு சேர்க்கப்படுவது குறித்து ஒரு குறிப்பும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை; ஆனால் இராமேசுவரத்தைப் பொறுத்தவரையில் கடத்தல் குறித்து சில புரியாத (vague) புகார்களும், புனிதப் பயணிகளுக்கு இன்னல் இழைக்கப்படுவது குறித்தும் சில புகார்கள் அரசுக்கு வந்துள்ளன.

(இ) கள்ளக்கடத்தல் செய்தலைத் தடுக்கவும், புனிதப் பயணிகளுக்கு இழைக்கப்படும் இன்னல்களைத் தடுக்கவும் காவல்துறை டைரக்டர் ஜெனரல் இராமேசுவரம் காவல் நிலைய அதிகாரிகளுக்குச் சில கட்டளைகள் பிறப்பித்துள்ளார்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இலங்கையிலிருந்து பயணிகளாக வருகின்ற பலரும் துன்பப்படுத்தப்படுகிறார்கள் என்றும் அவர்களுக்குப் பல இன்னல்கள் விளைவிக்கப்படுகின்றன என்றும் சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இலங்கையிலிருந்து வரக்கூடியவர்கள் என்பது மட்டுமல்ல, இராமேசுவரம் பகுதிக்கு வரக்கூடிய புனிதப் பயணிகள், சுற்றுலாப் பயணிகள், அங்கே இலங்கையிலிருந்து வரக்கூடியவர்கள் அனைவருக்கும் சில இன்னல்கள் விளைவிக்கப்படுகின்றன என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுதான் 'டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்' அவர்கள் அங்குள்ள காவல் துறை அதிகாரிகளுக்குச் சில கட்டளைகள் பிறப்பித்துள்ளார்கள்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்:** அண்மையில் நான் இராமேஸ்வரம் சென்றிருந்தேன். அங்கே பகிரங்கமாக அந்நியப் பொருட்களை விற்கிறார்கள். அந்த அளவுக்கு பகிரங்கமாக விற்கப்படுவது காவல் துறையினருக்குத் தெரியும். இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதுகுறித்து அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. அதுகுறித்து எப்படியெப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சில உத்தரவுகள் காவல் துறையினருக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. அதன்படி அவர்கள் செயல்படும்போது, இந்தக் குறைபாடுகள் தவிர்க்கப்படும்.

### இளநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு.

*203. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாகப் பதவி உயர்த்த, எஸ்.சி.இ.ஆர்.டி. மூலம் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) அவைகளின் மூலம் இதுவரை இடைநிலை ஆசிரியர்களாக்கப் பட்டவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) தொடக்கப் பள்ளிகளில் பணி புரியும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் தகுதியும், சம்பளமும் பெற வாய்ப்பளிக்கும் வகையில் அஞ்சல் வழி மற்றும் நேர்பயிற்சி மூலம் கல்வி அளிக்க மாநிலக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் SCERT -இல்) ஒரு தனிப்பிரிவு தொடங்கி செயல்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் 1980 செப்டம்பர் திங்கள் முதல் பிப்ரவரி வரை நடக்கும் இந்த அஞ்சல் வழிக் கல்விக்கான பாடத் தொகுப்புகளை கல்வி





வல்லுநர் குழுக்களை அமைத்து எழுதி, பாடங்கள் ஆசிரியர்களுக்கு அனுப்பப் பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தினால் 5,000 இளநிலை ஆசிரியர்கள் பயன் பெறுவர்.

(இ) 1980 செப்டம்பர் முதல் பிப்ரவரி 1981 வரை நடக்கும் இந்த பயிற்சித் திட்டத்தின் மூலம் 2,500 ஆசிரியர்கள் பயன் அடைவர்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாகப் பதவி உயர்த்தப்படும் திட்டத்தின் அடிப்படையிலே அரசு ஆண்டுக்கு 5 ஆயிரம் பேருக்குப் பயிற்சி அளிப்பதற்கும் அவர்கள் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கும் வழிவகைகளைச் செய்வதற்கு முனைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 2,500 பேர்களை எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இடைநிலை ஆசிரியர்கள் நம்முடைய நாட்டிலே 75 ஆயிரம் பேர்களுக்கு மேலே இருப்பதாக அரசு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இவர்களிலே ஆண்டுக்கு 5 ஆயிரம் பேர்கள் என்று எடுத்தால் இளநிலை ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாக ஆவதற்கு ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகும். இதற்குள்ளே பலர் ஓய்வு பெறுவார்கள், பலர் இந்த உலகத்தை விட்டே ஓய்வு பெறுவார்கள். ஒரு இரண்டு ஆண்டு அல்லது மூன்று ஆண்டு என்ற அளவிலே திட்டம் போட்டு, அந்த அளவுக்கு இதை விரைவுபடுத்தி அனைவருக்கும் விரைவிலே பயன்படும் அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது இதை ஆரம்பித்து நாம் நடத்துவதில் சில அனுபவங்களை நாம் பெற்றிருக்கிறோம். அதன் அடிப்படையிலேதான் 2500 என்று இருக்கிற எண்ணிக்கையை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இரண்டு-மூன்று ஆண்டு கால அளவிலே திட்டம் போட்டு உயர்த்துகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை. காரணம் அவர்கள் நடத்துகின்ற பயிற்சியின் தரம் குறைந்துவிடும் என்பதுதான்.

(முற்பகல் 9-40)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்போதிருக்கிறவர், வருங்காலத்தில் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும், இதை விரைவுபடுத்த வேண்டும் என்று கோரிக்கையை வைத்து, பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் போராட்டங்களை நடத்தி வருவது அரசுக்குத் தெரியுமா? எனவே சீக்கிரமாக விரைவு நடவடிக்கையை எடுக்க அரசு முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த அரசைப் பொறுத்தவரையில், போராட்டத்தின் அடிப்படையில்தான் ஒரு பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும் என்ற நிலையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் சொல்லுகிற கருத்துக்களுக்கு மதிப்பு வைத்துத்தான் காரி யங்களை இந்த அரசு செய்கிறதே தவிர, இதற்காக என்று தனியாகப் போராட்டம் நடத்த வேண்டும் என்ற நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட வேண்டும் என்று அரசு விரும்பவில்லை. ஆனால் போராட்டம் நடத்துவதும், நடத்தாமலிருப்பதும் ஆசிரியர் சங்கங்களின் உரிமையாகும். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினையில் உரிய கவனம் செலுத்தி வருகிறது. அதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்திட்டத்தின் மூலம் ஆசிரியர்கள் பயன்பெற வேண்டு மென்று கருதுகிறோம். நிச்சயமாக, வருகிற ஆண்டில் அதிகமான ஆசிரியர் களைப் பணிக்கு எடுப்போம்.

ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி.

* 204. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 'சி' பிரிவைச் சேர்ந்த சேலம் மாவட்டம், ராசிபுரம் அரசு உயர் நிலைப் பள்ளி ஆசிரியர் சங்கச் செயலரிடமிருந்து, அப்பள்ளி ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு, 30—3—1973 முதல் 26—3—1976 வரை வட்டித் தொகை தருவது குறித்து கோரிக்கை மனு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை. ராசிபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு 30—3—1973 முதல் 26—3—1976 வரையில் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை ராசிபுரம் நகராட்சி 14—2—1979-ல் செலுத்திவிட்டது. அவை ஒவ்வொரு ஆசிரியர்களுடைய தனிக் கணக்குகளில் சேர்க்கப் பட்டுள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : "சி" பிரிவு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குத்தான் இவ்வினாவில் குறிப்பிடப்பட்டவாறு சங்கடங்கள் இருக்கின்றன. காரணம், "சி" பிரிவைச் சேர்ந்த இந்த 17 நகராட்சி உயர் நிலைப் பள்ளிகளை அரசு தன் பொறுப்பில் மேற்கொண்ட பிறகு, ஏற்கெனவே இணைக்கப்பட்ட "ஏ" மற்றும் "பி" பிரிவு ஆசிரியர்களோடு இந்த ஆசிரியர்



களையும் இணைக்கும் வகையில் அவர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்தே அவர்களுடைய பணி வரன்முறைப் படுத்தப்படாமல் இருக்கிற காரணத்தால், பல இடங்களில் இத்தகைய சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசு மேற் கொண்ட 17 நகராட்சிப் பள்ளிகளான "சி" பிரிவு ஆசிரியர்கள் அனைவருக்குமே இது பொருந்துவதாக இருப்பதால், அவர்களையும் "ஏ", "பி" பிரிவுகளோடு இணைத்திட, அவர்கள் பணியில் சேர்ந்த தேதி யிலிருந்தே அவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்திட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : "சி" பிரிவைச் சேர்ந்த 17 நகராட்சி உயர் நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களையும் "ஏ", "பி" பிரிவு ஆசிரியர்களோடு இணைக்க வேண்டும் என்றுதான் இந்தப் பிரச்சினையைப் பரிசீலித்து வருகிறோம். பரிசீலனைக்குப் பிறகு உரிய முடிவெடுக்கப்படும். எந்த அடிப்படையில் இணைப்பது என்பது குறித்தும் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இது குறித்துக் கல்வித்துறை அதிகாரிகள் ஆசிரியர்களின் சங்கங்களின் கருத்துக்களைக் கேட்டார்கள். "சி" பிரிவு ஆசிரியர்களையும் "ஏ", "பி" பிரிவு ஆசிரியர்களோடு இணைக்க வேண்டும் என்பதற்கான ஒப்புதலை ஆசிரியர்கள் சங்கங்கள் அளித்துள்ளன. அதன் காரணமாக இது குறித்த சிக்கல் தீர்ந்துவிட்டது. எனவே அந்த அடிப்படையில் "சி" பிரிவு ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்தே பணி வரன் முறைப்படுத்தப்பட்டு, "பி" பிரிவோடு இணைத்து, முழு இணைப்போடு சேர்த்திட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது ஒன்றாக இணைந் திருக்கிற ஆசிரியர்கள் இதை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒப்புதல் தந்து எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தால், மேற்கொண்டு இணைப் பதில் இருக்கிற தடைகள் இனி இல்லாமல் போய்விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "சி" பிரிவு ஆசிரியர்களை, "ஏ" "பி" பிரிவு ஆசிரியர்களோடு இணைப் பதைப்பற்றி பதிலளித்தார்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர் களையும் அரசு ஏற்க இருப்பதால் அவர்களுக்கு "டி" பிரிவு ஆசிரியர்கள் என்று பெயரிடப்படுமா, அல்லது வேறு பெயர் வைக்கப்படுமா? அவர்களை இணைப்பதிலும் இதே நடைமுறையை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : "ஏ" "பி" பிரிவு ஆசிரியர் களுக்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தோமோ, அதே நடவடிக்கைகளை இந்தப் பிரிவு ஆசிரியர்களுக்கும் எடுப்போம்.

லைப்ரரி ஆர்கனைஸிங் இன்ஸ்பெக்டர்.

*** 205 வினா—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைக்கப்பட்டபோது கல்வித் துறையின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட லைப்ரரி ஆர்கனைஸிங் இன்ஸ்பெக்டர் (Library Organising Inspector) பதவியில் தொடர்ந்து பணி புரிந்தவர்களுக்கு, ஓய்வு ஊதியம் மற்றும் ஓய்வு கால நன்மைகள் முதலியன வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

பொறியியல் கல்லூரிகளின் இணை விரிவுரையாளர்களின் சம்பள விகிதங்கள்.

*** 206 வினா—திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொறியியல் கல்லூரி இணை விரிவுரையாளர்களும், கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்களும், பல்கலைக் கழக சம்பள விகிதங்கள் 1—1—1977 முதற்கொண்டு செயல்படுத்தப்படுவதற்கு முன்னர், ஒரே விகிதத்தில் சம்பளம் பெற்று வந்தனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், பின்னவர்களுக்கு ஈடாக, முன்னவர்களுடைய அதிக பட்ச சம்பளத்தை உயர்த்தாததன் காரணமென்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (இ) 1—1—1974 வரை கலைக் கல்லூரி உதவிப் பேராசிரியர்களின் ஊதிய விகிதமும், பொறியியல் கல்லூரி இணை விரிவுரையாளர்களின் சம்பள விகிதமும் ஒன்றாகவே இருந்தது (ரூபாய் 475—25—650—30—800). 1—1—1974 முதல் கலைக் கல்லூரி ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் பல்கலைக் கழக மான்யக் குழுவின் பரிந்துரைகளின்படி மாற்றியமைக்கப்பட்டது. பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் அகில இந்திய தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரைகளின்படி 1—1—1974 முதல் மாற்றியமைக்கப்பட்டன. இம்மாற்றங்களின்படி கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கும், பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பின்வரும் ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட்டன.



கலைக் கல்லூரிகள் :—

பேராசிரியர்கள் : ரூபாய் 700—40—1,100—50—1,300—இபி—50—1,600.

உதவிப் பேராசிரியர்கள் : ரூபாய் 700—40—1,100—50—1,300—இபி—1,600.

பொறியியற் கல்லூரிகள் :—

பேராசிரியர்கள் : ரூபாய் 1,500—60—1,800—100—2,000—125/2—2,500.

உதவிப் பேராசிரியர்கள் : ரூபாய் 1,200—50—1,300—60—1,900.

விரிவுரையாளர்கள் : ரூபாய் 700—40—1,100—50—1,300—இபி—50—1,600.

இணை விரிவுரையாளர்கள் : ரூபாய் 700—40—1,100—50—1,300.

கலைக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களும், பொறியியற் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களும் ஒரே வகையான தரம் பிரிக்கப்படவில்லை. அவர்களின் தரம் வெவ்வேறாக இருப்பதுடன் ஊதிய விகிதங்கள் வெவ்வேறு குழுக்களின் பரிந்துரைகளின்படி திருத்தப்பட்டன. அதாவது கலைக் கல்லூரிகளுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகள்படியும் பொறியியற் கல்லூரிகளுக்கு அகில இந்திய தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரைகள்படியும் திருத்தியமைக்கப்பட்டன. இப்பதவிகளுக்கான கல்வித் தகுதிகளும் வெவ்வேறாக உள்ளன.

**திரு. பா. ரா. தாமஸ்:** இரண்டாவது ஊதியக் குழுவுக்கு முன்பு பொறியியல் கல்லூரிகளில் அசோசியேட் லெக்சரர்களாகப் பணியாற்றியவர்களின் அடிப்படை ஊதியம் ரூபாய் 275. ஆனால் கலை, அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றிய அசிஸ்டெண்ட் புரொபசர்கள் ரூபாய் 225 அடிப்படை ஊதியம் பெற்றார்கள். அதாவது குறைவான அடிப்படை ஊதியம் பெற்றார்கள். ஆனால் 1970 ஆம் ஆண்டு இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்குப் பிறகு பொறியியல் கல்லூரிகளில் பணியாற்றிய "அசோசியேட் லெக்சரர்கள்" அடிப்படைச் சம்பளமாக ரூபாய் 475 பெற்றார்கள். கலை, அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றியவர்களும் அப்போது ரூபாய் 475 அடிப்படைச் சம்பளம் பெற்றார்கள். மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்குப் பிறகு, யு.ஜி.சி. அடிப்படையில் இவர்கள் இருவருக்கும் வேறுபாடு ஏற்பட்டது. உதாரணமாக அசோசியேட் லெக்சரருக்கு இருக்கும் ஊதியம் ரூபாய் 700—40—1,100—50—1,300. ஆனால் கலை, அறிவியல் கல்லூரி ஆசிரியர்களின் அடிப்படை ஊதியம் ரூபாய் 700—40—1,100—50—1,300—இபி—50—1,600. இதில் சிக்கல் என்னவென்றால்

அசோசியேட் லெக்சரர் என்றும் லெக்சரர் என்றும், அசோசியேட் புரொபசர் என்றும், புரொபசர் என்றும் நான்கு வகைகள் இருக்கின்றன. எனவே அசோசியேட் லெக்சரர் என்ற பதவிகளை எடுத்துவிட்டு, அசிஸ்டென்ட் புரொபசர் என்றும் புரொபசர் என்றும் மாற்ற அரசு முன்வருமா ?

இரண்டாவது, 10 ஆண்டுகள் உதவிப் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்களைப் பேராசிரியர்களாக உயர்த்துவதற்கு அரசு உரிய ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலிருந்து மீண்டும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கலைக் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பல்கலைக் கழகக் குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் தரப்படுகிறது. ஆனால் பொறியியல் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அகில இந்தியத் தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் தரப்படுகிறது. அரசாக எந்த முடிவும் இது குறித்து எடுக்கவில்லை. அரசு நியமித்த ஊதியக் குழுவின் அடிப்படையில் இந்தச் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படவில்லை. அகில இந்திய அடிப்படையில் அமைக்கப்பட்ட இரண்டு குழுக்கள் சொன்ன பரிந்துரைகளின்படி அவர்களுக்கான ஊதிய விகிதங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அவர்களின் தகுதி, அவர்களுக்கு இருக்கிற வித்தியாசம் ஆகியவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் இரண்டு குழுக்களுமே இந்த ஊதியங்களைச் சிபாரிசு செய்திருக்கின்றன. அதில் மேற்கொண்டு ஏதாவது திருத்தம் வேண்டும் என்றால், அந்தக் குழுக்களிடம் சொல்வதுதான் சாலப் பொருத்தமாக இருக்கும்.

அடுத்து இணை விரிவுரையாளர்களைக் குறிப்பிட்ட சில ஆண்டுகள் கழித்து, விரிவுரையாளர்களாக உயர்த்திட வாய்ப்பிருக்கிறதா என்று கேட்டார்கள். அது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: சில மாநிலங்களில் இவ்வாறு அசோசியேட் லெக்சரர் என்ற பதவிகளை எடுத்துவிட்டதால் அங்கெல்லாம் இந்தச் சிக்கல்கள் நீங்கி விட்டன. எனவே அந்த முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் ஏற்கெனவே இது பரிசீலிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டேன். அதாவது குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகள் இணை விரிவுரையாளர்களாகப் பணியாற்றியவர்களை விரிவுரையாளர்களாகப் பதவி உயர்த்திட எந்த அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பரிசீலித்து வருகிறோம். அது குறித்து ஒரு முடிவு எடுத்த பிறகு, இணை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்களாகப் பதவி உயர்வு செய்யப்படுவார்கள்.





திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இதுபோன்று கல்லூரி ஆசிரியர்கள், பல்கலைக் கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோரிடையே பல ஊதிய முரண்பாடுகள் இருப்பதால் அதைப் பரிசீலித்து அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி "ஒரு நபர் குழு" ஒன்று அமைக்கப்பட்டது. நான் "Anomalies Commission" பற்றிக் குறிப்பிடவில்லை. திரு. பணிக்கர் தலைமையில் இதுகுறித்து ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது அறிக்கையை அரசுக்குத் தந்துவிட்டதா ? அந்த அறிக்கை அரசுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு நபர்க் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள கோரிக்கையே, பத்தாண்டுக் காலம் பணியாற்றிய இணை விரிவுரையாளர்களை, விரிவுரையாளர்களாக ஆக்க வேண்டும் என்பதுதான். அதன் அறிக்கை இன்னும் நம் கைக்குக் கிடைக்கவில்லை. அது கிடைத்த பிறகு நாம் அது குறித்துப் பரிசீலனை செய்யலாம்.

கருப்புக் கருங்கல்

*207 வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் வட்டத்தில் 1—1—1978 முதல் 31—1—1979 வரை, கருப்புக் கருங்கல்லை (Black granite) சட்ட அனுமதியின்றி உடைத்ததற்காக காவல்துறையினர் பதிவு செய்த வழக்குகள் எத்தனை ?

(இ) இவ்வழக்குகள், தற்பொழுது எந்நிலையில் உள்ளன ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: (அ) திண்டிவனம் வட்டத்தில் 1—1—1978 முதல் 31—1—1979 வரை சட்ட அனுமதியின்றி கருப்புக்கல் உடைத்ததற்காக மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(இ) இம்மூன்று வழக்குகளில் இரு வழக்குகள் புலன் ஆய்வு செய்ய முடியவில்லையாதலால் முடிக்கப்பட்டன. மூன்றாவது வழக்கில் 5—5—1978 இல் குற்றவாளி குற்றம் சாட்டப்பட்டு, விசாரிக்கப்பட்டபின் 30—12—1978 இல் திண்டிவனத்தில் உள்ள கூடுதல் நீதித்துறை இரண்டாம் வகுப்பு நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டார்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்த கருப்புக் கருங்கல்லை தனியார் வெட்டக்கூடாது என்று இருந்தாலும், அதையும் மீறி திண்டிவனத்திலும் மற்றும் வேறு சில இடங்களிலும் வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஒருவேளை

அவர்களுக்கு ஒப்பந்தம் இருந்து, அந்த ஒப்பந்த காலத்தின் காரணமாக வெட்டுகிறார்களா? அப்படியிருந்தால் அந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் காலாவதியாகும் காலம் எப்போது?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** புதியதாக விதி 8-ன் கீழ் தனியார் யாருக்கும் வெட்ட அனுமதி கொடுப்பதில்லை என்று புதிதாகச் சட்டம் இயற்றி, அந்தச் சட்டம் உச்ச நீதிமன்றம் வரை போய் அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு இப்போது வந்திருக்கிறது. ஏற்கெனவே உரிமம் பெற்றிருந்த எத்தனை பேர் 'லீஸ் பீரியட்' முடியும் வரை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. மூலக் கேள்வி அதைப் பற்றியது அல்ல. சட்டவிரோதமாக, திருட்டுத்தனமாக இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களைப் பற்றியதுதான் மூலக் கேள்வி. அதற்குத்தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். யார் யாருக்கு எவ்வளவு காலம் இருக்கிறது என்று தனியாகக் கேள்வி கேட்டால், எவ்வளவு காலம் இருக்கிறது, எப்போது முடிகிறது என்பதைப்பற்றித் தனியாகச் சொல்லுகிறேன். பொதுவென்றால் பத்திலிருந்து முப்பதுக்கு மேல் இருக்கும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தொடரப்பட்ட மூன்று வழக்குகளில் இரண்டில் சார்ஜ்ஷீட்டே போடப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்ட ஒருவரும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் என்றால், வழக்குகள் போடுவதில் ஏதாவது தவறு இருக்கிறதா என்பதை அரசு ஆராய்ந்ததா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** புகாரின் அடிப்படையிலே ஃஎப்.ஐ.ஆர். போட்டு விசாரித்திருப்பார்கள். விசாரணையில் ருசுவாகவில்லை என்றால், கேஸ் போட முடியாது என்ற நிலை ஏற்பட்டிருப்பதால், இரண்டு கேஸ்கள் ஃஎப்.ஐ.ஆர். ஸ்டேஜிலேயே விடப்பட்டிருக்கின்றன. இன்னுமொன்றில் கோர்ட் வரை போய் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

## புதிய தொழில்கள் தொடங்க ஊக்கத் தொகைகள்

*208 வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) புதிய தொழில்களைத் தொடங்குவதற்காகத் தனியார் தொழில் முனைவர்களுக்கு 1980-81 ஆம் ஆண்டிற்கான தொழில் கொள்கைகள்-திட்டங்கள் என்ற தலைப்பிட்ட நிதிநிலை அறிக்கைத் திட்ட வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்புகளுக்கும் மேலாக புதிய ஊக்கத் தொகைகள் ஏதேனும் வழங்கும் செயற்குறிப்பு உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) ஆம்.



(இ) இதுபற்றிய விவரங்கள் தொழில்துறை மானியக் கோரிக்கையின் வெளியிடப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. முத்துசாமி, திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. சோ. ஆறுமுகம், திரு கி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. பா. ரா. தாமஸ், செல்வி லீலாவதி ஆகியோர், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பத்து அம்சக் கோரிக்கையை வற்புறுத்தி 30—3—1981 முதல் போராட்டம் நடத்துவதுபற்றியும் 30—3—1981 அன்று தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கத்தைச் சார்ந்த 21 பேர் கைது செய்யப்பட்டது குறித்தும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எழுப்ப முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் விளக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தினர் [illegible] மாதங்களுக்கு முன்னதாகவே அரசுக்கு அவர்களுடைய பத்து அம்சக் கோரிக்கைகளைப் பற்றிய குறிப்பினை அனுப்பி அதை பரிசீலனை செய்ய வேண்டும், பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டுகோளை விடுத்திருந்தார்கள். அதற்கடுத்து அந்தக் கோரிக்கைகளை வற்புறுத்துகிற வகையிலே 6—12—1980 அன்று 51 கல்வி மாவட்டங்களிலும் பேரணி நடத்தி மாவட்டக் கல்வி அலுவலர் வழியே அந்தக் கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அதற்கடுத்து 20—12—1980 அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உண்ணாவிரதம் இருந்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக அரசுக்கு அந்தக் கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] 1981 மார்ச் 31]

அதற்கடுத்து 13—2—1981, 14—2—1981 ஆகிய தேதிகளில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களையும் கல்விச் செயலாளர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியவர்களையும் நேரிலே பேட்டி கண்டு தங்களுடைய கோரிக்கைகளைத் தந்து நிதிநிலை அறிக்கையிலே சில கோரிக்கைகளைப் பற்றியாவது தெரிவிக்க வேண்டும் என்று வேண்டியிருக்கிறார்கள். அதற்கடுத்து நிதிநிலை அறிக்கையிலே இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அறிவிக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்தார்கள்.

அதற்கடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அந்தக் கோரிக்கைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி வேண்டுகோள் விட நேரம் தாருங்கள் என்று பதிவுத் தபால் மூலமாக இருமுறை மடல் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பேட்டி காண அனுமதிக்கப்படவில்லை. இப்படி கோரிக்கைகளை வைக்கும் சங்க உறுப்பினர்களை அழைத்துப் பேச இந்த அரசு அஞ்சுகின்ற நிலை இருப்பதால் அவர்களை ஒரு பொருட்டாக மதிக்காத காரணத்தால், ஆறு மாத காலத்திற்கு முன்பே பத்து அம்சக் கோரிக்கையை அவர்கள் வைத்தும் அதிலுள்ள ஒரு கோரிக்கையைப் பற்றிக்கூட நிதிநிலை அறிக்கையிலே சொல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் ஆசிரியர்கள் வேறு வழியின்றி—அவர்களுக்குப் போராட வேண்டும் என்ற எண்ணம் இல்லை—போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். நேற்று 21 பேர் இன்று 31 பேர் நாளை 40 பேர் என்று வரிசையாக எவ்வளவு காலம் ஆனாலும் போராட தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே ஆரம்பித்த இந்தப் போராட்டம் மாவட்டத் தலைநகரங்களுக்கும் பரவியிருக்கிறது. அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து அவர்களும் போராட்டத்திலே குதிக்க இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மிகப் பெரியதொரு போராட்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலையைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்பதைப்பற்றி விரிவாகப் பேசி முடிவெடுக்க வாய்ப்பாக இருக்கும் வகையில் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தின் சார்பாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்தான் சொல்லிவிட்டாரே, வேறு என்ன இருக்கிறது சொல்லுவதற்கு ?



1981 மார்ச் 31]

திரு. சோ. ஆறுமுகம் : அவர்கள் 6 மாதங்களுக்கு முன்பே பத்து அம்சக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி முடிவு எடுப்பதில் காலம் கடத்துவதால் தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்கள் சிறைக்குச் செல்லத் தயாராகக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இதனால் மாணவர்களுடைய படிப்பும் பாதிக்கப்படும். அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்கள் சிறையிலே இருக்கிறார்கள் என்ற செய்தி மாணவர்களும்கூட ஆசிரியர்களுடைய போராட்டத்திற்கு ஆதரவாகக் கிளர்ச்சியிலே ஈடுபடக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது. தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மன்றத்தினுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களை அழைத்துப் பேச வேண்டும். இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவு காண வேண்டும் என்பதற்காக இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கி. ரா. வெங்கடகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தங்களுடைய 10 அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்தி நேற்று முதல் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் பத்து அம்சக் கோரிக்கைகளில் சில கோரிக்கைகள் புதிய கோரிக்கைகளாக இருக்கும், ஆசிரியர்களுக்கும் போதுமான கோரிக்கைகளாக இருக்கலாம். ஆனால் அதிலே சில முக்கியமான கோரிக்கைகள் ஆசிரியர்களுக்கு மட்டுமே உள்ள கோரிக்கைகள். அரசால் சுலபமாக நிறைவேற்றப்படக்கூடிய கோரிக்கைகள் சில இருக்கின்றன. ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதிய விகிதங்களை அதிகரிக்க வேண்டும். மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஆராய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை வெளியிட்டு அமுல்படுத்த வேண்டும். மகளிருக்கு 3 மாத மகப்பேறு விடுப்பு தர வேண்டும். நிதிநிலைப்படி ஆசிரியர்களுக்கு மற்றவர்களுக்கு வழங்குவது போல பயணப்படி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் சாதாரணமாக ஏற்கக்கூடிய கோரிக்கைகள். இப்படிப்பட்ட கோரிக்கைகளை வைத்து போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் இப்படியே வளருமானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மாநிலம் முழுவதும் பல ஆசிரியர்களை போராட்டத்திலே ஈடுபடச் செய்து பள்ளிகளை மூடக்கூடிய சூழ்நிலை உண்டாகும். ஆகவே ஆசிரியர்களுடைய கோரிக்கைகளைப்பற்றி, ஆசிரியர்களுடைய போராட்டத்தைப்பற்றி தீர்வு காண்பதற்காக அதைப்பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. க. மீனாட்சிசுந்தரம், எம்.எல்.சி., அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்ட தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் 10 அம்சக் கோரிக்கைகளை அரசின் முன் வைத்துள்ளது. இக்கோரிக்கைகளை வற்புறுத்தி மாநிலத்திலிருந்து நேப்பியர் பாலம் தென்புறம் வரை 30—3—1981 முதல் 4—4—1981 வரை ஊர்வலமாகச் செல்ல சென்னைக் காவல் துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுள்ளதாகத் தெரிகிறது. இதன்படி 30—3—1981 காலை 10-30 மணி அளவில் 15 ஆசிரியைகள் உட்பட 125 பேர் ஊர்வலமாகச் சென்றனர். அவர்கள் நேப்பியர் பாலம் தென்புறத்தைக் கடந்து மேற்கொண்டு கோட்டையை நோக்கிச் செல்ல முயன்றபோது அவர்களில் 21 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டு காவல் துறையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறியப்படுகிறது. இவர்கள் கொடுத்துள்ள 10 அம்சக் கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. மத்திய அரசு தன் ஊழியர்கட்கு வழங்கியுள்ள இரு அகவிலைப்படி உயர்வையும் அதே தேதிகளில் இருந்து மாநில அரசு தன் ஊழியர்கட்கும் ஆசிரியர்கட்கும் வழங்கிட வேண்டும்.

2. ஒரு நபர் குழு அறிக்கையை வெளியிட வேண்டும்

3. ஓய்வு பெறும் அனைவருக்கும் ரூபாய் 10,000 வழங்க வேண்டும்.

4. அனைத்துப் பள்ளிகளையும் அரசுடைமையாக்க வேண்டும். அரசு ஊழியர்களைப் போல ஆசிரியர்கட்கும் ஈட்டிய விடுப்பு அளிக்கப்பட வேண்டும். முதல் மூன்று குழந்தைகள் வரை மூன்று மாத மகப்பேறு விடுப்பும் ஏனையோருக்கு இரண்டு மாத மகப்பேறு விடுப்பும் அளிக்க வேண்டும். 1—1—1981 முதல் நிறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு ஊக்க ஊதிய உயர்வை மீண்டும் வழங்க வேண்டும். தொடக்கக் கல்விக்கென தனி இயக்குநர் நியமனம் செய்ய வேண்டும்.

5. தற்போது தொடங்கப்பட்டுள்ள திட்டத்தை விரிவாக்கி அனைத்து இளநிலை ஆசிரியர்களையும் ஓராண்டிற்குள்ளேயே இடைநிலை ஆசிரியர்களாக மாற்ற வேண்டும்.

6. ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குத் தனியான ஊதிய விகிதம் வேண்டும். நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்கும் தனிப்படி வழங்க வேண்டும். பணி மூப்புடைய நடுநிலைப் பள்ளித் தலைமை



ஆசிரியர்கட்கு நான்கு வெயிட்டேஜுடன் ஊதியம் நிர்ணயம் செய்து தர வேண்டும்; தகுதிக்கேற்ற ஊதியம் மற்றும் விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு அளிக்க வேண்டும். அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

7. எல்லா நிலைப் பணிக் காலங்களையும் கணக்கில் கொண்டு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்க வேண்டும்.

8. அனைத்து ஆசிரியர் குழந்தைகட்கு அனைத்து மட்டத்திலும் இலவசக் கல்வியும் பயிற்சி நிலைகளிலும் வேலை வாய்ப்பிலும் முன்னுரிமையும் அளிக்க வேண்டும். காவல் துறையினருக்கு வழங்கப்படுவதைப் போல ஆசிரியர்கட்கும் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்க வேண்டும்.

10. பகுதி நேரத் தொழிலாசிரியர்களை முழு நேரத் தொழிலாசிரியர்களாக்கிட வேண்டும்; 3 ஆண்டுகள் பணி புரிந்த முழு நேரத் தொழிலாசிரியர் இடைநிலை ஆசிரியர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டும். நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முழு நேரத் தொழிலாசிரியர்க்கு உயர்நிலைப் பள்ளி தொழிலாசிரியருக்குரிய ஊதிய விகிதம் அளிக்க வேண்டும்.

இக்கோரிக்கைகளில் அகவிலைப்படி வழங்குதல், ஒரு நபர் குழு அறிக்கையை வெளியிடுதல், ஓய்வு பெறும் அனைவருக்கும் ரூபாய் 10,000 வழங்குதல், மூன்று குழந்தைகள் வரை மூன்று மாத மகப்பேறு விடுப்பு வழங்குதல், ஏனையோருக்கு இரண்டு மாத மகப்பேறு விடுப்பு வழங்குதல், நிறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு ஊக்க ஊதிய உயர்வை மீண்டும் வழங்குதல் மற்றும் மலிவு விலையில் ஆசிரியர்கட்கு உணவுப் பொருட்கள் வழங்குதல், நகர ஈட்டுப்படி, மருத்துவப் படி மற்றும் வீட்டு வாடகைப்படி வழங்குதல் போன்ற கோரிக்கைகள் ஆசிரியர்கட்கு மட்டும் அல்லாமல் மற்ற ஊழியர்களுக்கும் பொருந்துவனவாகும். வரும் ஆண்டில் அரசு அலுவலர்களுக்கு வழங்கவிருக்கும் சலுகைகள் பற்றி 1981-82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவை முன் வைத்து 21—3—1981 அன்று நிதி அமைச்சர் ஆற்றிய உரையில் விளக்கக் கூறப்பட்டுள்ளது. அதன்படி ஒரு தவணை அகவிலைப்படி 1—12—1980 முதல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு பல சலுகைகளையும் வழங்கியுள்ளது. அதன்படி சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்ததும், ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தில் வாடகைப்படி, நகர ஈட்டுப்படியையும் சேர்த்து அளிப்பதற்கும், தேர்வு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் இருப்பவர்களுக்கு தேக்க நிலை ஊதிய உயர்வு அளிப்பதற்கும், தேர்வு நிலை அளிக்கப்

பட்டதாரி சாதாரண நிலைப் பதவியில் உள்ளவர்களுக்கும் தேக்க நிலை ஊதிய உயர்வு அளிப்பதற்கும், தேர்வு நிலையில் அலுவலரின் ஊதியத்தை நிர்ணயம் செய்யும்போது ஊதிய தரங்கள் 8 முதல் 11 வரையில் உள்ளவர்களுக்கு ரூ. 15-ம் 12 முதல் 16 வரையில் உள்ளவர்களுக்கு ரூ. 10-ம் குறைந்தபட்ச தன்மை அளிக்கவும் கூடுதல் பொறுப்புகளை உடைய உயர் பதவிக்கு அலுவலர் பதவி உயர்வு பெறும்போது, கீழ் பதவியில் பெற்ற ஊதியத்தை விட 5 சத விதம் குறைந்தபட்ச தன்மை பெறும் வகையில் ஊதிய நிர்ணயம் செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு அலுவலர்களுக்கு அளிக்கவிருக்கும் இச் சலுகைகள் எல்லாம் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக அரசு அறிவித்து அவ்வாறு ஆணையிட்டுள்ளது. மற்ற தனியார் பள்ளிகளையும் அரசு ஏற்றுக்கொள்வதில் சிறுபான்மையினர் பிரச்சினை போன்ற சில சிக்கல்கள் இருப்பதால் அதை இப்போது ஏற்பதற்கு இல்லை. தமிழ்நாடு மாநில மற்றும் கல்வி ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி பெற்று இடைநிலை ஆசிரியர் தகுதி பெற வேண்டியவர்கள் ஏறத்தாழ 7,500 பேர்கள் உள்ளதால் 2 ஆண்டுகளில் அனைவர்க்கும் பயிற்சி அளிப்பது நடைமுறைக்குச் சாத்தியமானதாக அமையாது. வரும் ஆண்டில் 250 கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் பதவிகளை பகுதி நேர நிலையிலிருந்து முழு நேரப் பதவிகளாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. மேலும் வரும் ஆண்டில் தொடக்கப்பள்ளி நிலையில் 1,000 ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளியில் 200 பி.டி. தர ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளிகளுக்கு 200 பி.டி. நிலைத் தலைமை ஆசிரியர்களும், 250 உடற்பயிற்சி ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளிகளில் 500 தமிழாசிரியர்களும் உருவாக்கப்பட அரசு முடிவு செய்துள்ளது.

ஆசிரியர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது குறித்து சில விதிமுறைகளை அரசு அண்மையில் வெளியிட்டிருக்கிறது. இவ்விதிகள் முறைகள் ஆசிரியர் உரிமைகளைப் பறிக்கும் வகையில் அமைக்கப்படவில்லை.

தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தைத் தவிர பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசின் முன் வைத்துள்ளன. எல்லாக் கோரிக்கைகளையும் அரசு விரிவாக ஆராய்ந்து நிதி நிலைமைக்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியர் நலத்திற்காக பல திட்டங்களை அண்மைக்காலத்தில் நிறைவேற்றியுள்ள இந்த அரசு, நியாயமான கோரிக்கைகளை ஏற்று உரிய காலத்தில் ஆணை வழங்கும் என நம்பலாம்.





இப்போது இந்தப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் மற்றவர்கள் ஆனாலும் இந்த ஆண்டு அவர்களெல்லாம் சந்தித்து அவர்களுடைய குறைகளைப் பற்றிப் பேசுவதற்கு வேண்டிய வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். செயலாளர் அவர்களைக் கண்டு அந்த அடிப்படையிலே பல ஆசிரியர் சங்கத்தினர்கள் அவர்களிடம் பேசியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் வாய்ப்பு பெற்று பேசியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளைப் பற்றியெல்லாம் அந்தந்த சங்கங்களிடமிருந்து விளக்கம் பெறுவதற்காகத்தான் இந்த வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம். இங்கே உள்ள பிரச்சினைகள் எல்லாம் இங்கே உள்ள அமைச்சர்களுக்கு மட்டுமல்ல. இங்கேயிருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே விளக்கமாகச் சொல்லப்பட்டு வருகின்ற கோரிக்கைகள்தான். அதுமட்டுமல்ல நாம் இந்த சபையிலே விவாதிக்கின்ற ஒன்றுதான். அதுமட்டுமல்ல அவையிலே பேசப்படுகின்ற பிரச்சினைகள்தான். அதுமட்டுமல்ல இங்கே விளக்கம் தந்து கொண்டிருக்கின்ற பிரச்சினைகளாகத்தான் இருக்கின்றனவே தவிர வேறல்ல. இன்று புதிதாக விளக்கம் பெறவேண்டிய அளவுக்கு புதியதான பிரச்சினையாக எதுவும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவைகளை பற்றிப் பேசவில்லை என்று சொல்ல முடியாது. பேசப்பட்டிருக்கிறது. விளக்கம் தரவில்லை என்று சொல்ல முடியாது. விளக்கம் தரப்பட்டிருக்கிறது. பொருளாதார அளவுக்குத் தாங்கியிருக்கிறது. முடிந்த அளவுக்குச் செய்வதற்கான முயற்சியையும் அரசு எடுத்திருக்கிறது என்பது சில அறிவிப்புகளிலேயிருந்து தெரியும். அந்த அடிப்படையிலேதான் பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறோம். குறிப்பாக இடைநிலை ஆசிரியர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் இதற்கு முன்னாலே நான் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொன்னேன். 7,500 என்ற அளவிலே பார்த்தால் ஆண்டுக்கு 5 ஆயிரம் தான் வருகிறது. ஆனாலே அந்த பள்ளிகளையெல்லாம் பார்க்கின்ற நடத்தும் அளவுக்கு இருக்கிறது. அதை விரைவில் பரிசீலித்து அடுத்த ஆண்டிலே முடிவெடுக்கலாம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர்கள் சங்கத்தைப் பொறுத்த மட்டில் ஆசிரியர்கள் சங்கம் வைப்பதற்கு அவர்கள் உரிமை படைத்தவர்கள். அதை நடத்துவதற்கு உரிமை படைத்தவர்கள். அந்த உரிமைகளை அரசு ஏற்றுக்கொண்டிருப்பதன் விளைவாகத்தான் சில விதிமுறைகள் போட்டோம். நாம் அவர்களுக்கு அந்த அதிகாரங்களைத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம்.

இப்போது இருக்கின்ற பிரச்சினை, ஆசிரியர் அல்லாதார் பொறுப்பில் இருக்க வேண்டுமா என்பதுதான். ஒருவருக்காக இந்த விதியைத் தளர்த்தவேண்டிய அவசியம் இல்லை. அப்படி வெளியிலே இருக்கின்ற ஒருவருக்காக நாம் விதியைத் தளர்த்துகின்றபோது மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் நல்லவராக இருக்கலாம். ஆனால் அந்த வழியைப் பின் பற்றி விரும்பத்தகாத சக்திகள் உள்ளே புகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுடைய பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்காகத்தான் சங்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு ஒன்றுக்கும் இல்லை. ஆனால் வெளியிலேயிருந்து வருகின்ற நபர்கள் ஆசிரியர்களுக்காகத்தான் பேச வேண்டும், ஆசிரியர்கள் நன்மைக்காகத்தான் சங்கத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவர்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் வரும்போது, அவர்கள் ஆசிரியர்கள் சங்கங்களிலே இருந்துகொண்டு ஆசிரியர்களுடைய நன்மைக்குப் புறம்பான செயல்களிலே ஈடுபடுகின்ற நிலைமைகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கும். அந்த அடிப்படையில்தான் அரசாங்க ஊழியர்களுக்கு என்ன கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறோமோ, அதே கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேதான் இதற்கும் வைத்திருக்கிறோம். இதை ஏற்றுக்கொள்வதுதான் ஆசிரியர் களுடைய உரிமைகளைக் காக்கின்ற செயலாக இருக்கமுடியுமே தவிர, அந்த விதிமுறைகளுக்கு மாறாகப் பேசுகிறபோது, ஆசிரியர்கள் உரிமைகளுக்குப் புறம்பாகப் பேசுகின்ற வாய்ப்பைத் தருகின்ற அளவில் அமையும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசு அனுதாபத்தோடு கோரிக்கைகளைப் பரிசீலித்து பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எடுக்கும். ஆகவே யாரும் போராட்டம் நடத்தித்தான் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்ற அவசியத்தில் இந்த அரசு யாரையும் வைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு இடமில்லை என்பதைச் சொல்லிக்கொண்டு, இந்தப் பிரச்சினைபற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி, அனுமதி மறுக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, செய்திகளை எப்படித் அந்த பத்திரிகைகளை பேரவைத் தலைவராகிய நாங்கள் பின்பற்றி வருகிறீர்கள். யார் யார் ஒத்திவைப்புத்



தீர்மானத்திற்கு முன் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்களோ அவர்களில் சில ருடைய பெயர்கள் விடுபட்டு விவரங்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லா மல் இருக்கின்றது. அந்த அளவில் யார் யார் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கி றார்களோ, அவர்களுடைய பெயர்கள் எல்லாம் பத்திரிகையிலே வருவது குறித்து ஓர் அறிவிப்பை மாண்புமிகு தலைவர் அவர்கள் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகைகளில் போட வேண்டுமென்று தலைவர் அவர்கள் உத்தரவிடமுடியாது. தீர்மானம் முன்மொழிந்தவர்கள், கொடுத்தவர்கள் இங்கே பேசுவார்கள். உறுப்பினர் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களைப் பேச அனுமதித்தேன். இங்கே "ரெக்கார்ட்" ஆகிறது. அவர்கள் பேசுவதைப் பத்திரிகைக்காரர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தீர்மானம் கொடுத்தவர்கள் பெயர்களைப் படிக்கிறேன். பத்திரிகைக்காரர்கள் போடும்போது ஒன்றிரண்டை விட்டுவிடுகிறார்கள் என்றால், அதற்கு நான் எப்படிப் பொறுப்பு ஏற்க முடியும்?

(முற்பகல் 10-10)

**திரு. பா. ரா. தாமஸ் :** பேரவையிலே மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் ஓர் அறிவிப்பு கொடுக்கிறார்கள். நாங்களும் அது போன்று ஓர் அறிவிப்பு கொடுத்தால், பத்திரிகையாளர்கள் அதைப் பெற்று, பத்திரிகையில் போட வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். நான் சொல்கிறேன். இதையே அறிவிப்பாகப் பயன்படுத்தலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, இன்றுகாலை ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்து நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்தோம். ஆனால் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதி யாகச் சொல்ல விரும்புகிறேன். நிராகரித்ததைப் பற்றி அவையிலே சொல்லக் கூடாது. எந்தப் பொருளாக இருந்தாலும், நிராகரித்ததைப்பற்றி அவையிலே சொல்லக்கூடாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** குறிப்பிட்ட பிரச்சினை பேரவையிலே விவாதிக்கப்பட்டது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையில் விவாதித்தாலும், இங்கே சொல்லக்கூடாது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மிக முக்கியமான பிரச்சினை அந்தப் பிரச்சினையை இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டாம். ஓர் அறிக்கை தந்தால் நல்லது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் என்ன சொன்னபோதிலும், நிராகரித்த பொருளைப் பற்றியே மீண்டும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகிறார்கள். அரசாங்கத்திடமிருந்து அறிக்கை கேட்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பேரவையிலே விவாதிக்கப்பட்டதால் தான் சொல்லுகிறேன். அதைப் பற்றி அறிக்கையை அமைச்சரவர்கள் தந்தால் போதும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைப்பற்றி இங்கே தகவல் கொடுக்க முடியாது. பிரச்சினை என் அறையோடு முடிந்துவிட்டது. அதை மீண்டும் சொல்லி, அரசாங்கம் பதில் அளிக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி ?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. தங்கள் தீர்ப்பிற்குக் கட்டுப்படுகிறேன். இது மிக முக்கிய மான பிரச்சினையாக இருப்பதால் தாங்களே அமைச்சரவர்களிடம் சொல்லி, இது குறித்து அவைக்கு அறிக்கை கொடுத்தால் நல்லது. பேரவையிலே இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரச்சினையே எழவில்லை. அப்படி யிருக்கும்போது அவையிலே அறிக்கை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். தயவுசெய்து உட்கார வேண்டும்.

### 3. கவன ஈர்ப்பு.

(1) கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையா உணவுப் பண்டங்களை ஒதுக்கீடு செய்வதில் தெளிவான கொள்கையின்மை காரணமாக, தமிழ் நாட்டில் இப்பண்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக் குறை குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்—

" தமிழ்நாட்டுக்கு கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையா உணவுப் பண்டங்களை ஒதுக்கீடு செய்வதில் தெளிவான கொள்கையின்மை காரணமாக தமிழ் நாட்டில் இப் பண்டங்களுக்கான பற்றாக் குறை ஏற்பட்டு, விலைவாசிகள் ஏறி வருவதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அவதிகள் குறித்து ".





மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, விரிவான அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, அத்தியாவசியப் பண்டங்களை ஒதுக்கீடு செய்வதற்கான அதிகாரம் மத்திய அரசிடம் இருக் கிறது. மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் அளித்துள்ள அறிக்கையிலே, மத்திய அரசு தமிழ் நாட்டுக்கு அத்தியாவசியப் பண்டங்களை—கோதுமை, சர்க்கரை, எண்ணெய் போன்றவற்றை—ஒதுக்கீடு செய்யும்போது ஒவ்வொரு மாதமும் சீரான கொள்கையைப் பின்பற்றுவதில்லை என்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திற்குத் தேவைப்படும் கோதுமையில் 40 சதவிகிதம்தான் மத்திய அரசு ஒதுக்கீடு செய்வதாகத் தெரிய வருகின்றது. ஆக இப்படி ஒவ்வொரு மாதமும் ஒதுக்கீடு மாறுபட்டு அமைவதால், தேவைக்குக் குறைவாக இருப்பதால், விலைவாசிகள் ஏறுகின்றன. உற்பத்தி குறைவாகி, விலைவாசிகள் ஏறினால், அதை ஏற்றுக்கொள்ளலாம். உற்பத்தி அதிகமாக இருந்து, பொருள்களும் அதிகமாக இருந்து, சீரான ஒதுக்கீடு இல்லாததன் காரணமாக செயற்கையாக விலைவாசிகள் ஏறுவதற்கு மத்திய அரசு காரணமாக இருக்கிறதென்ற கருத்து தெளிவாக எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறதா ? அதற்கு மத்திய அரசிடமிருந்து என்ன பதில் வந்திருக்கிற தென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அறிக்கையிலேயே அது பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். இது பற்றிய நிலைமைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய அரசினுடைய வேளாண்மைத் துறைக்கு அவ்வப்போது எழுதி வருகிறார்கள். அவ்வப்போது வேளாண்மைத் துறை அமைச்சரவர்களிடத்திலும் பேசப்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள செயலாளரிடத்திலும் பேசப்பட்டிருக்கிறது. மாதந்தோறும் 65,000 டன் கோதுமையை மைய அரசு ஒதுக்கீடு செய்து வந்தது. இப்போது 33,000, 30,000, 31,000 டன் என்ற அளவிற்குத்தான் தருகிறார்கள். குறைந்த அளவு 37,000 டன் கொடுத்தால் ஓரளவிற்குச் சமாளிக்க முடியுமென்று மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். மீண்டும் 31,000 டன்தான் கொடுக்கிறார் கள். எனவே வற்புறுத்துவதிலோ, எடுத்துச் சொல்வதிலோ இந்த அரசுக்கு

@ 363–366ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது

எந்தத் தடங்கலும் இல்லை. தொடர்ந்து அரசு அதைச் செய்து வருகிறது. அவர்களுக்குப் பல்வேறு சங்கடங்கள், வேறு பல நிலைமைகள் இருப்பதால், ஒதுக்கீட்டிலே மத்திய அரசு அந்த வகையான தன்மைகளை மேற்கொண்டு வருகிறது. நம்முடைய தேவையைத் தொடர்ந்து வற்புறுத்தும் நிலைமையைத்தான் அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையிலே, சர்க்கரையைப் பொறுத்தவரையில் நகர்ப்புறங்களில் வாழ்பவர்களுக்கு ஒருவிதமாகவும், கிராமப்புறங்களில் வாழ்பவர்களுக்கு ஒருவிதமாகவும், விநியோகம் செய்யும் வகையிலே கொள்கை அமைந்திருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். நகர்ப் புறங்களிலே ஆயிரம் ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ சர்க்கரை மாதமொன்றுக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் கிராமப்புறத்தில் 1,000 ரூபாய்க்கு மேலே வருமானம் இருந்தால் 3 கிலோ என்று சொல்லி, நகர மக்களுக்கும் கிராம மக்களுக்குமிடையே வேறுபாட்டைத் தோற்றுவிக்கும் நிலைமை இருக்கிறது. அந்த வேறுபாட்டைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து பாமோலின் எண்ணெய் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. அதை வாங்கி, அதிகப்படியான விலைக்கு விற்பதாகத் தெரிகிறது. மேலும் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் போன்றவற்றோடு கலப்படம் செய்து விற்பதாகவும் புகார்கள் வருகின்றன. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முன்பு ஒரு முறை இருந்து வந்தது. சென்னை போன்ற நகரங்களில், குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 கிலோ சர்க்கரை தரவேண்டும், மற்றைய நகரப் பகுதிகளில் 3 கிலோ சர்க்கரை தரவேண்டும், கிராமப் புறங்களில் 1 கிலோ சர்க்கரை தரவேண்டும் சொல்லப்பட்டது. வேறு பல மாநிலங்களில், பிற இடங்களிலுள்ளதுபோல சர்க்கரை விநியோகத்தைச் சீர்படுத்துவதற்கு, நகரத்தில் 1,000 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ என்றும், 500 ரூபாயிலிருந்து 999 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு, 3 கிலோ என்றும், 499 ரூபாய்வரை வருமானம் உள்ளவர்களுக்கு 2 கிலோ என்றும் ஆக்கினோம். முன்பு தேவையில்லாதவர்கள்கூட 5 கிலோ சர்க்கரையை வாங்கிக்கொண்டு, கள்ளச் சந்தையில் விற்கும் சூழ்நிலை வந்தது. ஓட்டல் முதலாளிகள் கார்டுகளை வாங்கி வைத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு கார்டிற்கு மேலே, பல



கார்டுகளை யாராவது எடுத்து வந்தால், கார்டுகளைப் பறித்துக்கொள்ளலாமென்று ஆணையிட்டிருக்கிறோம். கிராமப்புறங்களில் 500 ரூபாய் முதல் 999 ரூபாய்வரை வருமானம் உடையவர்கள் இருப்பார்கள், ஆயிரத்திற்கு மேலே வருமானம் உள்ளவர்களும் இருப்பார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு 1 கிலோ சர்க்கரைதான் கொடுக்கப்பட்டது. ஆனால் நகர்ப் புறங்களில் 5 கிலோ என்று இருந்தது. மத்திய அரசு மாதம் ஒன்றுக்குத் தருவது 19,500 டன்தான். அதைத்தான் பகிர்ந்து தர வேண்டும். அந்த முறையில் முன்பு 19,500 டன்னைத்தான் பகிர்ந்து தந்தோம். இந்த முறையிலும் 19,500 டன்னைத்தான் பகிர்ந்து தருகிறோம். இதைவிட வேறு ஒரு 'பார்முலா' இருந்தால் அதைப் பரிந்துரை செய்தால், அதையும் அரசு ஆராயும். 19,500 டன் என்பதை 25,000, 30,000 டன் என்று உயர்த்த வேண்டுமென்று கேட்கிறோம். தொடர்ந்து 19,500 டன்தான் தருகிறார்கள். ஆகவே, மத்திய அரசு அதிகமாக உயர்த்துகிற நிலை ஏற்பட்டால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல கூடுதலாகச் சர்க்கரை கொடுக்கும் காரியத்தைச் செய்யலாம்.

பாமோலின் எண்ணெய் 6 ரூபாய் அளவில் இருப்பதாலும், மற்ற எண்ணெய்களின் விலை உயர்ந்துள்ளதாலும், அதில் கலப்படம் நடப்பதாகச் செய்திகள் வந்தன. அதைக் கண்டுபிடித்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது பாமோலின் எண்ணெய் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும், நியாய விலைக் கடைகள் மூலமாகவும், கூட்டுறவு அங்காடிகள் மூலமாகவும் விநியோகிக்கப்படுகிறது. வாங்குபவர்கள் தான் பயன்படுத்த வேண்டுமென்று கருதி, ஒரு அட்டைக்கு 2 கிலோவிற்கு மேல் தரக்கூடாதென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் வாங்கி, விற்கும் போது, மற்றவர்களும் வாங்குகிறார்களென்றால், அந்த இடங்களுக்குப் போய் அதைக் கட்டுப்படுத்துவதென்பது இந்தச் சமுதாயத்தில் எப்படி இயலுமென்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதைக் கட்டுப்படுத்துவதற்குத்தான் ஒரு கார்டுக்கு இரண்டு கிலோ என்று வரையறுத்து இருக்கிறோம். இதை இன்னும் சீர்படுத்த வழி முறைகள் சொன்னால், அதையும் ஆராயலாம்.

(2) வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தின்கீழ் இயங்கும் அரசு மானியம் பெறும் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்யாதது குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—

"வேலை வாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் அரசு மானியம் பெறும் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்யாமையும், அதன் விளைவாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளும் ".

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி** மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கை@ அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஏறத்தாழ 34 மாதங்களாகிறது மூன்றாம் ஊதியக் குழு சிபாரிசு செய்து. இவ்வளவு காலமாகியும், இந்த ஆசிரியர்கள், பணியாளர்களுக்கு மூன்றாம் ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவில்லை. ஆனால் இரண்டாம் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டன. அந்த முறையில், இப்போது நிதித் துறையிடம் ஒப்புதல் வேண்டி, கேட்டிருக்கிறார்கள். எவ்வளவு விரைவில் அந்த ஒப்புதலைப் பெற்று, அந்தப் பணியாளர்களுக்கு நன்மைகளை அளிப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதுபோன்று, தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இருக்கின்ற இடர்பாடுகள் குறித்தும், அவர்கள் கோரிக்கைகளிலே இருக்கின்ற நியாயங்கள் குறித்தும் நிச்சயமாக இந்த அரசு கவனத்தில் கொண்டு, எவ்வளவு விரைவிலே அவர்களுக்கு அளிக்க முடியுமோ, அவ்வளவு விரைவிலே அளிக்குமென்று உறுதி கூறுகிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. பா. ரா. தாமஸ் :** அமைச்சரவர்கள் அறிவிப்புக்கு நன்றி. அவ்வாறு அறிவிக்கும்போது 1—4—1978 க்குப் பிறகு அரசாங்க ஊழியர்கள் ஏறத்தாழ இதுவரை 5, 6 அகவிலைப் படிகள் பெற்றிருக்கிறார்கள். இந்த அகவிலைப் படிகள் இவர்களுக்கும் வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** அரசு அது குறித்துப் பரிசீலனை செய்யும்.

---

@ 366-367ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது



4. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை இங்கே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே வருவாய் 1,128.27 கோடி ரூபாய் என்றும், செலவு 1,137.84 கோடி ரூபாய் என்றும், பற்றாக்குறை 9.57 கோடி ரூபாய் என்றும், நிகரப் பற்றாக்குறை 111.49 கோடி ரூபாய் என்றும், ஆண்டு இறுதிக் கையிருப்பு மைனஸ் 122.96 கோடி ரூபாய் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே புது வரிகள் மூலமாக 20 கோடி ரூபாய் எதிர்பார்ப்பதாகச் சொல்லி, அதே நேரத்தில் மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலம் என்ன வருவாய் வரும் என்பதைக் குறிப்பிடாமல் இருக்கிறார்கள். ஆனால் எனக்கு இருக்கின்ற ஐயப்பாடு எல்லாம் அநியாயமான, அக்கிரமமான, செயல்கள் எங்கு நடைபெற்றாலும் அதை உடனே கண்டிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர் என்று இன்னமும் நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே நிதியமைச்சர் என்கிற பொறுப்பிலே இருக்கும்போது, அதே நேரத்தில் சிறந்த நிர்வாகத் திறமைக்குச் சின்னமாக நடந்துகொள்ளக்கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரியும் இந்தத் துறைக்குச் செயலாளராக இருக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு நிதி நிலை அறிக்கை வந்திருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே என்னால் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி உறுப்பினர்கள் ஏதாவது சொன்னால் கூட, உடனே கட்சிக் கண்ணோட்டம் என்று கூறிவிடக் கூடும். இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி பைனான்சியல் எக்ஸ்பிரஸ் மார்ச் 25 ஆம் தேதி தமிழ் நாடு பட்ஜெட் என்று ஒரு தலையங்கம் தீட்டியிருந்தது. அதிலே அவர்கள்,

"In his Budget for 1980-81, the Finance Minister had estimated Revenue receipts at Rs. 982.66 crores. But, thanks to the prevailing buoyancy in revenue collection, the Revised Estimates showed the receipts to be Rs. 1,173.73 crores. Despite this and despite the continued buoyancy imparted to revenue by inflation, Mr. Nedunchezhian has estimated that Revenue receipts for 1981-82 will be no more than Rs. 1128.27 crores, that is Rs. 45 crores less than in 1980-81. This is unlikely and there is every reason to except in view of the strong signs of industrial recovery and continuing inflation, that the actual receipts will rise by another Rs. 150 crores or thereabout." என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருபது கோடி ரூபாய்தான் புது வரிகள் மூலம் வரும் என்று அறிவித்திருக்கிறார்கள். மதுவிலக்கு தளர்த்தப்படுவதன் மூலம் எவ்வளவு எதிர்பார்க்கிறார்கள் என்ற புள்ளி விவரம் தரப்படவில்லை. அது எந்தக் காரணத்தாலே தரப்படவில்லை என்று தெரியவில்லை. ஆனால் தளர்த்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதே சமயத்தில் கடந்த ஆண்டு வருமானத்தை விட இந்த ஆண்டு வருமானம் 45 கோடி ரூபாய் அளவிற்குக் குறையும் என்று எப்படி கணக்கிட்டிருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், கடந்த 35 ஆண்டு கால வரலாற்றை எடுத்துக்கொண்டு பார்த்தால், வருமானம் குறைந்துகொண்டே வந்ததாக எந்த பட்ஜெட்டிலும் கணக்கு இல்லை. ஆனால் புரட்சித் தலைவர் பட்ஜெட்டில் போன ஆண்டு வருவாயை விட இந்த ஆண்டு குறையும் என்று சொல்லியிருப்பது விந்தை. நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். 1,125 கோடி ரூபாய்தான் வருவாய் என்று என்னதான் கணக்குச் சொன்னாலும், குறைந்தது 1,300 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வர இருக்கிறது. அதற்குரிய வகையில் வரிகளையும் விதித்திருக்கிறார்கள். மதுவிலக்கையும் தளர்த்தியிருக்கிறார்கள். சாராயக் கடைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப் போகிறார்கள். பிராந்தி போன்ற கடைகள் மூலம் ஏராளமான வருவாய் வரும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் பார்க்கும்போது, இவ்வளவு வருமானம் வரும் என்று தெரிந்தும், வேண்டுமென்றே ஏன் வருமானத்தைக் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள்? நான் சொல்கிறேன். இப்படிக் காட்டாமல், அதிகப்படியாகக் காட்டியிருந்தால், ஒருவேளை தமிழ்நாட்டிலுள்ள அரசாங்க ஊழியர்கள் தங்களுக்குச் சலுகைகள் வேண்டுமென்று கேட்பார்கள் என்பதற்காகவோ அல்லது எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இந்த இந்த வரிகளை ரத்து செய்யுங்கள் என்று சொல்லுவார்கள் என்பதற்காகவோ





இப்படிப்பட்ட முரண்பாடான, அறிக்கையைத் தந்திருக்கிறார்கள் என்று என்னால் நம்ப முடிகிறது. நேற்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஒன்றைச் சொன்னார்கள். பெட்ரோல், டீசலுக்கு அதன் மீதான வரியையும், நகர்ப்புறத்தைச் சுற்றியிருக்கிற இடங்களில் விற்பனை வரி மீது இருக்கிற மேல் வரியையும் ரத்து செய்து 6 கோடி ரூபாய்க்குச் சலுகை அளித்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் எதற்காக, எதை எதைக் குறைக்க வேண்டுமோ அதைக் குறைக்காமல், எதை எதைக் குறைக்க வேண்டுமென்று பரிசீலிக்க வேண்டுமோ அதைப் பற்றிப் பரிசீலிக்காமல், பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் சர்க்குலேஷன் 15 ஆயிரத்திற்கும் கீழே இருந்தால், 8 சதவிகிதத்தி லிருந்து 4 சதவிகிதமாக வரியைக் குறைத்திருப்பதாகச் சொல்லியிருக்கி றார்கள். ஆனால் எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு அது பொருந்தும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆளும் கட்சியைச் சார்ந்த பத்திரிகைகளாக இருந்தாலும் கூட, விளம்பரத் திற்காக அச்சிடும்போது, 25 ஆயிரத்திற்கு மேல் என்றுதான் சொல்லு வார்கள். ஆகவே யாருக்கும் அந்தச் சலுகை கிடைக்காது. இந்நிலையில் பத்திரிகைகளுக்கு வரிச் சலுகை என்று அறிவித்திருப்பது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வருவாய் 1,125 கோடி ரூபாய் என்கிறார்கள். பற்றாக்குறை 117 கோடி ரூபாய் என்கிறார்கள். இறுதிப் பற்றாக்குறை 122 கோடி ரூபாய் என்கிறார்கள். நான் சொல்கிறேன், திட்டமிட்டு வருமானத்தைக் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள் என்று. ஒதுக்கிய பணத்தைச் செலவு செய்து விட்டோம், இன்னும் இவ்வளவு பணம் தேவை என்று எடுத்துச் சொல்ல இந்த அரசால் முடியுமா? போடுகின்ற திட்டங்களையெல்லாம் இந்த அரசு செயல்படுத்தவில்லை. எத்தனையோ மக்களை ஏமாற்ற ஆயிரம் கோடி ரூபாய்க்கான திட்டங்கள் என்று எல்லாம் அறிவிக் கிறது இந்த அரசு. ஆனால் அறிவிக்கப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அதற்கான ஆதாரங்கள் என்னிடம் நிறைய இருக்கின்றன. நான் தொகுத்து கண்டுபிடித்து இங்கே சொன்னால் கூட நம்ப மாட்டார்கள்.

Report of the Comptroller and Auditor—General of India. 1978-79 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற சில புள்ளிவிவரங்களை நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே 32 ஆம் பக்கத்தில்

"District Administration—Food for work programme implemented with CARE assistance."

என்கிற தலைப்பில் 22.50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்த ஆண்டில் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள் என்று கேட்டால், ஒரு பைசா கூட செலவு செய்யவில்லை. சேவிங்ஸ் என்கிற தலைப்பில் அதிலே ஒரு கருத்து குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"The saving is attributed to non-receipt of the entire quanity of wheat during the year as anticipated"

இதுதான் அதற்காகச் சொல்லப்பட்டிருக்கின்ற காரணம். அதைப்போலவே மெடிக்கல் என்ற தலைப்பில்

"Upgrading of Madras Medical College as Institute of Medicine and Community Health' -க்கு, 16 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதிலேயும் ஒரு பைசாகூடச் செலவு செய்யவில்லை. ரூ. 16 லட்சமும் அப்படியே இருக்கிறது. அதற்கும்

"The saving was due to non-sanction of the Scheme. Reasons for non-sanction have not been communicated"

என்று காரணம் சொல்கிறார்கள். ஸ்கீம் சாங்ஷன் செய்யவில்லை என்று காரணம் சொல்கிறார்கள். 1979 டிசம்பரில்கூட இதற்குக் காரணம் சொல்ல முடியவில்லையே. திட்டங்கள் போடுகிறோம், பணத்தை ஒதுக்கியிருப்பதாக அறிவிக்கிறோம் நாட்டு மக்களிடத்தில், ஆனால் அவற்றை நிறைவேற்ற வேண்டாமா? அதுபோல் சென்னைக்கு கிருஷ்ணா ஆற்றிலிருந்தும், பெண்ணாற்றிலிருந்தும் தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். சென்னையில் வசிப்பவர்கள் எல்லாம் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதிலும் ஒரு பைசா கூட செலவு செய்யவில்லை. 100 சத விகிதம் சேவிங் என்று சொல்லியிருக்கிறார்கள்.





"Investigation of Krishna-Pennar Water supply to Madras City" அதற்குக் காரணம் சொல்லவில்லை.

"Reasons for the savings have not been communcated.".

அடுத்து, ஹவுசிங் என்கிற தலைப்பில் 1 கோடி ரூபாய்க்கான ஒரு திட்டம். அரசாங்கத்திலே இப்போதெல்லாம் வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்படும் தொகை குறைந்துவிட்டது.

"Tamil Nadu Slum Clearance Board for environmental improvements in slums"

என்று சொல்லி ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் ஒரு கோடி ரூபாயையும் மிச்சப்படுத்தியிருக்கிறார்கள்.

"The reasons for the saving have not been communicated"

அதற்குக் காரணங்கள் சொல்லப்படவில்லை. இப்படி எந்தத் திட்டங்கள் போட்டாலும், அந்தத் திட்டங்கள் எல்லாம் இந்த அரசால் நிறைவேற்றப்படுவதில்லை. அப்படியே தொகையை மிச்சப்படுத்தி விடுகிறார்கள். அரசினுடைய கஜானாவிலே பணமில்லாததால், இப்படி மிச்சப்படுத்துவதாகக் கூறி ஏமாற்றுகிற செயல்கள் இவை. செலவழிக்கப்படவில்லை, மிச்சம் என்கிற பெயரில் இப்படிப்பட்ட அறிக்கையைக் கொடுத்து ஏமாற்றுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அதுமட்டுமல்ல, அப்ராப்ரியேஷன் அக்கவுன்ட்ஸ். இவ்வளவையும் மீறி தவிர்க்க முடியாது என்ற அளவிலே சில செலவினங்கள் செய்தேயாக வேண்டும். உதாரணத்திற்கு கல்வித் துறை, மருத்துவத் துறை, போலீஸ் துறை போன்ற துறைகளிலே ஒதுக்கப்படும் பணம் கூட முழுமையாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. போலீசுக்கு 35 கோடியே 29 லட்சம் ரூபாய் பணம் வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால், 33 கோடி ரூபாய்தான் செலவழித்திருக்கிறார்கள். 1½ கோடி ரூபாய் மிச்சம் இருக்கிறது. ஏன்? போலீசுக்குப் பணம் தேவையில்லையா? நாட்டிலே சட்டம்—அமைதி—ஒழுங்கு காக்கப்படுகிறதா? நாட்டிலே அத்தனை பேரும் பாதுகாப்பாக அவரவர்கள் வீட்டிலே இருக்க முடிகிறதா? நிம்மதியாக இருக்கிறார்களா? போலீஸ் துறைக்கு ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்க முடியவில்லையே! மருத்துவத்-துறையிலே 1.66 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டால், இன்றைய

தினம் விவசாய உற்பத்தி இல்லை என்று விவசாயிகள் எல்லாம் மிகவும் வேதனையோடு இருக்கும்போது, அதற்கென்று ஒதுக்கப்பட்ட பணத்திலே 92 லட்சம் செலவழிக்கப்படவில்லை. Capital outlay on Agriculture என்ற தலைப்பிலே 11 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. Capital outlay on Irrgation என்ற தலைப்பிலே 10 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இப்படி பாக கோடிக்கணக்கிலே பணம் ஒதுக்கீடு செய்தும், அது செலவழிக்கப்படவில்லை என்றால் அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தன்னுடைய உரையிலே ஒரு அருமையான கருத்தைச் சொன்னார்கள். இந்த அரசாங்கத்திலே இருக்கின்ற கார்ப்பரேஷன்கள் எல்லாம் எப்படிச் செயல்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நானும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நிர்வாகத்தைக் கொஞ்சம் எளிமையாக்குவதற்கும், வேலைகள் வேகமாக நடைபெறுவதற்கும் சில வாரியங்களை உருவாக்கினோம். இந்த ஆட்சியிலே அந்த வாரியங்கள் திறமையாகச் செயல்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு நான் ஒருசில அறிக்கைகளைச் சொல்கிறேன்.

Tamil Nadu Sugar-cane Farm Corporation Limited—Report of the Comptroller and Auditor-General of India.

1978-79 ஆம் ஆண்டு அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

The Company has been incurring losses. The cumulative loss up to 1978-79 amounted to Rs. 50.20 lakhs or 201 per cent of the paid up capital.

மூலதனத்தில் 201 சதவீதம் இதிலே இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால், எவ்வளவுக்கு சீரழிந்திருக்கின்றது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அடுத்து,

Tamil Nadu Salt Corporation. The Company has been incurring loss since its intion and the accmulated loss to 31-12-1978 works out to Rs. 18.08 lakhs.





40 சதவீதம் மூலதனத்திலே நஷ்டமாக இந்தத் துறை இயங்கிக்கொண்டிருக்கிறது. (Tamil Nadu State Farms Corporation) -ஐ எடுத்துக் கொண்டால், அதுவும் இதேமாதிரிதான்.

Tamil Nadu Goods Transport Corporation: The Company has been incurring losses. Th' cumulative loss up to the end of 1976 amounted to Rs. 68.92 lakhs as against the Company's paid-up capital of Rs. 31.66 lakhs.

ஆகவே, நிர்வாகத்தை எளிமையாகவும், திறமையாகவும் நடத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே உருவாக்கப்பட்ட கார்ப்பரேஷன்கள் எல்லாம், அவற்றுக்கென்று எவ்வளவு மூலதனம் போடப்பட்டதோ, அதில் 100 சதவீதம், 150 சதவீதம், 200 சதவீதம் என்ற அளவிற்கு இழப்பிலே இன்றையதினம் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று அறிக்கை கொடுத்ததற்குப் பிறகு, அந்த இழப்பைச் சரிக்கட்ட இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அந்த இழப்புக்குரிய காரணம் என்ன? அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்கள் யார் யார் என்று பட்டியல் போட்டு காட்டப்பட்டதா? யார் யாரையோ எங்கேயோ பட்டியல் போட்டுக் காட்டுவோம், விளம்பரப்படுத்துவோம் என்று சொல்கிறார்கள், ஆனால் லட்சக்கணக்கிலே, கோடிக்கணக்கிலே அரசாங்கப் பணம் இழப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்று பட்டியல் போட்டு ஏன் காட்டக்கூடாது? இதையெல்லாம் இந்த அரசாங்கம் காட்டாமல் மூடி மறைத்துவிட்டு 'நாங்கள் பட்ஜெட் போடுகிறோம்; 1125 கோடி ரூபாய்—பாருங்கள் எவ்வளவு புரட்சி' என்றெல்லாம் பெருமை பேசிக்கொண்டிருப்பதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் வீட்டுவசதியைப்பற்றி, உண்ண உணவு, இருக்க இடம் என்றெல்லாம் பேசுகிறோமே தவிர, அதற்காக இந்தத் துறைக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். 1975-76-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது, அப்போது இருந்த வருமானம் 600 கோடி ரூபாய். அதிலே அந்தத் துறைக்காக ஒதுக்கீடு செய்த பணம் 6 கோடியே 2 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய். இன்றையதினம் இரண்டு மடங்கு வருவாய் அதிகமாகியிருக்கிறது. இரண்டு மடங்கு வருவாய் அதிகமாகியிருக்கும் இன்றையதினம் அதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் எவ்வளவு என்று சொன்னால், 1.74 கோடி ரூபாய். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும்

மாபெரும் கடமையாற்றுவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இவைகளெல்லாம் சரிதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியைப்பற்றி மாண்புமிகு நாவலர் அவர்கள் அவர்களுடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இதை நாவலர் எழுதியிருப்பார் என்று நான் நம்பமாட்டேன். குறிப்பிட்ட காலத்திலே வறட்சி வந்தபோது, மாண்புமிகு நாவலர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தபோது, நான் சார்ந்திருக்கிற ஆற்காடு தொகுதியிலே வறட்சிப் பகுதிகளைப் பார்த்துவிட்டு, இரவு தங்கும் இடத்திற்கு வந்தபோது, நூற்றுக்கணக்கான மக்கள் அந்த வேலைகளைப் பற்றிய கருத்துக்களைச் சொன்னபோது, "இதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கும்" என்று நாவலர் அவர்கள் சொன்னது, நடவடிக்கைகளை எல்லாம் எடுத்தது, ஆகிய நிலைமைகளையெல்லாம் மறந்திருக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இன்றைக்கு ஆற்காட்டிலே வறட்சி என்று சொன்னால், வரலாறு காணாத வறட்சி இருக்கிறது. நான் சார்ந்திருக்கிற பகுதியிலே குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் கிடைக்கவில்லை. மக்கள் தங்களிடம் இருக்கும் மாடுகளையெல்லாம் விற்கிறார்கள். மற்ற விவசாயப் பொருட்களையெல்லாம் கூட விற்றுவிட்டு பிழைப்பு தேடி பங்களூர் நோக்கி பயணம் செய்கிறார்கள். இந்த நாட்டிலே பிழைக்க வழி இல்லை. அரசாங்கம் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இருந்து சாவதைவிட எங்கேயாவது போய் விடுவதுதான் மேல் என்று மக்கள் போகிறார்கள். நான் கேட்கிறேன், வறட்சியைப் போக்க என்ன நிவாரண நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'ஆனந்தவிகடன்' பத்திரிகை விழாவிற்கு வருவதற்கு முன்பாக இந்த நிலைமைகள் எல்லாம் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டன. நான்கு மாத காலமாக இந்த வறட்சியைப்பற்றி நினைத்தது உண்டா? அந்த நான்கு மாத காலத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இப்போது இந்த அவல நிலை ஏற்பட்டிருக்குமா? இதைக் கேட்டால், அதிகாரிகள் அதுபற்றிய தகவல்களைத் தரவில்லை என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், ஒரு அரசாங்கத்திற்குச் சரியான தகவல் தரவில்லை என்றால், ஏன் அந்த அதிகாரிகளை வேலையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? எதற்காக அவர்களுக்கு தயவு தாட்சண்யம் காட்டுகிறார்கள்? அரசாங்கத்திற்குச் சரியான தகவல் கொடுக்காத அதிகாரிகள் இந்த நாட்டிலே அதிகாரத்திலே நீடிக்க வேண்டுமா? இதை வெட்கமில்லாமல் அரசினர் சொல்கிறார்கள். அதிகாரிகள் சரியான தகவல் கொடுக்கவில்லை



என்று நெளிக்க வெட்கம் இல்லையா? நான் வருத்தத்தோடு சொல்கிறேன், இன்னும் அந்த வறட்சி நிலை நீடிக்கிறது. மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள். ஏதோ ஒருநாள் ஐந்து நிமிட நேரம் மழை பெய்கிறது. 130 கோடி ரூபாய் அளவிலே எங்களுக்கு நிதியுதவி தேவை, அந்த அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று இந்த அரசாங்கம் மத்திய அரசிடத்திலே கேட்கிறது, அதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்தச் செய்தியைப் படிக்கும்போது உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், ஒரேயொரு நாள் அதுவும் 5 நிமிட நேரம் சென்னையிலே மழை பெய்தது. உடனே ஆளும் கட்சியின் பத்திரிகையான 'அண்ணா' பத்திரிகை செய்தி வெளியிடுகிறது. அது 5 நிமிட நேர மழை கூட அல்ல. ஏதோ அப்போதைக்கப்போது ஒரு தூறல் விழுந்தது. அதற்கு அந்தப் பத்திரிகையிலே செய்தி போடுகிறார்கள் "வள்ளலின் மனம்போல வான் மழை கொட்டியது", 'சென்னையில் மழை கொட்டியது' 'மற்ற மாவட்டங்களிலேயும் நல்ல மழை' இப்படியெல்லாம் செய்திகள் போட்டால், இந்தச் செய்தியை மத்திய அரசிலே உள்ளவர்கள், அதிகாரிகள் படித்தால், எப்படி நமக்கு நிதியுதவி கிடைக்கும்? இந்தப் பத்திரிகையைக் கொண்டுபோய் யாராவது காட்டினால், அங்கே இருக்கும் அதிகாரிகள் என்ன நினைப்பார்கள்? அப்படி யாரும் காட்டுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. அப்படியே காட்டினால், அங்கே இருக்கும் அதிகாரிகள் என்ன நினைப்பார்கள்? தமிழ் நாட்டிலே மழை பெய்துவிட்டது, எதற்காக அதற்கென்று ஒரு குழு அங்கே போக வேண்டும் என்று நினைக்கமாட்டார்களா? இப்படியெல்லாம் செய்திகள் போடும்போது, எச்சரிக்கையாவது இருக்க வேண்டாமா?

(முற்பகல் 10.40)

உணவு நிலைமையைப்பற்றி நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். "மொத்த உணவு தானிய உற்பத்தி 92.14 இலட்சம் டன்களாக அடுத்த ஆண்டு அமையும் வகையில் ஏற்றதொரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன புள்ளிவிவரம் இது? யார் தந்த புள்ளி விவரம் இது? யோசிக்க வேண்டாமா? தஞ்சைக்கு அடுத்தபடியாக விளையக்கூடிய பகுதி வடாற்காடு மாவட்டம். அங்கே 10 சதவீதம் விளைச்சல்கூட இந்த ஆண்டு இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ்நாட்டின் மொத்த விளைச்சலில் 40 சதவீதம் தஞ்சைத் தரணியில் விளைகிறது என்றால், அதற்கு அடுத்தாற்போல் 35 சதவீதம் விளைச்சல் வடாற்காடு மாவட்டத்தில்தான் விளைகிறது. ஆனால் இன்றைய தினம் அந்த மாவட்டத்தில் 30 ஏக்கரா வைத்துக் கொண்டிருக்கிற விவசாயி

மூன்று ஏக்காவில்கூட பயிர் வைக்க முடியாதபடி வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே புள்ளிவிவரத்தைச் சொல்லி, உணவு நிலைமை திருப்தியாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். எனவேதான், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தயவுசெய்து இந்தப் புள்ளிவிவரங்களையெல்லாம் நம்பிக் கொண்டு ஏமாந்துவிடக்கூடாது. வறட்சி நிலைமை இருக்கிறது என்பதுமட்டுமல்ல. உணவு தானியங்களே கிடைக்காத நிலை இன்றையதினம் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. தயவுசெய்து வடாற்காடு மாவட்டத்தின் ஆட்சித் தலைவரைக் கொஞ்சம் மனம் திறந்து பேசச் சொல்லுங்கள். வடாற்காடு மாவட்டத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனின் ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்பதைப்பற்றி அவரைக் கேட்டால் சொல்லுவார். அங்கே சாதாரண புஞ்சைத் தானியம்கூட கையிருப்பில் இல்லை. இந்த நிலையில் எப்படி இந்த அரசு வறட்சி நிலையைச் சமாளிக்கப் போகிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தமிழ்நாட்டிற்கு இந்த ஆண்டு 6 லட்சம் டன் உணவு தானியம் தேவை என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசிடமிருந்து 5 லட்சம் டன் உணவு தானியங்களைக் கேட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ரேஷன் கார்டு மூலம் மக்களுக்கு விநியோகம் செய்வோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் மத்திய அரசு எப்போது இந்த உணவு தானியத்தைக் கொடுப்பது, எப்போது இந்த அரசு அதை இங்கே கொண்டு வருவது? அதுவரை தமிழ்நாட்டு மக்கள் பட்டினியாக இருப்பார்களா? போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று பெருமை பேசிக்கொள்கிறார்கள்; இதுதான் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கிற லட்சணமா?

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் உணவு நிலைமை சரியில்லை. வடாற்காடு மாவட்டத்தில் ஆற்காடு நகரத்திலே ஒரு கிலோ அரிசி 4 ரூபாய்க்கு விற்கிறது. மதுரையில் ஒரு கிலோ அரிசி ரூ. 4.80க்கு விற்கிறது. நல்ல அரிசி ரூ. 5.20-க்கு விற்கிறது. இப்படியெல்லாம் மாநிலம் முழுவதும் நிலைமை இருக்கிறபோது எப்படி இந்த ஆட்சியாளர்கள் நிதிநிலை அறிக்கையில் "உணவு நிலைமை தற்போது திருப்திகரமாக இருக்கிறது" என்று சொல்கிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நிதிநிலை அறிக்கையிலே மாநிலத் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 3,000 கோடி என்றும் ரூ. 3,150 கோடி என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதைப் படிக்கிறபோது இனி தமிழ்நாடு ஒரு சொர்க்க பூமியாகத்தான் மாறப் போகிறது என்ற





நினைப்புத்தான் வரும். ஆனால் எந்தெந்த அளவில் என்னென்ன திட்டங்கள் என்பதுபற்றிய விவரங்கள், இங்கே எங்களுக்கு அளிக்கப்பட்ட குறிப்பேடுகளையெல்லாம் அலசி, அலசிப் பார்த்தாலும், ஒன்றும் காணப்படவில்லை. புள்ளி விவரங்களைக் கொடுக்கிற அளவுக்கு உண்மையிலே திட்டங்களைப் பற்றிய விவரங்கள் ஏதேனும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

இந்தியா முழுவதும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை 48.44 சதவீதம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் பிரதிநிதிகளாக வந்து, அவர்களுக்கெல்லாம் கண்கண்ட தெய்வமாக இருந்து, அவர்களின் கஷ்டங்களைப் போக்க இருக்கிற இவர்களின் ஆட்சியில், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 52.12 சதவிதம். அந்த அளவுக்கு இங்கே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதே தவிர குறைந்திடவில்லை. இங்கே ஆட்சியில் இருப்பவர்களும் அதைக் குறைப்பதற்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இனியாவது இந்த எண்ணிக்கையைக் குறைக்கப் போகிறோம் என்பதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்றாவது சொல்லியிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. வேலையற்றோரின் விபரீத எண்ணங்கள் எங்கேபோய் முடியும் என்பது மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு நன்கு தெரியும். அப்படிப்பட்ட வேலையற்றோரின் எண்ணிக்கை இந்தியா முழுவதும் 8.5 சதவீதம் என்றிருக்கும்போது, இங்கே தமிழகத்தில் மட்டும் அது 16.1 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் குறைப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எத்தனை தொழில்களை இங்கே ஆரம்பித்து வேலை வாய்ப்பை அதிகப்படுத்த இருக்கிறார்கள்? ஏற்கெனவே தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டு வந்த சின்னஞ்சிறு தொழில் யூனிட்டுகளெல்லாம் இன்றையதினம் மூடப்பட்டிருக்கின்றன. எத்தனையோ தொழில்கள் நசிந்து கொண்டிருக்கின்றன. எத்தனையோ தொழிற்சாலைகள் மூலதனமில்லாமல் திறக்கப்படாமல் மூடிக்கிடக்கின்றன. மறுபடியும் இயங்கமுடியாத வகையில் பூட்டிய பூட்டுக்கள் திறக்கப்படாமல் இருக்கின்றன. இவைகளையெல்லாம் திறப்பதற்கு இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சி என்ன? சொல்லியிருக்க வேண்டாமா? கேட்டால் சிட்கோ இருக்கிறது; டிட்கோ இருக்கிறது; சிப்காட் இருக்கிறது என்றெல்லாம் சொல்லுவார்கள். அந்தப்பட்டியலில் பல்வேறு இலாக்காக்களும் துறைகளும் இருக்கின்றன. ஆனால் அவைகளெல்லாம் எங்கே இயங்குகின்றன? இந்த அரசாங்கத்தின் கோப்புகள் வேகமாக நகரவில்லை என்றால்

ஆட்சியாளர்கள் கோபப்படுகிறார்கள். ஆனால் சில கோப்புகளைப் பொறுத்த வரையில் அவைகள் மின்னல் வேகத்தில் நகருகின்றன. இப்படி நகர வேண்டிய பல கோப்புகள் நகராமல் இருப்பதன் காரணமாக நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கிறது. அந்தக் கோப்புகளெல்லாம் விரைவில் நகர வேண்டும் என்று இவர்கள் ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை.

நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த அரசு மேற்கொண்டிருக்கிற உற்பத்தித் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது வேளாண்மைத் துறையில் இந்த அரசு பெரிய புரட்சியைச் செய்திருக்கிறது என்று குறிப்பிட்டுவிட்டு "இப்போது இந்த மாநிலத்தில் ஆண்டுதோறும் 103 கோடி தேங்காய் உற்பத்தியாகிறது. இதனை 5 ஆண்டுக் கால அளவில் ஆண்டுதோறும் 153 கோடி காய்களாக உயர்த்துவதற்கு இவ்வரசு திட்டமொன்றைச் செயல்படுத்தி வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய காரியமா இது? உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டால்; ஆண்டுதோறும் 50 கோடி தேங்காய் அதிகமாக உற்பத்தி செய்வதற்குத் திட்டம் தீட்டியிருக்கிறோம் என்று சொல்வது; பொருளாதார வளர்ச்சியில் அக்கறை கொண்ட எந்த ஒரு அரசாவது சொல்லக்கூடிய கருத்து தானா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைத்தான் நான் இங்கே வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டில் உணவு உற்பத்தி என்னவாயிற்று என்று கேட்டால், தேங்காய் உற்பத்தியைப்பற்றிச் சொல்லுகிறார்கள். இந்த நாட்டு மக்கள் என்ன அன்றாடம் தேங்காயைத்தானா சாப்பிட்டுக் கொண்டிருக்கப் போகிறார்கள்? நான்கூட கணக்கிட்டுப் பார்த்தேன். இந்த மாநிலத்தில் 5 கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆண்டு முழுவதும் சாப்பிடுவது என்றால்கூட 10 தேங்காய்க்கு மேல் ஒருவரும் சாப்பிட முடியாது. பத்தை போட்டு சாப்பிட்டால்கூட சாப்பிட முடியாது. இப்படிப்பட்ட திட்டங்களைச் சொல்லி, நாங்கள் பட்ஜெட் போட்டுவிட்டோம் என்று பெருமை பேசிக் கொள்வதிலே என்ன நியாயம் இருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நிதிநிலை அறிக்கையிலே இந்த ஒரு திட்டம் மட்டும்தான் போடப்பட்டிருக்கிறதா அல்லது போடப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களில் இது ஒன்றா? அதோடு தேங்காய் வளர்ப்பதற்குத் திட்டமே தேவையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறாரா?



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இதுவும் ஒரு திட்டம். இதைக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் இதற்கெல்லாம் ஒரு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய கருத்து. மாண்புமிகு நாவலர் அவர்கள் தயாரிக்கும் நிதிநிலை அறிக்கையில் இதையெல்லாம் குறிப்பிட்டு, இதையெல்லாம் ஒரு சாதனையைச் சொல்லிக் கொள்வது உகந்ததாக இருக்குமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். காரணம் நான் நாவலர் அவர்களின் அறிவாற்றலில் நிரம்ப நம்பிக்கை வைத்திருந்தவன். இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறேன். எனவே அவர் தயாரிக்கும் நிதிநிலை அறிக்கையில் இப்படிப்பட்ட சாதனைகள் இடம்பெறலாமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அடுத்து, இன்னொரு திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது இந்த ஆண்டில் கூட்டுறவுத் துறையில் 40,000 பேர் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்களாம்; எவ்வளவு பெரிய புரளை இது; ஏற்கெனவே கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு நமக்கு யோக்கியதையில்லை; வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவர்களுக்கும் யோக்கியதை இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் புதிதாக இந்த அரசு 40,000 உறுப்பினர்களைக் கூட்டுறவுத் துறையில் சேர்த்துக் கொள்ள இருக்கிறதாம்! அப்படிச் சேர்க்கப்பட இருக்கிற 40,000 உறுப்பினர்கள் யார் என்று நான் சொன்னால் [illegible] டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களை இவ்வாறு கூட்டுறவுத் துறையில் உறுப்பினர்களாகச் சேர்க்க [illegible] இந்தத் திட்டம் வந்திருக்கிறதோ என்ற சந்தேகம்தான் எனக்கு [illegible] இதுவரையில் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் உறுப்பினர்களாகச் சேருபவர்கள் அவர்களாகப் பணம் சேர்க்க வேண்டும் என்ற நிலைமைதான் இருந்து வந்தது. அதாவது ஒவ்வொரு கட்டுறவில் உறுப்பினராக வேண்டுமென்றால் ரூ. 10 அல்லது 20 பங்குத் தொகை செலுத்த வேண்டும் என்ற நிலை இருந்து வந்தது. ஆனால் இன்றையதினம் இந்த ஆட்சியில் என்ன நிலைமை என்னவென்றால், சேருகின்ற ஒவ்வொரு கூட்டுறவு உறுப்பினருக்கும் அரசு ரூ. 100 பங்குத் தொகை அளிக்கிறது. அரசாங்கத்திலிருந்து ஒவ்வொருவருக்கும் ரூ. 100 பங்குத் தொகை கொடுத்து அவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பது என்றால் என்ன அர்த்தம்? இந்த மாநிலத்தில் "நாங்கள் யாரும் [illegible] கூட்டுறவுத் துறையில் உறுப்பினர்களாகச் சேரமாட்டோம் [illegible] பெரும் ஓடுகிறார்களா?" என்ற காரணத்திற்காக அவர்களுக்கு அரசாங்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1981 மார்ச் 31

திலேயிருந்து பங்குத் தொகை தருகிறார்கள்? சேர்ந்திருப்பவர்களுக்கே நம்மால் கடன் கொடுக்க முடியவில்லை. இந்த நிலையில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அரசாங்கத்திலிருந்து பணம் கொடுப்பது என்றால் அது எப்படி நியாயமாகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா?

நிதிநிலை அறிக்கையிலே மின்கட்டணம் இன்னும் கொஞ்சம் கூடும் என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட ஒரு பெரிய அபாயச் சங்கு இந்த மாநிலத்தில் இருக்க முடியாது. மின் கட்டணத்தைக் கூட்டவே கூடாது என்று நான் சொல்ல முன்வரவில்லை. அந்தத் துறையைப் பொறுத்தவரை நான் அதை முழுவதுமாக அறிந்தவன். ஆனால் எதற்காக நான் அதைச் சொல்லுகிறேன் என்றால் இப்போதே தமிழகத்தில் இருக்கிற மின் கட்டணம் அதிகம் என்ற காரணத்திற்காக தொழில் தொடங்க நினைப்பவர்கள் இங்கே தொழிலைத் தொடங்க அச்சப்படுகிறார்கள். தமிழகத்தில் வசூலிக்கப்படும் மின் கட்டணம் அதிகம் என்ற காரணத்திற்காக அண்டையிலுள்ள கருநாடக மாநிலத்திற்கோ அல்லது ஆந்திரத்திற்கோ அல்லது கேரளத்திற்கோகூடச் செல்கிறார்கள். அத்தகைய நிலை இருக்கும்போது பொதுவாக மின்கட்டணத்தில் இன்னும் உயர்வு ஏற்படக்கூடும் என்ற பொதுவான கருத்தைச் சொல்வதன் மூலம் புதிதாகத் தொழில்கள் தொடங்குவது நின்றுபோய்விடும் என்பது மட்டுமல்ல, இருக்கிற தொழில்களும் நசித்துப் போய்விடுமோ என்ற அச்சம்தான் ஏற்படுகிறது.

வேளாண்மை அபிவிருத்திக்காகத் திட்டம் போடுகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தில் இன்னும் பல்லாயிரக் கணக்கான பம்ப் செட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தில் முதல்வராகப் பொறுப்பேற்றதும் மின்சார பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்குவதில் எந்த அளவுக்கு அவர் ஆர்வம் காட்டினார் என்பது மாண்புமிகு நாவலர் அவர்கள் அறியாததல்ல. அன்றைக்கே 60,000 பம்புசெட்டுகளுக்கு ஆண்டுதோறும் இணைப்பு கொடுக்கப்படுவதன் மூலம்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று எண்ணி அதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து அந்தக் காரியத்தைச் செய்யப் போகிறேன் என்று அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அன்றையதினம் ஆண்டிற்கு 60,000 மின்னிணைப்பு என்றிருந்த நிலை இன்றையதினம் ஆண்டிற்கு 29,000 அல்லது 30,000 பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு தருவது என்ற அளவுக்கு மாறியிருக்கிறது. இந்த அளவுக்குப் போனால் இன்னும் 10 ஆண்டுகளில்தான் இன்றைய தேவையை நம்மால் பூர்த்தி செய்ய முடியும். அது வரை உணவு உற்பத்தி என்ன ஆவது?



1981 மார்ச் 31] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அதுதான் போகிறது, தொழில் துறையிலாவது சரியான கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்றால், அதுவுமில்லை. 1977 ஆம் ஆண்டிலிருந்து இங்கே ஒரு காகித ஆலை ஆரம்பிக்கப்படும் என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். 1981லும் இயங்காத கட்டத்தில்தான் அந்தத் திட்டம் இருக்கிறது. முதல் ஆண்டு அது திட்டமாக இருந்தது. 2வது ஆண்டு அதற்குப் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 3-வது ஆண்டு அதைப்பற்றி மறந்துவிட்டார்கள். இப்போது 4வது ஆண்டில் அது அவர்களுக்கு நினைவுக்கு வந்ததும், அதற்காக மீண்டும் ஒரு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். இப்போது 1981 ஆம் ஆண்டு கணக்கில் காட்டி 27 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். பரவாயில்லை. இப்போதாவது 27 கோடி ரூபாயை அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்களே என்று பாராட்டுகிறேன். ஆனால் நான் ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். அந்தக் காகித ஆலையை நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் இங்கே யாரும் இல்லையா? அத்தகைய தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் யாரும் இல்லையா? இங்கேயுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு அந்தத் தகுதியில்லையா? அதற்குத் தேவையான டெக்னிக்கல் நோ ஹவ் இங்கே இல்லையா? அப்படியே இல்லை என்றாலும், கடந்த பல ஆண்டுகளில் இந்த இயந்திரங்களை உற்பத்தி செய்யும் இடங்களுக்கு நமது அதிகாரிகளை அனுப்பி வைத்து அதில் அவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கக்கூடாதா? இதையெல்லாம் செய்யாமல் தனிப்பட்ட ஒருவரிடம் எதற்காக இந்த ஆலையை விடுவதற்கு அரசு ஒப்புக்கொள்ள வேண்டும். சேஷசாயி கம்பெனியின் மேனேஜிங் டைரெக்டர் தான் இந்த ஆலை குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்வாராம். அவரிடம்தான் இந்த 185 கோடி ரூபாய்த் திட்டம் ஒப்படைக்கப்படுமாம். அவர் செய்கிற தவறுகளுக்கு அவர் பொறுப்பேற்க மாட்டாராம். இப்படி ஒரு திட்டம் இருக்கலாமா? அவ்வளவு பஞ்சமா

(முற்பகல் 10-50)

அறிவாளர்களுக்கு? அவ்வளவு பஞ்சமா திறமையுள்ளவர்களுக்கு? தனியாரிடத்திலே இந்தத் தொழிலைக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லுவதற்கு இந்த அரசாங்கம் வெட்கப்பட வேண்டாமா? இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், யார் எதைச் சொன்னாலும், நினைத்ததை முடிப்பவன் என்ற எண்ணத்திலே போனால் எப்படி? ஒரு காலத்திலே "ஊழல், ஊழல்" என்று, "கமிஷன், கமிஷன்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரே ஒரு கமிஷன், சர்க்காரியா கமிஷன்தான் வந்தது. ஆனால் இந்த நிலை நீடிக்குமானால், இந்த அரசாங்கத்திற்குச் சொல்லுகிறேன், எத்தனை கமிஷன் வருமோ எனக்குத் தெரியாது. ஆகவே, இப்படிப்பட்ட குற்றங்கள், குறைகள்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1981 மார்ச் 31

நடக்காமல் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அங்கே ஒரு காவலராக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, சாலை வசதிகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு நாவலர் அவர்கள் அவருக்கு ஏற்கெனவே பழக்கப்பட்ட வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு முறை சென்று அங்கே எப்படி சாலைகள் ஒரு அடி, ஒன்றரை அடி பள்ளங்களைக் கொண்டதாக இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே உள்ள சாலைகள் எல்லாம் செப்பனிட வழிவகை இல்லாமல் இருக்கின்றன. அதைக் கேட்டால், நிதி இல்லை என்று சொல்லிக்கொண்டு, அங்கேயுள்ள அதிகாரிகள் கொஞ்சம்கூட அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்விக்காக 255.35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்த பிறகு எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதைப் பார்த்தால், 1,680 பேர்களுக்குத்தான் கிடைக்கும். நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது, எவ்வளவோ சீர்திருத் தங்களை, முன்னேற்றங்களை தி.மு.க. ஆட்சிக் காலத்திலே செய்திருக்கிறோம். வேலை இல்லாத ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலையைக் கொடுத்தோம். இன்றைய தினம் எத்தனை பேர் பட்டப் படிப்பு படித்துவிட்டு, ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்து, அந்த மாணவர்களின் விகிதாச்சாரத்திற்கேற்ப ஆண்டு ஒன்றுக்கு ஐந்தாயிரம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இப்போதுகூட வரவில்லை என்றால், எப்போது அந்த எண்ணம் வரப்போகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

மேல் நிலைப் பள்ளிக் கல்வியை அறிவித்துவிட்டார்கள். மேல் நிலைப் பள்ளிகளை நாம் ஒருமுறை எண்ணிப் பார்க்க வேண்டும். மேல நிலைப் பள்ளிகளில் சையன்ஸ் லேப் கிடையாது, கட்டிட வசதி கிடையாது, கட்டாந் தரையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யார்? நாளைய தினம் டாக்டர்களாக, என்ஜினியர்களாக வரப் போகிறவர்கள். பல கிராமங்களில் உள்ள மேல் நிலைப் பள்ளிகளில் படிக்க வாய்ப்பு வசதி கூட இல்லாமல், குடிக்கத் தண்ணீர்கூட இல்லாமல் கஷ்டமான நிலையிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாணவர்கள் "டான் பாஸ்கோ" பள்ளியில் படிக்கும் மாணவர்களோடு போட்டியிட வேண்டும், கிருஸ்தவ பள்ளி மாணவர் களோடு போட்டியிட வேண்டும், மற்றும் சென்னையிலுள்ள மற்ற தரமான



1981 மார்ச் 31] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பள்ளி மாணவர்களோடு போட்டியிட வேண்டும். அதற்காக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 86 பள்ளிகளுக்கு இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. 255.35 கோடி ரூபாய் திட்டத்தில் இந்த வளர்ச்சிகளுக்காக, விருதுநகர் கருவிகள் வாங்க கட்டிடம் கட்ட 86 பள்ளிகளுக்கு 2 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது முறைதானா? எப்போது அந்த மாணவர்கள் முன்னேறுவது? நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் அப்படிப்பட்ட பள்ளிகளில் படித்தால் நாம் கொஞ்சம் சிந்திக்க மாட்டோமா? ஆனால் அதைப்பற்றி இந்த அரசாங்கம் கவலைப் படுவதாகத் தெரியவில்லை.

நேற்றைய தினம் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகையிலே படிக்கும்போது, நாட்டைப் பற்றிக் கொஞ்சம் கவலைப்படுபவர்கள் வேதனைக் கண்ணீர் விட வேண்டும். "தமிழ் நாட்டில் உள்ள 11 பள்ளிகளில எஸ்.எஸ்.எல்.சி.யில் ஒருவர்கூட தேர்ச்சி பெறவில்லை" என்று கூறியிருக்கிறார்கள். இப்படிச் சொல்வது ஒரு அரசாங்கத்திற்கு நல்லதா? ரொம்பப் பெருமையா? எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 11 பள்ளிகளில் மாணவர் ஒருவர் கூடத் தேறவில்லை என்று அறிவித்திருக் கிறார்கள் என்றால், எவ்வளவு வேதனைக் கண்ணீரை வடித்திருக்க வேண்டும்? இந்த நிலைமையைப் போக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? அப்படிப்பட்ட பள்ளிகளை நடத்தித்தான் ஆக வேண்டுமா? மூடிவிடலாமே. அதையாவது செய்ய வேண்டும். ஒவ்வொரு ஏழை விவசாயியும், தன்னுடைய மகன் எஸ்.எஸ.எல்.சி. படித்தாலாவது போதும், இந்த நாட்டிலே பியூன் வேலை கிடைத்தாலாவது தான் பிழைத்துக்கொள்ள முடியும் என்று நம்பி பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பினால், அவர்கள் தேர்ச்சி பெற முடியாத நிலையில் பள்ளிக்கூடம் இருக்குமானால், இந்த நாட்டிலே அப்படிப்பட்ட பள்ளிகள் எதற்கு இருக்க வேண்டும்? புதிய கல்லூரிகள் இல்லை, பாலிடெக் னிக்குகள் இல்லையென்றாலும், பரவாயில்லை. இப்படிப்பட்ட முடிவுகள் வருவதைவிட, அப்படிப்பட்ட பள்ளிகளை மூடினோம் என்ற பெருமையை யாவது ஏற்படுத்திக்கொள்ளலாம். அண்ணா தி.மு.க. ஆட்சியில் நடந்த பள்ளிகளில் 'ஜீரோ ரிசல்ட்' என்று சொல்லுவதை விட அந்தப் பள்ளிகளை மூடிவிட்டார்கள் என்று சொல்லுவது நாட்டிற்கு நல்லது. இப்படிப்பட்ட நிலையிலே கல்வித் துறை இருக்கிறது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் கல்வியமைச்சராக இருந்தபோது, தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி வேண்டும் என்று சொல்லி, 1973-லே விண்ணப்பம் கொடுத்தபோது உடனடியாக அதைப்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1981 மார்ச் 31

பரிசிலிக்க வேண்டும் என்று சொல்லி மாண்புமிகு நாவலர் அவர்கள் உத்தரவிட்டு, தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியைத் தயாரிக்க ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழு இரண்டாண்டுக் காலம் மிகத் திறமையாக வேலை செய்து அகராதியைத் தயாரித்தபோது, அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு ஆட்சி கலைக்கப்பட்டது. அதன் பிறகு அந்தக் குழுவைக் கலைத்துவிட்டு அதையெல்லாம் சேர்த்து ஒருவரிடத்திலே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவருடைய பெயரிலே தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி வெளிவந்திருக்கிறது. நானும் கொஞ்சம் தமிழ்ச் சுருக்கெழுத்து படித்தவன். 'ஹை ஸ்பீட்' டெஸ்ட் பாஸ் செய்தவன். அந்த அகராதியைப் பார்த்தபோது, உள்ளபடியே சொல்லுகிறேன், தீயிட்டுக் கொளுத்தலாமா என்ற நினைப்புத்தான் வந்தது. அந்த அளவிற்கு அக்கிரமமான அகராதி; அநியாயமான அகராதி; தமிழுக்குச் சம்பந்தமே இல்லை. அப்படிப்பட்ட அகராதி இந்த ஆட்சியிலே வெளியிடப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. ஏதோ இந்த அகராதிப் பணியை இந்த ஆட்சிதான் முயற்சி எடுத்து வெளியிட்டதைப் போல விழா எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு இதிலே அக்கறை இருப்பதால், சொல்கிறேன். மறுபடியும் அந்த அகராதியைத் திருத்த வேண்டும். நம்முடைய சட்டமன்றப் பேரவையிலும்; மேலவையிலும் ரிப்போர்ட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே திறமையானவர்கள் இருக்கிறார்கள். நல்ல தமிழ் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். எப்படி 'ஸ்ட்ரோக்' போடுவது என்று தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். 'பிட்மேன் ஷார்ட் ஹாண்டை' அடிப்படையாகக் கொண்டுதான் சீனிவாசராவ் முறை தமிழ்ச் சுருக்கெழுத்து எழுதப்பட்டிருக்கிறது. பிட்மேன் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் "ப்பி" "பி" (B) ஸ்ட்ரோக் தெரியாதவர் ஆசிரியராக இருந்து இந்த அகராதியை வெளியிட்டிருக்கிறார் என்றால், அந்த அகராதி எப்படி இருக்கும் என்பதை ஆட்சியில் இருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வேதனையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவம்பற்றிப் பலவற்றைச் சொல்ல வேண்டும். அதற்கென்று கொள்கைக் குறிப்புமீது விவாதம் வர இருப்பதால், அப்போது விரிவாகப் பேசலாம் என்று இருக்கிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக மத்திய அரசு 768.5 இலட்சம் ரூபாயையும் 60,000 டன் அரிசியையும் ஒதுக்கியிருக்கிறது. இதிலே பல தவறுகள் நடக்கின்றன. இது ஒரு மத்திய அரசுத் திட்டம்; ஆகவே தவறுகள் நடக்கக் கூடாது. இது மாநிலம் மட்டும்



1981 மார்ச் 31] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

செய்யும் திட்டமல்ல. இதிலே குறை சொல்ல வேண்டும் என்பதல்ல என்னுடைய நோக்கம். இதை ஆளும் கட்சியினர் தங்களுடைய திட்டம் போலவும், தங்களுக்கே சொந்தமான திட்டம் போலவும், அண்ணா தி.மு.க. கட்சிக்காரர்கள் சொல்லுவதைப் போலத்தான் நடக்க வேண்டும் என்பதைப் போலவும் இந்தப் பணிகள் நடந்து வருகின்றன. மக்களுக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. முன்பு இதே பேரவையிலே பேசினேன். மாலை நாலரை நாலே முக்கால் மணிக்குப் பேசினேன். ஐந்தரை மணிக்கு வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆட்களை அனுப்பி ரிக்கார்டுகளைப் பறிமுதல் செய்துவிட்டார். "வேலையைச் செய்யாமல் பில் போட்டார்" என்று சொன்னேன். ஆகவே எல்லா ரிக்கார்டுகளையும் பறிமுதல் செய்துவிட்டார். வேலை செய்யவில்லை; அரிசி விநியோகிக்கப்படவில்லை. இந்தத் திட்டத்தை உள்ளபடியே நான் வரவேற்கிறேன். ஆனால் எந்த ஏழைகளுக்குப் போய்ச் சேர வேண்டுமோ, எந்த உழைக்கும் வர்க்கத்துக்குப் போய்ச் சேர வேண்டுமோ, அவர்களுக்குப் போய்ச் சேராமல், மத்திய அரசினுடைய ஒப்படைக்கப்பட்ட திட்டத்தில் மாநில அரசு தவறு செய்தால், இதிலே என்ன நியாயம் இருக்கிறது? சரியாய நீதி கிடைக்கிறதா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசாங்கம் தெரிந்தோ; தெரியாமலோ ஒரு நல்ல திட்டத்தைச் செய்திருக்கிறது. அதுதான் தன்னிறைவுத் திட்டம். அந்தத் திட்டத்திலே எந்தத் தவறும் நடக்கவில்லையா என்றால், நடக்கிறது. தவறுகள் நடந்தால் நாம் அதை மன்னிக்கலாம். சில தவறுகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கும். ஆனால் மொத்தத்திலே என்ன பலன் கிடைக்கும் என்று பார்க்க வேண்டும். சில பலன்கள் கிடைக்கின்றன. ரோடு இல்லாத கிராமங்களுக்கு ரோடுகளும், பாதை இல்லாத கிராமச் சுடுகாடுகளுக்கு பாதையும், குடிக்க தண்ணீர் இல்லாத கிராமங்களுக்குக் குடிதண்ணீரும், கூரையில்லாத பள்ளிகளுக்குக் கூரையும் முழுமையாகப் பெறக்கூடிய வகையிலே செய்தோம் என்று சொன்னால்; அதை நான் பாராட்டுவேன். நல்ல திட்டம் இது. தவறு செய்யாமல் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய 374 ஒன்றியங்களிலும் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகச் செய்தோம் என்ற நல்ல பெயரை எடுக்க இந்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

தாலிக்குத் தங்கம் என்று அறிவித்திருக்கிறார்கள். தாலிக்குத் தங்கம் தாராவிட்டாலும், வருத்தப்பட மாட்டோம். ஆனால் அதிலே பயன்படுத்துகின்ற வார்த்தைகளைப் பார்க்கவேண்டும். 'ஏழைக் கைம்பெண்களின் மகளிர் திருமணத்திற்குக் குறைந்த விலையில், "தாலிக்குத் தங்கம்" தரப்படும், என்பதைப்பற்றி விமர்சித்து இந்த அவையில் பேசுவது அவ்வளவு பொருத்தமில்லை என்று கருதுகிறேன். தயவுசெய்து தாலிக்குத் தங்கம் கொடுக்க வேறு ஒரு வரைமுறை வையுங்கள். இந்த நாட்டிலே வருமானம் இல்லாத பெண்களுக்குத் தாலி இருக்கக்கூடாது என்ற ஒரு கொள்கை வகுத்திருப்பதுபோல அது இருக்கின்றது. இந்த நாட்டிலே இன்னமும் தாலியைத் தங்களுடைய கடவுளுக்கு ஒப்பாக எண்ணி அணிந்துகொண்டிருக்கின்றவர்கள், ஏழ்மையிலே வாடிக்கொண்டிருக்கின்ற தாய்மார்கள் மேலும் கண்ணீரை, வருத்தத்தை, வேதனையை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள். 'இந்தத் திட்டம் நமக்கு இல்லையாமே' என்ற எண்ணம் நிலைமையை உண்டாக்கும். ஆகவே அதைத் தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

பிற்பட்டோர் நலம். நம் நாட்டிலே இப்போது 50 சதவிகிதத்திற்கு அதிகமாக இருப்பவர்கள் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை. பாட்சித் தலைவர் அவர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள். அந்த 50 சதவிகிதம் மக்களுக்கு இந்த நாட்டிலே இந்தத் திட்டத்தில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு? 1980–81-ல் 7.56 லட்சம். 1981–82-ல் 7.99 லட்சம். அதாவது 50 சதவிகிதம் மக்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அப்படி பிற்பட்டவர்களாக வாழ்கின்றவர்களுக்கு அந்தச் சமுதாயத்திற்கு இந்த ஆண்டுத் திட்டத்தில் 43 லட்சம் ரூபாய்தான் அதிகம் என்று நிதி அமைச்சர் ஒதுக்கியிருப்பதிலிருந்து பிற்பட்ட சமுதாயத்தைப் புறக்கணித்துவிட்டார்களோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. எனவே இதற்கு அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவல் துறைபற்றிச் சொல்கிறேன். மலிவு விலையில் உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டம். அதிலே சில கோளாறுகள். அது எப்படி இருந்தாலும், அந்தத் திட்டம் பாராட்டுக்குரியது. இது எந்தக் காரணத்தி





னாலே காவல் துறைக்கு மட்டும் பொருந்தும் என்கிறார்கள்? அரசு ஊழியர்களுக்கு மட்டும் பொருந்தாது, அதைக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறார்கள். கேள்வி நியாயமானதுதான். அரசாங்கத்துக்கு நிதி வசதி இல்லாமல் இருக்கலாம். இன்றையதினம் இருக்கின்ற நிதி அமைச்சர் அவர்கள் எதிர்பார்ப்பதைவிட இன்னும் ஒரு 50 கோடி ரூபாய் அதிகமாக வருமானம் வந்தால், எல்லா அரசு ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையில் பணிக்கு ஆளெடுப்பதிலே முறைகேடுகள், தவறான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என்பதைப்பற்றியெல்லாம் சட்ட மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். காவல் துறை ஐ.ஜி. அவர்கள் தப்பாக நடக்கலாமா? உத்தரவிட்டு 'போய் பயிற்சிக்கு சேருங்கள்' என்று அழைப்பது, நேர்முகத் தேர்வுக்கு வருமாறு [illegible] அழைத்திருக்கிறார்கள். ஒரு தாய் இருக்கின்ற வேலையை அடகு வைத்து பயிற்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். வேலையை அடமானம் வைத்து அதற்குப் பணம் செலவு செய்திருக்கிறார்கள். அப்படி அனுப்பிய சகோதரியின் மகன் பயிற்சி பெற்ற பின்னால், ஒரு மாதம் பயிற்சி பெற்ற பிறகு, சம்பளம் வாங்கிய பிறகு, "எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. ஆகவே உங்களுக்கு [illegible] இல்லை" என்று விட்டுத்து அனுப்பிவிட்டார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்றாலும் பரிசீலிக்கப்படும் என்றும், அப்போது விண்ணப்பம் போடலாம் என்றும் போட்டு, மறுபடியும் பயிற்சி பெறவேண்டும் என்று சொன்னால், இதை என்னவென்று சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட குறைகள் நிர்வாகத்திலே இருப்பது நல்லதல்ல. எனவே அப்படிப்பட்ட நிலைகளை மாற்ற வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அதிகார நிதித்துறை [illegible] ஒரே ஆட்சி நம்முடைய அ.தி.மு.க. ஆட்சிதான். ஆனால் ஒரு நீதிபதி ஒரு உத்தரவு போட்டு விட்டார் என்றால், 24 மணி நேரத்திலே அதை அமுல் படுத்துவதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நேரத்திலே, [illegible] இருந்தவர்களை, [illegible] சொரிமைப்படுத்தி, காப்பாற்றுகின்ற

சாப்பாட்டிலே மண்ணைப் போட்டு—சாதாரண மண்ணை அல்ல, மூத்திரம் கலந்த மண் என்று இந்த அவையிலே எடுத்துச்சொல்லி, 1½ மணி நேரம் இஸ்மாயில் அவர்கள் அறிக்கையின்மீது நாம் விவாதம் நடத்தியபோது, நான் பேசிய நேரத்திலே, எங்களுடைய வேதனையிலே பங்கு கொண்டு, தலைவர் அவர்களும் 'சுதந்திரப் போராட்டக் காலத்திலேகூட இப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்ததில்லை' என்று கூறி தலைவர் அவர்களும் கண்ணீர் விட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட மூன்று முறை கண்ணாடியைக் கழற்றினார்கள். தன்னுடைய கண்களைக் கர்சீப்பால் துடைத்துக்கொண்டு தன் வேதனையைக் காட்டினார்கள். அதற்குப் பின்னாலே மூன்று ஆண்டு காலம் கழிந்த பிறகு, அந்தக் கொடுமைகளைச் செய்த திரு. வித்தியாசாகர் என்பவர் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார், அந்தக் கொடுமைகளுக்குச் சொந்தக்காரர் அவருக்கு மேலும் பதவி உயர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக முயற்சிக்கிறார் என்று சொன்னால், நீதிக்கு தலைவணங்கக்கூடிய லட்சணமா இது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள்கூட சிறைச் சாலையிலே இருந்தார்கள். சிறைச்சாலையிலே நடந்த கொடுமைகளை இன்றைய தினம் ஆளும் கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் அறிவார்கள். நம்முடைய நண்பர் அடியார் அவர்களும் இருந்தார்கள். நானும் நண்பர் திரு. நீலநாராயணனும் அங்கேயிருந்து கத்தல் போடாமல் இருந்திருந்தால் அவர் மறைந்து போய் 4 ஆண்டுகள் ஆகியிருக்கும். அவருடைய பிரஷர் 16 என்ற அளவுக்கு வந்துவிட்டது. டாக்டர் வர மறுக்கிறார். கத்துகிறோம். அதற்குப் பின்னாலே வந்து பார்த்து, மோசமான நிலையிலே மருத்துவ மனையிலே கொண்டு போய்ச் சேர்த்து, எப்படியோ உயிர் பிழைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நல்ல நிலையிலே இருக்கிறார். அப்படிச் சாகக்கூடிய நிலைக்கே கொண்டு சென்ற ஒரு அதிகாரி திரு. வித்தியாசாகர். அவர்தான் அந்த சிறைச் சாலையிலே இருந்தார். அவருக்குப் பதவி உயர்வு கேட்கிறார்கள். அவருக்குப் பதவி உயர்வு கொடுப்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். அப்படி யோசிக்கவில்லையே என்பதற்காக வருத்தப்படவில்லை. அப்படிச் செய்தால், இந்த நாடு அதிகாரிகளை மன்னிக்காது. இன்றையதினம் சிறை அமைச்சராக இருக்கக்கூடிய நாவலர் அவர்கள் [illegible] பேசினார்கள் நாடாளுமன்றத் தேர்தலின்போது, ஒவ்வொரு இடத்திலேயும் இந்த அக்கிரமத்தை எடுத்துச் சொன்னார்கள். அதே வித்தியாசாகர் நீதிமன்றத்திலே போய்ச் சொன்னார்கள். 'அப்படி நாவலர் அவர்கள் பேசக்கூடாது என்று தடை போடுங்கள்' என்று கேட்டார். நான் கேட்கிறேன். இன்னமும்



நாவலர் அவர்களுக்கு நல்ல உள்ளம், இளகிய உள்ளம், அதிலே இன்னமும் நம்பிக்கை இருக்குமே என்று சொன்னால், இந்த ஆட்சி அவருக்குப் பதவி கொடுத்தது நியாயமானதா என்று கேட்க விரும்புகிறேன். இஸ்மாயில் கமிஷன் அறிக்கையே இல்லை என்று முடிவெடுத்து அந்த அறிக்கையைத் தீயிட்டுக்கொளுத்திவிட்டு அதற்குப் பின்னாலே அவருக்குப் பதவி உயர்வு கொடுக்கலாம். நாங்கள் மறுக்கவில்லை. அந்த அறிக்கையை உயிரோடு வைத்துக்கொண்டு அரசாங்கத்தின் ஏடாக வைத்துக்கொண்டு இப்படிச் செய்வது நாட்டை அவமதிப்பதாக ஆகும். திரு. இஸ்மாயில் அவர்கள் நேர்மையானவர்கள், நியாயமானவர்கள். அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர்கள், அந்த அளவுக்கு அவர்கள் பெருமைப்பட்டவர்கள். அவர்கள் கொடுத்த அறிக்கையை இன்று அலட்சியப்படுத்துவதுபோல இருக்கிறது. கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பதில் அளித்த போது சொன்னார்கள். ஒரு வழக்கு போடப்பட்டு ஆறு மாதத்திற்குமேல் ஒருவர் சஸ்பென்ஷனில் இருந்தால் அவரைப் பதவியில் அமர்த்துவதுபற்றிப் பரிசிலனை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே பதவியில் அமர்த்தினோம் என்று சொல்கின்றார் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள். விவாதத்திற்காகச் சொல்கிறேன். இந்த ஆட்சியில் ஆறு மாதத்திற்குமேலே சஸ்பெண்ட் செய்யப்பட்டு ஒருவர்தான் இருக்கிறாரா? திரு. கிருஷ்ணசாமி என்று ஒருவர் அப்படி இருந்துகொண்டிருக்கிறார். சட்ட மன்றத்திலே எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய பி.ஏ. ஆக இருந்தவர். அவர் மீது ஒரு வழக்குப் போட்டார்கள். அவர் நான்கு ஆண்டுக் காலமாக சஸ்பென்ஷனில் இருக்கிறார். ஒரு நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு திரு. வித்தியாசாகருக்குப் பொருந்துகிறது என்றால் ஏன் திரு. கிருஷ்ணசாமிக்குப் பொருந்தாது? அரசுக்கு வேண்டியவர்கள் என்றால்தான் அது பொருந்துமா? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் அந்தச் சலுகை இல்லையா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு இல்லையா? அவர்களுக்குக் கருணை காட்ட முடியாதா? அதைச் செய்ய முடியவில்லையா? அந்த நியாயம் வழங்க முடியவில்லையா? இது முறைதானா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. கிருஷ்ணசாமியின் வழக்கை விசாரிப்பதற்கு என்று ஒரு நீதிபதி. அவருக்கு வேறு வேலை இல்லை. அரசாங்கத்தின் சார்பில் வாதாட என்று மூன்று வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களில் இரண்டு வழக்கறிஞர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்கள். அதற்காக அரசாங்கம் செலவு செய்யும் பணம் ரூபாய் 15 லட்சம். வேதனையோடு கேட்கிறேன். ஒரு நாளாவது விசாரணை நடந்ததா? இது வரையிலும் அவர்மீது சார்ஜ் ஷீட் உண்டா? நீதிமன்றத்திற்கு அறிக்கை

வந்ததுண்டா? இதுவரையிலும் இல்லை. இப்படி ஒரு பக்கத்திலே தண்டிக்கிறார்கள். ஒரு பக்கத்திலே சலுகை கொடுக்கிறார்கள். அவருக்கு டி.ஐ.ஜி. யாகப் பதவி உயர்வு கேட்கிறார்கள். அந்தப் பதவி பற்றிய கோப்புகள் இருக்கின்றன. இந்த அவையில் பகிரங்கமாகச் சொல்கிறேன். அப்படிப்பட்ட நிலை வருகின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெளிவாகச் சொல்கிறேன். நான் எந்தக் கட்ட போராட்டத்திற்கும் தயார். உயர் நீதிமன்றத்திற்கு முன்னாலே அந்த அறிக்கையை நிச்சயமாக என்னுடைய தலைமையிலேயே எரிப்போம். அதனாலே எப்படிப்பட்ட தண்டனை என்றாலும் சரி அந்தத் தண்டனை மிசா கொடுமையைவிட மோசமாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த நிலைமைகளை ஏற்றுக்கொண்டு சிறைச்சாலைக்குச் செல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம். தனிப்பட்டவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்பதற்காக அக்கிரமங்கள் செய்பவர்களை அநியாயத்தைச் செய்பவர்களைப் பாதுகாக்கிறார்கள் என்றால் அதை எதிர்ப்போம் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அதற்கடுத்து அரசு அலுவலர்களுக்குச் சலுகைகள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு அகவிலைப்படி உயர்வுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நிதிநிலைமை அவ்வளவுதான் என்று நிதி அமைச்சரவர்கள் சொல்லலாம். அரசு ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறது. எப்போதெல்லாம் மத்திய அரசு மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படி கொடுக்கிறதோ அல்லது மாற்றி அமைக்கிறதோ அப்போதெல்லாம் மாநில அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படி கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் 1—9—1980 முதல் கொடுக்கப்படவேண்டிய அகவிலைப்படி உயர்வு 1—12—1980-க்குத் தள்ளப்படுகிறது. 1—9—1980 லிருந்து அகவிலைப்படி தர வேண்டுமென்பது கடைப்பிடித்து வருகிற ஒரு கொள்கை. அதைக்கூட மீறி அரசாங்க ஊழியர்களுக்கு நியாயம் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. அதற்காக அவர்கள் போராடக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எத்தனையோ போராட்டங்களை சந்தித்து வருகிற அரசு, இதையெல்லாம் தவிர்க்க ஏன் கருதக்கூடாதென்று கேட்க விரும்புகிறேன். அதிலும் நாவலர் அவர்கள் நிதானமானவர். அவர் முயற்சிக்கக்கூடாதா என்று உரிமையோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மதுவிலக்குபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பல பேர் அதைப் பற்றிப் பேசிவிட்டார்கள். மதுவிலக்கு என்பது நம் நாட்டில் காலாவதியாகிவிட்டது. நம்முடைய நிதி அமைச்சரவர்கள் சட்ட மன்றத்திலே காலப்



போக்கில் அதை முழுமையாகத் தளர்த்தினாலும் தளர்த்துவோமென்று சொல்லிவிட்டார்கள். எனவே அதைப்பற்றிப் பேசவில்லை. மதுவிலக்கைத் தளர்த்துங்கள். வேறு வழியில்லை. கஜானாவில் பணமில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இப்படிப்பட்ட நிலை வந்தபோது இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், அன்றைய தினம் தி.மு.க. பொதுக்குழுவில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதற்காக எதிர்க்கவில்லை. எதிலும் ஒருமுறை பின்பற்றப்பட வேண்டாமா? தமிழ்நாட்டில் நல்லவர்கள் கிடையாதா? நாணயமானவர்கள் கிடையாதா? சாராயத்தைப் பாட்டில்களில் அடைக்க வெளிநாட்டிலிருந்து ஒருவர் வர வேண்டுமா? அவர் சந்திர மண்டலத்திலிருந்து கற்றுக்கொண்டு வந்தாரா? இதற்கு என்ன செய்யப் போகிறார்கள்? நான் கேள்விப்பட்டேன், மதுக் கடைகளைப் பொறுத்தவரையில் ஏலம் விட்டால்தான் வருமானம் வரும். ஏலம் விடாமல் அரசாங்கம் தான் நினைத்தவர்களுக்கு உரிமம் கொடுப்பதென்றால் எழுதி வைத்துக்கொள்ளுங்கள், 200 கோடி ரூபாய் எதிர்பார்த்தால், 100 கோடி ரூபாய்கூட வரப் போவதில்லை. நல்லவேளையாக நிதித் துறைச் செயலாளர் அவர்கள் கொஞ்சம் நியாயங்களை எடுத்துப் பேசக்கூடியவர் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் உண்மையை உணர்த்த வேண்டும். இதனால் ஏற்படும் விளைவுகளைச் சொல்ல வேண்டும். அரசாங்கத்தில் உள்ள எல்லோருக்கும், எல்லாம் தெரியுமென்று நான் நினைக்கவில்லை. தெரியாத சூழ்நிலையில், விளக்குவதற்காகத்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள். தவறுகள் நேரும்போது சுட்டிக்காட்டத்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள். அதிகாரிகள் அந்தக் கடமைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, பொதுவாக தவறுகள் நடப்பதைக் குறைக்க வேண்டும். தவறுகளே நடக்கக்கூடாதென்றுதான் அரசாங்கத்திலே இருப்பவர்கள் முயற்சி எடுப்பார்கள். அதிலும் அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அதிக அக்கறை உள்ளவர்கள். எந்தத் தவறும் நடக்கக்கூடாது என்பதில் அவருக்கு அதிக அக்கறை. அவருடைய துறையில் நடக்கும் தவறுகளைப் பத்திரிகைகள் சொல்லுகின்றன. 9—3—1980 தேதியிட்ட தினமணி இதழில் செய்தி வந்திருக்கிறது. இதுவரையில் கோயில்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட [illegible] கப்பட்டு, அவைகளின் நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல. இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள [illegible] மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டி, [illegible], [illegible] செய்ய [illegible] லாரிகளில் கடத்தப்பட்டு வருகின்றன. அண்மையில் கூட, 17—9—1980-ல் அந்நியப் [illegible] சோதனைச் சாவடி வழியாக 50,000 ரூபாய் மதிப்புள்ள மூங்கில் [illegible] குச்சிகளைத்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1981 மார்ச் 31

திருட்டுத் தனமாக கடத்திச் சென்ற இரண்டு லாரிகள், டி.என்.டி.யூ. 2115, டி.என்.ஏ.எ. 2026, கண்டுபிடிக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டதென்று தெரியவில்லை. இதிலே மீஞ்சூர் வரதராசன், பாரஸ்டர் மனோகரன், பாரஸ்டர் ராசேந்திரன் ஆகியோரெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடாதென்று அரசாங்கம் சொல்லிக்கொண்டு இந்தத் தவறுகள் பிடிக்கப்பட்ட பிறகு அவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறதென்பதையும் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறதென்று அறிவித்திருக்கிறதென்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இதைப்போலவே, இந்த ஆட்சியில் நிர்வாகத் திறமையின்மையும், ஊழலும் எங்கும் கொடி கட்டிப் பறப்பதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆம்னி பஸ் ஊழல் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். திடீரென்று ஆகாயத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தது போலவும், திடீரென்று பிடித்தது போலவும், பிடித்தவுடன் 156 பேர்கள் கைது என்றும் அறிக்கை வருகிறது. பிறகு என்னவாயிற்று? ஆம்னிபஸ் ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டார்களா? நீதி மன்றங்களுக்கு அழைத்து வரப்பட்டவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா? அதில் சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன. குற்றவாளிகளைத் தப்பவிட்டிருக்கிறார்கள். நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். இதிலே யார் யார், யார் யாருக்கெல்லாம் உறவு, எப்படியெல்லாம் ஆளுங் கட்சிக்காரர்களுக்கு உறவு என்று நான் சொல்லுவதற்குத் தயார். ஆனால் சொல்லத் தேவையில்லை. எவ்வளவு சொன்னாலும் இந்த அரசாங்கம் கவலைப்படப் போவதில்லை. சமுதாயத்திற்கும், நாட்டுக்கும் உண்மையைச் சொல்ல வேண்டுமென்று இவைகளைச் சொல்கிறேன். மற்றவர்களைப் பார்த்து இவர்கள் ஊழல் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது எவ்வளவு ஊழல்கள் ஆளுங் கட்சியால் நடத்தப்படுகின்றன என்பதற்காகத்தான் இவ்வளவும் சொல்லுகிறேன்.

இன்னும் ஒன்று. மணலியிலிருந்து திருவொற்றியூர் வழியாக தண்டையார் பேட்டைக்கு [illegible] குழாய் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட மசகு எண்ணெய். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான எண்ணெய் வருகிறது. அந்த எண்ணெயை யார் கொள்ளை அடித்தார்கள்? ஒரு லட்சமா, இரண்டு லட்சமா? மத்திய அரசு அதைக் கணக்கிடுகிறது. 2 கோடி ரூபாய்க்கும் அதிகமாகக் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. இதை மத்திய அரசா வந்து கண்காணிக்கும்? மத்திய அரசின் சொத்தையே இந்த நாட்டிலே கொள்ளை அடிக்கும் கூட்டம் இருக்கிறது. அதைக் கண்டிக்க அரசாங்கம் முன்வரவில்லை என்றால் சாதாரண வீராசாமி, ஆறுமுகம், நீலநாராயணன் போன்றவர்



1981 மார்ச் 31] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

களுக்குப் பாதுகாப்பு எங்கே கிடைக்கப் போகிறது? மத்திய அரசின் அந்தத் துறையிலேயிருந்து புகார் கொடுத்ததற்குப் பின்னாலே என்ன நிலைமைகள் என்பதைப் பார்க்க வேண்டும். மசகு எண்ணெய் திருடியவர்கள் ஆளுங் கட்சிக்கு வேண்டியவர்கள். அப்படி வேண்டியவர்களாக இருந்தும், காவல் துறை அதிகாரி நடவடிக்கை எடுத்தார். சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்தார். வழக்கைப் பதிவு செய்தார். அவர்தான் டி.எஸ்.பி. திரு. ஜெயராம். இரண்டு கோடி ரூபாய்க்கு ஊழல், கொள்ளை அடித்திருக்கிறார்கள். அதிலே பிடிபட்டவர்கள் ஆளுங்கட்சிக்காரர்கள். கைது செய்தது டி.எஸ்.பி. அதற்காக உடனடியாக அவர் திருவொற்றியூரிலிருந்து மாற்றப்படுகிறார். ஆளுங் கட்சிக்காரர்கள் என்று தெரிந்த பிறகு கைது செய்யலாமா? கொள்ளை அடிக்கத்தானே அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே கைது செய்த பரிதாபத்திற்குரிய டி.எஸ்.பி. மாற்றப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட அக்கிரமங்கள் நாட்டிலே நிறைய இருக்கின்றன.

ஆளுங் கட்சிக்கு நிதி தேவை. வேறு நிதிய கிடையாது. வேறு எங்கேயிருந்துதான் வசூல் செய்ய வேண்டும் கட்சி நிதிக்கு. தலைமை நிலைய அச்சக நிதி என்று வசூல் செய்யப்பட்டது. எல்லாக் கட்சிகளும் வசூல் செய்யும். அந்த வசூலுக்குள்ளே போகவில்லை. திடீரென்று ஒருவர் பெயரில் 90,000 ரூபாய்—யாராவது ஒரு தனிப்பட்ட நபர் 10 நாட்களிலே 90,000 ரூபாய் நிதி வசூல் செய்ய முடியுமென்றால் அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ளலாமென்று ஆசை. அப்படிப்பட்ட சக்தி ஆளுங் கட்சியிலே பலருக்கு உண்டு. ரூ. 90,000 என்பார்கள், ரூ. 1,40,000 வசூல் செய்வார்கள். சில பேருக்கு நம்பர் போட்ட நூறு ரூபாய் டிக்கட் கொடுப்பார்கள், சில பேருக்கு டிக்கட்டிலே எண்ணே இருக்காது. அதிலேயும் டூப்ளிகேட் ஒரிஜினலும் இருக்கும், டூப்ளிகேட்டும் இருக்கும். அதிலே விகிதாச்சாரம் இருக்கிறதோ, என்னவோ, தெரியாது. இப்படிப்பட்ட தவறுகளும் நடந்திருக்கின்றன என்பதற்கு, ஒரு ஆதாரத்தைப் பார்வைக்கு வைக்கிறேன். இப்படித் தவறுகள் நடக்கின்றன. இது நடக்கக் கூடாதென்று ஆட்சியில் உள்ளவர்கள் நினைக்கலாம். அவர்களையும் மீறி நடக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கை என்று தெரிந்துகொள்ள, இதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய பஸ்கள் பெர்மிட் இல்லாமல் மைசூர் போகின்றன. அந்த வசூல் யாருக்குப் போகிறதோ, எனக்குத் தெரியாது. அங்கேயுள்ள அரசாங்கம் சோதனை போட்டபோது, இது தெரிய வருகிறது. தமிழ் நாட்டில், அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான 13 பஸ்கள் [illegible]. [illegible] பஸ்கள் போய், ஓடிக்கொண்டிருக்கின்றன என்ற தகவல் [illegible]; அந்த

செய்திகூட சுதேசமித்திரன் பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. இதற்கெல்லாம் அரசாங்கம் பதில் சொல்வதில்லை. சுதேசமித்திரன் அவர்கள் கட்சிக்கு சாதாரண பத்திரிக்கை. அதில் செய்தி போட்டால், பதில் சொல்ல வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படாது. அப்படிப்பட்ட நிலை இருக்கிற தென்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதற்கடுத்து, எரி சாராய ஊழலைப்பற்றிப் பலர் பேசிவிட்டார்கள். அதில் நான் அதிகமாகப் பேசப் போவதில்லை. அதனுடைய முடிவு என்ன என்பது எனக்குத் தெரியும். அதிலிருந்து இந்த ஆட்சியாளர்கள் தப்பப் போவதில்லை. தப்பவும் முடியாது. எரி சாராய ஊழல் என்பது 30 கோடி ரூபாய் அளவிலே இந்த நாட்டிலே நடைபெற்றது என்பது பட்டிதொட்டிகளில் பேசியாகி விட்டது. நாட்டு மக்களுக்குத் தெரியாத பிரச்சினையல்ல. அதற்கென்று விசாரணைக் கமிஷன் வருமென்று மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறது. அது வரலாமா, வரக்கூடாது என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. முதலிலிருந்தே ஒன்றை நாங்கள் சொல்லுகிறோம். இதில் முதலமைச்சரவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், ஆகவே மத்திய அரசு விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. இங்கே இருக்கக்கூடிய திரு. கைலாசம் அவர்கள், நீதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் உங்களுக்கு வேண்டியவர், குடும்ப நண்பர், எனவே 'நீங்களாகவே கேட்டு, மேல் மட்ட விசாரணைக்கு உட்படுத்திக்கொள்ளுங்கள்' என்றுதான் சொல்லுகிறோம்.

(முற்பகல் 11-20)

இப்போது கூட இந்த அரசு அப்படிப்பட்ட முடிவு எடுத்தால், நிச்சயமாக நாங்கள் பாராட்டுவோம். இங்கே இருக்கக்கூடிய யாருக்கும் மாநில சுயாட்சிக் கோரிக்கையில் பின்தங்கியவர்கள் அல்ல நாங்கள். ஆனால் ஏதோ மத்திய அரசிலிருந்து ஒரு விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று நாங்கள் ஆசைப்பட்டவர்கள்கூட அல்ல. தவறு நடந்திருக்கிறது. இந்தத் தவறை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அரசினர் நிரபராதிகளாக இருந்தால், மகிழ்ச்சியடைபவர்கள் நாங்கள். ஆகவே தான் இந்தப் பொருளை மத்திய நீதி விசாரணைக்கு உட்படுத்துங்கள் என்று சொன்னோம். ஆனால் இந்த அரசினர் அதைக் கேட்கவில்லை. இப்போது மத்திய அரசிலிருந்து வரும் என்று சொல்லுகிறார்கள். வந்துகொண்டேயிருக்கிறது என்று சொல்லு கிறார்கள். எப்போது வருமோ அப்போது வரட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் இதைப்பற்றி. ஆனால் எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம், எரி சாராயத்திலே சம்பந்தப்பட்டிருக்கிற இரண்டு ஆலைகள் பற்றி நம்முடைய



பொதுக் கணக்குக் குழு 1980-81 ஆம் ஆண்டிலே இந்த அவைக்குக் கொடுத்த அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வடி சாலைகளில் விற்கப்பட்ட சாராயத்திற்கான விலை வித்தியாசத் தொகையை இந்த அரசு வசூலிக்கவில்லை. அதை வசூலிக்க இந்த அரசு தவறிவிட்டது. கஜானா காலி, பணம் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கோடிக் கணக்கில் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் வசூலிக்க வேண்டிய தொகையையும் வசூலிக்காமல் தவறிப் போயிருக்கிறது Orient Chemicals and Distilleries Arvind Distilleries . ஓரியன்ட் வடி சாலையிலிருந்து வர வேண்டிய தொகை ரூபாய் 14 லட்சத்து 75 ஆயிரம், வட்டி 3 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய். அரவிந்த் வடி சாலையிலிருந்து வர வேண்டிய தொகை ரூபாய் 7 லட்சத்து 84 ஆயிரம். வட்டி ரூபாய் 2.6 லட்சம். இவ்வளவு பெரிய தொகையை இந்த அரசு தனிப்பட்ட இரண்டு தொழிற்சாலைகளுக்கும் சலுகை காட்டுவானேன்? ஏன் வசூல் செய்யவில்லை? அதேசமயத்தில் 80 ரூபாய் கமர்சியல் டாக்சை ஒருவர் கட்டவில்லையென்று சொல்லி, ஜப்தி நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். அதேபோல் மைலாப்பூரைச் சேர்ந்தவர் திரு. கிருஷ்ணன் என்பவர். இவர் 3,000 ரூபாய் கட்டவில்லையென்று சொல்லி, ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவருடைய மனைவி "என்னுடைய கணவன் ஊரில் இல்லை" என்று சொல்லியும் கேட்காமல் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், அவர்கள் அரசு உத்தரவு அப்படி, ஆகவே அதெல்லாம் முடியாது என்று சொல்லுகிறார்கள், 3 ஆயிரம் ரூபாய் கட்டவில்லையென்று சொல்லி அங்கே போய் ஜப்தி செய்கிறார்கள். இங்கே 14 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வர வேண்டியிருக்கிறது, அதிலும் கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையடித்த ஒரு தொழிற்சாலை 1978 ஆம் ஆண்டிலிருந்து அரசுக்குக் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டாமல் இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். 3 ஆண்டுக் காலமாக அந்தத் தொழிற்சாலை அரசுக்குக் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டவில்லையென்று தெரிந்தும்கூட, அந்தப் பணத்தை அரசாங்கம் வசூல் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 11.30-க்கு உள்ளாவது பேசி முடித்தால்தான், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடிக்க முடியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எவ்வளவு பணத்தை இந்த அரசு இப்படி யெல்லாம் வசூல் செய்யாமல் இருக்கிறது என்பதையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில், இவற்றையெல்லாம் இந்த அரசு வசூலிக்கும் என்று எதிர்

பார்ப்பதில் அர்த்தமில்லை. இவ்வளவு செலவு செய்யப் போகிறோம் என்று சொல்வதிலும் அர்த்தமில்லை. மாண்புமிகு தலைவரவர்கள் நேரமில்லையென்று சொல்லிவிட்ட காரணத்தால் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எப்போதும் தலைவர் மீதுதான் பழியா? (சிரிப்பு).

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இல்லையில்லை, தலைவரவர்களே, தாங்கள் இவ்வளவு நேரம் எனக்குப் பேசுவதற்குக் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவரவர்கள் இன்னும் கூடுதலாக நேரம் கொடுத்தாலும், இன்னும் சொல்லிக்கொண்டேயிருப்பேன். நாள் முழுவதும்கூட சொல்லுவதற்கான விஷயங்கள் இருக்கின்றன. அதற்கான நீண்ட பட்டியல் ஆதாரத்துடன் இருக்கிறது.

அடுத்து, முக்கியமான ஒன்றை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பாம்பன் பாலம் கட்ட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 'எஸ்டிமேட்' போட்டார்கள். 532.87 லட்சம் ரூபாய் அதற்காகச் செலவாகும் என்று எதிர்பார்த்தார்கள். பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தது. விலைவாசியும் ஏறிவிட்டது. பிறகு அந்த எஸ்டிமேட் ரிவைஸ்ட் எஸ்டிமேட் ஆக 815.83 லட்சம் ரூபாய்க்குப் போடப்பட்டது. அதன் பிறகு அந்த வேலை ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. "Advance Report of the Comptroller and Auditor-General of India for the year 1979-80, Union Government (Civil)". மத்திய அரசிலே, பாராளுமன்றத்திலே வைக்கப்பட்ட ஒரு அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதற்காக ஒரு பாராவை மட்டும் இங்கே படிக்கிறேன். அரசின் கவனத்திற்கும் இதை நான் கொண்டு வருகிறேன். இந்த அரசுக்கு யார் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

"Though the agreement provided that if the contractor fails to maintain proportionate progress between non-navigation stand and navigation stand, no interim payment need be made to him. Payment to the, tune of Rs. 221.34 lakhs was made in contravention of the agreement. The excess payment under this agreement amounted to Rs. 132.70 lakhs."



என்று சொல்லியிருக்கிறார்கள். பாம்பன் பாலம் கட்ட காண்டிராக்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் செய்யாத வேலைக்கு ஒப்பந்தத்திற்கு முரணாக 132.70 லட்சம் ரூபாயை இந்த அரசு கொடுத்திருக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டை ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பெரிய குற்றச்சாட்டை அவர் சொல்லியிருக்கிறார் என்றால், இதுவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலமாக இருந்திருந்தால் 'ஊழலோ ஊழல், கொள்ளையோ கொள்ளை' என்று சொல்லியிருப்பார்கள், அதுமட்டுமல்ல "கருணாநிதிக்கு எவ்வளவு பங்கு?" என்று கேட்டிருப்பார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் பங்கு வாங்கினார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இன்றைக்குப் பெரிய அதிகாரிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்களே அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? இவ்வளவு அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கின்றனவே இதற்கு விளக்கம்தான் என்ன? இப்படி இந்த அரசைப் பொறுத்தவரையில், ஊழல்கள் வர வர மலிந்துகொண்டே போகின்றன. அதைக் கண்டுபிடிக்க வேண்டியவர்கள் கண்டு பிடித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

கொள்ளைகள், கொலைகள் இன்றையதினம் நாட்டிலே அன்றாட நடவடிக்கையாக ஆகிவிட்டன. இன்றையதினம் 'இந்து' பத்திரிகையில் கூட இதைப்பற்றிக் கூறுகையில், தினம் ஒரு கொலை, கொள்ளை விதம் நடைபெறுகிறதே, அப்படியானால் இவையெல்லாம் 'லிகலைஸ்' செய்யப்பட்டுவிட்டனவா என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைய ஆட்சியில் இவைகள் அதிகரித்துள்ளன. ஊழல்கள் நாற்றம் அடித்துள்ளன. வறட்சியால் மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது. விலைவாசியை எட்டிப் பிடிக்க முடியவில்லை. விவசாயிகள் இன்றையதினம் வேதனையில் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை மிகவும் கேவலமாக இருக்கிறது. அரசு ஊழியர்கள் அகதிகளாகி விடுவார்களோ என்கிற அச்சம், அபாயம் அவர்களிடம் அன்றாடம் பெருகிக்கொண்டிருக்கிறது. சாராய சாம்ராஜ்யத்தினால் நாடோடிகள் லட்சாதிபதிகளாகிக் கொண்டிருக்கிறார்கள். நிர்வாகம் ஸ்தம்பித்திருக்கிறது. நாளைக்கு ஒரு கொள்ளை, கொலை நடைபெறுகிறது. ஆளும் கட்சிக்குள்ளேயே இராணிப்பேட்டையில் குத்து வெட்டு ஏற்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், முதலமைச்சர் அறையிலேயே ஒரு பைத்தியம் நுழைந்திருக்கக்கூடிய, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை மிகவும் வேதனையோடு தெரிவித்து, அமைகிறேன்; வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் சென்ற 7 நாட்களாக இம்மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். 1981-82 ஆம் ஆண்டில் வரவினங்கள் எந்தெந்த வகைகளில் அமைந்திருக்கின்றன என்பது பற்றியும், செலவினங்கள் எந்தெந்த வகைகளில் அமைந்திருக்கும் என்பது பற்றியும், புதிய திட்டங்களாக எவை எவை அறிவிக்கப்பட்டு இந்த அரசால் நிறைவேற்ற ஆயத்தமாக இருக்கின்றன என்பது பற்றியும் நான் இந்த நிதி நிலை அறிக்கையிலே மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன். இவற்றையெல்லாம் இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆராய்ந்து அறிந்து தங்களுடைய சீரான கருத்துக்களை, பரிந்துரைகளை வழங்க வேண்டுமென்றும், குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றும் கூறியிருந்தேன். அப்படிக் கூறுவதன் மூலம் தங்களுடைய பணிகளையெல்லாம் மிகவும் செம்மையாக முடித்து, நோக்கத்தை நிறைவேற்றுகின்ற அளவுக்கு மன்ற உறுப்பினர்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்றும், ஆதரவு தர வேண்டுமென்றும் கூறியிருந்தேன். அதன் அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற வேண்டுகோளையும் விடுத்திருந்தேன். இதைப்பற்றி மன்ற உறுப்பினர்களில் பலர் பாராட்டுரை வழங்கியிருக்கிறார்கள். அதே சமயத்தில், சிலர் பழித்தும் உரை வழங்கியிருக்கிறார்கள். இந்த அமைச்சரவை மீது வைத்திருக்கிற நம்பிக்கையையும், என் மீது வைத்திருக்கிற மதிப்பையும் ஏற்று, அதே சமயத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிற பணியினைப் பழுதற நிறைவேற்ற வேண்டுமென்ற கொள்கைக்கும் கோட்பாட்டுக்கும் நாங்கள் ஆளாகியிருக்கிறோம் என்கிற அளவுக்கு, இங்கே பாராட்டுரை நல்கிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையினை ஆராய்ந்து பார்த்து பாராட்ட வேண்டியவைகளையெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். தங்களுடைய கருத்துக்கு ஏற்ப, தங்களுடைய கொள்கைக் கோட்பாடுகளுக்கு ஏற்ப பாராட்டியும், திருத்தங்களை எடுத்துச் சொல்லியும் இருக்கிறார்கள். அதோடு செய்யப்பட வேண்டியவைகள் இவை இவை என்று பரிந்துரைகளையெல்லாம் கூடச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு கருத்துக்களைச் சொல்லியதுடன், இந்த அரசுக்கு உறுதுணையாக இருப்போம் என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பல்வேறு வகையான கருத்துக்களைச் சொன்னார்கள். சில பல இடங்களில் பாராட்டுக்களையும் தெரிவித்தார்கள். சில பல இடங்களில் குறைகளையும் சுட்டிக்





காட்டினார்கள். சில பல இடங்களில் குற்றச்சாட்டினைச் சொன்னார். சில பல இடங்களில் குற்றச்சாட்டினைச் சுமத்தினார். சில பல அதிகாரிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார். ஆகவே இந்த அறிக்கையை நல்ல முறையில் ஆராய்ந்து எடுத்திருக்கிறார்கள் என்பதனாலே அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில், இங்கே உள்ள மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே சில உறுப்பினர்கள் பாராட்டினைத் தெரிவித்தார்கள். நிதி நிலை அறிக்கையைப் பற்றி அவர்களுடைய நோக்கத்திற்கேற்ப, மனப்பான்மைக்கேற்ப பலர் பாராட்டியிருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கை சிறப்பான நிதி நிலை அறிக்கை என்றும், சீரான நிதி நிலை அறிக்கை என்றும், சிறந்த நிதி நிலை அறிக்கை என்றும், எந்த ஆண்டும் வெளி வராத முறையில் அமைந்துள்ள மிகச் சிறந்த நிதி நிலை அறிக்கை என்றும், ஏழையெளிய மக்கள், விவசாயிகள், உடல் ஊனமுற்றவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் சலுகைகள் வழங்கியுள்ள நிதி நிலை அறிக்கை என்றும், அரசு ஊழியர்களுக்கு நியாயமான சலுகைகளை வழங்கியுள்ள நிதி நிலை அறிக்கை என்றும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

ஆனால், வேறு சிலர் எடுத்துச் சொல்லும்போது, இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் இல்லை என்றும், இந்த நிதிநிலை அறிக்கை ஒரு ஏமாற்ற அறிக்கை என்றும், இது ஏமாற்றம் அளிக்கின்ற நிதிநிலை அறிக்கை என்றும், இதனாலே படித்தவர்களுக்கு மகிழ்ச்சியில்லை, அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியில்லை, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியில்லை, தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியில்லை என்றும், இந்த அரசை நினைத்து வேதனைப்படும் நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்றும், கானல் நீர் என்றும், குப்பைக் காகிதம் என்றும் அவரவர்கள் தங்களுடைய மனப்பான்மைக்கேற்ப எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் வைத்த நிதிநிலை அறிக்கை நன்றுதான். அதைப்பற்றிக் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்படும்போது, அவரவர்களுடைய நிலையிலிருந்து இந்தச் செய்திகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் காழ்ப்புணர்ச்சி கொண்ட படித்தவர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு மகிழ்ச்சி இருக்காதுதான். ஆனால், அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் இந்த அறிக்கையை ஆய்ந்து பார்க்கின்ற படித்தவர்கள், அரசு

ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியவர்கள் இதற்குப் பாராட்டுரைகள் வழங்கியிருக்கிறார்கள். அந்த அளவிலே பாராட்டுக்களைத் தெரிவித்தவர்கள் உண்டு. அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இது அரசைப்பற்றி நினைத்து வேதனைப்பட ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் இப்போது இங்கே இல்லாவிட்டாலும் கூட குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1,539 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டையும் கொடுத்து, 248 கோடி ரூபாய்க்கு புது வரியையும் போட்ட மத்திய அரசினுடைய பட்ஜெட்டைப் பார்த்து மகிழ்ந்திருந்ததன் விளைவு, நான் தந்த இந்த அறிக்கை அவருக்கு வேதனையளிக்கும் நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதைக் கண்டு உள்ளபடியே நான் ஆச்சரியப்படுகிறேன். 1,530 கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறை பட்ஜெட் போட்டு 248 கோடி ரூபாய்க்கு வரி போட்ட பட்ஜெட்டால் மகிழ்ச்சி ஏற்பட்டது போலவும், நான் அளித்த இந்த பட்ஜெட் வேதனை அளிக்கும் பட்ஜெட் போலவும் சொன்னார்கள். இது ஒரு கானல் நீர் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கண்களுக்கு அது அப்படித்தான் பட்டிருக்கிறது. இது ஒரு குப்பைக் காகிதம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். (மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களைப் பார்த்துச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தான் அவ்வாறு சொல்லவில்லையென்று தலையசைத்து மறுப்பு தெரிவித்தார்கள்). மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு சொன்னதாக எனக்குக் குறிப்பு தரப்பட்டிருக்கிறது. நான் இந்த அவையிலே இல்லாததன் காரணமாக, இந்த அவையிலே பேசிய பேச்சின் குறிப்புகள் எல்லாம் எனக்கு வந்தன. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப் பேசியதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசவில்லை என்று சொன்னால், அதிலே எனக்கு மகிழ்ச்சி.

திரு. நீலநாராயணன்: இந்த பட்ஜெட்டைப் பற்றி நான் குறிப்பிடும் போது 'கானல் நீர்' என்று சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'கானல் நீர்' என்ற பதத்தை நான் உபயோகப்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** உறுப்பினருடைய முகத்தைப் பார்த்தவுடனே நான் அப்படித்தான் நினைத்தேன். ஆனால், எனக்கு வந்திருக்கிற குறிப்பிலே இப்படி இருக்கிறது. ஆகவேதான் குறிப்பிட்டேன் இந்தத் தன்மைகளைப் பற்றியல்ல. பொதுவாக ஓர் உறுப்பின



ருடைய ஆதரவும், ஒத்துழைப்பும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களின் அடிப்படையிலேதான் கருத்துக்களை வைக்கிறோம். பிப்ரவரி கடைசியில் நிதிநிலை அறிக்கை அளித்திருக்க வேண்டும். மார்ச்சில் கொடுத்தால், கடமை தவறிய அரசு என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறினார்கள். மார்ச்சிலே தரக் கூடாது என்று சட்ட விதிகள் எதுவும் இல்லை. மார்ச் 31-ம் தேதிக்குள்ளாக சட்ட மன்றத்திலோ, பாராளுமன்றத்திலோ அடுத்த ஆண்டு அல்லது நான்கு மாதங்களுக்கோ, அடுத்த ஆண்டு முழுவதற்குமோ அரசு நடத்துவதற்கு நிதியொதுக்கீட்டுக்கு ஒப்புதல் பெற வேண்டுமென்ற அடிப்படையிலே வருகிறது. பல்வேறு அடிப்படையிலே பார்க்கின்றபோது, நாம் காலம் தாழ்த்தித் தந்திருக்கிறோம் என்ற நிலை கூட இப்போது இல்லை. ராஜஸ்தான் மாநிலத்தினுடைய நிதிநிலை அறிக்கை அல்லது வேறுபல மாநிலங்களின் நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லும்போது, மார்ச் மாதத்திலேதான் அவர்கள் தந்திருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் என்று சொன்னால் வரி போடும் மாதம் என்ற அளவிலேதான் நிலைமைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். 'முரசொலி' பத்திரிகையிலே நான் காலதாமதத்திலே இந்த அறிக்கையைக் கொண்டுவரவில்லை என்று சொல்லும் அளவுக்கு ஒரு கேலிச்சித்திரம் போட்டிருந்தார்கள். என்ன அந்தக் கேலிச்சித்திரம் என்றால், ஒரு திண்ணையிலே நான் பட்ஜெட்டைத் தலையில் வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருக்கிறேன். திரு. வெங்கடராமன் அவர்கள் பட்ஜெட்டை எனக்கு அளித்துக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் எவ்வளவுதான் இடித்துச் சொன்னாலும், பழித்துச் சொன்னாலும் அதைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல், அதைப்பற்றி வருத்தப்படாமல் நிம்மதியாகத் தூங்குகிறேன் என்பது மட்டும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. தூங்கும்போது கூட பட்ஜெட்டைப் பறிகொடுக்கும் நிலையில் நான் இல்லை என்பதும் தெரிகிறது. பட்ஜெட் சிந்தனையாகத்தான் நான் ஓயாமல் இருக்கிறேன் என்கிற அளவுக்கு கருத்து வெளிப்படுத்தியதற்கு மிக்க மகிழ்ச்சி. 21 ஆம் தேதிதான் நாம் அளிக்கிறோம் என்று சொன்னாலும் கூட, மார்ச் 6 ஆம் தேதிதான் ராஜஸ்தான் மாநிலத்திலே அளித்தார்கள். மஹாராஷ்டிரத்திலே மார்ச் 9 ஆம் தேதி அளித்தார்கள் மத்தியப் பிரதேசத்திலே மார்ச் மாதம் 9 ஆம் தேதி அளித்தார்கள். ஒரிசாவிலே 11 ஆம் தேதியும், பீஹாரிலே 13 ஆம் தேதியும், ஹரியானாவிலே 16 ஆம் தேதியும், கர்நாடகத்தில் 18 ஆம் தேதியிலும்தான் வெளியிட்டிருக்கிறார்கள். எல்லோரும் Vote on Account தான் எடுத்திருக்கிறார்கள். கேரளம் மார்ச் 20 ஆம் தேதி. தமிழ் நாடு மார்ச் 21 ஆம் தேதி. அஸ்ஸாம் 23 ஆம் தேதி.

பாண்டிச்சேரி 26 ஆம் தேதி. இமாசலப் பிரதேசம் 26 ஆம் தேதி. எல்லோரும் இப்படித்தான் வழங்கியிருக்கிறார்கள். இதிலே ஒன்றும் தவறு இல்லை. Deficit Budget போடும் நிலைதான் வருகிறது என்று சொன்னால், தொடர்ந்து நான்கு-ஐந்து ஆண்டுகளாக அகில இந்திய அளவிலே ஏற்படும் தன்மைகள் மாநிலங்களைத் தாக்குவதுதான் அதற்குக் காரணம், மத்திய அரசிலே ஏற்படுகின்ற விளைவுகள், மாநில அரசுகளுடைய போக்குகள், மாநில அரசுகளின் நிதி நிலைமைகள், நிதி யாதாரங்கள் போன்றவைகளைப் பெருமளவுக்குத் தாக்குகின்றன. மத்திய அரசினுடைய முயற்சிகளிலே ஏற்படும் விளைவுகள் எப்படித் தாக்குகின்றன என்பதற்கான காரண காரிய விளக்கங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறோம். 1977-லே இருந்து பார்த்தால் ஆண்டுக்கு ஆண்டு Deficit Budget போடும் நிலைமையிலேதான் மத்திய அரசு இருந்திருக்கிறது. அந்த நிலைமை நம்மையும் சேர்த்துத் தாக்குகிறது. 1977-78-லே 933 கோடி ரூபாய் மத்திய பட்ஜெட்டிலே துண்டு விழுகிறது. 1978-79 ஆம் ஆண்டை எடுத்துப் பார்த்தால் 1,506 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. 1979-80 ஆம் ஆண்டை எடுத்துப் பார்த்தால் 2,700 கோடி ரூபாய் துண்டுவிழும் பட்ஜெட்டாக அது இருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டிலே விழுந்த துண்டு 1,975 கோடி ரூபாய். 1981-82 ஆம் ஆண்டு 1,539 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இப்படிப் பட்ட துண்டு விழும் அறிக்கையைத்தான் அங்கே தந்திருக்கிறார்கள். மாநிலங்களுடைய நிலைமைகளைச் சொன்னால், புது வரி போட்டு, tax revenue, non-tax revenue என்ற அளவிலே வரி இல்லாத வருமானத்தைப் பெருக்குகின்ற வாய்ப்பு முறைகள் அதிகமாக இல்லாத அளவுக்கு மாநிலங்களை மத்திய அரசு வைத்திருப்பதால், பண வீக்கத்திற்கான தன்மைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். புது வரிகள் போட்டுத்தான் கடனைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. வரிகள் போடவில்லை என்று சொன்னால், நாசிக்கிலே அதிகமான அளவிலே நோட்டுகள் அச்சடிக்க வேண்டும். இப்படி நோட்டு அடிப்பது கடுமையாகப் பெருகியிருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன. மத்திய அரசு இதைச் செய்யும்போது அது மாநிலங்களையும் தாக்குகிறது. நான் இதைச் சொல்கிறேன் என்றால், மத்திய அரசைக் குற்றம் சொல்ல வேண்டும் என்றல்ல.

(முற்பகல் 11-40)

பற்றாக்குறை நிதிநிலையைப் பொறுத்தவரை ஒன்றை நான் இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன். பற்றாக்குறை பட்ஜெட் என்பது தமிழகத்தில் மட்டும் தயாரிக்கப்படவில்லை. எல்லா மாநிலங்களிலும் பொதுவாக இந்த



நிலைமை தான் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மகாராட்டிரத்தில் ரூ. 70,40,00,000 பற்றாக்குறை பட்ஜெட் தயாரிக்கப்பட்டது. கருநாடகத்தில் ரூ. 97,14,00,000 அளவுக்குத் துண்டுவிழும் பட்ஜெட்தான் தயாரிக்க முடிந்தது. பஞ்சாப் மாநிலத்தில் ரூ. 114 கோடி துண்டு விழும் பட்ஜெட்தான் தயாரிக்க முடிந்தது. இராஜஸ்தானில் 96 கோடி ரூபாயும், உத்திரப் பிரதேசத்தில் 95 கோடி ரூபாயும், ஆந்திரத்தில் 62 கோடி ரூபாயும், மேற்கு வங்கத்தில் 65 கோடி ரூபாயும் துண்டு விழும் பட்ஜெட்டைத்தான் தயாரிக்க முடிந்தது. அதைப்போலவே, தமிழகத்தில் நாம் ரூ. 111 கோடி துண்டுவிழும் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம். அசாம் மாநிலத்தில் ரூ. 79,26,00,000 துண்டுவிழும் பட்ஜெட் தயாரிக்கப் பட்டிருக்கிறது. புதுவை மாநிலத்தில் கூட, அதன் வரவு செலவு 41 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தாலும் அங்கேயும் ரூ. 5,11,00,000 துண்டுவிழும் பட்ஜெட்டைத்தான் தயாரிக்க முடிந்திருக்கிறது. இவ்வாறு அனைத்து மாநிலங்களுமே துண்டுவிழும் நிதிநிலை அறிக்கைகளைத்தான் தயாரிக்க வேண்டிய அவசியத்திற்கு வந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்போது, நமக்கிருக்கிற வரி வாய்ப்பு வசதிகள், வருமானத்தைப் பெறுவதற்கான சூழ்நிலைகள் போன்றவைகளுக்கு ஏற்ப நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டெல்லியில் மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையை அளித்த மாண்புமிகு நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்போது எந்த அளவுக்கு [illegible] முடிகிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்.

"The deficit may appear large; but, taking a total view of the economic situation, it is within the limits of fiscal prudence.".

அதனால் அதிகமான அளவுக்குத் துண்டுவிழும் நிதிநிலை அறிக்கையை வைக்க வேண்டிய அவசியம் வந்தால், ஒட்டுமொத்தமான பொருளாதாரச் சூழ்நிலையை வைத்துப் பார்க்கிறபோது அது இந்த அளவுக்குத்தான் அமையும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, பற்றாக்குறை என்பது பெரிதாகத் தோன்றலாம். ஆனால் தேசத்தின் ஒட்டுமொத்தமான பொரு

ளாதாரச் சூழ்நிலையைக் கணக்கில் கொண்டு பார்த்தால் நிதிநிலை அறிக்கை என்பது இந்த அளவுக்குத்தான் இருக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார். மேலும் அவர் தமது நிதிநிலை அறிக்கையை முடிக்கும்போது இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்.

"Economic policy can only do this much."

'இந்தப் பொருளாதார நிலையில் இவ்வளவுதான் செய்ய முடியும்" என்று சொல்லிவிட்டு மேலும் சொல்லுகிறார் :

"Hard work, discipline and the innate good sense of the people of this ancient land must do the rest."

அதாவது, இப்போது இருக்கிற பொருளாதாரச் சூழ்நிலையில் இவ்வளவுதான் செய்ய முடியும். மற்றவற்றைக் கடுமையான உழைப்பின் மூலமும், கட்டுப்பாடும் பழம்பெரும் நாட்டின் உள்ளார்ந்த நல்லுணர்வும்தான் மற்றவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இதை நான் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நினைவுகூற விரும்புகிறேன். காரணம் அவர்கள்தான் இந்தப் பற்றாக்குறையைப் பற்றி பெரிதும் குறிப்பிட்டார்கள்.

அதோடு மட்டுமல்ல, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு இறுதியாக பதிலளிக்கும்போதுகூட, இன்னொரு கருத்தையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

"When the Finance Minister is faced with the problem of inflation and rising prices and large sections of the people live below the provety line. does he go by what is stated in the plan documents?"

பண வீக்கம், விலைவாசி உயர்வு, மக்களின் பெரும் பகுதியினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நிலை ஆகியவை இருக்கும்போது அவைகளை யெல்லாம் எதிர்த்து நிதியமைச்சர் சமாளித்துக் கொண்டிருக்கும்போது, திட்ட அறிக்கையில் சொல்லியபடி செய்ய இயலுமா என்று கேட்டிருக்கிறார்.

ஆக, இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நிதியமைச்சர் சமாளித்துக் கொண்டிருக்கும் வேளையில், திட்டத்தின்படி செல்லவேண்டும் என்றால் அது எப்படி நடக்கும் என்று கேட்டிருக்கிறார். அந்த அளவிற்கு மத்திய அரசிலேயே சூழ்நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிடவே நான் இதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





நமது மாநிலத்தின் நிதித் தன்மைகளையும், மற்றவற்றையும் பார்க்கிற போது, அடிப்படையாக நமக்கு இருக்கிற பாங்கினை நாம் உணர்ந்தாக வேண்டும். அந்த அடிப்படையில் நின்று நாம் பெறுகிற வருவாய், நமக்கு இருக்கிற வசதிகள், நமக்கு இருக்கிற தேவைகள் ஆகிய அத்தனையும் கணக்கில் கொண்டுதான் தற்போது ரூ. 111 கோடிக்குத் துண்டு விழும் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. என்றாலும் அதை எதிர்காலத்தில் ஓரளவுக்காவது சமாளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் புதிதாக ரூ. 20 கோடி அளவுக்கு வரிகளைப் போட வேண்டிய இக்கட்டான நிலைமைக்கு வந்தோம்.

மதுவிலக்கைத் தளர்த்தியிருப்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்பதைப்பற்றிச் சரியாகக் குறிப்பிடவில்லை என்று இங்கே குறை கூறப்பட்டது. மதுவிலக்குக் கொள்கையில் சிலவற்றைத் தளர்த்தியிருக்கிறோம். ஆனால், அந்த முயற்சி குறித்து சட்ட வடிவம் கொடுத்து எந்த முறையில் நாம் நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைப் பொறுத்துதான் நாம் வருவாயைக் கணக்கிட முடியும். தற்போது, அதன் மூலம் எவ்வளவு வருவாய் வரும் என்று கணக்கிடுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. அதுபற்றிய கொள்கையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதற்கு முழுமையான சட்ட வடிவம் கொடுத்து, அவையில் வைத்து விவாதித்து, நாம் எந்த மாதத் திலிருந்து, எந்த அடிப்படையில் செய்யலாம் என்பதை முடிவு செய்த பிறகு தான் 1981-82 ஆம் ஆண்டில் நமக்கு எவ்வளவு வருவாய் வரும் என்று சரியாகக் கணக்கிட முடியும் என்றாலும், அடுத்த ஆண்டு எவ்வளவு வரும் என்று யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மதிப்பீடுகளைப்பற்றிச் சொல்லும்போது, நாம் போடுகிற மதிப்பீடு ஒன்று, ஆனால் மறு மதிப்பீடு போடும்போது அது அதிகமாகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். கடந்த 40 ஆண்டுக்காலமாக நிதிநிலை அறிக்கைகளை எடுத்துப் பார்த்தால், இதே நிலைமைதான் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது என்பது புலப்படும். எந்த ஆண்டும் இவ்வளவுதான் அரசுக்கு வருவாய் வரும் என்று யாராலும் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல முடியாது. சில நேரங்களில் மதிப்பீடு குறைவாக இருந்து, திருத்த மதிப்பீட்டில் அதிக வருவாயைக் காட்டியிருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால், வரவு-செலவு திட்ட உரையில் 64-வது பாராவில் இதற்கான விவரம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டு மின்சார வாரியத் திடமிருந்து பெற்ற வட்டித் தொகையான ரூ. 90.58 கோடி அரசின்

காலத்திலே மத்திய அரசுக்கு அனுப்பி வறட்சி நிவாரணப் பணிக்காக உதவி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், துணை அமைச்சர் அவர்களும் பதிலளித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் ஆர்.வி.எல். கூட, 'மத்திய அரசின் இரண்டு குழுக்கள் வரவிருக்கிறது. அவர்கள் வந்து ஆராய்ந்த பிறகு மேற்கொண்டு உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறோம்' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மத்திய அரசினுடைய வேளாண்மைத் துறை துணை அமைச்சர் அவர்கள், நேற்றைய தினம் முதலமைச்சரோடு பேசினார்கள் என்று சொல்கிறார்கள். நாம் நடத்திய பேச்சுவார்த்தையிலிருந்து நாம் எவ்வளவு பணத்தை மத்திய அரசிலிருந்து எதிர்பார்க்கிறோம், எவ்வளவு பணம் கொடுக்கப்போகிறார்கள் என்பது தெரிகிறதா ? எப்போது கிடைக்கும் என்பது தெரிகிறதா ? நேற்று நடந்த பேச்சுவார்த்தைகள் பற்றிய விவரத்தைத் தர இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம், புயல் நிவாரணம் ஆகியவற்றைக் குறித்து நாம் வைத்திருக்கின்ற விதிமுறைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அந்த விதிகளின்படி, புயல், வெள்ளம், வறட்சி போன்றவற்றின் மூலமாக ஏற்படும் கொடுமைகளைக் களைய, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆண்டுதோறும் மாநில அரசின் நிதிநிலை அறிக்கையில் 8 கோடியே 59 இலட்சம் ரூபாயை ஒதுக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறது. 1977-78-ல் ஒதுக்கப்பட்டது, அந்த ஆண்டில் ஏற்பட்ட பெரும் வெள்ளம், புயல் சேதம் ஆகியவற்றுக்குச் செலவழிந்துவிட்டது. இந்த ஆண்டு 8 கோடியே 59 இலட்சம் ரூபாயை நாம் வறட்சிப் பணிக்காக பயன்படுத்த வேண்டும். இந்தத் தொகை இந்த ஆண்டு போதாது என்ற நிலை வந்ததால், அதற்கு மேலும் வறட்சி நிலை நீடித்து மேலும் செலவழிக்க வேண்டுமானால், இந்த ஆண்டுத் திட்டத்திற்காக மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற பணத்தில் ஐந்து சதவிகிதத்திற்கு ஈடான தொகையை வறட்சிப் பணிக்காக நாம் பயன்படுத்தலாம் என்று மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுத்துத் தந்திருக்கிறது. அந்தத் தொகையைக் கணக்கிட்டு மத்திய அரசு நமக்குக் கடனாகத் தரும். ஆனால், அந்தத் தொகையை அடுத்தடுத்த ஆண்டுகளில் வருகிற திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் கழித்துவிடுவார்கள். இதற்கு 'அட்வான்ஸ் பிளான் அசிஸ்டென்ஸ்' என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். ஐந்து



சதவிகிதம் என்ற கணக்கைப் பார்க்கிறபோது, 8 கோடியே 59 இலட்சம் ரூபாய் தவிர மேலும் 25 கோடி ரூபாயைத் தரும். இப்போது நாம் உடனடியாகப் பயன்படுத்த அந்தத் தொகையைத் தருவார்கள். அந்த வகையில் 25 கோடி ரூபாய் வருகிறது என்றாலும், அதற்கு மேலும் வறட்சி நிலைமை போகுமானால், மத்திய அரசினுடைய குழுக்கள் ஆராய்ந்து பார்த்து எவ்வளவு தரலாம் என்று கூறுவார்கள். அவர்கள் தெரிவிக்கக் கூடிய தொகையில் 50 சதவிகிதத்தை மானியமாகவும், 50 சதவிகிதத்தைக் கடனாகவும் அறிவிப்பார்கள். இந்த நியதியின் அடிப்படையிலேதான் இப்போது பணியாற்றி வருகிறோம்.

இது வரையில் குடிதண்ணீர்க் கிணறுகளை ஆரம்படுத்த. . .

THIRU G. SWAMINATHAN: There was a recommendation by the Central Government that a revolving fund should be opened by every State Government for drought and flood relief. Have our Government got any revolving fund for drought reliefe.. If such a revolving fund has not been started already, may I know why it has not been started and whether there will be any proposal to start a revolving fund so that we may not get into difficulties especially during a lean year when we do not have adequate finances ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு புயல், வெள்ளம் போன்றவைகள் வராமல் இருந்தால், அந்தப் பணத்தை வேறு எதற்கும் செலவழிக்கக் கூடாது. அதை அப்படியே அடுத்த ஆண்டுக் கணக்குக்குக் கொண்டு வர வேண்டும். நான்கு ஆண்டுகளுக்கு பாதிப்பு ஏற்படாவிட்டால், இந்த 8 கோடியே 59 இலட்சம் ரூபாய் அப்படியே சேர்ந்து கொண்டே வரும். ஆனால் இப்போது அந்தப் பணம் இல்லை.

THIRU G. SWAMINATHAN: But, have we opened a revolving fund? If so, how much do we have in that revolving fund? We have to have a revolving fund. I would like to know whether we have got that fund and, if not, the reason why we do not have it.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது வரை நிதிநிலையைப் பொறுத்த வரையில், அப்படிப்பட்ட நிலை ஏற்படவில்லை. இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. 8 கோடியே 59 இலட்சம் ரூபாயை ஒதுக்க வேண்டும். செலவழிக்காவிட்டால் அடுத்த ஆண்டுக் கணக்குக்குக் கொண்டு

மானியத்திற்கு ஈடு செய்யப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் அது வருவாயாகக் கிடைக்காத காரணத்தால் வருவாய் மதிப்பீடு குறைவாக உள்ளது என்ற கருத்து அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடிட்டர் கணக்கு பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டுக்கான அறிக்கை இந்த அவையிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. கூடுதலான செலவு பற்றியும், அதிகமாகச் செலவழிக்கப்பட்ட காரணம் குறித்தும் சட்டமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு ஆராய்ந்து அறிக்கை அளிக்கிறது. எந்த ஆண்டு பார்த்தாலும், சில இனங்களில் ஒதுக்கிய தொகைக்கு மேல் செலவாகியிருக்கும். சில இனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை செலவழிக்கப்படாமலும் இருந்திருக்கும். ஆனால், அதற்கான காரிய காரணங்களையெல்லாம் கூறாமல் யாரும் ஏமாற்றிவிட முடியாது. அவை சட்டமன்றப் பொதுக் கணக்குக் குழுவால் மட்டுமல்லாமல் அக்கவுண்டெண்ட் ஜெனரால் அவர்களாலும் பரிசீலிக்கப்படுகின்றன. எனவே யாரும் ஏமாற்றிவிட முடியாது. அரசைப் பொறுத்தவரை ஏமாற்றுவதற்கு இடமேயில்லை. அவர்களால் ஆராய்ந்து சொல்லப்படும் கருத்துக்கள் இந்த மன்றத்திலேகூட வைக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டும் சில இனங்களில் ஒதுக்கிய தொகை போதாது என்று துணை மதிப்பீடுகள் வைக்க வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. இந்த ஆண்டு இரண்டு துணை மதிப்பீடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது பல்வேறு இனங்களில் அதிகமான தொகையைக் கேட்க வேண்டிய அவசியம் வந்தது. அதைப்போலவே சில இனங்களில் செலவழிக்கப்படாததற்கு என்ன காரணம் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுக் கணக்குக் குழு அதைத் தனித்தனியாகக் கேட்கும்போது அந்தந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அதற்கான விளக்கங்களை அவ்வப்போது தருவார்கள். எனவே, இதில் ஏமாற்றுவதற்கு எங்கேயும் வழியில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே முக்கியமாக வறட்சிப் பணிகள் குறித்துப் பேசப்பட்டது. வறட்சி ஏற்பட்டிருக்கிற நிலையில் நாம் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதற்கு எல்லா அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை. ஆக, அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்போடும், ஆளும் கட்சியின் ஒத்துழைப்போடும் நாம் இருக்கிற நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தென் மேற்கு பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று ஆகிய இரண்டு பருவக்காற்றுகளின் மூலமே நாம் மழையைப் பெற வேண்டியிருக்கிறது. தென்மேற்குப்



பருவ மழையைப் பொறுத்தவரையில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று திங்களில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்வதன் மூலம், பெரும்பாலான இடங்களில் பரவலான மழை பெய்வதால் காவிரி போன்ற ஆறுகளில் நிறைய தண்ணீர் வரும். இந்தப் பருவ மழை ஆண்டுக்கு ஆண்டு குறையாமல் இருந்தால் நமது மாநிலத்தில் இவ்வளவு விளையும் என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம். அதைப்போலவே வடகிழக்குப் பருவக் காற்றால் கிழக்குக் கடற்கரையோரம் இருக்கிற மாவட்டங்களிலும் மற்ற இடங்களிலும் நல்ல மழை பொழியும். ஆனால், சென்ற ஆண்டு இரண்டு பருவக் காற்றுகளின் மூலமாகவும் பெய்ய வேண்டிய மழையில் 40 சதவீதம் மழை குறைந்துவிட்டது. முழுவதுமாகக் குறைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. பெய்ய வேண்டிய மழையில் 40 சதவீத மழை குறைந்து விட்டது. சாதாரணமாக அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் வடகிழக்குப் பருவக்காற்று மூலம் மழையை எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 11-50)

அக்டோபரில் தவறினாலும் நவம்பரிலாவது பெய்யுமா என்று எதிர்பார்ப்பது இயற்கை. நவம்பரில் தவறினால் டிசம்பரிலாவது பெய்யுமா என்று எதிர்பார்ப்பது இயற்கை. தமிழகத்திலே அக்டோபரில் பெய்யாமல் நவம்பரில் பெருமழை பெய்து வெள்ளம் வந்த காலமும் உண்டு. நவம்பரில் ஏமாற்றி, டிசம்பரில் பெருமழை பெய்து வெள்ளம் வந்த காலமும் உண்டு. சில சமயங்களில் ஜனவரி முதல் வாரத்தில் மழை வந்த கணக்கும் இருக்கிறது. முதலிலேயே ஏன் மத்திய அரசுக்குத் தெரிவித்து நிதி உதவியைப் பெறவில்லை என்று சிலர் கேட்டிருக்கிறார்கள். நவம்பர் மாதத்திலே பாதிக்கப்பட்டிருந்த நிலைமையைப்பற்றி எழுத வேண்டுமென்றால், தெளிவாக எழுத வேண்டும். "வறட்சியாக இருக்கிறது; பணம் தாருங்கள்" என்று கேட்டால் தரமாட்டார்கள். திட்டவட்டமாக இன்னின்ன பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். அந்த வகையிலே நவம்பரில் எழுதியிருந்தால் இரண்டு மாவட்டங்களைப் பற்றி மட்டும் தான் எழுதியிருக்க வேண்டும். நவம்பரைத் தாண்டி டிசம்பர், ஜனவரிக்கு வரும்போது எழுதினாலும், 7 மாவட்டங்களைப் பற்றிய குறிப்புகளைத்தான் நாம் அளித்துத் தந்திருக்க முடியும். ஆனால் அதற்குப் பிறகு, மார்ச் மாதத்தில் கணக்கைத் தருகின்ற போது 11 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன, சில மாவட்டங்கள் அரைகுறையாகப் பாதிக்கப்பட்டன, சில மாவட்டங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன என்று தெரிவித்து, அது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய முழு விவரமான அறிக்கையை அன்றைக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 31

போக வேண்டும். நான்கு ஆண்டுகளுக்குப் பாதிப்பு இல்லையென்றால், அப்படியே மொத்தமாக இருக்கும். இந்த ஆண்டு புயல், வறட்சி ஏற்படுகிற போது, அந்தப் பணம் முழுவதையும் செலவழிக்கலாம் என்ற நியதியை வைத்திருக்கிறார்கள். வேறு வகையிலே "ரிவால்விங் பண்டு" என்று இல்லை. இந்த அடிப்படையிலே மத்திய அரசு உதவியைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

குடிதண்ணீர்க் கிணறுகளை ஆழப்படுத்த, புதிய குழாய்க் கிணறுகளைப் போட, மேம்பாடு பணிகளைச் செய்ய 695 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஏரிகள், குடிதண்ணீர் கிணறுகள், வெட்ட ஒரு கோடி ரூபாய் தரப்பட்டிருக்கிறது. தேவைப்பட்ட நகராட்சிகளில், பேரூராட்சிகளில் தொடர்ந்து நீரேற்றும் சாதனத்தை ஏற்படுத்தத் தேவையான மின்சாரத்தை அளிக்க தனி மின் வழங்கும் கம்பி இணைப்பைக் கொடுக்க 50 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக, ஏரிகள் மராமத்து, ஊரணி ஆகிய பணிகளுக்காக இவற்றைப் பஞ்சாயத்து யூனியன் மூலமாகச் செய்ய 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறை மூலம் பெரிய ஏரிகள் மராமத்து, நீர்ப்பாசன நிலையங்களுக்கு மராமத்துப் பணிகள் ஆகியவற்றுக்காக 950 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. லாரிகள், வண்டிகள் மூலம் தண்ணீரைக் கொண்டு செல்ல 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். ஆகமொத்தம் 21 கோடியே 45 இலட்சம் ரூபாயை மாநில சார்பாக பல்வேறு திட்டங்களுக்காக, நிவாரணப் பணிகளுக்காகச் செலவழித்திருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், மத்திய அரசு நமக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வறட்சிப் பணிகளில் கூடுதலான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த 13 ஆயிரத்து 50 டன் அரிசியையும், பணமாக 73,67,600 ரூபாயையும் தந்திருக்கிறார்கள். அரிசியின் விலை மதிப்பைக் கணக்கிட்டால் 2,15,32,500 ரூபாய் ஆகிறது. இதையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 24 கோடியே 5 இலட்சம் ரூபாய் அளவிற்கு நாம் செலவழித்திருக்கிறோம். இருந்தபோதிலும் மக்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் இருக்க, குடிதண்ணீர் கிடைக்காத இடங்களிலே நாமே லாரிகளின் மூலமாக குடிதண்ணீரைச் சேர்க்கும் பணிகளைப் போன்றவற்றிற்குச் செலவழிக்கும்போது மேலும் 137 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும் என்ற கணக்கை எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.



1981 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நாளை முதல் இரண்டு குழுக்கள்—ஆறு பேர் கொண்ட ஒரு குழு வட ஆற்காடு, தர்மபுரி ஆகிய அந்தப் பகுதிகளுக்கும், மற்றொரு குழுவினர் புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற அந்தப் பகுதிகளுக்கும் போக இருக்கிறார்கள். இரண்டு குழுக்களாகப் பிரிந்து நான்காம் நாள் வரையில் ஆய்ந்த பிறகு, அதிகாரிகள் உட்கார்ந்து பேசி, இந்த 137 கோடி ரூபாயில் எவ்வளவு தர முடியும், தர வேண்டியிருக்கும் என்று முடிவு செய்வார்கள். மக்களுக்கு எந்தவிதக் கஷ்டமும், தொல்லையும் ஏற்படாமலிருக்க 137 கோடி ரூபாய் தேவைப்படும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

THIRU G. SWAMINATHAN: The Prime Minister of India is said to be coming to our State for seeing the drought situation. Is there any information with the Government regarding that visit of the Prime Minister for seeing the drought relief work?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் துணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன், அவர்கள் "19, 20 ஆகிய தேதிகளில் இந்திய தலைமை அமைச்சர் அவர்கள் வருவார்கள், வறட்சிப் பகுதிகளைக் காண்பார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்திதான் நமக்குக் கிடைத்திருக்கிறது. அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. இனிமேல் தகவல் வந்தால் வரக்கூடும். அவர்கள் வந்து பார்த்தால், வரவேற்கத்தகுந்ததுதான். வந்து பார்த்தால் மிக நல்லது. துணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சுற்றுப்பயணம் செய்துவிட்டு நேற்று ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். நிவாரணப் பணிகள் சிறப்பாக, செம்மையாக நடைபெறுகின்றன என்றும், அதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வோம் என்றும் சொல்லியிருப்பதோடு மட்டுமல்லாமல், நேற்று அதிகாரிகளோடும், மாண்புமிகு முதலமைச்சரோடும் கலந்து பேசி அதற்கான திட்டங்களை வகுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதிகாரிகளும் மற்றவர்களும் கருத்துக்களை ஓரளவிற்குத் தெரிவித்திருக்கிறார்கள். தெரிவிக்க வேண்டிய நிலை வரும்போது, தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் செய்து கொண்டிருக்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்தில் 8—11—1980 அன்று வருவாய்த் துறை நிர்வாக அதிகாரி அனுப்பிய பரிந்துரை அரசுக்கு வந்தது. ஆனால் 25—11—1980 அன்று சுற்றறிப்பப்பட்டு 5—11—1981 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 9—12—1980 அன்று வந்த வருவாய்த் துறை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 31

ஆணையாளரின் பரிந்துரை 23 ஆம் தேதி சுற்றனுப்பப்பட்டு 26 ஆம் தேதி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 24 ஆம் தேதி வருவாய்த் துறை நிர்வாக ஆணையாளரிடமிருந்து வந்த பரிந்துரையை ஆய்வு செய்து 25 ஆம் தேதி அதாவது 25—11—1980 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

7—1—1981-ல் அவர்களிடத்திலிருந்து ஒரு கடிதம் அதற்குப் பிறகு 21—1—1981-ல் ஒரு சுற்றாணை அனுப்பப்படுகிறது. 21—1—1981 கடிதத்தின் அடிப்படையிலே, அதற்குப் பிறகு விரைவான நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரத்திலே எடுத்து முறைப்படுத்தியிருக்கிறார்கள். 1974-75-லே கூட இந்தமாதிரி நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்போது ஏற்பட்ட நிலைமைகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி யாரும் குறை சொல்வதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைப்போல, அப்போதும் நான் அமைச்சராக இருந்தவன். அப்போது இருந்த சூழ்நிலையைப் பற்றி இப்போது எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். 1974-75-லே பெரு மழை பெய்து, 11,439 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. சென்னை நகரம் தவிர, மற்ற மாவட்டங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருந்தன. 31—7—1975-ல் பத்து கோடி ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணத்திற்குத் தேவைப்படும் என்று இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அப்படி எழுதியிருந்தார்கள். மார்ச் மாத இறுதியில் 24 கோடி ரூபாய் அளவுக்குச் செலவழிக்க வேண்டியதாக இருந்திருக்கிறது. அந்தக் கட்டத்தில் இருந்தோம். 12—2—1974-ல் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 1974-75-லே அக்டோபர், டிசம்பர் நிலைமைகளின்படி அந்த அளவுக்கு ஒதுக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தோம். வறட்சி என்று வந்த உடனே நாம் எதையும் பார்க்க முடியாது. மக்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யவேண்டியதாக இருக்கும். அந்த நேரத்தில் எல்லாவற்றையும் உடனே முடிவு செய்ய முடியாது என்பது நன்றாகத் தெரியும். அப்போது இருந்த அரசு 12—12—1974-லே ஒதுக்கித் தந்தது. குடிநீர் வசதிக்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. சிறுபாசனத்திற்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 31—12—1974-லே மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 4—2—1975-லே ரூ. 5 கோடி அளவுக்கு ஒதுக்கப்பட்டது. ஆகமொத்தம் 10 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டது. அதற்குப் பிறகும் தொடர்ந்து ஒதுக்கவேண்டிய கட்டம் அவ்வப்போது ஏற்பட்டதே தவிர, அதிலே குறை



1981 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வில்லை. 1975-76-லே மேற்கொண்டு 15 கோடியே 80 லட்சம் ரூபாய், பிறகு ஏப்ரலில் ஆறு கோடியே 80 லட்சம் ரூபாய், அதற்கு அடுத்து 26—4—1975-ல் 2 கோடியே 50 லட்சம் ரூபாய், அதற்குப் பிறகு 8—7—1975-ல் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. மொத்தத்திலே 15.80 லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டியதாக வந்தது. அப்போது மத்திய அரசைக் கேட்டபோது, அது 7½ கோடி ரூபாய் தர முன் வந்தது. அந்த 7½ கோடி ரூபாயை 22—2—1975-ல் ஒரு கோடி 13 லட்சம் ரூபாயை மான்யமாகவும், 2 கோடியே 62 லட்சம் ரூபாயைக் கடனாகவும் கொடுத்தது. இப்போது இருக்கின்ற நிதி அமைச்சர் அவர்கள் ஐம்பது சதத்திற்கு ஐம்பது சதம் என்று தர இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 10—3—1975-லே மான்யம் ரூ. 75 லட்சம். கடன் ரூ. 1.75 லட்சம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் மொத்தம் கணக்கிட்ட வகையிலே கடனாகத் தந்தது 5.25 லட்சம். டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் அளவுக்குக் கேட்டார்கள். அதெல்லாம் நமக்கும் தெரியும். கணக்குப் பார்த்து அந்தப் பணம் வருகின்ற நிலைமைகள் இருந்தன. அதையெல்லாம் சரி பார்க்க 'பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி' இருக்கிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு கொடுப்பதைப்பற்றி சட்டமன்றத்திலேயும் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு கொடுக்கப்போவதில்லை என்று சொன்னால், இருப்பதை வைத்துச் சமாளிக்கப்போகிறோம் என்று அவர்களே சொல்ல வேண்டிய கட்டாயம் அப்போது ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, தண்ணீர் அளவு குறைந்து வருவதைப் பற்றிச் சொல்லவேண்டு மானால், இன்னும் இரண்டு வருடங்களுக்கு போதிய அளவு மழை பெய்ய வில்லை என்றால், 2 வருடங்களில் பயங்கரமான நிலைமைகள் ஏற்படக்கூடும். ஆகவே தான் சிக்கனமான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டு வருகி றோம். இயன்ற அளவுக்கு, எவ்வளவு அளவுக்குச் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக அகராதியை வைக்க வேண்டுமென்ற தேவையில்லை என்பதற்காகச் சொல்கிறேன். வேறு பல நிலைமைகளையும் இங்கே சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். சாயம் அளவையைப் பொறுத்த வரையில், வேலைகள் சிறப்பாக நடைபெறுகின்றன என்று எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் அவர்கள் கூடப் பேசும்போது, எந்த வகையில் நன்று செயல்படுகிறது என்பதைத்தான் அறிக்கை விட்டிருக்கிறார்கள். இதுபோல இன்னும் 5, 6 அறிக்கைகள் வந்திருக்கின்றன. அவைகளையெல் லாம் விளக்கமாகச் சொல்லவேண்டும் என்றால் அதற்கு இப்போது நேரம் இல்லை என்பதால் விட்டுவிடுகிறேன்.

அடுத்து, தண்ணீர் குறைவு ஏற்பட்டிருப்பதுபற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றித் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தண்ணீர் சேவையில்தான் கிடைக்கிறது என்று கூறுகிறார்கள். கார்டுகள் கொடுத்து, அட்டைகள் கொடுத்துத்தான் தருகிறார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சினை சங்ககிரியில் இருக்கின்றது என்று சொன்னார்கள். அங்கே ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். சங்ககிரி அடிக்கடி பற்றாக்குறை ஏற்படுகின்ற பகுதிதான். அந்தப் பகுதிக்கு வேண்டிய அளவுக்குத் தண்ணீரை லாரிகளில் கொண்டு வந்து சேர்ப்பது அவசியம். அப்படிப்பட்ட நேரம் வருகின்றபோது, பிற இடங்களிலிருந்து கொண்டுவர வேண்டும். குறிப்பிட்ட இடங்களில் தண்ணீர் கிடைக்கவில்லையென்றால், குறிப்பிட்ட தண்ணீர் கிடைக்கின்ற இடங்களிலிருந்து அந்த இடங்களுக்குத் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தண்ணீர் கிடைக்காத இடமாக சங்ககிரி இருக்கிறது. சங்ககிரிக்குப் பக்கத்திலே காவிரி ஆறு ஓடுகிறது. அங்கேயிருந்து தண்ணீர் கொண்டு போய்க் கொடுப்பதாக இருக்கும். அந்த நேரத்தில் ஒருவரே பல தடவைகள் தண்ணீர் வாங்கிவிடுவார்கள் என்பதால், அடையாளக் கார்டுகள் தருகிறார்கள். அதைப்பற்றிய முழு விவரத்தையும் அறிந்து விளக்க வேண்டும் என்பதற்காக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை, இந்து பத்திரிகைகளில் எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். படத்தை எல்லாம் போட்டிருக்கிறார்கள். லாரியிலிருந்து தண்ணீரை எப்படி வாங்குகிறார்கள், தண்ணீரை லாரியிலிருந்து வாங்குவதற்கு மக்கள் கூட்டம் எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அடையாளக் கார்டு வாங்கப்பட்டு குடிநீர் சப்ளை செய்யப்படுகிறதா, பஞ்சாயத்துக்கள் தண்ணீரை விற்கிறார்களா என்பது பற்றியெல்லாம் சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டன. இதுபற்றி விசாரித்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் விற்கப்படவில்லை. அனைவருக்கும் குடிநீர் கிடைக்க கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அதிலே பெயர், தேதி ஆகியவை உள்ளன. பானையிலே, அல்லது அண்டாவிலே ஒருவர் தண்ணீர் பிடித்துக்கொண்டதும் கார்டில் அன்றைய தேதியில் பதிவு செய்யப்படுகிறது. இந்த முறையின் மூலமாக மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார்கள். நெருக்கடி என்று வருகின்றபோது, இருக்கின்ற தண்ணீரைப் பகிர்ந்துகொடுத்து சங்கடங்களைத் தீர்க்க முடியும் என்ற அளவில் செய்கின்ற ஏற்பாடே தவிர வேறல்ல. அங்கே தண்ணீர் விற்கப்படவும் இல்லை. நெருக்கடி வருகின்றபோது இருக்கின்ற தண்ணீரைப் பிரித்துக்கொடுத்து சங்கடங்களைத் தீர்க்கலாம். அரசு அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறது. 3 லாரிகள் மூலமாக இந்தப் பாதுகாப்பு தருகிறார்கள். 30 இடங்களில் காலை 8½





மணியிலிருந்து இரவு 8½ மணி வரையில் தருகிறார்கள். அப்படியிருந்தும் போதாத நிலை, பற்றாக்குறை பல இடங்களிலே இருக்கிறது. சில இடங்களில் தனிப்பட்டவர்கள் விற்கிறார்கள். அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் வசதி இருக்கிறது. அவர்கள் தண்ணீர் கிடைக்காமல் திண்டாடுபவர்களுக்கு இதுதான் சமயம் என்று விற்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஒரு குடம் இவ்வளவு, ஒரு சொம்பு இவ்வளவு என்று விற்கலாம். ஆனால் அதை அரசு செய்யவில்லை. அந்த நிலை ஏற்படாத அளவுக்குத்தான் அரசே பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அளவிலே முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது. இந்த வறட்சியைத் தீர்ப்பதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். நாம் பல பேர்களை நம்பிச் செய்யும்போது, சில குறைகள் ஏற்படுகின்றன. அங்கேயெல்லாம் மேற்பார்வையிடுபவர்கள், கண்காணிப்பு செய்பவர்கள், பொது மக்கள் சார்பிலே இருப்பவர்கள் எல்லாம் ஒத்துழைப்புத் தந்தால்தான் இப்படிப்பட்ட பணிகள் நல்லமுறையில் நடைபெற முடியும். அந்த ஒத்துழைப்பை மாண்புமிகு உறுப்பினர்களும் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவு நிலைமையைப்பற்றி இங்கே எடுத்துச்சொன்னார்கள். உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், நாம் சமாளித்துக்கொண்டு வருகிறோம். நாம் உணவு இல்லை என்று சொல்கின்ற நிலை ஏற்படக்கூடாது என்ற அளவில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அரிசியே கிடைக்காது என்ற நிலை ஏற்படவில்லை. அரசு அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறது. இருப்பில் உணவுப் பொருள்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. அந்தந்த மாவட்டங்களில் வறட்சி நிலைமைகள் ஏற்பட்டதால், உற்பத்தி குறைந்துவிட்ட காரணத்தினால், அரிசி கொடுப்பது, பங்கீடு செய்வது என்பது கஷ்டமாக இருக்கிறது. தாராளமாக அரிசி கிடைத்து வந்தபோது, நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கும் வியாபாரிகள் கொள்முதல் செய்வதற்கும் வித்தியாசம் இருந்தது. நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகளுக்குக் கொடுக்கும்போது, கிட்டத்தட்ட அதே விலைக்கு வெளியிலே கிடைத்தது. இன்னும் சொல்லப்போனால், 14 சதம் குறைவாகவே வெளியில் கிடைக்கின்ற நிலைமைகள் இருந்தன. இங்கே எஸ்டாபிளிஷ்மெண்ட் சார்ஜ் எல்லாம் இருந்ததால், நியாய விலை அதிகமாகவே இருந்தது. விலைகள் குறைவாக இருந்ததால், அவர்கள் வெளியிலேயே வாங்குகின்ற நிலைமை இருந்தது. உற்பத்தி குறைவாகிவிட்ட காரணமாக அந்தப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆகவே லெவி முறையிலே நாம் வாங்கி விற்கிறோம். அந்த அடிப்படையிலே

விநியோகிக்கின்றபோது, நாம் இட்டத்தட்ட 105 லட்சம் குடும்பக் கார்டுகள் தந்திருக்கிறோம். 105 லட்சம் கார்டுகளுக்கு நாம் விநியோகிக்கும்

(பிற்பகல் 12-10)

பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். 17,000 நியாய விலைக் கடைகள் மூலமாகவும், கூட்டுறவுத் துறை மூலமாகவும், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும் விநியோகத்தை மேற்கொண்டிருக்கிறோம். அடக்க விலைக்கு 65 பைசா குறைத்துத்தான் நாம் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும் போது சாதா ரக அரிசி ரூ. 1.75; சன்ன ரக அரிசி ரூ. 2; மிகச் சன்ன ரக அரிசி 2.15 என்று கொடுக்கிறோம். கடந்த நவம்பர் மாதத்தில் 15,000 டன்கள் விநியோகிக்கப்பட்டன. இப்போது எல்லோரும் இந்தக் கடைகளிலே வாங்குவதால், பிப்ரவரி மாதத்தில் 35,000 டன் அரிசி விநியோகம் செய்தோம். அந்த அளவிற்குக் கொடுக்க வேண்டி வந்தது. மார்ச் மாதம் 40,000 டன் அளவிற்கு அது உயர்ந்துவிட்டது. அடுத்த மாதத்திற்குக் கணக்குப் பார்க்கிறபோது 65,000 டன் அளவிற்குக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமென்று தெரிய வருகிறது. இப்போது இருக்கும் இருப்பு இரண்டு மாத காலத்திற்குத்தான் இருக்கும். ஆனால் கையிருப்பை ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் வரை காப்பாற்றித் தர வேண்டும். அதற்குப் பிறகு மழை பெய்யுமென்ற நம்பிக்கையின் அடிப்படையில், அதற்குப் பிறகு குறுவை வருமென்ற அடிப்படையில், அதுவரை நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றுதான் லெவி முறையைக் கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் சங்கடம்தான். விருதுபட்டி போகிற சனியனை விலை கொடுத்து வீட்டுக்கு வா என்று கூப்பிடுவதுபோலத்தான். யாரும் வீணாகச் சனியனைக் கூப்பிடமாட்டார்கள். ஆந்திராவில் லெவி போடப்பட்டிருக்கிறது, பஞ்சாபில் லெவி போடப்பட்டிருக்கிறது, தமிழகத்தில் பற்றாக்குறை இருக்கும்போது ஏன் லெவி போடவில்லை என்று மத்திய அரசினர் கேட்டார்கள். காலப்போக்கில் இதனால் சங்கடங்கள் ஏற்படுவதால் லெவி போடவில்லை என்று சொன்னோம். லெவி போடாவிட்டால் மத்திய அரசு தராது, நீங்களும் லெவி போட்டு, கையிருப்பு காட்டினால்தான், நாங்கள் எங்கள் பங்கைத் தருவோமென்று மத்திய அரசு சொல்லிவிட்டது. எங்களையே எதிர்பார்த்தால் தர மாட்டோமென்று சொல்லிவிட்டது. அதற்குப் பிறகுதான் 40 சதவிகித லெவி போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் காரணமாக, இட்டத்தட்ட 2 லட்சம் டன் வருமென்று எதிர்பார்த்தோம். இதுவரை 60,000 டன் நெல்லும், 10,000 டன் அரிசியும்தான் கொள்முதலாகியிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, வெளி மார்க்கெட்டில் விற்கும் விலையில் வாங்க ஏற்பாடு செய்ததில், அவர்கள் 70,000 டன் வாங்கியிருக்கிறார்கள்.





அதை வைப்பிலேயே வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் வெளி மார்க்கெட்டிலே விற்கக்கூடாது, எப்போது விற்க வேண்டுமென்றும், எந்த விலையில் விற்க வேண்டுமென்றும் அரசு நிர்ணயித்த பிறகு, அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இல்லையென்றால் பல சங்கடங்களுக்கு ஆளாக நேரிடும் என்பதால்தான் இவ்வளவும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசிடம் 6 லட்சம் டன் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மாதா மாதம் 35,000 டன் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த மாதம் 60,000 டன் ஒதுக்கியிருக்கிறார்கள். போன மாதம் 30,000 டன் என்று குறைத்துக் கொடுத்தார்கள். ஆனால் இது வந்து சேருவதில்தான் கஷ்டம் ஏற்படுகிறது. ஆந்திர மாநிலத்திலிருந்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நாமும் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அவர்களும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அவைகளைக் கொண்டுவரப் போதுமான வேகன்கள் இல்லை. அவற்றையெல்லாம் சமாளித்து, இங்கே கொண்டு வந்து சேர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில், திருச்சி மாவட்டத்தில் போய்ப் பார்த்தால், வசதி படைத்தவர்கள் ஏராளமாக நெல் மூட்டைகளை அடுக்கி வைத்திருக்கிறார்கள். மார்க்கெட்டுக்கு அவர்கள் அதைக் கொண்டு வருவதில்லை. பின்னால் வறட்சி நிலைமைகள் வரும்போது அல்லது விலை ஏறும்போது, அதிக லாபம் கிடைக்குமென்று அப்படியே வைத்திருக்கிறார்கள். காலாகாலத்தில் விற்று விடுபவர்களும் உண்டு. நாணயமானவர்களும் உண்டு. சிலபல இடங்களில் அப்படியே வைத்துக்கொண்டு, நமக்கு விற்காமல், வியாபாரிகளும் வாங்க முடியாமல் இருக்கும். உங்கள் வீட்டிலேயே இருக்கட்டும், ஆனால் நான் வாங்கிய மாதிரி இருக்கட்டும், அங்கேயே இருக்கட்டும், 10, 10 மூட்டைகளாக எடுத்துச் சென்று விடுகிறோமென்றும் ஏற்பாடுகள் செய்துகொள்ளுகிறார்கள். இப்படி வெளியிலே வராமல், தடைபட்டு இருப்பதற்கு ஃபார்மர்ஸ் லெவி, ப்ரொட்யூசர்ஸ் லெவி போடவில்லை. போட வேண்டாமென்ற எண்ணத்தில்தான் இருக்கிறோம். ஆனால் நம்மிடம் எவ்வளவு நெல், அரிசி இருக்கிறதென்று கணக்கு தெரிவதற்குத்தான், இருபது குவிண்டாலுக்கு மேல் நெல் இருந்தால், எவ்வளவு என்று அறிவியுங்கள், 13 குவிண்டாலுக்கு மேல் அரிசி இருந்தால், எவ்வளவு என்று அறிவியுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். எனவே லெவி போடும் நிலைமை இல்லை. இவ்வளவு இருக்கிறது புழங்குவதற்கு என்று தெரியுமானால் திட்டவட்டமாக இவ்வளவு வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டு வாங்க வழி ஏற்படுமென்பதால், இந்த நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். ப்ரொட்யூசர்ஸ் லெவி போடுவதால் சங்கடங்கள்தான் அதிகமாக வரும் என்று அது வேண்டாமென்று நினைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலை உருவானால், ஒவ்வொரு

அதிகாரியும் ஒவ்வொரு வீட்டுக்கும் போக வேண்டி வரும். எல்லா அதிகாரிகளையும் நல்லவர்கள் என்று சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதுபோன்று நல்லவர்கள், நேர்மையானவர்கள் உண்டு. அப்படி இல்லாதவர்களும் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். வீட்டுக்குள்ளே நுழைவார்கள். படுக்கை அறையிலேகூட மூட்டை வைத்திருக்கலாம், தலையணையில் அரிசி இருக்கிறதா என்றுகூடக் கேட்கலாம். தலையணையில் பஞ்சு இருக்கிறதா, நெல் இருக்கிறதா என்று கேட்கலாம். அதற்காகத்தான் ஃபார்மர்ஸ் லெவி வேண்டாம, அவர்களாகக் கொடுக்கும் சூழ்நிலை வந்தால் நல்லதென்று அறிவித்திருக்கிறோம். மிகவும் நெருக்கடி வந்தால் என்ன செய்வது என்பதால்தான் இந்த ஏற்பாடு. ஆந்திராவிலிருந்து நெல் கொண்டு வந்தால் சங்கடங்கள் வருகிறதென்பதால், ஆந்திராவிலிருந்து நெல்லும், அரிசியும் எவ்வளவு வந்தாலும், லெவி கிடையாது, எவ்வளவு வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள் என்று சொல்லுகிறோம். எப்படியாவது தமிழ் நாட்டுக்குப் போதுமான நெல்லும், அரிசியும் கூடுதலாக வந்தால் போதுமென்று நினைக்கிறோம். ஆனால் இங்கே வந்த அரிசி, வெளியே போவதால் 40 சதவிகிதம் கொடுத்துவிட்டுத்தான் போக வேண்டும். தென் மாநிலங்கள் 'ஒன் ஜோன்' ஆக இருப்பதால், போகாமல் தடுக்க முடியாது. போனால், 40 சதவிகிதம் கொடுத்துவிட்டுப் போக வேண்டும். ஓரளவிற்கு விலை கூடுகிறதென்பது உண்மை. 40 சதவிகிதம் லெவி வாங்கிய பிறகு, அவர்கள் அதிக விலைக்கு வாங்கி, குறைந்த விலைக்குக் கொடுத்துவிட்ட பிறகு, மீதி 60 சதவிகித நெல்லில் விலையைத் தாக்கும் போது, கொஞ்சம் விலை ஏறத்தான் செய்யும். நெல் கிடைக்கவில்லை, அரிசி கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்படுவதைவிட, ஒரு கிலோ 5 ரூபாய், 6 ரூபாய் போய்விட்டதென்று இல்லாமல், சிறிது கூடினாலும், நெல், அரிசி கிடைக்கிறதென்ற நிலைமை உருவாகத்தான் இவ்வளவும் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, தென் ஆற்காடு மாவட்டம் மஞ்சக்குப்பத்தில் ஏற்பட்ட நிலைமைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அங்கே இருக்கும் நிலைமைகளைப் பொறுத்த வரையிலும், குறிப்பிட்ட கடையில் அரிசியும், மற்றவைகளும் எப்படிக் கிடைக்காமல் போயிற்று என்பதை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். அவர்களுடைய கணக்கைப் பார்த்தால் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் உள்ள நிலைமைகள் தெரியும். அவர்கள் கையிருப்பு அரிசியையும், வழங்கிய அரிசியையும் கூறுகிறேன். 4—2—1981-லே கையிருப்பு 4,887 டன்



இருந்திருக்கிறது. [illegible] இல்லை. 11—3—1981-ல் கையிருப்பு 4,487 டன்கள். வழங்கியது 1,049 டன்கள். 16—2—1981-ல் கையிருப்பு 5,25[illegible] டன்கள். வழங்கியது 857 டன்கள். 25—2—1981-ல் கையிருப்பு 5,75[illegible] டன்கள். வழங்கியது 951 டன்கள். 4—3—1981-ல் கையிருப்பு 5,132 டன்கள். வழங்கியது 785 டன்கள். 18—3—1981-ல் கையிருப்பு 5,643 டன்கள். வழங்கியது 1,204 டன்கள். ஆக தென் ஆற்காடு மாவட்டத்தில் 4,458 டன் அரிசி மொத்தமாக விநியோகிக்கப்பட்டிருக்கிறது, திருநெல்வேலி மாவட்டத்திற்கு அடுத்தபடியாக தென் ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக விநியோகிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட கடைகளில் கிடைக்கவில்லை என்பதற்குக் காரணம் இருக்கக்கூடும். [illegible] அரிசியை குறிப்பிட்ட காலத்தில் எடுக்கவில்லை என்ற குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டதற்கும், கையிருப்புக்கும் குறைவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*THIRU A. R. DAMODARAN: Sir, I would like the Hon. Minister to know a secret behind all these statistics. There is no point in quoting closing stock figures. Deliberately rice is not being issued, because the stock position is precarious and the District Authorities are worried that if they issue according to demand, they will land up with 'zero' stock. I would request the Hon. Minister to bear this in mind when statistics are furnished to him by District Officials.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இருக்கின்ற புள்ளி விவரத்தை நான் இந்த அவையிலே எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற நிலைமை [illegible] இருந்தால் அதிகாரிகளைக் கொண்டு, அதைப்பற்றி விசாரணை [illegible] உண்மை [illegible] இருக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு பொருள் வாணிபக் கழகத்திடம் தற்போது [illegible] டன் அரிசியும், அரிசிக்கு ஈடான நெல்லும் கையிருப்பு உள்ளது. அதனால் ஒரு மாதத்திற்கு, இரண்டு மாதங்களுக்குத் தட்டுப்பாடு இராது. நான் முதலிலேயே சொன்னபடி, அரிசி பற்றி எடுத்துச் சொல்லியிருப்பதால், அதைப்பற்றி மீண்டும் விளக்க வேண்டிய [illegible] என்று கருதுகிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சி பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் நாம் எந்த அளவிற்கு இந்த மாநிலத்தில் முன்னணியில் [illegible] வேண்டுமோ அந்த அளவிற்கு வைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். [illegible] நிலையில் பார்த்தாலும், தொழில் வளர்ச்சியில் நாம் ஓரளவிற்கு முன்னணியில்தான் இருக்கிறோமே தவிர, பின்னணியில் இல்லை.

(பிற்பகல் 12-20)

இன்னும் அதிகமாகச் செய்யலாமென்று இருக்கலாம். அப்படிப்பட்ட போட்டி இருந்தால், வெற்றி பெறலாம் என்பதைக்கூட கேட்கலாம். ஆனால் நாம் எந்த வகையிலும் பின்னடையவில்லை. தமிழக அரசு தொழில் வளர்ச்சிக்குத் தொழில் நிறுவனங்கள் மூலம் உதவி செய்கிறது. தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1977 வரை கடன் உதவி செய்தது 112.63 கோடி ரூபாய். 1980 ஆம் ஆண்டு வரையில் அதனுடைய உதவி 143.83 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இவ்வளவு அதிகமான தொகையை நாம் இப்போது உதவி செய்கிறோம். அதோடு, தொழிலை நடத்துபவர்களும் தங்களுடைய முதலீட்டைப் பல்மடங்கு அதிகமான அளவுக்குச் சேர்த்து தொழிலை நடத்துகிறார்கள். ஆண்டுக்கு 9 சதவிகிதம் என்கிற அளவுக்கு இது உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. 1977-லிருந்து 1980 ஆம் ஆண்டு வரையிலும்கூட இது உயர்ந்துகொண்டுதான் வந்திருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 312 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் 482 கோடி ரூபாய்க்குக் கூடுதல் முதலீடு செய்ய வழிவகை ஏற்பட்டது. 312 கோடி ரூபாயைத்தான் நாம் ஒதுக்குகிறோம் என்று சொன்னபோது தொழிலை நடத்துபவர்கள் போடுகின்ற பணத்தையும் எல்லாம் சேர்த்து மொத்த முதலீடு என்று பார்க்கும்போது, 482 கோடி ரூபாய்க்கு வருகிறது. அந்த வகையில் 4 லட்சத்து 12 ஆயிரம் பேர்களுக்குப் புதிதாக வேலைவாய்ப்புக் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கு 1966 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் உதவி செய்யப்பட்டு வந்தது. ஆனால், 1980 ஆம் ஆண்டில் அது 31.60 கோடி ரூபாயாக ஆகியுள்ளது. தொழில் முன்னேற்றத்திற்காக [illegible] எல்லாம் உதவி செய்தது 241 கோடி ரூபாய். ஆகவே 241 கோடி ரூபாய்க்கு கூடுதல் முதலீடு செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆறாவது திட்ட காலத்திலே முதலீட்டுத் தொகை 3 மடங்காக ஆகியிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதாவது, ஆறாவது திட்டக் காலத்திலே உதவியின் அளவு 154 கோடி ரூபாய் அளவுக்கு ஆகிவிட்டது. இப்படி நாம் கொடுப்பதன் மூலம் 530 புதிய முதலீட்டுத் தொழில்கள் உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொழில் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்குவதைப் பொறுத்தவரையில் எப்போதும் இந்த அளவுதான் இருக்கிறது. வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையிலும் நாம் இன்றைக்கு இந்தியாவில் மூன்றாவது இடத்தை வகிக்கிறோம். மகாராஷ்டிராவில் 12 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் 9 லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே 7 லட்சம் பேருக்கு புதிதாக வேலை வாய்ப்பு



அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழ் நாடு வேலைவாய்ப்பினைப் பொறுத்தவரையிலும் கூட, 3-வது இடத்தை வகிக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் உற்பத்தியைப் பொறுத்தவரையிலும் கூட, 1977-79 வரையில் இதனுடைய வளர்ச்சி 8.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இதனுடைய வளர்ச்சி 'ஆல் இந்தியா' அளவில் பார்த்தால் கூட, 7 சதவிகிதமாகத்தான் அமைந்திருக்கிறது. தொழில் உற்பத்தி நிதி என்பதைப் பொறுத்தவரையில், 1979 ஆம் ஆண்டைய நிதி என்னை 1980 ஆம் ஆண்டைய நிதி கணக்கோடு ஒப்பிடும்போது, அது தமிழகத்தைப் பொறுத்தவரையில், 10 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. ஆனால், 'ஆல் இந்தியா' அளவில் பார்க்கும்போது, 1.2 சதவிகிதம் தான் உயர்ந்திருக்கிறது. ஆகவே தமிழகம் இந்த விஷயத்திலும் ஓரளவு மன நிறைவு அளிக்கக்கூடிய வகையில் முனைப்புடன் வளர்ந்திருக்கிறது என்பதை நம்பிக்கையோடுதான் [illegible] வேண்டும். மற்றொன்றையும் சொல்கிறேன். ஐந்தாவது ஆண்டுத் திட்டத்தின்போது, நம்முடைய திட்டச் செலவுக்கு 122 கோடி ரூபாய்தான் செலவு செய்ய ஒதுக்கப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, 3,150 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டது. [illegible] இப்படி செய்யப்படவில்லை. மத்திய அரசின் திட்டக் குழுவும் மற்ற நாமும் ஆராய்ந்துதான் முடிவு செய்கிறோம். 1980-81 ஆம் ஆண்டு திட்டக் குழு 411 கோடி ரூபாய் அளிக்க ஒப்புக்கொண்டாலும் கூட, 454 கோடி ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் 411 கோடி ரூபாய்தான் தருவோம் என்று சொல்லி, 454 கோடி ரூபாய் தர மறுக்கிறார்கள். ஆகவே, அடுத்த ஆண்டுக்குக் கூட நாம் அதிகத் தொகை கேட்டிருக்கிறோம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தலா வாரி வருமானம் என்று கணக்குப் பார்த்தால், இருக்கக்கூடிய 14 பெரிய மாநிலங்களின் கணக்கை எடுத்துப் பார்த்தால்கூட, தமிழகம் 11-வது இடத்திலே இருந்தது. ஆறாவது திட்ட ஆரம்பத்தில் நம்முடைய தமிழகம் 9-வது இடத்திற்கு வந்தது. இப்போது இருக்கின்ற மக்கள் தொகையின் அடிப்படையில் கணக்குப் பார்த்தால், தமிழகம் தலா வாரி திட்ட அளவில் 5-வது இடத்திற்கு வந்திருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழகம் மிகக் குறைந்த அளவுக்குப் பிறப்பு விகிதத்திற்கு இப்போது வந்திருக்கிறது. ஆனாலும் நமது தலா வாரி வருமானம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, அப்படிப் பார்த்தாலும், தமிழகத்தின் வளர்ச்சி அதிகரித்துத்தான் இருக்கிறது. நம்முடைய திட்டத்திற்கு மத்திய அரசு அளிக்கும் நிதி உதவி குறைந்திருக்கிறது என்று இங்கே சொன்னார்கள். 1978-83 ஆம் ஆண்டிற்கான ஐந்தாண்டுத் திட்டத்தை ஜனதா ஆட்சியின்போது போட்டார்கள். நாடு முழுவதற்கும் 71 ஆயிரம் கோடிக்கான திட்டம் போடப்பட்டது. அதில் மாநிலங்களுக்கான 37,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

அப்படியானால் மாநிலங்களுக்கு ஒதுக்கியது 52.9 சதவிகிதம் வருகிறது. அதற்குப் பிறகு புதிய அரசாங்கம் மத்தியில வந்ததற்குப் பிறகு அதில் இரண்டு ஆண்டுகளை விட்டு விட்டு அந்த ஆட்சியின் கணக்கை வைத்துக்கொண்டு 1980-85 ஆம் ஐந்தாண்டுத் திட்டமாக அதை மாற்றினார்கள். அப்போது அவர்கள் நாடு முழுவதற்குமாக 97,500 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். அதில் மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 48,600 கோடி ரூபாய். அப்படியானால் இது 49.8 சதவிகிதம்தான் வருகிறது. ஜனதா ஆட்சியிலேபோது மாநிலங்களுக்கு என்று ஒதுக்கியது 52 சதவிகிதமாக இருக்க, இப்போது மத்திய அரசு ஒதுக்கியுள்ளது 49 சதவிகிதம்தான் என்கிற புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது, எவ்வளவு தூரம் ஒதுக்கீடு குறைந்திருக்கிறது என்பதை நாம் அறிய முடிகிறது. 1978-83 ஆம் ஐந்தாண்டு அளவில் மத்திய அரசின் மொத்த உதவி ரூ. 2,159 கோடியாக இருக்கும்போது, மாநில அரசுக்கு உதவி கணிசமாக இருந்தது, அதாவது 640 கோடி ரூபாய். அதாவது 29.59 சதவிகிதம் வருகிறது. அதை 30 சதவிகிதம் என்றே வைத்துக்கொள்வோம். ஆனால், 1980-85 ஆம் ஆண்டு மத்திய அரசின் உதவி 3,150 கோடி ரூபாயாக இருக்கும்போது மாநில அரசுக்கு உதவி 665 கோடி ரூபாய்தான். அப்படியானால் இது 21.11 சதவிகிதம்தான் வருகிறது. 1978-83 திட்டப்படி நமக்குக் கிடைக்க இருந்தது 29 சதவிகிதம். ஆனால், இப்போது நமக்கு 21 சதவிகிதம்தான் உதவி கிடைக்கிறது. இப்போது என்ன செய்துவிட்டார்கள் என்றால், காட்கில் பார்முலாவைக் கொண்டு வந்து புகுத்திவிட்டார்கள். காட்கில் பார்முலாவைக் கொண்டு வந்து மாற்றம் செய்துவிட்டார்கள். இப்போது 'கன்டினியூயிங் ரோலிங்' என்கிற முறையில் கொண்டு வந்துவிட்டார்கள். முன்பெல்லாம் 5 ஆண்டுத் திட்டக் காலத்திற்குள் ஒரு வேலை முடிவடையாமல் இருந்து விட்டால் கூட, அதற்குப் பிறகும் அந்த வகைக்கென்று உதவி செய்வது என்று இருந்தது. அதை எல்லோரும் எதிர்த்தார்கள். அப்படி கொடுக்கக்கூடாது என்று சொன்னதற்குப் பிறகு, அதை 20 சதவிகிதமாக ஆக்கினார்கள். வேறு முறையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மாநிலங்களைப் பார்த்து, அப்படிப்பட்ட மாநிலங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நாம் வாதிட்டோம். ஆனால் மத்திய அரசும், திட்டக் குழுவும் தனி நபர் வருமானத்தைத்தான் கணக்கில் எடுத்து நிதி ஒதுக்குவோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் நாங்கள் சொன்னபடி வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மாநிலங்களின் தன்மையைக் கணக்கில் எடுத்து நிதியை ஒதுக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆனால் சில பல தன்மைகளில் மாநிலங்களிலுள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மாநிலங்களின் தன்மையையும் கணக்கில் எடுத்து நிதி ஒதுக்கியதையும் நாங்கள் சுட்டிக் காட்டினோம். தனி நபர்





வருமானம் என்று பார்த்தால், 9 புள்ளிதான் நமக்கு வருகிறது. ஒரு ரூபாய்க்குக் குறைத்துத்தான் தருவோம். கூடுதலாகத் தர மாட்டோம் என்று சொன்னார்கள். ஆகவே அவர்கள் போட்ட பார்முலா அடிப்படையில்தான் நமக்குத் தொகை குறைந்துவிட்டது. இதை எங்களுக்குக் கட்டாயம் தர வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்களும் தருவார்கள் என்றுதான் எதிர்பார்க்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி முடியும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தொழில் வளர்ச்சித் திட்டங்களைப் பார்த்தால் கூட, அகில இந்திய அளவில் தனி நபர் சராசரி வருமானம் 1970-71 ஆம் ஆண்டு அடிப்படையை வைத்துப் பார்த்தால் 1976-77 ஆம் ஆண்டு 551 ரூபாய் என்று இருந்தது. 1977-78 ஆம் ஆண்டு 701 ரூபாய் என்று இருந்தது. 1978-79 ஆம் ஆண்டு [illegible] ரூபாய் என்று இருந்தது. ஆகவே, சராசரி 5 சதவிகிதம் வளர்ச்சி கொண்டிருந்திருக்கிறது. 30 ஆண்டுகால அகில இந்திய நிலைமை எடுத்துக்கொண்டால் கூட, ஐந்தாண்டுத் திட்டங்கள் இருக்கும்போதும் கூட 3 சதவிகித வளர்ச்சிதான் ஏற்பட்டிருக்கிறது. 5 சதவிகிதம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஏற்பட்ட வளர்ச்சியோ 3 சதவிகிதம்தான். இது ஒரு குறைபாடாகவே இருக்கிறது. 1976-77 ஆம் ஆண்டு [illegible] ரூபாய் என்றும், 1977-78 ஆம் ஆண்டு 643 ரூபாய் என்றும், 1978-79 ஆம் ஆண்டு 702 என்றும் தனி நபர் வருமானம் வருகிறது என்றால், நம்முடைய வளர்ச்சி 9.5 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது. அகில இந்திய வளர்ச்சி 5 சதவிகிதம் என்றால், நம்முடைய வளர்ச்சி 9.5 சதவிகிதம் வருகிறது. ஆகவே இந்த விகிதத்தில் நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோம். ஏழைகளுக்கு அதிக வேலைவாய்ப்பைத்தான் நாம் இன்றைக்கு எதிர்பார்க்கின்றேன். இன்னும் இந்த நிலை வளர வேண்டும். அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாம் வளர்ச்சிக்கான திட்டங்களைப் போடுகிறோம். ஆகவே தொழில் வளர்ச்சிக்காகவும், தனி நபர் வருமானத்தைப் பெருக்கவும் நாம் திட்டங்களைப் போட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். [illegible] நாங்கள் அறிகிறோம். அதற்கான வழி வகைகளைப் பெற்று அத்துறை வல்லுநர்கள் அதிகமாக முதலீடு செய்ய முன் வரவேண்டும். அந்த அடிப்படையில்தான் நம்முடைய நாட்டிலிருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முடியும்.

(பிற்பகல் 12-30)

அரசாங்கமே வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர முடியும். இப்பொழுதுகூட கார்ப்பரேஷன்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவருக்கும் எனக்கும் நன்றாகத் தெரியும். நம்முடைய நாட்டிலே பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மற்றவைகள் எல்லாம் எப்படி நடைபெறுகின்றன என்று. நான்கு ஆயிரம் பஸ்கள் நாம் வைத்துக் கொண்டாலும், 16 கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது. தனியார் கணக்கைப் பார்த்தால், வேறொரு பக்கத்திலே லாபம் வருகிறது. அதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு, என்ன காரணம்? அவரவர்களுடைய கொள்கை, கோட்பாடு மற்றவைகள் இதற்குக் காரணமாகச் சேர்கின்றன. நேற்றுகூட "Economic Times" பத்திரிகையிலே நான் பார்த்தேன். மத்திய அரசு எல்லா நிறுவனங்களுக்கும் சேர்த்து ஒதுக்கிய ரூபாய் 15 ஆயிரம் கோடி. அதிலே வருஷத்திற்கு ஏற்படும் நஷ்டம் 100 கோடி ரூபாய். அதுதான் பொது நிறுவனங்கள் இருக்கும் தன்மை. இதற்காகப் பொதுத் துறை வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. பொதுத் துறையிலே இன்னும் எவ்வளவு முனைப்பாக லாபம் வேண்டும், செலவினத்தை எப்படியெல்லாம் குறைக்க வேண்டும், வேலை நிறுத்தம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நாம் ஆராய வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அரசாங்கமே "Goods Transport Corporation" என்றொரு அமைப்பை வைத்துக்கொண்டு, சாமான்களை ஏற்றிச் செல்ல வேண்டும் என்று சொல்லும்போது, அரசாங்கத் துறையிலே இருக்கும் இலாக்காக்களே Goods Transport Corporation மூலம் அந்தச் சாமான்களைக் கொண்டு செல்ல வேண்டும் என்று நினைக்கவில்லை. அதைத் தனியாருக்குக் கொடுக்கிறார்கள். அப்படிச் செய்தால், எப்படி லாபம் வரும்? அதற்கு அரசாங்கமே உத்தரவு போடவில்லை, அமுல்படுத்தவில்லை என்று சொன்னால், எப்படி அந்தக் கார்ப்பரேஷன் உருப்படும்? ஒரு கார்ப்பரேஷனை மட்டும் உருவாக்கிவிட்டு, இப்படியொரு உத்தரவு போடாமல், அங்கே இருப்பவர்கள் எதிரே 4 பேரைப் பார்த்து மூட்டைகளை ஏற்றிக்கொண்டிருப்போம் (?), இப்போது இரண்டு ஆண்டுக் காலத்திலே 60 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு அரசாங்கப் பணம் விரயமாகியிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முழு புள்ளிவிவரங்கள், அது பற்றிய அடிப்படைச் சூழ்நிலைகள், விவரங்கள் இருந்தால், நான் தெளிவு படுத்துவேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற குறைபாடுகள் இருந்தால், அவற்றை நீக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது.



எந்த நோக்கத்திற்காக அந்தக் கார்ப்பரேஷன் நியமிக்கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேற நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையிலே ஆராய்ந்து விசாரித்து, குறைபாடுகளைப் போக்கி [illegible] நிறுவனத்தை லாபகரமாக இயங்கத் தக்க வகையில் [illegible] நடவடிக்கைகள் எடுக்கும். மற்றொன்று, குறிப்பாகப் பெட்ரோல், டீசல் ஆகிய ஆகியவைகளுக்குச் சர்ச்சை [illegible] உயர்த்தியது பற்றி எடுத்துச் சொன்னார்கள். விலை ஏறாது என்று நான் சொல்லவில்லை. விலைவாசி [illegible] ஏறும்போது, எப்போது ஏறினாலும், அதைக் கண்டிக்காமல் [illegible] இல்லை. [illegible] அவர்கள் கண்டிப்பது நியாயம். மத்திய அரசு விலை ஏற்றும்போதெல்லாம் [illegible] இந்திரா காங்கிரஸ் கட்சியினர் நாம் போட்ட [illegible] 'எல்லாம் போய்விட்டது' என்று சொன்னால் எப்படி? பெட்ரோல் விலை 1—1—1978-லே ரூ. 3.40. 1—3—1979-லே ரூ. 3.99. 17—[illegible]—1979-லே ரூபாய் 4.[illegible]. [illegible]—[illegible]—1980-லே ரூபாய் [illegible].91. [illegible]—[illegible]—1981-லே ரூபாய் 5.[illegible] என்ற அளவுக்கு வந்து நிற்கிறது. அதனால் திரு. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது [illegible] சொன்னார்கள். '[illegible] போடவில்லை என்பதற்காக [illegible] போட வேண்டுமா?' என்று [illegible]. வேண்டாம். விட்டு விடுவோம்.

* THIRU A. R. DAMODARAN: I am sorry I have to speak on behalf of the hon. Member Thiru Ramamoorthy. From 1st April 1978, the Central Government have not increased the taxation on petroleum products. They have increased the price, because the import bill has gone from 2,000 crores to 5,000 crores. Before 1st April 1978, they have charged and even now they are getting Rs. 1,300 crores from excise revenue. This should be removed and that is a valid argument.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. [illegible] வந்தபோதும் [illegible] இருக்கிறார். [illegible] [illegible]. இந்த நிலைமைகளிலே [illegible] வேண்டும் என்று [illegible] வந்தபோது தான், [illegible] மற்ற மாநிலங்களிலே [illegible] விதிக்கிறார்கள் என்று பார்க்கும்போது, கேரளத்திலே [illegible] 15 சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலே 12[illegible] சதவிகிதம் போட்டிருக்கிறார்கள். ஆந்திரத்திலே 11 சதவிகிதம் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே 5-லே இருந்து 6 ஆக என்று உயர்த்தி 11 சதவிகிதம் வரை போகலாம் என்று வைத்தோம். மகாராஷ்டிரத்துக்குச் சென்றாலே 20 சதவிகிதம் வரி. மத்தியப்பிரதேசத்திலே 10

சதவிகிதம் வரி. கர்நாடகாவிலே 11 சதவிகிதம் வரி. தமிழ்நாட்டிலே 9 சதவிகிதம் என்று இருந்ததைச் சற்று உயர்த்தி 11 சதவிகிதம் என்று ஆக்கினோம். இதையும் குறைக்க வேண்டுமென்று எல்லோரும் சொன்னதால் வரியைக் குறைப்பதனால் ஏற்படும் விளைவைவிட இதிலே போடப்படுகிற சர்சார்ஜ் வரியைக் குறைக்கலாம் என்ற முடிவை அறிவித்தேன். சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களிலே, முக்கியமான நகராட்சிகளிலே விற்பனை வரி மீதான கூடுதல் வரி முழுவதும் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிய மூன்றுக்கும் நீக்கப்படுகிறது. சென்னையைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டு போட்ட சர்சார்ஜ் 5 சதவிகிதம், ஏற்கனவே இருந்தது 5 சதவிகிதம், இரண்டும் சேர்த்து நீக்கப்படுகிறது. இது நாளையிலிருந்து அமுலுக்கு வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதனாலே மொத்தத்தில் அரசுக்கு ஏற்படும் இழப்பு 6½ கோடி ரூபாய். ஏற்கனவே இருந்த கவலையில் கொஞ்சம் அதிகம் இப்போது வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதுபோல, அறிக்கையிலே வருமானத்தின் அளவு எல்லோருடைய [illegible] என்று சொன்னால், [illegible] தெரிவித்தேன். [illegible] பரிகாரம் தேட எந்த தொகை தரும் அளவுக்கு [illegible] இல்லை. ஆனால், எந்த விளைவு ஏற்படும் என்று [illegible] இல்லை. இப்போது இந்த அளவுக்குத் [illegible] பட்டிருக்கிறது. அதுவும் [illegible] என்பதை இந்த வாய்ப்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு குறிப்பை மட்டும் குறிப்பிடுகிறேன். 'The Goods Transport Corporation is making profit for the last two year's— என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். [illegible] என்று சொல்கிறார்கள். [illegible] மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்ற [illegible] இன்னும் [illegible] லாபம் வரும் என்று சொன்னால் [illegible] நடவடிக்கை எடுக்கும்.

THIRU G. SWAMINATHAN : Sir, I only wish to point out that the rates of the Goods Transport Corporation are higher than those levied by Private Carriers. That is the reason why people do not go to the Goods Transport Corporation. Unless we reduce the rates levied by the said Corporation, there is no point in asking the Government departments to use the Goods Transport Corporation so that the money is transferred from one department to the other.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியதையும் ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டு அந்த அடிப்படையிலே முயற்சிகளை மேற்கொள்ளும். உண்மையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கட்டணம் கூடுதலாக இருந்தால், நாம் எந்த நோக்கத்துக்காக அதை வைத்திருக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாது. வேறு வகையிலே ஈடு செய்து அந்த நோக்கத்தை நிறைவேற்ற—வேறு வழிகளிலே ஈடுபடுவதிலே தவறு ஒன்றும் இல்லை. அதைப்பற்றியும் அரசு முயற்சிக்கும்.

விவசாயிகளுக்கு அளித்திருக்கும் சலுகைகளைப்பற்றிச் சொன்னால் இப்போது புள்ளிவிவரம் கேட்பார்கள். நான் புள்ளிவிவரங்களை Subject to correction என்ற முறையில் சொல்கிறேன். சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் செலுத்தவேண்டிய தண்டவட்டி முழுவதும் நீக்குவதன் மூலம் சாதாரண வட்டி முழுவதும் நீக்குவதன் மூலம் அவர்கள் எல்லாம் அசலைக் கட்டும் நிலையில் (தண்ட வட்டி—சாதாரண வட்டி இரண்டையும் நீக்குவதன் மூலம்) 33 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும். அரசு அந்தத் தொகையை கூட்டுறவு சங்கங்களுக்குத் தர வேண்டும். மற்ற விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் தண்ட வட்டியை நீக்குகிறோம். அதனால் 7 கோடி ரூபாய் தர வேண்டியிருக்கிறது. ஆகமொத்தம் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகளுக்குச் சலுகை தரும் சூழ்நிலை இருக்கிறது.

(பிற்பகல் 12.40)

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும் மற்றவர்களும் இங்கே பல்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மொத்தத்தில் மதுவிலக்கு குறித்து மூன்று வகையான கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மதுவிலக்கு தொடர்ந்து இருக்க வேண்டும், அது இன்னும் கடுமையாக ஆக்கப்பட வேண்டும் என்று ஒருவகை கருத்து தெரிவிக்கப்பட்டது. மதுவிலக்கே வேண்டாம், மதுவிலக்குப் பிரச்சினையில் தளர்த்துவது என்ற பேச்சுக்கே இடம் வேண்டாம், அதை அப்படியே அடியோடு ரத்து செய்துவிடலாம் என்று இரண்டாவது வகையான கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல் அடியோடு மதுவிலக்கை ரத்து செய்துவிடலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இன்னும் சிலர், மதுவிலக்கு இருக்க வேண்டும், அதைக் கொஞ்சம் வேண்டுமானால் தளர்த்தலாம், அதில் சிலபல கட்டுப்பாடுகளைக் கொண்டுவரலாம் என்று மூன்றாவது வகையான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 31

மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சட்ட மன்றப் பேரவையில் விளக்கமாக எடுத்துக் கூறியபடி ஒன்றை நாம் உணர வேண்டும். மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இங்கே கட்சி மாச்சர்யங்களுக்கு இடமேயில்லை. அதைப்போலவே நாங்களும் கட்சி மாச்சர்யத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையில் எந்த ஒரு முடிவையும் எடுக்கவில்லை. நாட்டிலுள்ள நிலைமைகளையும் மற்றவற்றையும் உணர்ந்து நாம் சிலபல முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன் காரணமாக மதுவிலக்குச் சட்டத்தில் சிலபல தளர்த்துதல்களையும் நாம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதோடு, சில கட்டுப்பாடுகளையும் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை உருவானது.

மதுவிலக்குக் கொள்கை என்று எடுத்துக்கொண்டால், எந்த ஒரு அரசியல் கட்சியும்—இந்த அவையில் இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிச் சொல்கிறேன்—மதுவிலக்கு வேண்டாம் என்று சொல்கிறவர்கள் யாருமில்லை. அத்தனை கட்சிகளும் மதுவிலக்குக் கொள்கையை ஒப்புக் கொள்கிறவர்கள், ஒப்புக் கொண்டவர்கள்தான். ஆனால், அந்தக் கொள்கையை நடைமுறைப் படுத்தும்போது, அது வெற்றிகரமாக அமைகிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக நாம் யாரும் மதுவிலக்குக் கொள்கையை விட்டுவிடவில்லை. அந்தக் கொள்கை அனைத்துக் கட்சிகளிடமும் இருக்கத்தான் செய்கிறது. எந்தக் கட்சியும் மதுவைக் கொண்டு வாருங்கள் என்றோ, பொதுமக்கள் மதுவைக் குடிக்க வேண்டும் என்றோ, அதுதான் உடம்புக்கு நல்லது என்றோ பிரச்சாரம் செய்கிறதில்லை. கள் வேண்டுவோர் கழகம் என்ற ஒரு அமைப்பைத் தவிர தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிக்காரர்களும் மதுவிலக்கு தேவை என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கள் வேண்டுவோர் கழகம் மட்டும்தான் மதுவிலக்கு வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, கடந்த பொதுத் தேர்தலில் பானைச் சின்னத்தோடு போட்டியிட்டார்கள். ஆனால் அப்படி எல்லோரும் ஆதரிக்கிற மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப் படுத்தும்போது ஏற்படுகிற கஷ்டங்களைப் பார்க்கும்போது, அதனால் ஏற்படுகிற மற்ற பிற தன்மைகளைப் பார்க்கும்போது இத்தகையதொரு முடிவை நாம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உருவாகிறது. பொய் சொல்லாமல் இருப்பது என்பதும், கள் உண்ணாமல் இருப்பது என்பதும் சமுதாயத்தில் உள்ள ஒழுங்கு நெறிகளாகும். அதை நாம் பிரச்சாரம் செய்து, மற்றவர்கள் அதைக் கடைப்பிடித்தால் அவர்கள் உயர்ந்தவர்களாகிறார்கள். இதன் காரணமாகத்தான் வள்ளுவர் கூட "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்றும் 'ஒழுக்கம் உயர்ந்தது' என்றும் கூறியிருக்கிறார். இப்படிப் பொய்



1981 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பேசாமை, கள்ளுண்ணாமை, சூதாடாமை போன்றவைகளெல்லாம் சமுதாயத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளாகும். இத்தகைய ஒழுக்க நெறிகளைச் சமுதாயத்தில் கடைப்பிடிப்பவர்கள் வாழ்க்கையில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். கடைப்பிடிக்காதவர்கள் சமுதாயத்தில் தாழ்ந்த மக்களாக, கீழ்மக்களாகக் கருதப்படுகிறார்கள். இத்தகைய ஒழுக்க நெறிகளையெல்லாம் நாம் பிரச்சாரம் செய்யும்போது இதைக் கடைப் பிடிப்பதற்கான மனப்பான்மை நாட்டு மக்களிடையே வளரும்.

ஆனால் இத்தகைய ஒழுக்க நெறிகளைச் சட்டம் போட்டுக் காப்பாற்ற முடியுமா என்றால் முடியாது. சட்டத்தின் மூலம் நாம் எந்தக் காலத்திலும் ஒழுக்க நெறிகளைக் கட்டுப்படுத்தவோ, வளர்க்கவோ முடியாது. ஒழுக்க நெறிகளுக்கு மதிப்பைத் தந்து நாம் ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டுமே தவிர சட்டம் போட்டு அதை ஏற்றுக்கொள்ளச் செய்ய இயலாது. ஒழுக்க நெறி களைக் கடைப்பிடிக்காமல் ஒருவர் இன்னொருவருக்குத் தீங்கு செய்தால் அதற்காக நாம் தண்டிக்கலாம். ஒருவரை மற்றொருவர் அடிக்கும்போது நீ ஏன் அவரை அடித்தாய் என்று கேட்டு அதற்காக அவரைத் தண்டிக்கலாம். அதைப்போலவே ஒருவருடைய பொருளை மற்றவர் திருடினால், நீ ஏன் அவருடைய பொருளைத் திருடினாய் என்று கேட்டு அந்தச் செயலுக்காக— ஒழுக்க நெறியிலிருந்து தவறியதற்காக—அவருக்குத் தண்டனை கொடுக்க லாம். ஆனால், ஒருவன் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லி அதைக் கடைப்பிடிக்கவில்லை என்பதற்காகவே தண்டனை கொடுத்துவிட முடியாது. எனவேதான் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்லிப் பார்க்கிறோம். அதைத்தான் இந்த நாட்டுப் பெரியோர்களும் அறிஞர்களும் விரும்பினார்கள். ஆக, மதுவிலக்கு வேண்டாம் என்று யார் சொல்லவில்லை? மது சாப்பிடக்கூடாது என்று யார்தான் சொல்லவில்லை? புத்தர் சொல்லிப் பார்த்தார், மகாவீரர் சொல்லிப் பார்த்தார், திருவள்ளுவர் சொல்லிப் பார்த்தார். நாயன்மார்களும், ஆழ்வார்களும் சொல்லிப் பார்த்தார்கள். பட்டினத்தடிகள் சொல்லிப் பார்த்தார். தாயுமானவர் சொல்லிப் பார்த்தார். இராமலிங்க அடிகள் நெஞ்சம் நெக்குருகச் சொல்லிப் பார்த்தார். காந்தியடிகள் சொல்லிப் பார்த்தார். வாழ்நாள் முழுவதும் அவர் அதைச் சொல்லிப் பார்த்தார். அவருக்குப் பின்னாலே மூதறிஞர் இராஜாஜி சொல்லிப் பார்த்தார். பெருந்தலைவர் காமராஜர் சொல்லிப் பார்த்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிப் பார்த்தார். இப்படி எல்லோரும் எடுத்துச் சொல்லிப் பார்த்தார்கள். ஆக, இப்படி இவ்வளவு பேர் எடுத்துச் சொல்லியிருந்தும்கூட இந்தக் கொள்கையை அமுல்

படுத்தும்போது, நடைமுறைப்படுத்தும்போது, நாம் விரும்பிய எண்ணம் நிறைவேறியதா என்றால் நிறைவேறவில்லை. அதைவிடத் தீங்குதான் அதிகமானது.

இப்படிப்பட்ட நிலைமை உருவாவதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வேறு ஏதாவது என்றால் அது தயாரிக்கப் படுவதை அரசாங்கத்தால் முழுமையாகத் தடுக்க முடியும். அரசாங்கம் "அக்ரோமைசினைத்" தடை செய்தது என்றால் அதை யாரும் குடிசையில் செய்துவிட முடியாது. அதைப்போலவே "ஆரோமைசினை"த் தடை. செய்தால், அதை வேறு எங்கேயும் தயார் செய்துவிட முடியாது. ஆனால், கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடாது என்று அரசாங்கம் ஒரு தடை விதித் தாலும், இந்தத் தடை வெகு சுலபமாக மீறப்பட்டுவிடுகிறது. காரணம் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்காகத் தேவைப்படும் பொருள்களைப் பொறுத்தவரை அவை எங்கேயும் பரவலாகக் கிடைக்கின்றன. அந்தப் பொருள்கள் மிக எளிதாகக் கிடைக்கின்றன. அவைகள் எங்கேயும் கிடைக்கின்றன. அதற்கு என்ன மூலப் பொருள் என்றால் பானை என்று சொல்கிறார்கள். விறகு என்று சொல்கிறார்கள். அடுப்பு என்று சொல்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: இவ்வளவு சுலபமாகவும், எளிமையாகவும் பானையை வைத்துக் கொண்டு காய்ச்சப்படும் சாராயம், குடிசைத் தொழிலாக இருப்பதால், அவ்வாறு குடிசைகளில் தயாரிப்பவர்களிடமே அரசு அதை வாங்கி விற்க முன்வருமா? ஆந்திரத்தில்கூட அப்படிப்பட்ட ஒரு முறை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்கள் முறைப்படியான சாராயத் தொழிற்சாலை வைப்பதற்கு முன்வருவார்களானால் அவர்களின் தகுதியைப் பார்த்துக்கூட நாம் அனுமதியைத் தரலாம். ஆனால் இன்றைய நிலையில் இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரால்தான் பலர் செத்துக் கொண்டிருக்கிறார்கள். வாழ வேண்டியவர்கள் அகாலத்தில் மரணமடைந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு அனுமதி தருவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இப்போது இருக்கிற தகராறே அதுதான். அவர்கள் காய்ச்சும் சாராயம்தான் தாராளமாகக் கிடைக்கிறது. அதனால்தான் இத்தகைய நிலைமைகளே உருவாகின்றன.





இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்திலேயே மதுவிலக்குபற்றித் தெளிவானதொரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பு இந்தியாவை ஆளுகிற மத்திய அரசுக்கு இருக்கிறது. அரசியல் சட்டத்தைப் பார்த்தால் அதில் உபயோகிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளின் கடுமை நமக்கு நன்கு புலப்படும். அரசியல் சட்டத்தின் 47-வது பிரிவில் "டைரெக்டிவ் பிரின்சிபிள்ஸ் ஆஃப் தி ஸ்டேட்" என்ற தலைப்பில் இது தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

"47. Duty of the State to raise the level of nutrition and the standard of living and to improve public health:—

The State shall regard the raising of the level of nutrition and the standard of living of its people and the improvement of public health as among its primary duties and, in particular, the State shall endeavour to bring about prohibition of the consumption except for medicinal purposes of intoxicating drinks and of drugs which are injurious to health."

அந்த அளவுக்கு "The State shall" என்ற வார்த்தையைத் தான் உபயோகித்திருக்கிறார்கள். அதாவது ஒவ்வொரு மாநிலமும் இதைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடிக்க முடிகிறதா என்றால் முடியவில்லை. அதற்குக் காரணங்கள் என்னவென்றால் இங்கே நிலவுகிற நிலைமைகள். இங்கே இருக்கும் குறைபாடுகளின் தன்மையைப் பார்த்தால், இதை ஏன் நம்மால் கண்டிப்பாக அமுல்படுத்த முடியவில்லை என்பது புரியும். இந்தக் கொள்கையிலிருந்து எந்த மாநிலமும் இன்று வரை பின்வாங்கவில்லை. ஆனால், என்ன நடந்தது என்றால் எல்லா மாநிலங்களும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மதுவிலக்கைத் தீவிரமாகக் கடைப்பிடித்துப் பார்த்துவிட்டு, தீவிரமான முறையில் சட்டம் கொண்டு வந்து பார்த்துவிட்டு, அதனால் கேடுகள்தான் அதிகமாக வருகின்றன என்பதைப் பார்த்துவிட்டு, அதன் காரணமாகத்தான் அந்த மாநிலங்களெல்லாம் மதுவிலக்கைக் கைவிட்டன. அதிலே என்ன கேடு வருகிறது என்றால், முறைப்படி காய்ச்சப்படாத சாராயத்தில் வேறு வேறு பொருள்கள் கலக்கப்படுவதால் நீண்டநாள் வாழ வேண்டியவர்கள், பல மாநிலங்களிலும் மிகக் குறைவான நாளிலே அதிகமான பேர் மாண்டுவிடுகிற நிலைமை ஏற்பட்டது. அதோடு

கள்ளச் சாராயம் காரணமாக, சிலர்—சமூக விரோதிகள்—அதிகமான பணத்தைச் சம்பாதிக்க முடிகிறது. இதன் காரணமாக, ஏராளமான பணம் அந்தச் சமூக விரோதிகளின் கையில் போய்ச் சேருவதால் அவர்களே ஊருக்குள் நாட்டாண்மை அதிகாரம் செய்கிற நிலை ஏற்படுகிறது. பணம் இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற அளவுக்கு சமூக விரோதிகள்—ஒருகாலத்தில் இருந்த நாட்டாண்மைகளை விலக்கிவிட்டு—நாட்டாண்மை செய்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஊரில் உள்ள நல்லவர்களும் இந்தச் சமூக விரோதிகளுக்கு அடங்கி நடக்க வேண்டிய அளவுக்கு இவர்களிடம் பணம் வந்து சேர்ந்திருக்கிறது. மூன்றாவதாகக் காவல் துறையில் பலர் ஒழுங்காக நடக்கிறார்கள். என்றாலும் அதிலும் சிலர் இருக்கிறார்கள். நாணயமாக நடக்க வேண்டியவர்கள் நாணயம் தவறி நடக்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிப் பலரும் எடுத்துச் சொன்னார்கள். வெளிப்படையாகவே இதுகுறித்து சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் எடுத்துச் சொல்லி, சில குறிப்பிட்ட காவல் நிலையங்களுக்கு மாதந்தோறும் ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு மாமூல் போகிறது என்று கூறினார்கள். அவர்களாகக் கேட்டுப் பெற்றால் அது லஞ்சம். ஆனால் இவர்களாகக் கொண்டுபோய்க் கொடுத்தால் அது மாமூல். இப்படி ஒரு காவல் நிலையத்திற்கு ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் என்ற அளவுக்கு மாமூல் போய்க் கொண்டிருந்தது. இவைகளையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று நாம் யாரை அனுப்புகிறோமோ அவர்களே—வேலியே பயிரை மேய்வது போல்—அந்தத் தவறைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அதற்கு மேல் சூப்பர்வைசர்களை வைத்தால்கூட அவர்கள் அனைவரும் சேர்ந்துவிடுகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிக்க இவரை அனுப்பினால் இவரையும் சேர்த்து அவர்கள் பிடித்துக் கொள்கிறார்கள். இதுதான் உண்மையாக இருந்து வந்த நிலை. ஆனால், இதற்காக நாம் மதுவிலக்கு கூடாது என்று சொல்லவில்லை.

ஆந்திரப் பிரதேசத்தில் 1949 அக்டோபர் 2 ஆம் தேதியன்று முழு அளவில் மதுவிலக்கு கொண்டுவரப்பட்டது. சென்னை ராஜதானியோடு இருந்த போது சில மாவட்டங்களில்மட்டுமே இருந்தது. ஆனால் 1948-க்குப் பிறகு முழு மதுவிலக்கு ஆந்திரத்தில் கொண்டு வரப்பட்டது.

(பிற்பகல் 12.50)

1953 ஆம் ஆண்டு வரையில் தமிழகத்திலே இருந்த மதுவிலக்குக் கொள்கை ஆந்திராவில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது. ஆந்திர மாநிலம் தனியாக அமைகின்ற சூழ்நிலை ஏற்பட்ட பிறகுகூட, 1956 வரையிலும் மதுவிலக்குக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. 1956-க்குப் பிறகு தெலிங்



கானாவைக் கொண்டு வந்து ஆந்திரத்தோடு இணைத்தார்கள். அப்போது ஒரு கண்டிஷனோடு இணைத்தார்கள். எங்களுக்கு இருக்கின்ற கலாசாரத்தை எடுக்கக் கூடாது என்று சொல்லி இணைத்தார்கள். இந்த கலாச்சாரம் என்னவென்றால் குடிப்பதுதான். இதிலே தலையிடக்கூடாது என்ற உணர்வோடு தெலிங்கானாவை ஆந்திரத்தோடு இணைத்தார்கள். ஆகவே, தெலிங்கானா பிரதேசத்தில் மதுவிலக்கு இல்லாத நிலையும், ஆந்திராவில் மதுவிலக்கு இருக்கின்ற நிலையும் இருந்து, 60 சதவீத மக்களுக்கு மதுவிலக்கு அமுல்படுத்தப்படும் என்ற நிலை இருந்தது. வேறு வழியில்லாமல் 1969 அக்டோபரில் மதுவிலக்கை அடியோடு ரத்து செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆந்திரா வந்துவிட்டது. ஆந்திராவில் இதனால் ஆண்டு ஒன்றுக்கு 170 கோடி ரூபாயிலிருந்து 200 கோடி ரூபாய் வரையில் வருமானம் வருவதாகக் கணக்கு குறிப்பிடுகிறது.

அசாம் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி கடந்த 33 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. காந்தி வழிவந்த கட்சித் தலைவர்களைக் கொண்ட மாநிலம், தொடக்கத்தில் முழு மதுவிலக்கு இருந்தது 1964 ஆம் ஆண்டில் தளர்த்தப்பட்டது. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெர்மிட் வாங்கிக்கொண்டு குடிக்கலாம் என்று வந்தது. பிறகு மூன்று ஆண்டுகள் கழித்து அடியோடு ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

பீகாரில் தொடக்கத்திலே மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்திருக்கிறது. பின்னர் பெருமளவிற்கு தளர்த்தப்பட்டு இப்போது சில பகுதிகளில் இருக்கின்றது. இதனுடைய ஆண்டு வருமானம் 120 கோடி ரூபாய்.

அரியானாவில் தொடக்கத்திலே ரோடக் மாவட்டத்திலே பரிட்சார்த்தமாக 1947, 1949 ஆம் ஆண்டிலே மதுவிலக்கை வைத்துப் பார்த்தார்கள். மற்ற மாவட்டங்களில் மதுவிலக்கைக் கொண்டு வரவில்லை. ரோடக் மாவட்டத்திலே 1971 ஆம் ஆண்டு வரையில் நடைமுறைப்படுத்திப் பார்த்தார்கள். பிறகு கைவிட்டுவிட்டார்கள். இப்போது மதுவிலக்கு அறவே இல்லை. ஆண்டுக்கு வருமானம் சுமார் 100 கோடி ரூபாய் வருகிறது என்ற கணக்கு வருகிறது.

ஜம்மு காஷ்மீரைப் பொறுத்தவரையில், தொடக்கத்திலேயே கைவிடப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்திலும் சில பகுதிகளில் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இப்போது மதுவிலக்கு அறவே இல்லை. வருமானம் 175 கோடிக்கு வருகிறது ஆண்டு ஒன்றுக்கு.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 31

மத்தியப் பிரதேசத்தில் 1937 ஆம் ஆண்டில் 8 மாவட்டங்களில் தமிழகத்தைப்போல மதுவிலக்கைக் கொண்டு வந்தார்கள். இரண்டாவது உலகப் பெரும் போர் ஏற்பட்டபோது, ரத்து செய்யப்பட்டது. மீண்டும் சுதந்திரம் பெற்ற பிறகு கட்டுப்பாடுகள், விதிகள் வைக்கப்பட்டன. இப்போது அறவே நீக்கப்பட்டு விட்டது. அங்கே ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் பெறுகிறார்கள்.

மகாராஷ்டிரத்திலே 1948-ல் முழு அளவிற்கு மதுவிலக்கு நடைமுறைப் படுத்தப்பட்டது. பிறகு 1968-லே தளர்த்தப்பட்டு 40 வயதைக் கடந்தவர்கள் பெர்மிட் வாங்கி குடிக்கலாம் என்ற முறையைக் கொண்டுவந்தார்கள். 1972 ஆம் ஆண்டில் 40 வயது என்பதைத் தளர்த்தி 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெர்மிட் பெறலாம் என்ற முறை வந்தது. ஓட்டல்களில், ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் போன்றவற்றில் குடிக்க எவ்விதத் தடையும் இல்லை என்று இப்போது வைத்திருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு மகாராஷ்டிராவில் 250 கோடி ரூபாய் வருமானத்தைப் பெறுகிறார்கள். பம்பாய் பெருநகராக இருப்பதால் பலபேர் வருவதால் அதிகமாக வருமானம் பெறுகிறார்கள்.

ஒரிசாவிலே தொடக்கத்திலே கட்டுப்பாடு இருந்திருக்கிறது. ஓட்டல்கள், உணவு விடுதிகள் போன்றவற்றில் குடிக்கக் கூடாது என்று வைத்தார்கள். பிறகு அந்தக் கட்டுப்பாட்டையும் நீக்கிவிட்டார்கள். அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 80 கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

பஞ்சாபில் மதுவிலக்கு அறவே இல்லை. வருமானம் 170 கோடி ரூபாய் வருகிறது. இராஜஸ்தானில் முதலில் சில கட்டுப்பாடுகள் இருந்தன. இன்றைக்கு அறவே நீக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய்.

உத்திரப் பிரதேசத்தில், நாட்டின் விடுதலைக்குப் பிறகு சில பகுதிகளில் முழு விலக்கு இருந்திருக்கிறது. 1957-ல் தளர்த்தப்பட்டிருக்கிறது. 1961-ல் அறவே நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஆண்டில் 57 நாட்களுக்குக் குடிக்கக் கூடாது என்று குறிப்பிட்டு அந்த நாட்களில் கடைகளை மூடிவிடும் முறையை வைத்திருக்கிறார்கள். இதனால் 180 கோடி ரூபாய் வருமானம் வருகிறது அவர்களுக்கு.



1981 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

குஜராத்தில்தான் தமிழகம் மாதிரி நீண்டகாலமாக மதுவிலக்கு நடைபெற்று வருகிறது. நம்மைப் போலவே நிலைமை அங்கேயும் இருக்கிறது. தொடக்கக் காலத்திலேயிருந்து மதுவிலக்குக் கொள்கை நடந்து வருகிற ஒரே மாநிலம் குஜராத்தான். அதற்குக் காரணம், அண்ணல் காந்தியடிகள், சர்தார் பட்டேல் ஆகியவர்கள் அந்த மாநிலத்தில் பிறந்ததால் அவர்கள் பெருந்தன்மையோடு இருக்கிறார்கள். தமிழகத்திலே அதே மாதிரி திரு. இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜ், அறிஞர் அண்ணா ஆகியவர்கள் இருந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வள்ளுவரும் பிறந்திருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைச் சொல்ல மறந்து விட்டேன். வள்ளுவர் கூட முயற்சி செய்து பார்த்திருக்கிறார். அவராலே முடியவில்லை. அதனால்தான்

" களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று "

என்று குறிப்பிட்டுள்ளார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அமைச்சர் என்னை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** குடிப்பவனைத் திருத்துவது முடியாது. எப்படியென்றால், 'தண்ணீருக்குள் மூழ்கியிருப்பவனை விளக்கு எடுத்துக் கொண்டு சென்று தேடுவதைப் போல' என்று சொல்லியிருக்கிறார். தண்ணீருக்குள் விளக்கை எடுத்துச் செல்லும்போது, விளக்குதான் இருக்குமா, அவன்தான் அகப்படுவானா, ஆகவே நடக்காது என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அவரும் மதுவிலக்குக் கொள்கையிலே நம்பிக்கை கொண்டவர் தான். ஆனால் அவராலேயே முடியவில்லை. ஆண்டவர்கள் கூட, தேவர்கள் கூட சோமபானம் குடித்ததாக, சொல்லுவார்கள். காட்டேரி, இருளன், மதுரை வீரன், சங்கிலிக் கருப்பன் போன்ற தெய்வங்கள் எல்லாம் கள் வேண்டும் என்று கேட்டதாக இருக்கிறது. வேண்டாம் என்று எவ்வளவு பேர் சொல்ல முடியும்? நம் அத்தனை பேருக்கும் வேண்டாம் என்ற கொள்கை இருக்கிறது. இங்கு இருக்கிறவர்கள் குடிப்பவர்கள் அல்ல. எல்லோரும் மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள். ஆனால், நாட்டிலே வருகிற வேறு பல நிலைமைகளைப் பார்க்கும்போது, இதைக்

கொண்டுவர வேண்டிய நிலை நமக்கு ஏற்படுகிறது. சமுதாயம் கெடுகிறது, சமூக விரோதிகள் வளருகிறார்கள், அரசுக்கு வரவேண்டிய பணம் வரவில்லை என்ற நிலைமைகளைப் பார்க்கிறபோதுதான், இதைக் கொண்டுவர வேண்டிய நிலை நமக்கு ஏற்படுகிறது. கடந்த முப்பது, முப்பத்தைந்து வருடங்களாக மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதன் மூலமாக ஏழையெளியவர்களுக்குப் பணம் மிச்சமாகி அவர்களிடம் பணம் இருக்க வேண்டும். ஆனால் சாதாரண ஏழையெளிய மக்கள், கிராமங்களில் இருப்பவர்கள் பணத்தை மிச்சம் பண்ணினார்களா? 30 வருடங்கள் மதுவிலக்கு இருந்த தமிழ் நாட்டில் உள்ள மக்களை குடித்துக் கெட்ட கர்நாடக, கேரளம், ஆந்திரா போன்ற மாநில மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்கள்தான் இவர்களைவிட ஆயிரம் ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் தெரிவிக்கிறது. நம்முடைய நாட்டு மக்களும் வாழவில்லை. வளரவில்லை, அரசுக்கு வர வேண்டிய பணமும் வரவில்லை. அதற்கு மாறாக சமூக விரோதிகள் கையில் போகும் நிலைமை இருப்பதால்தான், இந்த நிலைமைக்கு நாம் கட்டுப்படுகிறோம். கொள்கையின் அடிப்படையிலே அல்ல. நிலைமையின் அடிப்படையிலேதான் தளர்த்துகிறோம். அண்ணல் காந்தியடிகளுடைய கொள்கை இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான். அவர் இறக்கும் வரையில் இந்தியா பிரிய வேண்டும் என்று எண்ணவில்லை. ஆனால் இந்தியா, பாகிஸ்தான் என்ற நிலைமைக்கு இந்தியா ஆளாகிற அளவிற்கு நிலைமைகள் வந்தபோது, ஜின்னாவோடு ஒப்பந்தம் போடுகிற அளவிற்கு காந்தியடிகள் வந்தார். ஆனால், கொள்கை அடிப்படையிலே அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதே மாதிரி கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப் பாகிஸ்தான் இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் கொள்கை. நிலைமை அவர்களைத் தனியாகப் பிரிய வைத்தது. நிலைமைக்குக் கட்டுப்படுகிறோம், கொள்கையின் அடிப்படையிலே அல்ல. ஆகவேதான் மதுவிலக்கைக் குறித்து பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். "சிகரெட் குடிக்கக் கூடாது, குடித்தால் அதனால் தீங்கு விளையும்" என்று சிகரெட் கம்பெனிக்காரனே விளம்பரம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். அதைப் போலவே மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளைப்பற்றி, சினிமா, ஸ்லைட் மூலம் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். இரண்டும் நடக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பிரச்சாரம் செய்கிறோம். மகப்பேறு இல்லம் என்று வைத்துக்கொண்டு அங்கேதான் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்தைச் செய்கிறோம். இரண்டு குழந்தைகளோடு நிறுத்துங்கள் என்று சொல்லுகிறோம். 'நிறுத்தமாட்டேன்' என்று ஒருவர் சொல்லுகிறார் என்றால்,





அதற்காக மகப்பேறு இல்லம் கட்டாமல் இருக்க முடியுமா? மகப்பேறு இல்லத்தைக் கட்டவும் வழி செய்து, குடும்பக் கட்டுப்பாட்டைப் பிரச்சாரம் செய்யவும் வழி செய்கிறோம். குடும்பக் கட்டுப்பாட்டிலே கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால் எப்படி? வள்ளுவர் சொல்லுகிறார்,

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு"—என்று

ஆகவே நிலைமை அடிப்படையிலே இந்த நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறோம். இவ்வளவு கெடுதல்களையும் நாம் உணர்கிறோம். சமுதாய ரீதியில் எல்லோரும் சேர்ந்து கூடுமானவரை, பொறுப்பற்றவர்கள் எப்படி இருந்தாலும், பொறுப்பில் வருகின்றவர்கள் ஒழுக்கம் உடையவர்களாக, கள் உண்ணாதவர்களாக இருக்கப் பாடுபட வேண்டும். தமிழகத்திலே இருக்கக் கூடிய நாலரைக் கோடி மக்களையும் திருத்த முடியாது. ஆனால், அவர்களை இட்டுச் செல்கிற நிர்வாகப் பொறுப்பிலே இருக்கின்ற இரண்டு இலட்சம் பேர், ஐந்து இலட்சம் பேர் இந்தக் கொள்கையை உணர்ந்து ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பவர்கள் உயர்த்தப்படுவார்கள் ஒழுக்க நெறியைக் கைவிட்டவர்கள் கீழே போவார்கள். ஆகவே, பொறுப்பான முக்கிய இடத்திலே இருப்பவர்கள் இந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டும், பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். பிரச்சாரம் செய்வதற்காக ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்கள் செலவழிக்க வேண்டும் என்ற நிலையிலே அல்ல. எந்தெந்த வகையிலே செய்யலாம் என்பதற்குரிய திட்டங்களைச் சொல்லலாம். எல்லோரும் சேர்ந்து செய்யலாம். ஸ்ட்ராடஜிக் பொசிஷனில் இருப்பவர்கள், முக்கியமான இடத்தில் இருப்பவர்கள் இதைக் கடைப்பிடிக்க வேண்டும். கட்சியில் இருப்பவர்கள், பொறுப்புக்கு வருகிறவர்கள் இதைக் கடைப்பிடிக்க வேண்டும், அரசாங்க அதிகாரிகளாக, அரசாங்கப் பணிக்கு வருகிறவர்கள் குடித்தவர்களாக இருக்கக் கூடாது, பெர்மிட் வைத்திருக்கக்

(பிற்பகல் 1-00)

கூடியவர்கள் இருக்கக் கூடாது என்று போடலாம். ஆனால் இங்கே குடிக்க வேண்டாம் என்று சொல்கிறேன். மது விலக்கு வைத்திருப்பதனால், இவ்வளவு நாள் அனுபவத்திலே பார்க்கின்றபோது, ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் என்று பார்த்தால்கூட, ஐந்து வருடங்களிலே ஆயிரம் கோடி அளவில் வந்திருக்கும். அப்படி வந்திருந்தால்கூட இங்கே இருக்கின்ற எவ்வளவோ குறைபாடுகளைத் தீர்த்திருக்கலாம், இந்தியாவிலேயே தமிழகம் தலை தூக்கி நிற்கின்ற நிலைமை இருக்கும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மிக அருமையான கருத்தைச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் வருகின்ற வருமானத்தைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதன் மூலம் இவ்வளவு எல்லாம் செய்திருக்கிறார்கள் என்று விவரித்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மதுவிலக்கு தளர்த்தப்பட்டுதான் இருக்கிறது. மதுவிலக்கு உண்டு என்று சொல்வதன் மூலம் 8 கோடிதான் வருகிறது என்றார்கள். தமிழகத்திலே 200 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வரக்கூடிய நிலைமைகள் இருப்பதால், ஒரு 10 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கிச் செலவழித்து அதற்காகப் பிரச்சாரம் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலேயும் சரி, அந்த மன்றத்திலேயும் சரி, இந்த நாட்டிலேயும் சரி, மதுவிலக்கை நீக்க வேண்டுமென்று சொல்பவர்களும் இருக்கிறார்கள், நீக்கக் கூடாது என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். நாம் நடுநிலையிலே இருந்து கொண்டு பார்க்க வேண்டும். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று பார்க்க வேண்டாம். நாம் நடுநிலையிலேயே இருப்போம். ஒருவருடைய நோயைக் குறைக்க வேண்டும் என்று கருதினால், திடீரென்று குறைக்கக்கூடாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் குறைக்க வேண்டும். ஆகவேதான் மதுவிலக்குக் கொள்கையை நாம் வைத்திருக்கிறோம். சட்டத்தைத் தளர்த்துகிறோம். சட்டத்திலே இருக்கின்ற நெடுந்தலைப்பு, குறுந்தலைப்பு அதையெல்லாம் வைத்துக்கொண்டு விதியிலே மட்டும் திருத்தம் கொண்டுவந்து அதைப்பற்றி விவாதிக்கிறோம். அதன்மேல் உறுப்பினர்கள் யோசனைகளைச் சொல்கின்றார்கள். கூடுமானவரையில் அதைப் பாதுகாப்பதற்கு என்று யோசனைகள் சொல்கிறார்கள். மற்றும் மக்கள் கெடாமல் இருப்பதற்கு வேண்டிய அளவுக்கு வழி வகைகள், யோசனைகள், எல்லாம் சொல்கிறார்கள். அதையெல்லாம் நடைமுறைப்படுத்தப் பார்க்கலாம். முதலிலேயே நான் ஒரு காரணம் சொல்லியிருக்கிறேன். இந்தக் கொள்கையைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்ற அளவுக்கு இங்கே சொல்கிறார்கள். நாம் ஒரு பக்கம் மகப்பேறு இல்லங்கள் கட்டினாலும், குடும்ப நலம் பற்றியும் ஒரு பக்கம் பிரச்சாரம் செய்து கொண்டு வருகிறோம். அப்படி நாம் ஒரு நல்ல பிரச்சாரம் செய்து கொண்டு வருவதால்தான் நம் தமிழகம் அதிலே முதலாவதாக இருக்கிறது. எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் பணமே செலவழிக்காமல் இருந்து இந்தக் கொள்கையைக் காப்பாற்றிவிட்டால், அது மிகவும் நல்லது. இந்தக்





கொள்கை நிறைவேற வேண்டுமென்ற அளவில், 200 கோடி அல்ல 300 கோடி என்ற அளவில் செலவானாலும் அதற்காக இந்த அரசு தயங்காது. ஆனால் இந்தக் கொள்கையிலே வெற்றி பெற முடியாமல், நம் சமுதாயத்தையும் கெடுத்து, அதிகாரிகளும் கெட்டு, வருகின்ற வருமானமும் கெட்டு, மக்களும் கெட்டு இருப்பதனால், என்ன பலன் என்று சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. அதிலும் நிதி அமைச்சர் பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கின்ற நான் மிகவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் இந்தமாதிரி திருத்தத்தைக் கொண்டு வந்து இந்த அவையினுடைய ஒப்புதலோடு செய்ய வேண்டி வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருடத்தில் 200 கோடி ரூபாய் அளவுக்கு வந்து, அது வளர்ந்து ஆயிரம் கோடி என்று வந்தால், நம் அரசும் எவ்வளவு ஆஸ்பத்திரிகள் கட்ட முடியும், எவ்வளவு பள்ளிக்கூடங்கள் கட்ட முடியும், நடத்த முடியும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியெல்லாம் கருதுகிறார்கள். அப்படி வந்தால், 22 மாநிலங்களிலே முதலிடத்தை நமது தமிழகம் பெற முடியும் என்ற நிலைமை இருக்கிறது.

திரு. அசோக் மேத்தா அவர்கள் மெட்ராஸிலே ஒரு விழாவிலே பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் மத்திய அமைச்சராக அப்போது இருந்தார்கள். ஆசிய நாடுகளிலே, ஜப்பான் நாடு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு தனித்தன்மை பெற்ற அறிவாற்றலுள்ள நாடாக அது வளர்ந்திருக்கிறது. முன்னேறியுள்ள ஐரோப்பிய நாடுகளைப்போல ஒரு நாடாக அது இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு இந்தியாவிலேயே இருக்கின்ற மாநிலங்களில் தனித்தன்மை பெற்ற, ஆற்றல் பெற்ற மாநிலமாக தமிழ் நாடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் தமிழ் நாட்டைச் சேராதவர். அப்படி திரு. அசோக் மேத்தா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஜப்பான் வளர்ச்சியைக் காட்ட முடியும். அதிலே ஓரளவுக்கு அதிர்ச்சியுற்ற மாதிரி இருக்கக்கூடாது. அந்த அளவுக்கு விட்டுவிடக் கூடாது. நாம் கட்டுப்பாட்டுக்குள்ளேதான் இருக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாட்டுக்கு நம் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கேடுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற அளவுக்குத்தான் மேலும் பல நல்ல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 31

அடுத்து, அகவிலைப் படியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அகவிலைப் படி மத்திய அரசு ஒரு தவணைதான் தந்திருக்கிறது. இரண்டு தவணைகளைக் கொடுப்பதுபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. நாம் அவர்கள் கொடுக்கும்போது அவ்வப்போது கொடுக்க வேண்டும் என்றுதான் இருக்கிறோம். ஆனால் அதை நாம் கொள்கையாக வகுக்கவில்லை. ஏற்கெனவே மத்திய அரசு கொடுத்து 3, 4 மாதங்கள் ஆகியிருக்கின்றன. இப்போதுகூட சொல்லியிருக்கலாம். நாம் இப்போது ஒன்று கொடுத்திருக்கிறோம். 117 கோடி ரூபாய் இன்றைக்குப் பற்றாக்குறை இருக்கிறது. இருந்தும் ஏற்கெனவே 3 மாதம் கழித்துச் சொன்னாலும், முன்னாளிலிருந்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு இன்னும் அந்த இரண்டு படிகளைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அந்த வகையிலேயே நாம் செய்யப் போகிறோம். டிசம்பரிலிருந்து இந்தப் படி உயர்வைக் கொடுக்கிறோம் என்று கூறியிருக்கிறோம். அந்த மாதிரியே மற்றவைகளை அவர்கள் கொடுக்கும்போது கொடுக்க இருக்கிறோம். நிதி ஆதாரங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம். நிதி ஆதாரங்கள் வருகின்றபோது, வசதி வாய்ப்புகள் ஏற்படுகின்ற நிலைமைகள் ஏற்படுமானால், அதைக் கட்டாயம் செய்வோம். கொடுக்கக் கூடாது என்பது அல்ல. கட்டாயமாகக் கொடுப்போம். மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களையும், குறைகளையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் எல்லாவற்றைப் பற்றியும் இப்போது பதில் சொல்வதற்குப் போதிய நேரம் இல்லை. அடுத்து, அந்தந்தத் துறைகளின் அறிக்கைகள் வருவதனால், அந்த அமைச்சர்கள் அதிலே பேசுவார்கள்.

ஆசிரியப் பிரதிநிதிகள் இங்கே நிரம்பப் பேசியிருக்கிறார்கள். அநேகமாக பெரும்பாலும் ஆசிரியர்களுடைய கேள்விகளுக்குதான் நிறைய பதில் சொல்கிற நிலை இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆசிரியர்கள் கேள்விகள் கேட்டு விவரம் அறியலாம். அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய பதிலைத் தரலாம். ஆசிரியர்கள் கேள்வி கேட்டால்தான் பதில்கள் வரும். டிப்பார்ட்மெண்டிலேயிருந்து அமைச்சர்களுக்கும் விவரங்கள் கிடைக்கும். ஏற்கெனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கங்கள் தந்து கொண்டு வருகிறார்கள். கல்வி பற்றிய விவாதங்கள் நடந்திருக்கின்றன. விவாதங்கள் மிகத் தெளிவாக நடக்க இருக்கின்றன. நானும் ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இந்த அவையிலே சொல்லியிருக்கின்ற கருத்துக்களை முழுமையாகவே படித்துப் பார்த்தேன். ஏராளமான கருத்துக்கள் சொல்லியிருக்



1981 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிறார்கள். அவற்றைப்பற்றியெல்லாம் கல்வி அமைச்சர் அவர்கள் விவாதம் வரும்போது தெளிவாக எடுத்துச் சொல்வார்கள். அதற்குப் பிறகு நிதி அமைச்சர் அவர்களைக் கலந்துகொள்கின்ற நிலைக்கு வரும்போது, அவர்கள் உருவாக்கித் தருகின்ற கருத்துக்கள், நிதியமைச்சர் என்ற அளவில் என்னைக்கு வருகிறபோது, கலந்து உரையாடும்போது, அவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பொது விவாதத்திலே கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கிய நண்பர்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதித்துறையிலே உள்ள செயலாளர், துணைச் செயலாளர்கள், இணைச் செயலாளர் ஆக இருப்பவர்கள் மற்றவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் இங்கே நடத்திக்கொடுத்ததற்காக மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பார்கள். அப்படிப் பத்தும் பறி போகாமல் பொறுமையோடு இந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெறுவதற்கு உதவியாக இருந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அகவிலைப்படியைப் பற்றிக் கூறும்போது மத்திய அரசு மூன்று படிகளில், ஒன்றைத்தான் கொடுத்ததாகவும் மீதி இரண்டையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். செப்டம்பர் மாதத்திற்கான அகவிலைப் படியை மத்திய அரசு வழங்கியது. அதேபோல டிசம்பர் மாதத்தில் ஒன்றும், அதற்குப் பிறகு ஒன்றும், இப்போது நான்காவதாக ஒன்றும் அங்கே பரிசீலனையில் இருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இன்டெக்ஸ் நம்பர் படி அளிக்கப்படவிருக்கிறது. மத்திய அரசு செப்டம்பர் முதல் கொடுத்த அகவிலைப்படியை டிசம்பர் மாதத்திலிருந்து

என்று நம்முடைய அரசு கூறியுள்ளது. அப்படி தமிழக அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரை செய்த சிபாரிசுகளின் அடிப்படையில், மத்திய அரசு எந்தத் தேதியிலிருந்து அறிவிக்கிறதோ அந்தத் தேதியிலிருந்து மாநில அரசும் அதன் ஊழியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்த வேண்டுமென்ற அந்தப் பரிந்துரையை மற்ற மாநிலங்கள் எல்லாம், மத்திய அரசு கொள்கைப்படி பின்பற்றிக் கொண்டிருக்கின்றன. அதுபோலவே நம் அரசிலும் முடிவு எடுப்பது குறித்து விளக்க வேண்டும். அகவிலைப் படி தவணைப் பாக்கிகளைப் பற்றியும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் பத்திரிகைகளிலே படித்த அளவுக்கும், மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலே, பதில் சொல்கின்ற அளவிலும் பார்த்துத் தெரிந்துகொண்டேன். அந்த இரண்டு அகவிலைப்படி பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி பத்திரிகைகளிலே படித்தேன். நானும் நிதித் துறைச் செயலர் அவர்களிடத்திலே கேட்டபோது, ஒன்றுதான் தந்திருக்கிறார்கள், இன்னும் இரண்டைத் தருவதற்கு வேண்டிய புரோபோசலை ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னார்கள். அதிலே தவறு இருந்தால் திருத்திக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன். நம்முடைய நிதி நிலைமைகள் வளர்ந்து, நிதி ஆதாரங்கள் வந்தபிறகு முடியுமானால், அதுபற்றி இந்த அரசு தக்க முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் 20—4—1981 திங்கட்கிழமையன்று காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.





## இணைப்பு I.

[283ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் கோதுமை விளைவது இல்லை. நம் மாநிலத்திற்குத் தேவைப்படும் கோதுமை முழுவதும் வட மாநிலங்களிலிருந்து, வியாபாரிகளால் இறக்குமதி செய்யப்படுவதன் மூலமாகவும், மைய அரசின் ஒதுக்கீடுகள் மூலமாகவும் நிறைவு செய்யப்படுகிறது. மைய அரசு ஒதுக்கீடு செய்யும் கோதுமையின் விலை குவிண்டால் ஒன்று ரூ. 130. கடந்த ஆண்டு ஜூலை மாத இறுதி வரை பொது விநியோக முறையின்கீழ் விநியோகிப்பதற்கு என மாதந்தோறும் 2,000 டன்களும், கோதுமைப் பொருட்கள் ஆக்குவதற்கு கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு மாதந்தோறும் 65,000 டன்கள் கோதுமையும் மைய அரசு ஒதுக்கீடு செய்து வந்தது. ஆனால், மைய அரசின் உணவுத் தொகுப்பில் கோதுமையின் இருப்பு வெகுவாக குறைந்துவிட்டதெனவும், கையிருப்பில் இருக்கின்ற கோதுமையை விவேகத்துடன் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதெனவும் காரணங்கள் காட்டி, மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் கோதுமையை வெகுவாக 1980 ஆகஸ்டு முதல் மைய அரசு குறைத்துவிட்டது. ஆகஸ்டு, செப்டம்பர் இரண்டு மாதங்களுக்கும் மாதம் ஒன்றுக்கு தலா 31,300 டன்களும், அக்டோபர் மாதம் முதல் மாதம் ஒன்றுக்கு 30,000 டன்களுமாக உருளை மாவு ஆலைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் கோதுமையை மைய அரசு வெகுவாக குறைத்து ஒதுக்கீடு செய்து வருகிறது. பொது விநியோகத்திற்கு என மாதம் ஒன்றுக்கு 3,000 டன்கள் கோதுமைதான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நம்மாநிலத்தில் உள்ள உருளை மாவு ஆலைகள் கடந்த இரண்டாண்டு காலத்தில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு அரைவை செய்த கோதுமையின் அளவு 37,000 டன்கள் என கணக்கிடப்பட்டதால் மைய அரசை இந்த அளவுக்காவது கோதுமை ஒதுக்கீட்டை செய்யுமாறு செயலாளர் அமைச்சர்கள் நிலையில் வலியுறுத்தி கடிதங்கள் மைய அரசுக்கு எழுதப்பட்டன. ஆனால் மைய அரசு நம் மாநில அரசின் கோரிக்கையை ஏற்க இயலாது என்று தெரிவித்து விட்டது. கோதுமைப் பொருட்களை ஆலைகளிலிருந்து தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவு சங்கங்களும் நேரடியாக கொள்முதல் செய்து அரசு நிர்ணயித்துள்ள விலையில் (மைதா கிலோ ரூ. 2.00, ரவா கிலோ ரூ. 1.90) பொது விநியோக முறையின்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகின்றன. மேலும் பேக்கரி, பிஸ்கட் போன்றவை தயாரிக்கும் பெரிய நுகர்வோர்களின் மைதா தேவையையும் இயன்ற அளவு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பூர்த்தி செய்து வருகிறது. கோதுமை அரவை

[1981 மார்ச் 31

கிடைத்த காலங்களிலும், ஆலைகள் அரைத்து வெளியிட்ட அளவு ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு 32,000 முதல் 37,000 டன்கள் வரையில்தான் ஆகும், தற்போது ஒதுக்கீடாக கிடைத்து வரும் கோதுமையின் அளவு மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள். இது ஏற்கெனவே ஆலைகள் அரைத்ததைவிட சிறிதளவுதான் குறைவு. இதன் காரணமாக கோதுமைப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுவது ஏற்கத்தக்கதல்ல.

தமிழ்நாட்டுக்கு மாதந்தோறும் 19,783 மெட்ரிக் டன்கள் லெவி சர்க்கரையை மைய அரசு ஒதுக்கீடு செய்கிறது. இது குடும்ப அட்டைகளின் பேரில் நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுகிறது. இதைத்தவிர ஒவ்வொரு மாதமும் வெளிச்சந்தை சர்க்கரையும் பல்வேறு மாநிலங்களிலுள்ள ஆலைகளிலிருந்து மைய அரசு விடுவிக்கிறது. ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி, அதனை வெளியிடுதல், விலையை நிர்ணயித்தல் ஆகியவை பற்றிய கொள்கை முடிவுகளை மைய அரசுதான் எடுத்து வருகிறது. சர்க்கரையின் மொத்த உற்பத்தியில் 65 விழுக்காட்டை லெவி முறையின்கீழ் இந்தியா முழுவதும் ஒரே விலையில் விற்பதற்கும், எஞ்சியுள்ள 35 விழுக்காட்டை வெளிச்சந்தையில் ஆலைகளே விற்றுக்கொள்வதற்கும் மைய அரசு ஏற்பாடு செய்துள்ளது. கடந்த நவம்பர் மாதம் முடிய கிலோ ஒன்றுக்கு ரூ. 2.85 என்று லெவி சர்க்கரையின் விற்பனை விலையை மைய அரசு நிர்ணயித்திருந்தது. டிசம்பர் மாதம் முதல் இந்த விலை கிலோ ஒன்று ரூ. 3.50 என மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆலைகளின் சர்க்கரை உற்பத்தி, அவற்றை வெளியிடுதல் ஆகியவை பற்றி அகில இந்திய நிலைமையை ஒட்டி மைய அரசு அவ்வப்போது கொள்கை முடிவு எடுக்கின்றது. லெவி சர்க்கரை ஒரு குறிப்பிட்ட விலையில் இந்தியா முழுவதும் விற்கும்போது வெளிச்சந்தை சர்க்கரையின் விலையில், சர்க்கரையின் உற்பத்தி, நுகர்வோரின் தேவை, இவற்றின் காரணமாக அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுகின்றன. நம் மாநிலத்தில் உள்ள ஆலைகளில் கிடைக்கக்கூடிய வெளிச்சந்தை சர்க்கரையை மாநிலத்திற்குள்ளேயே உபயோகப்படுத்திக்கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டால் நுகர்வோர்களுக்கு பயன்விளையும் என்று மைய அரசிடம் ஒரு கூட்டத்தில் எடுத்துக்கூறப்பட்டது. நாடு முழுவதிலும் சர்க்கரை தட்டுப்பாடின்றியும் சீரான முறையிலும் கிடைப்பது அவசியமாதலால் ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகும் சர்க்கரையை அந்த மாநிலத்திற்குள்ளேயே முழுவதும் உபயோகப்படுத்திக்கொள்ள வகைசெய்ய இயலாது என மைய அரசு அறிவித்து விட்டார்கள்.



1981 மார்ச் 31]

லெவி சர்க்கரை தற்போது குடும்ப அட்டைகளின்பேரில் கிலோ ஒன்று ரூ. 3.50 என்ற விலையில் கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படுகிறது :—

| | |
|---|---|
| நகர்ப்புரங்கள்— | |
| மாதம் ஒன்றுக்கு 1,000/-ரூபாயும் அதற்கு மேலும் வருமானம் உள்ளவர்களுக்கு | 5 கிலோ-அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு. |
| மாதமொன்றுக்கு 500/-ரூபாய் முதல் 999/-வரை வருமானம் உள்ளவர்களுக்கு | 3 கிலோ-அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு. |
| மாதமொன்றுக்கு ரூ. 499/- வரை வருமானம் உள்ளவர்களுக்கு | 2 ,, ,, |
| கிராமப்புறங்கள்— | |
| மாதமொன்றுக்கு 1,000/- ரூபாயும் அதற்கு மேலும் வருமானம் உள்ளவர்களுக்கு | 3 ,, ,, |
| மாதமொன்றுக்கு ரூ. 500/- முதல் 999/-வரை வருமானம் உள்ளவர்களுக்கு | 2 ,, ,, |
| மாதமொன்றுக்கு ரூ. 499/- வரை வருமானம் உள்ளவர்களுக்கு | 1 ,, ,, |

வெளிச்சந்தை சர்க்கரையை ஏனைய வியாபாரிகளைப்போல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் வாங்கி விற்பனை செய்கிறது. இந்த வெளிச்சந்தை சர்க்கரையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கிலோ ஒன்று ரூ. 6.25 என்ற விலையில் மொத்த நுகர்வோருக்கும், திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் விற்பனை செய்கிறது. வெளிச்சந்தையில் உள்ள விலையைவிட குறைவான விலையில் சர்க்கரையை வாணிபக் கழகம் விற்று வருவதால் வெளிச்சந்தை சர்க்கரையின் விலை கட்டுக்கடங்கி உள்ளது.

தமிழ்நாட்டில் பொதுமக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் சமையல் எண்ணெய்கள் கடலை எண்ணெயும், நல்லெண்ணெயும் ஆகும். கடலை எண்ணெய் உற்பத்தி நடப்பு ஆண்டில் குறைந்துள்ளது. நல்லெண்ணெயை பொறுத்தமட்டில் நம் மாநிலத்தின் உற்பத்தி குறைவேயாகும். ஆதலால் பிற மாநிலங்களிலிருந்து நல்லெண்ணெயைப் பெற வேண்டிய நிலையுள்ளது. பொதுமக்களின் சமையல் எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்யவும், அதன் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், குஜராத் மாநிலத்திலிருந்து கடலை எண்ணெய் வாங்கி பொது மக்களுக்கு நியாயமான விலையில் வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

[1981 மார்ச் 31

இறக்குமதி செய்யப்படும் பாமோலின் எண்ணெய்யை மைய அரசு மாதா மாதம் சீரான அளவில் ஒதுக்கீடு செய்வதில்லை. 1980 நவம்பர் மாதம் முதலான எண்ணெய் ஆண்டில் மைய அரசு நம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்த பாமோலின் எண்ணெய்யின் அளவு :—

நவம்பர் 1980—3,000 மெ. டன்கள்.

டிசம்பர் 1980— 500 மெ. டன்கள்.

ஜனவரி 1981—2,500 மெ. டன்கள்.

பிப்ரவரி 1981—2,400 மெ. டன்கள்.

மார்ச்சு 1981—3,000 மெ. டன்கள்.

எனவே அதன் விநியோக அளவு மாதத்துக்கு மாதம் வேறுபடுகிறது. எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்தவும் சீரான அளவில் எல்லோருக்கும் வழங்கவும் ஏதுவாக மாதம் ஒன்றுக்கு 7,500 மெட்ரிக் டன்கள் பாமோலின் ஒதுக்கும்படி மைய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

## இணைப்பு II.

[286 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தற்போது, அரசால் நடத்தப்படும் 32 தொழிற்பயிற்சி நிலையங்களைத் தவிர, தொழிற்பள்ளிகளுக்கான விதிகளின் தொகுப்பின்கீழ் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட 76 தனியார் தொழிற் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 51 தொழிற் பள்ளிகள் அரசு மானியம் பெறுகின்றன. எஞ்சியுள்ள 25 பள்ளிகள் அரசு மானியம் பெறுவதில்லை. பயில்விப்பவர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்படும் மொத்த செலவில் 50 விழுக்காடு அரசு மானியமாக கொடுக்கப்படுகின்றது.

2. தமிழ்நாடு மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின்படி அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இணையாக அரசு மானியம் பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் வழங்க வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

3. இச்செயற்குறிப்பை ஏற்பதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,17,240 கூடுதல் செலவாகும். இத்தொகை தனியார் பள்ளி நிறுவனங்களுக்கு ஆகும் கூடுதல் செலவில் 50 விழுக்காடு ஆகும். இதன்மூலம் 200



1981 மார்ச் 31]

ஆசிரியர்கள் பயன் பெறுவர். இது குறித்த விவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| இனம். | ஆண்டு ஒன்றுக்கு பள்ளி நிறுவனங்களுக்கு ஆகும் கூடுதல் செலவு. | ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு (50 விழுக்காடு). |
|---|---|---|
| 1. சம்பளம் (ஆசிரியரல்லாத தாளாளருக்குரிய ஊதியத்தையும் சேர்த்து) | 72,120 | 36,060 |
| 2. அகவிலைப்படி. | 95,400 | 47,700 |
| 3. வீட்டு வாடகைப் படி. | 6[illegible],800 | 30,900 |
| 4. நகர ஈட்டுப்படி. | 5,160 | 2,580 |
| மொத்தம் .. | 2,34,480 | 1,17,240 |

3. இச்செயற்குறிப்புக்கு நிதித்துறை ஒப்புதல் அளித்து அரசின் சீரிய பரிசீலனையில் உள்ளது. இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Trunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private). Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

76

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

R. F

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.